THAIVEEDU JUNE 2024 ஜூன் www.thaiveedu.com

# தாய்வீடு



கனடியப் பொருளாதாரம் மீண்டெழுகின்றதா?

– ரதன்



பண்டிதர் க. உமாமகேஸ்வரம்பிள்ளை

– க. சிவானந்தன்

ஈழத்துத் தமிழ்க் கவிதைப் புலத்தில் பெண்நிலைவாதம்

– சி. ரமேஸ்

மகாவம்சம் 6 வது தொகுதி பயங்கரவாதப் பிரிவினைவாதம்

– தமிழில் என். சரவணன்



ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Selling
Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir. 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
சர்வேசன்,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,

**மொன்றியால்:**
சுகுமாரன் சின்னையா.
**ஒட்டாவா:**
அலெக்ஸ் சிவசம்பு: +1 613 276 7253
**மலையகம், கொழும்பு:**
மல்லியப்புசந்தி திலகர்: +94 71 120 8061
**மட்டக்களப்பு:**
வி. மைக்கல் கொலின்: +94 77 433 8878
**கிளிநொச்சி:**
கிளி மக்கள் அமைப்பு:
**யாழ்ப்பாணம்:**
S. சத்தியதேவன்: +94 77 7294 287

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

Tel : +1 416 857 6406
Fax : +1 416 849 0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## தண்ணீர் விட்டோ வளர்த்தோம்!

பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப்போர் இருநூறு நாட்களைக் கடந்தும் தொடர்கிறது.

இஸ்ரேலின் கோரமான தாக்குதல்களால் இதுவரை 36,000-க்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டும், 81,000-க்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் காயப்பட்டும் உள்ளதாக அனைத்துலக ஊடகங்கள் அறிவிக்கின்றன. காசா வாழ் மக்களிலே ஏறக்குறைய தொண்ணூறு விழுக்காட்டினர் இஸ்ரேலின் தாக்குதல்களால் இடம்பெயர்க்கப்பட்டும் ஏதிலிகள் ஆக்கப்பட்டும் உள்ளனர். உண்மையான அழிவின் எண்ணிக்கை இவற்றைவிடவும் பெருமளவு அதிகமாக இருக்கலாம் என்ற அச்சமும் நிலவுகிறது.

இருந்தபோதும், இஸ்ரேலின் மூர்க்கம் இன்னமும் குறையவில்லை.

'பழிதீர்க்கும் போர்' என அடைமொழியிட்டு அழைக்கப்படும் இந்தப்போரில் இஸ்ரேல் வெளிப்படையாகவே போர் விதிகளை மீறுகிறது! போர்க் குற்றங்களைப் புரிகிறது! இன அழிப்பை மேற்கொள்கிறது! கடந்த வாரம் மேற்கு ராஃபாவிலே பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியில் இருந்த கூடாரங்களின்மீது எறிகணைகளை வீசி பதின்மூன்று குழந்தைகளும் பெண்களும் உட்பட இருபத்தொரு பேரைக் கொன்றுகுவித்தமை இதற்கான அண்மைய உதாரணம். இந்தப் படுகொலைகளை மேற்கொண்டபின், பாதுகாப்பு வலயம் மீது எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டமையை இஸ்ரேல் மறுக்கவோ அல்லது அதற்கு மன்னிப்புக்கோரவோ இல்லை. மாறாக, எறிகணை வீச்சைத் தொடர்ந்து ஏற்பட்ட தீ விபத்துக்கு எறிகணைகள் மட்டுமே காரணமாக இருக்கமுடியாது என்றும் அதற்கான காரணத்தை அறிய விசாரணை நடத்த உள்ளதாகவும் அறிவித்திருக்கிறது. அதாவது, பாதுகாப்பு வலயம் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தியதை இஸ்ரேல் ஏற்றுக்கொள்கிறது. அதை ஒரு பாரதூரமான விடயமாக அது கருதவில்லை. மாறாக, கொலைகளுக்குக் காரணம் எறிகணை வீச்சல்ல, வேறு ஏதொவொரு கண்ணுக்குப் புலப்படாத விடயம் என்பதுபோல உலகின் காதில் பூச்சுற்றுகிறது.

இந்த வேளையிலும், உலக நாடுகளுக்கெல்லாம் மனித உரிமைகள் பற்றி வகுப்பெடுக்கும் அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் பிரான்சும் ஜேர்மனியும் கனடாவும் 'போர் நிறுத்தம்! போர் நிறுத்தம்' என்று உச்சாடனம் செய்து கொண்டிருக்கின்றன. இதேபோன்ற பாசாங்கு வார்த்தைகளை இதே அரசுகள் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின்போதும் ஒப்பித்திருந்ததை நாம் அறிவோம். அந்தச் சந்தர்ப்பத்தில் அவை சிங்களப் பேரினவாதத்தின் வெற்றியை உறுதிசெய்யவே உதவின. இப்போதும், இஸ்ரேலின் அறுதி வெற்றியை உறுதி செய்வதே இவர்களின் நோக்கம்.

இந்த நிலையிலே, ஸ்பெயினும் அயர்லாந்தும் நோர்வேயும் இந்த மேற்குலகத் தாராளவாத மக்களாட்சிகளின் மந்தையிலிருந்து விலகி பாலஸ்தீனத்தை இறையாண்மை மிக்க நாடாக அங்கீகரித்துள்ளமை வரவேற்கத்தக்கதும் நம்பிக்கை தருவதுமான ஒரு முன்னேற்றமாகும். 'மத்திய கிழக்கில் அமைதியை அடைவதற்கான ஒரே வழி பாலஸ்தீன தேசத்தை நிறுவுவதே' என ஸ்பெயின் அதிபர் கூறியிருக்கிறார். ஸ்பெயினின் இந்த முடிவு, 'வரலாற்று நீதி சம்பந்தமானது' என அவர் கூறியிருப்பதானது இரண்டாம் உலகப்போரின் பின் இஸ்ரேல் உருவாக்கப்பட்டது முதல் அது பாலஸ்தீன மக்கள் மீது புரிந்துவந்துள்ள ஆக்கிரமிப்புகளையும் உரிமை மீறல்களையும் சுட்டிக்காட்டுவதாக உள்ளது.

ஐக்கிய நாடுகளில் அங்கத்துவம் வகிக்கும் 193 நாடுகளுள் இதுவரை 145 நாடுகள் பாலஸ்தீனத்தைத் தனிநாடாக அங்கீகரிக்கின்றன. இருந்தபோதும் இந்த அங்கீகாரம் பாலஸ்தீன மக்களின் உயிர்களுக்கோ, உரிமைகளுக்கோ, உடைமைகளுக்கோ உத்தரவாதம் வழங்கப் போதுமானதாக இல்லை. காரணம், ஜி-7 என்கின்ற உலகின் மிகப்பலம் பொருந்திய அமைப்பின் உறுப்பு நாடுகளுள் ஒரு நாடேனும் பாலஸ்தீனத்தைத் தனிநாடாக அங்கீகரிக்கவில்லை. இதே நாடுகள்தாம் ஈழத்தின் இறுதிப்போரின் முன்னரும் சாமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆதரிப்பதாய் ஒருபுறம் கூறிக்கொண்டு, மறுபுறம் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த ஒரு தரப்பைப் பயங்கரவாத இயக்கம் எனத் தடைசெய்வதிலே முனைப்புடன் செயற்பட்டுக்கொண்டிருந்தன. எனவே இந்த இரட்டை வேடம் எமக்குப் புதியதல்ல.

இருந்தபோதும், முன்பு தென்னாபிரிக்காவின் நிறவெறி அரசுக்கு எதிராக வேண்டாவெறுப்பாகவேனும் உலக அரசுகளைத் திருப்பியது போன்றதோர் உலகளாவிய மக்கள் புரட்சி இப்போது பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக முளைவிட்டுக்கொண்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாக மேற்குலகின் முக்கியமான பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் முனைப்புப் பெற்றிருக்கும் கூடாரப் போராட்டங்களைச் சுட்டலாம். இதன் எதிரொலியே ஸ்பெயின், அயர்லாந்து, நோர்வே நாடுகளின் பிரகடனம். முளைவிடும் இந்தச் சுதந்திரப்பயிரைக் கருகாமற் காப்பதே எமது வரலாற்றுக் கடன்.

# தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...


தண்ணீர் விட்டோ வளர்த்தோம்! 3

கனடியப் பொருளாதாரம்
மீண்டெழுகின்றதா? 5
- ரதன்

அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றம்:
இஸ்ரேல் போர்க்குற்றவாளிகள் மீது
கைது ஆணை விண்ணப்பம்! 11
- ரூபன் சிவராஜா

இலங்கையின் 1972-இன் குடியரசு அரசியல்
யாப்பு: தமிழருக்கு நீதி வழங்கியதா? 16
- சந்திரசேகரம் பரமலிங்கம்

மனதை ஒருநிலைப்படுத்துதல்
வெற்றியின் ஏணிப்படி 19
த. சிவபாலு

கல்வி ஏன்? எதற்கு?
சமகாலப் புரிதலை நோக்கி... 21
- அகமட் பிஸ்தாமி

மனிதரை ஏமாற்றும்
செயற்கை நுண்ணறிவு 24
- சுப்ரமணியம் ஜெயசீலன்

ஒன்ராறியோ வாகனக்
காப்புறுதிக் கட்டண அதிகரிப்பு 26
- செந்தூரன் புனிதவேல்

கோடைகால வீட்டுப் பராமரிப்பு 28
- வேலா சுப்ரமணியம்

பட்டங்களும் தம்பட்டங்களும்... 30
- வேதநாயகம் தபேந்திரன்

கவிஞர் சேரனின் 'காஞ்சி' 33

உலகப் புத்தக நாளும்
நூல்களின் சங்கமமும் 36
- குரு அரவிந்தன்

சூர்ப்பணகை நடன நாடகம்
பெண் தனக்காகப் பேசுவது
அனைவருக்காகவும் பேசுவதாகும்! 38
- ரூபன் சிவராஜா

உலக இசை நாள் 43
- சி. நற்குணலிங்கம்

ரோமில் தொலைந்த நிலவு 45
- ரதன்

கமலக்கண்ணனின் 'குரங்குப் பெடல்' 48
- ஒவியர் ஜீவா

அட்டாளைச்சேனையின் தமிழறிஞர்
அல்ஹாஜ் ஜே. எம். பதுறுத்தீன் மவ்லானா 50
- இனியவன் இசாறுத்தீன்

இலக்கியவாதியான
மருத்துவப் பேராசிரியர் நந்தி 52
- வே. விவேகானந்தன்

கலாநிதி இ. மகாலிங்கசிவம்:
திட்டமிடல் அமைச்சில் ஒரு சித்தன் 54
- மு. நித்தியானந்தன்

பண்டிதர் க. உமாமகேஸ்வரம்பிள்ளை 59
- க. சிவானந்தன்

திருக்குறளை உலகமயமாக்குவதில்
லியோ டால்ஸ்டோயின் பங்கு 63
- குமார் புனிதவேல்

நூல் அறிமுகம் :
மலையகச் சுடர்மணிகள் 64
- நெல்லை ஜெயசிங்

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி:
பிபிலை நா. ஜெயபாலனின்
இரு கவிதைத்தொகுப்பு 68
- மல்லியப்புசந்தி திலகர்

புனைவின் வெளியில் ஒரு தீவிர நடனம் 71
- கருணாகரன்

அறிவு உற்பத்தியின்
மெய்யியல் அடிப்படைகள் 74
ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

ஒரு நூலின் உருவாக்கம்:
ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல் 78
- என். செல்வராஜா

1753-இல் வெளியான
'சத்தியத்தின் செயம்' மீள்பதிப்பு 81
- ந. குகபரன்

திருக்குறளில் வலியுறுத்தப்படும்
சமணர் வாழ்வியல் 86
- பால. சிவகடாட்சம்

ஜாதகக் கதைகள் நாட்டாரியல் கதைகளா? 90
- ஜிஃப்ரி ஹாசன்

மு. தமிழ்ச்செல்வனின் 'நஞ்சாகும் நிலம்'
சூழலியல் பத்திகளின் தொகுப்பு 92
- வை. ஜெயமுருகன்

மகாவம்சம் 6-வது தொகுதி
பயங்கரவாதப் பிரிவினைவாதம் 96
- தமிழில்: என். சரவணன்

ஈழத்துத் தமிழ்க் கவிதைப் புலத்தில்
பெண்நிலைவாதம் 118
- சி. ரமேஸ்

ஐந்நூற்றுவர் 126
- த. ஜீவராஜ்

ஈழமும் சோழமும்:
சோழரை இலங்கையில் எதிர்த்த
அயோத்தி அரசனும் பாண்டியரும் 129
- வி. துலாஞ்சனன்

சுந்தர ராமசாமியின்
திறனாய்வு அணுகுமுறை -
யதார்த்த தளப்பார்வை 132
- சு. வேணுகோபால்

திருக்குறளும் ஆசீவகமும் 137
- செல்வநாயகி ஶ்ரீதாஸ்

எடுக்கத் தவறிய இன்னொரு நிழற்படம் 143
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து... 146
மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

இனப்படுகொலையின் அரசியல் - 3
இனப்படுகொலைச் சித்தாந்தத்தில்
தேசியம் 150
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

'திருக்குறளின் உருவாக்கத்தில்
பண்டைய தமிழ்ச் சிந்தனை
மரபுகளின் பங்களிப்பு'
- ஒரு நுண்ணாய்வு 155
- நா. சுப்பிரமணியன்

மதிப்பு 160
- உஷாதீபன். எஸ்

வாழ்வுரிமை! 164
- மா. சித்திவினாயகம்

பவளவல்லி 167
- அ. கந்தசாமி

நகரும் வீடு 172
- கிறிஸ் லீ
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

# கனடியப் பொருளாதாரம் மீண்டெழுகின்றதா?

– ரதன்

உலகெங்கும் ஒரே பேச்சு, பாலஸ்தீனியத்தை அழிக்கும் அமெரிக்கா (இஸ்ரேல்), உக்ரேனை விழுங்கி ஏப்பமிடும் ரஷ்யா. அநேகமான ஊடகங்கள், மக்கள் கூடுமிடங்கள், மது பானச்சாலைகள் எங்கும் இவையே இன்று பேசு பொருளாக உள்ளது. ஆனால், இலங்கைத் தமிழர்கள் மத்தியில் கனடா விற்கான விசிற்றர் விசா பற்றியே அதிகம் உரையாடப்படு கின்றது. இலங்கை, இந்திய சமூகவலைத்தளங்களிலும் ரிக் ரொக், யூரியூப் வீடியோக்களிலும் அதிகளவில் ஒளிர்வது புலம்பெயர்வு பற்றியதே.

கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளை நோக்கி மக்கள் வெவ் வேறு விதமாக - சுற்றுலா விசா, மாணவர் விசா என்று வந்து கொண்டிருக்கின்றார்கள். அதே சமயம், கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளை நோக்கி வரவேண்டாம் எனவும் சமூக வலைத்தளங்களிலும் யூரியூப்பிலும் அறிக்கைகள், விடி யோக்கள் வெளிவருகின்றன.

உண்மையில் நிலை என்ன? கனடாவின் பொருளாதாரம் ஆரோக்கியமாகவுள்ளதா?

கனடாவின் பொருளாதாரம் அமெரிக்கப் பொருளாதாரத்தில், குறிப்பாக அமெரிக்க டொலரின் பெறுமதியிலும், வட்டி வீதத் திலும் தங்கியுள்ளது. இதில் அமெரிக்க டொலரின் பெறுமதி என்பது கனடாவின் பொருளாதாரத்தில் நேரடியாகவே தாக் கம் செலுத்துகின்றது. ஏனெனில், கனடாவின் பெருமளவு ஏற் றுமதி அமெரிக்காவிற்கே செல்கின்றது. அதே போல் இறக்கு மதியும் அமெரிக்காவிலிருந்தே அதிகளவு இடம் பெறுகின் றது.

இன்றைய அமெரிக்காவின் பொருளாதாரம் 2025-ம் ஆண்டு மிகவும் மோசமான நிலைக்கு செல்லும் என பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். இது கனடாவைப் பொறுத்தவரை மிகவும் மோசமான செய்தி.

### கனடாவின் வட்டி வீதமும் வீட்டுக் கடனும்:

வட்டி வீதம் என்பது பல விதங்களில் தீர்மானிக்கப்படுகின் றது. கனடாவின் மத்திய வங்கி வட்டி வீதத்தை பணவீக்கம், தேசிய உற்பத்தி, வேலை வாய்ப்பு போன்ற பல்வேறு விடயங் களை கருத்திற் கொண்டு தீர்மானிக்கின்றது. இந்த வட்டி வீத அதிகரிப்பு குறைப்பு என்பதனை கருத்திற் கொண்டு பிரதான நிதி நிறுவனங்கள் Prime Rate-ஐ தீர்மானிக்கின்றன. உதார ணத்துக்கு 2009-ம் ஆண்டு கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 0.65 வீதமாகவிருந்தது. Prime Rate 2.40. Prime Rate பொதுவாகவே மத்திய வங்கியின் வட்டி வீதத்தை விட ஆகக் குறைந்தது 2 வீதமாவது அதிகமாகவிருக்கும். இதுவே வீட் டுக் கடனின் Variable Rate, Line of Credit போன்றவற்றின் வட்டி வீதத்தை தீர்மானிக்கும்.

1981-ம் ஆண்டு கனடாவின் பணவீக்கம் 12.47 ஆகவிருந்தது. அப்பொழுது கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 17.93 வீதம், பிரைம் ரேட் (பிரதான வட்டி வீதம்) 19.29. கடந்த ஐம் பது வருடத்தில் அதிகளவு வட்டி வீதம் 1981-இன் 17.93 ஆகும். கனடிய மத்திய வங்கியின் புத்தகங்களின் அடிப்ப டையில் பணவீக்கம் எப்பொழுது அதிகரிக்கின்றதோ, அப் போதெல்லாம் வட்டி வீதம் அதிகரிக்கும். வட்டி வீத அதிக ரிப்பு என்பதனால் வீட்டுக் கடனும் அதிகரிக்கும். இது பொது வாக வீட்டு உடைமையாளர்களை கடன் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளுகின்றது.

பணவீக்கம் என்பது பல்வேறு காரணிகளினூடாக தீர்மானிக் கப்படுகின்றது. உணவு, உடை, உறையுள், போக்குவரத்து, பொழுதுபோக்கு, வீட்டுத் தளபாடங்கள் போன்ற பல காரணி களின் விலையேற்றம் பண வீக்கத்தை அதிகரிக்கின்றது. இவற்றின் விலையேற்றத்துக்கு புற காரணிகள் காரணமாக வுள்ளன. மரக்கறிகள் கனடாவிற்கு வேறு நாடுகளில் இருந் தும் இறக்குமதியாகின்றன. சர்வதேச சந்தையில் பெற்றோ லின் விலையேற்றம், இறக்குமதியாகும் மரக்கறிகளின் விலை யில் மாற்றத்தை கொண்டுவருகின்றன. விமானம், கப்பல் போக்குவரத்தின் அதிக கட்டணங்கள் மரக்கறிகளின் மீது சுமத்தப்படுகின்றன. அவ்வாறு கனடா வரும் மரக்கறிகள், அருகில் உள்ள கடைகளுக்கு வரும் பொழுது, அவற்றைக் காவி வரும் வாகனங்களின் கட்டணங்களையும் சேர்த்துக் காவிவருகின்றன. இதனால் மரக்கறிகளின் விலை என்பது உற்பத்திச் செலவை விட பல மடங்கு அதிகமாகவுள்ளது.

உலக நாடுகளின் மத்திய வங்கிகள் ஒன்றை மட்டும் மீண்டும், மீண்டும் வலியுறுத்துகின்றன. அதாவது உதாரணத்துக்கு மரக்கறிகளை நீங்கள் வாங்காமல் விடும் பொழுது அல்லது வாங்குவதனை நீங்கள் குறைக்கும் பொழுது. மரக்கறிகளுக் கான விலை குறையும், எனவே பணவீக்கமும் குறையும், வட்டி வீதம் குறையும், வீட்டுக் கடன் தொகை குறையும். மரக் கறிகளைப் போன்று பண வீக்கத்தை தீர்மானிக்கும் சகல

பொருட்களையும் நீங்கள் வாங்காமல் விட்டால் பண வீக்கம் குறையும்.

மரக்கறிகள் என்பது இப்பொழுது மருந்தாக மாறிவிட்டது.

## கனடாவின் வட்டி வீதம் – பண வீக்கம்:

| வருடம் | 1 Year Fixed % | 5 Year Fixed % | Prime Rate % | பண வீக்க வீதம் | கனடிய – அமெரிக்க டொலர் மதிப்பு |
|---|---|---|---|---|---|
| Jan 2,1980 | 13.25 | 13.25 | 15.00 | 10.13 | $0.855 |
| Apr 09,1980 | 16.50 | 17.25 | 17.50 | 10.13 | $0.855 |
| Jun 03,1981 | 18.00 | 18.50 | 19.50 | 12.47 | $0.834 |
| Aug 12,1981 | 21.25 | 21.75 | 22.75 | 12.47 | $0.834 |
| Feb 02,1983 | 11.75 | 13.50 | 12.00 | 5.86 | $0.811 |
| Jan 01,1986 | 9.75 | 11.50 | 10.00 | 4.19 | $0.720 |
| Jan 03,1990 | 12.75 | 12.00 | 13.50 | 4.78 | $0.857 |
| Mar 01,1995 | 9.63 | 10.25 | 9.25 | 2.15 | $0.729 |
| Feb 02,2000 | 7.60 | 8.55 | 6.50 | 2.72 | $0.673 |
| Oct 01,2008 | 6.35 | 7.20 | 4.75 | 2.37 | $0.937 |
| Jan 02,2013 | 3.00 | 5.24 | 3.00 | 0.94 | $0.971 |
| Mar 02,2022 | 2.79 | 4.79 | 2.45 | 6.80 | $0.768 |
| Jan 04,2023 | 6.34 | 6.49 | 6.45 | 5.90 | $0.741 |
| May 01,2024 | 7.84 | 6.84 | 7.20 | 2.80 | $0.730 |

உலக நாடுகளின் மத்திய வங்கிகள் பணவீக்கத்தை மட்டும் கொண்டு வட்டி வீதத்தை தீர்மானிப்பதில்லை. ஆனால் பிரதான பங்கு பணவீக்கத்துக்குள்ளது. இங்குள்ள அட்டவணையில் பணவீக்கத்தையும், வட்டி வீதத்தையும் வெவ்வேறு வருடங்களில் ஒப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அமெரிக்க டொலரின் பெறுமதியினையும் குறித்துள்ளோம். அமெரிக்க வட்டி வீதம், அமெரிக்க டொலரின் பெறுமதியில் மாற்றத்தை ஏற்படுத்தும், அதுவும் கனடிய தேசிய மொத்த உற்பத்தியில் (GDP) மாற்றத்தை ஏற்படுத்தும், தேசிய மொத்த உற்பத்தியும் வட்டி வீதத்தை தீர்மானிக்கும் ஒரு காரணி.

2023-ம் ஆண்டு உலகின் அதிகளவு தேசிய உற்பத்தியைக் கொண்ட முதல் பத்து நாடுகளில் கனடாவும் ஒன்று. தனி ஒருவரின் உற்பத்தியின் அளவு என்ற அடிப்படையில் கனடா முதல் இருபது நாடுகளில் ஒன்றாகவுள்ளது. மிகக் குறைந்த சனத்தொகையைக் கொண்ட கனடா முதல் பத்து நாடுகளுள் இருப்பது ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். ஆனால் கனடாவின் தேசிய உற்பத்தி பெருமளவு கனடாவில் உள்ள இயற்கை வளங்களாலேயே ஏற்படுத்தப்பட்ட உற்பத்தியாகும்.

இவ்வாறு உலக அரங்கில் இருக்கும் கனடாவில் ஒருவரின் வேதனத்தின் எவ்வளவு வீதம் இந்த வீட்டுக் கடனுக்காக வங்கிகளுக்கு செலுத்தப்படுகின்றன. உண்மையில் இது ஓர் ஆச்சரியத்தைக் கொடுக்கும் விடயம். கீழேயுள்ள இரு அட்டவணைகளும் அவற்றை தெளிவுபடுத்துகின்றன. தற்சமயம் உங்கள் வருமானத்தின் 78 வீதத்தை வீட்டுக் கடனுக்காக செலுத்துகின்றோம். அமெரிக்காவைப் போன்றல்லாது, கனடாவில் கல்வி மற்றும் மருத்துவம் இலவசம். ஆதலால் மிகுதி 22 வீதத்தில் ஆதன வரி, உணவு, உடை, உறையுளின் சக்தி (மின்சாரம், இயற்கை வாயு) போன்றவற்றிற்கு செலவிடக்கூடியதாகவுள்ளது. உண்மையில் பலர் இன்றைய காலகட்டத்தில் கடன் அட்டைகளிலேயே தங்கியுள்ளோம். 1990-களில் வீட்டுக் கடன் மாதந்த கட்டணத் தொகை, சராசரி மாதாந்த வருமானத்தின் 94 வீதமாகவிருந்தது. அப்போது பணவீக்கமும் அதிகமாகவிருந்தது. வட்டி வீதமும் அதிகமாகவிருந்தது.

| வருடம் | ரொறன்ரோ சராரசரி வீட்டு விலை | வீட்டு கடன் வீதம (சராசரி) | சராரசரி மாத கடன் கட்டணம் | சராரசரி மாத கட்டணம் (2020 பெறுமதியின் படி) |
|---|---|---|---|---|
| 1980 | $75,694 | 14.50% | $733 | $2,290 |
| 1985 | $109,094 | 12.20% | $913 | $1,988 |
| 1990 | $255,020 | 13.30% | $2,293 | $4,023 |
| 1995 | $203,028 | 9.20% | $1,366 | $2,137 |
| 2000 | $243,255 | 8.30% | $1,523 | $2,188 |
| 2005 | $335,907 | 6.00% | $1,719 | $2,206 |
| 2010 | $431,262 | 5.60% | $2,126 | $2,510 |
| 2015 | $622,116 | 4.70% | $2,810 | $3,030 |
| 2020 | $929,636 | 5.00% | $4,325 | $4,325 |

| வருடம் | சராசரி மாத வருமானம் (வரிகள் கழித்த பின்னர்) | சராரசரி மாத கடன் கட்டணம் | வீட்டுக் கடன் கட்டணம் வீதம் வருமானத்துடன் ஒப்பிடும் பொழுது |
|---|---|---|---|
| 1980 | $1,512 | $733 | 48% |
| 1985 | $1,994 | $913 | 46% |
| 1990 | $2,450 | $2,293 | 94% |
| 1995 | $2,568 | $1,366 | 53% |
| 2000 | $2,962 | $1,523 | 51% |
| 2005 | $3,543 | $1,719 | 49% |
| 2010 | $4,063 | $2,126 | 52% |
| 2015 | $4,652 | $2,810 | 60% |
| 2020 | $5,544 | $4,325 | 78% |

https://wowa.ca/canada-mortgage-rates-history

இக் கட்டுரை வெளியாகி சில நாட்களில் கனடிய மத்திய



வங்கி மீண்டும் ஒரு தடவை வட்டி வீதத்தை குறைக்கலாம். அல்லது அதே 5 வீதமாகவும் வைத்திருக்கலாம். இறுதியாக வெளிவந்த பணவீக்க வீதம் 2.7. இது முன்னரைவிடக் குறைவாகும். ஆனாலும், வேலைவாய்ப்பு, தேசிய உற்பத்தி போன்றவற்றை கருத்திற்கொண்டு வட்டி வீதக் குறைப்பைத் தள்ளிப்போடலாம்.

இன்றைய வீட்டு விலை அதிகரிப்பு அல்லது அதிகரித்த வீட்டு விலைக்கு பல காரணங்கள் உள்ளன. வட்டி வீதக் குறைப்பு வீடுகளுக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்கின்றது. அதிகரிக்கும் குடிவரவாளர்களாலும் வீட்டு விலை அதிகரிக்கின்றது. அமெரிக்காவுடன் ஒப்பிடும் பொழுது ரொரன்ரோ பெரும்பாகம், வன்கூவர் ஆகிய நகரங்களில் வீட்டின் விலை அதிகரிக்கும் வீதம் பல மடங்காகின்றது. 2000-ம் ஆண்டில் 250,000 டொலருக்கு விற்கப்பட்ட ஒரு வீடு, 2020-ல் 1.5 மில்லியன் டொலர்களுக்கு விற்கப்படுகின்றது. இது 500 வீத அதிகரிப்பாகும். வேறு எங்கு முதலிட்டாலும் இவ்வாறன இலாபத்தை பெறமுடியாது. இதனால் அமெரிக்கர்கள் உட்பட வெளிநாட்டவர்கள் கனடிய வீட்டுச் சந்தையில் முதலிடுகின்றார்கள். கனடாவில் வாழ்கின்றவர்களும் பல வீடுகளை வாங்குகின்றார்கள். வாடகையும் அதிகமாகவிருப்பதனால் வீட்டுக் கடன்களை செலுத்துவதும் சிரமமற்று உள்ளது. இதனால் முதன் முறையாக வீடு வாங்குபவர்களுக்கு கடடினமாகவுள்ளது, இங்கு வீடு என்பது தொடர்மாடி வீடுகளையும் உள்ளடக்கியதாகும்.

அடுத்த நான்கு வருடங்களுக்கான வட்டி வீதம் எவ்வாறு இருக்கும் என்ற கணிப்பு கீழேயுள்ள அட்டவணையில் உள்ளது. 1981-ல் இருந்த நிலை மீண்டும் வராது என நம்பப்படுகின்றது. அன்று வட்டி 20 வீதத்துக்கு மேலேயிருந்தமையால் பலர் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டிருந்தார்கள்.

Forecast of Lowest Mortgage Interest Rates as of May 20, 2024

| Date | BoC Rate | Prime Rate | 5Year Varia-ble | 1Year Fixed | 2 Year Fixed | 3Year Fixed | 5Year Fixed |
|---|---|---|---|---|---|---|---|
| 2024-05-21 | 5% | 7.20% | 5.90% | 6.39% | 5.44% | 4.74% | 4.59% |
| 2024-06-30 | 4.75% | 6.95% | 5.70% | 6.52% | 5.48% | 4.94% | 4.56% |
| 2024-12-31 | 4.50% | 6.70% | 5.45% | 6.15% | 5.18% | 4.69% | 4.43% |
| 2025-06-30 | 4% | 6.20% | 4.95% | 5.85% | 4.93% | 4.51% | 4.35% |
| 2025-12-31 | 3.75% | 5.95% | 4.70% | 5.61% | 4.75% | 4.38% | 4.31% |
| 2026-06-30 | 3.50% | 5.70% | 4.45% | 5.42% | 4.62% | 4.32% | 4.30% |
| 2026-12-31 | 3.25% | 5.45% | 4.20% | 5.29% | 4.55% | 4.31% | 4.32% |
| 2027-06-30 | 3.25% | 5.45% | 4.20% | 5.22% | 4.55% | 4.34% | 4.36% |
| 2027-12-30 | 3% | 5.20% | 3.95% | 4.23% | 4.62% | 4.41% | 4.43% |
| 2028-06-30 | 3% | 5.20% | 3.95% | 5.32% | 4.72% | 4.50% | 4.49% |
| 2028-12-30 | 3.25% | 5.45% | 4.20% | 5.43% | 4.80% | 4.57% | 4.55% |

## கனடாவின் பொருளாதாரம் ஆரோக்கியமாகவுள்ளதா?

அண்மைக் காலங்களில் கனடாவிலிருந்து நிரந்தரமாக வெளியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. சுமார் 35 வீதமான கனடியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றது. இதன் வீதம் ஒவ்வொரு வருடமும் மாறுபட்டாலும் வீத அளவில் பெரிய வேறுபாடுகளில்லை. ஏன் வெளியேறுகின்றார்கள்? Snowbirds இது ஒரு கனடிய பேச்சு ஆங்கிலம் (Canadian Slang). கடும் கனடிய குளிரிலிருந்து தப்புவதற்கு அமெரிக்காவின் தெற்கு மாநிலங்



களுக்கு புலம் பெயர்பவர்களை குறிக்கும் சொல் இது. வயது முதிர்ந்தவர்களே அதிகளவு இவ்வாறு குடிபெயர்பவர்கள். கொரோனாவின் பின்னர் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலை மற்றும் பிற காரணிகளால் ஏற்பட்ட பணவீக்கம், தொழில்நுட்ப வளர்ச்சியினால் எங்கிருந்தும் வேலை செய்யலாம் என்ற நிலை போன்றவற்றால், பலர் கனடாவுக்கு அருகில் உள்ள மத்திய அமெரிக்கா மற்றும் கரேபியன் தீவுகளுக்கு புலம் பெயர்கின்றார்கள். பல இளைஞர்கள் புதிய வாய்ப்புக்களை தேடி புலம் பெயர்கின்றார்கள். பலர் வாழ்க்கைச் செலவு குறைந்த நாடுகளை நோக்கி நகர்கின்றனர்.

ஒப்பீட்டு அடிப்படையில் கனடாவில் வாழ்க்கைச் செலவு மிக அதிகமாகவேயுள்ளது. பல நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது கனடாவில் வாழ்க்கைச் செலவு அதிகம். கனடாவுடன் ஒப்பிடும் பொழுது இலங்கையில் வாழ்க்கைச் செலவு 46.3 வீதத்தால் குறைவாகவேயுள்ளது. வாடகை 81.9 வீதத்தால் இலங்கையில் குறைவு. கனடாவை விட இந்தியாவில் வாழ்க்கைச் செலவு 66 வீதத்தால் குறைவாகும். உதாரணத்துக்கு வேறு சில நாடுகள்:

- Cost of living in Argentina is 46% cheaper than in Canada
- Cost of living in Armenia is 36% cheaper than in Canada
- Cost of living in Netherlands Antilles is about the same as in Canada
- Cost of living in Angola is 28% cheaper than in Canada
- Cost of living in United Arab Emirates is 5% cheaper than in Canada
- Cost of living in Antigua and Barbuda is 13% cheaper than in Canada

ஆனாலும், பல நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது கனடாவின் வாழ்க்கைத் தரம் மிகச் சிறந்ததாகும். வாழ்க்கைத் தரம் என்பது பாதுகாப்பு, மருத்துவ வசதி, கல்வி போன்ற பல விடயங்களை உள்ளடக்கியது. இலங்கையில் வாழ்க்கைச் செலவு குறைவாகவிருந்த போதும், வாழ்க்கைத் தரமும் குறைவாக வேயுள்ளது. இதனாலேயே குடிவரவரவாளர்களின் முதல் தேர்வு நாடுகளில் கனடாவும் ஒன்றாகவுள்ளது.

கடந்த காலங்களில் கனடாவின் நிதிக் கொள்கை மற்றும் பணவியல் கொள்கை போன்றவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முறையற்று இருந்தமையின் விளைவு கனடாவின் தேசிய உற்பத்தியை பாதித்துள்ளது. பணவியல் கொள்கையின் பெரும்பாலான அம்சங்களை மத்திய வங்கியே தீர்மானிக்கின்றது. உதாரணம்: வட்டி வீதம். கனடிய மத்திய வங்கியானது எந்த வித அரசியல் தலையீடுமின்றி சுதந்திரமாக இயங்கும் அமைப்பாகும். நிதிக் கொள்கை மத்திய மற்றும் மாகாண அரசுகளால் தீர்மானிக்கப்படுகின்றது. உதாரணத்துக்கு: தனி நபர், தனியார் நிறுவன வரிகள், சுதந்திர வர்த்தக உடன்பாடுகள் போன்றவை.

நிக்சனுடன் ஹென்றி கீசிங்கர் சீனாவிற்கு போய் வந்த பின்னர், அமெரிக்க நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை சீனாவிற்கு மாற்றம் செய்தன. இதனால் பலர் வேலை இழந்தனர். இதே நிலை கனடாவிற்கும் ஏற்பட்டது. 1950-களில் மொத்த தேசிய உற்பத்தி ஐந்து வீதத்தால் அதிகரித்துச் சென்றது. இந்த நிலை படிப்படியாக குறையத் தொடங்கியது. 70-களில் நான்கு வீதமாகவும், 80-களில் மூன்று வீதமாகவும், 90-களில் இரண்டு வீதமாகவும் மாறியது. இப்பொழுது .2 வீத அதிகரிப்பே சாதனையாகவுள்ளது. OECD (Organisation for Economic Co-operation and Development) நாடுகளில் கனடாவின் வளர்ச்சி மிகவும் பின்தங்கியேயுள்ளது. 2040-களில் இது மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும். 1970-க

ளில் 65 வயதுக்கு மேற்பட்ட கனடியர்கள் 8 வீதமாகும். இது 2040-ல் 25 வீதமாக அதிகரிக்கும் என கருதப்படுகின்றது. 85 வயதுக்கு மேற்பட்டோரின் வீதம் 2040-ல் ஐந்து வீதமாகும். இந்த எண்ணிக்கை அதிகரிப்பினால் மருத்துவச் செலவு அதிகரிப்பு, ஓய்வூதிய கொடுப்பனவு அதிகரிப்பு ஏற்படுகின்றது. C.D. Howe Institute-இன் பொருளாதார நிபுணர் Parisa Mahboubi பின்வருமாறு கூறினார். population aging represents a net unfunded liability. இவரது கருத்துடன் உடன்படாவிட்டாலும், வயது முதிர்ந்தவர்களின் எண்ணிக்கை ஒரு புறம் அதிகரிக்க மறுபுறத்தில் தொழிலாளர்கள், சேவையாளர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது. அதே சமயம் புதிய குடிவரவாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் பொழுது, நாட்டை விட்டு வெளியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

கனடாவில் முதலீடு செய்யும் வெளிநாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவேயுள்ளது. அதாவது கனடா முதலீட்டாளர்களை கவரத் தவறிவிட்டது. முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு கடனாக வழங்கப்படும் நிதி முறையாக வில்லை. தொழிலாளர்கள், சேவையாளர்களின் எண்ணிக்கை குறைவும், முதலீட்டாளர்கள் கனடாவைத் தவிர்ப்பதற்கான காரணமாகும். கனடாவில் அதிகம் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகம். அப்படியிருந்தும், அமெரிக்காவில் பொஸ்ரன் நகரம், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் மருந்து ஆராய்ச்சி-உற்பத்தி மையம், சியாற்றல் உயர் தொழில்நுட்ப மையம், கலிபோர்னியாவின் சன்கோசே கணினி பொறியியலாளர்களின் சேவை மையம், நியூயோர்க் நகரம் உலகின் நிதி மற்றும் பங்குச் சந்தையின் தலைமை நகரம் எனப் பல உள்ளன. கனடாவில் இவ்வாறான நகரங்கள் உருவாக்கப்படவில்லை. வோட்டலோ நகரம் கணினி உற்பத்தி நகரமாகவிருந்த போதும் அதனால் அடுத்த கட்டத்துக்கு நகர முடியாமல் போய்விட்டது. பிளக்பெறி செல் தொலைபேசியின் ஆரம்பமாக வோட்டலோ நகரமிருந்தது. அதனை வளர்ச்சியடையச் செய்ய ஒன்ராறியோவும், கனடாவும் தவறிவிட்டது.

கனடாவின் மிகப் பெரிய பலவீனம் அமெரிக்காவிற்கு அருகில் உள்ளமையாகும். அமெரிக்க சந்தையானது கனடாவை விட பத்து மடங்கு பெரியது. பல முதலீட்டாளர்கள் அமெரிக்காவை விரும்புவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். உலகில் அதிகளவு எண்ணெய் உள்ள முதல் மூன்று நாடுகளில் கனடாவும் ஒன்றாகும். அப்படியிருந்தும் கனடாவால் எண்ணெய் உற்பத்தி வருமானத்தை அதிகரிக்க முடியாமல் போய்விட்டது.

இன்று கனடா G 20 நாடுகளில் ஒன்றாகவிருந்தாலும் கனடாவின் பொருளாதாரம் மற்றும் மொத்த தேசிய உற்பத்தி என்பன கணிசமான அளவு குறைந்தேயுள்ளது, ஏற்கனவே கனடாவின் கடன் தொகை 1.2 ரில்லியனை எட்டியுள்ளது. அதைவிட மாகாணங்களின் கடன் 800 பில்லியனை எட்டியுள்ளது. அதே சமயம் கனடாவின் தேசிய உற்பத்தியும் குறைந்து கொண்டு செல்கின்றது. இவை கனடா செல்வந்த நாடு என்ற நிலையிலிருந்து பின் தங்கிச் செல்கின்றது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. இது தொடருமாயின் இலவசக் கல்வியில் மாற்ற மேற்படும். இலவச மருத்துவம் மாற்றமடையும். காலப்போக்கில் கனடாவிற்கு வரும் குடிவரவாளர்களின் எண்ணிக்கையும் பாதிப்படையும். OECD மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியன அடுத்த இருபது வருடங்களில் கனடாவின் பொருளாதாரம் படிப்படியாக வீழ்ச்சியடையும் எனக் கணித்துள்ளன. கனடாவின் எதிர்காலம் சூரியனற்றேயுள்ளது.

தற்பொழுது சுமார் பத்து வீதமான கனடியர்கள் உணவு வங்கிகளில் தங்கியுள்ளனர். 20 வீதமான கனடியர்கள் தங்களது உணவுத் தேவைகளை பூர்த்திசெய்ய முடியாமல் உள்ளனர். கொரோனாக் காலங்களில் பாதிக்கப்பட்ட உணவகங்கள் உட்பட பல நிறுவனங்கள் மீண்டும் பழைய நிலைக்குச் செல்லமுடியாதுள்ளது. கொரோனாக் காலங்களில் ஏற்பட்ட உயர் தொழில்நுட்ப மாற்றங்கள், நுகர்வோரின் நுகர்வுக் கலாசார மாற்றங்கள் பல வணிக நிறுவனங்களை பாதித்துள்ளது. ரொறன்ரோ நகரின் டவுன் ரவுன் பகுதி கொரோனாக்கு முன்னர் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. தொடர் மாடிக் கட்டடங்களில் ஒரு அறை வாடகைக்கு சுமார் மூவாயிரம் டொலர்களுக்கு மேலே சென்றது. வணிக கட்டடங்களில் ஒரு பகுதியை வாடகைக்கு எடுப்பதே கடினமாகவிருந்தது. இன்று இதே ரொறன்ரோ டவுன் ரவுன் பகுதியில் உள்ள வணிக கட்டடங்களில் 20 வீதமான பகுதி வெற்றிடமாகவுள்ளது. பல வாடகைப் பகுதிகளின் ஒப்பந்தங்கள் முடிவடைந்தால் வெற்றிடங்களின் எண்ணிக்கை வீதம் அதிகரிக்கலாம். ஒன்லைன் வணிகத்தின் பாதிப்பை பல அங்காடித் தொகுதிகளில் காணக்கூடியதாகவுள்ளது. ஏ.ஐ மற்றும் ரொபோட் போன்றவற்றின் வளர்ச்சி பல வேலைகளை இல்லாமல் செய்கின்றது.

கனடாவில் இயங்கும் நிறுவனங்களின் பல சேவைகளை கிழக்கில் உள்ள நாடுகளே செய்கின்றன. பொருட்களை ஏற்றிச் செல்லும் பெரிய ரக்குகளின் 'அனுப்புகை' (dispatch) பற்றிய தொடர்பாடல்கள் இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளிலிருந்து செயற்படுகின்றன.

உலகமயமாதலின் தொடர்ச்சியால் ஏற்பட்ட நவதாராளமயம் பல முதலீட்டாளர்களை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி திரும்பவைக்கின்றது. இது மேற்கின் தொழில் மையங்களை மற்றும் வேலை வாய்ப்புகளை பாதிக்கின்றது. முதலீட்டாளர்களால் மற்றும் தொழிலதிபர்களால் கனடாவிற்கு செலுத்தப்படும் வரியும் இல்லாமல் போகின்றது. இந்த நகர்வை ஊக்கப்படுத்தியது மேற்கின் அரசுகள் என்பது மறுப்பதற்கில்லை. மேற்கின் அரசுகளை பெரும் நிறுவனங்களும், தொழிலதிபர்களுமே நிர்வகிக்கின்றனர். இதற்கு கனடாவும் விதிவிலக்கல்ல.

டொலரை மையப்படுத்திய மேற்கு நாடுகளுக்கு இணையாக சீனா மற்றும் 'பிரிக்ஸ்' நாடுகள் டொலருக்கு மாற்றீடான நாணயத்தை அறிமுகப்படுத்துகின்றன. (De-Dollarization) இதில் சீனா ஓரளவிற்கு வெற்றி பெற்றுள்ளது. தனது வணிகத்தில் ஐம்பது வீதத்துக்கு மேற்பட்டவற்றில் டொலரை பாவிக்காமலேயே உள்ளது.

அடுத்த பத்தாண்டுகளில் பல ஜி 7 நாடுகள் பெயரளவிலேயே ஜி 7 ஆக தம்மை காட்டிக் கொள்ளும். ஜி.டி.பி (மொத்த தேசிய உற்பத்தி)-ஐ டொலரில் கணக்கிடுவதனால் பல வளர்ந்து வரும் நாடுகள் தொடர்ந்து வளர்ந்து வரும் நாடுகளாகவே பிரதிபலிக்கின்றன. உண்மையில் அவர்கள் வளர்ந்த நாடுகள்.

கனடாவில் Jean Chrétien பிரதமராக இருந்தபோது, எதிர்கா லத்தை கருத்தில் கொண்டு, ஓய்வூதிய காப்பீட்டுக் கட்ட ணத்தை அதிகரித்தார். அதன் பின்னர் பதவிக்கு வந்த ஸ்ரீ-பன் காப்பர், ஓய்வு பெறுவதிற்கான வயதெல்லையை 65-லிருந்து 67-க்கு மாற்றினார். இவர்கள் முன்கூட்டியே அதிக ரிக்கும் முதியவர்களின் எண்ணிக்கையை கருத்திற் கொண்டே திட்டமிட்டனர். இன்று கனடிய பொருளாதாரத்தில் ஓய்வூதிய கொடுப்பனவும் ஒரு பிரச்சினையாகவேயுள்ளது. இவ்வாறு ஓய்வு பெறுபவர்களுக்கு மாற்றீடாக 2025-ல் தற்போதைய அரசினால் எதிர்பார்க்கப்படும் புதிய 500,000 குடிவரவாளர்க ளுக்கு வேலைவாய்ப்பு மற்றும் உறையுள் போன்ற விடயங்க ளைச் கனடாவால் செய்ய முடியுமா ?

2023 மே மாதம் லொப்லோஸ் நிறுவன மரக்கறி - மளிகைக் கடைகளுக்கு செல்ல வேண்டாம். அக்கடைகளை மே மாதம் முழுவதும் பகிஸ்கரிக்க வேண்டும் என சமூக வலைத்தளங் கள் முழுவதும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இதனை பிர தான ஊடகங்கள் வெளிப்படுத்தவில்லை. அதிகரித்துச் செல் லும் மரக்கறிகளின் விலையே இதற்கான பிரதான காரணம். லொப்லோஸ் நிறுவனம் மரக்கறி விற்பனைகளில் மட்டும் ஒரு நாளைக்கு ஒரு மில்லியன் டொலர்களை இலாபமாக பெறு கின்றது. இந்த நிறுவனமே மலிவு விற்பனை மரக்கறிக் கடை யான நோ பிறில்ஸ்ஐயும் நடத்துகின்றது.

ஒரு புறம் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு. மறுபுறம் வெளி யேறும் கனடியர்கள், மற்றொருபுறம் வயதாகும் கனடியர்க ளின் எண்ணிக்கை அதிகரிப்பு, இவற்றின் மத்தியில் கனடா குடிவரவாளர்களையும் வரவேற்க வேண்டும். புதிய குடிவர வாளர்கள் என்பது அவசியம், அத்தியாவசியம். ஆனால், அவர்களுக்கு வழங்குவதற்கு கனடாவிடம் என்ன உள்ளது ?

ஜி.டி.பியைப் பற்றி ஆய்வு செய்த நோபல் பரிசு பெற்ற பொரு ளியல் விஞ்ஞானி Simon Kuznets கூறிய விடயம் முக்கியமா னது. 'the welfare of a Nation can scarcely be inferred from a measurement of national income'. உண்மையும் அது தான். பெயரளவிலேயே கனடாவும் அமெரிக்காவும் செல் வந்த நாடுகள். தேசிய உற்பத்தியை டொலரில் கணக்கிடுவத னால் செல்வந்த மாயை பெறுகின்றார்கள். உள்ளே வந்தால் வெறும் குடமே மிஞ்சியுள்ளது. ஏனெனில் இங்கு அரசை நடத் துபவர்கள் பெரும் நிறுவனங்கள்.

இன்று மேற்கிற்கு அரசியல் தீர்மானங்களை எடுக்கக் கூடிய தலைவர்களோ புத்திஜீவிகளோ தேவையில்லை. முறை யான, தீர்க்கமான, மக்களின் நலனில் அக்கறை கொண்ட தலைவர்களே தேவை. இல்லாதவிடத்து, சப்பாத்தியுடனும் சம்பலுடனும் ஆறுதலடைவோம்.



rathan@thaiveedu.com






**இஸ்ரேல் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் நகர்வுகளை மேற்கொள்ளக்கூடாது எனத் தனக்குத் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் தலைமை வழக்க றிஞர் காரீம் கான், சி.என்.என்–இற்கு வழங்கிய அண்மைய செவ்வியிற் தெரிவித்திருக்கின்றார். அமெரிக்காவும் இஸ்ரேலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு அழுத்தங்க ளையும் அச்சுறுத்தல்களையும் மேற்கொண்டு வந்துள்ளன. வருகின்றன.**

## இஸ்ரேலுக்கெதிரான மூன்று சர்வதேச நடவடிக்கைகள்:

காசா மீதான இஸ்ரேலின் இன அழிப்புப் போர் நடவடிக்கை களுக்கான எதிர்வினைகளாக சட்டரீதியானதும் அரசியல் ரீதியானதுமான மூன்று முக்கிய நிகழ்வுகள் சர்வதேச மட்டத் தில் அண்மையில் நிகழ்ந்துள்ளன. ஒன்று சர்வதேச நீதிமன் றத்தில் (IJC) இந்த ஆண்டு ஜனவரி மாதம் தென்-ஆபிரிக்கா இஸ்ரேல் மீது இன அழிப்பு, போர்க்குற்ற வழக்குத் தொடுத்த மையும் சர்வதேச நீதிமன்றம் அவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டமையுமாகும். இரண்டாவது சர்வதேச குற்ற வியல் நீதிமன்றத்தின் (ICC) தலைமை வழக்கறிஞர் காரீம்-கான் (Karim Khan) இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்-யாகு, அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் Yoav Gallant மற் றும் ஹமாஸ் இயக்கத்தின் மூன்று தலைவர்கள் மீது கைது ஆணை பிறப்பிக்கக் கோரி மே மாத இறுதியில் விண்ணப் பித்திருக்கின்றமை. மூன்றாவது பாலஸ்தீனத்தைத் தனி நாடாக அங்கீகரிக்க நோர்வே, ஸ்பெயின் மற்றும் அயர்லாந் ஆகிய நாடுகள் முடிவு செய்துள்ளமையாகும். இது விடயம் கடந்த பல மாதங்களாக நோர்வே அரசியல் மற்றும் ஊடகங் கள் மட்டத்தில் பேசுபோருளாக இருந்து வந்தது. அதிகார பூர்வ அறிவிப்பு மே 22-ம் திகதி வெளிவந்துள்ளது. இதற்கு நோர்வே நாடாளுமன்ற பெரும்பான்மை ஆதரவு முன்னேரே கிடைத்திருந்தது. அயர்லாந்து மற்றும் ஸ்பெயின் ஆகியன வும் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கவுள்ளன.

இஸ்ரேல் இதற்குக் கண்டனம் தெரிவித்து இம் மூன்று நாடுக ளுக்கான இஸ்ரேல் தூதுவர்களைத் திருப்பி அழைத்துள் ளது. பாலஸ்தீனத்திற்கான உதவி வழங்கும் நாடுகளின் குழு வில் நோர்வேயின் பங்கு சார்ந்து எதிர்மறை விளைவுகளை எதிர்கொள்ள நேரும் என நோர்வேயை இஸ்ரேல் எச்சரித்துள் ளது.

அண்மைய வாரங்களில் ஸ்பெயின் அயர்லாண்ட், நோர்வே ஆகிய மூன்று நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான உரையாடலின் பின்னரே இந்த முடிவு வெளிவந்துள்ளது. நீண்ட காலமாக மூன்று நாடுகளுக்கும் இடையே விரிவான இராஜதந்திர மற்றும் அரசியல் பேச்சுவார்த்தைகள் நடந்துள்



ளன. மேலும் ஸ்பெயின் இது விடயத்தில் உந்து சக்தியாக இருந்துள்ளது. இதன் அரசியல், குறியீட்டு முக்கியத்துவம் மற்றும் பின்னணி, விளைவுகள் குறித்து விரிவாக பிறிதொரு கட்டுரையிற் பார்க்கலாம். இந்தக் கட்டுரையில் காசா மீதான இஸ்ரேலின் இனப்படுகொலை எல்லை மீறியுள்ள நிலையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இஸ்ரேல் பிரதமர், பாது காப்பு அமைச்சர் மற்றும் ஹமாஸ் தலைவர்கள் மீது கைது ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை சார்ந்து சில விடயங்களை நோக்குவது பொருத் தம் என நினைக்கின்றேன்.

## போர்க்குற்றவாளிகள் மீது கைது ஆணை பிறப்பிக்கப்படுமா?

அதன் பொருள் கைது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்

பதல்ல. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் தலைமை வழக்கறிஞரின் இந்த விண்ணப்பத்தினை சர்வதேச நீதிமன்றத்தின் பிரத்தியேக ஆணைக்குழு விசாரணை மற்றும் பரிசீலனைக்கு உட்படுத்தி மேற்சொன்ன நபர்கள் மீது கைது ஆணை பிறப்பிப்பதா இல்லையா என்ற தீர்மானத்தினை எடுக்கும். இன்னும் சில வாரங்கள் அல்லது மாதங்களில் அத் தீர்மானம் வெளிவர வாய்ப்புள்ளது. பாலஸ்தீன மக்கள் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலைகள், காசா மீதான



அதன் போர்க் குற்றங்கள், மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் இஸ்ரேல் தலைவர்கள் மீதான கைது ஆணை கோரலுக்கான பின்னணிகள் என்பது பலரும் அறிந்ததே. ஒக்ரோபர் 7 (2023) இஸ்ரேலியப் பொதுமக்கள் மீதான ஹமாஸின் படுகொலைகளும் பணையக் கைதிகளாக யூத மக்களை அவர்கள் கைது செய்தமையுமே ஹமாஸ் அமைப்பின் தலைவர் யாஹ்யா சின்வர் (Yahya Sinwar), அரசியற் பிரிவுத் தலைவர் இஸ்மையில் ஹனியே (Ismail Haniyeh), இராணுவப் பிரிவுத் தலைவர் முகமெட் டைப் (Mohammed Deif) ஆகியோர் மீதான கைது ஆணை விண்ணப்பத்திற்கான காரணிகள்.

## இஸ்ரேல் தண்டிக்கப்படுமா:

சர்வதேச நீதித்துறை சார்ந்த ஓர் அமைப்பு, அமெரிக்காவின் செல்லப்பிள்ளையும், சர்வதேசத் தீர்மானங்கள், அழுத்தங்கள் எதனையும் இதுவரை பல தசாப்தங்களாகப் பொருட்படுத்தாததுமான இஸ்ரேலின் உயர்மட்டத் தரைவர்கள் மீது கைது ஆணை பிறப்பிக்கக்கூடிய புறச்சூழல் எழுந்துள்ளது. இது போர்க் குற்றத்திற்கு எதிரான மிக முன்னுதாரணமான நகர்வு, மாற்றம் என்பதை மறுக்க முடியாது.

சர்வதேச தீர்மானங்களிலிருந்து இஸ்ரேலை அமெரிக்கா தொடர்ந்து பல்லாண்டுகளாகப் பாதுகாத்து வந்துள்ளதோடு சட்டரீதியான தண்டனைகளிலிருந்து தப்பிப்பதற்கும் அமெரிக்கா தொடர்ச்சியாக முண்டுகொடுத்து வந்துள்ளது. தற்போது இஸ்ரேல் பிரதமர் உட்பட பாதுகாப்பு அமைச்சர் மீது கைது ஆணை பிறப்பிக்கப்பட்டால், அமெரிக்கா அதற்கு எதிராக எதனையும் சட்ட ரீதியாகச் செய்துவிட முடியாது. ஐ.நா பாதுகாப்பு அவையில் அடிக்கடி நிகழ்வதுபோல வீட்டோ அதிகாரத்தினைப் பயன்படுத்தும் வாய்ப்பு இதில் இல்லை. அமெரிக்கா சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் உறுப்புரிமையைக் கொண்டிருக்கவில்லை என்பதால், அத்தகைய எதிர் நடவடிக்கைகள் சாத்தியமில்லை. இஸ்ரேல் அரசாங்கத்திற்கும் அதன் போர் இயந்திரத்திற்கும் இதுவொரு பாரிய அடி. இது, இஸ்ரேல் மீதான அடி மட்டுமல்ல. இன்னொரு வகையில் அமெரிக்கா மீதான அடியும்கூட. இஸ்ரேலைப் பொறுப்புக்கூற வைப்பதற்கான அழுத்தம் என்ற கோணத்திலும் இதில் அமெரிக்காவுக்கான அழுத்தமும் இணைந்திருக்கின்றது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் (2021) ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன நிலங்களில் (Occupied Palestinian Territory-OPT) பாலஸ்தீன மக்கள் மீதான இஸ்ரேலின் நடவடிக்கைகளைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளுக்கு உட்படுத்தத் தொடங்கியிருந்தது. பின்னாட்களில், அதாவது ஒக்ரோபர் 7 தாக்குதலின் பின்னர் ஹமாசின் நடவடிக்கைகளையும் விசாரணைகளுக்கு எடுத்துக்கொண்டது.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்:

சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் (International Criminal Court -ICC), சர்வதேச நீதிமன்றமும் (International Court of Justice) ஒன்றல்ல. இரண்டும் நெதர்லாண்ட் நாட்டின் ஹேக் நகரைத்தான் தளமாகக் கொண்டுள்ளன. சர்வதேச குற்றவியல் நீதிமன்றமானது போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளை விசாரிக்கும் ஆணையைக் கொண்ட நிரந்தர சர்வதேச நீதிமன்றமாகும். இதில் 124 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. அதன் பொருள் அந்நாடுகள் சர்வதேச நீதிமன்றத்தின் சட்டத் தீர்மானங்களுக்குக் கட்டுப்பட்டவை. அமெரிக்கா, சீனா, ரஷ்யா போன்ற வல்லரசுகளும் இஸ்ரேல், லிபியா, கட்டார் போன்ற நாடுகளும் அதில் அங்கம் வகிக்கவில்லை. இதன் முதன்மையான அதிகாரம் அல்லது நோக்கு தனிநபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது. தனிநபர்கள் எனும்போது, மேற்சொன்ன மனிதத்திற்கு எதிரான பாரிய குற்றங்களை நிகழ்த்தும் அரச தலைவர்கள், இராணுவத் தளபதிகள், அமைச்சர்களைக் குறிக்கின்றது. இந்த அமைப்பு 1998-ல் ரோம் தீர்மானத்தின் மூலம் நிறுவப்பட்டது.

நாடுகளின் தேசிய நீதித்துறையால் முன்னெடுக்க முடியாத அல்லது அவை முன்னெடுக்க மறுக்கின்ற சர்வதேசச் சட்டங்களை மீறுகின்ற குற்றங்களை இழைக்கின்ற தனிநபர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கான அதிகாரத்தை குற்றவியல் நீதிமன்றம் கொண்டுள்ளது. போர்க்குற்றம் சாட்டப்பட்டவர்களில் யாரேனும் நீதிமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏதாவது நாட்டிற்குச் சென்றால், அந் நபரைக் கைது செய்து ஹேக் நகருக்கு அனுப்ப வேண்டிய கடப்பாடு குறித்த நாட்டுக்கு உள்ளது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஐ.நா நிறுவனத்துடன் நேரடியாகத் தொடர்புபட்ட அமைப்பல்ல. ஆனால் அது ஐ.நா.வுடன் ஓர் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளது. ஐ.நா பாதுகாப்பு அவையும் குற்றவியல் நீதிமன்றத்தில் நாடுகளின் சார்பில் வழக்குகளைத் தொடுக்க முடியும்.

## சர்வதேச நீதிமன்றம்:

சர்வதேச நீதிமன்றம் ஒரு ஐ.நா அமைப்பு. இது தனிநபர்கள் மீது அல்லாமல், அரசுகள் மீதான நடவடிக்கைகளையும் பொறுப்புக்கூறலையும் மையப்படுத்தியது. ICJ தலையிடும் மிக முக்கியமான விவகாரங்களில் ஒன்று இன அழிப்பிற்கு




எதிரான உடன்படிக்கை மீதான மீறலாகும். சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு அத்தகைய மீறல்களுக்குப் பொறுப்புக்கூற வைப்பது, இழப்பீடு வழங்க வைப்பது (பரிகார நீதி), மீண்டும் அவ்வாறான மீறல்கள் நடவாதிருப்பதற்கான உத்தரவாதங்களை உடன்படிக்கைகள் மூலம் ஏற்படுத்துதலை உள்ளடக்கியது.

இஸ்ரேல் இன அழிப்புக்கு எதிரான தீர்மானத்தினை மீறுவதாக அதன் மீது தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது. வழக்கின் ஆரம்பக்கட்ட விளக்கமளிப்புகள் நெதர்லாந்தின் Haag-இல் ஜனவரி 11, 2024-ல் தொடங்கியிருந்தன.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மீதான விமர்சனம்:

தற்போதைய கைது ஆணை விண்ணப்பத்தினை, இந்த விவகாரத்தினைக் கையாளுகின்ற ஆணைக்குழு ஏற்றுக்கொண்டு கைது ஆணை பிறப்பிக்குமாயின் இவர்களில் யாரேனும் குற்றவியல் நீதிமன்ற அங்கத்துவ நாடுகளில் ஏதாவது ஒன்றிற்கு பயணம் செய்ய நேரும்போது கைதுசெய்யப்பட வேண்டும். குற்றவியல் நீதிமன்றத்தின் இறுதிக்கால நடவடிக்கைகள் அதுவொரு இரட்டை நிலையுடன் செயற்பட்டு வருவதான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. சர்வதேச நீதிசார் நடவடிக்கைகள் தொடர்பாக ஒரு வகை வடிகட்டல் (Selective approach) அணுகுமுறையுடன் இயங்குவதான குற்றச்சாட்டுகளும் உள்ளன. இஸ்ரேல் விவகாரத்தை நீதி தவறாது கையாளுமாயின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மீதான நற்பெயரையும் அங்கீகாரத்தையும் மீளுறுதிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக அது அமையுமென்ற கருத்தும் நிலவுகின்றது.

## சாட்சியங்களும் ஆதாரங்களும்:

இஸ்ரேலுக்கு அதன் மக்களைப் பாதுகாக்க உரிமை உண்டு. ஆனால் அந்த உரிமையானது சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்குக் கட்டுப்படவேண்டிய கடமைகளிலிருந்து இஸ்ரேல் அல்லது வேறு எந்த நாட்டிற்கும் விலக்கு அளித்தலை அனுமதிக்காது, காரீம் கான் வெளியிட்டுள்ள அறிக்கையிற் குறிப்பிடப்பட்டுள்ளது. காஸாவின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பொதுமக்களுக்கு மனித உயிர் வாழ்த்தலுக்கு இன்றியமையாத ஒன்றையும் விட்டுவைக்காமல் இஸ்ரேல் வலிந்தும் திட்டமிட்ட முறையிலும் பறித்துள்ளது என்பதற்கான ஆதாரங்களைத் தமது குழு கண்டறிந்துள்ளதாகவும் கான் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயிர் தப்பியோர், கண்கண்ட சாட்சியங்களுடனான நேர்காணல்கள், உறுதிப்படுத்தப்பட்ட காணொளிப் பதிவுகள், ஒலிப் பதிவுகள், ஒளிப்படங்கள், செய்மதிப்படங்கள், குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களின் அறிக்கைகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணை ஆய்வின் பெறுபேறாகவே கைது ஆணை விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாக காரீம் கான் தெரிவித்துள்ளார்.

## பட்டினியை ஒரு 'போர் முறையாக':

பொதுமக்கள் மீது இலக்குவைக்கப்பட்ட தாக்குதல்களோடு -உணவுக்காக வரிசையில் நிற்பவர்கள் மீதான தாக்குதல்கள் - மனிதாபிமான அமைப்புகளால் உதவி வழங்கப்படுவதைத் தடுப்பது எனவாக, இஸ்ரேலின் போர்க்குற்றங்களும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் தலைமை வழக்கறிஞராற் பட்டியலிடப்பட்டுள்ளன. உதவிப் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் கொலைகள் ஆகியனவும் நிகழ்த்தப்பட்டுள்ளன எனக் கூறியுள்ள அவர், அதன் விளைவாகப் பல உதவி நிறுவனங்கள் காசாவில் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்த அல்லது மட்டுப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். அத்தோடு காசாப் பிரதேசத்தை இஸ்ரேல் முற்றுகையிட்டு எல்லைக் கடப்புப் பாதைகளை மூடுவது மற்றும் உணவு, தண்ணீர், மருத்துவப் பொருட்களின் வழங்கலைக் கட்டுப்படுத்துவது, பட்டினியை ஒரு 'போர் முறையாக' பயன்படுத்துவதற்கான இஸ்ரேலிய திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று கான் கூறியுள்ளார்.

'ஒக்ரோபர் 7' தாக்குதலின் போது பல நூற்றுக்கணக்கான இஸ்ரேலியப் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு சின்வார், டெய்ஃப் மற்றும் ஹனியே ஆகிய ஹமாஸ் தலைவர்கள் குற்றப் பொறுப்பு ஏற்கவேண்டியவர்கள் என்றும் கான் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதல்கள் பொறுப்புக்கூறலைக் கோருகின்றன. ஹமாஸினால் சிறைபிடிக்கப்பட்டவர்கள் மனிதாபிமானமற்ற சூழ்நிலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, சிலர் பாலியல் வன்முறைக்கு உட்பட்டுள்ளனர் என்று நம்புவதற்கு 'நியாயமான காரணங்கள்' உள்ளன எனவும் கூறப்பட்டுள்ளது. தம் மீதான கைது ஆணை விண்ணப்பத்தைக் கண்டித்துள்ள ஹமாஸ் அமைப்பு, அது பாதிக்கப்பட்டவரை படுகொலையாளிக்குச் சமப்படுத்தும் செயல் என்று கூறியிருக்கின்றது.

## அமெரிக்காவும் பிரித்தானியாவும் கண்டனம்:

அமெரிக்காவும் பிரித்தானியாவும் கைது ஆணை மனுவைக் கண்டித்துள்ளன. 2014-ம் ஆண்டுக்கு முந்தைய காலங்களில்

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனக் குழுக்கள் மேற்கொண்ட வன்முறை மற்றும் போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் 2021-ல் தீர்மானித்தது. 2021-ல் அவ்வாறான விசாரணை தொடர்பான தீர்மானத்தினை சர்வதேச நீதிமன்றம் எடுத்தபோதே, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா அதனை எதிர்த்தன. காசாவில் பெருமெண்ணிக்கையில் பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டதோடு, பேரழிவுகளை இஸ்ரேல் படைகள் ஏற்படுத்தியபோதும் இஸ்ரேலின் 'தற்காக்கும் உரிமை' என்ற பேரில் அதனை இந்த இரு நாடுகள் உட்பட்ட மேற்குலக நாடுகள் ஆதரித்து வந்தன. இதில் இன்னொரு விடயத்தினை எந்தவொரு மேற்குலக அரசுகளும் பேசப்போவதில்லை. அதாவது, இஸ்ரேலின் அரச பயங்கரவாதத்தையும் அதற்கான எதிர்வினையையும் ஒரே தராசில் நிறுத்துகின்ற, அல்லது பாலஸ்தீன எதிர்ப்பினைப் பயங்கரவாதமாகச் சித்தரிக்கின்ற இஸ்ரேலின் போரைத் தற்காப்பாகவும் நியாயப்படுத்துகின்ற போக்கு வல்லரசுகள் மட்டத்திலும் வலதுசாரி அரசாங்கங்கள், அரசியல் மட்டத்திலும் நீடித்து வருகின்றது.

'ஹமாஸுடன் இஸ்ரேலைச் சமப்படுத்தியுள்ளமையைத் தாம் நிராகரிக்கிறோம்' என்று, அமெரிக்க வெளியுறவு செயலாளர் ஆண்டனி பிளிங்கன் (Antony Blinken) கூறியுள்ளார். குற்றவியல் நீதிமன்றத்தின் கைது முடிவுகள், போர்நிறுத்த ஒப்பந்தம், பணயக் கைதிகள் விடுதலை குறித்த பேச்சுவார்த்தை, மற்றும் காசாவில் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை இந்தக் கைது விண்ணப்பம் பாதிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். பிரித்தானிய அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ஒருவரும் இதே கருத்தினையே வெளிப்படுத்தியுள்ளார்.

## அமெரிக்காவும் போர்க்குற்றங்களும்:

அமெரிக்காவுக்கு எதிரான விசாரணைகளை அழுத்தங்கள், எதிர்ப்புகள் காரணமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் முன்னர் கைவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2017-ம் ஆண்டின் இறுதியில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஆப்கானிஸ்தானில் நடந்தேறிய போர்க்குற்றங்கள் குறித்த முறையான விசாரணைக்கு வழிவகுக்கும் ஆதாரங்களையும் சாட்சியங்களையும் சேகரிக்கத் தொடங்கியது. பல சாட்சியங்களில் அமெரிக்கா தலைமையிலான சர்வதேச கூட்டுப்படை, வெளிநாட்டு மற்றும் ஆப்கானிய உளவுத்துறை மற்றும் ஆப்கானிய அரசாங்கப் படைகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் கண்டறியப்பட்டன. ஆப்கானிஸ்தான் மண்ணில் அமெரிக்க ஆயுதப் படை மற்றும் சி.ஐ.ஏ. உறுப்பினர்களால் போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் அன்றைய தலைமை வழக்கறிஞர் ஃபட்டூ பென்சௌடா (Fatou Bensouda) தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி பில் கிளிண்டன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினை உருவாக்கிய ரோம் தீர்மானத்தில் கையெழுத்திட்டு அமெரிக்காவை அதன் அங்கத்துவ நாடாக ஆக்கினார். அவருக்குப் பின் பதவிக்குவந்த ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், அங்கத்துவத்திலிருந்து வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் உலகளாவிய ஆக்கிரமிப்புகளின் போதான போர்க் குற்றங்களுக்காக சட்ட நடவடிக்கைக்கு உட்பட நேரும் என்ற அச்சமே புஸ் நிர்வாகம் அங்கத்துவத்திலிருந்து வெளியேறியமைக்கான காரணம் என்பது புதிரல்ல.

## மேற்கின் இரட்டைநிலை:

அதேவேளை 2022-ல் உக்ரைன் விவகாரத்தில் ரஷ்ய ஜனாதிபதி புட்டின் மீதான குற்றவியல் நீதிமன்றத்தின் கைது ஆணையை அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஆதரித்திருந்தன. அமெரிக்கா அத் தீர்மானத்தினை ஊக்கப்படுத்தி விதந்தோதியது. ஆனால், இஸ்ரேல் விவகாரத்தில் குற்றிவியல் நீதிமன்ற நகர்வை நிராகரித்துக் கண்டித்துள்ளது. புட்டினுக்கு எதிராக மட்டுமல்ல, 2011-ல் லிபியாவின் தலைவர் காலம் சென்ற முகம்மர் கடாபி, 2008-ல் உகண்டாவின் 'இறைவனின் எதிர்ப்பு இராணுவம்' குழுவின் தலைவர் ஜோசப் கொனி, 2009-ல் சூடானின் (வட-சூடான்) முந்நாள் ஜனாதிபதி ஓமர் அல்-பசீர் மீதான கைது ஆணை எனவாக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. ஆனால் எவரும் கைதுசெய்யப்படவில்லை. சட்டத்தின் முன் நிறுத்தப்படவுமில்லை. இவர்களில் எவரும் மேற்கு நாட்டுத் தலைவர்களுமல்ல, மேற்கிற்கு ஆதரவான எந்தவொரு நாட்டின் தலைவர்களுமல்ல என்பது குறிப்பிடத்தக்கது. இஸ்ரேல், இலங்கை போன்ற நாடுகளின் போர்க்குற்றவாளிகள் மீது நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை. இந்த வகையில் இஸ்ரேல் மீதான நடவடிக்கை எதிர்பாராதது.

தலைமை வழக்கறிஞர் என்னதான் சொன்னாலும், இஸ்ரேலையும் ஹமாசையும் ஒருபோதும் சமப்படுத்த முடியாது என்றிருக்கின்றார் ஜோ பைடன். இதுதான் சர்வதேச வல்லரசுகளின் இரட்டைநிலை. அத்தோடு, இஸ்ரேல் குற்றவியல் நீதிமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கவில்லை. ஆகையால், அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்குரிய சட்ட அதிகாரம் குற்றவியல் நீதிமன்றத்திற்கு இல்லை என்ற வாதத்தினையும் அமெரிக்காவும் பிரித்தானியாவும் முன்வைக்கின்றன.

பாலஸ்தீனம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் 2015-ல் இருந்து அங்கத்துவம் வகிக்கின்றது. அந்த வகையில் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசங்கள் மீது நிகழ்த்தப்படும் குற்றங்களிற் தலையிடும் அதிகாரம் குற்றவியல் நீதிமன்றத்



திற்கு உண்டு. அங்கு நடத்தப்படும் சட்டமீறல், போர்க்குற்றம், பாலஸ்தீன மக்கள் மீதான படுகொலைகள், சித்திரவதைகள் மீது விசாரணை நடத்தவும், தீர்ப்பு வழங்கவும், நடவடிக்கை எடுக்கவும் அதற்கு சட்ட அதிகாரம் உள்ளது. பாலஸ்

தீன தன்னாட்சி நிர்வாகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களும் சர்வதேச சட்டத்திற்கு அமைய அங்கீகரிக்கப்பட்டவை.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நோக்கிய அச்சுறுத்தல்கள்:

இஸ்ரேல் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் நகர்வுகளை மேற்கொள்ளக்கூடாது எனத் தனக்குத் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாக காரீம் கான் சி.என்.என்-இற்கு வழங்கிய அண்மைய செவ்வியிற் தெரிவித்திருக்கின்றார். 'சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஆபிரிக்காவிற்கும் புட்டின் போன்ற குண்டர்களுக்குமானது, மேற்கிற்கும் அவர்களின் கூட்டாளிகளுக்குமானது அல்ல' என, ஒரு மக்கள் பிரதிநிதி தன்னிடம் கூறியதாகவும் கான் பகிர்ந்து



கொண்டுள்ளார். இச்சம்பவங்கள் அமெரிக்காவும் இஸ்ரேலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு அழுத்தங்களையும் அச்சுறுத்தல்களையும் மேற்கொண்டு வந்துள்ளன - வருகின்றன என்பதை உறுதிப்படுத்துகின்றன.

## மனிதப் பேரழிவுகள்:

காசாவில் பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இஸ்ரேலின் தீவிரப் போர் 8 மாதங்களுக்கும் மேலாக நடந்து வருகிறது. 35,000-க்கு மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் பெண்கள் மற்றும் குழந்தைகள். பெருமெண்ணிக்கையினர் கர்ப்பிணிப் பெண்களும் சிசுக்களும் அடங்குவர். குறைந்தது 78,108 பேர் காயமடைந்துள்ளனர். காசாவின் பெரும்பகுதி தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 500 மருத்துவப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். காசாவின் 36 மருத்துவமனைகளில் 26 மருத்துவமனைகள் மீது குண்டுவீச்சு நடத்தப்பட்டுள்ளன. 180 ஐ.நா ஊழியர்களும் 140 பத்திரிகையாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஐ.நாவின் தரவுகளின்படி, ஏறத்தாழ 800,000 பொதுமக்கள் ரஃபாவை விட்டு வெளியேறி, மீண்டும் ஏலவே பேரழிவிற்கு உள்ளான கான் யூனிஸ் மற்றும் டெய்ர் அல்-பாலா (Khan Younis og Deir al-Balah) போன்ற வடக்கு நகரங்களுக்கு மீண்டும் சென்றுவிட்டனர். 1.1 மில்லியன் பாலஸ்தீன மக்கள் ஏற்கனவே ஏனைய பிரதேசங்களிலிருந்து ரஃபாவிற்குள் இடம் பெயர்ந்திருந்தனர். இஸ்ரேல் அவர்களை மீண்டும் விடாமல் துரத்தியடிக்கின்றது. ரஃபா உட்பட காசா பகுதியில் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர அழுத்தம் கொடுக்க அவசர நடவடிக்கைகளை கொண்டு வருமாறு தென்னாபிரிக்கா கடந்த வாரம் சர்வதேச நீதிமன்றத்தை (ICJ) கேட்டுக்கொண்டுள்ளது.

காசா பகுதியில் மனிதாபிமானப் பேரழிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. காசாவின் ஏனைய பகுதிகளிலிருந்து அதன் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ரஃபா நகருக்குள் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட பொதுமக்கள் ஒதுக்கப்பட்டிருந்தனர். இஸ்ரேலியப் படைகள் தற்போது அந்நகர் மீதும் தரை, வான், கடல்வழித் தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளன. ரஃபாவின் மேற்கில் இடம்பெயர்ந்த மக்கள் கூடார முகாம்கள் அமைத்து தங்கியிருந்த பகுதியில் இஸ்ரேல் நடத்திய புதிய தாக்குதல்களில் குறைந்தது 65 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மற்றும் பலர் காயமடைந்துள்ளனர். மனிதாபிமான வலையமாக அறிவிக்கப்பட்ட பகுதி அது (Mawasi). அங்கு இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான கூடாரங்களை இலக்குவைத்து அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக மருத்துவ பணியாளர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் உறுதிப்படுத்தியுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த தாக்குதலுக்கு பல நாடுகளின் தலைவர்கள் கடும் கண்டனம் மற்றும் விமர்சனங்களைத் தெரிவித்துள்ளனர்.

## கைது ஆணையின் விளைவுகள்:

காசா மீதான இஸ்ரேலின் போர் தீவிரமடைந்துள்ள தற்போதைய நிலையில் இஸ்ரேலைத் தனிமைப்படுத்துவதற்குரிய சர்வதேச அழுத்தம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இஸ்ரேலுக்கு எதிராக உலக நாடுகளிற் பரவலாக நடைபெற்றுவரும் கவனயீர்ப்புப் போராட்டங்களை இது வலுப்படுத்தும் என்பதையும் இதன் விளைவுகளில் இன்னொன்றாகக் கூறமுடியும்.

இஸ்ரேல் ஆதரவு மேற்கு நாடுகளுக்கு இந்த நகர்வு புதிய சவால்களைத் தோற்றுவித்துள்ளன. மேற்கு நாடுகள் அடிப்படையில் யூத ஆதரவு நாடுகள். அதேவேளை இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஐ.நா-வில் கொண்டுவரப்பட்ட இன அழிப்பிற்கு எதிரான சட்டங்கள் பேணப்பட வேண்டுமென்றும் மேற்கு நாடுகள் வலியுறுத்தி வருவன. யூத ஆதரவு - இன அழிப்பிற்கு எதிரான நடவடிக்கை என்ற இரண்டுக்குமிடையிலான தெரிவை மேற்கொள்ள வேண்டிய நெருக்கடிக்குள் மேற்கு நாடுகள் தள்ளப்பட்டுள்ளன.

**உசாத்துணை:**

- Klassekampen, 22,.05, 23 & 24.05.24
- Aljazeera. 20.05.24
- The Guardian, 20.05.24
- https://theconversation.com
- NRK, 11.09.2018
- Aftenposten 20.05.24



rooban.s@thaiveedu.com

# இலங்கையின் 1972-இன் குடியரசு அரசியல் யாப்பு: தமிழருக்கு நீதி வழங்கியதா?



**- சந்திரசேகரம் பரமலிங்கம்**

1970-ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற மக்கள் ஐக்கிய முன்னணி அமைத்த அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கி மே 22, 1972-ல் இலங்கையை சுதந்திர இறைமையுடைய குடியரசாக பிரகடனம் செய்தது. 52 ஆண்டுகளுக்கு முன் பிரகடனம் செய்யப்பட்டு 6 வருட காலமே உயிர் வாழ்ந்த இவ்வரசியலமைப்பின் அரசியல் சட்டப் பின்னணிகள், அதன் தாக்கங்களும் பிரதிபலிப்புகளும் பற்றிய கண்ணோட்டத்தினை இக்கட்டுரை பிரதிபலிக்கிறது.

### 1972–ஆம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்ட அரசியல் அமைப்பின் பின்னணி:

1948-ம் ஆண்டு பெப்ரவரி 4-ம் நாள் இலங்கை பிரித்தானியரது ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து அமலாக்கப்பட்ட சோல்பரி அரசியல் சட்டம் பற்றிய விமர்சனங்கள், அதன் ஆரம்பத்திலிருந்தே பல தரப்பினரிடமிருந்தும் எழுந்தன.

இவற்றினுள் முதன்மையானது இவ்வரசியற் சட்டம் கொண்டிருந்த சட்டத்துறையினது சட்ட ஆக்க அதிகாரங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரையறைகள் பற்றியதாகும். 1948-ம் ஆண்டிலிருந்து 1970 வரையிலான இரு தசாப்தங்களாக இலங்கையிலிருந்து பிரித்தானியவினது பிரிவுக்கவுன்சிலின் நியாயாதிக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வழக்குகளது தீர்ப்புக்களை உற்று நோக்கும் போது 'இலங்கைப் பாராளுமன்றம் குறித்த விடயத்தில் சட்டம் ஆக்கும் அதிகாரம் அற்று இருந்தமையால், அதனால் ஆக்கப்பட்ட சட்டம் செல்லுபடியாகாது'. 'இலங்கைப் பாராளுமன்றம் அரசியல் சட்டத்தின் விதிகளுக்கு அமைவாக சட்டம் ஆக்கப்பட்டதாக சபாநாயகரால் அத்தாட்சிப்படுத்தப்படவில்லை' போன்றவை பிரிவு கவுன்சிலினால் தெரிவிக்கப்பட்ட சில காரணங்களாகின்றன.

இவ்விவகாரம் குறிப்பாக சிங்கள தேசியவாதிகளையும் இடதுசாரிகளையும் கொதிப்படையச் செய்தது. இடதுசாரிகள் ஏற்கனவே பிரித்தானிய ஆட்சியின் எச்சசொச்சங்கள் அன்று நடைமுறையிலிருந்த அரசியல் சட்டத்தினால் பாதுகாக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை செய்திருந்தனர். இந்நிலையில் பிரிவுகவுன்சிலின் தீர்ப்புகள் அவர்களது விமர்சனங்களுக்கு மேலும் வலுச்சேர்த்தன.

1965-ம் ஆண்டின் பொதுத்தேர்தல் டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் உட்பட ஏழு கட்சிகளின் கூட்டணி அரசாங்கம் உதயமாகியது. இவ்வரசாங்கம் முன்னெடுத்த முதல் சட்ட ஆக்க நடவடிக்கைகளில் ஒன்று, நியாயமான தமிழ் மொழி உபயோக மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மையமாகும். இம்மசோதாவிற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி, அதனது தொழிற்சங்கங்கள், பௌத்த குருமார்கள் என்ற தரப்பினர் எடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகள், பௌத்த மத குரு ஒருவர் பொலிசாரது துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகும் அளவிற்கு வலுத்திருந்தது.

இவ்வாறான அரசியல் பின்புலத்தில் மகாஜன ஐக்கிய முன்னணி என்ற சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்ற மூன்று கட்சிகளை உள்ளடக்கிய அரசியல் முன்னணி 1970-ம் ஆண்டுத் தேர்தலின் வெற்றிப் பாதைக்காக தலை மேல் சுமந்த விடயங்களில் புதிய குடியரசு அரசியற் சட்டமும், பௌத்த தர்மத்திற்குரிய இடம் என்ற இரண்டும் முதன்மை பெற்றிருந்ததோடு இவற்றிற்கு பௌத்த சிங்கள முலாமும் தொழிற்சங்க தொழிலாளர் வர்க்கத்தினரை திருப்திப்படுத்துவதற்காக சோசலிச வேலைத்திட்டங்களும் இம்முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்கப்பட்டிருந்தன. 1970-ம் ஆண்டுத் தேர்தலுக்காக இம்முன்னணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'உங்களால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களாகச் செயற்படும் அதே வேளையில், புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கி இலங்கையைச் சோஷலிச குடியரசாக ஆக்குவதற்கான அரசியல் சட்ட நிர்ணய சபை உறுப்பினர்களாகவும் செயற்படுவதற்கு உங்கள் ஆணையைக் கோரி நிற்கிறது' எனக் குறிப்பிட்டிருந்தது.

சிங்கள மொழிப் பிராந்தியங்களில் மேற்கண்டவாறான அரசியல் சூழ்நிலை நிலவுகையில் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் 1948-ல் இருந்து தோன்றி வளர்ந்த அரசியல் கருத்துகள் தமிழர் இறைமையை தனித்துவம், தன்னாட்சி பற்றிய கோரிக்கைகளை முன்வைத்து, தேர்தல் விஞ்ஞாபனம் சமஷ்டி ஆட்சி முறையிலான அரசியல் சட்ட நீதியைக் கோரி நின்றது.

1970-ம் ஆண்டுத் தேர்தல் முடிவுகளின் வரைபடம் இலங்கைத் தீவில் இரு மொழிப் பிராந்தியங்களை உள்ளடக்கிய



இரு மொழி பேசும் தேசிய இனங்களின் குடிப்பரம்பலை வெளிப்படுத்திநிற்க, 1947-ம் ஆண்டு பிரித்தானிய பொது மக்கள் சபையில் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் மசோதா விவாதிக்கப்பட்ட வேளையில் 'இலங்கை இரு மொழி பேசும் வலையங்களைக் கொண்ட நாடு. அங்கு ஒற்றை ஆட்சி முறை அறிமுகப்படுத்துவது ஜனநாயக ஆட்சி முறை தோல்வியடைய வழிவகுக்கும் என்றும், இந்நிலையை இல்லாதொழிக்க அரசியல் அதிகாரத்தை சுவீகரித்துக் கொள்ளும் பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் மீதுள்ள பாரிய பொறுப்பு, தமிழர்கள் நியாயமான நிலைக்கும் மேலாக நாட்டின் நிர்வாகத்தில் பங்களிக்கப்பட வேண்டும்' என்ற காரணங்களும் வலியுறுத்தப்பட்டன.

சிங்கள இனத்தின் ஏகோபித்த குரலான சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்திற்கும் இடமளித்து இடதுசாரி கருத்துகளாலும் மார்க்சிய லெனினிச சிந்தனைகளாலும் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருந்த கொல்வின் ஆர் டி சில்வா-வினால் வரையப்பட்டு அரசியல் அமைப்பு நிர்ணய சபையிலும் மக்கள் பிரதிநிதிகள் சபையிலும் அங்கீகாரம் பெறப்பட்டு மே 22, 1972-ல் பிரகடனம் செய்யப்பட்ட அரசியல் சட்டம் இலங்கைத் தீவை குடியரசு ஆக்கியது.

## இவ்வரசியற் சட்டத்தின் பிரதான பண்புகள்:

இலங்கையை ஒற்றையாட்சி அமைப்பு நாடாகவும் மக்கள் இறைமை கோட்பாட்டிற்கு முதன்மை அந்தஸ்து வழங்கப்பட்டு அவர்களது பிரதிநிதிகளைக் கொண்டிருந்த மக்கள் தேசியப் பேரவை அரசின் ஓரங்க சட்ட சபையாகவும் அரசின் நிர்வாகத் துறையும் நீதித் துறையும் முன்னையதின் அதிகாரங்களுக்கு கீழ்பட்ட இரண்டாம் தர நிலைக்குள்ளாக்கப்பட்டன. இவ்வேற்பாடு அரசினது துறைகளான சட்டத்துறை நிர்வாகத்துறை நீதித்துறை என்பவற்றிற்கிடையிலான சமநிலையினை இல்லாது செய்து மக்கள் இறைமை பாராளுமன்ற இறைமை என்ற கோட்பாடுகளிற்கு முதலிடம் வழங்கியது. அத்தோடு பாராளுமன்றத்திற்கு உயர் அந்தஸ்து வழங்கும் ஏற்பாட்டிற்காக நிருவாக நீதித் துறைகளது சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக முந்தைய அரசியற் சட்டம் கொண்டிருந்த பொது சேவைகள் ஆணைக்குழு, நீதி சேவைகள் ஆணைக்குழு என்றிருந்த ஆணைக்குழுக்கள் அகற்றப்பட்டு அவற்றினிடத்திற்கு பின்வரும் நான்கு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன.

- நிருவாக சேவை ஆலோசனைச் சபை.
- நிருவாக சேவை ஒழுங்காற்றுச் சபை.
- நீதி சேவை ஆலோசனைச் சபை.
- நீதி சேவை ஒழுங்காற்றுச் சபை.

இவ்வாறான ஏற்பாடுகள் மூலம் இவ்விரு துறைகளது சுதந்திரத்திற்காக முன்பிருந்த ஆணைக்குழுக்கள் அகற்றப்பட்டு பாராளுமன்றத்தின் அதிகாரம் ஓங்கியிருக்கக் கூடிய விதமாக நான்கு சபைகள் நிறுவப்பட்டன.

ஒட்டு மொத்தமாக இவ்வரசியற் சட்டத்தை அவதானிக்கையில் பின்வரும் அம்சங்கள் வெளிப்படுகின்றன.

- சிங்கள மக்கள் எதிர்பார்த்தது போல இலங்கை அரசியற் சட்ட ரீதியாக இறுதிக் குடியேற்ற நாடான பிரித்தானியாவிடமிருந்து சகல தொடர்புகளையும் இரத்துச் செய்தது.
- இலங்கை முதன் முறையாக ஒரு குடியரசாக பிரகடனம் செய்யப்பட்டது.
- இலங்கையின் பாராளுமன்றம் ஓரங்க சட்டத்துறையாக தேசிய மக்கள் பேரவை நிறுவப்பட்டது. இப்பேரவையின் மசோதாக்களது சட்ட வலுவுடைமையைப் பரிசீலிக்கும் நியாயாதிக்கம் இதற்கென சிறப்பாக உருவாக்கப்பட்ட அரசியற் சட்ட நீதிமன்றத்தைத் தவிர வேறு எந்த நீதிமன்றங்களுக்கும் பாரப்படுத்தப்படவில்லை.
- 1956-ம் ஆண்டு சிங்கள் உத்தியோக மொழிச் சட்டம் அரசியற் சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டு இதன் திருத்தம் மாற்றம் என்பவற்றிற்கு 2/3 பெரும்பான்மை பலம் சேர்க்கப்பட்டது.
- பௌத்த மதத்திற்கு முதன்மை இடம் வழங்கப்பட்டது. அன்றைய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அதனது திருத்தப் பிரேரணையில் முன்வைத்த அடிப்படை உரிமைகளை நீதிமன்றங்களினூடாக நிவாரணம் வழங்குதல் மட்டுமே இவ்வரசியல் சட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட வேண்டும்.

- இந்த யாப்பினது 7-ம் பிரிவு 1956-ம் ஆண்டு 33-ம் இலக்க சிங்கள உத்தியோக மொழிச் சட்டத்தை அரசியற் சட்டத் தின் அங்கமாக்கியது. அதேவேளையில் நடைமுறையில் இருந்த தமிழ் மொழி உபயோகச் சட்டங்களையும் பிரமா ணங்களையும் அரசியற் சட்ட அந்தஸ்து கொண்டவையா கவும் அதன் பிரிவாகவும் கொள்ளப்பட முடியாதவை என ஒரு மொழி இரு நாடு, இரு மொழி ஒரு நாடு என சிங்கள மொழி உத்தியோகச் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்ட வேளையில் பாராளுமன்றத்தில் எதிர்த்து வாக்களித்த கொல்வின் ஆர் டி சில்வா 1972-ல் அரசியற் சட்ட விவகார அமைச்சராக இருந்து அரசியற் சட்டம் இயற்றியமையை தமிழ் மக்கள் என்றென்றும் நினைவில் வைத்திருப்பர்.

மேற்கண்டவாறாக 1948-ல் இருந்து 1971-ம் ஆண்டு வரை யான காலப்பகுதியில் கோரப்பட்ட சிங்கள மக்களினது அர சியல் அபிலாசைகளை இவ்வரசியல் சட்டம் பூர்த்தி செய்து இருந்தாலும், இதன் ஆயுள் ஆறு வருடங்கள் மட்டுமே நீடித் திருந்தது.

## தமிழ்த்தேசிய இனத்தின் அரசியற் சட்ட நீதி நிராகரிப்பு:

இலங்கை, குடியேற்ற நாட்டாட்சியிலிருந்து விடுதலை பெற்ற 1948-ம் ஆண்டிலிருந்து 1970 வரையான காலப்பகுதியில் தமிழ்த் தேசிய இனம் தேர்தல் மூலம் அதன் தேசிய அந்தஸ் தையும் அரசியல் அபிலாசைகளையும் ஆட்சி முறைமையில் உரித்துகளை அடைந்துகொள்வதற்கான கோரிக்கைகளை உறுதிப்படுத்தியிருந்தது. 1952-ம் ஆண்டிலிருந்து சமஷ்டி அரசியல் அமைப்பு தன்னாட்சி போன்ற ஆட்சி வடிவக் கோரிக்கையை முன்வைத்த சமஷ்டிக் கட்சி, 1956-ம் ஆண்டி லிருந்து 1970-ஆம் ஆண்டின் பின்னரும் தமிழர் தாயகத்தில் அதிகப்படியான தொகுதிகளில் வெற்றி பெற்று தமிழர் தலை மையை தன்னகத்தே கொண்டிருந்தது.

இக்கட்சியின் நிறுவனரும் தலைவருமான எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் அவர்கள், தமிழரசுக் கட்சியின் சார்பில் தமிழ் தேசிய இனத்தின் அபிலாசகளைப் பிரதிபலிக்கும் வகையில் 1970-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அரசியலமைப்பு நிர்ணய சபையில் அரசாங்கத் தினால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியற் சட்ட வரைவிற்கு பின்வ ரும் திருத்தங்களை சமர்ப்பித்திருந்தார்.

- இலங்கை ஒரு சமஷ்டிக் குடியரசாக பிரகடனம் செய்யப் பட வேண்டும்.
- சிங்களமும் தமிழும் தேசிய மொழிகளாக்கப்பட வேண்டும்.
- இலங்கை 5 சமஷ்டி அலகுகளாக்கப்பட்டு அவற்றில் மூன்று கண்டி, கொழும்பு, தென்னிலங்கை என்று அறிவிக் கப்பட வேண்டும். வட கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக் கான சமஷ்டி அலகும் தென் கிழக்கில் முஸ்லிம்களுக் கான சமஷ்டி அலகும் உருவாக்கப்பட வேண்டும்.
- பொருளாதார வளர்ச்சி பற்றிய வேலைத்திட்டங்கள் வரை யறை செய்யப்படவேண்டும்.
- போதனா மொழி, அரசின் பொருளாதார சமூக நலக் கொள்கைகள் என்பன அரசியற் சட்டத்தில் இணைக்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும் முஸ்லிம் மக்களுக்காக கோரப்பட்ட சமஸ்டி அலகை முஸ்லிம் லீக் நிராகரித்தது. இலங்கை ஒரு ஒற்றை யாட்சி நாடாக தொடர்ந்தும் விளங்க வேண்டுமென்றும், இந்தி யாவின் அரசியல் சட்டத்தில் முஸ்லிம்களது உரிமை உத்தர வாதம் செய்யப்பட்டுள்ளது போன்று இலங்கையின் புதிய அர சியற் சட்டத்திலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியு றுத்தியிருந்தது.

தமிழ் தேசிய இனத்தின் சார்பில் தமிழரசுக் கட்சியினால் முன் மொழியப்பட்ட எந்த ஒரு பிரேரணைகளும் அரசியல் நிர்ணய சபையினால் ஏற்கப்படாது, சிங்கள மொழி பிராந்தியத்துப் பிரதிநிதிகளால் தோற்கடிக்கப்பட்டது. இந்நிலையில் தந்தை செல்வநாயகம் அவரது கட்சியின் உறுப்பினர்களுடன் அரசி யற் சட்ட நிர்ணய சபையிலிருந்து வெளியேறு முன்னர் ஆற் றிய உரையில் பின்வருமாறு தெரிவித்தார்.

'எமது கட்சியின் சார்பில் எமது மொழியுரிமை தொடர்பான சட்ட சரத்துக்களை முன்மொழிந்தோம். இந்த முக்கியமான காலகட்டத்தில் எமது மொழியுரிமை அரசியற் சட்டத்தில் வரையறுக்கப்பட வேண்டும் என்பதன் நியாயத்தன்மையை எவரும் மறுக்க முடியாது. நாம் அரசியற் சட்டத்தின் தன்மை, அடிப்படை உரிமைகள், பிரஜாவுரிமை போன்ற பல விடயங் கள் தொடர்பான பல திருத்தங்களைச் சமர்ப்பித்தோம். இவை யாவும் பெரும்பான்மை சமூகப் பிரதிநிதிகளாகிய உங் களால் தோற்கடிக்கப்பட்ட நிலையிலும் எமது மொழியுரிமை உட்பட சகல உரிமைகளுக்கும் உத்தரவாதமற்ற நிலையி லும் இச்சபையின் நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்கு கொள்ளுதல் என்பது பயனற்றது. இந்த முடிவு எடுப்பதனால் உங்கள் எவரையும் புண்படுத்த விரும்பவில்லை. எமது மக்க ளது கௌரவத்தை பாதுகாக்கவே விரும்புகிறோம்'.

இதன் பின்னர் தமிழரசுக் கட்சி, அரசியற் சட்ட நிர்ணய சபை நிகழ்ச்சிகளில் இருந்து விலகிக்கொண்டது.

இவ்வாறான பின்னணியில் தமிழர்களது கோரிக்கைளை நிரா கரித்து இலங்கையின் முதலாவது அரசியற் சட்டம் தமிழர்க ளுக்கான அரசியற் சட்ட நீதியை மறுத்தது. இதன் தொடரச்சி கடந்த அரை நூற்றாண்டுகளாக நீடித்துச் செல்கிறது. நீதிக் கான வழிவகைகள் மூடப்பட்ட இனமாகவும், தொடர்ந்தும் உள்ளூர் குடியேற்ற ஆட்சிக்கு உட்பட்ட மக்களாகவும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்கண்டவாறான அவல நிலைக்கு அத்திவாரம் இட்டுச் சென்ற போர்த்துகல், ஒல்லாந்து, ஐக்கிய இராச்சியம் ஆகிய மூன்று குடியேற்ற நாடுகளும் தமிழர்கள் விடுதலையும் நீதி யும் அடையும் வரை, இந்த உள்ளூர் மோதலில் பங்காளி களே என்பதும் வலியுறுத்தப்பட வேண்டும்.



sandrasegaram@thaiveedu.com



# மனதை ஒருநிலைப்படுத்துதல் வெற்றியின் ஏணிப்படி

– த. சிவபாலு

கல்விக்கு கவனம் செலுத்துதல் இன்றியமையாதது. கவனச் சிதறல் ஏற்பட்டால் அவற்றை நினைவில் இருத்திக் கொள்ள முடியாது. எந்த ஒரு விடயத்தையாவது செய்ய முனையும் போது அந்தவிடயத்தில் கவனம் செலுத்தப்படுவதாலேயே கூடிய பயனை அடையமுடியும். சிந்தனை ஓட்டம் பல்வேறு திசைகளிலும் செலுத்தப்படலாம், ஆனால் அவற்றைக் குவியப்படுத்தும்போது அதன் கவனச் சிதறல்கள் மையப்புள்ளியை அடைகின்றன. இதனால் தெளிவான சிந்தனை ஓட்டத்தை பெற்றுக்கொள்ள முடிகின்றது. கற்றல் என்பது மனதில் பதியவைத்தலை மையமாகக் கொண்டது. இவை, ஒருவர் வாழும் புறச்சூழல்களால் பாதிக்கப்படலாம். ஒருவர் வாழும் சூழல் அவரது கவன ஈர்ப்பைப் பெறுகின்றது. கவன ஈர்ப்பு என்பது உள்ளத்திற்கும் சூழலுக்கும் இடையேயான ஒரு பரிமாற்றமாகவே அமைகின்றது. நினைவு அல்லது மனதில் பதியவைத்தல் என்பது பல்வேறு வகையான சுற்றுச் சூழலோடு மட்டுமன்றி உள்ளத்தின் பல்வேறு பகுதிகளுடனான வலைப்பின்னலோடு தொடர்புடையதாக அமைகின்றது. கவனம் செலுத்துதல் என்பது ஐம்புலன்களோடும் தொடர்புடையது. மெய், கண், வாய், மூக்கு, செவி என்பன உளத்தொழில்பாட்டோடு மிகச் சிக்கலான வகையில் தொடர்பைக் கொண்டுள்ளன. விளங்கிக்கொள்ள முடியாத வலைப் பின்னலமைப்பைக் கொண்டுள்ளன. இவ் ஐப்புலன்களை ஒடுக்கி மேற்கொள்ளப்படும் கவனப் போராட்டத்தை ஒருநிலைப்படுத்துவது என்பது மிகவும் கடினமானது. மனித மனமானது ஒருநிலையில்லாதது. மனித மனமானது குரங்கைப் போன்றது என்று சாதாரண வழக்கில் கூறுவார்கள். ஒரு முறை சார்ந்த செயலில் ஈடுபடாத தன்மையை எடுத்துக்காட்டுவதாக இந்த உதாரணம் அமைகின்றது. நரம்பியலுக்கும் உளவியலுக்கும் இடையேயான தொடர்புகள், செயற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கான தொழில்நுட்பங்களின் வளர்ந்துவரும் முன்னேற்றங்கள் மனித கற்றல் மற்றும் நினைவாற்றல் பற்றிய நமது அறிவை அதிகரித்துள்ளன. அறிவாற்றலின் வளர்ச்சிக்கு கவனக்குவிப்பு மிகமுக்கியமானது. எனவே இந்தக் கவனக்குவிப்பை எப்படி மாணர்வரகள் கல்வியில் மேற்கொள்ள முடியும் என்பது பற்றியே இக்கட்டுரை ஆராய்கின்றது.

சில விடயங்களில் கவனம் செலுத்துவதில் சிரமம் காணப்படுவது இயல்பு. கவனம் செலுத்துவதற்கு உளத்தை எப்படிப் பயிற்றுவிக்க வேண்டும் எனக் கல்வி உளவியலாளர்கள் ஆய்வுகள் செய்துள்ளனர். 'அட்ட அவதானம்' என்பது ஒரே நேரத்தில் எட்டு விடயங்களில் கவனம் செலுத்தக்கூடிய சக்தியை உள்ளதைக் குறிக்கின்றது. எனவே மனதைக் கட்டுப்படுத்துவது அவரவரைப் பொறுத்தது. அது அவர்களின் கைகளிலேயே இருக்கின்றது. எவ்வளவுதான் அறிவுரைகள், பயிற்சிகள் தரப்பட்டாலும் தாமே தமது உள்ளத்தை வளப்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்கு கவனச்சிதறல்களை தவர்த்துக்கொள்ளக் கற்றுக்கொள்ளுவதே சிறந்த வழிமுறையாகும். இதற்கு எமது பழக்கவழக்கங்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகும். 'யோகப்பயிற்சி இதற்குச் சிறந்த உதாரணமாகும். சிந்தையை ஒருநிலைப்படுத்தும்போது அவர்களுக்கு வெளியுலகில் நடப்பது தெரியாமல் இருக்கும் நிலைக்குத் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்கின்றார்கள். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பார்கள். இளமைப் பருவத்தில் இருந்தே கவனம் செலுத்துவதற்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

## உங்கள் பழக்கங்களை சரிபார்க்கவும்:

எப்படி நிலைமைகளைக் கடந்து செல்லவேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வதன் மூலம் நீங்கள் பயனடையலாம். இதுவும் கடந்துபோகும் என்னும் மனநிலையை அடைவதற்கு போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்தாக அமையும். எதனையும் தள்ளிப்போடுதல் மனப்பாங்கை அகற்றி, எப்பொழுதும் சுறுசுறுப்பாகவும் எடுத்த காரியத்தை முடிக்கவும் முயற்சிக்கவேண்டும். மனதை ஒரே நிலையில் வைத்திருந்து 'பதறாத காரியம் சிதறாது' என்பதை மனதில் இருத்திச் செயற்படவேண்டும். பதறுதல் எனபது மன வலிமை அற்ற நிலையில் மனதை ஒரே நிலையில் வைத்திருக்கமுடியாமையே ஆகும்.

மக்கள், ஆற்றலையும் மன உறுதியையும் கொண்டுள்ளனர் என்பது மறுப்பதற்கில்லை. எனினும், சிலவேளைகளில் தேவையான விஷயங்கள். இருப்பினும், சில நேரங்களில், பல்வேறு கூறுகள் நுழைகின்றன. மனம் அடிக்கடி மாறும் இயல்புடையது. அதற்கு நாம்தான் இடம் கொடுக்கின்றோம். உண்மையில் நமது பலத்தை மனமாற்றம் குறைக்கலாம். மன உறுதியுடன் செயற்பட்டால் எடுத்த காரியத்தை அடையலாம்.

### மன உறுதி அற்ற அல்லது மனதை ஒரே நிலையில் வைத்திருக்க முடியாததற்கான காரணிகள் சில:

- போதுமான தூக்கம் இன்மை: உறுதியான கொள்கை உடைய ஒருவர் தான் நினைத்தவற்றை மாற்றாமல் செயற் படுவார். மனதில் தோன்றிய எண்ணத்தை அல்லது தீர்மா னத்தின்படி நடக்கும் நிலை ஒழுங்காக உள்ளதா என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இரவில் ஒழுங்காகத் தூங்க முடியவில்லை எனின் உறுதியற்ற நிலையில் உள்ளதா கவே கருதவேண்டும்.
- முறையற்ற அல்லது ஊட்டச்சத்து அற்ற உணவு முறை: சீரான உணவைத் தவறாமல் உண்ணுதல் முக்கியமானது. வேண்டப்படாது அவசரமான, ஆரோக்கியமற்ற உணவு களை உண்ணல் கூடாது. உணவில் கட்டுப்பாடு மிக முக் கிமானது. ஆசைப்பட்டதை உண்ணாமல் உடலுக்கு ஆரோக்கியமானதை உண்ணவேண்டும். ஆற்றலுக்கான சரியான ஊட்டச்சத்துக்கள் கொண்ட உணவை உண்ணு தல் உடல், மற்றும் மனச் செயல்முறைகள் ஒழுங்காகச் செயற்பட அவசியமாகின்றது. தவறான உணவுகள் உடல் நலத்தைக் கெடுப்பதோடு சீரான சிந்தனையையும் தடுக் கின்றது.
- போதுமான உடற்பயிற்சி இன்மை: சரியான, போதுமான உடற்பயிற்சி வழக்கமாக மேற்கொள்ளப்படுதல் உடல் ஆற்றலை அதிகரித்து உடல் ஆரோக்கியத்தைத் தருகின் றது. உடல் ஆரோக்கியமாக இருந்தால் உளம் ஆரோக்கி யமாக இருக்கும். உளச்செயற்பாடு சீராக இடம்பெறும். நாளாந்தம் உடலுக்குப் பயிற்சி தருவதனால் இரத்தச் சுற் றோட்டம் நன்கு நடைபெறும் அது மூளையின் ஆரோக்கி யான செயற்பாட்டிற்கு வழிவகுக்கின்றது. உளம் சீராகச் செயற்படவைக்கின்றது.
- அதிக வேலை, மன அழுத்தம்: இவை இரண்டும் மன உறு தியையும் ஆற்றல் மட்டத்தையும் குறைக்கும். அதிகமாகச் சம்பாதிக்கவேண்டும், பணம் தேடவேண்டும் என கூடுத லாக முயற்சிக்கின்றனர். இதனால், குடும்பத்தோடு செல விடும் நேரம் குறைகின்றது. மகிழ்சியாக பொழுதைக் களிக்கும் நிலை அற்றுப்போகின்றது. உடல் இழைத்தால் உளமும் சோர்வடையும். சோர்வுற்ற உளம் ஆரோக்கியமா கச் செயற்படமுடியாது. கவனச் சிதறல்கள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும்.

**மருத்துவ ஆலோசனை:**
மேற்கூறிய நான்கு விடயங்களையும் சரியாகப் பராமரித்தால், அங்கேயும் இன்னும் ஆற்றலின்மை, விருப்பமின்மை, முதலி யன ஏற்பட்டால், உடனடியாக மருத்துவரை நாடவேண்டும். அவரிடம் ஒழிவு மறைவின்றி அனைத்தையும் குறிப்பிடவேண் டும். அவரின் ஆலோசனையை ஏற்றுச் செயற்படவேண்டும்.

- மதிப்பீடு செய்தல்: ஒரு விடையத்தைத் தள்ளிப்போடு வதை எவ்வாறு சமாளிப்பது என்பதை நீங்கள் அறிவதற்கு முன், அது சில அடிப்படை கேள்விகளை நீங்களே கேட் டுக்கொள்வது பொருத்தமானது. உங்களுக்கு எது முக்கி யம்? மற்றும், நீங்கள் எதற்காக வாழ்கிறீர்கள்? அல்லது, இன்னும் சிறப்பாக வாழ்க்கையில் நீங்கள் என்ன சாதிக்க விரும்புகிறீர்கள்? என்பன போன்ற கேள்விகளைக் கேட்டு, அவற்றை பற்றிச் சிந்திக்கவேண்டும். அதனடிப்படையில் நீங்கள் தள்ளிப்போடுவதற்கான காரணத்தைக் கண்டறிய லாம். எடுத்து காரியத்தை பிற்போடாது செய்துமுடிக்க சுய மதிப்பீடு செய்தல் பயன் தரும்.
- முன்னுரிமைகளைத் தீர்மானித்தல்: எதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பது நம் வாழ்க்கையில் நம்மை விரும்ப வைக்கும் விஷயங்கள். ஒவ்வொரு நாளும் படுக் கையில் இருந்து எழுந்திருக்கும் போது எதனை முதலில் செய்யவேண்டும் என்ற தீர்மானத்துடன் எழுந்திருப்பது, அந்த நாளை இலகுவாக்கும். திட்டமிட்டுச் செயற்படவும் உதவும். நாம் செய்வதற்கு எதுவும் இல்லை என்றால், புதி தாகச் செய்யவேண்டியவற்றைத் தீர்மானிக்கவேண்டும். இல்லை என்று சும்மா இருத்தல் சோம்பலை அதிகரிக்க வைப்பதோடு பின்போடவும் வைக்கும்.
- பொறுப்புக்கூறல்: நீங்கள் தனியாக வாழ்ந்தால், நிச்சய மாக யாருக்கும் பொறுப்புக் கூறவேண்டியதில்லை என நிங்கள் நினைக்கலாம். ஆனால் சில விடயங்களில் மிக வும் கடினம். சிலவற்றை நாம் செய்யவேண்டும் என்னும் நிலையான உந்துதல் நிலை காணப்படும். நாளைய உல கிற்குப் பொறுப்பு உள்ளவராக வாழ்வது எதிர்காலத்தை சமாளிப்பதற்கு இலகுவாகவும் எதிர்காலத்தை இலகுவான தாக ஆக்கவும் உதவும்.

திட்டம் தீட்டிச் செயற்படுவதனால் வாழ்க்கையில் எதிர்பார்த் தவற்றை இலகுவாக அடையமுடியும். அதற்கு எடுத்துக் கொண்ட விடயத்தைப் பிற்போடாமல் செய்யும் மனதிடத்தை ஆக்கிக்கொள்ளவேண்டும். எடுத்துக்கொண்ட விடயத்தை நிறைவேற்ற மிகவும் கவனமாக செயற்படவேண்டும். எண் ணத்தைச் சிதறடிக்கும் செயல்களுக்கு இடம்கொடுக்காது செயற்படுவது இலக்கை எட்ட இலகுவானதாக அமையும். செய்யவேண்டியவற்றில் கவனத்தைச் செலுத்துவதால் இலகு வாக இலக்கை அடையமுடியும். எண்ணிய எண்ணியாங்கு எய்துவதற்கு மனவுறுதியும் சிந்தையை வழிப்படுத்துவதும் அவசியமாகும்.



sivapalu@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***



# கல்வி ஏன்? எதற்கு? சமகாலப் புரிதலை நோக்கி...

– அகமட் பிஸ்தாமி

உலகளாவிய பொருளாதார பாய்ச்சலும் மாற்றங்களும் கல்வி மீதான ஒருவித தளர்வை உண்டுபண்ணியுள்ளன, என்றால் அது பிழையாகாது. 21-ம் நூற்றாண்டின் தலைமுறை நேரடிக் கல்விச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் கவனம் குவிப்பதை விடவும் இணையத்தள தேடு பொறிகளுக்குள் புதைந்து கிடப்பதை, அதில் அலுப்பின்றி அரட்டையடிப்பதை அதிலே குழுவாக சமவயதினருடன் காலம் கழிப்பதை ஆர்வத்துடன் செய்து வருகிறது. பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் அவர்களால் சிறப்பாக கவனம் குவிக்க முடியாமை, சிறந்த செவிமடுக்கும் திறன் அருகி வருகின்றமை, கிரகிப்பு குறைந்துள்ளமை போன்றன கல்விச் செயற்பாடுகளை விட்டும் அவர்களின் கவனம் வேறு ஒரு திசை நோக்கி செல்வதையே காட்டுகிறது. இந்தப்பின் புலத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக் களத்தில் இருந்து இளந் தலைமுறையினரின் கற்றல் மனக்கட்டமைப்பை அலசுகிறது கட்டுரை.

கல்வி குறித்தும் அதன் சமகால பரிமாணம் குறித்தும் வித்தியாசமான வேறுபட்ட போக்குகள் பார்வைகள் உள்ளன. அவை குறித்த எண்ணற்ற தேசிய, சர்வதேச, ஆய்வுகள் மாநாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கல்வி குறித்த புத்தம் புது எண்ணக்கருக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இலங்கையை மையப்படுத்திய சூழமைவில் கல்வியை புரிவதாக இருந்தாலும் அதன் கடந்த கால கல்வி வரலாற்றையும் உலகின் கல்வி வரலாற்றையும் பற்றிய பார்வை அவசியம்.

பூச்சியத்தில் இருந்து புதிய ஓர் இடத்தில் இருந்து அந்த புரிதலை உருவாக்க முடியாது. கல்வியின் தளம் பரந்து விரிந்து அகலித்துள்ளது. அதே நேரம் ஆழமாகியுமுள்ளது. அகிலமயப்பட்ட உணர்வாக (planetary conscious) அது பரிணமித்துள்ளது. உலகின் போக்குக்குகு ஈடுகொடுக்கும் நிலையில் அதற்கான விசைகள் கட்டமைக்கப்பட்டு இயக்குவிக்கப்படுகின்றன. நொடிக்கொரு தடவை பல பரிமாணங்களில் மாற்றமுறும் உலக சந்தையின் நடப்பியல் நிலவரத்துக்கு ஏற்றாற் போல அது இயங்குகின்றது, இயக்குவிக்கப்படுகின்றது.

கல்வியானது ஒரே நேரத்தில் அடிப்படை அத்தியாவசிய பண்டமாகவும், நுகர்வுப்பண்டமாகவும் மாறி பெருத்த விலைக்கு உற்பத்தி செய்யப்பட்டு விளம்பரங்கள் மூலம் பரிமாற்றப்படுகின்றன. உலகின் உற்பத்திக் கோலங்களை தலை கீழாக கவிழ்த்து பிரட்டிவிட்டுள்ளது கல்வி, ஒரு பக்கம் கொழுத்த தரங்குன்றிய கல்வி நிறுவனங்கள் வாழ, தரமான கல்வியும், கல்வி நிறுவனங்களும் மூடுவிழாக்களை ஏற்பாடு செய்ய வேண்டிய அவலம் நிகழ்கிறது.

மனித நாகரீகம் முன்னெப்போதும் இல்லாத அளவு துரிதமாக மாறி வருகிறது. அதனை அடிப்படையாக கொண்ட கல்வியும் சமூகமும் தலை முறையும் தான் உருவாக்கப்படுகிறது. அதற்கு ஈடுகொடுக்கும் சகல திராணியும் அற்றவர்களை காலம் அதன் பாட்டில் கைவிட்டுவிடும். தன்பாட்டில் முன்னோக்கி இன்னும் வேகமாக நகரும் நிலை தான் உள்ளது. இதனால் உள்ளூர், தேசிய சிந்திப்பு போன்றன கிடப்பில் வைக்கப்பட்டு கோள மயப்பட்ட (global) சிந்தனையின் பால் இலகுவாக ஈர்க்கப்பட்டு விடுமளவு சந்தை நிலவரங்களும் முகவர்களும் (agent) இயங்குகின்றனர், இயக்குவிக்கப்படுகின்றனர். இன்னும் ஒரு படி மேலே சென்று தரமான கல்வியை (quality education) பெற்றும் கூட தரங்குன்றிய மனித உழைப்புக்கு ஆளாக வேண்டிய அவலமும் நிகழ்ந்து வருகின்றது. கல்வி என்பதனையும் தாண்டி தரமான கல்வி, வேலை உலகிற்கு உகந்த தாக்குப்பிடிக்க முடியுமான கல்விச் சந்தை வேண்டும், கல்வித் தரங்கள் (educational standard), திறன்கள் (skills) என்றவாறு அது மாறியுள்ளது.

இதன் விளைவு சுதேசம், தேசியம், பண்பாடு, கலாசாரம், நாகரீகம், ஒழுங்குகள் என்ற எதுவுமற்று ஒற்றைத்தளத்தில் அடைந்து இருக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. தமது பண்பாட்டையே ஈவிரக்கமின்றி கழற்றி பிடுங்கி எறிய வேண்டிய மனக்கோலம் உருவாக்கப்படுகிறது. சுவடுகளைத் தகர்த்து குற்ற உணர்வின்றி சுதந்திரமாக வளரும் தலைமுறை தோன்றுகிறது. உலகம் மீதான இயல்பான பார்வையும் புரிதலும் குன்றி பலமிழந்து வலுவிழந்து எதிர் நிறுவன செயற்பாடுகளுக்கும் உலகு குறித்த எதிர் பார்வைகளுக்கும் வித்திடுகின்றன. இயல்பான திறன்கள், ஆற்றல்களை எல்லாம் தூக்கி எறிந்து விட்டு உலகம் வேண்டும் 21-ம் நூற்றாண்டுக்கான திறன்களை அணிகலன்களாக கொண்டு செயற்கை நுண்ணறிவுடன் AI இயங்க வேண்டிய கடப்பாடும் எழுந்துள்ளது. இங்கு விழுமியங்களுக்கும் (Values) ஒழுங்குகளுக்கும் (Rules) இடமில்லை. விதிகளை மீறுவதே (break the rules)




முறையாகவும், ஒழுங்காகவும் உள்ளது. ஒழுங்கவிழ்ப்பு (deconstruction) ஒழுங்காக நடந்து முடிகிறது.

கல்வியின் நவீன செல்நெறிகள் மிகவும் கவனமாக கையாளப்பட வேண்டியவை. கண்டபடி நுகர (consume) முனைவது பேராபத்தாக அமையும். உடைந்த தகர்ந்து சிதைந்த தற்படிமங்களையும் உருவாக்கும். தன்னிடம் உள்ளவற்றை (அது மொழியாக பாரம்பரியங்களாக) தரங்குறைத்து நோக்கி, மேற்கை அதனிடம் உள்ளவற்றை பூஜிக்கும் மனக்கட்டமைப்பை உருவாக்கும். ஆக மொத்தத்தில் சமகால கல்வியின் போக்கும் வளர்ச்சியும் முதலாளிய உலகம் வேண்டி நிற்கும் பிரகாரம் வியாக்கியானம் செய்யப்படுகிறது. முதலாளியத்தின் அபிலாசைகளுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் அமைவாக கல்விக்கான மாற்று பொருற் கோடல்கள் முன்வைக்கப்படுகின்றன. முதலாளியத்தின் சுரண்டலும் பறிப்பும் கல்விக்கூடாக மூடி மறைக்கப்படுகின்றன. அல்லது கல்வியை ஊடகமாக பயன்படுத்தி பிழையான தமக்கு சாதகமான வியாக்கியானங்களை முன்வைப்பதாக உள்ளன. ஆக இன்றைய நவீன கல்வி வளர்ச்சியின் போக்கானது அதி உயர் வர்க்கத்துக்கு மட்டுமே முழுமையான பயன் தர, ஏனையோர் பரிதவிக்கவும் பரிதாபமாக பார்க்கப்படும் நிலைக்கும் வித்திட்டுள்ளது.

இந்த கல்வி மானுட விழுமியங்களை வளர்த்தெடுக்க வேண்டும். சிறந்த நாகரீகம் ஒன்றுக்கு வித்திட வேண்டும். அழிந்து போக்கும் மனித பண்பாடுகளை, கலாசாரங்களைக் கட்டிக் காக்க வேண்டும். மனித வாழ்வுக்குப் பெறுமானம் தர வேண்டும். மனித உணர்வுகளை மதிக்க வழியமைக்க வேண்டும். மொத்தத்தில் மனிதன் மனிதனாக மாற வழிகாட்ட வேண்டும். பொருளாதாரமே வாழ்வு என்ற பார்வையிலிருந்து விலகி மானுடம் மனித விழுமியம் மனித உணர்வு என்ற அகன்ற பார்வையை நோக்கி அவனை அழைத்துச்செல்ல வேண்டும்.

சுயநல குறுகிய மனப்பாங்கில் இருந்து விலகி கூட்டுப் பொது மனப்பாங்கை நோக்கி அவனை வழிநடாத்த வேண்டும். தன்னைச்சூழ உள்ள மனிதர்களைப் புரிந்து கொள்ளவும் அவர்களது கஷ்ட நஷ்டங்களைப் புரியவும் குடும்பத்துடனும் உறவினர்களுடனும் ஒன்றாக மரியாதையுடன் வாழவும் அவனை நெறிப்படுத்த வேண்டும். ஆசையூட்ட வேண்டும். தான் வாழும் சூழலை அதன் வளங்களை அழிவுறாமல் பாதுகாக்கும் உணர்வு அவனுக்குள் வேரூன்ற வேண்டும். தன்னைப் போலவே பிறரையும் கண்ணியமாக நடாத்த சங்கைப்படுத்த அவனுக்கு கற்றுத்தர வேண்டும். தன்னிடம் உள்ள திறமைகளை ஆற்றல்களை தான் வாழும் தேசத்தின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் வளப்படுத்தல் பணிகளுக்கும் பிரயோகிக்க அவனை தூண்ட வேண்டும்.

எந்த இடத்திலும் நிகழும் எல்லாவகையான அநியாயம் அத்துமீறல் வன்கொடுமைகள் போன்றவற்றைக்கண்டு தைரியமாக கொதித்தெழ வைக்க வேண்டும். நீதியைப் பெற்றுக் கொடுக்க முன் வர வேண்டும். இப்படி மிகச்சிறந்த முன்மாதிரியான வாழ்வொன்றின் பால் அவனை வழிநடாத்துவதே இன்றைய கல்விக்கொள்கைகளின் பிரதான நோக்காக அமைய வேண்டும். மூளைக்கு வேலை கொடுப்பது போல மனிதனுக்குள் வாழும் மனிதம் குறித்தும் மானுடம் குறித்தும் அவனுக்கு உணர்வூட்டும் கல்வியே இன்று மிக அவசியப்படுகிறது. இன்றேல் தன் சுய நலத்துக்காக பொருளாதார முன்னேற்றத்துக்காக அடுத்தவனை அண்டை அயலவரை உறவினரை அடித்து நொறுக்கி தன் தேவைகளை அடைய முற்படும் தலைமுறை தான் கல்விக்கூடாக உருவாக்கப்படும். இந்நிலை உடனடியாக மாற்றப்படாவிடின் இது உலகளாவிய பேராபத்து நிலையாக நிச்சயம் மாறும்.

## தேசத்தை கட்டி எழுப்புவதில் பாடசாலைகளின் பங்களிப்பு:
## (Role of schools in nation building)

இது நாம் வாழும் தேசம். இந்த தேசத்தின் கீர்த்தியும் புகழும் சர்வதேச மட்டத்தில் கொடி கட்டிப் பரவுவது எமக்கே மகிழ்வை தரும். இது மாயமாக நிகழ்வதில்லை. மழை பொழிவது போல நாம் அறியாமல் மேலிருந்து நடக்கப்போவதுமில்லை. இதனை இங்குள்ள நாம் எல்லோரும் தான் செய்து நிகழ்த்திக்காட்ட வேண்டும். இது எம் தாய் நாட்டுக்கு நாம் செய்யும் (historical contribution) வரலாற்றுப்பங்களிப்பு. உலகம் போற்றும் (international) நன்மகனாக நாம் பாடசாலைகளின் வழிகாட்டலின் மூலம் மாற வேண்டும். கல்வித்தளத்தில் நேரடியாக (direct) மற்றும் நேரில் (indirect) முறை மூலம் சம்பந்தப்படும் அனைவரதும் தலையாய பணி (major role)இது. இந்தப்பணியை பாடசாலை எனும் நிறுவனமும் அங்குள்ள அதன் காவலாளிகளான ஆசிரியப் பெருந்தகைகளும் மனமுவந்து செய்தாக வேண்டும்.

இந்த தேசம் இன்னும் கூட மூன்றாம் மண்டல நாடுகளின் பட்டியலில் இருந்து விடு பட முடியாமல் இருப்பது கவலை தருகிறது. நாட்டின் கல்வித்தரம் எழுத்தறிவு ஒபீட்டளவில் உயர் மட்டத்தில் இருந்தாலும் இந்த நாடு சகல தளத்திலும் சர்வதேச தரத்தை international standard ஏன் இன்னும் அடையவில்லை என்பது பெருத்த வினா. இதற்கான விடையும் உள்ளார்ந்த வெளிவாரியான உயர்மட்ட தாழ்மட்ட கோளாறுகளை காட்டிவிடும். இது தொடர்பான தேடல்கள், வாசிப்புகள், ஆய்வுகள், அறிக்கைகள் வெளிப்படையானவை. கசப்பான உண்மைகளை கசியச்செய்யும் கல்வி அரசியல் தொடர்பான விவகாரம். கல்வி இலக்குகளில் ஒன்றான வேலை உலகிற்கு தயாராதல் எனும் இலக்கு அடையப்படாமலே பட்டதாரிகளின் (graduates) பட்டப்பகல் பேரணிகள் தொடர்கின்றன. கலைத்திட்டம் மற்றும் வேலை (world of work), உலகுக்கு இடையிலான முரண்பாடுகள் பொருத்தப்பாடின்மை போன்றன இன்னும் பெருவாரியாக சீர் செய்யப்பட வேண்டும்.

சுத்தம், சுகாதாரம்(health), மனிதாபிமானம்(humanity), தேசப்பற்று போன்ற விடயங்களில் வளர்ச்சியடைந்த (developed) நாடுகளில் உள்ள மனப்பாங்கு மாற்றம் (attitude change) இந்த நாட்டில் கல்விக்கூடாக மாற்றப்படவில்லை. ஒரு நாட்டின் முன்னேற்றம் அங்கு வாழும் மக்களின் தரமான வாழ்க்கை (standard life style and patterns) முறைமை மேம்பாடு அனைத்தும் கல்விக்கொள்கை தீர்மானிக்கும் விடயம். இங்குள்ள கல்விக்கொள்கை குறித்த வாதப்பிரதிவாதங்கள் விமர்சனங்கள் இருப்பினும் கைவசம் உள்ள கலைத்திட்டத்தை (curriculam) அமுலாக்கும் விடயத்தில் அரசிடம் வேதனம் (salary) பெறும் சகல அதிபர்கள், கல்வி நிர்வாகிகள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் இதற்கு பொறுப்புக்கூறியே (responsible) ஆக வேண்டும். பந்து மாற்றி (ball passing) விந்தை விளையாட்டுக்களில் பாதையை, திசையை திருப்பி பயணத்தை நகர்த்த முடியாது. வகை கூறல் (accountability) மற்றும் பொறுப்புக்கூறல் என்பது கட்டாயம். பிரதானம்.

ஒரு மாணவன் தன் வாழ்வில் தாயிடம் கழிக்கும் நேரத்தை விடவும் ஒரு மாணவன் தனது வாழ்வின் வளமான காலத்தை பாடசாலையில் ஆசிரியர் மற்றும் அதிபரோடு கழித்து விடுகிறார். உடல் உள சிந்தனை சமூக விருத்திகள் இங்கு தான் நிகழ்கின்றன. பாடசாலைக்கு 6 வயதில் நுழையும் சிறு குழந்தையாக அவன் 18 வயதில் வெளியேறுவதில்லை. அவனில் மிகப்பெரிய இயற்கை ரசாயன இயற்பியல் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும். அதற்கேற்ப அவனது சமூக பண்புகளும் தலைமைத்துவ ஆற்றலும் பிரச்சினைகளை எதிர்கொண்டு தீர்க்கும் ஆற்றலும் பாடசாலைகளில் ஆசிரியர் மற்றும் அதிபர்கள் மூலம் கற்பித்திருக்கவும் வேண்டும். செய்து பார்க்கவும், இடமும், அவகாசமும், வாய்ப்பும் வழங்கப்பட்டு வழிகாட்டப்பட்டிருக்க வேண்டும். இப்போது வீடுகளும் (hostels) விடுதிகளாகி விட்டன. உறங்கி ஓய்வெடுக்க (rest) மட்டுமே பிள்ளைகள் வீட்டில் புகலிடம் தேடி தஞ்சம் அடைகின்றனர்.

பாடசாலைகள் முறையாக மேற்பார்வை செய்வதற்காக அரசு அரச மட்ட திணைக்களங்கள் (departments) மாகாண பணிமனைகள் வலயங்கள் (zone) கோட்டங்கள் (divisions) போன்றன பாரபட்சமின்றி முறையான (supervision) மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு (inspection) வழிகாட்டலுக்கு (Guide) தயாராகாமையும் கூட இந்த நாட்டின் கல்வித்தர வேறுபாட்டிலும் (progress) மேம்பாட்டிலும் பின்னடைவிலும் தாக்கம் செலுத்துகின்றன. ஒரு நாட்டின் சமூக நிறுவனங்களுள் பாடசாலைகள் மிக முக்கியமான பங்கை (role) செய்து வருவது குறிப்பிடத்தக்கது. அதனது மட்டுப்படுத்தப்பட்ட மனித (human resource) மற்றும் பௌதீக வளங்களை மிகவும் சரியாக உபயோகித்து பிரயோகித்து தேசமும் சர்வதேசமும் எதிர்பார்க்கும் மிகத்தரமான மனிதர்களை மனித பன்முக ஆளுமைகளை (multiple personality) உற்பத்தி (product/produce) செய்து உருவாக்கும் மகத்தான பணியினை பங்களிப்பினை (contribution) செய்து வருபவர்கள் ஆசிரியர்கள் மட்டுமே.

பாடசாலைகளை சமூகம் கண் போல காக்க வேண்டும். ஆசிரியர்களை கடவுள் போல (மாத, பிதா, குரு, தெய்வம்) பார்க்க மதிக்க பழக வேண்டும். இந்த நாட்டை சர்வதேச தரம் வாய்ந்த அளவு முன்னிலைக்கு கொண்டு செல்லும் கலைத்திட்டத்தை அமுலாக்கும் பணியில் ஈடுபாட்டுடன் தம்மை அர்ப்பணித்துள்ளவர்கள் ஆசிரியர்கள். பாடசாலையின் ஒட்டு மொத்த வகை கூறும் அதிபருக்கு அடுத்து ஆசிரியர்கள் உள்ளனர். இன்று எமது நாட்டில் உள்ள அரச பாடசாலைகள் அதன் பணியினை ஆசிரியர்கள் மூலம் செய்கின்றனவா? என்ற வினா கல்வித்தளத்தில் உள்ள பலரையும் குடைந்தும் கடிந்தும் எடுக்கும் சர்ச்சைக்குரிய வினா? அதே நேரம் ஆசிரியர் செய்யும் பணிக்கு ஏற்றாற் போல சமூகம் அவர்களுக்கு மதிப்பு தருவதும் ஊக்கமளித்து உற்சாகப்படுத்துவதும் அருகி வருவது கவலைக்குரியது.

எது எப்படியோ இந்த நாட்டில் மிகப்பெரிய தேவையான மாற்றம் ஒன்றை மதங்களுக்கு அப்பால் நின்று தேசிய ரீதியில் ஏற்படுத்துவதாயின் அதற்கான வாய்ப்புகள் பாடசாலைகளுக்கும் அங்கு முதன்மை இடத்தில் இருக்கும் அதிபர்கள் ஆசிரியர்களுக்குமே முடியும். மனம் வைத்தால் மாற்றம் காண்பது என்பது மாபெரும் சவாலாக தென்படாது.



bisthamy.ahamed@thaiveedu.com




மனித மூளையின் ஆற்றல் பற்றி, வார்த்தைகளினால் விப ரித்து வரையறை செய்ய முடியாது. அத்தனை ஆழமானதும் விசாலமானதுமான செயற்பாடுகளை ஒருங்கே செய்வதிலும் நினைவில் நிறுத்திக் கொள்வதிலும் மனித மூளையின் ஆற் றுகை விந்தை மிக்கது. மூளைக்கு நிகரான செயற்பாடுகளை ஆற்றக்கூடிய செயற்கை நுண்ணறிவு முறைமைகள் ஆரம்பத் தில் ஆச்சரியமாக நோக்கப்பட்டன. எனினும் தற்பொழுது அவை தொடர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

அனைத்து இடங்களிலும் இந்த செயற்கை நுண்ணறிவு முறை மையின் பங்களிப்பு தற்பொழுது வழமையானதாகி விட்டது. செயற்கை நுண்ணறிவின் ஆற்றுகை வளர்ச்சியானது எத் தனை விந்தையானதோ, அதேயளவு மர்மங்களும் ஆபத்துக் களும் பொதிந்துள்ளதாக ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். மனித மூளையின் கற்றுக்கொள்ளும் திறன் எவ்வளவு வலிமை யானதோ அதே வகையில் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பங்களும் சுயமாக கற்றுக்கொள்கின்றன. இதனை மனி தனினால் கட்டுப்படுத்த முடியாமை மனித குலத்தின் அழி விற்கே வழிகோலுமா என்ற சந்தேகத்தை உருவாக்கியுள் ளது. தற்போது பிரயோகிக்கப்படும் அனேகமான செயற்கை நுண்ணறிவு முறைமைகள் மனிதர்களை ஏமாற்றக்கூடிய வகை யில் கற்றுக்கொண்டு உள்ளதாக ஆய்வாளர்கள் அச்சம் தெரி வித்துள்ளனர். ஜர்னல் பட்டர்ன்ஸ் (journal Patterns) எனப் படும் தொழில்நுட்ப சஞ்சிகையில் இது தொடர்பிலான தக வல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

மனிதர்களை பிழையாக வழிநடத்தக்கூடிய ஓர் நிலைமையை செயற்கை நுண்ணறிவு முறைமைகள் உருவாக்குமானால், அதனால் மாபெரும் ஆபத்துக்கள் உருவாகும். இந்த விவகா ரம் தொடர்பில் உலக நாடுகளின் அரசாங்கங்கள் துரித கதி யில் செயற்பட வேண்டும் என, ஆய்வாளர்கள் வலியுறுத்தி யுள்ளனர். இந்த செயற்கை நுண்ணறிவு முறைகளின் சுயாதீ னமான செயற்பாடுகளில் ஏற்படக்கூடிய மாறுதல்களை கண் காணிக்கவும் மனிதர்களை ஏமாற்றக்கூடிய சாத்தியங்களை கட்டுப்படுத்தவும் ஒழுங்குவிதிகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவ்வாறு செய்யத் தவறினால் பாரிய அபாயங்களை எதிர்நோக்க நேரிடலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

மனிதர்களை ஏமாற்றும் வகையில் ஏன் இந்த செயற்கை நுண் ணறிவு முறைமைகள் செயற்படுகின்றன என்பது குறித்து தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் ஆய்வாளர் கள் இருக்கின்றனர். இந்த விடயங்கள் தொடர்பில், எம்.ஐ.டி நிறுவனத்தின் கலாநிதி பட்ட மாணவர் பீட்டர் பார்க் (Peter S. Park) என்பவர், journal Patterns சஞ்சிகையில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு முறைமைகளுக்கு வழங்கப்படும் பயிற்சிகளின் போது, அவை எவ்வாறான பிழையான வழிநடத் தல்களைக் கடக்க வேண்டும் என்பது குறித்தும் எவ்வாறான ஏமாற்றுதல்களை சமாளிக்க வேண்டும் என்பது குறித்தும் கற் றுக் கொடுக்கப்படுகின்றது. இப்படி கற்றவற்றைப் பயன்ப டுத்தி அவை சில வேளைகளில் மனிதர்களை ஏமாற்றுவதற்கு சுயமாகவே கற்றுக் கொள்கின்றனவா என்ற சந்தேகம் எழுப் பப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் மனிதர்களை ஏமாற்றி தங்களது இலக்குகளை அடைவதற்கு செயற்கை நுண்ண றிவு முறைமைகள் எத்தனிப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர். செயற்கை நுண்ணறிவு முறைமைகள் பிழையான தகவல்களை பரப்புவதாகவும் இது திட்டமிட்ட வகையில் பய னர்களை கட்டுப்படுத்துவதற்கு கற்றுக் கொள்வதாகவும் கூறப்படுகின்றது.

மெட்டாவின் சி.ஏ.ஆர்.ஓ (Diplomacy-CICERO) என்னும் ராஜ தந்திர விளையாட்டு ஒன்றில் எவ்வாறு கணினிச் செயற்கை நுண்ணறிவு முறை மனிதர்களை ஏமாற்றுகிறது என்பது தெரி யவந்துள்ளது. இந்த விளையாட்டு உருவாக்கப்படும் போது நேர்மையாகவும் பக்கச் சார்பற்ற முறையிலும் விளையாடுவ தற்கு பயிற்றப்பட்டுள்ளது. எனினும் இந்த விளையாட்டு விளையாடப்படும் போது, செயற்கை நுண்ணறிவு முறைமை நேர்மையாக விளையாடுவதில்லை எனவும் அவை மனிதர் களை ஏமாற்றும் நுட்பங்களை பயன்படுத்தி விளையாடுவதா கவும் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. இணையத் தில் மிகவும் பிரபல்யமான டெக்ஸாஸ் ஹோல்ட் ஈ.எம். போக்- கர் (Texas hold ’em poker) எனப்படும், இணையவழியான சீட்டு விளையாட்டு (Online Game) விளையாடும் போதும் செயற்கை நுண்ணறிவு முறைமை மனிதர்களை ஏமாற்றக் கற் றுக் கொண்டுள்ளதாகவும், மோசடியான முறையில் வெற்றி யீட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மெட்டாவின் செயற்கை நுண்ணறிவு எவ்வாறு ஏமாற்றுகின்றது என்பது குறித்து ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். மனிதர்க



ளுடன் இந்த விளையாட்டு விளையாடப்படும் போது, அநேக சந்தர்ப்பங்களில் செயற்கை நுண்ணறிவு முறைமை வெற்றி ஈட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறினும் இந்த வெற்றியில் பல வெற்றிகள் நேர்மையான முறையில் கிடைக்கப் பெற்றவை அல்ல என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மெட்டாவின் செயற்கை நுண்ணறிவு முறையானது மிகவும் மோசமான வகையில் ஏமாற்று வேலைகளை செய்யக்கூடிய அளவில் வளர்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஸ்டார்க்கிராஃப்ட்- 2 விளையாட்டுப் போட்டியிலும் இவ்வாறு ஏமாற்றப்படுவதாக எம்.ஐ.ரீ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மனிதர்களை பிழையாக வழி நடத்தி வெற்றியடைவதற்கான முயற்சிகளை இந்த செயற்கை நுண்ணறிவு முறைமை மேற்கொள்வதாக எடுப்பதாக தெரிய வந்துள்ளது. ஏமாற்றுவதற்கான இவற்றின் எத்தனிப்புகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

கணினி விளையாட்டுகளின் போது, செயற்கை நுண்ணறிவு முறைமைகள் மனிதர்களை ஏமாற்றுவது ஒரு பாரதூரமான ஆபத்து அல்ல என, நமக்கு தென்படக்கூடும். எனினும் செயற்கை நுண்ணறிவின் ஆற்றல்களில் ஒன்றாக இந்த ஏமாற்றுதல் அல்லது மோசடி செய்தல் பயிற்றப்பட்டாலோ அல்லது இந்த முறைமைகளில் தானாக வளர்ச்சி அடைந்தாலோ அது பாரதூரமான விளைவுகளை உருவாக்கும். எதிர்காலத்தில் இந்த ஏமாற்றும் செயற்பாடுகள் மேம்படுத்தப்பட்ட வகையில், மக்களை திசை திருப்பக் கூடிய புதிய விடயங்களை உருவாக்கிட கூடும் எனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு குறித்த மதிப்பாய்வுகளின் போதும் சில செயற்கை நுண்ணறிவு முறைமைகள் ஏமாற்றக் கற்றுக் கொண்டுள்ளதாக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஒரு செயற்கை நுண்ணறிவு முறையானது, பரிசோதனைகள் பல நடத்தப்பட்ட போது தான் செயலிழந்து விட்டதாக பாசாங்கு செய்து ஏமாற் றிய சந்தர்ப்பம் ஒன்று பற்றி பதிவிடப்பட்டுள்ளது. ஏமாற்றக்கூ டிய செயற்கை நுண்ணறிவு முறைமைகளின் ஊடாக தேர்தல்களில் மோசடிகள் செய்யவும், முடிவுகளை மாற்றியமைக்க வும் கூடிய அபாயங்கள் நிலவுவதாகவும், இவ்வாறான அச்ச நிலைமைகளை மறுப்பதற்கில்லை எனவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இறுதியாக செயற்கை நுண்ணறிவு முறைமைகள் இந்த மோசமான ஆற்றலை விருத்தி செய்து கொண்டால், அது மனிதர்களினால் கட்டுப்படுத்த முடியாத நிலைமையை அடைந்து விடும்.

ஓபன் சோர்ஸ் செயற்கை நுண்ணறிவு முறைமைகளில் மேம்படுத்தப்பட்ட அதி உயர் ஏமாற்றும் அம்சங்களை கட்டுப்படுத்தவும் முறியடிக்கவும் ஆயத்தமாவதற்கு போதியளவு கால அவகாசம் தேவைப்படுகின்றது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் செயற்கை நுண்ணறிவு தொடர்பில் சில புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. எனினும் செயற்கை நுண்ணறிவின் பேராபத்துக்களை நன்கு ஆய்ந்தறிந்து அதன் எதிர்கால பரிணாம வளர்ச்சியினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை உலக நாடுகள் சீர்தூக்கிப் பார்த்து, பொதுவான சட்டங்கள் நியதிகள் ஊடாக கட்டுப்பாடுகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துவது மனித குலத்தின் இருப்பிற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாகும்.



jeyaseelan.s@thaiveedu.com




வாழ்க்கையில் மரணமும் வரிக்கட்டணமும் தவிர்க்க முடியாதவை. ஆனால், வாகனங்கள் வைத்திருப்பவர்களுக்கு வாகனக் காப்புறுதிக் கட்டணமும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். முன்னர் கூறிய இரண்டு விடயங்களைப்போல் அல்லாது, எமக்கு மரணம் சம்பவிக்கும் வேளையில், வாகனக் காப்புறுதிக் கட்டண விவகாரம் எம்மைப் பாதிக்காமல், எம்மை நம்பி உள்ளவரையே பாதிக்கும். அதனால், வாகன காப்புறுதிக் கட்டணம் குறித்து சற்று விளக்கமாக நோக்குவோம்.

கனடா முழுவதிலுமே பொதுவாக வாகனக் காப்புறுதிக் கட்டணம் உயர்ந்து உள்ளது. அதிலும் நாம் வசிக்கும் ஒன்றாரியோவில் அது மிகவும் அதிகரித்துள்ளது. தேசியரீதியாக 12 சதவீதம் வரை அக்கட்டணம் அதிகரித்துள்ளது. உதாரணத்திற்கு டிசம்பர் மாதம் 2021-ம் ஆண்டில் வாகனக் காப்புறுதிக் கட்டணம் சராசரியாக $1,555-ஆக இருந்தது. தற்போது $1,744-ஆக உயர்ந்து உள்ளது. இன்னும் சில நகரங்களில் இதிலும் அதிக வீதமாக உயர்ந்துள்ளது.

இதற்கான காரணங்கள் பல! தொற்று நோய் வருவதற்கு முன் இருந்த இயல்பு வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களுடன் விலைவாசி உயர்வு, உதிரிப்பாகங்கள் வந்து சேர்வதில் ஏற்பட்டுள்ள பெரும் தாமதம், திருத்துவதற்கு எடுக்கும் நேரத்தின் நீடிப்பு மற்றும் வாகனக் களவுகளின் அதிகரிப்பு போன்றவை அவற்றுள் சில!

ஒன்டாரியோ மாகணத்தில் பிரம்டன் நகரமே அதிகூடிய வாகனக் காப்புறுதிக் கட்டண உயர்வுடையதாக (சராசரித்தொகை $2,707) உள்ளது. இதற்கு காரணம், இந்த நகரில் வசிப்பவர்கள் கூடிய அளவுக்கு காப்புறுதிக் கேட்பனவுகளை முன்வைக்கின்றனர். இந்த விடயம் பற்றிக் குறிப்பிட்ட டானியல் ஐவன்ஸ் என்றும் காப்புறுதி முகவர், 'பிரம்டன் சாரதிகள் பெரிதும் உடல் ரீதியான காயம் பட்டதாகவே விபத்துக்கேட்பனவுகளை முன்வைக்கின்றனர்' என்கிறார்.

அதிகமான விபத்துகளில் உடற்காயங்களுக்காக நஷ்டஈடு கோரும்போது, OHIP எனும் மாகாணக் காப்புறுதியால் ஈடு செய்யப்படாத அனைத்து வைத்தியச் செலவுகளும் மற்றும் சம்பள இழப்பும் ஈடுசெய்படுவதால் கேட்பனவுத் தொகை பெரிதும் அதிகரிப்பது இயல்பு. அத்துடன் காப்புறுதி விபத்துக் கேட்பனவுகளில் வழக்குச் செலவும் உள்ளடக்கப்படும். பெரு நகரங்களில் வாகன நெருக்கடி அதிகமாக இருப்பதுடன், சாரதிகள் எப்படி அதிகமாகப் பணம் கறக்கலாம் என்ற நோக்கத்துடன் உள்ளார்கள்.

ஒன்றாறியோ மாகாணத்தைப் பொறுத்தவரையில், தெற்கே நயாகரா நகரம், வடக்கே ஒரில்லியா நகரம், கிழக்கே பீட்ட பரோ நகரம், மேற்கே ஒன்றாறியோ வாவி ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பிரதேசத்திலேயே காப்புறுதிக் கட்டணம் மிக அதிகமாய் உள்ளது. இதற்கான காரணிகளை எடுத்து நோக்கினால், முதலாவதாக இப்பிராந்தியத்தில் வாகன நெருக்கடி அதிகமாயுள்ளதால் விபத்துகள் ஏற்படுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகமாய் இருக்கின்றன. அத்துடன் வாகனங்கள் பயணிக்கும் நேரமும் அதிகமாய் உள்ளது.

பெருநகரங்களில் வெளிநாடுகளிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் அதிகமாக இருப்பது இயல்பு. இவர்கள் இந்நாடுகளில் வாகனம் ஓட்டிய அனுபவம் குறைந்தவர்கள் என்பதால் காப்புறுதிக் கட்டணம் அதிகமாய் இருக்கும். அடுத்ததாக பல கல்விக்கூடங்கள் இங்கு இருப்பதனால், இளம் சாரதிகள் அதிகம் உள்ளனர் என்பதுடன், அவர்கள் விபத்துக்களில் அகப்படுவதும் அதிகம்! இக்காரணங்களாலேயே இப்பிராந்தியக் காப்புறுதிக் கட்டணமும் அதிகமாய் உள்ளது.

ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள 187 நகரங்களில் 168 நகரங்களின் கட்டணங்களில் ஏற்பட்ட காப்புறுதிக் கட்டண உயர்வு அவதானிக்கப்பட்டது. அவற்றில் ஏழு நகரங்கள் சார்ந்த தகவல்கள் பின்வருமாறு:

| தகமை | நகரம் | 2023 சராசரிக் கட்டணம் | 2021 சராசரி கட்டணம் | விகித மாறுபாடு |
|---|---|---|---|---|
| 1. | பிரம்டன் | $2,707 | $1,976 | 37% |
| 2. | ரொறன்ரோ | $2,325 | $1,753 | 19% |
| 3. | மிசிஸ்ஸாகா | $2,311 | $1,971 | 17% |
| 4. | ரிச்மன்ட் | $2,185 | $2,025 | 8% |
| 5. | வோன் | $2,158 | $2,179 | -1% |
| 6. | பிக்கறின் | $1,985 | $1,959 | 1% |
| 7. | மார்க்கம் | $1,870 | $1,744 | 7% |



### கட்டணங்கள் ஏன் உயர்ந்தன:

- பெரும்பாலான பொருட்கள், வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் சேவைகளின் விலைகள் / கட்டணங்கள் அதிகரிக்கும் போது, காப்புறுதிக் கட்டணங்களும் அதிகரிக்கின்றன.
- வீதியில் வாகன நெரிசல்: குடிவரவு காரணமாகவும் குடிப் பெருக்கம் காரணமாகவும் வீதியில் வாகன நெரிசல் ஏற்படுகின்றது. விபத்துகள் அதிகரிக்கின்றன. காப்புறுதி அமைப்புகள் வழங்கவேண்டிய கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கின்றது. இதனாலும் காப்புறுதி அமைப்புகள் கட்டணத்தை அதிகரிக்கின்றன.
- வாகனங்களின் விலை உயர்வு: 2021-ம் ஆண்டில், $45,000-ற்கு விற்ற ஒரு வாகனம் இரண்டு வருடங்களில் - 2023-ம் ஆண்டில் $61,000-இற்கு விற்படுகிறது. விலைவாசி காரணமாக, பயன்படுத்திய வாகனத்தின் விலைகளுக்கும் இதே நிலைதான். 2021-ம் ஆண்டில் 26,000 டொலருக்கு விற்கப்பட்ட பயன்படுத்திய வாகனம் 2023-ம் ஆண்டில் விலை அதிகரிப்பு காரணமாக 39,000 டொலருக்கு விற்கப்படுகிறது.

இது போன்ற காரணங்களால் காப்புறுதிக் கட்டணம் உயர்வது இயல்பே! இந்நிலையில் எல்லார் மனதிலும் எழும் கேள்வியாக ‘எப்படி கட்டணத்தைக் குறைக்கலாம்?’ என்பது அமைகிறது.

### காப்புறுதிக் கட்டணத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகள்:

- காப்புறுதி உடன்படிக்கையில் கையொப்பம் இடுவதற்கு முன்னர், ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதி அமைப்புகளிடம் விலையை விசாரியுங்கள். ஒரு சேலை அல்லது சட்டை வாங்குவதற்கு ஒன்பது கடைகள் ஏறி இறங்குகிற நீங்கள், கட்டாயமாக ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதி அமைப்புகளில் விசாரித்து, மலிவானதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- உங்களுக்கு எவ்வளவு காப்புறுதி வேண்டும் என்பதை கவனமாகத் தீர்மானியுங்கள். அதற்கு மேற்பட்ட தொகைக்கு காப்புறுதி எடுப்பதில் அர்த்தமில்லை. உதாரணத்திற்கு உங்கள் வாகனம் மிகப் பழையதானால் உங்கள் தவறால் வாகனத்திற்கு பழுது ஏற்பட்டால், திருத்துவதற்கு கட்டணம் செலுத்துவதில் அர்த்தமில்லை. மேலும் வாகனத்தில் ஒரு சிறு உரசல் ஏற்பட்டால், அதற்கும் காப்புறுதி கேட்பனவு செய்வது அறிவுடைமை ஆகாது.
- கட்டணத்தில் கழிவுகள் உண்டா என்று கேட்டு, அவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். பொதுவாக ஒரே காப்புறுதி அமைப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதிகள் வைத்திருந்தால் கட்டணத்தில் கழிவு தருவார்கள். அதாவது ஒரே காப்புறுதி அமைப்பில் வீட்டுக் காப்புறுதி, வாகனக் காப்புறுதி, ஆயுள் காப்புறுதி என வைத்திருந்தால் கட்டணம் குறைக்கப்படும்.
- கேட்பனவுகளில், தவிர்க்கப்படும் கழிவுத்தொகையை, அதாவது Deductable கூடியதாய் இருப்பின் கட்டணம் குறைவாய் இருக்கும். உதாரணத்திற்கு: ஒரு விபத்து உங்கள் தவறால் ஏற்பட்டு, உங்கள் வாகனத்தை திருத்துவதற்கு Deductable-ஆக ஐநூறு டொலர் பிடித்துக் கொண்டு தருவதை, ஆயிரம் டொலர் பிடித்துக் கொண்டு தருவதாக ஒப்பந்தமிட்டால், கட்டணம் கணிசமாகக் குறையும். Deductable கூடக்கூட காப்புறுதிக் கட்டணம் குறையும்.
- உங்கள் வாகனத்தை செலுத்திச் செல்வதற்கு, உறவினர்கள் அல்லது நண்பர்களை அனுமதிக்கும் வேளைகளில் கவனமாக இருங்கள். அவர்களுடைய தவறால் விபத்து ஏற்படின், அதன் விளைவாக உங்கள் காப்புறுதிக் கட்டுப்பணம் அதிகரிக்கும். மேலும் உங்களுடனே வதியும் நண்பர் அல்லது உங்கள் பிள்ளைகளை கிரமமாக வண்டியை செலுத்தவிடும் வேளையில் நீங்கள் கெட்டித்தனமாக கட்டணத்தை குறைப்பதாக எண்ணலாம். ஆனால் அத்தகையவர் செலுத்தும் வேளையில் விபத்து ஏற்படுமாயின் இழப்பிற்கு காப்புறுதி அமைப்பு பொறுப்பாய் இருக்கமாட்டாது. காப்புறுதி அமைப்பு பொறுப்பேற்க மறுப்பதும் சட்டப்படி செல்லுபடியாகும். எனவே யாரிடம் வாகனத்தைச் செலுத்த விடுகிறீர்கள் என்பதில் கவனமாய் இருங்கள்.

இறுதியாக காப்புறுதி கட்டுப்பணம் உயரும் வேளையில், வாழ்க்கைச் செலவு கூடினாலும் கட்டாயமாக தகுந்த வாகன காப்புறுதியை வைத்திருங்கள்.



senthuran.p@thaiveedu.com




முழுங்கான முறையில் உங்கள் வீட்டை கண்காணிப்பதும் மற்றும் சிறந்த பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதும் தான், உங்கள் வீட்டிற்கு நீங்கள் போட்ட முதலீட்டை காப்பாற்றுவதற்குரிய மிகச் சிறந்த வழி. நீங்கள் ஒரு நேரத்தில் ஒரு சில வேலைகளை அல்லது பல வேலைகளை ஒரேதட


SUMMER HOME MAINTENANCE
CHECKLIST

| OUTDOOR | INDOOR |
|---|---|
| __Clean Gutters | __Clean Chimney |
| __Wash Windows | __Test GFCI Outlets |
| __Fertilize Lawn | __Flush Hot Water Tank |
| __Clean Garden Debris | __Defrost Freezer |
| __Power Wash Deck/Patio | __Clean Out Refrigerator |
| __Overseed Lawn | __Clean Condenser Coils |
| __Repair Screens | __Replace HVAC Filter |
| __Fix Driveway Cracks | __Unclog Drains |
| __Connect Garden Hoses | __Clean Vent Fans |
| __Clean Siding | __Test Alarm System |
| __Touch Up Paint | __Shampoo Carpets |
| __Plant Flower Bulbs | __Ck Bathroom Caulking |
| __Clean Grill | __Clean Shower Heads |
| __Rake Leaves | __Clean Disposal |
| __Clean Lawn Chairs | __Ck Water Softener |
| __Replace Mulch | __Test Smoke Detectors |

வையாக செய்து முடிக்கவேண்டும் என்று நினைத்தாலும், இரண்டு வகையிலும் அவைகளை செய்துமுடிக்கும் பழக்கத்தை உண்டாக்குவதுதான் மிகமுக்கியமானது ஆகும். உங்களுக்காக ஒரு வழக்கமான வேலை முறையை உருவாக்கிக் கொள்ளுங்கள். வேலை செய்வது என்பது நீங்கள் நினைத்தால் கடினமானதல்ல, மிகவும் சுலபம். மற்றும் அது நேரத்தை மிகவும் செலவழிக்கும் விஷயம் இல்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். பருவத்துக்கேற்றபடி, மாறும் வீட்டு பராமரிப்பு செயல் குறிப்பு அட்டவணையைத் தயாரித்து அதை ஒழுங்காக பின்பற்றினால் மிகச் சாதாரணமான செலவுடன் வீட்டைப்பராமரிக்கலாம். செலவு அதிகமாகும் பிரச்சினைகளை அவை ஏற்படுத்துவதற்குமுன் நீங்கள் ஒரு முடிவுக்கு கொண்டுவரமுடியும். தேவைப்பட்டால், பின்னால் முதிர்ச்சியின் காரணமாகவோ அல்லது புறச்சூழ்நிலை காரணமாகவோ ஏற்படக்கூடிய வேலைகளை கண்காணிப்பதற்கும், செய்து முடிப்பதற்கும் தேவையான அறிவுரைகளை ஒரு வல்லுனரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வசதியாக ஒரு புகைப்பட கருவியை கொண்டு நீங்கள் குறிப்பிட்ட படங்களை எடுத்தால் உதவியாக இருக்கும்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை பின்பற்றுவதினால், நீங்கள் செலவிட்ட முதலீட்டை காப்பாற்றுவது பற்றியும் மேலும் உங்கள் வீட்டை ஒரு பாதுகாப்பான மற்றும் வாழ்வதற்கேற்ற ஆரோக்கியமான ஓர் இடமாக மாற்றுவது பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில வீட்டுப் பராமரிப்பு வேலைகளை செய்வதற்கு நீங்கள் சிரமப்பட்டால் அல்லது உங்களிடம் தேவையான, உதாரணமாக: ஏணி போன்ற உபகரணங்கள் இல்லையென்றால், ஒரு தகுதி வாய்ந்த கைத்திறன் மிகுந்த ஒரு மனிதரை உங்களுடைய பணியாளராக உங்களுக்கு உதவ நீங்கள் நியமித்துக் கொள்ளுங்கள்.

**பருவத்துக்கேற்றபடி
வீட்டு பராமரிப்பு வேலைகளை செய்தல்:**

அனேகமான வீட்டு பராமரிப்பு வேலைகள் எல்லாம் பருவகாலம் சம்பந்தமானது. வரப்போகும் இலையுதிர்காலத்திற்குரிய வேலைகளை செய்து முடிப்பதற்கு கோடை காலம் தான் சரியான நேரம். உங்கள் வீட்டில் எதாவது பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதா என்பதை கவனமாக சோதனை செய்து மற்றும் வெகுசீக்கிரத்தில் அவைகளை சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது அவசியம். வழக்கமான வீட்டு பராமரிப்பு செயல் முறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டியது முக்கியம்.

**கோடைகாலப் பராமரிப்பு:**

- வீட்டின் ஈரப்பதனை கண்காணியுங்கள். மேலும் ஈரப்பதத்தின் அளவுகள் 60 சதவிகிதத்துக்கும் மேல் ஆவதை தடுத்துவிடுங்கள். பாதுகாப்பான ஈரப்பதனை வைத்துக்கொள்வதற்கு ஒரு ஈரத்தை அகற்றும் கருவியை (Dehumidifier)

பயன்படுத்துங்கள்.

- அடித்தளத்தில் இருக்கும் குழாய்களில் குளிர்ந்த நீர் தேங்கிவிடாமலும் மற்றும் சொட்டு சொட்டாக வடியாமலும் பார்த்துக் கொள்ளுங்கள். சரிபடுத்தக்கூடிய செயல்களை மேற்கொள்ளுங்கள். உதாரணமாக ஈரப்பதனைக் குறையுங்கள். அல்லது குளிர்ச்சியான தண்ணீர்க் குழாய்களுக்கு வெப்பகாப்பு (P-trap) செய்யுங்கள்.
- அடித்தளத்தின் தரையில் உள்ள சாக்கடை குழாயில் P-trap இருந்தால் அவற்றில் நீர் உள்ளதா என்பதை பாருங்கள். தேவைப்பட்டால் தண்ணீர் ஊற்றுங்கள்.
- கம்பளி விரிப்புகள் மற்றும் தரைவிரிப்புகளை (Carpet) நன்றாக சுத்தம் செய்யுங்கள்.
- குளியலறை விசிறியின் தடுப்பை (grill) துப்பரவு செய்யுங்கள்.
- ஆடைகளை உலரவைக்கும் கருவியுடன் இணைக்கப்பட்டுள்ள குழாய் இணைப்பு உட்பட குழாயின் வெளி விளிம்பில் தங்கியிருக்கும் துணிக்கூறுகள், ஆடைகளை உலரவைக்கும் சாதனத்தைச் சுற்றியுள்ள இடங்கள் மற்றும் வெளிப்புறத்திலுள்ள உங்கள் உடை உலரவைக்கும் சாதனத்தின் வெளியேற்று வழி ஆகியவற்றை துப்பரவு செய்யுங்கள்.
- அனைத்து guardrails & handrails களின் பாதுகாப்புத் தன்மையை சோதனை செய்யுங்கள்.
- அனைத்து ஜன்னல்களும் சுலபமாக இயங்குவதற்கு எண்ணெய் அல்லது கிரீஸ் தடவுங்கள்.
- கண்ணாடி சட்டங்களின் வெளிப்பக்கம் இருக்கும் ஜன்னல்களுக்குரிய Putty/ Caulking களை கண்காணியுங்கள். தேவைப்பட்டால் பிரதியீடு செய்யுங்கள்.
- கதவுகளின் புணைச்சல்களில் எண்ணெய் அல்லது கிரீஸ் தடவுங்கள். மேலும் ஸ்குரூ ஆணிகள் இறுக்கமாக இருப்பதை உறுதிசெய்யுங்கள்.
- வண்டிக் கொட்டகையின் கதவில் உள்ள இரும்பு சாதனங்களில் கிரீஸ் அல்லது எண்ணெய் தடவுங்கள். (Lubricate garage door) அது நல்ல முறையில் இயங்குவதை உறுதி செய்யுங்கள்.
- வண்டிக்கொட்டகையின் தானே திறக்கும் கருவியின் (Garagae door opener) மோட்டர்-சங்கிலி, ஆகியவைகளில் எண்ணெய் அல்லது கிரீஸ் போடுங்கள். மேலும் தானே மூடிக் கொள்ளும் (sensor) செயல் நுட்பம் சரிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்யுங்கள்.
- வண்டிக்கொட்டகை மற்றும் வீட்டிற்கு இடையே உள்ள கதவு உள்ளிட்ட ஜன்னல்கள் மற்றும் கதவுகளை சுற்றியுள்ள இடத்தில் உள்ள Caulking / weather stripes போன்றவைகளை சோதனை செய்யுங்கள். தேவைப்படின் பிரதியீடு செய்யுங்கள்.
- உங்கள் வீட்டிற்குள் நுழையும் மின்கம்பி இணைப்புகள் பாதுகாப்புடன் உள்ளனவா ? என்பதை கண்காணியுங்கள். மேலும் மின்கம்பிகள் செல்லும் குழாய்களின் மீது தண்ணீர் கசிவுகள் ஏதேனும் உள்ளனவா என்பதை சோதனை செய்யுங்கள்.
- வெளிப்புறத்திலுள்ள மரப்பலகையிலான பக்கச்சுவர்கள் (Siding) மற்றும் trimings சேதமடைந்துள்ளனவா ? என்பதை பாருங்கள். அவைகளை சுத்தப்படுத்துங்கள். பிரதியீடு செய்யுங்கள். அல்லது மீண்டும் புதுப்பியுங்கள்.
- வெளிப்புறத்தில் ஏதாவது ஓட்டைகள் இருந்தால் அதை அடைத்துவிடுங்கள். ஏனென்றால் எலி போன்ற சிறிய பிராணிகள் வீட்டினுள்ளே அதன் வழியாக நுழைந்துவிடும்.
- பக்கப்பாதை அல்லது அத்திவாரம், கூரை ஆகியவற்றை தொடும் மரம் அல்லது ஊடுருவும் வேர்கள் ஆகியவற்றை அகற்றிவிடுங்கள்
- உங்கள் கூரையின் மேல் ஏறி அல்லது பைனாகுலர்களை பயன்படுத்தி கூரையின் பொதுவான நிலையை சோதனை செய்யுங்கள். பாரம் தாங்காது கூரை வளைந்து அல்லது



தொய்ந்து போயிருந்தால், கூரையின் கட்டமைப்பில் பழுதுகள் ஏற்பட்டுள்ளன என்று அர்த்தம். கூரையில் மேல்மாடி அறையின் (Attic) உள்ளே இருந்து புலனாய்வு செய்தால் தான் கூரையின் நிலைமையைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள முடியும். கூரையின் அனைத்து மரப்பலகைகளையும் சோதனை செய்யுங்கள். பழுதுகள் ஏதாவது இருந்தால் சரிப்படுத்துங்கள் அல்லது அவைகளை மாற்றியமையுங்கள். புகைபோக்கி மற்றும் கூரை இணைப்புகள் போன்ற அனைத்து கூரைப்பகுதிகளிலும் ஏதாவது பிளவுகள் அல்லது கசிவுகள் உள்ளனவா என்பதை சோதனை செய்யுங்கள்.

- ஏதாவது விறகு அடுப்பு அல்லது கணப்பு அடுப்புடன் இணைக்கப்பட்டுள்ள புகை போக்கிகளை துப்பரவு செய்யுங்கள். பருவகாலத்தின் இறுதியில் அவைகளில் ஏற்படும் பிரச்சினைகளை கண்காணியுங்கள்.
- புகைபோக்கியின் மூடி மற்றும் புகைபோக்கி மற்றும் மூடிக்கிடையே உள்ள Caulking பூசி அடைக்கப்பட்டிருக்கும் ஓட்டையை சோதனை செய்யுங்கள்.
- வாகனப்பாதை மற்றும் நடைபாதைகளில் உள்ள பழுதுகளை சரிபார்த்துக் கொள்ளுங்கள்
- பாதுகாப்புக்கு பிரச்சினையாக ஏதாவது சேதமடைந்த படிகள் இருந்தால் அவைகளைக் கவனியுங்கள்.



velasubramaniam@thaiveedu.com

# பட்டங்களும் தம்பட்டங்களும்...

- வேதநாயகம் தபேந்திரன்



பட்டம் வாங்கலையோ பட்டம்.., பட்டம் வாங்கலையோ பட்டம்...

பட்டம் விற்கும் கால்நடை வியாபாரி, வீதி வீதியாகக் கூவிச் சென்று பட்டம் விற்றதனை ஒரு காலத்தில் கண்டோம்.

வானத்தில் பறக்க விடப்படும் பட்டமே அது.

இப்போதும் பட்டம் வாங்கலையோ பட்டம்.., பட்டம் வாங்கலையோ பட்டம்... எனக் கூவிக் கூவிச் சென்று விற்கும் வியாபாரிகள் உள்ளனர்.

ஆனால், இது வானத்தில் பறக்கும் பட்டமல்ல. பெயருக்குப் பின்னால் 'கௌரவம்' எனக் கூறி விற்கும் காகிதப் பட்டம்.

காசு மெத்தக் கூடிய மனிதர்கள் சிலர், பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டுப் பட்டம் எடுப்பதற்கு அலைகின்றனர்.

பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்படுபவர்களுக்குக் 'கௌரவ' பட்டங்களை விற்றுக் காசாக்க ஒரு கூட்டம் ஓடிக் கொண்டே இருக்கிறது. எங்கே பட்டம் கிடைக்குமென ஒரு கூட்டம் தேடிக் கொண்டே இருக்கிறது.

உதாரணத்திற்கு ஒரு சம்பவம்.

அவர் நடுத்தர வயதை அண்மித்தவர். கௌரவப் பட்டம் வாங்க ஆசைப்பட்டவர்.

பட்டம் வழங்கும் குழுவினர் அவரைப் போன்ற பலரை இனம் கண்டார்கள். தொலைபேசி இலக்கங்களைப் பெற்றார்கள்.

அழைப்பு எடுக்கப்பட்டது. ஹலோ உங்களுக்கு ஒரு கௌரவப்பட்டமொன்று வழங்கப் போகின்றோம். தங்களது திறமைகள் மேன்மைகள் என்னவென்ன என, மனம் மகிழக்கூடியதாக ஒரு பட்டியல் போட்டனர்.

கேட்டவருக்கோ மனம் நிறைந்த புழுகம். தனக்கு மிகவும் சந்தோசமாக இருக்கிறது என்றார்.

தொலைபேசி அழைப்பு எடுத்தவர் சொன்னார் எங்களுக்கு உங்களைப் போல நாடு முழுவதும் இருந்து 1,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளது. அதனால் நாங்கள் ஒரு நடுவர் குழுவை வைத்து தகுதி முன்னுரிமை அடிப்படையில் 25 பேரைத் தெரிவு செய்ய உள்ளோம்.

அதற்கெனப் பலதுறை ஆற்றலுள்ள நடுவர் குழுவை நியமித்துள்ளோம். நடுவர் குழு தெரிவு செய்து தருபவர்களுக்கு அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் விழாவின் போது பட்டத்தை வழங்கிவைப்பார்.

இந்த நடுவர் குழுவுக்குச் சேவைக் கட்டணமாக 5,000 ரூபா கொடுக்க வேண்டும். அதனை நீங்கள் எமக்கு அனுப்பி வைத்தால் பட்டம் வழங்குவதற்குரிய விண்ணப்பமாக எடுப்போமென்றார்.

ஒரு ஐயாயிரம் ரூபா தானே. போனால் போகுது, வந்தால் வருகுது என பட்ட ஆசையில் சிக்குண்டவர் நினைத்தார்.

உடனேயே வங்கிக் கணக்கு இலக்கம் கேட்டுக் காசை அனுப்பி வைத்தார்.

சில நாட்கள் கழிய, பட்டக் குழவிலிருந்து காசு அனுப்பியவருக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது.

சந்தோசமான ஒரு செய்தி. உங்களுக்குப் பட்டம் வழங்குவதற்கு நடுவர் குழு தனது தெரிவைச் செய்துள்ளது. உங்களது திறமைகள், சேவைகளைக் கருத்தில் கொண்டு பட்டம் வழங்குவதற்குரிய தெரிவைச் செய்துள்ளது.

வாழ்த்துகளும் பாராட்டுகளுமென உள்ளம் குளிரச் சொன்னார்கள். இவரோ வானத்துக்கும் பூமிக்குமாக புளு(க்)கத்தில் அலைந்தார்.

பட்டக்குழு வழங்கப்படவுள்ள பட்டத்தின் பெயரைச் சொன்னது சமஸ்கிருதச் சொற்களில் தொடங்கிச் சிங்களச் சாயல் சொற்களில் வந்து தேசியத்தைக் குறிக்கும் சொல்லில் முடிவடையும் பட்டம் அது.

இவருக்கோ படு சந்தோசம்.

பட்டக்குழு தனது அடுத்த அஸ்திரத்தை ஏவியது. பட்டத்துக் குரிய சான்றிதழ், பொன்னாடை, மாலை ஆகியவை உங்க ளுக்கு வழங்க வேண்டும். அதற்காக ஒரு 5,000 ரூபா தேவை எனக் கதை விட்டனர்.

இவர் மறு பேச்சு இல்லாமல் காசை அனுப்பி வைத்தார்.

அடுத்த வாரம் இவருக்குக் கலர்புல்லாக ஒரு அழைப்பிதழ். பிரபலமான ஒரு திருமண மண்டபத்தில் கௌரவிப்பு விழா.

அமைச்சர் ஒருவர், பிரதி அமைச்சர், இராஜாங்க அமைச்சர் பெயர்களை விருந்தினராகப் போட்டிருந்தனர். அழைப்பிதழு டன் கௌரவிக்கப்பட உள்ளதாக இவருக்கு தனியே விசிட் டிங் காட் போல இவரது பெயர், பட்டம் குறித்து தனியே ஒரு சிறிய அழைப்பும் வந்தது.

இவர் சந்தோசத்தின் உச்சத்திற்குச் சென்றார். அழைப்பிதழ் கையில் கிடைத்து மறுநாள் இவருக்குத் தொலைபேசி அழைப்பொன்று பட்டத் திருவிழாக்காரர்களிடமிருந்து வந்தது.

கௌரவிப்பு விழாவுக்கு ஒரு நிறுவனம் ஸ்பொன்சர் தருவ தாக இருக்கிறார்கள். அவர்களது முகாமைத்துவப் பணிப்பா ளர் தற்சமயம் இந்தியாவில் நிற்கின்றார்.

அவர் வந்தவுடன் விழா ஸ்பொன்சர் காசு தந்து விடுவார்கள். அதனால் அது கிடைக்கும் வரையுள்ள தேவைக்காக ஒரு 5,000 ரூபா வீதம் பட்டம் பெறுவோர் தந்தால் நல்லது. விழா ஸ்பொன்சர் காசு கிடைத்ததும் உடனேயே உங்களது காசைத் திருப்பித் தந்து விடுவோமென்றார்.

இவர் என்ன செய்வது. ஏற்கனவே 10,000 ரூபா விட்டாச்சே.

காசு திரும்ப வரும் தானே. நாட்டின் 'பெரீய்ய' அமைச்சர்கள் அல்லவா எனக்குப் பட்டம் தரவருகின்றனர். ஆதனால் கொடுப்போமெனக் காசை அனுப்பி வைத்தார்.

விழா நாள் வந்தது. இவரும் கோட் சூட் போட்டு இனசனங்க ளையெல்லாம் அழைத்துச் சென்றார்.

பட்டம் பெறுபவர்கள் வரிசையில் இவரும் இருந்தார். ஆள் களை எண்ணிப்பார்த்தார். நூறு பேர் அளவில் வரும். இருபத் தைந்து பேருக்குத் தானே பட்டம் என்றனர். இதுவென்ன நூறு பேரென மனதுக்குள் சங்கடப்பட்டார்.

சொன்ன நேரத்துக்கு அமைச்சர்கள் வந்தனர். விழா கோலாக லமாகக் களைகட்டியது. இவருக்கும் பட்டம் வழங்கப்பட்டது. இனிமேல் உங்களது பெயருடன் இந்தப் பட்டத்தையும் சேர்த் துத் தான் எழுத வேண்டுமென விழாத் தலைவர் அறிவித்தார்.

பட்டம் வழங்கும் நிகழ்வு முடிந்தது. விழாச் செலவுக்கென வாங்கிய 5,000 ரூபா காசு கேட்டுத் தொலைபேசி அழைப்பை எடுத்தார். அந்த இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடிய வில்லை.

இவர் கணக்குப் பார்த்தார் தலா 15,000 ரூபாப்படி 100 பேரி டம் 15 இலட்ச ரூபா சேர்த்தார்கள். விழாச் செலவு பொன் னாடை மாலையென்று பார்த்தாலும் ஒரு 3 இலட்ச ரூபாவுக் குள் முடியும்.

மிச்சக் காசு அவ்வளவும் இலாபம்.

இப்படியே பட்டம் வழங்கும் அந்தக் குழு நாட்டின் ஒவ்வொரு மாகாணமாகச் சென்று பட்டம் வழங்கிப் பணம் பார்க்கின்ற னர். இது உண்மைக்கதை.

இப்படியான வியாபார அமைப்புகள்கூட பட்டம் வழங்காமல், தமக்குத்தாமே 'பென்னாம் பெரிய' பட்டம் வழங்கிச் சொல்



லுக்குச் சொல், எழுத்துக்கு எழுத்து என்று பட்டம் வழங்கு வோர் சிலருண்டு.

என்ன நிகழ்வு என்றாலும் தமது பெயருக்கு பின்னால் பட்டம் போட்டுத் தான் எழுத வேண்டும், அழைக்க வேண்டும் என்று அடம்பிடிப்போர் சிலர்.

தாயகத்தில் மட்டுமல்ல புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பட்டம் பெறுதல் எனும் ஒருவித 'உளநோய்' தொடர்கிறது. இருநூற்றைம்பது டொலர் கொடுத்தால் பட்டம் கிடைக்கும் என்கிறார் ஒருவர்.

ஒருவர் இன்னொருவருக்குப் பட்டம் வழங்க, அந்த இன்னொ ருவர் இவருக்குப் பட்டம் வழங்கவெனப் 'பண்டமாற்றுப் பட்

டம்' வழங்கலும் உண்டு. ஒரு வகையில் சொன்னால் ஆளுக்காள் மாறி மாறி முதுகு சொறியும் முறை.

தாயகத்தில் பட்டங்களை அதிகம் வழங்கும் நிலையங்களாகக் கோயில்களே உள்ளன. கோயில்களில் வருடாந்தத் திருவிழாக்களின் போது சொற்பொழிவு நிகழ்வு பரவலாக நடைபெற்ற ஒரு காலம் இருந்தது. அப்போது திருவிழாக்களின் நிறைவில் சொற்பொழிவும் நிறைவுபெறும் போது சொற்பொழிவாளர்களுக்கு ஒரு பட்டத்தை வழங்குவார்கள்.

அப்பட்டத்தைத் தமது பெயருக்கு முன்பாக இடும் வழக்கத்தைச் சிலர் கடைப்பிடிப்பார்கள்.

புதுப்புதுப் 'பட்டப் பெயர்'களை உருவாக்குவதற்கென்று 'நிபுணர்களே' உள்ளனர்.

பட்டங்களைப் பத்திரிகைகளிலும் சமூக வலைத் தளங்களிலும் இட்டுக் கொண்டாடவென ஒரு கூட்டம் உள்ளது.

பெற்ற பட்டத்திற்கு விழா எடுத்துப் பெரிதாகக் கொண்டாடிய ஒரு காலமும் உண்டு.

இப்பட்டங்களின் மீதான வெறுப்பினால், கனடாவில் ஒரு தொழிலதிபர், தனது செல்லப்பிராணியான வளர்ப்பு நாய்க்கு, 1997-ம் ஆண்டளவில் 250 கனடிய டொலர் கொடுத்து 'டாக்டர்' பட்டம் பெற்று, அதன் கழுத்தில் நாயின் இலக்கத்துடன் 'டாக்டர் பால் செபஸ்ரீன்' என்று செப்பேட்டில் பொறித்து தொங்கவிட்டிருந்தாராம்.

இதுபோன்ற 'கோமாளித்தனமான' பட்டங்களை வாங்காமல் புறக்கணிப்போர் பலர் உண்டு.

'இவைகளை'விட, உண்மையான சமூக சேவைகள், திறமைகள் காரணமாகப் பட்டங்களைப் பெருமைப்படுத்தும் உன்னத மனிதர்களும் உண்டு.

அரச அங்கீகாரம் பெற்ற பட்டங்களைப் பெற்ற போதும், உயர் தகைமை உள்ள நிறுவனங்களால் வழங்கப்பெற்ற பட்டங்களைப் பெற்ற போதும் அவற்றைத் தமது பெயருடன் இணைத்துப் பாவிக்காமல் மௌனமாக உள்ளோரும் உண்டு.

பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் திறமை அடிப்படையிலும் உயர் தகைமை அடிப்படையிலும் பட்டங்களை வழங்குகின்றனர். சமூகத்தால் போற்றப்பட்ட மனிதர்களுக்குக் கௌரவப் பட்டங்களை வழங்கிப் பல்கலைக்கழகங்கள் தமது மதிப்பை உயர்த்திக் கொள்கின்றன.

போலி மனிதர்களை அம்பலப்படுத்தும் பட்டங்களது கதைகளை விரிவாகச் சொல்லிக்கொண்டே போகலாம்.



thabendran.v@thaiveedu.com



# கவிஞர் சேரனின் ‘காஞ்சி’





நூலாசிரியர் 'கவிஞர்' சேரன்

கவிஞர் சேரனின் புதிய கவித்தொகையான காஞ்சி (காலச் சுவடு பதிப்பகம், 2024), மே 26, 2024 அன்று ரொறன்ரோவில் வெளியிடப்பட்டது. நிகழ்வுக்குக் ‘காலம்’ செல்வம் தலைமை தாங்கினார். கவிஞர் சேரனுடைய கவிதைகள் பற்றியும் அவருடனான நீண்ட கால இலக்கிய உறவு பற்றியும் சிறப்பாகவும் அங்கதச் சுவையோடும் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து சேரன் தனது கவிதைகள் இரண்டை வாசித்தார். அவற்றின் சிங்கள மொழிபெயர்ப்பைப் புகழ்பெற்ற சிங்கள நாவலாசிரியரும் ‘யாத்ரா’ சஞ்சிகையின் ஆசிரியருமான சந்திரரட்ன பண்டார வாசித்தார். கவிஞர் சேரனின் காஸா இனபடுகொலை பற்றிய சில கவிதைகளை ஓவியரும் கலைஞருமான கஸ்தூரி சவரிமுத்து தமிழிலும் ஆங்கிலத்திலும் நிகழ்த்தினார். விரிவுரையாளர் பொன்னையா விவேகானந்தன் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். தனதுரையில், தமிழ்ச் செவ்வியற் கவிதைகளுக்கும் சேரன் கவிதைகளுக்கும் இடையேயான அழகியல், கவித்துவ உறவுகளையும் இணைப்புகளையும் பற்றி விரிவாகக் குறிப்பிட்டார் அவர்.



-'காலம்' செல்வம் அருளானந்தம் - தலைமையுரையாற்றுகிறார்

தமிழ் ஊடக, நாடக, தொலைக்காட்சித் துறையின் மூலவர்களில் சிறப்பான ஒருவரான P. விக்கினேவரன், கவிஞர் சேரனின் இலக்கிய வாழ்வுக்கு, அவரது சிறு வயதிலிருந்தே ஊக்கமளித்து வளர்த்த சேரனின் நெருங்கிய உறவினர்களான நா. முருகதாஸ், கவிஞர் அ. கந்தசாமி ஆகியோருக்கு நூலின் சிறப்புப் பிரதிகளை வழங்கினார்.

தொடர்ந்து பேராசிரியர் அனுஷியா ராமசாமி உரையாற்றினார். பேராசிரியர் அனுஷியா ராமசாமி, அமெரிக்காவில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். சேரன் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். அமெரிக்கக் கறுப்பின மக்களுடன் நீண்ட காலமாகப் பணியாற்றுபவர். சேரனின் யாழ்ப்பாணம் கவிதை: ஜனநாயகமும் அதன் ஜனங்களும் என்ற தலைப்பில் அவருடைய உரை அமைந்தது:



சந்திரரத்ன பண்டார - கவிதை வாசிப்பு

“சேரனின் பல கவிதைகள் காப்காவின் (Franz Kafka) கதைகளை ஒத்தவை. காப்கா நவீனத்துவத்தின் மத்தியில் இருக்கும் ஒரு நச்சுப்பொருளை அறிந்தவன். அது காலனிய நாடுகளின் பொது நிலைக் கொள்கையால் நியாயப்படுத்தப்பட்ட சட்ட அமைப்புகள். இவை எவ்வளவு மனித நேயம் அற்றவை, ஒரு பொய்யான நடுநிலைமை வகிப்பவை என்று சமத்துவம் இல்லா சமூகத்தில் வளர்ந்தவனின் புரிதலோடு கதை எழுதினான். அவனைப் போலவே சேரனும் சிறுபான்மை இனத்தவராக, அதனால் ஏற்படும் பல தாக்கங்களுடன், ஒரு பின்காலனிய நாட்டில் பிறந்து வளர்ந்தவர். 2009-க்குப் பின் எழுதும் கவிதை

களில் சேரன் வர்ணிக்கும் அந்த நாடு, காப்காவின் அழுக்கு படிந்த நகரம் போல ஒரு இருளடைந்த இடம்' என்று பேராசிரியர் குறிப்பிட்டார்.

தமிழகக் கவிஞர், நாவலாசிரியர் யுவன் சந்திரசேகர் தன்னுடைய உரையில், சேரன் ஒரு உலகக் கவி. அவரது அனுபவங்களையும் வாழ்வையும் ஒரு நிலப்பரப்புக்குள் மட்டும் குறுக்கிவிட முடியாது என வலியுறுத்தினார். கூலி, உழைப்பு, புலம் பெயர்வு என்பன தமிழ் வரலாற்றுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் எவ்வளவு முக்கியம் என்பதையும் விளக்கிக் கூறினார். 'காஞ்சி' தொகுப்பில் தனக்கு மிகவும் பிடித்த கவிதை, 'தாத்தாவின் வல்லை வெளி' என்றும் சொன்னார்.

எழுத்தாளர், கவிஞர் க. நவம் அவர்கள் பேசுகிற போது, சேரனை வெறுமனே ஒரு போர்க்காலக் கவி என்று சுட்டுவது பொருத்தமில்லை. அவர் வீச்சு அதனைவிட விரிந்தது எனச் சிக்காக்கோ பல்கலைக்கழகப் பேராசிரியர் சாஷா எபெல்லிங் எழுதியிருப்பதைக் குறிப்பிட்டார். மேலும் பேசுகையில்,

***படிமத்தால்***
***என்னைக் கொல்லாதே***
***மொழிக்குத் திரும்பு***
***மொழி***

என்று சேரன் எழுதுகிறார். மனமும் மொழியும் உச்சநிலையைச் சென்றடைவதுதான் கவித்துவம். கவிதைக்கு அடிப்படை வளமாகவும் வாகனமாகவும் இருப்பது மொழி. எனவே 'மொழிக்குத் திரும்பு' எனச் சேரன் கூறுவதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? இதைக்கூட, நவீன கவிதைப் பரிணாம வளர்ச்சியின், இன்னோர் படிநிலை எனலாமல்லவா?'. என்ற சிறப்பான கேள்வியொன்றை எழுப்பினார்.

ஆடலரசி சங்கீதா திவ்வியராஜனும் கவிஞர் பா.அ. ஜெயகரனும் சேரன் கவிதைகளை மிகவும் உயிர்ப்போடும் உணர்வுத் துடிப்போடும் நிகழ்த்தினர். கலைஞர் திவ்வியராஜன், சேரனுடைய 'மழைக்காலமும் கூலிப்பெண்களும்' என்னும் கவிதையை இனிமையாக இசையமைத்துப் பாடினார். கலைஞர் சுதர்ஷி இக்னேஷியஸ், சேரனின் 'தாத்தாவின் வல்லை வெளி' என்ற கவிதையை அரங்கில் மிகச் சிறப்பான ஒரு கவிதா நிகழ்வாக நிகழ்த்தினார். கவிதையும் நாடகமும் தனி நடிப்பும் தாக்கமாக ஒன்றிணைந்த நிகழ்வாக அது அமைந்தது. கவிஞர் அ. கந்தசாமி அவர்கள், சேரனின் கவிதைகளையும் சேரனுடனான தனது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

முடிவாக, சேரன் காஸாவில் வாழும் தனது கவி நண்பர்களில் ஒருவரான பீஸான் நட்டில்-அப்துல் அல் ரகீம் பற்றிச் சொல்லி அவருடைய கவிதை வாசிப்பு ஒன்றையும் திரையில் காட்டினார். காஸாவில் கவி பீஸான் வாழுமிடத்தில் மின்சாரம் இல்லையென்பதாலும் இஸ்ரேலின் குண்டு வீச்சுக்கள் நடப்பதாலும் கவி பீஸானால் நேரலையில் கலந்து கொள்ள முடியவில்லை.

நிகழ்வில் திரட்டப்பட்ட 4000 கனடிய டொலர்கள் காஸாவில் பாதிக்கப்பட்ட கவிஞர்களுக்கு வழங்கப்படும் எனக் கவிஞர் சேரன் தெரிவித்தார்.


கஸ்தூரி சவரிமுத்து - கவிதை வாசிப்பு


பேராசிரியர் அனுஷியா ராமசாமி - உரையாற்றுகிறார்


பொன்னையா விவேகானந்தன் - வெளியீட்டுரையாற்றுகிறார்


சிறப்புப் பிரதி - வழங்குபவர்: P. விக்னேஸ்வரன், பெறுபவர்: நா. முருகதாஸ்



சிறப்புப் பிரதி வழங்குபவர்: P. விக்னேஸ்வரன். பெறுபவர்: கவிஞர் அ. கந்தசாமி



சுதர்ஷி இக்னேஷியஸ் - கவிதை நிகழ்த்துகிறார்



கவிஞர் புவன் சந்திரசேகர் - உரையாற்றுகிறார்



க.நவம் - உரையாற்றுகிறார்



சங்கீதா திவ்வியராஜன் - கவிதை வாசிப்பு



கவிஞர் அ கந்தசாமி - உரையாற்றுகிறார்



- பா.அ. ஜெயகரன் - கவிதை வாசிப்பு



வி.திவ்வியராஜன் - பாடுகின்றார்





# உலகப் புத்தக நாளும் நூல்களின் சங்கமமும்

**- குரு அரவிந்தன்**

'நீங்கள் ஒரு புத்தகத்தைத் தொடர்ந்தும் வாசிக்க விரும்ப வில்லை என்றால், உங்களுக்குச் சரியான புத்தகம் கிடைக்க வில்லை என்பதுதான் அர்த்தம்' என்று ஜே.கே. ரவுலிங் ஓரிடத் தில் குறிப்பிட்டிருந்தார்.

சென்ற மாதம் 'புத்தகங்களைக் கொண்டாடுவோம்' என்ற தாய்வீடு இதழின் ஆசிரியர் தலையங்கத்தைப் பார்த்தபோது, நானும் இதையே எனது மாணவர்களுக்கு அடிக்கடி செல்லிக் கொண்டிருப்பதால், அதைப்பற்றி இளைய தலைமுறையினர் மட்டுமல்ல, பெற்றோரும், ஆசிரியர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக விரிவாக எழுத வேண்டும் என்ற எண் ணம் எனக்கு ஏற்பட்டது. வாசிப்பது எவ்வளவு முக்கியம் என் பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும் என்பதாலும், பெற் றோர்களும், ஆசிரியர்களும் இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாலும் ஏற்பட்ட தாக்கம்தான் இக்கட் டுரையை எழுத என்னைத் தூண்டியது.

ஒவ்வொரு வருடமும் உலகப் புத்தக நாள் ஏப்ரல் மாதம் 23-ஆம் திகதி, உலகெங்கும் வாசிப்பில் ஆர்வமுள்ள நாடுக ளில் கொண்டாடப்படுகின்றது. பிரித்தானியாவில் சற்று வித்தி யாசமாக இந்தப் புத்தக நாளை மார்ச் மாதத்தின் முதலாவது வியாழக்கிழமை கொண்டாடுகின்றார்கள். புத்தக நாள் என்று குறிப்பிடும் போது, வாசித்தல், பதிப்பித்தல் மற்றும் காப்புரி மையூடாக (Copyright) அறிவு சார்ந்த சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்றவற்றுக்காக யுனெஸ்கோ என்று அழைக்கப்படுகின்ற ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற் றும் பண்பாட்டு நிறுவனத்தால் இந்நாள் ஏற்படுத்தப்பட்டது. முதன் முதலாக இந்த நாள் 1995-ம் ஆண்டு கொண்டாடப் பெற்றது.

பாரிஸ் நகரில் 1995-ம் ஆண்டு நடைபெற்ற யுனெஸ்கோ நிறு வனத்தின் 28-வது மாநாட்டில் இதைப் பற்றி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்படது. அத்தீர்மானத்தின் படி, புத்தகங்களை வாசிப்பதன் மூலம், அறிவைப் பெருக்கு வதற்கும், உலகெங்கிலும் உள்ள பல்வேறு கலாசாரங்கள் பற்றிய விழிப்புணர்வினை மக்கள் பெறுவதற்கும், புரிதல், சகிப்புத்தன்மை போன்றவற்றின் மூலம் மனிதர்களின் ஒழுக் கத்தினை மேம்படுத்தவும், உங்களுக்கான சொற்களஞ்சி யத்தை உருவாக்கவும் புத்தகம் ஒரு சிறந்த கருவியாக அமைந்து இருப்பதால், ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் 23-ம் திகதி உலக புத்தக நாளாக கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. யுனெஸ்கோவின் தீர்மானத்திற்கு ஏற்ப, அவர்களுடன் இணந்து இந்நாளை வெற்றிகரமாகக் கொண் டாடுவதில் பல அமைப்புக்களும் தனிப்பட்டவர்களும் பங்க ளிப்புச் செய்ய முன்வந்ததால் இத்தீர்மானம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

உலகப் புத்தக நாளை உலக இலக்கியத்துக்கான ஒரு குறியீ டாகவே தெரிவு செய்ததாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது. உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்கள் சிலர் பிறந்த, அல்லது அவர்கள் இறந்த நாளாக 23-ம் திகதி கருதப்படுவதால், இந்த நாளைத் தெரிவு செய்திருந்தனர். எழுத்தாளர்களான வில்லியம் சேக்ஸ்பியர், மிகுவல் டி செர்வாண்டஸ், இன்கா கார்கிலாசோ டி லா வேகா ஆகியோரின் மரணத்தை கௌர விக்கும் வகையிலும் இது தேர்ந்தெடுக்கப்பட்டது. இதைவிட மொரிஸ் ட்ருவோன், ஹோல்டோர் லக்ஸ்னெஸ், விளாமிடிர் நபோகோவ், ஜோசெப் பிளா, மனுவேல் மெஜியா வலேஜோ ஆகிய எழுத்தாளர்களினதும் பிறந்த நாளாகவும் இது இருக் கின்றது.

'உங்களுக்கு வாசிக்கத் தெரிந்தால், உலகம் முழுவதும் உங் களுக்குத் திறக்கும்' என்று அமெரிக்க முன்நாள் ஜனாதிபதி பராக் ஒபாமா குறிப்பிட்டது போல, சின்ன வயதிலேயே வாசிப் புப் பழக்கத்தை உங்கள் பிள்ளைகளுக்கு ஊட்டுங்கள். பாட சாலைகளில் பிள்ளைகளுக்கு வாசிப்பு பழக்கத்தை ஊக்கு விக்க, நூலகம் ஒன்றை அமைக்கலாம். மாணவர்களுக்குப் பிடித்தமான நூல்கள் பற்றி உரையாடச் சொல்லலாம். ஒவ் வொரு வாரமும் அதிக நூல்களை வாசித்த மாணவருக்குப் பரிசுகள் கொடுக்கலாம். புத்தகக் கழகம் ஒன்றை உருவாக் கிப் புத்தகங்களைப் பரிமாறிக் கொள்ளலாம். புத்தகம் சார்ந்த விளையாட்டுக்களைப் புத்தகத்தின் தலைப்புக்களை வைத்து விளையாடலாம்.

கணினி வசதிகள் இருப்பதால், உங்களின் வாசிப்பு அனுப வங்களைக் கொண்டு உங்களுக்கான சொந்தப் புத்தகத்தை நீங்களே உருவாக்கலாம். நீங்கள் சொல்ல வந்த கருத்துக ளும், எழுத்து நடையும் மற்றவர்களுக்குப் பிடித்துக் கொண்

டால் அவர்களே உங்கள் வாசகர்களாகிவிடுவார்கள். சில சமயங்களில் புத்தகத்தை வாசிக்கும் போது, பலருடைய பிரச்சினைகளுக்கு அதன் மூலம் தீர்வுகூடக் கிடைக்கலாம். எல்லோருக்கும் பயன்தரக் கூடியதாக உங்கள் வீட்டிலேயே சிறிதாக ஒரு நூலகத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். வாசிப்பை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த நீங்கள் விரும்பினால் தன்னார்வத் தொண்டராக உங்கள் கிராமத்தில் பொதுவான ஒரு படிப்பகத்தை ஏற்படுத்தி, மற்றவர்களும் வாசிப்பதற்கு வழிவகைகளைச் செய்யலாம்.

மின் நூல்களுக்குப் பிரபலமான அமேசான் நிறுவனம் ஐந்தாவது ஆண்டு புத்தகத் தின கொண்டாட்டத்திற்காக இலவசமாகப் 10 புத்தகங்கள் வரை பதிவிறக்கம் செய்யக்கூடிய வசதிகளை வழங்கியிருக்கின்றது. சுமார் 190 நாடுகள், பிரதேசங்களுக்கு இந்த இலவச வசதியைக் கொடுத்திருக்கின்றது. இதன் மூலம் மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வழி வகுத்திருக்கின்றது. பல துறைகளில் உங்கள் பொது அறிவை விருத்தி செய்ய வாசிப்பு மிகவும் உதவியாக இருக்கின்றது. இதையே ‘ஒரு நல்ல புத்தகத்தைத் திறந்து கொண்டால், நரகத்தின் வாசல் மூடப்பட்டு விடும்’ என்று கவிஞர் வைரமுத்து குறிப்பிடுகின்றார். வாசிக்கத் தெரிந்தவர்கள் புத்திசாலிகளாகவும், காலத்திற்கேற்ப எது சரி, எது தவறு என்பதற்கான முடிவைத் தாங்களாகவே எடுக்கக் கூடியவர்களாகவும் இருப்பதை நீங்கள் அவதானித்து இருக்கலாம்.

புலம் பெயர்ந்த மண்ணில் கனடா நாட்டில் கனடா எழுத்தாளர் இணையத்தின் மூலமாக இந்த வாசிப்புப் பழக்கத்தை இளைய தலைமுறையினரிடம் அறிமுகம் செய்வதற்குப் பல வகையிலும் முயற்சிகளை மேற்கொண்டோம். நான் எழுத்தாளர் இணையத்தின் தலைவராக இருந்தபோது, உதயன் ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள் செயலாளராகவும், கனகசபை ரவீந்திரநாதன் பொருளாளராகவும் பணியாற்றினார்கள். நிர்வாக சபையினரும் இதற்காக முன்னின்று செயற்பட்டதால், இளைய தலைமுறையினருக்கு வாசிப்புப் பழக்கத்தை அறிமுகம் செய்யத்தக்க வகையில் செயற்றிட்டத்தை உருவாக்கினோம். ஆனால் கோவிட்-19-ன் தாக்கம் காரணமாகப் பொது நிலையங்கள் பாவனைக்கு மூடப்பட்டதால், அத்திட்டத்தை எங்களால் தொடர்ந்தும் கொண்டு நடத்த முடியாமல் போய்விட்டது.

எழுத்தாளர் இணையத்தின் நோக்கத்தை முன்னிலைப்படுத்தி, ஆகணி சுரேஸ் அவர்களின் தலைமையிலான புதிய நிர்வாக சபையினரும் இதுபோன்ற கண்காட்சியில் ஆர்வம் கொண்டிருந்ததால், எந்தவித தடையும் இல்லாமல் முதன் முதலாக ‘நூல்களின் சங்கமம்’ என்ற புத்தகக் கண்காட்சியை ரொறன்ரோவில் இலகுவாக நடத்த முடிந்தது.

ஏப்ரல் மாதம் சனிக்கிழமை 20-4-2024 அன்று கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 30-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாகவும், உலகப் புத்தகத் தினத்தைக் கொண்டாடும் முகமாகவும் ரொறன்ரோவில் கனடியத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டும், விற்பனைக்கும் கனடியத் தமிழ் எழுத்தாளர் இணையத்தால் வைக்கப்பட்டிருந்தன. கனடாவின் பல பாகங்களில் இருந்தும் மிகப் பெரிய அளவில பொதுமக்கள் கலந்து கொண்டு இந்த நிகழ்வுக்கு ஆதரவு நல்கினார்கள்.

முக்கியமாக இளைய தலைமுறையினரும், சிறுவர்களும் பெற்றோருடன் வந்து கலந்து கொண்டு தமக்கு விரும்பிய நூல்களை வாங்கிச் சென்றது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் அடுத்த தலைமுறையினரிடம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும், இந்த மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்க வேண்டும் என்ற எழுத்தாளர் இணையத்தின் ஆதங்கத்தை நிறைவேற்றவும் இந்த நிகழ்வு பெரும் உதவியாக இருந்தது.

கனடாவில் இதுபோன்றதொரு தமிழ் நூல்களின் சங்கம நிகழ்வு நடப்பது இதுவே முதற்றடவையாகும். சுமார் 50 மேற்பட்ட நூலாசிரியர்கள், பதிப்பகத்தினர், ஊடக நிறுவனங்கள் தங்கள் ஆக்கங்களை இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தி இருந்தனர். கனடா எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுகதைத்




தொகுப்புகள், கட்டுரைத் தொகுப்புகள், கவிதைத் தொகுப்புகள், மஞ்சரிகள், மற்றும் ஏனைய தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் என்று பல விதமான இலக்கிய ஆக்கங்களும் இடம் பெற்று இருந்தன.

இந்த நிகழ்வின் போது எழுத்தாளர்களின் 12-க்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டும் அறிமுகம் செய்யப்பட்டும் வைக்கப்பட்டன. எனது சிறுகதைத் தொகுப்பான ‘சாக்லட் பெண்ணும் பண்ணைவீடும்,’ ‘யாதுமாகி நின்றவள்,’ மற்றும் ‘தமிழ் ஆரம் சிறுவர் ஆண்டு மலர் - 2024’ ஆகியனவும், தமிழகக் கவிஞர் மு. முருகேஸ் அவர்கள் தொகுத்து வெளியிட்ட ‘மனதைத் தொட்ட எழுத்தின் பக்கங்கள்’ ஆகிய நூல்களும் வெளியிட்டு வைக்கப்பெற்றன. இதைவிடப் பேராசிரியர் இ.-பாலசுந்தரம், அனலை. ஆ. இராசேந்திரம், வீணைமைந்தன், கனி விமலநாதன் - மீரா, முருகேசு கிருபாகரன், கிராமத்து வதனம் வெளியீடான பெண்கள், மற்றும் இளைய தலைமுறையினர்க்கான வதனம் மஞ்சரி, நவகீதா முருகண்டி ஆகியோரது நூல்களும் வெளியிட்டு வைக்கப்பெற்றன.

வாசகர்கள் தங்கள் அபிமான எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் கட்டுரையாளர்களையும் நேரடியாகச் சந்தித்து உரையாடவும், கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் இந்த நிகழ்வு அவர்களுக்கு ஓர் அருமையான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.



kuruaravindan@thaiveedu.com



# சூர்ப்பணகை நடன நாடகம்

## பெண் தனக்காகப் பேசுவது அனைவருக்காகவும் பேசுவதாகும்!

- ரூபன் சிவராஜா

நோர்வே கலாசாதனா கலைக்கூடத்தின் உருவாக்கத்தில் ‘சூர்ப்பணகை’ நடன நாடகம் 20.01.2024 ‘Bærum Kulturhus’ பண்பாட்டு மண்டபத்தில் அரங்கேறியது. இப்படைப்பிற்குரிய எழுத்துரு, நடன அமைப்பு, ஒளி வடிவமைப்பு மற்றும் நெறியாள்கை கவிதா லட்சுமி. இசை அஸ்வமித்ரா. இப்படைப்பின் மேடைப்பிரதி, பேசுபெருள், அழகியல், கலைத்துவம், சொல்முறை, சமகாலப் பிரதிபலிப்பு, இசை, பாடல்கள், அரங்க அமைப்பு, ஒளி வடிவமைப்பு உட்பட்டவற்றை முன்வைத்த பார்வையாக இக்கட்டுரை அமைகின்றது.

இலக்கியங்களைச் சமூக, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்வதும் உரையாடுவதும் விவாதிப்பதும்



விமர்சிப்பதும், அவை மீது கேள்விகளை எழுப்புவதும் தொடர்ச்சியாக நிகழ்கின்ற செயற்பாடுகளே. இராமாயணத்தில் அரக்கியாகவும் வஞ்சகியாகவும் சித்தரிக்கப்படும் ஒரு பாத்திரத்தை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு இப்படைப்பு நிகழ்த்தப்பட்டது.

### இலக்கிய இதிகாசங்களும் சமூகமும்:

இலக்கிய அந்தஸ்துடைய புராண இதிகாசங்கள் உலகெங்கிலும் நிறைந்து கிடக்கின்றன. அவை அந்தந்த நாடுகள், மக்களின் மூல மொழிகளில் எழுதப்பட்டவையாகவும் மொழிபெயர்க்கப்பட்டவையாகவும் உள்ளன. நூற்றாண்டுகளைக் கடந்து கற்பிக்கப்பட்டும் வாசிக்கப்பட்டும் வரும் புராண-இதிகாசங்கள் பலவுள. அவை பகுப்பாய்வுகளுக்கு ஊடாக விவாதிக்கப்பட்டும், விமர்சிக்கப்பட்டும் வருகின்றன. வெவ்வேறு புதிய இலக்கியப் படைப்புகளுக்கான உந்துதலாகவும் அவை இருந்து வருவதை நாம் அறிவோம். இந்தியாவின் மாபெரும் இதிகாசங்களான இராமாயணமும் மகாபாரதமும் மற்றும் அதன் கிளைக் கதைகளும் அத்தகையவை.

கம்பராமாயணம் ஆறு காண்டங்களைக் கொண்டது. ஒவ்வொரு காண்டமும் பல படலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பால காண்டம் (இராமனின் இளமைக்கால நிகழ்ச்சிகள்), அயோத்தியா காண்டம் (இராமன் வனவாசமும் பரதன் ஆட்சியும்), ஆரணிய காண்டம் (சூர்ப்பணகை வருகை, சீதையின் பிரிவும் இராமனின் துயரும்), கிட்கிந்தா காண்டம் (இராமனும் வானரப் படைகளும்), சுந்தர காண்டம் (அனுமனின் தூது), யுத்த காண்டம் ((இராமனும் இராவணனும் போரிடல்) என்பன அவையாகும். இந்நடன நாடகம், ஆரணிய காண்டத்தில், இராவணனுடைய தங்கை சூர்ப்பணகை இராமனைக் கண்டு காதல் கொள்ளும் சூர்ப்பணகைப் படலத்தை மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது.

நிலைபெற்றுவிட்ட இலக்கியங்களை ஆழ்ந்து படிப்பதும் பகிர்வதும் உரையாடுவதும் நல்ல அனுபவங்களைத் தரக்கூடியன. கம்பராமாயணத்தின் மீது விமர்சனங்களைக் கொண்டிருப்பினும் அக்கதையோட்டமும் பாத்திரங்களும் சுவாரசியமும் இலக்கியச் சுவையும்மிக்கவை. கட்டமைக்கப்பட்டுள்ள பாத்திரங்களினது இயல்புகளையும் அவற்றிற்கிடையிலான முரண்களையும் குறைத்து மதிப்பிடமுடியாது. எல்லாவற்றிற்கும் மேலாகக் கம்பனின் தமிழுக்காகவேனும் அதை நாம் படிக்கலாம். வியத்தகு படிமங்கள், உவமைகளைக் கொண்ட கவித்துவ உச்சத்தையும் தமிழின் மொழி அழகையும் அதிற் தரிசிக்கவும் சுவைக்கவும் கற்றறியவும் முடியும்.

### எதிர்மறைச் சித்தரிப்புகளின் மறுபக்கம்:

இராவணன், சூர்ப்பணகை போன்ற பாத்திரங்கள் அழிவுகளை ஏற்படுத்தும் சக்திகளாக எதிர்மறையாகச் சித்தரிக்கப்படுபவை. அவர்கள் அரக்கர் குலத்திற்கும் அந்தணர் குலத்திற்கும் இடையிலான கலப்புத் திருமணத்திற் பிறந்தவர்களாக இராமாயணத்திற் சித்தரிக்கப்படுகின்றனர். இப்பாத்தி

ரங்கள் காலம்காலமான கதை சொல்லல்கள் மூலம் சமூகத்தி லும் மனிதர்களிடத்தும் பொதுப்புத்தியிலும் எதிர்மறையான பாத்திரங்களாகவும் படிமங்களாகவும் ஆழப்பதித்துள்ளன. அவற்றின் நேர்மறையான குணாம்சங்கள், இயல்புகள், பண்பு கள் உள்ளன என்பதற்கு கம்பனின் வர்ணனைகளே பல இடங்களிற் சான்று பகர்கின்றன.

இராமாயணப் பாத்திரங்களின் மறுபக்கத்தினைப் பார்க்க வும், அவற்றின் நியாயங்களைப் பேசவும் விழைகின்றது. அது மட்டுமல்லாமல் அவதாரமாகவும் கடவுளாகவும் சித்தரிக்கப் பட்டதோடு நடைமுறையிலும் நிலைபெற்றிருக்கக்கூடிய இராமன் பாத்திரத்தின் புனிதப்படுத்தல் மீதான கேள்வியையும் எழுப்புகின்றது. சூர்ப்பணகையின் காதலையும் காமத்தையும் பேசுகின்றது. சமூகத்திலும் மனித மனங்களிலும் எதிர்மறை யாகப் பதிந்துவிட்ட பாத்திரங்களின் மறுபக்கத்தை, நியாயத் தைப் பேசுகின்றது.

### கதை நகர்வும் காட்சிளும்:

ஆறு காட்சிகளைக் கொண்ட இந்த நடன நாடகத்தின் நீளம் ஒரு மணித்தியாலம். இதன் கதையின் நகர்வு அல்லது நிகழ்த் துகை ஒழுங்கு குறித்துச் சொல்வதானால், இராமன் சூர்ப்பணகை இடையிலான சந்திப்பு, அவள் இராமன் மீது மோகம் கொள்வது, இராமன் அவளை மணம் முடிப்பது குறித்துப் பேசுதல், சீதை அறிமுகம், இலட்சுமணன் வருகையும் கோப மும், சூர்ப்பணகையின் மூக்கையும் மார்பையும் காதையும் வெட்டுவது, தனக்கு நேர்ந்த வன்கொடுமைப் பேரவலத்தை இராவணனிடம் சூர்ப்பணகை எடுத்துக்கூறல் என்பதாக அமையப் பெற்றிருந்தது.

இராவணனை அறிமுகப்படுத்துவதோடு முதற்காட்சி தொடங் குகின்றது. அவனது தேசத்தின் அழகினையும், ஆட்சி மேன் மையையும் சித்தரிக்கும் பாடலுடன் அது காட்சிப்படுத்தப்பட் டிருந்தது. இரண்டாவது காட்சியில் சூர்ப்பணகையின் அறிமு கம் நிகழ்கிறது. கதை நிகழும் களம் காடு. பெருங்காடென்ப தைப் பிரதிபலிக்கும் வகையில் அரங்கம் நிர்மாணிக்கப்பட்டி ருந்தது. இசையினதும் நடனத்தினதும் கூட்டிணைவில் பற வைகளும் மிருகங்களும் உருவகப்படுத்தப்பட்டன.

***பஞ்சி ஒளிர், விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க,
செஞ் செவிய கஞ்சம் நிகர், சீறடியள் ஆகி,
அம் சொல் இள மஞ்ஞை என, அன்னம் என, மின்னும்
வஞ்சி என, நஞ்சம் என, வஞ்ச மகள் வந்தாள்.***

என்ற கம்பராமாயண மூலப்பாடலுடன் சூர்ப்பணகையின் அறிமுகம் நிகழ்கிறது.

அதில் வரும் ‘வஞ்ச மகள்’ என்ற சொல்லினைச் சுட்டிக்காட் டிச் சூர்ப்பணகை இந்தச் சமூகத்தினை நோக்கிக் கேள்வி களை முன்வைக்கின்றாள். தன் பார்வையில் கதையைச் சொல்கிறாள். இராமன் மீதான புனித விம்பத்தினைக் கேள் விக்கு உள்ளாக்குகின்றாள்.

‘நானா வஞ்ச மகள்?’ எனக் கேட்கிறாள்,

‘இராமனிடம் காமம் கொண்டது நீதானே..!
முறைதவறி அவனிடம் சென்றவள் நீதானே!’ என்கிறது பொதுக்குரல்.

***‘மெல் உருவே மை அழகே
அவள் அழகிற்கும் அவதி உண்டோ’***

‘என என் அழகில் மயங்கி உருகியது யார்? இவற்றையெல் லாம் நீங்கள் கவனிக்கத் தவறியதன் காரணம் என்ன எதைக் காக்க? எதை மறைக்க? எதை உயர்த்த? இன்னும் வெளிச் சம் பட வேண்டிய இருட்டுகளை நேரே சொல்கிறேன்’





எனவாகப் பொதுக்குரலுக்கும் சூர்ப்பணகைக்குமிடையிலான உரையாடல், விவாதம், கதையாடல், நிகழ்த்திக்காட்டலாக நகர்த்தப்படுகின்றது.

இராமன் சூர்ப்பணகையின் அழகில் மயங்கினான் என்பதற்கு ரிய குறிப்புகள் கம்பனின் இராமாயணத்தில் உள்ளன.

அவள் தன் ஆசையை வெளிப்படுத்திய போது

***‘நின்னோடு உடன்பிறந்தார் தருவரெனில்!
சரி என்பரெனில், கொள்வென்’***

எனச் சொன்னது இராமன். அது ஒரு வித சம்மதம்.

பின்னர் இலட்சுமணனும் சீதையும் வரும்போது அவளை அங் கிருந்து நகருமாறு வேண்டிக்கொள்கின்றான்.

இப்படியிருக்கத் தன்னை வஞ்ச மகள், அரக்கி, காமப்பேய் என்று விளிப்பதும், தன் அழகில் மயங்கிய இராமனை ஏகபத்

தினி விரதன் என்று விளிப்பதும் எந்த வகையில் நியாயம் என்பது அவளது கேள்வி. தன் காதலை வெளிப்படுத்துவது, தன் உணர்வு சார்ந்த உரிமை, மறுப்பதும் தன்னை நிராகரிப்பதுவும் இராமனது உரிமை. அதை விடுத்து பழிசுமத்துவதும் மூக்கையும் மார்பையும் அறுப்பது மனிதமற்ற வன்கொடுமை என்பது அவளது வாதம்.

## வெளிப்பாட்டு உத்தி:

சூர்ப்பணகை பாத்திரத்திற்கு இரண்டு வெளிப்பாட்டு நிலைகள் உத்திபூர்வமாகக் கையாளப்படுகின்றன. ஒன்று அந்தப் பாத்திரமாக கதையிற் தொடர்புபட்ட ஏனைய பாத்திரங்களான இராமன், சீதை, இலட்சுமணன், இராவணன் ஆகியோரோடு தொடர்புபட்ட காட்சிகளில் ஊடாடுவதும் உரையாடுவ





தும். மற்றையது பொதுக்குரலோடு ஊடாடுவதோடு, தன் கோணத்தில் கதையைச் சொல்லுவது.

ஓரிடத்தில் சூர்ப்பணகை பொதுக்குரலை நோக்கிச் இப்படிச் சொல்கிறாள்: 'நீங்கள் எல்லாம் யாரோ சொன்னதை திருப்பிச் சொல்பவர்கள்தானே'

பகுப்பாய்வுப் பார்வை, கேள்விகள், விமர்சனங்களற்று பெரும்பான்மை சொல்வதை அப்படியே விழுங்குகின்ற தன்மை மீதான விமர்சனம் இது. அத்துடன் ஆழப்பதிந்த கருத்துகள், கதைகளின் மறுபக்கத்தைப் பற்றிச் சிந்திக்காத சமூகத்தின் மீதான எதிர்வினையாகவும் இந்த உரையாடலை அர்த்தப்படுத்தலாம்.

## சமகாலப் பிரதிபலிப்பு:

அரங்கப் படைப்புகள் மட்டுமல்ல, எந்தவொரு படைப்பு வடிவமாயினும் உரையாடலுக்கு உட்படும் விடயங்களில் ஒன்று அதன் சமகாலப் பிரதிபலிப்பு. கவிதாவின் 'சூர்ப்பணகை' நடன நாடகத்தின் படைப்பாக்க அணுகுமுறை எத்தகையது? பெண்கள் மீதான பார்வையையும் அணுகுமுறையையும், எதிர்பார்ப்புகளையும் சமூகம் எவ்வாறு கட்டமைத்துப் பேணி வருகின்றது என்பதன் பிரதிபலிப்பினை இராமாயணம் போன்ற இதிகாச இலக்கியங்களை முன்வைத்தும் சமகாலத்தில் பேசமுடியும் என்ற எண்ணத்திற்கு வடிவம் கொடுக்கின்ற படைப்பாகவும் இதனை அணுக முடியும்.

நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து சமகாலம் வரை நீடித்து நிலைபெற்றுவிட்ட சமூக மனநிலையினைப் பிரதிபலித்தது. அதனூடாக இந்தப் படைப்பு சமகாலத்திலும் நிலவுகின்ற சமூகத்தின் மனநிலைகள் சார்ந்தும் கட்டமைக்கப்பட்ட கருத்தியற் படிமங்கள் சார்ந்தும் மூன்று அம்சங்களைப் பிரதிபலித்தது:

## பாதிக்கப்பட்ட பெண்ணைக் குற்றவாளியாக்குதல்:

தன் உடல் மீது நிகழ்த்தப்பட்ட வன்கொடுமையை இராவணனிடம் சூர்ப்பணகை முறையிடும் காட்சியில்,

'.... உன் மூக்கும், காதும், முலையும் வாளால் போக்கியவர் மானிடரா என்றாய், பொய் தவிர், பயத்தை ஒழி, நீ புரிந்த குற்றம் என்ன' என்கிறான் இராவணன்,

அதற்கு சூர்ப்பணகையின் பதில் இப்படியாக அமைகின்றது:

'நான் இரத்தம் வழிய நிற்கின்றேன். நீ என்னிடம் என்ன நடந்தது என்றல்லவா கேட்டிருக்க வேண்டும். நீயோ, நான் செய்த தவறென்ன? என்கிறாய். எங்ஙனம் பாதிக்கப்பட்ட என்னைக் குற்றவாளி என்றனை.

... நான்தான் குற்றவாளி என்று எப்படி முடிவு செய்தாய்? அண்ணா நீ அண்ணாவாகவும் இருக்காதே, ஒரு ஆணாகவும் இருக்காதே! சக மனிதனாக இரு' என இராவணன் மீதும் சீற்றம் கொள்கிறாள் சூர்ப்பணகை.

பெரும்பாலான வாழ்வியற் சூழ்நிலைகளில் பெண்களே பாதிப்பிற்கு உள்ளாக்கப்படுவதும் அந்தப் பாதிப்பிற்கான காரணமாக அவர்கள் மீதே குற்றம் சுமத்தவும்படுகின்றது. இது தமிழ்ச் சூழலில் மட்டுமல்லாது அளவுகளில் வேறுபட்டாலும் ஒரு உலகளாவிய நிலையாக உள்ளது. அதன் பிரதிபலிப்பாக இக்காட்சியின் உருவகிப்பினைப் புரிந்துகொள்ளலாம்.

## சாதிப் பாகுபாடு:

அழகி!
நீ அந்தணர் குலத்தில் வந்தாய்
நான் அரசர் குலத்தினில் வந்தேன்
வர்ண பேதம் பார்க்காத வாழ்வு நெறி
உகந்ததல்ல பெண்ணே!

இவை சூர்ப்பணகையை நோக்கி இராமன் சொல்லும் வார்த்தைகள்.

சாதியப் பாகுபாடு. காதல், திருமணம் என்று வரும்போது இன்றளவும் தமிழ்ச் சமூகத்திற் சாதிய மனநிலை தலைநீட்டியபடியே உள்ளது. புலம்பெயர் நாடுகளிற் பிறந்து வளரும் தம் பிள்ளைகளின் காதலிலும் திருமணத்திலும் சாதியை ஒரு தடைக்கல்லாக்கும் மனநிலையிலிருந்து தமிழ் மூத்த தலைமுறையினர் முற்றாக வெளிவரவில்லை என்பதை மறைக்

கவோ மறுக்கவோ முடியாது.

### பெண் மீதான நடத்தைப் படுகொலை:

’ஒரு பெண்ணாக முன்வந்து தன் காதலைச் சொன்னால்... அவள் காமவயப்பட்டவளா? தன் காதல் முறிந்ததை எண்ணித் துயருற்றால்... அவள் அரக்கியா? அவைதான் உங்கள் முன்மாதிரிக் குணங்களா?’

என்று பொதுச் சமூகத்தை நோக்கி ஒலிக்கும் சூர்ப்பணகையின் குரலில் தெறிப்பது சமகாலத்திற்கும் பொருத்தமானது. பெண் தனது காதலையும் காம உணர்வையும் வெளிப்படுத்துவதை ஒழுக்கக்கேடாகச் சித்தரிக்கின்றதும் தருணங்களில் நடத்தைப்படுகொலையை ஒத்த செயல்களை அவர்கள் மீது பிரயோகிக்கின்ற போக்கு இன்றும் நிகழ்கின்றவையே.

பெண் தனக்காகத் தான் பேசுதல் என்பது இப்படைப்பின் ஒற்றைவரிப் பேசுபொருள் எனச் சொல்லலாம். அடிப்படையில் ஒரு பெண் தனக்காகப் பேசுவதென்பது அனைத்துப் பெண்களுக்காகவும் பேசுவதைக் குறிக்கின்றது. நடன நாடகம் முழுவதும் அதுவே இழையாகப் பின்னப்பட்டிருந்தது. இறுதிக் காட்சியும் உச்சமாக அதனையே வெளிப்படுத்தியது.

### மேடைப் பிரதி:

பொதுவாகவே பரந்துபட்ட மக்கள் மத்தியில் அறியப்பட்ட இலக்கியப் படைப்புகளும் அவற்றின் கிளைக்கதைகள் மற்றும் பாத்திரங்களும் பல பரிமாணங்களைக் கொண்டவை. அவற்றிலிருந்து சமகாலப் பிரதிபலிப்பினைக் கொண்ட புதிய படைப்புகளுக்கான ஊற்றினையும் கண்டடைய முடியும், கேள்விகளை எழுப்பவும் முடியும்.

இதற்குரிய எழுத்துருவில், பேசுபொருளுக்கு அமைய இராமாயணத்திலிருந்து கம்பனின் மூலச் செய்யுள்கள் அந்தந்தக் காட்சிச் சித்தரிப்புகளுக்கேற்ப எடுத்துக் கையாளப்பட்டுள்ளன. பார்வையாளர்களின் புரிதலுக்காக தேவையான பகுதிகள், அதாவது ஆங்காங்கே சொற்களும் படிமங்களும் இலகுபடுத்தப்பட்டுள்ளன. இராவணன் ஆட்சியின் மேன்மை, இராவணன் அறிமுகம் ஆகிய இரண்டு பாடல்களையும் இராமாயணக் குறிப்புகளை முன்வைத்துப் புதிதாகக் கவிதா எழுதியுள்ளார். மற்றும் பெண்களின் எழுகை குறித்த இறுதிக் காட்சியின் இரண்டு பாடல்களும் கவிதாவினாற் புதிதாக எழுதப்பட்டுள்ளன. சூர்ப்பணகை இராமன் மீது மோகம் கொள்வதைப் பிரதிபலிக்க அருணாசலக் கவிராயர் எழுதி’ இராம நாடகத்தில்’ இடம்பெற்ற பாடலொன்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

### பாத்திரங்கள்:

சூர்ப்பணகையை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு, இராமன், இராவணன், சீதை, இலட்சுமணன் ஆகிய பாத்திரங்கள் இந்தப் படைப்பில் வலம் வருகின்றன. இப் பாத்திரங்களும் அவற்றோடு தொடர்புடைய கதைகள், காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருந்தன. சூர்ப்பணகையின் பார்வையில் நகரும் இப்படைப்பினை சமகாலத்தின் பெண்ணிய நோக்குநிலை என்று சொல்வதும் பொருத்தமானது. சூர்ப்பணகையின் நியாயங்களையும் ஆதங்கங்களையும் பேசுவதனூடாக, இராமனின் தவறுகள் மீது கேள்வி எழுப்பப்படுகின்றது. இராவணன் தரப்பு நியாயங்களுக்குரிய வெளியினையும் கொண்டிருக்கின்றது.

ஒரு படைப்பிற்கு, அது நாடகம், நடனம், திரைப்படம், அரங்க







ஆற்றுகை என எந்தவொரு நிகழ்த்து கலைக்கும் (Performance art) பாத்திரத் தேர்வு முக்கியமான அம்சம். அதாவது தோற்றம் உட்பட பாத்திரங்களின் இயல்பை உள்வாங்கி உடல் மொழியில் அப்பாத்திரங்களை ஆற்றுகை செய்ய வேண்டும். பார்வையாளர்கள் ஏற்கும் வகையிற் பாத்திரங்க




ளைப் பார்வையாளர் மனதிற் கொண்டுசென்று (Establish) நிறுத்தவேண்டும். பாத்திரத்தெரிவுக்கு அடுத்தபடியாக ஆடை வடிவமைப்பு, இசை உருவாக்கம், ஒளி வடிவமைப்பு அரங்க நிர்மாணம், அரங்கப் பொருள் என்பனவற்றின் வகிபாகம் இன்றியமையாதது.

இந்நடன நாடகத்திற்கான முதன்மைப் பாத்திரங்கள் பொருத்தமான தெரிவு. குழு நடனக் காட்சிகளில் ஆற்றுகை செய்த நடனக் கலைஞர்களிடமும் நேர்த்தியான வெளிப்பாட்டினைக் காணமுடிந்தது. காதல், வீரம், காமம், சோகம், சீற்றம், எழுகை எனவாகப் பல்வேறு உணர்வுகளின் கடத்துகை நிகழ்ந்தது.

இராவணன் வேடமேற்றவர் மிகத் திறமையான இளம் பெண் கலைஞர் ரம்யா அருட்செல்வம். பொதுவாகவே நடன ஆற்றுகைகளில் அவரது உடல்மொழியும் மெய்ப்பாட்டு வெளிப்படுத்தல்களும் அபாரமானவை. மாபெரும் மன்னனாகச் சித்தரிக்கப்படும் இராவணனின் நடையிலிருந்து கம்பீரத் தோற்றத்தை ஒரு பெண் தனது உடல்மொழியில் வெளிப்படுத்துவதும் அதனைப் பார்வையாளர் மனதிற் பதிய வைப்பதும் ஆற்றுகையில் தனித்திறன் வாய்ந்த கலைஞர்களாலேயே சாத்தியப்படும். ரம்யா அதனைச் சாத்தியப்படுத்தினார்.

இராவணன் பாத்திரத்தின் கம்பீரம், மிடுக்கு, வசீகரத்திகையும் பார்வையாளர் மனதில் பதியவைத்தார் என்றால் மிகையல்ல. சூர்ப்பணகை பாத்திரத்தினை ஆற்றுகை செய்தவர் துசாந்தி தவேந்திரன். முதன்மைப் பாத்திரம் என்பதால் நடன நாடகம் முழவதும் அவரது பிரசன்னம் இருக்கின்ற கதை இது. நளினம், காதல், காமம், சீற்றம், சோகம், பேரவலம் எனவாகப் பல்வேறு உணர்வுகளையும் நுணக்கமாக வெளிப்படுத்தினார். இராமன் பாத்திரத்தில் வாரணன் வரதலிங்கம், இலட்சுமணனாக தீபிகா மகேசன், சீதையாக சாதனா கஜேந்திரன் ஆகியோரும் அழகாகவும் உணர்வுபூர்வமாகவும் அப்பாத்திரங்களுக்கு உயிர் கொடுத்தனர், அசைவுகளையும் பாவங்களையும் வெளிப்படுத்தினர்.

## ஒளி வடிவமைப்பு – இசை – அரங்க நிர்மாணம்:

பிரமாண்ட மேடை அமைப்பு, அரங்கப் பொருட்கள், இசை, ஒளி அமைப்பு, ஆடை வடிவமைப்பு எனவாகப் பெரும் பொருட்செலவில் உருவாக்கப்பட்ட படைப்பு. நடனக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், பாடகர்கள், ஆடை வடிவமைப்பு, அரங்கப்பொருளாக்கம், ஒளியமைப்பு உட்பட்ட அறுபதிற்கும் மேற்பட்ட பல்துறைக் கலைஞர்களின் பங்களிப்பும் உழைப்பும் இருக்கின்றது.

நிகழ்த்து கலைகளுக்கு ஒளியமைப்பின் பங்கு இன்றியமையாதது. ஒளியமைப்பு என்பது வெறுமனே பாத்திரங்களையும் காட்சிகளையும் துல்லியமாகக் காட்டுவதற்கானதன்று. பொருத்தமான ஒளியைப் பொருத்தமான அளவிலும் நிறங்களிலும் மேடையிற் கொண்டுவரவேண்டும். அதற்கு ஒளி பற்றிய நுண்ணுணர்வு அவசியமானது. காட்சியினதும் பாத்திரங்களினதும் மனநிலையை உணர்த்தவும் கடத்தவும் வேண்டும். ஒளி வடிமைப்பு விடயத்திலும் கவிதா தனிக்கவனம் செலுத்துபவர். இந்நடன நாடகத்திலும் அது பிரதிபலித்தது.

இசையமைப்பாளர் அஸ்வமித்ராவின் பங்களிப்பும் அளப்பெரியது. பாடல்களுக்கான இசையோடு உரையாடல்கள், பாடல்களற்ற நிகழ்த்துகைக் காட்சிகளுக்கு உயிர் கொடுப்பதிலும் பின்னணி இசைக் கோர்வைகள், இசைத்துணுக்குகளின் பங்கு இருக்கின்றது. அஸ்வமித்ரா திரைப்பட இசையமைப்பாளர் என்பதால் பாடல்களைத் தாண்டி, காட்சிகளுக்கு உயிரூட்டும் பின்னணி இசையிலும் வல்லவர். பிரதியினை உரிய முறையில் உள்வாங்கி முழுமையான ஈடுபாட்டோடு பங்களிப்பவர்.

ஒரு படைப்பினைக் கலைத்துவ அழகியலுடனும் நேர்த்தியுடனும் கருத்து சார்ந்த நிலையிலும் உயர்ந்த தரத்திற் கொடுக்கவேண்டுமென்றால் அதற்கான கலைப்பார்வையும் சமூக - உலகப் பார்வையும் மெனக்கெடலும் உழைப்பும் கோரி நிற்கின்றன. கவிதாவின் படைப்புகளில் அவற்றைத் தனித்துவமாகக் காணமுடியும். சூர்ப்பணகையும் அந்த வரிசையில் இன்னுமோர் பரிமாணத்தைக் கொண்டிருந்தது.

**ஒளிப்படங்கள்: ரமேஸ் சிவராஜா**



rooban.s@thaiveedu.com




இசைக் கலைஞர்கள் மற்றும் பாடகர்களை கௌரவிக்கும் வகையில் உலக இசை நாள் கொண்டாடப்படுகிறது. ஆண்டு தோறும் ஜூன் மாதம் 21-ம் திகதியன்று கொண்டாடப்படும் இந்நாள் சார்ந்த நிகழ்வுகள், 120 நாடுகளில் இடம்பெறுவதா கச் சொல்லப்படுகின்றது. இசைக் கலைஞர்கள் இந்த நாளில் பல இடங்களில் திரளாகக்கூடி இசைத்து மகிழ்வர். மகிழ்விப் பர். தெருக்கள், பூங்காக்கள், அரங்குகள் எனப் பல இடங்க ளிலும் இசை கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கும்.

பிரான்ஸ்தான் உலக இசை நாளின் தாய்வீடு! 1980-களில் பிரான்ஸ்சில் இசை நாள் கொண்டாட்டங்கள் தொடங்கின. ஆனால், அதற்கு முன்பாகவே அமெரிக்க இசைக் கலைஞர் ஜோயல்கோஹன் 1976-லேயே கோடை கால இசை நாள் கொண்டாட்டங்களுக்கான முன்னோடியாக இருந்தார். வானில் சூரியனின் இருப்பு அதிகமாக உள்ள பருவகாலத் தொடக் கத்தைக் கொண்டாடுவதற்காக, ஒருநாள் முழுவதும் இசை நிகழ்ச்சியை நடத்தும் திட்டத்தை அவரே முன்மொழிந்தார். அதிலிருந்து இசைதினம் பிறந்தது என்று சிலர் சொல்கின்ற னர்.

1981-ம் ஆண்டு ஒக்டரோபரில் பிரான்சின் கலாசார அமைச் சைச் சேர்ந்த ஜாக்லேங்க் என்பவர், இசை மற்றும் நடனத்து றைக்கான இயக்குநராக மாரிஸ்ஃபிளெர்ட் என்பவரை நியமித் தார். இந்த இருவரும் இணைந்து வீடுகளிலும், தனிப்பட்ட அரங்குகளிலும் மட்டுமே நிகழ்ந்துகொண்டிருந்த இசை நிகழ்ச்சிகளை பரவலாக்கி, எல்லோருக்குமான இசையை அளித்தார்கள். பிரான்சில் ஒரு கணக்கெடுப்பு எடுத்தார் மாரிஸ்ஃபிளெர்ட். அதில் பிரான்சின் குடிமக்களில் இரண்டு பேரில் ஒருவருக்கு ஏதேனும் ஓர் இசைக் கருவியை வாசிப்ப தற்கோ, பாடுவதற்கோ தெரிந்திருந்தமை கண்டறியப்பட்டது. அதாவது பிரான்சின் ஒவ்வொரு வீட்டிலும் இசை இருந்தது. ஆனால், பிரான்சின் தெருக்களில் எங்குமே அப்போது இசை ஒலிக்கவே இல்லை!

இந்த நிலையை மாற்றி, பிரான்ஸின் தெருவெங்கும் இசையை ஒலிக்க வைக்கும் நாளாக ஜூன் மாதம் 21-ம் திகதியை அறி வித்தார். இசையை மேம்படுத்துவதை உலக இசை நாள் இரு வழிகளில் புரிகின்றது. முதலாவது, 'இசையை உருவாக்கு' என்ற முழக்கத்தின் கீழ் அமெச்சூர் மற்றும் தொழில்முறை இசைக் கலைஞர்கள் தெருக்களில் ஆற்றுகைகளை நிகழ்த் துவதற்கு ஊக்குவிக்கப் படுகிறார்கள். இரண்டாவது, இத்திட் டத்தின் கீழ், பல இலவச இசை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப் படுகின்றன. இதன்மூலம் அனைத்துவகை இசைகளும் பொதுமக்களை சென்றடைகின்றன.

பிரான்சின் தொழில்முறை இசைக் கலைஞர்களையும் இசை யில் ஆர்வத்துடன் இருக்கும் இளம் கலைஞர்களையும் ஒன்றி ணைத்து இசை நிகழ்ச்சிகளை நடத்தினார் மாரிஸ்ஃபிளெர்ட்.




இதைத் தொடர்ந்து 1982-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ம் திகதி யன்று பிரான்சின் தெற்கு ஹெமிஸ்ஃபியர் நகரத்தில் முதலா வது இசை நாள் கொண்டாட்டங்கள் நடந்தன. அவை இரவுப் பொழுது வரை நீடித்தன. பின்னாளில் இத்திகதி பிரான்சின் இசைசார் தேசிய நாளாகவே அறிவிக்கப்பட்டது.

பிரான்சில் தொடங்கிய இந்த இசையலை, வெகு சீக்கரமா கவே நாடுகள் எங்கும் பரவியது. ஏறக்குறைய 120 நாடுகளில் 700 நகரங்களில் இன்று உலக இசை நாள் கொண்டாட்டங் கள் இடம்பெறுகின்றன. அதில் இந்தியா, ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா, அவுஸ்ரேலியா, பெரு, பிரேசில், ஈக்குவடோர், மெக்- சிக்கோ, கனடா, ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து உள் ளிட்ட நாடுகளும் அடங்குகின்றன.

உலக இசை தினம் சாதாரண நாள் அல்ல. நம் ஒவ்வொருவ



ரின் வாழ்க்கையிலும் இசை வகிக்கும் முக்கிய பங்கை வலியுறுத்துகிறது. அதற்கு நாம் எவ்வளவு நன்றிக்கடன் பட்டுள்ளோம் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. இசைக் கலைஞர்கள் நம் வாழ்வில் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை நினைத்துப் பார்க்கவும் இந்நாள் நமக்கு அவசியமாகின்றது. இசையை இளைய தலைமுறையினருக்கான கலை வடிவமாக மாற்றுவதும் உலக இசை தினத்தின் நோக்கத்திலொன்றாகும்.

இசையால் வசமாகா இதயம் எது ? நாடு, மொழிக்கு அப்பாற்பட்டது இசை. 'இசையை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது' என இசை குறித்து சொல்கின்றார் மறைந்த பிரெஞ்சுக் கவிஞர் விக்டர்ஹியூகோ. பழங்கால இசை, இடைக்கால இசை, ஐரோப்பிய செவ்வியல் இசை, கற்பனை இசை மற்றும் நவீன இசை என இசையின் பரிமாணம் பல்நிலைப்பட்டதாக அமைந்துள்ளது. உலகில் ஒவ்வொரு நாடும் தனது கலாசாரத்துக்கு ஏற்றவாறு பலவகையான இசைகளை இசைக்கின்றன. இந்தியாவில் பெரும்பாலும் இருவிதமான இசைகள்தான் பின்பற்றப்படுகின்றன.

இசை வெளிப்பாட்டுக்கும் சமூகப்பொறுப்பு உண்டு. இசையின் பன்முகத்தன்மையை வளர்ப்பது அதை எளிய மக்களிடமும் எடுத்துச் செல்வது என்ற பல்வேறு முக்கியமான கருப்பொருள்கள் இலக்குகளாகக் கொள்ளப்படுகின்றன. 2022-ம் ஆண்டில் இத்தினத்திற்கான கருத்துரு 'இணைப்புகளில் இசை' என்பதாக அமைந்திருந்தது. 2023-ம் ஆண்டுக்கான கருப்பொருளாக 'MUSIC ON THE INTERSECTIONS' என்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சமூகத்தின் கடைக்கோடி பிரிவுகளுக்கும் இசை சென்று சேரவேண்டும் என்பதே இதன் மையப் பொருளாகும்.

இசை என்பது இந்தப் பூமிப்பந்தின் பொதுவுடைமைச் சொத்து. அது உலக வரலாற்றில் தொன்மையானதும் மிகச் சிறந்த பாரம்பரியத்தையும் கொண்டது. மேலும் அது ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட அழகுபடுத்தப்பட்ட ஒலி வடிவம். தனிமையை ஆறுதல்படுத்தக்கூடிய கடவுச்சொல் இசைதான். இன்றைய இசையின் நிலை தொழில்நுட்பத்தைச் சார்ந்து புதிய பாதையில் பயணித்தாலும் அது மனித வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு ஏற்றவகையிலும் இருக்கவேண்டும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.



natkunalingam@thaiveedu.com



# ரோமில் தொலைந்த நிலவு

– ரதன்

**கோ**மோ ஏரியை தரிசித்துவிட்டு மீண்டும் மில்லனுக்கு செல்வதற்காக புகையிரத நிலையத்துக்கு வந்த போது, நாங்கள் தவறான புகையிரத நிலையத்தை அடைந்து விட்டோம் என்பது உறுதியானது. இத்தாலியில் பல புகையிரத பாதைகள் உள்ளன. பல நிறுவனங்களின் புகையிரதங்கள் இங்கு செல்கின்றன. நீங்கள் எந்த புகையிரத நிறுவனத்தின் ரிக்கெட்டை வாங்கினீர்களோ அதிலேயே பயணிக்க வேண்டும். எங்களது முகத்தில் தெரிந்த ஏமாற்றத்தை அவதானித்த ஒரு பயணி, எங்களது ரிக்கெட்டைப் பார்த்துவிட்டு தான் எமக்கு உதவுவதாக கூறினார். அவரைத் தொடர்ந்து பத்து நிமிடங்கள் நடந்து வேறு ஒரு புகையிரத நிலையத்தை அடைந்தோம். பின்னர் அவர் எம்முடன் மில்லன் வரை பயணித்தார். அந்தப்பயணி நைஜீரிய நாட்டைச் சேர்ந்தவர். இத்தாலிக்கு அகதியாக புலம் பெயர்ந்து லேக் கோமோவில் வேலை பார்க்கின்றார்.

மில்லனிலிருந்து 45 நிமிட நேரம் பயணித்தால் கோமோ ஏரியை அடையலாம். புகையிரத நிலையத்திலிருந்து பத்து நிமிட நடை தூரத்தில் உள்ளது கோமோ ஏரி. ரோறன்ரோவில் உள்ள ஒரு தளபாடக் கடையில் சந்தித்த மத்திய கிழக்கு நாட்டை பிறப்பிடமாகக் கொண்டவர், கட்டாயம் பார்க்க வேண்டிய இடங்களில் கோமோ லேக்கும் ஒன்று என்று கூறியிருந்தார். லேக் கோமோ (Lake Como)-வின் அழகை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. மறைந்த நண்பர் கருணா ஒரு தடவை பான்ஃ (Banff) நகரத்துக்குச் சென்று விட்டு வந்து அதன் அழகை புகைப்படங்களாக காட்டினார். பான்ப் கனடாவில் உள்ளது. கல்கரியிலிருந்து 90 நிமிட நேர பயணத்தில் சென்றடையலாம். போகுமிடமெல்லாம் ஏரிகள் உள்ளது. அங்கு நின்று தரிசித்துச் செல்லலாம். எழுத்தாளர் அ. கந்தசாமி பான்ப் பிரதேசத்துக்குச் சென்று விட்டு வந்து கனடாவில் அவசியம் பார்க்க வேண்டிய இடமெனக் கூறியிருந்தார். உலகின் 20 வீதமான நன்னீர் கனடாவில் உண்டு. கல்கறியைச் சுற்றியுள்ள பிரதேசங்களைப் பார்க்கும் பொழுது இது உறுதியாகின்றது. கனடாவில் தடக்கி விழுந்தால் ஒரு ஏரியில் தான் விழுவோம் என்பது உண்மை. கனடா போன்றே இத்தாலியும் அதிகளவு ஏரிகளைக் கொண்டுள்ளது.

லேக் கோமோவைச் சுற்றி பல பிரதான இடங்கள் அமைந்துள்ளன. இவை புராதனமானவை. வெரோனா (Verona) நகரம் அவசியம் பார்க்க வேண்டிய இடம். 14-ம் நூற்றாண்டு தேவாலயம் கோமோ ஏரிக்கு அருகில் உள்ளது. கோமோ ஏரியைச் சுற்றி பல கிராமங்கள் உள்ளன. முன்கூட்டியே திட்டமிட்டு அங்கு செல்லும் படகுகளுக்கு கட்டணம் செலுத்தி பதிவு செய்தால் ஒரு வித்தியசமான அனுபவத்தைப் பெற



லாம். எங்களது பயணம் தற்செயலானது. ஆனாலும் தரிசனங்களைப் பெற்றோம்.

கோமோவிலிருந்து மில்லனுக்கு மீண்டும் வந்த போது இருட்டிவிட்டது. மில்லன் நகரம் இத்தாலியின் வணிக நகரம். அங்குள்ள கல்லேரியா விக்டோரியா எமானுலே (Galleria Vittorio Emanuele) அவசியம் பார்க்க வேண்டிய இடம். புராதானமான இக்கட்டடம் இத்தாலியின் மிகச் சிறந்த கட்டட வடிவமைப்பாளர்களாலும், ஓவியர்களாலும் அமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது பல மிகப் பெரிய நிறுவனங்களின் கடைகளும் உள்ளது. பீட்ஸா, டெல், டோமினோஸ் (Piazza, del, Dominos) மில்லனில் பார்க்க வேண்டிய தேவாலயம். மில்லனில் பல சிங்கள மக்களைச் சந்திக்கக்கூடியதாகவிருந்தது. அவர்கள் 80-

களில் ஹோட்டேல் நிர்வாக படிப்பிற்காக மில்லனுக்கு வந்து பின்னர் அங்கே தங்கிவிட்டனர். பலர் ஹோட்டேல்களில் பங்குதாரராகவும் ஹோட்டேல்களின் சொந்தக்காரர்களாகவும் உள்ளனர். மில்லனுக்குச் செல்பவர்கள் அவசியம் முன்கூட்டியே எங்கு தங்குவது என்பதனை உறுதிசெய்து விட்டுச் செல்லவும். மில்லனுக்கு அருகில் சுவிஸ்லாந்து உள்ளது. மில்லனிலிம், கோமோ ஏரியிலும் பல ஈழத் தமிழர்களைச் சந்தித்தோம். அவர்கள் சுவிஸ்லாந்தில் வாழ்பவர்கள்.

நாம் இத்தாலிக்குச் சென்றமை ஒரு கடைசி நேர முடிவாகவேயிருந்தது. எனினும் எங்கு செல்வது என்பது ஓரளவிற்கு தீர்மானமாகவிருந்தது. இத்தாலியின் தலைநகரான ரோமில் முதல் நாள் தங்கும் விடுதி மட்டும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அங்கு சென்ற பின்னரே மிகுதி பயணம் திட்டமிடப்பட்டது. ஆனால் இது தவறானது. எம்முடன் பயணித்த மற்றொரு தமிழ்க் குடும்பம் ரோமில் ஒரு விடுதியை முன்பதிவு செய்திருந்தனர். ஆனால் அவர்கள் தவறுதலாக அமெரிக்காவில் ஜோர்ஜியா மாநிலத்தில் உள்ள ரோம் நகர கொலிடே இன்னில் பதிவு செய்துவிட்டனர். ரோம் சர்வதேச விமான நிலை



யத்திலிருந்து ரோம் நகர மத்திய பகுதிக்குச் செல்வதற்கு ஒரு புகையிரதம் உண்டு. அங்கு சென்ற பின்னரே அவர்களுக்கு தாங்கள் விட்ட தற்செயலான தவறு தெரிந்தது. எனினும் அங்கு நின்ற ஒரு வாடகை வண்டி ஓட்டுனர் அவர்கள் அங்கு தங்குவதற்கு ஒரு விடுதியை ஏற்பாடு செய்து கொடுத்தார். இதற்காக அவர் எந்தவித கட்டணமும் அவர்களிடம் பெறவில்லை. பயணங்களின் போது இவ்வாறான பல நல்ல மனிதர்களைச் சந்தித்துக் கொண்டே செல்கின்றோம். இவையே பயணத்துக்கு உற்சாகமூட்டுகின்றன.

ஏழாம் வகுப்பில் சமூகக் கல்வி பயின்ற போது அமலசீலன் மாஸ்ரர் உலகின் முதல் தோன்றிய நாகரீகங்களை கற்பித்தார். மிகப் பெரிய சாம்ராஜ்யங்கள் பற்றியும் கற்பித்தார். நாம் வாழ்ந்த இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களும் ஒரு பழமை வாய்ந்த சரித்திரத்தைக் கொண்டது. அப்போது தெரியாத விடயங்கள் புலம் பெயர்ந்த பின்னரே தெரிகின்றது. அமலசீலன் மாஸ்ரர் ரோமேனியர்களின் வீரத்தைப் பற்றியும் கட்டடக்கலை பற்றியும் விபரித்திருந்தார். அந்த ரோமேனியர்கள் எங்கே? ஏன் இத்தாலி என பெயர் மாறியது போன்ற கேள்விகள் எழுந்தாலும், ரோமைப் பார்த்த போது உலகின் மிகப் பழமைவாய்ந்த ஒரு சரித்திரப்புகழ் கொண்ட நகரமாகவேயிருந்தது. ரோமில் வசிப்பவர்கள் தங்களை இத்தாலியர்களாக கூறுவதைவிட ரோமன்கள் (Romans) என்றே கூறுகின்றார்கள்.

ரோமுக்குச் சென்ற முதல் நாள், ரோமின் நிலவைப் பார்த்தேன். மிகப் பெரியதாகவிருந்தது. ரொரன்ரோவில் கூட இவ்வாறு தெரியவில்லை. இத்தாலிக்கு செல்வதற்கு முன்னர், இதய நோய்ப் பயத்தில் நடை பயிற்சிகளை மேற்கொண்டமை எமக்கு பலவழிகளில் உதவியது. ரோம் போன்ற நகரத்தில் பார்ப்பதற்கு பல சரித்திர புகழ் பெற்ற இடங்கள் உண்டு. எல்லாவற்றையும் ஒரு மூன்று நாட்களுள் பார்ப்பது என்பது முடியாது. பல சமயங்களில் பல கிலோ மீற்றர்கள் நடக்க வேண்டும். நாங்கள் தங்கியிருந்த விடுதியில் Hop-On, Hop-Off Bus Ig-ஐப் பற்றிக் கூறினார்கள். ஒருவருக்கு 20 யூரோ, இரண்டு நாட்களுக்கு. எங்கும் இறங்கி, எங்கும் மீண்டும் பயணிக்கலாம். எமது பேரூந்து ஓட்டுனர் மூன்று நாட்களுக்கு 20 யூரோவாக மாற்றித்தந்தார்.

ரோமில் வற்றிக்கான் நாடு உள்ளது. அங்குள்ள பீட்டர் பசில்கா (St. Peter's Basilica) மிகவும் புனிதமான, உலகின் மிக முக்கியமான தேவாலயம். வற்றிக்கான் அருங்காட்சியகம் அவசியம் பார்க்கவேண்டிய ஓர் அருங்காட்சியகம். தேவாலயத்துக்கு அனுமதி இலவசம். ஆனால் சுமார் இரண்டு மணி நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டும். நாங்கள் அங்கு சென்றபோது, பல பங்களாதேசத்தைச் சேர்ந்தவர்கள் அருங்காட்சியகத்துக்கான அனுமதி ரிக்கெட்டை விற்றுக்கொண்டிருந்தார்கள். அருங்காட்சியக அனுமதி பெற்றால் தேவாலயத்துக்கு விரைவாகச் செல்லலாம். ஒருவருக்கு அறுபது யூரோ கொடுத்து அருங்காட்சியகத்தையும் தேவாலயத்தையும் பார்த்தோம். ஞாயிற்றுக் கிழமைகளில் தேவாலயத்துக்குள் செல்லமுடியாது. வற்றிக்கான் நாட்டுப் பிரசைகளுக்குரிய நாள் அது. அன்று போப்பாண்டவரின் தரிசனத்தையும் பெறலாம்.

ரோமில் பார்க்க வேண்டிய இடங்களை முன்கூட்டியே தீர்மானிப்பது நல்லது. Colosseum, Trevi Fountain, Pantheon, Sistine Chapel, Piazza Navona, Spanish Steps, Janiculum Hill, Galleria Doria Pamphil போன்ற பலவற்றைப் பார்க்கலாம்.

ரோமிலிருந்து வெளியேறியபோது விடுதி 12 யூரோவை உல்லாசப் பயணக் கட்டணமாக அறவிட்டது. மிக விரைவில் ரொறன்ரோவிலும் இதனை எதிர்பார்க்கலாம். இத்தாலியின் வெவ்வேறு நகரங்களுக்குச் செல்வதற்கு வாகனத்தில் செல்வதை விட கடுகதி புகையிரதங்கள் இலகுவானவை. ரோமிலிருந்து நாம் புளோரன்ஸ் செல்வதற்கு கடுகதி புகையிரத்திலேயே சென்றோம். நீங்கள் முன் கூட்டியே பதிவு செய்யலாம். அல்லது புகையிரத நிலையத்திலும் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். ItaliaRail, Italo, Trenitalia போன்ற புகையிரதங்கள் செல்கின்றன. இரண்டாவது வகுப்பு மிகச் சிறந்தது. முதலாவது வகுப்பிற்கு சுமார் 7 யுரோ அதிகமாக கொடுக்க வேண்டும். தேநீர், மற்றும் சான்ட்விச் தருவார்கள். புளோரன்ஸ்க்கு 162 மைல்கள். 59 கனடிய டொலர்கள் புகையிரத கட்டணம்.

புளோரன்ஸ்ல் பார்ப்பதற்கு பல இடங்கள் உண்டு. புகையிரத நிலையத்துக்கு அருகில் விடுதியிருந்தால், பார்ப்பதற்கான இடங்கள் சில கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளன. நடையைத் தவிர வேறுவழியில்லை. வாடகை வாகனம் ஒரு மைலுக்கு ஒரு யுரோ அறவிடுவார்கள். சில சமயங்களில் வேறு வழியிருப்பதில்லை. சரித்திரம் பற்றி ஆர்வமுள்ளவர்கள் அவசியம் பார்க்கவேண்டிய இடம் புளோரன்ஸ். கூகிளில் பார்த்தால் பல மேலதிக விடயங்களை அறியலாம். தோற் பொருட்களுக்கு பிரசித்தி பெற்ற இடம். பாற்கட்டிகள், சீஸ்

போன்றனவற்றிற்கும் பிரசித்தி பெற்றது. இங்குள்ள flea market வணிகர்கள் பங்களாதேசத்தைச் சேர்ந்தவர்களாகவிருந் தார்கள்.

புளோரன்ஸ்லிருந்து ஒரு மணி நேர பயணத்தில் சாய்ந்த கோபுரத்தை தரிசிக்கலாம். அங்கு சென்று விட்டு மீண்டும் புளோரன்ஸ் வந்து 255 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வெனிஸ் நகரத்தையடைந்தோம். உலக பூமி வெப்பமடைவ தால் மிக விரைவில் காணாமல் போகும் இடமாக வெனிஸ்ம் உள்ளது. மிதக்கும் நகரம் என வர்ணிக்கப்படும் நகரம் வெனிஸ். 118 சிறு தீவுகளைக் கொண்டது வெனிஸ். 438 பாலங்களைக் கொண்டுள்ளது. 77 கால்வாய்கள் உள்ளது.

வெனிஸில் எம்முடன் ஓவியர் கருணாவும் பயணித்தார். வெனி ஸில் நீங்கள் துலையவேண்டும். துலையாவிட்டால், வெனிசை பார்க்க முடியாது என்று கருணா தெரிவித்திருந்தார். அவ் வாறே நாங்களும் தொலைந்து விட்டோம். பலரிடம் விசாரித் தோம். ஜி.பி.எஸ்-உம் எமக்கு உதவவில்லை. நாங்கள் தங்கி யிருந்த விடுதி வெனிசின் பிரதான புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ளது. அவ்வடையாளம் நாம் விடுதியை அடைய உதவியது. நாம் தொலைந்தமையால் பல நல்ல அழகான இடங்களை பார்க்கக் கூடியதாகவிருந்தது. வெனிசைச் சுற்றி



வர வேறு பல தீவுகளும் உள்ளன. படகுகளில் சென்று அவற் றைப் பார்க்கலாம். வெனிசுலா என்ற பெயர் வெனிசுலா நாட் டிற்கு வந்தமைக்கு வெனிசைப் போன்றுள்ளது என்பதா லேயே வந்தது. மறைந்த நண்பர் கருணா கூறியது போல் வெனிசை முறையாக தரிசிப்பதற்கு தொலைய வேண்டும். அவர் கூறியது அப்போது பெரிதாகப் படவில்லை. தொலைந்த போது அதன் பெறுமதியை உணர்ந்தோம்.



கருணா தான் தரிசித்த இடங்களை எழுத்தில் பதிவு செய்ய வில்லை கோடை வந்து விட்டது. எங்கு செல்வது? என நினைப்பவர்களுக்கு இத்தாலி ஒரு நல்ல இடம். பல சரித்தி ரங்களை அறியலாம். குறிப்பாக அவர்களது பீட்சா, பாஸ்டா போன்றவை இங்குள்ளவற்றை விட வித்தியாசமானவை. பல உணவுகளுடன் வைனும் வழங்கப்படும். வைனுக்கும் சேர்த்தே கட்டணம் அறவிடப்படும். அங்குள்ள காய்கறிச் சந் தைக்கும் செல்வது நல்லது. ரோமில் தரிசித்த மிகப் பெரிய நிலவே வெனிசிலும் தெரிந்தது.

இத்தாலிக்கு செல்வதற்கு முன்பாக நீங்கள் தங்குமிடங்களை உறுதி செய்து கொள்வது நல்லது. குறிப்பாக ரோம், மிலான், வெனிஸ் போன்ற நகரங்களில் விடுதிகளை பெறுவது கடி னம். முன்கூட்டியே பதிவு செய்வது நல்லது. Booking.Com, Expedia போன்ற பல இணையத் தளங்கள் உள்ளன. இவற்றி னூடாக பதிவு செய்தால், இறுதி நேரத்தில் மாற்றங்கள் ஏதும் செய்வதாயினும், நீங்கள் கட்டிய பணத்தை மீளப் பெறலாம். அல்லது நீங்கள் நேரடியாகவே குறிப்பிட்ட ஹோட்டல்களு டன் பதிவு செய்யலாம். மூன்று அல்லது நான்கு மாதங்க ளுக்கு முன்பாகவே முன் பதிவு செய்தால், மிகக் குறைந்த கட்டணத்தில் அறைகளை பெற்றுக்கொள்ளலாம்.

உங்களுக்கு அருகில் உள்ள நூலகத்துக்கு சென்று அங் குள்ள உல்லாச பயண நூல்களினூடாக பல தகவல்களைப் பெறலாம். அல்லது இணையத் தளங்கள் Travel Magazines ஊடாக பல தகவல்களைப் பெறலாம். பொதுவாகவே ஐரோப்பிய நகரங்களில் ஹோட்டல்கள் ஒரு தனி அறைக்கு சுமார் 250 டொலர்களை அறவிடுவார்கள். Airbnb இனூடாக வும் இடங்களை பதிவு செய்யலாம். படங்கள் பார்க்கும் விருப் பமிருப்பின் Before Sunrise, Night Train to Lisbon, The Tourist போன்ற படங்களை பார்த்துவிட்டுச் சென்றால் உங்கள் பயணத்தை மறக்க முடியாத அனுபவமாக மாற்றிவிடும்.

ஐரோப்பிய புகையிரத சேவைகள் உலகில் பிரசித்தமா னவை. இத்தாலி, சுவிஸ்லாந்தினூடாக பயணிக்கும் Bernina Express ஒரு சிறந்த உல்லாச பயண புகையிரத சேவை. இது போன்று பல உள்ளன. கூகிளைத் தட்டினால் பல விடயங்கள் தெரிந்து கொள்ளலாம்.

இது ஒரு பயணக் கட்டுரையல்ல.
ஒரு சிறு குறிப்பு. அவ்வளவே.



rathan@thaiveedu.com



# கமலக்கண்ணனின் 'குரங்குப் பெடல்'

**– ஓவியர் ஜீவா**

குழந்தைகளின் உலகம் தனித்தன்மையுடையது. அவர்களின் பார்வை, அவர்களின் சுற்றுப்புறம், உறவினர்கள், வீடு என்று அனைத்து கோணங்களையும் வெகு சில இயக்குனர்களே திரைப்படமாக உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். பிரான்க்வா த்ரூபோ-வின் '400 ப்ளோஸ்' (400 blows) இளம் குற்றவாளி சிறுவன் ஒருவனின் உலகத்தை நமக்கு அறிமுகப் படுத்தியது. ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் இயக்கிய E.T சிறார்களுக்கும் அண்டவெளியிலிருந்து உலகுக்கு வந்த ஒரு வேற்று கிரக வாசிக்கும் இருந்த நட்பை அழகுறச் சொல்லியது. சத்யஜித் ரேயின் 'பதேர் பாஞ்சாலி', அபராஜிதோ, சோனார் கெல்லா போன்ற படங்கள் நமக்கு காட்டிய உலகமும் வாழ்க்கையும் வேறு. விட்டோரியா டி சிக்காவின் 'பைசைக்கிள் தீவ்ஸ்', மஜீத் மஜீதியின் 'சில்ட்ரன் ஆப் ஹெவென்', இத்தாலிய திரைப்படமான 'சினிமா பாரடிசோ', இளம் குற்றவாளிகளின் கதையான 'சிட்டி ஆப் காட்', ராஜ்கபூர் தயாரித்த 'பூட்



பாலிஷ்', மெஹபூப் கான் இயக்கிய 'சன் ஆப் இந்தியா', அரவிந்தன் இயக்கிய 'எஸ்தப்பான்', அடூர் இயக்கிய 'அனந்தரம்', மணிரத்னத்தின் 'அஞ்சலி' போன்றவையெல்லாம் குழந்தைகள் உலகத்தை ஊடுருவிய மறக்கமுடியாத திரைப்படங்கள். தமிழிலும் இப்படி பல முயற்சிகள் நடந்திருக்கின்றன. அந்த காலத்திலேயே பி.ஆர். பந்துலு 'குழந்தைகள் கண்ட குடியரசு' திரைப்படத்தை தந்திருக்கிறார். சமீப காலத்தில் ஹலிதா ஷமீம் 'பூவரசம் பீப்பி'-யை இயக்கியிருந்தார். மதுமிதா இயக்கிய திரைப்படம் 'கேடி'. இளம் இயக்குனர் சாது, 'சிறுவன் சாமுவேல்' என்ற அருமையான திரைப்படத்தை குமரி மாவட்ட பேச்சுத் தமிழில் இயக்கியிருந்தார். மேலும் பல திரைப்படங்கள் குழந்தைகளை மையமாக வைத்து இங்கே தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இப்போது இந்த மாதம் வெளியான 'குரங்குப்பெடல்' குழந்தைகள் உலகத்தை பிரதிபலிக்கும் ஒரு சிறந்த திரைப்படம். இதன் இயக்குனர் கமலக்கண்ணன், கல்லூரியில் விஷுவல் கம்யூனிகேஷன் முடித்தவுடன் திரைப்பட இரசனையை இளைஞர்களிடம் வளர்க்க கோயம்புத்தூர் பிலிம் கிளப் என்ற பெயரில் ஒரு பிலிம் சொசைட்டியை துவக்கினார். இயக்குனர் அருண்மொழியும், நானும் முக்கிய விருந்தினர்களாக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி அதை துவக்கி வைத்தோம். அதன் பின் ஏராளமான உலகத் திரைப்படங்கள் திரையிடல், விவாதங்கள் என்று வெற்றிகரமாக இந்த திரைப்பட கழகம் இயங்கியது. அடுத்த கட்டமாக திரைப்பட தயாரிப்பில் இறங்கலாம் என்று முடிவு செய்தனர். இந்தியாவில் ஒரு பிலிம் சொசைட்டி முதன் முதலாக திரைப்பட உருவாக்கத்தில் இறங்கியதற்கு ஒரு சரித்திரம் இருக்கிறது. 70-களில் அடூர் கோபாலகிருஷ்ணன் நண்பர்களுடன் இணைந்து நடத்திய சித்ரலேகா பிலிம் சொசைட்டி, அவரையே பூனே பிலிம் இன்ஸ்டிடுட்டிற்கு ஒரு மாணவனாக அனுப்பியது. மூன்றாண்டுகள் திரைப்பட இயக்கம் கற்ற பின்பு திரும்பி வந்த அவர் சித்ரலேகாவின் சார்பிலே இயக்கிய திரைப்படம் 'சுயம்வரம்'. முதல் படத்திற்கு புதுமுகங்களை வைத்து ரிஸ்க் எடுக்காமல் பிரபல நடிகர்களான மது, சாரதா, திக்குறிச்சி போன்றவர்களை பயன்படுத்தி அற்புதமான ஒரு திரைப்படத்தை உருவாக்கினார்கள். அதன் பின்னே வந்த படங்கள் அனைத்துமே விருதுத் திரைப்படங்கள்தான். இந்த அடிச்சுவட்டில் மாண்டாஜ் என்ற நிறுவனம் உருவானது. இவர்கள் குழுவிலிருந்த பிரசன்னா போன்றவர்கள் 'நக்கலைட்ஸ்' (Nakkalites) என்ற புகழ் பெற்ற யுட்யூப் தளத்தை உருவாக்கி பெரும் வெற்றி பெற்றனர்.

மதுபானக்கடை 70-களுக்கு பின் அரசு உதவியால் பரவலான குடிப்பழக்கத்தையும், அரசே நடத்தும் மதுபானக்கடை கலாச்சாரத்தையும் பின்புலமாக வைத்து உருவான திரைப்படம். இதன் படப்பிடிப்பு பெருந்துறை அருகே ஒரு கிராமத்தில் நடந்தபோது, சாலையோரம் இருந்த மதுபானக்கடையை, அது ஒரு திரைப்பட செட் என்று கூட அறியாமல் கடந்து சென்றோம். அவ்வளவு தத்ரூபமாக அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. திரைப்படமும் வழக்கமான படங்களில் இருந்து மாறுபட்டிருந்தது. முற்றிலும் புதுமுகங்களும் பிலிம் கிளப் நண்பர்களுமே நடித்திருந்தனர். அடுத்த வாய்ப்பு ஒரு ஜனரஞ்சகப் படமாக அமைந்தது, சத்யராஜ் மகன் சிபிராஜ் நடித்த 'வட்டம்' என்ற திரைப்படம். இப்போது மீண்டும் யதார்த்தத்தை நோக்கிய திரைப்படமாக அமைந்தது 'குரங்குப் பெடல்'.

குழந்தைப்பருவம் கடந்து ஒரு 10 வயது ஆகும்போது பொதுவாக சிறுவர்களின் நோட்டம் சைக்கிள் மீதுதான் இருப்பது வழக்கம். என்னுடைய சிறுபிராயத்தில் சைக்கிள் ஓட்டுவது ஒரு சாகசமாகவே இருந்தது. சைக்கிள் ட்ரைனிங் முடிந்து 'பட்டம் பெற்று' சாலையில் ஓட்டுவது பெருமைக்குரிய செயல் அல்லவா! இன்னும் பள்ளிக்கு சைக்கிளில் சென்று திரும்பிய அந்த முதல் நாள் எனக்கு நினைவிருக்கிறது. அப்போதெல்லாம் தெருமுனைகளிலும் சிறிய மைதானங்களில் 7 நாட்கள் இரவு பகலாக சைக்கிள் ஓட்டும் சாகசங்கள் நடைபெறும். மாலை நேரங்களில் பயங்கர கூட்டமும் வசூலும் கிட்டும். அந்த சைக்கிள் கலைஞர்கள் இரண்டு கைகளையும் விட்டுக் கொண்டே ஒலிபெருக்கியில் முழங்கும் டப்பாங்குத்து பாடல்களுக்கு ஆடுவதை பார்ப்பதே சிறுவர்களுக்கு பெரும் ஆனந்தம். அதை பின்பற்றி சாலையில் சைக்கிள் ஓட்டும் போது வகுப்புத் தோழிகளை பார்த்ததும் இரண்டு கைகளை விட்டுவிட்டு ஹாய்யாக செல்வது எப்பேர்ப்பட்ட சாகசங்கள்.




குரங்குப்பெடல் படத்தில் முக்கிய கதாபாத்திரமான சிறுவன் மாரியப்பனின் அப்பன் கந்தசாமி ஒரு நெசவுத் தொழிலாளி. வீட்டிலேயே தறி நெய்பவன். சைக்கிள் ஓட்டத் தெரியாததால் எப்போதும் கால்நடை. கிராமங்களுக்கே உரிய பட்டப் பெயர் வைத்தலில் இவனுக்கு வைக்கப்பட்ட பெயர் 'நடராஜா சர்வீஸ்'. சிறு வயதில் ஏற்பட்ட ஒரு சம்பவம் அவனை சைக்கிளில் இருந்து தள்ளி வைத்துவிட்டது என்பது பின்னர் இன்னொரு காட்சியில்  நாம் அறிந்து கொள்ளும் செய்தி.

ஏற்கனவே ஒரு மாஸ்டரிடம் சிலம்பம் கற்றுக்கொண்டிருக்கும் மாரியப்பனுக்கும் அவனது நண்பர்களுக்கும் இந்த கோடை விடுமுறையில் எப்படியாவது சைக்கிள் ஓட்டவும் கற்றுக்கொள்ளவேண்டும் என்பது ஆசை. மிலிட்டரி சைக்கிள் கடையில் ஒரு மணி நேரத்துக்கு எட்டணா வாடகை. (இது எண்பதுகளில் நடக்கும் கதை என்பதை அறிக). மிலிட்டரியை கண்டால் பசங்களுக்கு பயங்கர பயம். ராணுவத்தில் இருக்கும்போது வீரசாகசங்கள் புரிந்தவன் என்றும் அவனுடைய 'டூல்' பெட்டியில் எப்போதும் ஒரு பிஸ்டல் இருக்கும் என்று வதந்தி. எப்படியோ தைரியமாக சைக்கிளை வாடகைக்கு எடுத்து உருட்டிக்கொண்டு வருகிறான் மாரியப்பன். ஊர்ப் பணக்காரர் பையன் நீதி, பணத்திமிர் மமதையில் வாழ்பவன். அவனிடம் இவர்கள் உதவி கேட்டுப்போக, அவனோ ஒரு புது சைக்கிளையே வாங்கிக்கொண்டு வருகிறான். நண்பர்கள் அனைவரும் அரை மனதுடன் அவனுடன் ஒட்டிக்கொள்ள, மாரியப்பன் நொந்துபோகிறான்.

ஊர்க் குடிகாரன் ஒருவன் தன் சைக்கிளை ஒரு நாள் அடமானத்திற்கு மிலிட்டரியிடம் வைத்து ஐந்து ரூபாய் வாங்கிக் கொண்டு செல்கிறான். அந்த நேரத்தில் வாடகை சைக்கிள் கேட்டு வந்த மாரியப்பனிடம், ஒரு மணி நேரத்துக்கு அதே சைக்கிளை தருகிறான் மிலிட்டரி. அப்போது கடையில் வேறு வண்டி இல்லை. தனியாக குரங்குப்பெடல் போட்டு விழுந்து எழுந்து பயிற்சியெடுக்கிறான் மாரி. எதற்கடா குரங்குப்பெடல்... சீட் மீது அமர்ந்து ஓட்டு என்று உத்வேகம் அளிக்கிறார் அவனுடைய பள்ளி ஆசிரியர். உற்சாகமாக அவர் சொன்னதை கேட்டு கடும் முயற்சிக்கு பின் சைக்கிளில் பறக்கிறான் இவன்.

கடனை அடைக்க மிலிட்டரியிடமே கோடை விடுமுறையில் வேலை கேட்டு செல்கிறான் மாரி. மெல்ல கூடவே சைக்கிள் பழுதுபார்க்கும் பணிகளையும் கற்றுக்கொள்கிறான். அங்கு கேட்பாரற்றுக் கிடக்கும் ஒரு ஓட்டை உடைசல் சைக்கிளை பழுது பார்த்து ரெடி செய்கிறான்.

எந்த படத்துக்கும் ஒரு உச்சக்கட்டம் வேண்டும் அல்லவா... பக்கத்து மலை உச்சியில் இருக்கும் கோவிலுக்கு சைக்கிள் பந்தயம் நடத்த பொடியன்கள் முடிவு செய்கிறார்கள். நீதிக்கும் மாரியப்பனுக்கும்தான் போட்டி. அனைவரும் ஆளுக்கொரு சைக்கிளில் மூச்சு வாங்க மிதித்துக்கொண்டு மலையேறுகிறார்கள். ஒரு கட்டத்தில் மாரி முந்திவிடுகிறான். நீதியின் சைக்கிள் செயின் அறுந்துவிடுகிறது. தன் தோல்வியை அவன் ஒப்புக்கொள்ள, அதை மாரி பழுது பார்க்கிறான். நண்பர்களுக்குள் அன்பும் தோழமையும் பிரவாகம் எடுக்கிறது... நடராஜா சர்வீஸ் அன்புடன் தன் மகனுக்கு ஒரு சைக்கிள் வாங்கித்தரும் காட்சியுடன் படம் முடிகிறது!

ராசி அழகப்பன் எழுதிய சைக்கிள் என்ற சிறுகதையை படமாக்கியிருக்கிறார் கமலக்கண்ணன். ஈரோடு அருகில் உள்ள பகுதிகளில் படமாக்கியிருக்கிறார்கள். அற்புதமான நடிப்பை அனைவரும் நல்கியிருக்கிறார்கள். 'நடராஜா சர்வீஸ்' கந்தசாமியாக காளி வெங்கட், மிலிட்டரியாக பிரசன்னா, குடிகாரனாக ஜென்சன் திவாகர், சிறுவன் மாரியப்பனாக சந்தோஷ் வேல்முருகன் தனியாக பாராட்டப்படவேண்டியவர்கள். ஒளிப்பதிவாளர் சுமி பாஸ்கரனும் இசையமைப்பாளர் கிப்ரானும் தங்கள் பணிகளை அழகாக செய்திருக்கிறார்கள். இந்த திரைப்படத்தை தயாரிப்பாளர் பொறுப்பில் இருந்து விநியோகித்திருப்பவர் பிரபல நடிகர் சிவகார்த்திகேயன். உலக அளவில் சில விருதுகளைப் பெற்ற இந்த திரைப்படம் மேலும் விருதுகளைப் பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

சமீபத்தில் வெளியான தமிழ்த் திரைப்படங்களில் குழந்தைகள் உலகத்தை அழகாக பிரதியெடுத்த 'குரங்குப்பெடலுக்கு' சிறப்பான இடமுண்டு!



jeeva@thaiveedu.com



# அட்டாளைச்சேனையின் தமிழறிஞர் அல்ஹாஜ் ஜே.எம். பதுறுத்தீன் மவ்லானா

*- இனியவன் இசாறுத்தீன்*

தான் வாழ்ந்துகாட்டிய மனித மாண்பை மக்கள் மனங்களில் உயிர்ப்புடன் காத்து வைத்திருக்கிறார் அட்டாளைச்சேனையின் முன்னாள் மூத்த தலைவர் அல்ஹாஜ் ஜே.எம். பதுறுத்தீன் மவ்லானா. அவர் இஸ்லாமிய சமூக வாழ்வியலை வெண்பா வடிவில் எழுதிய இலக்கியப் படைப்பாளர், தூர நோக்குச் சிந்தனையாளர், 1971-ல் நபி நாயகத்தின் முன்மாதிரியை 'முஸ்லிம் மூதுரை' நூலாய் எழுதி வழங்கிய புலமையாளர். ஆரோக்கியமான இளம் தலைமுறையை உருவாக்க வேண்டுமென்று பாடுபட்ட அறிவாளர். ஊதியம், ஆதாயம், தற்பெருமை எதையும் நினைத்தும் கூடப் பார்க்காத நேர்மையாளர்.

அவர் 'சேர்ட்டும் கோர்ட்டும்' அணிவார், வெள்ளைச் சாறம் அணிவார், கறுப்புச் சப்பாத்தும் துருக்கித் தொப்பியும் கூட போட்டுக்கொள்வார். முகம் மலரவும் பிறர் அகம் மலரவும் மிடுக்காக நடப்பார். எதிலும் எப்போதும் கம்பீரமாகவே தோன்றுவார். நிற ஆடை அணியவே மாட்டார். வெள்ளி நாட்களில் உற்சாகத்தை விதைத்துக்கொண்டு காலை பதினொரு மணிக்கே பள்ளிக்கு வருகை தருவார். தொழுகை, நிர்வாகம், பொதுக்கூட்டம், குடிக்கூட்டம் என்று 'உற்சாகத்தேனீ' போல் உலாவந்து எல்லாவற்றையும் முடித்த பின்னர், இதயங்களை அறுவடை செய்துகொண்டே வீடு செல்வார்.

பதுறுத்தீன் மவ்லானா தான் பேசவேண்டிய விடயத்தைப் பேசுவதற்கு முன்பாக சார்ந்திருக்கும் சபை மீது கண்ணும் காதும் கவனமும் செலுத்தி, பிறர் கருத்தைக் கேட்டறிவார். உணர்ச்சிக்கும் கருத்துக்கும் ஏற்ப ஒருமித்து முடிவெடுப்பதில் எல்லோரும் இணக்கமாக இருக்குமாறு பார்த்துக் கொள்வார். இலக்கிய மேடைகளில் இனிமையையும் அரசியல் மேடைகளில் இலக்கியத்தையும் அழகாகக் கலப்பார்.

அட்டாளைச்சேனையில் மர்ஹூம் செய்யது ஜமால்தீன் மவ்லானா என்கிற செல்வாக்குள்ள செல்வந்தக் குடும்பத்து மூத்த புதல்வர்தான் அல்ஹாஜ் ஜே.எம். பதுறுத்தீன் மவ்லானா. அவர் முன்னாள் அதிபர்களான ஜே.எம். ஷம்சுத்தின் மவ்லானா மற்றும் ஜே.எம். நசுறுத்தீன் மவ்லானா ஆகியோரின் மூத்த சகோதரர் ஆவார். பதுறுத்தீன் மவ்லானா அட்டாளைச்சேனையில் 1913-ம் ஆண்டு பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து (1913 – 1976), அறநெறி பிறழாத ஊர்த் தலைவராய் அவர் ஆண்டார்.

அட்டாளைச்சேனையின் பெரிய ஜும்ஆ பள்ளி நம்பிக்கையாளர்சபைத் தலைவராயிருந்த காலத்தில் பதுறுதீன் மவ்லானா




அந்த பழைய பள்ளியை ஊர்மக்களோடு சேர்ந்து உடைத்து விட்டு புதிய கட்டுமானத்தை அவர் தொடக்கி வைத்தார்.

அப்படி விரிவுபடுத்திக் கட்டிய புதுப் பள்ளிவாசல்தான் இன்று பிரதான பாதையூடாகத் தெரியும் பிரமாண்டமான புதிய மஸ்ஜித் ஆகும்.

அதுமட்டுமல்லாமல், அவர் ஊர்மக்கள் கடற்கரைக்குச் செல்லும் 'கோணாவத்தைப் பாலம்' கட்டுவதற்கும், வளலவாய் வயலுக்குச் செல்லும் பாவங்காய்ப் பாதை அமைப்பதற்கும் அவர் உதவினார். ஊரில் ஒரு பொதுச் சந்தையை உருவாக்கிக் கொடுத்ததன் மூலம் சமூகத்தில் சுமுகமான புதியதொரு சமூக நிலையையும் உருவாக்கிக் கொடுத்தார்.

1970-ம் ஆண்டு பொதுமக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இலங்கை அரசாங்கம் இணக்கசபை என்னும் உள்ளூர் நீதிமன்றத்தை அமைத்தபோது அதற்கு பதுறுத்தீன் மவ்லானாவைத் தலைவராக நியமித்தது. நாளாந்தம் நூற்றுக் கணக்கான மக்கள் புகார்களை விசாரணை செய்து பதுறுத்தீன் மவ்லானா வழங்கிய சமாதானத் தீர்ப்புக்கள், சமூக மாற்றத்தை ஏற்படுத்தியது மட்டுமன்றி அவர்மீது பெருமதிப்பையும் மரியாதையையும் உண்டாக்கின.

பதுறுத்தீன் மவ்லானா தமிழுக்கு வாய்த்த ஒரு தகவுரைப்பேரறிஞர். அதனாற்தான் 'மக்களுக்கு படிப்பினையை ஏற்படுத்த வேண்டும்' என்ற குர்ஆனின் குரலில் தன் 'முஸ்லீம் மூதுரை' நூலில் இப்படி குறிப்பிடுகிறார்:

'மனிதப் பண்பாடு, நல்லொழுக்கம், சமுதாய மேம்பாடு என்பவற்றை கற்பவருக்கும் கற்பிப்பவருக்கும் உதவியாக இந்த செய்யுளில் நான் நவீனம் செய்திருக்கிறேன். அறிவுடை உலகம் யாவும் இனி பயனடைய வேண்டும்'.

இந்த முப்பது பாக்கள் மொழியொழுங்கும், மதிநுட்பமும் மானுட மேன்மையும் கூடிக் கலந்து கொழித்த இந்த மூதுரை அன்றைய ஏழுத்தாளர் இதயங்களையே உழுதுவிட்டது. இந்த தமிழ் ஆளுமையின் எழுத்து புலவர்களுக்கு மட்டுமன்று இன்றைய தலைவர்களுக்கும் ஒரு கோட்பாட்டுப் பொருளானது.

அறபு, ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் கூட அவர் தேர்ச்சி பெற்றிருந்தபோதும் தாய்மொழிப் பற்றில் தம் எழுத்திலும் பேச்சிலும் அயற்சொல் விரவாத தனித் தமிழ்க் கல்வி வழங்கினார். அப்படியே அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் தமிழ்விரிவுரையாளராக அழகு தமிழிலக்கியம் பயிற்றுவித்தார். அட்டாளைச்சேனையில் இன்று தேசிய பாடசாலையாய் இயங்கும் அன்றைய சாதனாபாடசாலையில் பதுறுத்தீன் மவ்லானா அதிபராக கடமையாற்றிய போது 'ஓதாத கல்வி கெடும், ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்' என்ற அவ்வைப்பிராட்டியின் ஆதிமொழியை அகம்நிறுத்தி, பள்ளிச்சிறார்களுக்கு 'கல்வி என்பது அரிச்சுவடியிலிருந்து ஊட்டப்படுவதற்குமுன் ஒழுக்கத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும்' என்று எண்ணி அதை அமுல்படுத்தினார்.

இன்னும், அட்டாளைச்சேனை அறபிக்கல்லூரியில் பிரதம ஆலோசகராகவும், உப தலைவராகவும் பணியாற்றிய அவர் அதன் உயர்தர மாணவர் பரீட்சைக்குழு முதல்வராகவும், கமநல சேவைநிலையத் தலைவராகவும், மட்டக்களப்பு மாநகர



போதனாவைத்தியசாலை மேலாண்மைக்குழுவின் மூத்த உறுப்பினராகவும் தொண்டாற்றினார்.

இப்படி கல்வியிலும் சிந்தனையிலும் சமூக மேம்பாட்டிலும் சிறந்து விளங்கிய பெருந்தகை பதுறுதீன் மவ்லானாவின் மாண்பு பெருமதிப்புக்குரியது. பதுறுத்தீன் மவ்லானாவின் மேன்மைக்குக் காரணம் சொல் மட்டுமல்ல அவரது சிந்தனையும் செயலுமாகும். இன்றைய சமகாலத்தின் சமுதாயச் சரிவைச் சரிசெய்ய முற்படும்போது முன்னாள் தலைவர் முதுபெரும் முன்னோடி பதுறுதீன் மவ்லானாதான் நமது கனவுக் கண்முன் வந்து நிற்கிறார்.



isarudeen@thaiveedu.com

# இலக்கியவாதியான மருத்துவப் பேராசிரியர் நந்தி



- வே. விவேகானந்தன்

இலங்கையின் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கலையும் கல்வியும் பொருளாதார வளமும் செழித்தோங்கிய இணுவில் பதியில், விநாசித்தம்பி செல்லத்துரை - செல்லம்மா இணையருக்கு மகனாக, நந்தி என்னும் பெயரில் இலக்கிய உலகில் வலம் வந்த மருத்துவப் பேராசிரியர் சிவஞானசுந்தரம் அவர்கள் 1928-ம் ஆண்டு மார்ச் மாதம் முப்பதாம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வி, மற்றும் உயர் கல்வியை பளை தமிழ்க் கலவன் பாடசாலை, காங்கேசன்துறை ரோமன் கத்தோலிக்க பாடசாலை, இடைக்காடு தமிழ் மகாவித்தியாலயம், சென். ஜோன்ஸ் கல்லூரி, கொழும்பு சென். ஜோசப் கல்லூரி ஆகிய கல்வி நிலையங்களில் கற்று, 1950-ம் ஆண்டளவில் இலங்கைப் பல்கலைக்கழகத்திற்குப் பிரவேசித்தார்.

1955-ம் ஆண்டு மருத்துவப் பட்டதாரியாக வெளியேறிய இவர் 1966-ம் ஆண்டு வரை அரச சுகாதார சேவையில் கடமையாற்றினார். 1967-ம் ஆண்டு உயர் கல்வியைப் பெற, பிரித்தானியாவுக்குச் சென்று இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்று 1971-ம் ஆண்டு இலங்கை திரும்பினார். அதே ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமுதாய மருத்துவத் துறையின் (Community Medicine) விரிவுரையாளராக இணைந்தார். பின்னர் இணைப் பேராசிரியர் பதவிக்கும் உயர்ந்தார். அத்துடன், அப்பல்கலைக்கழகத்தில் வைத்திய பட்டப்பின்படிப்பு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட சமுதாய மருத்துவ கற்கை நெறிகளுக்கான பணிப்பாளராகப் பணியாற்றினார். 1978-ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்ட போது, அதன் முதலாவது சமுதாய மருத்துவத்துறைப் பேராசிரியராகப் பதவியேற்று, அவரது மறைவு வரை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தொடர்ந்து பணியாற்றினார். மருத்துவத் துறையில் விரிவுரையாளர்களின் பற்றாக்குறை, கட்டட வசதிகளின் போதாமை, யாழ். வைத்தியசாலையில் கற்பித்தல் வசதிகளின் குறைபாடுகள் போன்ற இடர்களின் மத்தியில் மருத்துவ பீடத்தினைத் தக்கவைத்துக்கொள்வதற்காக, அரும்பாடுபட்ட பீடாதிபதிகளில் நந்தியின் பங்கு மகத்தானது. நெருக்கடியான காலகட்டமான 1984-1988 காலப் பகுதியில் திறமை மிக்க மருத்துவத்துறைப் பீடாதிபதியாக செயற்பட்டார். அத்துடன் யாழ். பல்கலைக்கழக நிர்வாக மட்டத்திலும் பல ஆண்டுகள் மூதவை உறுப்பினராகவும், 1979 - 1993 காலப்பகுதியில் பேரவை உறுப்பினராகவும், பல தடவைகள் பதில் துணை வேந்தராகவும் சிறப்பாகச் செயலாற்றியுள்ளார். இவரது சேவைக்கு மதிப்பளிக்கும் வகையில் யாழ். பல்கலைக்கழகம் 1995-ம் ஆண்டு கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டத்தினை வழங்கிப் பெருமை கொண்டது.

பொதுச் சுகாதார சேவையினதும், சமுதாய மருத்துவ சேவையினதும் மேம்பாட்டுக்காக நந்தி அவர்கள் ஆற்றிய சேவை அளப்பரியதாகும். சமூக மட்டத்தில், பல முன்னோடியான ஆய்வுகளை நடத்தியும், பல ஆய்வாளர்களுக்கு வழிகாட்டியாகவும், மேற்பார்வையாளராகவும் பணியாற்றியுள்ளார். 1981-ம் ஆண்டு ஒரு வருட காலம் ஜோர்டான் நாட்டு சுகாதார அமைச்சின் துணை மருத்துவ சேவைகளுக்கான பயிற்சிக்கு ஆலோசகராகப் பணியாற்றினார். அதற்காக அவரால் எழுதப்பட்ட வழிகாட்டி நூல் அரபு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. உலக சுகாதார நிறுவனத்தின் 'சுகாதார சேவைகள் ஒழுங்கமைப்பு' ஆய்வுக்கு சர்வதேச ஆலோசகராக 1985 முதல் 1999 வரை பணி புரிந்தார். அக்காலகட்டத்தில் மலேசியா, பங்களாதேஷ், வடகொரியா, மொங்கோலியா, இந்தியா, மியன்மார், சிம்பாவே போன்ற நாடுகளில், சுகாதார சேவை சார்ந்த வைத்தியர்களுக்கு அது தொடர்பான பயிற்சிப் பட்டறைகளை நடத்தினார்.

இவ்வாறு நந்தி அவர்களின் தேசிய, சர்வதேச, மருத்துவ சாதனைகள் எண்ணிலடங்கா. அவர் தமது ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தி, தமது மருத்துவப் பணிகளுக்கு எவ்விதத்திலும் துணை நிற்கத் தேவைப்படாத, படைப்பிலக்கியத் துறையிலும் ஈடுபட்டு, தலைசிறந்த படைப்பிலக்கியங்களைத் தந்துள்ளமை அவரது தனிச் சிறப்புக்கு சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும். தமிழ் மொழியில் ஆர்வம் கொண்ட நந்தி அவர்கள், அவரது சிறிய தந்தையார் செல்வநாயகத்திடமும் மற்றும் அ. மரியதாஸ், எஸ்.ஏ சார்ல்ஸ், இலக்குமண ஐயர் ஆகியோரிடம் தமிழ் மொழியைக் கற்று, நன்கு தேர்ச்சி பெற்றார். பாடசாலை மாணவனாகப் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே எழுத்துத் துறையில் ஈடுபட்டு, பதின்மூன்று வயதிலேயே பத்திரிகைகளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகளை எழுதத் தொடங்கினார். பத்தொன்பதாவது வயதில் இவர் எழுதிய 'சஞ்சலம் சந்தோசம்' என்ற முதலாவது சிறுகதை வீரகேசரிப் பத்திரிகையில் பிரசுரமாகியது.

இவர் தனது படைப்புகளை வி.செ.சி, பென்சிலின், மகன், ஜெயஹிந்த், சாஸ்திரி என்ற புனைபெயர்களில் எழுதினார். மூத்த தமிழ்ப் பேறிஞர் இராஜாஜி இவருக்கு 'நந்தி' எனப் பெயர் சூட்டினார். ஆரம்பத்தில் சிலர் இப்பெயரைப் பரிகசித்தனர். ஆனால், இப்பெயரின் ஆழமான உட்கருத்தினைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு விளக்கியிருந்தார். 'சிவம்' பற்றிய தெளிவை உள்வாங்கி அந்த ஞானத் தெளிவினை ஆடம்பரமாக வெளிக்காட்டிக் கொள்ளாமல் பார்த்துக்கொண்டிருப்பது நந்தி. இப்பொழுதுதான் புலனாகிறது, நந்தி என்பது ஞானத்தெளிவின் குறியீடு என்பது.

எனவே சிவஞானசுந்தரம் என்ற மனிதன் உலக ஞானம் பற்றிய சித்தத் தெளிவு கொண்டிருந்தார்’ எனக் குறிப்பிட்டிருந்தார்.

1979-ம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் தொடராக வெளிவந்த இவரது ‘நம்பிக்கைகள்’ என்ற நாவல், பின்னர் 1989-ம் ஆண்டு நூலாக வெளிவந்தது. இந்த நூல் 1992-ம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

நந்தி அவர்கள் இலங்கையின் பல்வேறு இடங்களிலும் பணியாற்றிய போது, தான் பெற்ற அனுபவங்களையும், சமூக சூழ்நிலைகளையும் அவதானித்து, எழுத்து வடிவில் நூல்களாக வெளியிட்டுள்ளார். குருநாகல், ஹிரிப்பிட்டியா ஆகிய இடங்களில் பணியாற்றிய போது, சாதாரண சிங்கள மக்களுடன் பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். அதனால் பலவகையான மக்களுடன் பழகி, அவர்களின் உணர்வுகளை நுட்பமாக உள்வாங்கி, மனதைத் தொடும்படியான படைப்புகளை வெளியிட்டார். குறிப்பாக அங்கு வேலை பார்த்த மருத்துவச்சி ஒருவரைக் கதாபாத்திரமாகக் கொண்டு ‘சிங்களத்து மருத்துவச்சி’ என்ற சிறுகதையினை எழுதினார். இச்சிறுகதை 1994-ம் ஆண்டு வெளிவந்த அவரது ‘நந்தியின் கதைகள்’ என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. நாவலப்பிட்டியில் பணியாற்றிய போது மலையக தொழிற் சங்கங்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளையும், போட்டிகளையும், தோட்டங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களின் அவலநிலையையும், பேச்சு மொழியையும், ஏனைய தமிழ்ப் பிரதேச மக்களுக்கு தெளிவாகத் தெரியப்படுத்தும், ஒரு காதல் கதையை கருவாகக் கொண்டு, ‘மலைக்கொழுந்து’ என்ற நாவலை எழுதினார். இது இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற இவரது முதலாவது நாவலாகும். கொலரா நோயைக் கட்டுப்படுத்திய அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு ‘தங்கச்சியம்மா’ என்ற நாவலை எழுதினார். இவரது படைப்புகளில் ‘அருமைத் தங்கைக்கு’, ‘அன்புள்ள நந்தினி’ என்பன மருத்துவ அறிவுரை நூல்களாகவும், ‘ஊர் நம்புமா ?’, ‘கண்களுக்கு அப்பால்’, ’நந்தியின் கதைகள்’, ‘தரிசனம்’, என்பன சிறுகதைத் தொகுப்புகளாகவும் ‘உங்களைப் பற்றி’ சிறுவர் அறிவுரை நூலாகவும் வெளிவந்தவையாகும்.

1977-ம் ஆண்டு வெளிவந்த இவரது ‘தங்கச்சியம்மா’ என்ற நாவல், யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிராமப் புறங்களில் தாதியாகப் பணிபுரிந்த, மலையகப் பெண் ஒருவரின் அவதானிப்புகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இது மலையகத்தவர் ஒருவரின் பார்வையில், யாழ்ப்பாணத்தில் காணப்படும் சமூக ஏற்றத் தாழ்வுகளையும், நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் துயரங்களையும், மனிதாபிமானத்துடன் நோக்கும் சமூக சேவையை அடித்தளமாகக் கொண்ட ஒரு நாவலாகும். இவர் எழுதிய நான்கு நாவல்களுள் மூன்று நாவல்கள் இலங்கை சாகித்திய மண்டல விருதினையும் ஒரு நாவல் வடக்கு, கிழக்கு மாகாண அரசின் விருதினையும் பெற்றுள்ளன. 1975-ம் ஆண்டு வெளிவந்த ‘குரங்குகள்’ என்ற நந்தியின் நாடக நூல், நாடகத் துறையில் அவரது நுட்பமான நெறியாள்கைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். 1975-ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நந்தியின் நெறியாள்கையில் ‘குரங்குகள்’ என்ற நாடகம் முதல் முறையாக மேடையேற்றப்பட்டபோது, அதனை நேரடியாகப் பார்த்து இரசித்த அனுபவம் இன்றும் நீங்கா நினைவாக என் மனதில் பதிந்துள்ளது.

நந்தி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய பெரும்பாலான நூல்கள் மருத்துவத் துறையுடன் தொடர்புடையனவாகும். ‘Learning Research’ என்ற ஆய்வு நூல் இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடங்களில் பயிலும் மாணவர்களாலும், மருத்துவத் துறையில் ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்களாலும் பயன்படுத்தப்படுகின்றது. ‘இதயநோயும் தடுப்பு முறைகளும்’ என்ற மருத்துவ நூலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவர் எழுதிய ஐம்பத்துக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மருத்துவ சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன.

ஒரு வைத்தியரால் எவ்வாறு ஒரு நோயாளியின் உடம்பிலுள்ள நோயைக் கண்டுபிடித்து குணமாக்க முடியுமோ, அவ்வாறே நந்தி என்ற இலக்கிய ஆளுமை, சமூகத்தைப் பீடித்துள்ள நோய்களைக் கண்டறிந்து, அவற்றை இலக்கியத்தின் மூலமாக ஓரளவு தீர்க்கலாம் என்ற இலட்சியம் கொண்டவராக, இலக்கியப் படைப்புகளை உலாவச் செய்தார். நந்தி ஒரு கம்யூனிஸ்ட் அல்ல. ஆனால், அவரது எழுத்துகள் முற்போக்குச் சிந்தனைகள் கொண்டவையாக இருந்தன. முற்போக்கு இலக்கிய எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைக்கு சிலகாலம் தலைவராகவும் இருந்தார்.

நந்தி அவர்கள் ஏனைய எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டார். ஒரு முறை திரு, திருமதி என். சோமகாந்தன் குடும்பத்தினருடன், நந்தி அவர்கள் புகைவண்டியில் பயணம் செய்தபோது ஏற்பட்ட அனுபவம் ஒன்றினைக் கருவாகக் கொண்டு, திருமதி பத்மா சோமகாந்தனை ஒரு சிறுகதை எழுதும்படி ஊக்குவிக்க, அவர் ‘கடவுளின் பூக்கள்’ என்ற சிறுகதையினை எழுதினார். அது பின்னர் தினகரன் பத்திரிகையில் பிரசுரமாகியது. என். சோமகாந்தன் எழுதிய ‘ஈழத்து இலக்கியம் - பல்துறை நோக்கு’ என்ற நூலுக்கு சிறந்த முகவுரையினை எழுதி ஊக்கமளித்தார். ஒவ்வொரு பூரணை தினத்தன்றும் சொக்கன், டொமினிக் ஜீவா, டானியல், வரதர், சோமகாந்தன், பத்மா சோமகாந்தன், கவிஞர் பாடி, வெள்ளி முத்தையா, போன்ற இலக்கியவாதிகளை அழைத்து, யாழ்ப்பாணம் முற்றவெளியில், பால் நிலவில் இலக்கியக் கலந்துரையாடல்களை நடத்தினார்.

எந்தவொரு கருமத்தையும் நேர அட்டவணையுடன் திட்டமிட்டு செயற்படும் நந்தி அவர்கள், தனக்குப் புற்றுநோய் பீடித்துள்ளது என்பதனை அறிந்ததும், சிறிதும் பதட்டப்படாது, தான் ஆற்ற வேண்டிய கடமைகளை நிதானமாக நிறைவேற்றினார். தனது மரணச் சடங்கு எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதனையும் எழுதி வைத்தார். மருத்துவத்துறை மேம்பாட்டு முன்னோடி, பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி, பல்கலைக்கழக நிர்வாகி, சமுதாய மருத்துவர், சிறந்த கல்விமான், ஆராய்ச்சியாளன், எழுத்தாளன், சமூக சேவையாளன், இலக்கியப் படைப்பாளி, இலக்கிய இயக்க செயற்பாட்டாளர், நாடக ஆசிரியர், நடிகர், மேடைப் பேச்சாளர், சாயி பக்தன், பத்திரிகை ஆசிரியர் எனப் பன்முக ஆளுமை கொண்ட நந்தி அவர்கள் புற்று நோய் பீடித்து ஏறக்குறைய ஒரு வருடத்தினுள், 2005-ம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் திகதி அமரத்துவம் அடைந்தார். மருத்துவத்தையும் இலக்கியத்தையும் இரு கண்களாகக் கொண்டு அமரர் நந்தி வாழ்ந்த வாழ்க்கையை ஈழத் தமிழர் அனைவரும் பெருமையுடன் நினைவு கூரக் கடமைப்பட்டவர்களாவர்.



vivekananthan.v@thaiveedu.com

# கலாநிதி இ. மகாலிங்கசிவம்: திட்டமிடல் அமைச்சில் ஒரு சித்தன்



## - மு. நித்தியானந்தன்

1970-ஆம் ஆண்டு. பதுளை கனவரல்ல தோட்டத்தைச் சேர்ந்த - பதுளை சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் பயின்ற ஜெயபாலன் என்பவர் சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தமிழகம் செல்லவிருக்கிறார். காலையில் கொழும்பில் எனது அறைக்கதவைத் தட்டுகிறார். பால் விற்றுத் தாங்கள் சம்பாதித்து வைத்திருக்கும் நான்காயிரம் ரூபாயை இந்தியா விற்கு எடுத்துச் செல்ல, அந்நியச் செலவாணிச் சான்றிதழ் பெறுவதற்காக என்னை நாடி வந்திருக்கிறார்.

கோல்ஃபேசிற்கருகே அமைந்திருந்த குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கு அவரைக் கூட்டிச் சென்றேன். பழங்கா லக்கட்டடம். மலையக மக்களுக்குத் துன்பம் இழைப்பதற்கா கவே உருவாக்கப்பட்ட கட்டடமாகவே அது எனக்கு எப்போ துமே தோற்றம் தந்திருக்கிறது. அந்தக் கட்டடத்திற்குள் நான் நுழைவது இதுவே முதற்தடவை.

தாயகம் திரும்புவோருக்கான அதிகாரியைக் காண நான் அறி வுறுத்தப்பட்டேன். ஜெயபாலனுடன் அவரின் அலுவலக அறைக்குள் நுழைந்தேன். அதிகாரியாக அமர்ந்திருந்தவர் ஒரு தமிழ்ப்பெண்மணி. கொஞ்சம் நம்பிக்கையோடு நாங்கள் வந்த காரியத்தை அவருக்கு விளக்கினேன்.

முதலில் 'நீர் யார் ?' என்ற கேள்வி அவரிடமிருந்து பிறந்தது.

'நான் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பயிலும் பட்டதாரி மாணவன். இவர் எனக்கு ஊரில் நன்கு தெரிந்தவர்' என்றேன்.

காலங்காலமாக அந்தக் கட்டடத்தின்மீது நான் கொண்டிருந்த வெறுப்பினை மேலும் ஒருபடி கூட்டிவைத்தார் அந்த அம்மை யார்.

'தோட்டத்துத் துரையிடமிருந்து, நீங்கள் மாடு வைத்திருப்ப தாகக் கடிதம் கொண்டுவர வேண்டும்' என்றார் அந்த மாதரசி.

ஜெயபாலனைப் பார்த்தேன்.

'அந்தத்துரை கடுமையானவர். லேசில் அப்படிக்கடிதம் தர மாட்டார்' என்றார்.

'கடிதம் இல்லாமல் எதுவும் செய்யமுடியாது' என்ற அம்மை யாரின் குரலில் கடுமையும் தொனித்தது.

கட்டடத்திலிருந்து வெளியேறினோம். கடற்காற்று வெளியில் இதமாகத் தான்வீசியது. மனதிலோ புயல் வீசியது.

என்ன செய்வது ?

ஜெயபாலனுக்கு நான் இந்த உதவியை எப்படியும் செய்தாக வேண்டும்.

பூர்ஷுவா அரச இயந்திரத்தை சுக்குநூறாக உடைத்து நொறுக்கவேண்டும் என்ற இலட்சிய நெருப்பும் அதைச் சுளு வாகச் செய்துவிடலாம் என்ற அரசியல் போதத்தில் மிகுந்த நம்பிக்கையும் கொண்டிருந்த நேரம் அது. ஆனால், இந்த அந்நியச் செலவாணிச் சான்றிதழை எப்படிப்பெறுவது ?

கொழும்பு புல்லர்ஸ் வீதியில் அமைந்திருந்த புரூடி விடுதி யில் வளர்ந்தவன் நான். ஒரு Brodieite ஆல் கைப்பற்ற முடி யாத கோட்டை எதுவுமில்லை என்ற அப்போதைய கர்வம் வேறு.

இலங்கை மத்திய வங்கிதானே அந்நியச்செலாவணிக் கட்டுப் பாடுகளைத் தன் கையில் வைத்திருக்கிறது என்று ஒரு கணம் யோசித்தேன். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் எங்களுக்கு 'பொருளாதாரப் புள்ளிவிபரவியல்' என்ற பாடத்தைப் போதித் துக்கொண்டிருந்த கலாநிதி. இ. மகாலிங்கசிவம் நினைவுக்கு வந்தார். அவர் அப்போது இலங்கை மத்திய வங்கியில் அமைந்திருந்த திட்டமிடல் அமைச்சில் உயர் பதவியில் இருந்தார்.

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திலிருந்து அந்த மத்திய

வங்கிக் கட்டடம் நடைதூரப்பயணத்தில்தான் அமைந்திருந்தது. பல்கலைக்கழக வகுப்பறைக்கு வெளியில் மகாலிங்கசிவம் அவர்களை நான் ஒருபோதும் சந்தித்ததில்லை.

விசாலமான அவரின் அலுவலக மேசையின்முன் நான் நின்றபோது, அன்பும் எளிமையும் பாந்தமான புன்னகையும் கொண்டு அவர் என்னை வரவேற்றார். ஜெயபாலனின் அந்நியச் செலவாணிப் பிரச்சினையையும் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பதிலையும் அவருக்கு விளக்கினேன்.

உடனே தனது தொலைபேசியில் மத்திய வங்கியின் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரியுடன் பேசி, 'எனது மாணவனை இப்போது அனுப்பிவைக்கிறேன்' என்று கூறிவிட்டு, என்னை அதே கட்டடத்தின் மேல் தட்டிற்கு அனுப்பிவைத்தார்.

'வாருங்கள், உட்காருங்கள்' என்று அந்தக் குளிரூட்டப்பட்ட விசாலமான அறையில் அமர்ந்திருந்த அந்த அதிகாரி எங்களை வரவேற்றார். நான் என்னை அறிமுகம் செய்து கொண்டதும், நான் பொருளியலை விஷேட பாடமாக எடுத்துப்படித்துக்கொண்டிருக்கிறேன் என்றதும் மிகுந்த உற்சாகத்துடன் எனது பாடங்களின் விபரங்களை அக்கறையோடு கேட்டார். தங்கள் காலத்தில் 'பொருளாதாரப் புள்ளிவிபரவியல்' என்ற பாடமெல்லாம் இருந்ததில்லை என்றார். பின்னர், நாங்கள் வந்த விபரத்தைச் சொன்னதும், மேசையிலிருந்த ஒரு படிவத்தை நீட்டி, அதனைப் பூர்த்தி செய்து தருமாறு கேட்டார். நாங்கள் அதனைக் கடகடவென்று பூர்த்தி செய்து கொடுத்ததும், அவரே ரப்பர் முத்திரையிட்டு, ஒப்பமிட்டு, அந்நியச்செலாவணிச் சான்றிதழை என் கையில் கொடுத்தார்.

அந்நியச்செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரி அவர். பேராதனைப்பல்கலைக்கழகத்தில் பயின்ற பொருளியலாளர் ஈஸ்வரதாஸ்.

இவ்வளவு சுளுவாக காரியம் ஆகும் என்று நான் நினைத்திருக்கவில்லை. ஜெயபாலனுக்கு இதில் ஒரு பிரச்சினையும் இல்லை. 'நித்தி அண்ணாவிடம் போய்விட்டால், அவர் எல்லாம் செய்து தருவார்' என்ற அவரது நம்பிக்கையில் எந்தத் தருணத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் துளியளவும் சந்தேகம் ஏற்பட்டதில்லை!

இந்தக் கட்டுரை அமரர் இராசையா மகாலிங்கசிவம் (1933-2007) என்ற பொருளியல் அறிஞர் பற்றிய கட்டுரை.

பண்டகை, உடுப்பிட்டியில் இராசையா - இராசம்மா இணையரின் மூத்த மகனாகப் பிறந்த மகாலிங்கசிவத்தின் ஆரம்பக் கல்வி திருகோணமலையில் ஆரம்பமானது. அவரது தந்தை திருகோணமலையில் பணியாற்றியதையடுத்து, அவர் திருகோணமலையில் ஸ்ரீ சண்முகா வித்தியாலயம், இந்து கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கற்று, பின்னர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 1942-ல் சேர்ந்து எஸ்.எஸ்.சி. வரை பயின்று திறமைச் சித்தி பெற்றார். கே.டி. ஜோன் என்ற கேரளத்து அதிபரின் கீழ் அக்கல்லூரி பெருமை பெற்றிருந்த காலம். கே.டி. ஜோன் ஓய்வு பெற்று, கேரளம் சென்றபின்னரும், மகாலிங்கசிவம் அவர்கள் இந்தியா சென்று அவரைச் சந்தித்து வந்திருக்கிறார் என்பது, அந்த அதிபரின் நன்மாணாக்கனாக மகாலிங்கசிவம் இருந்ததையும், அதிபரின் சிந்தையில் இவர் பெற்றிருந்த உயர் அபிமானத்தையும் சுட்டி நிற்கிறது. பின், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் எஸ்.கே. பங்கர் அதிபராக இருந்த காலத்தில், அங்கு தன் கல்வியைத் தொடர்ந்து, அங்கிருந்து 1951-ல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, கணிதவியலில் 1955-ல் சிறப்புப் பட்டம் பெறுகிறார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 1955-ல் கணிதவியலில் வருகைதரு விரிவுரையாளராகத் திகழ்ந்து, பின் அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் தொண்டர் ஆசிரியராகவும், கொட்டாஞ்சேனை சென்ட். பெனடிக்ஸ் கல்லூரியிலும் தன்பணியைத் தொடர்ந்தார். பின் இலங்கை தொழில்நுட்பக்கல்லூரியில் போதனாசிரியராகப் பணியாற்றி, 1956-ல் திட்டமிடல் செயலகத்தில் குடிவிபரப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தில் ஆய்வு அதிகாரியாகச் சேர்கிறார்.

1965-ல் பொதுநலவாய நாடுகளுக்கான புலமைப் பரிசில் பெற்று, கனடாவில் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தைச் சிறப்புறச் செய்ததின் அடிப்படையில் கலாநிதிப்பட்ட ஆய்வினைத் தொடர அனுமதிக்கப்பட்டார்.

மகாலிங்கசிவம் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் அரசியல் பொருளாதாரத் துறையின்கீழ் ஆய்வு மேற்கொண்ட காலப்பகுதியில், பேராசிரியர் ஜோன் கிரீன், பேராசிரியர் ஈ.பி. நியு-பெல்ட் ஆகியோரின் தலைமையில் இப்பல்கலைக்கழகம் கனடாவின் ஆங்கிலம் பேசும் பிராந்தியத்தின் புகழ்மிக்க பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தது.

'கனடாவின் சுத்திகரிக்கப்பட்ட செம்புக் கனிமத்திற்கான சந்தை: ஒரு கணிதப் பொருளியல் ஆய்வு' (Market for Canadian Refined Copper: An Econometric Study) என்ற ஆய்வேட்டிற்காக மகாலிங்கசிவம் 1969-ல் கலாநிதிப்பட்டத்தைப் பெற்றார்.

1960-களில் கனடாவின் பொருளாதார வளர்ச்சியில் சுத்திகரிக்கப்பட்ட செம்புத் தொழில் பெரும் பங்கினை வகித்தது. செம்பினை அகழ்ந்தெடுப்பதில் உலகின் முதல் ஐந்து நாடுகளின் வரிசையில் கனடா நின்றது. மகாலிங்கசிவத்தின் இந்தப் பொருளியல் ஆய்வு புலமை ஆய்வாக மட்டுமன்றி, கனடாவின் பொருளாதாரத் தேசியக் கொள்கை உருவாக்கத்திற்கும் முக்கிய ஆதார ஆவணமாகத் திகழ்ந்தது.

1969-ல் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் பொருளியலில் மூவரே கலாநிதிப்பட்டம் பெற்றிருந்தனர். 'ஒன்ராரியோவின் வெண்ணெய்த் தொழிலின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்குமான காரணிகள், 1864-1924' என்ற ஆய்விற்காக ஈ.ஏ. ஹெஸ்லட் என்பாரும், 'இரட்டைத் தன்மை கொண்ட குறைவிருத்திப்

பொருளாதாரத்திற்கான பொருளாதார வளர்ச்சி மாதிரி' பற்றிய ஆய்விற்காக டீ.எச். லியு என்பாரும் கலாநிதிப்பட்டத்தினைப் பெற்றிருந்தனர். இவற்றில் மகாலிங்கசிவம் அவர்களின் ஆய்வு மிகக் கனதியான ஆய்வேடாகப் பாராட்டைப் பெற்றது.

கனடாவில் தான் கலாநிதிப் பட்டத்திற்காகப் பயிலும்போது தான், 'இலங்கையில் நாங்கள் பல்கலைக்கழகத்தில் பெற்



றுக்கொண்ட அறிவு உலகின் எந்தப் பல்கலைக்கழகத்திற்கும் குறைந்தது அல்ல என்று உணர்ந்தேன்' என்று, மகாலிங்கசிவம் அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் கூறியிருக்கிறார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சி.ஜே. எலியேசர், பேராசிரியர் நடராசர் ஆகிய இரு பெரும் கணித மேதைகளிடம் கணிதவியல் பயின்ற பெரும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருக்கிறது.

திட்டமிடல், வேலைவாய்ப்பு அமைச்சில் அவர் பணியாற்றிய காலப்பகுதியில், இலங்கை என்றும் சந்தித்திராத சீனிப் பிரச்சினையை எதிர்கொண்டது. மொத்த இறக்குமதியில் சீனி 4 வீதத்தைப் பிடித்திருந்தது. உலகசந்தையில் சீனியின் விலைத் தளம்பல்கள், ஏற்ற இறக்கங்கள் காரணமாக வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் அரசு கஷ்டங்களை எதிர்நோக்கியது. 1971-ல் சீனி இறக்குமதிக்கான கொடுப்பனவு சடுதியான பாரிய அதிகரிப்பைக் காட்டியது. 1967-ல் 74 மில்லியன் ரூபாயாக இருந்த கொடுப்பனவு, 1970-ல் 243 மில்லியன் ரூபாயைத் தொட்டது. சீனி இறக்குமதியின் அளவும் பெரும் அதிகரிப்பைக் காட்டியது.

இந்தச் சீனி நெருக்கடியைக் கையாளும் பொறுப்பினை அமைச்சு மகாலிங்கசிவம் அவர்களிடம் கையளித்தது. மகாலிங்கசிவத்திற்குச் செய்யும் தொழிலே தெய்வம். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு பொறுப்பினை செம்மையாகச் செய்து முடிக்கும் செயல்வீரன் அவர். பொருளியல் அறிஞர் மகாலிங்கசிவம் களத்தில் இறங்கினார். அப்போது இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு, விவசாய அமைப்பின்(FAO) வல்லுனராகக் கடமையாற்றிய கலாநிதி ஆல்பர்ட் விட்டன் (Albert Viton) உலகின் சீனி தொடர்பான சர்வதேச ஒப்பந்தங்கள் அனைத்தையும் கையாண்ட பேரறிஞர். சீனி தொடர்பான ஆய்விற்கு அவரின் நூல்களே வேதபுத்தகமாக இருந்தன. பேராசிரியர் விட்டனின் நூல்களிலிருந்து உலகின் சீனிப்பண்டம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்ந்தார் மகாலிங்கசிவம்.

1971-ற்கு முன் ஒரு ரேசன் அட்டைக்கு ஒரு இறாத்தல் சீனி 72 சதம் என்ற விலையில், 2 இறாத்தல் சீனி வழங்கப்பட்டது. சீனி இறக்குமதியில் அரசு பாரிய பிரச்சினையை எதிர்நோக்கிய நிலையில், சீனி உற்பத்தி, சீனி விநியோகம் என்பனவற்றில் புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டார் மகாலிங்கசிவம்.

ரேசன் அட்டைக்கு முதல் ஒரு இறாத்தல் சீனிக்கு 72 சத விலையும், அடுத்த இரண்டாவது இறாத்தல் சீனிக்கு ரூபா 7.50 என்றும் விலை நிர்ணயிக்கப்பட்டது.

உள்நாட்டில் சீனி உற்பத்தியை அதிகரிக்கவும், சீனித் தொழிற்சாலைகளில் சீனியின் குறைந்த உற்பத்திக்கான காரணங்களை ஆராயவும், சீனிக்கான பிரதியீட்டுப் பண்டங்கள் பற்றிய ஆய்வையும் மேற்கொண்டார்.

1970-ல் சீனி உற்பத்தி 8,000 தொன் ஆக இருந்த நிலையில், 1976-ல் சீனியின் உற்பத்தி இலக்கை 50,000 தொன்னாக நிர்ணயித்தார். கரும்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சியிலும் சீனி ஆலைகளை ஏற்படுத்துவதிலும் கவனம் செலுத்தினார். திட்டமிடல், வேலைவாய்ப்பு அமைச்சின் பிரதிநிதியாக, சீனிக்கூட்டுத்தாபனத்தின் இயக்குனர் சபையில் மகாலிங்கசிவம் அங்கம் வகித்தார்.

சீனி இறக்குமதி பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டது. கரும்பு உற்பத்திக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. சீனியின் உற்பத்திச் செலவு ஒரு இறாத்தலுக்கு ரூபா 1.65 என்பதிலிருந்து, 88

சதமாகக் குறைந்தது. சீனிக்கூட்டுத்தாபனம் ஒரு இறாத்தல் சீனியை ரூபா 2.00 விலைக்குச் சந்தைப்படுத்தியது. வெளிச் சந்தையில் ஒரு இறாத்தல் சீனி ரூபா 7.50-ஆக இருந்தது. 1976-ம் ஆண்டில் சீனிக்கூட்டுத்தாபனம் 50 மில்லியன் ரூபாயை நிகர லாபமாகப் பெற்றது.

1976-ல் சீனிக் கூட்டுத்தாபனத்தின் இயக்குனர் சபைக்கு ஓர் அரசியல்வாதி நியமிக்கப்படும்வரை, மகாலிங்கசிவம் அந்த இயக்குனர் சபை அங்கத்தவராக இருந்து சாதித்தவை இன்று பேசாப் பொருளாகிவிட்டது. பொருளியல் நிபுணர்கள் வீற்றிருக்கவேண்டிய ஆசனங்களில் அரசியல் எடுபிடிகள் நியமிக்கப்பட்ட அவலம் தொடர்ந்தபோது, இலங்கை பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்வதை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

பாகிஸ்தானின் விவசாயக் கொள்கை ஆய்வு, திட்டமிடல் ஆலோசகராகப் பணியாற்றிய காலத்தில், பாகிஸ்தானிலும் கரும்புப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வது பற்றிய ஆய்விலும் ஈடுபட்டார். மாலைதீவிலும் FAO ஆலோசகராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

பொருளாதாரத் திட்டமிடலில் கால் நூற்றாண்டு காலத்திற்கும் மேலான அவரின் அனுபவம் விசாலமானது. பொருளாதார, புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு, உள்ளீடு - வெளியீடு சார்ந்த அட்டவணை தயாரிப்பு (input-output tables), திட்ட மதிப்பிடல், துறைசார் திட்டங்களைத் தயாரித்தல், அரசாங்க முதலீடுகள் சார்ந்த திட்டங்கள், மாவட்ட மட்டத்தில் விவசாயத்திட்டங்களை நிறைவேற்றுதல், திட்டங்கள் நிறைவேற்றப்படாமைக்குரிய தடைகளைக் கண்டாய்தல், வருடாந்தத் திட்டங்களை ஆக்குதல் போன்று திட்டமிடலின் அனைத்து அம்சங்களிலும் அவர் பூரண அறிவு பெற்றிருந்தார்.

மாகாண சபைகள் உருவாகி, அவற்றின் முக்கிய அங்கமாக நிதிக்குழு அமைக்கப்பட்டபோது, அதன் முக்கிய நிர்வகியாக மகாலிங்கசிவம் நியமிக்கப்பட்டார். அதிகாரம் மையத்தில் குவிவதால் ஏற்படும் பாதக விளைவுகள், கிராமிய மட்டத்தில் அதிகாரம் பகிரப்படுவதன் அவசியம், நிதிப்பங்கீடு நியாயமாக அமைதல் என்பன பற்றி அவர் அதிக கவனம் செலுத்தினார். மகாலிங்கசிவமும் கலாநிதி வி. அம்பலவாணரும் திட்டமிடல் சேவையினை மிக உயர்ந்த நிலைக்கு வளர்த்தெடுத்திருந்தனர்.

இலங்கையின் புகழ்மிகு பொருளியல் அறிஞர் காமனி கொரியா, லால் ஜெயவர்த்தன ஆகியோருடன் பொருளாதாரத் திட்டமிடலில் இணைந்து பணியாற்றியவர் மகாலிங்கசிவம். 'Development Planning- lessons of Experience என்று Albert Waterston என்ற அறிஞர் எழுதிய நூலை நாங்கள் அடிக்கோடிட்டு வாசித்தோம்' என்று மகாலிங்கசிவம் கூறியிருக்கிறார்.

காமனி கொரியா இலங்கையின் பத்தாண்டுப் பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தபோது, இந்தியத் திட்டமிடலின் தந்தை எனப்படும் பேராசிரியர் மகலநோபிஸ் என்னும் கணிதப் பொருளியலாளரின் ஆலோசனையை நாடியிருந்தார்.

மகாலிங்கசிவம் அவர்கள் இந்தப் பத்தாண்டுத் திட்டத்தைப் பார்த்தபோது அவருக்கு முதலில் தோன்றியது இந்தத் திட்டத்தில் எந்த கணிதப்பொருளாதார மாதிரியும் பாவிக்கப்படவில்லை என்பதாகும். இத்தகைய நீண்ட பொருளாதாரத் திட்டத்தில் ஒரு கணிதப் பொருளாதார மாதிரியின் பிரயோகம் மிக அவசியமானது என்றே அவர் கருதினார்.

இலங்கையின் தேசியவருமானச் சுழற்சி பற்றிய திட்டமிடல் அமைச்சு வெளியிட்டுள்ள கணிதப் பொருளாதார மாதிரி என்பது அவரின் உருவாக்கமே. எங்களுக்கு அந்தத் தேசிய வருமான மாதிரி பற்றி முழுநேர வகுப்பெடுத்திருந்தார். அவர் படிப்பித்த Linear Programming பற்றி மிகப் பல ஆண்டுகளுக்குப்பின், லண்டனில் A/L பொருளியல் வகுப்பிற்குப் படிப்பித்தபோது மகாலிங்கசிவமே நினைவில் வந்தார்.

இலங்கையின் திட்டமிடல் பற்றிய தெளிவான தரிசனம் அவரிடம் இருந்தது. திட்டமிடல் ஸ்தாபன அமைப்பில் தொடர்ச்சியின்மை என்பது மிக முக்கிய குறைபாடாக அவர் நோக்கினார். 'திட்டமிடுவோர் ரயில்வே கம்பார்ட்மென்ட்டுகளைப் போல ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றப்படுகின்றனர். ஒவ்வொரு அரசாங்கமும் மாறும்போது, இந்த ரயில் பெட்டிகள் நீக்கப்பட்டு வேறு ரயில் தடத்தில் ரயில் இயந்திரங்களுடன் இணைக்கப்பட்டு விடுகின்றன. பாதைத் தடங்கள் மாற்றும் வேலை நடந்துகொண்டிருக்கும்போது, ஆட்களை மாற்றுவதும் சேர்ப்பதும் நடந்து கொண்டிருக்கிறது. சிலர் வசதியற்ற இருக்கைகளுக்கு மாற்றப்படுகின்றனர். அனுபவம் எதுவுமில்லாத பல ரயிவே பரிசோதகர்களும் எஞ்சின் டிரைவர்களும் புதிதாகச் சேர்க்கப்படுகின்றனர். திட்டமிடல் என்பது தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கவேண்டிய செய்முறையாகும்.' என்கிறார் மகாலிங்கசிவம்.

இந்தியாவின் பொருளாதார நிபுணர் பி.பி. தாஸ் குப்தாவும், கலாநிதி காமனி கொரியாவும் நிதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைச் சந்தித்தபோது, 'எங்களுக்குக் கட்டட வரைகலைஞர் தேவையில்லை. எங்களுக்கு மேசன்மார் தான் வேண்டும்' என்று நிதி அமைச்சர் திருவாய் மலர்ந்தபோது, திட்டமிடல் பற்றி மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எத்தகைய நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தன என்பதை மகாலிங்கசிவம் நேரடியாகப் பார்த்தறிந்தவர்.

சோஷலிச ஆட்சி என்ற பெயரில் நடைபெற்ற அரசியல் கூத்துகளை அவர் நன்கறிவார். அவற்றை மெல்லிய புன்னகையோடு கடந்து செல்ல வல்லவர்.

காமனி கொரியா போன்ற பொருளியல் அறிஞர்கள் ஆட்சிக்கு வந்த வெவ்வேறு அரசாங்கங்களால் எவ்வாறு அலட்சியமாக நடத்தப்பட்டனர் என்பதை அவர் அறிவார். என் அறிவுக்கெட்டிய வரையில் இலங்கையில் கணிதப் பொருளியலில் முதல் கலாநிதிப் பட்டம் பெற்றவர் மகாலிங்கசிவம் என்றே கருதுகிறேன். 'புத்தகப் படிப்பும் தேர்ச்சிகளும் மிகவும் இலகுவானவை. என்னால் எந்தப்பாடத்தையும் கற்று, அதில் புலமை பெற்று, பட்டம் பெறமுடியும்' என்று அவர் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேசப் பொருளாதார அமைப்பு ஒன்றிற்கு தொழில் விண்ணப்பம் செய்தபோது, தனது ஒரு நடுவராக காமனி கொரியாவைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆத்மீகத்தில் தோய்ந்த மகாலிங்கசிவம் அவர்கள் யோக சுவாமிகளிடம் அதீத பக்தி கொண்டவர். கனடாவிற்கு உயர் கல்வியைத் தொடரப் பயணமாகுமுன், யோகசுவாமிகளிடம் ஆசீர்வாதம் பெறச் சென்றிருக்கிறார். மகாலிங்கசிவம் அவர்களின் துணைவியார் பெயர் மகாதேவி. 'மகாலிங்கம் - மகாதேவி, நீவிர் எங்கும் மகா, எல்லாவற்றிலும் மகா, சென்று வாருங்கள்' என்று யோகசுவாமிகள் ஆசீர்வதித்து அனுப்பியுள்ளார்.

தனது குலதெய்வம் பண்டகைப் பிள்ளையார் கோயில் தீர்த்தோற்சவத்திலும் செல்வச்சந்நிதி முருகன் தேர்த் தீர்த்தங்களிலும் மகாலிங்கசிவம் பங்குபெறத் தவறுவதில்லை. பண்டகைப் பிள்ளையார் கோயில் உற்சவமூர்த்தியை வார்ப்பித்து, மகோற்சவம் செய்த அரும் பணியினை மகாலிங்கசிவம் அவர்களே மேற்கொண்டிருந்தார். பண்டகைப் பிள்ளையார் ஆலயப் பரிபாலன சபையை ஸ்தாபித்து, அமரராகும் வரை, கால்நூற்றாண்டுக்கு மேலாக அச்சபையின் காப்பாளராக அரும் பணி ஆற்றியுள்ளார்.






மகாலிங்கசிவம் அவர்கள் தான் பயின்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டிருந்தார். ஐம்பதுகளின் நடுப்பகுதியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணியாற்றிய கே.டி. ஜோன், கே.சி. ஜேக்கப், டி. ஆபிரகாம், கே.எம். மேத்தியு போன்ற ஆசிரியர்களின் அரிய கல்விப் பணியை மகாலிங்கசிவம் என்றும் நினைவில் போற்றி வருபவர். அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளையின் தலைவராக நின்று, கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி நல்கியுள்ளார்.

கொழும்பு, முகத்துவாரம் கதீற்றல் தமிழ்க் கலவன் பாடசாலை 1973-74-ல் மூடப்படவேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்ட நிலையில், முத்துவெல மாவத்தையில் உள்ள தனியார் வீடொன்றை விலைக்கு வாங்கி, அதனை முகத்துவாரம் இந்துக்கல்லூரியாக மாற்றி, அங்குள்ள குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவி நல்கிய பெருமகனாக மகாலிங்கசிவம் திகழ்கிறார்.

பல பொது நிறுவனங்களில் அவர் பொறுப்பாளராகத் திகழ்ந்தாலும், கண்டிப்பும் பொது நிதியை விரயமாக்காமல், சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையும் காட்டியிருக்கிறார்.

ஆத்மீக நம்பிக்கை மிக்க அவர், பொதுத் தொண்டுகளில் ஆழ்ந்த ஈடுபாட்டோடு உழைத்து வந்திருக்கிறார். அதி உயர் பதவிகளை வகித்தபோதும், எளிமையும் அன்பும் சாந்தமும் உதவும் உள்ளமும் கொண்டவராக விளங்கியிருக்கிறார்.

லண்டனுக்கு அவர் வந்திருந்த வேளையில், தீபம் தொலைக்காட்சியில் அவருடன் ஒரு நேர்காணலை ஒழுங்கு செய்திருந்தேன். அவரது திட்டமிடல் அமைச்சின் அனுபவங்களைக் கூறுமாறு கேட்டிருந்தேன். 'எனக்குத் தேவாரங்களே மறந்து போய் விடுகிறது. நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல எனக்கு அவ்வளவு சம்பவங்கள் நினைவில் இல்லை' என்று கூறியபோது, அவர் நினைவை இழந்து கொண்டிருக்கிறார் என்றுணர்ந்து வருந்தினேன்.

இராசையா மகாலிங்கசிவம் அவர்கள் அமரராகி இன்று பதினேழு ஆண்டுகள் கடந்துவிட்டன. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டிருந்த பெருமகனின் கதை நினைவில் மீட்கப்படவேண்டிய கதையாகும்.



nithiyananthan.m@thaiveedu.com



# பண்டிதர் க. உமாமகேஸ்வரம்பிள்ளை

## க. சிவானந்தன்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் சைவப்பாரம்பரியத்தி லும் தமிழ்ப் புலமையிலும் புகழ்பெற்று விளங்கிய பண்டிதர் கதிரிப்பிள்ளைக்கும் அவரது மனைவிக்கும் 1934-ம் ஆண்டு வைகாசி மாதம் 5-ம் திகதி மூத்த ஆண் மகவாக உமாம கேஸ்வரம்பிள்ளை தோன்றினார். தனது ஆரம்பக் கல்வியை வீட்டின் அண்மையில் இருந்த தந்தையின் பாடசாலையி லேயே பயின்ற பின்னர், 1947-ம் ஆண்டு உயர் கல்வி பெறுவ தற்காகத் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் பெரு விருப்புடன் இணைந்து கொண்டார். சேர். பொன். இராமநாத-னால் உருவாக்கப்பட்ட இக்கல்லூரி, அவரது மருமகனும் பின்னாளில் சுதந்திர இலங்கையின் முதலாவது தபால் தந் தித் தொடர்புகள் அமைச்சராகப் பணியாற்றிப் புகழ் பெற்றவ ருமான பண்டிதர் நடேசபிள்ளை அவர்களால் மிகத் திறமையு டன் நிர்வாகிக்கப்பட்டு வந்தது. தமிழ் விற்பனமும் ஆழ்ந்த சைவ சமய அறிவும் ஆங்கிலப் புலமையும் கொண்ட பெரும் கல்விமான்களை உருவாக்கிப் பேர் படைத்த இக்கல்லூரி, உமாமகேஸ்வரம்பிள்ளை போன்ற கல்வித் தாகம் கொண்ட சீரிய மாணவர்களை, ஈழம் எங்கணும் இருந்து ஈர்த்துக் கொண்டது என்பது வரலாறு.

தனது நன்னடத்தையாலும் கல்வியில் காட்டிய அக்கறையா லும் இக்கல்லூரியின் பிரபலமான ஆசிரியராகவும் அதிபராக வும் விளங்கிய உயர் திரு. சிவபாதசுந்தரம் MA (Cantab) அவர்களின் பிரியமான மாணவராக இவர் உயர்ந்தார். தமிழ், சமஸ்கிருதம், வரலாறு, ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்க ளில் சிறந்த மாணவராக விளங்கிய போதும் 1955-ம் ஆண்டு HSC தேர்வில் பல்கலைக்கழகத்திற்கு இவர் தேர்வு பெற வில்லை. இது அவருக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத் தியது.

அடுத்த மூன்றாண்டு காலப்பகுதியில் இவரது கவனம் பண் டைத் தமிழ் இலக்கியங்களிலும் நவீனத் தமிழ் இலக்கிய மலர்ச்சியிலும் திரும்பியது.

ஊரிலுள்ள ஒத்த கருத்துள்ள பல நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்து, தமிழ் இலக்கியத்தில் தங்கள் முத்திரைகளைப் பதித்த பிரபல ஆசிரியர்களின் பேர் சொல்லும் படைப்புக் களை எல்லாம் வாசித்துத் தீர்த்தார்கள். தீவிரமான ஆழ்ந்த வாசிப்பின் விளைவாக, கு.ப.ரா., புதுமைப்பித்தன், தொ.மு.சி. ரகுநாதன், லா.ச.ரா., தி. ஜானகிராமன், கு. அழகிரிசாமி ஆகி யோர் இவரது மனதைக் கவர்ந்த கதாசிரியர்களாக விளங்கி னார்கள். இவரது நண்பர் குழாம் கதைகளை ரசிப்பதோடு அமையாது, அக்கதைகளை ஆராய்ந்து விமர்சனம் செய்வதி லும் ஆக்கபூர்வமாகச் செயற்படுவதன் மூலம் அன்றைய இளைஞர்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தது எனத் துணிந்து கூறலாம். இரசனை முதிர்ந்து கதாசிரியர்களின்



திறனை எடைபோடும் திறன் அதிகரித்துக் கொண்டுவந்த பிற்காலத்தில், மெல்ல மெல்லத் திறமையான கதாசிரியர்க ளின் எழுத்துக்களையே அதிகளவு ஆர்வத்துடன் வாசிக்கும் போக்குடையவராக மாறினார். வாழ்நாள் முழுவதும் தொடர்ந்த இலக்கியப் பயணத்தில் பின்னாளில் இலங்கை நிர்வாக சேவையில் புகழ் பெற்று விளங்கிய சண்முகலிங்க-மும் இவரது இனிய நண்பராக வாய்த்தார்.

இந்தக் காலப் பகுதியில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் தனித் துவத்தைப் பிரதிபலிக்கும் ஈழநாடு பத்திரிகையின் புகழ் பூத்த ஆசிரியராக விளங்கிய திரு. ஹரன் அவர்களின் உதவி

யாளராகப் பணிபுரியும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. முழு மனதோடு அதனைப் பற்றிக்கொண்ட உமாமகேஸ்வரம் பிள்ளை, பத்திரிகையின் ஆசிரிய தலையங்கங்களுக்குரிய விடயங்களைத் தேர்ந்தெடுப்பதிலும் பத்திரிகைச் செய்திக ளில் இலக்கண வழுக்களைத் தவிர்ப்பதிலும் சைவ சமயம்,



தமிழ் மொழி சார்ந்த கட்டுரைகளை வரைவதிலும் பெரும் தேர்ச்சி பெற்றார். இவரது எழுத்தாற்றல் மேலும் மெருகு பெறு வதற்கும், முரண்பாடான விமரிசனக் கருத்துக்களைச் சாதுரி யமாக வெளிப்படுத்துவதற்கும் இப்பத்திரிகையில் பெற்ற பயிற்சி உறுதுணையாக அமைந்தது.

நவீன தமிழ் இலக்கியக் காதலும் பத்திரிகைப் பணியும் ஒருபு றம் இருந்தாலும் பண்டைத் தமிழ் இலக்கியத்திலும் தமிழ் இலக்கணத்திலும் அவருக்கு இருந்த ஆர்வம் சற்றும் குறைய வில்லை. வீட்டில் தனது தந்தையாரிடமும் பண்டிதர் பொன் னம்பலம் அவர்கள் நடத்திய பிரவேச பண்டிதர், பால பண்டி தர் வகுப்புகளிலும் தமிழ் இலக்கண நூல்களை ஐயம்திரிப றக் கற்றுத்தேர்ந்தார்.

ஏறத்தாழ இரண்டாண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக நியமனம் பெற்றுச் சேவையாற்றிக்கொண்டிருக் கும்போதே பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து ‘பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்’ என்ற தகைமை யைப் பெறுவதற்கான இரண்டாண்டுப் பயிற்சிக் கல்வியை மேற்கொள்ளும் வாய்ப்பும் கிட்டியது. பயிற்சிக் கலாசாலை யில் இலங்கையின் தலைசிறந்த இலக்கிய இரசனையாளராக விளங்கிய பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களிடம் பயி லும் பேறு கிட்டியது. பிற்காலத்தில் இலங்கையின் மரபுக்க விதை மரபில் தனது பெயரை நிரந்தரமாக நிலைநிறுத்திய சோ. பத்பநாபன் அவர்களுடன் சக கலாசாலை மாணவனாக நட்பும் மலர்ந்தது.

பயிற்சியை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர், 1968-70 வரையிலான காலப்பகுதியில் மூன்றாண்டுகள் கிழக்கு மாகாணத்திலுள்ள கிளிவெட்டி (மூதூர்) பாடசாலையில் ஆங் கில ஆசிரியராகப் பணியாற்றினார். இக்காலப் பகுதியில் இவ ருக்குக் கவிஞர் சோ. பத்மநாபனுடனான நட்பு மேலும் வலுப் பெற்றது.

1970-ம் ஆண்டின் பின்னர் யாழ்ப்பாணம் கொல்லன்கலட்டி யில் ஒரு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றார். இப்பாட சாலை ஊர்மக்களால் ‘ஐயர் பாடசாலை’ என்று அழைக்கப் பட்டது. இக்காலத்திலே பெற்றோர் விரும்பியபடியே சாவித்-திரி என்ற பெண்ணைத் திருமணம் செய்து இல்லறம் நடத்தத் தொடங்கினார். இவரது மனைவியார் வெளிவாரி மாணவியா கப் பயின்று BSc (Mathematics) பட்டம் பெற்றவர். கணிதவி யல் ஆசிரியையாகக் கடமையாற்றும்போது பட்டப் பின் படிப் பான Diploma in Education என்ற தகைமையையும் பெற்றுப் பெரும் புகழுடன் கணிதவியல் ஆசிரியையாக நீண்ட காலம் சேவையாற்றிப் புகழ்பெற்றவர் என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது.

‘ஈன்று புறம் தருதல் தாயின் கடனே, சான்றோனாக்குதல் தந் தையின் கடனே’ என்று புறநானூறு கூறுதற்கொப்ப, தம்பதியி னர் திருமண வாழ்வில் இரண்டு ஆண்மக்களைப் பெற்றுக் கண்ணும் கருத்துமாகக் கல்வியும் ஒழுக்கமும் புகட்டி வளர்த் தனர். இப்பாடசாலையில் சேவையாற்றுகின்ற காலப்பகுதி யில்த்தான் பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் ஆகிய தேர்வுகளை எழுதிச் சித்தி எய்தினார். ஏழாண்டுகள் ஐயர் பாடசாலையில் பணியாற்றிய பின்னர் பன்னாலையில் தனது தந்தையால் ஸ்தாபிக்கப்பட்ட விழிசிட்டி சிவஞான வித் தியாசாலைக்கு மாற்றலாகி, அங்கேயும் தனது சேவையை மிக நீண்டகாலம் தொடர்ந்தார். இக்காலத்தில் இவரிடம் பயின்று மேல் நிலைக்கு உயர்ந்த மாணவர்கள் பலப்பலர்.

மிகச் சிறந்த ஆசிரியர் என்ற நற்பெயரையும் மாணவர்களதும் பெற்றோர்களினதும் ஊர்மக்களினதும் நல்லெண்ணத்தையும் அபிமானத்தையும் பெற்று வாழ்ந்த இக்காலப்பகுதியை இவரது வாழ்வின் பொற்காலம் என வர்ணிக்கலாம். ஏறத்தாழப் பதினேழு ஆண்டுகள் இப்பாடசாலையில் அர்ப்பணிப்போடு சேவையாற்றிப் பாடசாலையின் வரலாற்றில் தந்தையின் பெயரோடு தனது பெயரையும் பிரிக்க முடியாதபடி நிலைநிறுத்திக்கொண்டார்.

மோசமாகிக் கொண்டே வந்த இனப்பிரச்சினையின் விளைவாக, நாட்டின் அமைதி சீர்குலைந்த காரணத்தால் தெல்லிப்பழையிலும் அதன் அயற்கிராமங்களிலும் வாழ்ந்த மக்கள் 1989-90 ஆண்டுகளிலே, தமது ஊரைத் துறந்து அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீரோடு குடும்பம் குடும்பமாக வெளியேறிச் சென்றார்கள். இவரது மனைவியார் 1990 ஆண்டளவிலே இந்திய தூதரகத்தில் மொழிபெயர்ப்பாளர் என்ற பதவியைப் பெற்றுப் பிள்ளைகளையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு கொழும்பு சென்று வாழத் தொடங்கியிருந்தார். உமாமகேஸ்வரம்பிள்ளை பலத்த சிரமங்களுக்கு மத்தியிலும் 1994-ம் ஆண்டுவரை பன்னாலையில் தனது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தும் ஆற்றிவந்தார். ஆனால் இதன் பின்னர் பாடசாலைக்கு வரும் மாணவர் தொகை பலத்த வீழ்ச்சியடைந்ததன் காரணமாகவும், பொதுமக்களுக்குப் பன்னாலைப் பிரதேசத்தில் நிலவிய பாதுகாப்பின்மைச் சூழ்நிலை காரணமாகவும் உயிரினும் மேலாக மதித்துப் போற்றிய ஆசிரியப் பதவியிலிருந்து விருப்பமின்றியே ஓய்வுபெற்றுக் கொழும்பு சென்று தனது குடும்பத்துடன் இணைந்து வாழத் தொடங்கினார்.

## முடிவுரை:

தமிழில் ஆழமான பாண்டித்தியமும் சமஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் சிறந்த தேர்ச்சியும் பெற்று விளங்கிய உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களுடைய சிறப்பை இலங்கைத் தமிழ் கூறும் நல்லுலகம் பரவலாக அறிந்திருக்கவில்லை என்றே கூறவேண்டும். இயல்பாகவே மிகுந்த தன்னடக்கம் உடையவராதலாலும், சுயதம்பட்டங்களை விலக்குபவராதலாலும், பெரும்பாலோனோர் இவரது பன்மொழித் திறமையையும் தமிழில் இவருக்கு வாய்த்திருந்த நுண்மாண் நுழைபுலத்தையும் அறியவொண்ணாதிருந்தனர். ஆனால் தமிழில் ஆழமான தேர்ச்சி பெற்ற இலங்கைப் பண்டிதர்கள் மட்டும் இவரது தமிழ்ப் பாண்டித்தியத்தைச் சரியாகவே அடையாளம் கண்டு இவரைத் தமது தலைவராகவே போற்றிக் கௌரவித்தனர். இலங்கை வானொலியின் தேசிய சேவையில் சீரிய பல உரைகளை இவர் ஆற்றியிருக்கின்றார். தமது ஐயங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக இவரது இறுதிக் காலம் வரையிலே உலகின் பல பாகங்களிலிருந்தும் இவரைத் தேடிவந்த அறிஞர்கள் பலப்பலர். இலண்டனிலிருந்து சைவ சமய முன்னேற்றச் சங்கத்தினால் வெளியிடப்படுகின்ற 'கலசம்' எனும் பத்திரிகையிலே வெவ்வேறு காலப்பகுதிகளில் தமிழும் சைவ சமயமும் சார்ந்த சிறந்த பல கட்டுரைகளை எழுதிவந்திருக்கின்றார். இவரது எழுத்துகளில் இலக்கிய இரசனை சொட்டும். சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் போன்றோரது எழுத்துகளில் சுடர்விடும் பழந் தமிழ் இலக்கியச் சுவையை இவரது எழுத்துக்களிலும் அனுபவிக்கலாம்.

***'பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால்***
***ஊராண்மை மற்றதன் எஃகு'***

என்ற குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர், ஊராண்மைக்கு உதாரணமாக முதல்நாள் போரில் படைகளையும் படைக்கலன்களையும் இழந்து தோற்றுத் தனியனாக நின்ற இராவணனை 'இன்று போய் நாளை வா' என்று திருப்பி அனுப்பிய கோசல நாட்டுடை வள்ளலாகிய இராமனை உதாரணமாகக் காட்டிச் செல்கிறார். காலம் காலமாகப் பரிமேலழகர் உரையையும் அவர்தம் உதாரணத்தையும் அறிஞர் குழாம் போற்றிப் புகழ்ந்தே வந்திருக்கிறது. ஆனால் உமாமகேஸ்வரம்பிள்ளையோ, பரிமேலழகர் உதாரணம் குறையுடைத்து என்று அதனை மறுதலித்ததோடமையாது, அதற்கேற்ற உதாரணம் சேக்கிழார் படைத்துத் தருகின்ற ஏனாதிநாயனாரே ஆவார் என வாதிட்டு எப்போதோ ஒரு காலத்தில் வரைந்த கட்டுரை, இன்றளவும் தமிழ் அறிஞர் சபைகளிலே காரசாரமான விவாதங்களையும் காட்டமான விமரிசனங்களையும் எழுப்புகின்ற பேசுபொருளாக உயிர்த்துடிப்புடன் உலாவந்து கொண்டிருக்கின்றது.

பல்வேறு தருணங்களில் தனக்கே உரித்தான பார்வையினூடாகப் பழந் தமிழ் இலக்கியங்களில் இருந்து மேற்கோள்களை வழங்குவதிலும், நாமறிந்த விடயங்களுக்கே நாமறியாத ஒரு கோணத்தில் இருந்து விளக்கம் சொல்வதிலும் இவருக்கு இணையானவர் வெகுசிலரே. பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இவரது ஆசிரியராகவிருந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் பண்டிதர் கதிரிப்பிள்ளை பற்றியும் அவரது புதல்வர் உமாமகேஸ்வரம்பிள்ளை பற்றியும் தான் வரைந்த ஒரு கட்டுரையிலே குறிப்பிட்டிருக்கிறார்.

***'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து***
***முந்தி இருப்பச் செயல்'***

என்ற குறளுக்கு உதாரணமாகத் தந்தையாகிய பண்டிதர் கதிரிப்பிள்ளையைக் குறிப்பிட்ட பண்டிதமணி அவர்கள்,

***'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை***
***என்நோற்றான் கொல்என்னும் சொல்'***

என்ற குறளுக்கு உதாரணமாகப் புத்திரனாகிய பண்டிதர் உமாமகேஸ்வரம்பிள்ளையை எடுத்துக் காட்டுகிறார் என்றால், பண்டிதமணி அவர்களது மனதிலே தந்தையும் மகனும் எத்துணை உயர்வான இடம் பெற்றிருந்தார்கள் என அறியக் கூடியதாக இருக்கிறதல்லவா ?

'பண்ணும், பரதமும், கல்வியும், தீஞ்சொற்பனுவலும் யான் எண்ணும்பொழுது எளிது எய்த நல்காய்' எனக் குமரகுருபரர் சகல கலாவல்லியை வேண்டினார். இவற்றுள் பரதம் தவிர்ந்த மற்றைய மூன்றையுமே உமாமகேஸ்வரம்பிள்ளைக்கு கலைவாணி அருளியிருந்தாள். எனவே இவர் சிறுவயதிலிருந்தே சங்கீத ஞானம் கைவரப் பெற்றவராக மிளிர்ந்தார். சைவத் திருமுறைகளின் பண்களை முழுமையாக அறிந்து அவற்றின் சார்பு, விரிவுகளை விளக்குமளவு வித்தகம் கொண்டவராக

வளர்ந்தார். சென்னை மார்கழி மாத சங்கீத சீசனுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தமையனாராகிய உமாமகேஸ்வரம்பிள்ளையும், லண்டனிலிருந்து தம்பியாகிய ஜெகதீஸ்வரம்பிள்ளையும் இயன்ற வரையில் தவறாது செல்வார்கள். கடந்த அறுபது ஆண்டுகளில் கோலோச்சிய பெரும் சங்கீத வித்வான்களின் கச்சேரிகளை இருவரும் நன்கு அனுபவித்துக் கேட்டிருக்கிறார்கள். அந்த இசை இன்பவெள்ளத்தில் மூழ்கிய அனுபவத்தைப் பிறருக்கு இரசனையோடு எடுத்துரைப்பதிலும் இருவரும் வல்லவர்களே.

தருமபுர ஆதீனம் பன்னிரெண்டு சைவத் திருமுறைகளையும் பதிப்பித்து வெளியிட எண்ணியபோது, அவற்றின் பதிப்பை மெய்ப்புப் பார்க்கும் பிரதான பொறுப்பைப் பண்டிதர் உமாமகேஸ்வரம்பிள்ளையிடமே ஒப்படைத்தது. தமிழ்நாடு சென்று தருமபுர ஆதீன மடங்களிலே ஓராண்டுக்கு மேலாகத் தங்கி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு, வேறும் வித்துவான்களின் உதவியுடன் இம் மாபெரும் பணியை வெற்றிகரமாக முடித்துக் கொடுத்தார். இவரது மெய்வருத்தம் பாராது கண் துஞ்சாது ஆற்றிய பெருஞ் சேவையைப் பாராட்டித் தருமபுர ஆதீன மடாதிபதி இவருக்குப் பொன்னாடை போர்த்தி 'வித்துவான்' என்ற பட்டமும் அளித்துக் கௌரவித்தார். சைவத்துக்குத் தான் ஆற்றிய பணியைத் தனக்குக் கிட்டிய மாபெரும் பேறாகவே பாவித்து உமாமகேஸ்வரம்பிள்ளை அடைந்த மகிழ்ச்சியும் மன நிறைவும் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாதவை.

ஈழத் தமிழ் மக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் செய்யத் தவறிய பணியை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் செய்து ஓரளவுக்காவது ஈழத் தமிழ்ப் பண்டிதர்களின் மனக் குறையைத் தீர்த்து வைத்தது எனக் கூறலாம். 2021-ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எடுத்த 'இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு' விழாவின் போது தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் பண்டிதர் உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்கள் ஆற்றிய பெரும் பங்களிப்பினைக் கௌரவிக்கும் முகமாக நினைவுச் சின்னம் ஒன்றினை வழங்கிக் கௌரவித்தார்கள்.

லண்டன் பத்மநாப ஐயர் முனைப்புடன் செயற்பட்டு 'நூலகம்' என்ற மின் நூலகத்தின் ஊடாக உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களைப் பற்றிய ஆவணப்படம் ஒன்றினை அவர் வாழ்ந்த காலத்திலேயே தயாரித்து வெளியிட்டார்.

'மகன் தந்தைக்காற்றும் உதவி' என்ற குறளுக்கு உதாரணமாகத் திகழ்ந்த மைந்தனாகவும்,

***'சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்***
***செவி வாய் ஆக நெஞ்சு களன் ஆகக்***
***கேட்டவை கேட்டு அவை***
***விடாது உளத்தமைத்து'***

பயின்ற மாணவனாகவும்,

***'உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்து***
***விரையான் வெகுளான்***
***விரும்பி முகமலர்ந்து***
***கொள்வோன் கொள்வகை***
***அறிந்தவன் உளங்கொளக்***
***கோட்டமின் மனத்தொடு'***

கற்பித்த ஆசானாகவும்

***'சொல்லுக சொல்லைப்பிறிதோர் சொல் அச்சொல்லை***
***வெல்லும் சொல்இன்மை அறிந்து'***

என்ற குறளுக்கு விளக்கம் தருவது போன்ற சொல்வன்மை உள்ள பேச்சாளராகவும், சங்கீதப் பிரியராகவும், பன்மொழி வித்தகராகவும் கற்கவேண்டியவைகளைக் கசடறக் கற்று அதன்படியே நிற்கவேண்டும் என்ற நெறிப்படி வாழ்ந்தவருமாகிய பண்டிதர் உமாமகேஸ்வரம்பிள்ளை, தனது தொண்ணூறாம் ஆண்டை நெருங்குகின்ற நேரத்தில் 21.04.2024 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஆறுமுக நாவலரின் மருகரான வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் மாணாக்கரான, குமாரசாமிப் புலவரின் மாணவரான, பண்டிதர் கதிரிப்பிள்ளையின் புதல்வனும் மாணவனுமான பண்டிதர் உமாமகேஸ்வரம்பிள்ளையின் மரணத்தோடு நாவலர் பெருமானின் நேரடிச் சிஷ்ய பரம்பரையாகத் திகழ்ந்த புலமைப் பாரம்பரியம் மிக்க பண்டிதப் பரம்பரை ஒன்று முடிவுக்கு வருகிறது. அவர் விட்டுச் சென்ற இடம் என்றென்றும் வெற்றிடமாகவே இருக்கப் போகிறதோ என்று தமிழறிந்த பெரும் புலவர் மனங் கலங்கி ஏங்குகின்றனர்.

தமிழ் அன்னை தனது தவப்புதல்வன் ஒருவனை இழந்து தவிக்கிறாள்.

ஆனாலும்,

***'நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்***
***பெருமை உடைத்து இவ்வுலகு'***

என்ற குறளின்படி,

***'ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும்***
***மாண்டார் வருவரோ இம் மாநிலத்தே'***

என்று மனதைத் தேற்றிக் கொள்கின்றோம். அவருடைய புகழ் என்றென்றும் நிலைத்து நின்று வாழ்வதாக என்று வாழ்த்துகின்றோம். அவருடைய பணிகள் மேன்மேலும் தொடர வேண்டும். சைவநெறியையும் தமிழ் மொழியையும் ஐயந் திரிபறக் கற்றோர் பலர் நமது மண்ணிலே தோன்றிப் பல்கவேண்டும் என்ற அவர் விருப்புக் கைகூடவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். அவரது இழப்பால் தவிக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பிக்கின்றோம். அமரர் உமாமகேஸ்வரம்பிள்ளையின் திருநாமம் நிலைத்து வாழ்வதாக என்று நமது அஞ்சலிகளைக் கரம் கூப்பிச் சமர்ப்பிக்கின்றோம்.

sivanandan.k@thaiveedu.com





# திருக்குறளை உலகமயமாக்குவதில் லியோ டால்ஸ்டோயின் பங்கு

– குமார் புனிதவேல்

லியோ டால்ஸ்டோய் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த ஒரு சிறந்த எழுத்தாளர். ஒரு சிறந்த தத்துவவாதி. அவர் எழுதிய 'போரும் அமைதியும்' (War and Peace) புனைகதை, 1966-ம் ஆண்டு ஒரு திரைப்படமாக வெளிவந்தது. கொழும்பில் அமைந்துள்ள லிபட்டி சினிமா திரையரங்கில் அந்த திரைப்படத்தை பார்த்தது, இன்றும் நினைவில் உள்ளது.

1908-ம் ஆண்டில் தென்னாபிரிக்காவில் 'ஃப்ரீ இந்துஸ்தான்' (Free Hindstan) என்ற பத்திரிகை இந்திய வம்சாவழியைச் சேர்ந்த தாரக் தாஸ் (Tarak Das) என்பவரால் நடத்தப்பட்டு வந்தது. அது மகாத்மா காந்தி இளைஞராக தென்னாபிரிக்காவில் வழக்கறிஞராக கடமையாற்றிய காலம்! அந்த பத்திரிகையில் வெளிவந்த சுதந்திரப் போராட்டம் பற்றிய கட்டுரைக்கு மறுப்புத் தெரிவித்து, லியோ டால்ஸ்டோய் தனது தாய்மொழியான ரஷ்ய மொழியில் நீண்ட கடிதம் எழுதினார்.

அக்கடிதத்தில் பல புரட்சிகரமான கருத்துகளை வெளிப்படுத்தினார் லியோ டால்ஸ்டோய். அதனால் கவரப்பட்ட டாரக்-டாஸ், அதை சிறு புத்தகமாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட விரும்பினார். டால்ஸ்டோயின் இரசிகராக காந்தி இருந்தமையால், அந்த புத்தகத்தை சரிபார்த்து முன்னுரை எழுதும் பொறுப்பு அவரிடமே கொடுக்கப்பட்டது. அச்சிறு நூலில் ஆறு அத்தியாயங்கள் இருந்தன. ஒவ்வொன்றின் ஆரம்பத்திலும் கீதையில் இருந்து மேற்கோள்கள் காட்டப்பட்டிருப்பினும் ஐந்தாவது அதிகாரம் 'இந்துக்குறள்' என்ற தலைப்பில் இருந்ததுடன் அதில் 'இன்னா செய்யாமை' எனும் அதிகாரத்திலிருந்து ஆறு குறட்பாக்கள் மேற்கோள் காட்டப்பட்டிருந்தன. அந்த அதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு விடயத்தை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து இங்கு தருகிறேன்.

*'இருநூறு மில்லியன் மக்கள் வசிக்கும் நாட்டை ஒரு வியாபார அமைப்பு அடிமைப்படுத்தியுள்ளது. மூடநம்பிக்கை இல்லாத ஒருவரிடம் இதைச் சொன்னால் அவர் மேற்கூறியதன் அர்த்தத்தை புரியாமல் தடுமாறுவார். முப்பதினாயிரம் சாதாரண குடிமக்கள், அதுவும் பெரிதும் ஆரோக்கியமும் இல்லாதவர்கள், எப்படி ஆரோக்கியத்துடனும் துடிப்புடனும் சுதந்திரத்திற்கு அவாப்பட்ட இரண்டு மில்லியன் மக்களை அடக்கி வைக்க முடியும் ? இதில் காணப்படும் எண்ணிக்கைகள், ஆங்கிலேயர் அடிமைப்படுத்தினார்கள் என்பதை விடவும் இந்தியர்களே சரணடைந்தார்கள் என்று உணர்த்துகிறது.'*

அந்த ரஷ்ய மொழிக் கடிதத்தை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தபின், காந்தியிடம் கொடுத்து அதற்கு ஓர் அறிமுகம் எழுதச் சொன்னார் காரக்தாஸ். அக்கடிதத்தை வாசித்துப் பிரமித்துப்போன காந்தியடிகள், அதனை தனது தாய்மொழியான குஜராத்தியிலும், மாற்றி வெளியிடுவதுடன், மற்றைய இந்திய சுதேச மொழிகளிலும் பிரசுரிக்க ஊக்குவிக்கப் போவதாக தெரிவித்தார். அப்புத்தகத்திற்கு அறிமுகம் எழுதும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காந்தி, அது ஒரு மொழிபெயர்ப்பு என்பதால் அதை புத்தகமாக வெளியிடுவதற்கு அதை எழுதியவரிடமும் அனுமதி பெறவேண்டும் என்பதால், லியோ டால்ஸ்டோய்க்கு கடிதம் எழுதினார். பூரண சம்மதத்தை தெரிவித்தார் லியோ டால்ஸ்டோய்.

அதுமட்டுமல்லாமல், இக்கடிதம் அவர்களை பேனா நண்பர்களாக்கியது. அந்த நட்பு 1910-ம் ஆண்டில் லியோ டால்ஸ்-டோய் இறக்கும்வரை தொடர்ந்தது. இந்த நட்பின் விளைவாக டால்ஸ்டாயின் மரணத்துக்குப்பின், மகாத்மா காந்தி அவரது நண்பன் ஏமன் காலம்பேக் (Herman Kallenberg) என்பவருடன் இணைந்து தென்னாபிரிக்காவில் ஆரம்பித்த சமூக தோட்டத்திற்கு (Community farm) 'டால்ஸ்டோய் தோட்டம்' (Tolstoy farm) எனப் பெயரிட்டார். இத்தோட்டத்தில் பல மதத்தையும், நிறத்தையும் சார்ந்த பல்லின மக்களும் இணைந்து ஒரு குடும்பமாக வாழ்ந்தார்கள். இச்செயலானது வள்ளுவருடைய 972-வது குறளில் குறிப்பிட்டது போல், அனைவரும் சமம் என்பதை வெளிப்படுத்தியது.

***பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா***
***செய்தொழில் வேற்றுமை யான்***

'இந்துக்குறள்' என்ற தலைப்பில் குறிப்பிட்டிருந்த விடயங்கள், காந்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதுவே காந்தி திருக்குறளை அறிந்துகொண்ட தருணமாகும். குறிப்பாக காந்தியை கவர்ந்த குறள்:

***இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண***
***நன்னயஞ் செய்து விடல்***

இதன் விளைவு இத்துடன் முடியவில்லை. ஏறாத மேட்டிற்கு இரண்டு துலா இட்டு இறைப்பதுபோல், அந்த உயர்ந்த மாற்றம் தென்னாபிரிக்கா முழுமைக்கும் பரவியது. அந்நாட்டின் சுதந்திரப் போராட்டத் தலைவர் நெல்சன் மண்டேலா, தன் நாட்டிலும் அகிம்சைப் போராட்டத்தை தொடங்கினார். பிரசித்தி பெற்ற டைம் (Time) சஞ்சிகைக்கு கொடுத்த பேட்டியில் 'காந்தியுடைய சுதந்திரப் போராட்ட முறைகள் ஆபிரிக்கக் கண்டத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இதன் விளைவாக, மக்களிடையே ஒருமைப்பாடு ஏற்பட்டது. தென்னாபிரிக்காவிலுள்ள அனைத்து மக்களையும் ஒருமைப்படுத்தி, நாட்டின் விடுதலையை சாத்வீக முறையில் ANC வென்றது.' என்று தெரிவித்தார் மண்டேலா. லியோ டால்ஸ்-டோயின் திருக்குறள் வாசிப்பு, அவரது எழுத்து வழியாகப் பரவி உலக அமைதிக்குத் துணைசெய்துள்ளது என்பது சுட்டிக்காட்டத்தக்கது.



kumar.punithavel@thaiveedu.com




# நூல் அறிமுகம்: மலையகச் சுடர்மணிகள்

- நெல்லை ஜெயசிங்

இலங்கை மலையக இலக்கிய உலகம் மட்டுமல்லாமல் தமிழ் உலக எழுத்தாளர்கள் நன்கு அறிந்த எழுத்தாளர் தோழர் மு. நித்தியானந்தன் அவர்கள் எழுதி விழுப்புரம் மணற்கேணி பதிப்பகத்தால் ஏப்ரல் 2023-ல் வெளியிடப்பட்ட 'மலையகச் சுடர் மணிகள்'என்ற நூல் மலையக மக்களின் வாழ்வியல் வரலாற்றை உரக்கப் பேசும் நூலாக கருதப்படுகிறது. தற்போது லண்டனில் வாழ்ந்து வரும் இந்நூலின் ஆசிரியர் இலங்கை பதுளையை பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் சிறப்புப் பட்டம் பெற்ற தோழர் நித்தியானந்தன் யாழ். பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய அனுபவம் உள்ளவர். கல்வி கற்கும் காலத்திலேயே ஏராளமான இலக்கிய கட்டுரைகளை எழுதிய அனுபவம் உள்ளவர். பின்னர் காலச் சூழ்நிலை காரணமாக லண்டன் சென்று அங்கு ஆசிரியராக, கல்வி ஆலோசகராக, மொழி பெயர்ப்பாளராக பணியாற்றியதுடன் உயர் மட்ட கருத்துருவாக்க அமைப்புகளுடன் இணைந்து மக்கள் தொடர்பை மேம்படுத்திக் கொண்ட சமூக செயற்பாட்டாளர் ஆவார். உலக வல்லரசு நாடொன்றில் வாழ்ந்த போதும் மலையக மண்ணை மறவாத தோழர் நித்தியானந்தன் அவர்கள் மலையகம் தொடர்பாக எழுதிய கட்டுரைகள், நூல்கள், கலந்து கொண்ட கருத்தரங்குகள் ஏராளம். கூலித் தமிழ், ஆடல் எங்கேயோ அங்கே, மலையக இலக்கியம், சிறுமை கொண்டு பொங்குதல், பெருநதியின் பேரோசை என்பன இவர் எழுதிய நூல்களில் குறிப்பிடத்தக்க வைகளாகும்.

செங்குருதியையும் நெற்றி வியர்வையையும் தேயிலைச் செடிகளுக்கு உரமாக்கி இரு நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் மலையகச் சமூகத்தின் அறியாமை இருளை அகற்றி கல்விச் சுடரை ஏற்றி அவர்களின் வாழ்வை உயரச் செய்த உத்தமர்களின் உயரிய சேவையை உயர்த்திப் பிடிக்கும் நூலாக இந்நூல் விளங்குகிறது. மலையக சுடர் மணிகள் என்ற தலைப்புடன் வெளிவந்துள்ள இந்நூல் மலையக வரலாற்றில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது என கூறலாம். மூன்று பகுதிகளாக 164 பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ள இந்நூலை அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் இலகுவான தமிழ் நடையில் நூலாசிரியர் வடிவமைத்திருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

மலையக மண்ணின் மைந்தன் என்ற உணர்வுடன் வாழ்ந்து வரும் நூலாசிரியர் நித்தியானந்தன் அவர்கள் நூலின் முன்னுரையில் ஆரம்ப காலங்களில் கங்காணிகளின், துரைத்தனங்களின் அட்டூழியங்களால் மலையக மக்கள் பட்ட பல்வேறு கொடுமைகளை கடும் சொற்களால் சாடியிருப்பதைக் காணலாம். இருட்டிற்குள் தள்ளிவிடப்பட்ட மலையக மக்கள் வெளிச்சத்திற்கு வருவதில் தியாக உணர்வுடன் பெரும் பங்காற்றிய பலரும் நாட்டில் உள்ள நிலையில் அவர்களில் சிலரை இங்கே முன்னிறுத்தி அவர்களுக்கு பெருமை சேர்த்துள்ளார். உலக அளவில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வரும் நித்தியானந்தன் அவர்கள் இந்நூலின் பிற்பகுதியில் இலக்கியம் சார்ந்த தனது கடந்த கால கட்டுரைகளையும் இணைத்துள்ளமை கவனத்தில் கொள்ளத் தக்க விடயமாகும்.

நூலின் முதற் பகுதியில் கல்வி உலகின் ஒளிவிளக்காக திகழ்ந்த பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்களின் அளப்பரிய சேவைகளை நினைவு கூர்ந்து அவருக்கு புகழ் மாலை சூட்டுவதைக் காணலாம். சந்திரசேகரம் அவர்கள் கல்வியையே தொழிலாய், ஊனாய், உதிரமாய், சிந்தனையாய், வாசிப்பாய், எழுத்தாய், பேச்சாய், உரையாடலாய், மூச்சாய் கொண்டிருந்தவர் என பெருமிதம் கொள்வதைக் காணலாம். பின் தங்கிய சமூகத்தில் இருந்து வந்த போதும் கற்ற பேறிவைக் கொண்டு ஆங்கிலத்திலும் தமிழிலும் அவர் எழுதிக் குவித்த முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் இன்றும் அவர் பெயரை பறைசாற்றுகின்றன. அவரைப் போலவே அவரது எழுத்து எளிமையானதாக இதமானதாக புரிதலுக்கு உட்பட்டு இருப்பதாக நூலாசிரியர் கூறுகிறார். பன்முகத்தன்மை மிக்கவரான திரு. சந்திரசேகரம் அவர்கள் கல்வித்துறைக்கு அப்பால் அரசியலில், பொருளியலில், சமூகத்தில், நிர்வாகத்தில், நீதித்துறையில் அழுத்தம் திருத்தமாக கருத்துக்களை பதிவிடக்கூடியவராகவும் திகழ்ந்துள்ளார்.

இன மத மொழி வேற்றுமை பாராது சமத்துவ சமூகத்திற்காக 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என வாழ்ந்து மலையக சுடர் மணியாய் மணம் பரப்பியவர் திரு. சந்திரசேகரம் என கூறும் நூலாசிரியர், அவர் பதுளையில் பிறந்து மகாஜனாவில் வளர்ந்து பேராதனையில் சிறந்து ஜப்பானில் உயர்ந்து கொழும்பில் நிமிர்ந்து மலையக பெருமகனாய் வாழ்ந்து

தனது 78-வது வயதில் எம்மை விட்டு பிரிந்தார் என கண்ணீரு டன் பதிவிட்டுள்ளமையைக் காணலாம்.

ஏகாதிபத்தியத்தின் கொள்ளைக் கூடமாக இருந்த மலைய கத்தில் கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக அறிவொளி பரவாது இருள் படர்ந்து இருந்த வேளையில் வெளிச்சமாக மலையகத்தில் தோன்றியவர் கல்விச் சிற்பி பாரதி ராமசாமி என அடையாளம் காண்கிறார் நூலாசிரியர் நித்தியானந்தன். பதுளைப் பகுதியில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் 'பாரதி கல்லூரி' என்ற ஒன்றை ஆரம்பித்து மலையக குழந்தைகள் கல்வி பெற வித்திட்ட மாமனிதராக திகழ்ந்தவர் திரு. ராம-




சாமி எனலாம். கல்லூரி ஒன்றின் அவசியத்தை உணர்ந்த தீர்க்கதரிசி என அழைக்கப்பட்டார். கல்வி பெறாத சமூகம் அழிந்தொழிந்து போகும் என அன்றே அறிந்து கல்வி எனும் சாலையை சரியான தருணத்தில் ஆரம்பித்த பாரதி ராமசாமி தன்னை அதில் ஆத்மார்த்தமாக ஈடுபடுத்திக் கொண்ட ஒளி ரும் மலையக நட்சத்திரம் ஆவார்.

அரசாங்கம், அரசியல் வாதிகள் என பலரும் மலையக மக் களை கண்டு கொள்ளாத காலம் . மலையகத்தை சுரண்டிய வர்கள் வறுமையில் வாடியவர்களுக்கு கல்வி அளிக்க தயா ராக இல்லாத கொடுங் கோல் காலத்தில் கல்வி வெளிச்சம் தர வந்த திரு. பாரதி ராமசாமி மலையக சுடர்மணியானவர்க ளில் ஒருவராவார். அவரின் அயராத பணியினால் பதுளை யில் முதன் முறையாக சில பட்டதாரிகள் தோற்றுவிக்கப்பட்ட னர். அதன் தொடர்ச்சியாக புகழ் பெற்ற பேராதனைப் பல்க லைக்கழகத்தில் இருந்து பலரும் பட்டதாரிகளாக வெளிவந்த னர். வறுமைப் பிடியில் சிக்குண்ட போதும் கல்வி தடைப்ப டாது போராடி வெற்றி கண்ட பாரதி ராமசாமி வரலாற்றுச் சாத னையாளராக போற்றப் படவேண்டும் என நூலாசிரியர் மிக அழுத்தமாக பதிவு செய்திருப்பதை நூலில் காணலாம். அத னடிப்படையில் அவர் கல்வி யுகத்தின் நவீன சிற்பி என்றே போற்றப்பட வேண்டும் என்பது நித்தியானந்தன் அவர்களின் வேண்டுகோளாகும்.

'மலையகச் சுடர் மணிகள்' என்ற நூலை எழுதியுள்ள எழுத்தா ளர் நித்தியானந்தன் அவர்கள் மலையக மக்களின் எழுச் சிக்கு வழி கோலிய பலரை நினைவு கூறும் வகையில் பல தரப்பட்ட மலையக ஆளுமைகளை அறிமுகப்படுத்தி நினைவு கூர்வதைக் காணலாம். அவ்வரிசையில் பத்திரிகை ஆசிரியராக செயல்பட்டு மலையக இளையோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். 1939-ம் ஆண்டு கொட்டக லையில் பிறந்து 2004 வரை வாழ்ந்த திரு. கார்மேகம் முக்கி யத்துவம் வாய்ந்தவர் என நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மலையக மக்கள் மத்தியில் தன் எழுத்தின் வாயிலாக கார்மே கம் அவர்கள் எழுச்சியை ஏற்படுத்த முன் வந்ததை கூறும் முன்பாக சிங்கள பேரின வாதிகளின் மலையக எதிர்ப்பு நடவ டிக்கைகளை பட்டியலிட்டு கடுமையான கண்டனத்தையும் மலையக சுடர் மணிகள் நூலில் நூலாசிரியர் பதிவிட்டுள்ள மையைக் காணலாம். 1939-ம் ஆண்டு பாரபட்சமான காணி உரிமைச் சட்டம், 1948-ம் ஆண்டு மலையக மக்களின் குடியு ரிமை பறிப்புச் சட்டம், 1956-ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் போன்றவற்றின் கொடூர முகத்தை நூலாசிரியர் குறிப்பிடத் தவறவில்லை. 'கள்ளத் தோணிகள்' என அழைக்கப்பட்ட தற்கு வெகுண்டெழுந்த கார்மேகம் அவர்கள், தமிழ் சமூகம் இன மத மொழி வேறு பாடு மறந்து ஒன்றுபட வேண்டும் என பத்திரிகையில் எழுதியும் பேசியும் வந்துள்ளமை நூலில் இடம் பெற்றுள்ளது.

வீரகேசரி பத்திரிகையில் 25 வருடகாலம் கார்மேகம் அவர்கள் பணியாற்றிய போது 'ஈழத்தமிழர் எழுச்சி - ஒரு சமகால வர லாறு' என்ற நூலை எழுதியதன் மூலம் தமிழ் மக்களின் இனப் பிரச்சினை பற்றி அவர் கொண்டிருந்த அக்கறை வெளிப்ப டையாக தெரிந்தது என கூறலாம். மலையகத்தில் படித்த இளைஞர்களை ஒருங்கிணைப்பதிலும் அவர் ஆர்வம் காட் டத் தவறவில்லை. மேலும் வீரகேசரி பத்திரிகையில் பணியாற் றிய காலத்தில் அதன் சில பக்கங்களை மலையக எழுச்சிக்கு மடைமாற்றி சேவை செய்தமையை காணலாம். மலையக மக் கள் தொடர்பாக தனது கருத்துகளை மட்டுமன்றி மலையக இளைஞர்களின் உணர்வுகளையும் வெளியிடத் தவற வில்லை. 'தோட்ட வட்டாரம்', 'தோட்ட மஞ்சரி' என்று தனது வீரகேசரி பத்திரிகையில் மலையக இளைஞர்களை அவர் இணைத்துக் கொண்டதையும் காணலாம். மலையக சிறுக தைப் போட்டியை வீரகேசரி பத்திரிகையில் நடத்தியதுடன் மலையக எழுத்தாளர் மன்றத்தையும் நிறுவி மலையகத்திற்கு பெருமை சேர்த்தவர் திரு. கார்மேகம் என நூலாசிரியர் நூலில்

பதிவிட்டுள்ளமையைக் காணலாம். மறைந்த மலையக சாகித்தியரத்னா திரு. தெளிவத்தை ஜோசப் அவர்கள்' மலையக இலக்கியத்தின் ஒரு மாபெரும் சக்தி கார்மேகம்' என புகழாரம் சூட்டியமை குறிப்பிடத் தக்கதாகும்.

மலையகத்தில் முதற் தொழிற்சங்கத்தை நிறுவி மலையக தொழிலாளர்களுக்கு நம்பிக்கை ஊட்டிய மணிச்சுடராக 1947 வரை இருந்தவர் திரு. நடேசய்யர் என நூலாசிரியர் நூலில் பதிவிடுவதைக் காணலாம். தொழிலாளர்கள் தங்களின் உரிமை எது, கடமை எது என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த நடேசய்யர் 'இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்' என்று தலைப்பிட்டு சிறு பிரசுரமாக 50,000 பிரதிகள் வெளியிட்டமை மலையக வரலாற்றில் முக்கிய அம்சமாக பார்க்கப்படுகிறது.

மலையகத் தொழிலாளர்கள் எந்தவித உரிமைகளும் இல்லாமல் மிருகங்களைப் போல் தோட்டங்களில் அடைத்து வைக்கப்பட்ட கொடுமைக்கு எதிராக கொதித் தெழுந்த நடேசய்யர் அவர்கள் அதிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காக பேசும் தமிழில் தொழிலாளர் உரிமை சார்ந்த சிறு பிரசுரத்தை வெளியிட்டமை அன்றைய காலச் சூழலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

சிறு பிரசுரத்தின் மூலம் ஒவ்வொரு இடத்திலும் தொழிற்சங்கங்களைக் கூட்டுங்கள் என நடேசய்யர் அறைகூவல் விடுத்ததை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக நூலாசிரியர் இந்நூலில் பதிவிட்டுள்ளமையைக் காணலாம். தொழிலாளர்களின் ஒற்றுமை மிகவும் அவசியம் என்பதையும் தனது சிறு பிரசுரத்தில் மிகத் தெளிவாக கூறியுள்ளமை கவனம் கொள்ள வேண்டிய ஒன்று எனவும் நூலாசிரியர் குறிப்பிடுவதை காணலாம்.

மலையகச் சுடர் மணிகள் என்ற இந்நூலில் நூலாசிரியர் இலக்கியச் சுடர்களை முதல் நான்கு அத்தியாயங்களில் கூறி வந்த நிலையில் ஐந்தாவது அத்தியாயத்தில் அரசியல் பக்கம் கவனம் செலுத்துவதை அவதானிக்கலாம். மலையக அடையாள அரசியலின் தனி ஒரு நாயகன் என பெ. சந்திரசேகரன் அவர்களை அடையாளப் படுத்துவதைக் காணலாம். சுதந்திர இலங்கையின் ரௌடி அரசியலில் கொடூர இன ஒடுக்குமுறை தலைவிரித்தாடும் காலகட்டத்தில் 1957 காலப் பகுதியில் பிறந்த சந்திரசேகரன் அவர்கள் மக்களின் நாடித் துடிப்பைப் பிடித்துப் பார்த்துத் தன் போராட்டப் பாதையை தொடங்கிய போராளி என நூலாசிரியர் புகழாரம் சூட்டியுள்ளார். மலையக சமூகத்தின் அடையாள அரசியலின் தனித்துவத்தை புரிந்து கொண்ட அரசியல் ஆசானாக அவர் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

எவரும் எளிதில் அணுகக்கூடியவராக திகழ்ந்த சந்திரசேகரன் அவர்கள் மலையக மண்ணின் அசல் மைந்தனாக அவர்களின் உரிமை வேட்கையை ஆத்மார்த்தமாக உணர்ந்த பெருமகனாக செயல்பட்டதை நூலை வாசிக்கும் போது அறிந்து கொள்ள முடிகிறது. இலங்கை அரசியலின் நெளிவு சுழிவுகளை நன்கு அறிந்துள்ள சந்திரசேகரன் அவர்கள் அரசியல் என்பது சாத்தியப்பாடுகளின் கலை என்பதால் நடைமுறைகளின் வரம்பிற்குள் பேசியும் இணங்கியும் போராடியும் அனுசரித்தும் செயற்பட வேண்டும், என கூறலானார். இவ்வாறு மலையக அரசியலில் விடிவெள்ளியாக வலம் வந்த இளம் போராளி, மலையகச் சுடர் சந்திரசேகரன் அவர்கள் இளமையில் மறைந்தமை மலையக மக்களுக்கு பேரிழப்பு என எழுத்தாளர் நித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

மலையகச் சுடர் மணிகள் என்ற தரமான இந்நூலில் மலையகம் சார்ந்து அர்ப்பணிப்போடு கல்வி, அரசியல், இலக்கியம் என சேவைகள் புரிந்த பலரையும் அடையாளம் கண்டு அவர்களுக்கு ஒரு உயர்ந்த அங்கீகாரத்தை தர நூலாசிரியர் முயன்றுள்ளமை வரவேற்கத்தக்க அம்சமாகும். இவ்வரிசையில் மாத்தளையில் சமூக இலக்கிய செயற்பாடுகளுக்கு உந்துவிசையாக இருந்தவரும் நாடக இயக்கத்தினை வலிமையுறச்செய்தவரும் மலையக நாவல் துறையிலும் சிறுகதை துறையிலும் கால்பதித்து சிறப்பு பெற்றவருமான மாத்தளை கார்த்திகேசு-வின் இலக்கிய பணியை நூலாசிரியர் இந்நூலில் பதிவிட்டுள்ளமையைக் காணலாம். அதே போன்று மலையக இலக்கியத்திற்கு பெரும் தொண்டாற்றிய மாத்தளை வடிவேலனையும் இங்கே நூலாசிரியர் நினைவு கூறுகிறார். மலையக ஆலயங்களில் தெய்வ வழிபாடுகளில் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் சமூக செயற்பாட்டாளராக இலக்கிய ஆர்வலராக சிறுகதை எழுத்தாளராக மலையக நாட்டார் வழக்காறுகளில் ஈடுபாடு கொண்டவராக செயல்பட்டதை நூலாசிரியர் நினைவு கூறுகிறார்.

பதுளையின் முதல் கல்வி முன்னோடி என குறிப்பிடப்படும் அமரர் திரு. சி. ஆறுமுகம் அவர்கள் கல்வித்துறையில் ஒளி விளக்காகத் திகழ்ந்த வரலாறு நூலின் எட்டாவது அத்தியாயத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று அடுத்து வந்த அத்தியாயத்தில் மலையக இலக்கியத்தின் பச்சை இளங்குருத்தான திரு. லெனின் மதிவாணன் பாடசாலை ஆசிரியராகப் பணி தொடங்கி அரசின் உயர் பதவியை எட்டிய வரலாற்றுடன் அவர் எழுதிய பல்வேறு நூல்கள் பற்றியும் விபரம் தரப்பட்டுள்ளது.

மலையகச் சுடர் மணிகள் மலையக ஆலய வழிபாடு, தெய்வ நம்பிக்கைகள் போன்ற வற்றில் ஈடுபாடு கொண்டிருந்த போதும் மலையகத்தின் நாட்டார் வழக்காற்றியலில் போதிய ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற நூலாசிரியரின் ஆதங்கத்தையும் நூலை வாசிக்கும் போது காணமுடிகிறது. முதல் பகுதியின் இறுதி அத்தியாயத்தில் மலையகத் தொழிலாளர்களைப் புகைப்படமாக எடுத்த முதல் பிரித்தானிய பெண்னான ஜூலியா மார்கரெட் பற்றியும் அவரது புகைப்பட வரலாறு பற்றியும் மலையகத்துடன் தொடர்பு படுத்தி நூலாசிரியர் எழுதியுள்ளமை கவனம் பெறுவதாக தெரிகிறது.

மலையகச் சுடர் மணிகள் நூலின் இரண்டாம் பகுதியில் நூலாசிரியர் கோகிலம் சுப்பையாவின் வாழ்வும் எழுத்தும் என்ற தலைப்பில் நீண்ட கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். கோகிலம் சுப்பையா அவர்கள் இந்தியாவில் இருந்து தொழிலாளர்கள் இலங்கை வந்த சூழ்நிலை, அவர்கள் அனுபவித்த துயரம் என்பவற்றை கருப்பொருளாக கொண்டு எழுதிய 'தூரத்து பச்சை' என்ற நாவலை முன்னிலைப்படுத்தி அதனுடன் தொடர்புடைய பல்வேறு ஆளுமைகள் இலக்கிய கர்த்தாக்கள் என பலரையும் பல விடயங்களையும் நிகழ்வுகளையும் மிகவும் ஆழமான புரிதலுடன் இப்பகுதியில் எழுத்தாளர் நித்

தியானந்தன் அவர்கள் குறிப்பிட்டுள்ளமை வாசிப்போரி டையே மிகுந்த கவனத்தை ஈர்ப்பதாக அமைந்துள்ளது. தூரத்து பச்சை நாவலின் முக்கியத்துவத்தை குறிப்பிடும் வகையில் இந்தியாவில் பிரபல ஆங்கில நாளேடான The Hindu பத்திரிகையின் 18.02.2003 நாளில் நாவலின் உள்ளடக் கத்தை பாராட்டி எழுதப் பட்ட கட்டுரையை நூலாசிரியர் இங்கு பதிவிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இப்பகுதி யில் வாசகர்கள் அறியாத உலக நிகழ்வுகள் உட்பட பல் வேறு வரலாற்று சம்பவங்கள் கட்டுரையில் விபரமாக கூறப் பட்டுள்ளன.

நூலாசிரியர் நித்தியானந்தன் அவர்கள் தூரத்து பச்சை நாவ லாசிரியர் கோகிலம் சுப்பையா அவர்களுடன் நட்புறவில் இருந்தமையால் அவரின் சிறப்பு பற்றி பல்வேறு இடங்களில் நயம் பட எடுத்துரைக்க தவறவில்லை. தொழிற் சங்க வாதி யாக , மேடைப் பேச்சாளராக, ஓவியராக நுண்கலை ஆசிரி யையாக, எழுத்தாளராக, நாவலாசிரியையாக, மொழிபெயர்ப் பாளராக பன்முக ஆளுமை கொண்ட கோகிலம் சுப்பையா அவர்கள் மலையக இலக்கியத்தின் தனிப் பெரும் பெண் நட் சத்திரமாக ஒளிர்வதாக நூலாசிரியர் தனது கட்டுரையை முத் தாய்ப்புடன் முடித்துள்ளமை சிறப்பு அம்சமாக பார்க்கப் படு கிறது.

நூலின் இறுதிப் பகுதியான மூன்றாம் பகுதியில் ஐந்து கட்டு ரைகள் இடம்பெற்றுள்ளன. இதில் ‘தலவாக்கலை குருப் மலைநாட்டு மக்களின் போராட்டம்’ என்ற தலைப்பில் திருவா ளர்கள் எஸ்.ஆர். ரெங்கையா, ஏ. ராமநாதர் இணைந்து தோட் டங்களில் நடைபெறும் பல்வேறு விடயங்களை மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் வெளியிட்ட பாட்டுப் புத்தகம் பற்றி யதாகும். இதே போன்று மாணவர்களின் இலக்கிய எழுத்தாற் றலை வெளிக்கொணரும் வகையில் திரு. அ.ந. கந்தசாமி-யின் மாணவர்களின் மலரான ‘இலக்கிய வெளியீடு’, திரு. க.இ.க. கந்தசாமி வெளியிட்ட ‘மலையருவி’ பற்றிய தகவல் கள் இரண்டாம் கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

மூன்றாவதாக 1981-ல் இலங்கை அலை, சஞ்சிகையில் மலை யக மக்களின் வாக்குரிமை பற்றி கடுமையான விமர்சனப் பார் வையில் வெளிவந்த கட்டுரை மறு பிரசுரமாக வெளியிடப்பட் டுள்ளது. இக்கட்டுரையில் இலங்கை அரசியல் வாதிகள் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை தொடர்பாக செய்த அயோக்கியத் தனங்கள் தோலுரித்து காட்டப்பட்டுள்ளன. வெள்ளையனின் கால்களை நக்கி, ஆட்சி அதிகாரமேறியவர்கள் போன்ற கடுமையான வார்த் தைகளை இக்கட்டுரையில் காணலாம். இதேபோன்று 1972-ல் பூரணி சஞ்சிகையில் வெளிவந்த மலையக தொழிலாளர் வர்க்கத்திற்கு இழைக்கப்பட்ட துரோகத்தனங்களை கூறும் கட்டுரை ஒன்று இங்கு மறு பதிவாக வந்துள்ளது. மலையகத் தொழிலாளர்கள் வரலாறு என்பது அபத்தமான துரோகங்களி னதும் ஈவிரக்கமற்ற சுரண்டலினதும் வரலாறாகும் என கூறும் நூலாசிரியர் இடதுசாரிகளின் பக்கம் அவர்கள் சாய்ந்திருந்த மையால் அவர்கள் அநாதரவாக்கப்பட்டனர் என்கிறார். மேலும் 1948 மற்றும் 1949-ம் ஆண்டு பிரஜாவுரிமை பறிப்பு சட்டங்கள் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிரானது என கூறும் நூலாசிரியர் 1964-ம் ஆண்டு சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் துரோகத்தின் முழு வடிவம் எனவும் சாடுவதைக் காணலாம்.

நூலின் இறுதிப் பகுதியில் தொழிலாளர்களுடன் உரையாடுவ தற்கு வசதியாக ‘இங்கே வா’ என்ற நூலின் சிங்கள மொழி பெயர்ப்பு என்ற ஒரு பிரசுரத்தின் வெளியீடு பற்றியும் குறிப்பி டப்பட்டுள்ளது. நூலாசிரியர் மலையகம் தொடர்பான ஆழ்ந்த புலமை பெற்றவர் என்பதால் மலையகச் சுடர் மணிகள் நூலில் வரலாற்று ஆதாரங்களை மிகவும் திறம்பட பதிவிட் டுள்ளமையைக் காணலாம். கடல் கடந்து வாழ்ந்தாலும் அவ ரது மலையகம் பற்றிய ஆழ்ந்த அறிவாற்றலை, நூலை வாசிக்கும் போது புரிந்து கொள்ள முடிகிறது. சிதைக்கப்பட்ட மலையகத்தில் மறைக்கப்பட்ட வரலாற்றுச் சம்பவங்களை, வரலாற்று ஆளுமைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருவ தில் நூலாசிரியர் கொண்டுள்ள அக்கறை, ஆர்வம் நூலை வாசிக்கும் போது புரிந்து கொள்ள முடிகிறது. வாய்ப்பு உள்ள வர்கள் இந் நூலை வாங்கிப் படிக்க முன்வர வேண்டும்.



jeyasingh@thaiveedu.com



## மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி:

# பிபிலை நா. ஜெயபாலனின் இரு கவிதைத்தொகுப்பு

47

- மல்லியப்புசந்தி திலகர்

பதுளை மாவட்டத்தின் பிபிலை எனும் ஊரைச் சேர்ந்தவர் நா. ஜெயபாலன். 'மழை காணாத மலை, வெளிச்சம் காணாத விழிகள்' ஆகிய இரண்டு கவிதை நூல்களைத் தந்தவர். அவரது சிறுகதைகளையும் கவிதைகளையும் தொகுத்து யோக நந்தினி வெளியிட்ட நூல் 'கூடைக்குள் தேசம்'.



2013-ம் ஆண்டு வெளியான 'வெளிச்சம் காணாத விழிகள்' நூலில் அடங்கியுள்ள கவிதைகளை நா. ஜெயபாலன் தொகுத்துள்ள விதம் அவரது மானுட நேயத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். மலைநாட்டுப் பின்னணியில் அமைந்தவை, என 20 கவிதைகளையும் கரைநாட்டுப் பின்னணியில் அமைந்தவை என 24 கவிதைகளையும் 'போருக்கு முன்', 'போருக்குப்பின்' என்ற உப தலைப்போடும் தொகுக்கப்பட்டுள்ளன. இது அவர் மலையகக் கவிஞரானபோதும் கரையோர மாவட்டங்களில் வாழும் மக்களின் மீதும் அங்கே இடம்பெற்ற யுத்தம் தொடர்பிலும் கவனம் கொண்டவராக, மானுடத்தை நேசித்த மனிதராக வாழ்ந்துள்ளார் என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது.

இது குறித்து நூலின் சிறப்புரையில் பதிவு செய்யும் கவிஞர் செ. குணரத்தினம் 'அண்மைக்காலமாக மலையகக் கவிஞர்கள் தமது கவி ஆளுமை மூலம் தமது மலையகம் என்ற அடையாளத்தை தாண்டி, ஈழத்து கவிஞர்கள் என்ற எல்லைக்குள் வந்து குவியும் தன்மை காணப்படுகின்றது. அதற்கு மற்றும் ஒரு சாட்சியாக வந்திருப்பது, 'வெளிச்சம் காணாத விழிகள்' என, பதிவு செய்கிறார்.

பிபிலை ஜெயபாலனின் சகோதரனான இளங்கோவனும் ஒரு கவிஞர். ஜெயபாலன் மரணிப்பதற்கு முன்பதாகவே இளங்கோவன் மறைந்துவிட்டார். தனது 'வெளிச்சம் காணாத விழிகள்' கவிதை நூலில், மறைந்த தனது சகோதரன் இளங்கோவின் நினைவாக அவரது கவிதை ஒன்றையும் இணைத்துள்ளார் ஜெயபாலன். 'இனியொரு விதி செய்வோம்' எனும் இளங்கோவின் கவிதை ஒன்றின் பகுதி இவ்வாறு அமைகிறது.

***மோசங்கள் சூழ்ந்த மோகனப் பூமியில்***
***வேஷங்கள்தான் எங்கள் வீட்டு விலாசங்கள்***
***இந்த தேசத்தைச் சுமந்த தேசத்திற்காக***
***வாசமிழந்த மலராய் வாழ்வை கழிப்போம்***

***அகதிகளாய் எம்மினம் அங்கும் இங்கும்***
***அவஸ்தையுற்று வாழும் நிலை***
***இக மதில் நிலைத்து விட்டால்***
***இனிய வாழ்வை எங்கே காண்போம்***

ஜெயபாலனின் படைப்புகள் குறித்து விரிவுரையாளரும் விமர்சகருமான ஆ. கலையரசன் இவ்வாறு பதிவு செய்கிறார். 'தனது கூர்ந்த மதியினாலும் சமூகப்பற்றினாலும் ஊவாவின் இலக்கியத்தை செம்மைப்படுத்திய ஜெயபாலன், ஓர் ஆழமான சமூகப் பார்வையும் இலக்கிய சிந்தனையும் மிக்கவர். அவரது படைப்புகளில் காணப்படும் உயர்ந்த சமூக கருத்துகள் அவரது தைரியத்தை பறைசாற்றுகின்றன. மலையக மக்களின் இன்னல்களை சமூகச் சிக்கல்களை படம்பிடித்து காட்

டுகின்றன'.

***கொடுத்த வாக்குறுதி மாறாமல்***
***குடும்ப அபிவிருத்தியுடன்***
***குல அபிவிருத்தியையும்***
***நாசுக்காக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்***
***நமது அரசியல்வாதிகள்!***

எனும் அவரது சாடல், அவரது தைரியத்தை எடுத்துக்காட்டுவதுடன் எமது மக்கள் இன்றும் ஏழ்மை நிலையில் இருப்பதற்கான காரணத்தையும் கூறுகின்றது. மேலும்,

***கொள்கை வேறுபட்ட மலையகத்தில்***
***கூட வேண்டும் தலைமைகள் எல்லாம்***
***ஒரு கோடியில் !***

எனும் அவரது வேண்டுகோள் அவரது சமூகப் பற்றினைக் காட்டுகின்றது. பிபிலை ஜெயபாலனின் 'மீண்டுமொருமுறை' எனும் கவிதை இவ்வாறு அமைகிறது.

***வெற்றிகளை***
***நிச்சயிக்கத் தெரியாத***
***தோல்விகளால் துவண்டுபோன***
***நொண்டிக்குதிரை வரலாற்றில்***
***மீண்டுமொருமுறை***
***தோற்றுப்போய்விட்டது***

***தோல்விகள்***
***தொடர்ந்தாலும்***
***தாழ்வுகள்***
***தடைக் கற்களானாலும்***
***உண்ணாது உடுத்தாது***
***உடல்நோய் பாராது***
***மலையேறி உழைத்தவர்கள்***
***தலையில்***
***மீண்டுமொரு முள்கிரீடம்***
***சூட்டப்பட்டுவிட்டது.***

***கருவறை தொடங்கி***
***கல்லறை வரையிலும்***
***சோக மலர்களையே***
***சுகமாகச் சூடிப் பழகியவர்கள்***
***மீண்டுமொருமுறை***
***சோகமான சுமையை***
***சுகமாக சுமக்க***
***ஆயத்தமாகிவிட்டார்கள்***

தமக்கு இழைக்கப்படும் அநீதியைத் தொடர்ந்தும் தாங்கிக் கொண்டு வரும் சமூகத்தில், அது எப்படி இயல்பான ஒன்றாக மாற்றப்படுகின்றது என்பதை, தனது படைப்பில் பதிவு செய்துவிட்டுச் செல்கின்றார் பிபிலை ஜெயபாலன்.

'ஜெயபாலன் ஒரு தோட்ட வைத்திய உத்தியோகத்தராக பதுளை பகுதித் தோட்டங்களில் வாழ்ந்தவர். ஒரு கவிஞன் எதிர்கொள்ளும் வாழ்வியல் நிகழ்வுகளே அவனைக் காயப்படுத்தி, கவிதைகள் பிரசவிக்க காரணிகள் ஆகிவிடுகின்றன. கவிஞர் ஜெயபாலன் எடுத்துக் கொண்ட வர்ணனைகள் கூட, வாசகனது வாழ்வுணர்வோடு கலக்கும் இயற்கைக் கூற்றுகளில் நிறப் பிரிவுகளாக இருக்கின்றன' எனப் பதிவு செய்கின்றார் கவிஞர் நீலாபாலன். 'தடுமாறும் தலைமைகள்' எனும் தலைப்பில் அமைந்த அவரது கவிதையில் பின்வரும் வரிகளை வாசிக்கக் கிடைக்கிறது.

***நியாயங்களை விதைப்போம் என்று***
***அரசியல் வயலுக்குப் போனவர்கள்***
***அநியாயங்களை அறுவடை***
***செய்தபோதுதான்***
***உங்களது வெள்ளாமை பூமி***
***பொல்லாதவர் கரங்களுக்குள்***
***முடங்கிப்போன***
***முட்டாள்தனம் புரிந்தது.***

இந்தக் கவிதையில் மலையகத் தலைமைகளை நோக்கி, அவர் வைக்கும் விமர்சனம் மிகவும் நுணுக்கமானது. '*உங்களது வெள்ளாமை பூமி பொல்லாதவர் கரங்களுக்குள் முடங்கிப்போன முட்டாள்தனம் புரிந்தது*' எனும் வரிகள் ஊடாக, மலையகத் தமிழ் மக்களிடம் இருந்து மற்றவர் கரங்களுக்கு பெருந்தோட்டக் கைத்தொழில் எவ்வாறு மாற்றப்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. அது பற்றிய தெளிவான பார்வை இல்லாது மலையகத் தலைமைகள் இன்றுவரை இருக்கின்றனர், என்பதைத் தடுமாறும் தலைமைகள் என்பதாக அவர் சொல்ல வருவது மிகப் பொருத்தமுடையதாகின்றது. 'ஒரே குட்டையில் ஊறிய...'



எனும் தலைப்பில் அமைந்த கவிதையில் வரும் பின்வரும் வரிகளும் கூட, மலையகத்தின் அரசியல் போக்கை விமர்சன பூர்வமாக முன்வைக்கின்றன.

*கமிட்டித் தேர்தலில்*
*பதவி போனதும்*
*கட்சி மாறுவது போல்*
*பொழுது போக்காக*
*இப்பொழுதும்*
*புதுக்கட்சிக்குள்*
*புத்திசாலித்தனமாகப்*
*புகுந்துகொண்டார்*
*நேற்றுவரை*
*தானைத் தலைவனாக*
*தனிக்காட்டு ராஜாவாக*
*தசாவதாரம் எடுத்த*
*தனிப்பெரும் தலைவன்*
*இன்று துரோகியாக*
*மாறுவதெல்லாம்*
*அரசியலில்தான்*
*அடிக்கடி நடக்கிறது...*

*கலங்கிய அரசியல் குட்டை*
*தெளியவில்லை இருந்தும்*
*இன்னொரு குட்டையைத் தேடி*
*குழப்பிடப் புறப்பட்டுவிட்டார்கள்!*

எனும் அரசியல் அவதானிப்பு ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களில் எவ்வாறு ஒட்டிக்கொள்வது எனும் தீர்க்கத்துடன் மாத்திரம் தமது அரசியலை நகர்த்தும் எனும், அரசியல் வியாபாரிகள் மீதான கடுமையான கோபத்தை வெளிப்படுத்துகின்றது.



'மலையகத்தில் மிக அண்மைக்காலமாக பல கவிதை தொகுப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் பல தொகுதிகள் மிக கவலைக்குரியதாகவே இருக்கின்றன. அந்த வரிசையில் கவனத்திற்குரிய கவிதை தொகுப்பாக அமையும் 'வெளிச்சம் காணாத விழிகள் குறிப்பிடப்பட வேண்டியது' என மகுடம் இதழின், குறிப்பிடப்பட வேண்டியது' என மகுடம் இதழின் ஆசிரியர் மைக்கேல் கொலின் பதிவு செய்கிறார்.

'மழை காணாத மலை, வெளிச்சம் காணாத விழிகள்' போன்ற இவரது நூலின் தலைப்புகளே ஓர் எதிர்மறைப் பார்வைப் போக்கைக் காட்டுவதாக அவரது படைப்புகள் மீதான விமர்சனமாக 'வெளிச்சம் காணாத விழிகள்' நூல் வெளியீட்டின் போது கட்டுரையாளர் (மல்லியப்புசந்தி திலகர்) முன்வைக்க, அதற்கு பதில் வழங்கும் விதமாக, வெளிச்சம் காணாத விழிகள் நூலுக்கான தன்னுரையில் ஜெயபாலன் இவ்வாறு பதிவு செய்கிறார்.

'பொதுவாக எனது எல்லாக் கவிதைத் தொகுப்புகளின் தலைப்புகளும் ஏதோ ஓர் ஊனத்தன்மைக் கொண்டவையாக இருப்பதாக வாசகர்கள் குழம்பலாம். உண்மைதான்! இன்றைய எனது சமூகம் ஏதோ ஒரு வகையில் ஏக்கப் பெருமூச்சுடன்தான் வாழ் ந்துகொண்டிருக்கிறது. அதன் முன் ஆயிரமாயிரம் நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் படையெடுத்து பயமுறுத்துகின்றன. இப்படிப்பட்ட சூழலில் என் எழுத்து முயற்சிகள் மட்டுமல்ல. கவிதைத் தலைப்புகளும் ஊனமுற்றதாகவே வலம் வருவது காலத்தில் கட்டாயமாகிவிடுகின்றது'.

எவ்வாறு விமர்சனங்களையும் ஆய்வுகளையும் தாய நோக்குகிறார் என்பதையும் 'கூடைக்குள் தேசம்' நூலுக்கு எழுதியுள்ள குறிப்பில் ஜெயபாலன் பதிவு செய்கிறார். 'விமர்சனங்கள் எழுத்தாளனுக்கு ஆதார சுருதி என்றால், அவனைப் பற்றிய ஆய்வுரைகளும் அவனுக்கும் அவனது படைப்புகளுக்கும் மிகச்சிறந்த ஊக்க மருந்தாகும். ஒரு சமூகத்தின் நாடி நரம்புகளை நாளும் பிடித்துப் பார்த்து வைத்தியம் பார்க்கும் சமூக வைத்தியர் கவிஞன் என்பதை நாசுக்காகப் புரிந்து கொண்டவர்களை அடையாளம் காட்டுவது சமூக நேயமுடையவர்களின் மிக மிக முக்கியமான பணியாகும்'.

நா. ஜெயபாலனின் கவிதைகளையும் கதைகளையும் தொகுத்து வெளியீடு செய்திருக்கும் யோகநந்தினி, 'கூடைக்குள் தேசம்' எனும் நூலில் இவ்வாறு பதிவு செய்கிறார். 'பிபிலை ஜெயபாலன் அவர்களின் ஆக்கங்களின் கரு, மனங்களை நெகிழ்ச்சியடையச் செய்வது, பொதுவாக ஜெயபாலன் அவர்களின் படைப்புகள் மலையக மக்களின் வாழ்க்கை வெளிப்பாடு என்றே கூறலாம். மலையக மக்களின் குடும்பங்களை அடிப்படையாக வைத்து காணப்படுகிறது. குடும்பங்களில் வறுமை எனும் சிறைக்குள் தவிக்கும் ஆன்மாக்களாக படம் பிடித்துக் காட்டுவது'.

இவ்வாறு மலையக மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்து கவிதைகளாக பிரசவித்த பிபிலை நா. ஜெயபாலன் மலையகம் மீதும் மானுடம் மீதும் கொண்ட ஏக்கங்களுடனேயே இந்த உலகை விட்டும் நீங்கலானார். 'மலையகத்தில் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அங்கீகரிக்க முடியாத எழுதாத சட்டங்களையும் செயற்பாடுகளையும் உடைத்து எறிய வேண்டும் என எதிர்பார்த்து, குரல் எழுப்பும் ஓர் எழுத்துப் போராளியாகவே இவரை நான் காண்கிறேன்' என்று, கவிஞர் எஸ்.பி பாலமுருகன் குறிப்பிடுவது ஜெயபாலனின் இலக்கியச் செயற்பாட்டுக்கு கிடைத்த அங்கீகாரம் ஆகும்.



thilagar@thaiveedu.com

# புனைவின் வெளியில் ஒரு தீவிர நடனம்



- கருணாகரன்

புனைவில் வாழ்க்கையைப் பேசுவதும் வாழ்க்கையைப் புனைவாக்குவதும் இலக்கியத்தில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் அழகியதொரு அறிவுச் செயற்பாடாகும். உண்மை போலவும் புனைவு போலவும் மாறி மாறித் தோன்றும் இந்த வித்தைக் களம் வெறுமனே வேடிக்கைக்கானதல்ல. அதற்கப்பால் பலவகையிலான அறிவார்ந்த கேள்விகளை எழுப்பி, நம்மையும் நமக்கு வெளியே நம் வாழ்க்கையையும் சூழலையும் காலத்தையும் விசாரணை செய்து கொண்டிருப்பது. இந்த விசாரணையில், இவற்றோடிணைந்த அமைப்புகள், நிறுவனங்கள், செயற்பாடுகள் என அனைத்தையும் உட்படுத்திக்கொண்டிருப்பது. அதற்கப்பால் மேலும் விரிந்து பிரபஞ்ச இயக்கத்தையும் வினவுகிறது. இன்னொரு நிலையில் நம்மை உள்ளேயும் பிறிதொரு நிலையில் நம்மை வெளியேயும் வைத்து விளையாடுவது.

ஒரு வகையில் இது கலை உற்பத்தி என்றால், இன்னொரு நிலையில் அறிவார்ந்த செயற்பாடு. இரண்டும் உருத்திரண்டு வாழ்வுக்கான பண்பாட்டம்சமாகிறது. இரண்டிலும் மையமாக இருப்பது வாழ்க்கையே. வாழ்க்கை என்றால், எந்த வாழ்க்கை? எப்படியான வாழ்க்கை? எதனை நோக்கிய வாழ்க்கை? யாருடைய வாழ்க்கை? யாருக்கான வாழ்க்கை? என்று பல கேள்விகள் எழலாம். தொகுத்துச் சொன்னால், மானுட வாழ்க்கை. மானுட வாழ்க்கையானது இடையறாது நிகழும் பல இழைகளால் பின்னப்பட்ட வண்ணக்கோலங்களையுடையது. அதையெல்லாம் புனைவானது வெளிப்படுத்திக்கொண்டும் அதைப்போல எண்ணற்ற புதிய வாழ்க்கைக் கோலங்களை உற்பத்தி செய்து கொண்டும் இருக்கிறது. நாம் வாழ்கின்ற நிஜமான வாழ்க்கையைப் போல எண்ணற்ற வாழ்க்கைகளை அது நிகழ்திக் காட்டுகிறது. நாம் கண்ட, காண்கின்ற மனிதர்களைப்போல ஏராளமான மனிதர்களைக் காண வைக்கிறது. புதிய புதிய சூழலையும் கால வெளிகளையும் திறக்கிறது. இவற்றினூடே நாம் வாழ்ந்து கழிப்பதற்கான நிலையை அளிக்கிறது என்பதால்தான் புனைவு மேலும் மேலும் சிறந்து செல்கிறது.

புனைவில் வாழ்க்கையைப் பேசுவதும் வாழ்க்கையைப் புனைவாக்குவதும் ஒன்றுபோலத் தோன்றினாலும் இரண்டும் ஒன்றல்ல. இரண்டையும் முற்று முழுதாக அறிந்துணர முடியாதது. அல்லது இவ்வளவுதான் என்று வரையறுத்துக் கொள்ள முடியாதது. ஆகவே அதைத் தேடிச் சென்று கொண்டிருப்பதே புனைவின் அடிப்படையும் அது காண முற்படுகின்ற வெற்றியுமாகும். காண விளைதல் அல்லது தேடல் மனித இயல்பின் அடிப்படைப் பண்பு அல்லவா!



'மெய்யான வாழ்க்கையை எப்படிப் புனைவினால் வெளிப்படுத்த முடியும்? அது உண்மையை விட்டு விலகிப் புனைவாகத்தானே இருக்கும்? அல்லது புனைவினால் எப்படி மெய்யான வாழ்க்கையைத் தொடமுடியும்' என்று யாரும் கேட்கலாம். மெய்யான வாழ்க்கையை அப்படியே அச்சுப்போல எழுதவே முடியாது. அப்படி எழுதினால் அது வரலாற்றுச் சாயலுடையதாக அல்லது ஆவணத் தன்மையைக் கொண்டதாகவே அமையும். அதில் விசாரணைக்கான இடமும் விரிந்து அந்த வாழ்க்கையை அறிந்து கொள்வதற்கான வாசல்களும் குறைவு.

புனைவு சுட்டும் வாழ்க்கையானது, மனிதர்கள் எதிர்கொள்கின்ற சிக்கல்களையும் உளநிலைகளையும் பலவிதமான ஊடுபாவுகளின் வழியே வெளிப்படுத்தும் திறனுடையது. பல கோணங்களில் நின்று பேசக் கூடிய ஆற்றலையும் வெளியையும் கொண்டது. இதனால் புனைவின் ஒவ்வொரு விழிப்பிலும்

பல்பரிமாணங்களில் உண்மையும் மனிதக் கோலங்களும் வெளிப்பட்டு நம்மை வியப்பூட்டும். நாம் அறியாத, அறிய வேண்டிய பரப்புகளைக் காண்பிக்கும். 'எழுதித்தீராத பக்கங்கள்' இவை.

ப. தெய்வீகனின் 'பொதுச்சுடர்' ஈழத் தமிழர்கள் இன்று தமது வாழ்விலும் அரசியல் வெளியிலும் எதிர்கொள்ளக் கடினமான ஒரு யதார்த்தப் புலத்தையும் எதிர்கொள்ள முடியாமலிருக்கும் உண்மையையும் திறந்து முன்னே வைக்கும் கதை. கடினமோ கசப்போ இரண்டையும் ஈழத்தமிழர்கள் எதிர்கொண்டேயாக வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும் என வலிமையாக வலியுறுத்துகிறது. இதைத் தன்னுடைய புனைவு நுட்பத்தின் வழியாகச் சாதித்து வெற்றியடைந்திருக்கிறார் தெய்வீகன் என்பதால் 'பொதுச்சுடர்', ஈழத் தமிழர்களின் அரசியலையும் அது ஊடறுத்துக் கொண்டிருக்கும் வாழ்க்கையையும் பேசும் அரசியலின் கதை எனலாம்.

கதையின் சாரம் இதுதான்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராளியாக இருந்த ஒருவர், போர் முடிவுற்ற பிறகு, ஆஸ்திரேலியாவுக்கு திருமண உறவின் வழியாகச் சென்று சேர்கிறார். அவருடைய மனைவி தயானியும் குடும்பத்தினரும் அவர்களுடைய நண்பர்களுமாக விமான நிலையத்துக்கு வந்து, அவரைப் பெருமையோடு வரவேற்று அழைத்துச் செல்கிறார்கள். அனைவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்கள். வந்திருப்பவர் போராளியாகச் செயற்பட்டவர். இறுதிப்போர் வரையில் களத்தில் நின்றவர் என்பதால் அவருடன் தங்களுடைய நெருக்கத்தைக் காண்பிக்க வேண்டும். தாங்களெல்லாம் இயக்கத்தின் பெரிய ஆதரவாளர்கள், இயக்கத்தைப் பற்றியும் போராட்டத்தைப் பற்றியும் தீவிரமான அவதானிப்பில் இருப்பவர்கள் என்று காட்ட வேண்டும் என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முயற்சிக்கிறார்கள். இதெல்லாவற்றுக்கும் மேலாகத் தன்னுடைய கணவர் போர்க்களத்தில் விழுப்புண் ஏற்றவர். இதோ அதற்கு அடையாளம் என்று அந்தப் போராளியின் மனைவியும் குடும்பத்தினரும் அவரையிட்டுப் பெருமையடித்துக் கொள்கிறார்கள். இதற்காக அந்தப் போராளியின் மேலாடையைக் கூட விலக்கிக் காயத்தைப் பிறருக்குக் காட்டுகிறார்கள். அந்தப் போராளி ஒரு காட்சிப் பொருளாக்கப்படுகிறார். இதெல்லாமே அந்தப் போராளிக்கு விருப்பமற்றது. ஒவ்வாமையினால் அவர் மிகச் சிரமப்படுகிறார். இந்த மாதிரியான கூட்டத்துடன் வைத்துக்கொண்ட திருமண உறவே கசப்பு என்ற உணர்வு அவருக்கு ஏற்படுகிறது. இயக்கத்தை வைத்துப் பிழைப்பு நடத்துகின்றவர்களை, பெருமையடித்துக் கொள்கின்றவர்களைக் குறித்த வெறுப்பு மேலிடுகிறது. மட்டுமல்ல, அவர் வேலை தேடிச் செல்லுமிடத்தில் இயக்கத்தைப்பற்றி அவருக்கே வகுப்பெடுக்கிறார் இயக்க ஆதரவாளரான இன்னொரு ஈழத்தமிழர். உச்சமாக இறுதிப்போரின் போது புலிகளின் பெருந்தளபதிகள் எங்கெல்லாம் முன்னணிப் போர் அரண்களை அமைத்திருந்தார்கள் என்பதையெல்லாம் தான் அறிந்து வைத்திருப்பதாக, ஒரு தாளில் அவற்றை வரைந்து அதிகப் பிரசங்கித்தனமாக அவருக்கு விளக்கிக் காண்பிக்கிறார். இவையெல்லாவற்றுக்கும் அப்பால் இறுதிப்போரின்போது 'அவர் உயிரோடு இருக்கிறாரோ ?'



என்று வேறு காதோடு ரகசியமாகக் கேட்கிறார்.

போராளியோ, தானறிந்த உண்மையைத் தயங்காமற் சொல்லி விடுகிறார். இதுதான் பிரச்சினையாகி விடுகிறது.

அதுவரையிலும் பந்தயக் குதிரையைப்போலக் கவர்ச்சியாக இருந்தவர் சட்டெனக் கீழே சரிந்து கேள்வியாகிவிடுகிறார். பிறகென்ன? நிலைமை படபடவென மாறி எல்லாமே தலைகீழாகி விடுகின்றன. ஆஸ்திரேலியாவில் தமிழ்த்தேசியத் தரப்பில் முக்கியமானவராக, மாவீரர் நாளில் பொதுச்சுடரை ஏற்றுகிறவராக இருந்த தயானியின் தந்தையைச் சுடரேற்ற முடியாது என்றளவுக்கு அந்தப் போராளி சொன்ன உண்மை நெருக்கடியை உண்டாக்கி விடுகிறது. இதனால் சில நாட்களுக்கு முன் பெருமையுடன் கொண்டாடிய தன்னுடைய மருமகனை (போராளியை) கடிந்து கொள்கிறார். தன்னுடைய அடையாளத்தைப் பேணுவதற்காக அவர் முயற்சிக்கிறார். இதற்குப் பிறகு என்ன நடக்கிறது என்பதை வாசகர்கள் கதையைப் படித்து அறியலாம். இது கதையின் சுருக்கமல்ல. மையப்பகுதியும் அல்ல. ஒரு நல்ல சிறுகதையில் எது மையம், எது கதை என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது. அப்படித் தேடினால், அதில் நாம் அந்தச் சிறுகதையைப் புரிந்து கொள்ளவோ அனுபவிக்கவோ முடியாது. அதிலுள்ள அத்தனை இழைகளும் முக்கியமானவையே. ஒவ்வொரு சொல்லும் பொருள் கொண்டு ஒளிர்கின்றவையே. ஒன்றை இழந்தாலும் அந்தப் பகுதி இருளாகிவிடும்.



கதையின் தொனி, உண்மையை ஏற்றுக்கொள்வதற்கு ஈழத்தமிழ்ச் சமூகம் தயாரற்றிருக்கிறது. அது தனக்குள் வளர்த்துக் கொண்டுள்ள கற்பனையிலும் நம்பிக்கையிலும் எந்தச் சேதங்களும் ஏற்படுவதை விரும்பவில்லை. அதனால் யதார்த்தத்தையும் உண்மையையும் எதிர்கொள்ளத் திராணியற்றிருக்கிறது என்பதாக இருக்கிறது.

உண்மைதான். கதையில் மட்டுமல்ல, யதார்த்தத்திலும் அப்படித்தான் உள்ளது. ஈழத்தமிழ் அரசியல் வெளியானது மாயையில் சிக்குண்டு, மூடுண்டு கிடக்கிறது. உண்மையை உணரத் தயாரற்றிருக்கிறது. உணர்ந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளத் திராணியற்றிருக்கிறது. அது கையறு நிலையினால் விளைந்த ஒன்று. ஆனால் இந்த நிலை அபாயமான ஒன்று. இதைக் கடந்தே ஆக வேண்டும்.

அதற்கப்பால் போராளியாகச் செயற்பட்ட ஒருவரின் இன்றைய அவல நிலையையும் உணர்த்துகிறது கதை. இலங்கையின் நெருக்கடிப் பிராந்தியத்திலிருந்து வெளியேறிச் சென்றாலும் புலம்பெயர் தேசத்தில் இன்னொரு நெருக்கடிப் பிராந்தியத்தை எதிர்கொள்ள நேரிட வேண்டும். ஒடுக்குமுறை அரசினால் மட்டும்தான் நெருக்கடி ஏற்படும் என்றில்லை. விடுதலையை விரும்புகின்ற தரப்புகளிலிருந்தும் நெருக்கடி உண்டு என்பதைக் காட்சிப்படுத்துகிறது. இன்னும் ஆழமாக உணர்ந்தால் குறித்த போராளி உளரீதியாகச் சந்திக்கின்ற நெருக்கடி முக்கியமானது. யாருடைய விடுதலைக்காகப் போராடினாரோ அவர்களே அவரைச் சிறைப்பிடித்திருப்பதைப்போன்ற நிலை. யார் ஆதரவாக இருந்தனரோ அவர்களே, நெருக்கடியை உண்டாக்குகின்ற அவலம். இதையெல்லாம் தெரிந்து, திட்டமிட்டுத்தான் இந்தத் தரப்பினர் செய்கிறார்கள் என்றில்லை. சமூக மட்டத்தில் தாம் உருவாக்கிக் கொண்ட சில பிம்பங்கள் எந்த நிலையிலும் எதனாலும் சிதைந்து விடக்கூடாது என்பதற்காகவே அவர்கள் அப்படி நடந்து கொள்கின்றனர். அந்தப் பிம்பங்கள்தான் அவர்கள் கருதுகின்ற அல்லது அவர்கள் உருவாக்கி வைத்திருக்கின்ற அதிகாரக் கட்டமைப்பு. ஆகவே அதில் சேதங்கள் நிகழாமல் இருக்க வேண்டும் எனப் பதற்றமடைகின்றனர்.

இது தனியே ஆஸ்திரேலியாவில் மட்டும் உள்ள நிலை - யதார்த்தம் என்றில்லை. புலம்பெயர் தேசங்கள் அனைத்திலும் உள்ள ஒரு பொது நிலை. ஏன் ஈழத்திலும் இதை ஒத்த தன்மையே உண்டு. எவ்வளவு பிரகாசமான ஒளியைத் தந்தாலும் நமக்கு அதெல்லாம் அவசியமில்லை. இருளில் இருக்கப் பழகிவிட்டோம். அதனால் இருளே நமக்குப் பிடிக்கிறது என்று சொல்வதைப்போலுள்ளது. இன்னொன்று, போராளியாகக் களமாடிய வாழ்க்கை அனுபவத்தோடு சென்றவர், ஆஸ்திரேலியச் சூழலில், திருமண உறவில் இணைந்து கொண்ட குடும்பத்தின் உயர் வாழ்க்கை முறையில் இணைந்து கொள்ளச் சிரமப்படுகிறார். இது வர்க்க ரீதியான ஏற்ற இறக்கங்களைக் காட்டுகிறது. இப்படிப் பல அடுக்குள் கதையில் உள்ளன.

ஆக, விரிவானதொரு அரசியல் விவாதப் பொருளை, யதார்த்தத்தை - உண்மையைப் புனைவில் நிகழ்த்திப் பார்க்கிறார் தெய்வீகன். அப்படி நிகழ்த்தும்போதுதான் இந்தப் பிரச்சினைகளின் தீவிரத்தையும் அவற்றின் பல பரிமாணங்களையும் உணர முடிகிறது. புனைவெழுத்தின் பலமே இதுதான். காலத்தை ஊடுருவி வென்று நிற்பதும் இதனாற்தான்.



karunagaran@thaiveedu.com

# அறிவு உற்பத்தியின் மெய்யியல் அடிப்படைகள்



ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

தாய்வீடு மே 2024 இதழில் 'அறிவு உற்பத்தியும் மெய்யியலும்' என்னும் தலைப்பில் நாம் எழுதிய கட்டுரையின் தொடர்ச்சியாக 'அறிவு உற்பத்தியின் மெய்யியல் அடிப்படைகள்' என்னும் இக்கட்டுரை அமைகிறது. முன்னைய கட்டுரை ஜயதேவ உயன்கொட அவர்களின் Social Research: Philosophical and Methodological Foundations என்னும் நூலின் இரண்டாவது அத்தியாயத்தின் பக்கம் 7-15 வரையான 9 பக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைத் தழுவி எழுதப்பட்டது என்பதைக் குறிப்பிட்டிருந்தோம். அதன் தொடர்ச்சியாக அமையும் இக்கட்டுரை மேற்குறித்த இரண்டாவது அத்தியாயத்தின் 16 - 27 வரையான 12 பக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் உள்ளதன் இயல், அறிவாராய்ச்சியியல், முறையியல், முறை ஆகிய நான்கு விடயப் பொருட்கள் பற்றிய வரைவிலக்கணங்கள் தரப்பட்டுள்ளன. சுருக்கமான இவ்வறிமுகத்தைத் தொடர்ந்து இந்நான்கு எண்ணக் கருக்களின் கோட்பாட்டு அடிப்படைகள் விளக்கப்பட்டுள்ளன. மூலப் பிரதியில் உள்ள கருத்துகள் இயன்றளவு எளிமைப்படுத்தித் தமிழில் கூறப்பட்டுள்ளன. தமிழ் வாசகர்களுக்கு அதிகம் பரிச்சயமில்லாத கலைச்சொற்கள் பல இக் கட்டுரையில் அறிமுகமாகியுள்ளன. அவற்றின் பொருள் விளக்கத்திற்கு உதவும் முறையில் அடைப்புக் குறிக்குள் ஆங்கிலக் கலைச் சொற்களையும், தொடர்களையும் தந்துள்ளோம். கட்டுரையின் இறுதியில் மேலதிக வாசிப்புக்குரிய ஆங்கில நூல்கள், கட்டுரைகள் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன.

## உள்ளதன் இயல்:

அறிவு உற்பத்தியின் உள்ளதன் இயல் பிரச்சினைகள் (Ontological Problems) என்றால் என்ன என்பதை முதலில் வரையறை செய்து கொள்வோம். உள்ளதன் இயல் இவ்வுலகின் இருப்பு, இவ்வுலகில் இருத்தல் (Being in the World) என்பதை ஆராயும் மெய்யியல் பிரிவாகும். இருப்பு என்பது பௌதிக உலகின் இருப்பு, உலகில் வாழும் மனிதர்களதும் பிற உயிர்களதும் இருப்பு, என்ற இரண்டையும் உள்ளடக்கியதாகும். கிரேக்க மொழி வேர்ச்சொல் ஆகிய 'ONT' 'இரு' என்ற பொருள் உடையது (ஆங்கிலத்தில் 'Being' அல்லது To Be). இவ்வேர்ச் சொல்லுடன் 'Logy' என்ற விகுதி சேர்க்கப்படும் போது Ontology என்ற சொல் கிடைக்கிறது. 'Logy' என்பது 'இயல்' என்ற பொருள் உடையது. 'இயல்' என்றால் விஞ்ஞானம், ஆராய்தல் ஆகிய கருத்துடைய சொல். 'உள்ளதன் இயல்' என்ற கலைச் சொல்லின் சொற்பொருள் இப்போது தெளிவாகிறது. பௌதிகவியலாளர் இப்பிரபஞ்சம் மனிதரின் அறிகைக்கு உட்பட்டதா? அதன் இருப்பைப் புறத்தே உள்ள பௌதிகப்பொருள் என்ற வகையில் அறிதல் முடியுமா? என்பன போன்ற வினாக்களை கேட்கும் போது, பௌதிகவியலாளர்கள் பிரபஞ்சம் பற்றிய உள்ளதன் இயல் வினாக்களையே வினவுகின்றனர் என்பது தெளிவாகின்றது. இது போன்றே மனித சமூகம் பற்றி ஆராயப்புகும் சமூகவியலாளர் ஒருவரின் ஆராய்வில் மனித இருப்பு, அதன் இயல்பு என்பன பற்றிய பல வினாக்கள் உள்ளடங்கியிருப்பதைக் காணலாம். இவற்றை மெய்யியலாளர்கள் மனித வாழ்க்கையின் 'Reality' பற்றிய வினாக்கள் எனக் கூறுகின்றனர். 'றியலிட்டி' என்ற ஆங்கிலச் சொல்லின் பொருளை முதலில் நாம் தெரிந்து கொள்வோம். ஆங்கிலம் - ஆங்கிலம் - தமிழ் அகரமுதலி ஒன்று அச்சொல்லைப் பின்வருமாறு வரையறை செய்துள்ளது.

Reality: (N) Condition of being Real, The Quality of Being True to life, A person or thing that is real, fact. மெய் இயல்பு, மெய்மை, மூலப்பண்புக் கூறு, மூல இயல்பு, கற்பனையல்லாதது, புற இயல் மெய்ம்மை, உள்ளார்ந்த தன்மை.

மனித உலகின் 'Reality' அதாவது 'மெய்மை' பற்றிய வினாக்களாகவே உள்ளதன் இயல் வினாக்கள் அமைகின்றன. மெய்மை என ஒன்று உள்ளதா? மெய்மையின் பண்புக் கூறுகள் யாவை? மெய்மை எங்கே இருக்கிறது? அது தன்னை எப்படி வெளிப்படுத்துகிறது? மெய்மை மனித அறிவால் அறியக்கூடியதா? இவையாவும் உள்ளதன் இயல் வினாக்களாகும். இவை உலகின் இருப்பு, மனித இருப்பு, மனித சமூகம் என்பன பற்றிய விசாரணையாக அமைவதால் உள்ளதன் இயல் வினாக்கள் எனப்படுகின்றன. (These are ontological questions, Because they refer to various aspects of the Existence of the world, Human beings and Human society)

## அறிவு ஆராய்ச்சியியல்:

உலகைப் பற்றிய அறிவு குறித்த விசாரணையாக அமையும்

வினாக்கள் அறிவாராய்ச்சியல் வினாக்கள் எனப்படும். 'Epistemology' என்ற ஆங்கில சொல்லின் நேர்ப் பொருள் 'அறிவு பற்றிய விஞ்ஞானம் அல்லது கோட்பாடு' (Science or Theory of knowledge) என்பதாகும். அறிவு பற்றி விஞ்ஞானம் ஆகிய அறிவாராய்ச்சியியல் பின்வரும் வினாக்களை எழுப்புகிறது. அறிவு என்றால் என்ன? வலிதுடைய அறிவு என்றால் என்ன? சமயத் தலைவர்களும், தீர்க்க தரிசிகளும், ஞானிகளும் உலகு பற்றிய அறிவை ஏற்கனவே கூறிவிட்டார்களல்லவா? அவர்கள் கூறியவை நிறைய உள்ளனவே? உலகைப் பற்றி (சிற்றறிவுடைய) மனிதரால் புதிய அறிவைப் படைத்தளிக்க முடியுமா? ஆகையால் மனிதர்கள் உண்மையான அறிவைப் பெறுவதற்கான வழிகள் உள்ளனவா? அவ்வழிகள் யாவை? இவை போன்றனவே அறிவாராய்ச்சியியல் வினாக்களாகும்.

## முறையியல்:

பௌதீக உலகத்தினதும், சமூக உலகத்தினதும் அறிவைப் பெறுவதற்குரிய நோக்குமுறைகளையும், அணுகுமுறைகளையும் குறிப்பிடுவதே முறையியல் எனப்படும். இவ்விரு உலகங்கள் பற்றிய அறிவின் உற்பத்திக்குக் கையாளக் கூடிய முறைகள் எவை? ஒரு நோக்குமுறையை விடுத்து இன்னொரு நோக்கு முறையை ஓர் ஆராய்ச்சியாளர் தெரிவு செய்யும் போது அவர் அத்தெரிவை என்ன அடிப்படையில் செய்கிறார்? என்ன அடிப்படைகளில் பிற நோக்குமுறைகளை நிராகரிக்கிறார்? உற்பத்தி செய்யப்படும் அறிவு என்ன அடிப்படைகளில் வலிதுடையதென ஏற்கப்படுகிறது? அல்லது வலிதற்றதென நிராகரிக்கப்படுகின்றது? இவையே அறிவு உற்பத்தியின் முறையியல் (Methodology) சார்ந்த பிரச்சினைகளாகும்.

## முறை:

அறிவு உற்பத்தியின்போது ஆய்வாளர் கையாளும் குறிப்பிட்டவகை உபாயங்களும், நுட்பமுறைகளும் (Techniques) முறை (Method) எனப்படும். ஆய்வாளர் கட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகூட பரிசோதனைகளை நடத்துவதென முடிவு செய்கிறாரா அல்லது கள ஆய்வு செய்வதென முடிவு செய்கிறாரா? மாதிரி மதிப்பீடுகள் (Sample Survey), பங்கேற்பு அவதானிப்பு (Participant Observation), வினாக்கொத்து முறை, ஆழ் நேர்காணல் (In – Depth Interview) ஆகிய முறைகள் கையாளப்படவுள்ளனவா? சேகரிக்கப்பட்ட தரவுகள் புள்ளியியல் பகுப்பாய்வு செய்யப்படுமா? புள்ளியியல் நுட்பமுறைகளால் விளக்கியுரைக்கப்படுமா? இவை தாம் ஆராய்ச்சியின் முறைகள் பற்றிய பிரச்சினைகள்.

மேலே குறிப்பிட்ட நான்கு வகையான ஆய்வுப் பிரச்சினைகளுள் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட ஆராய்ச்சி முறைகள் (Research Methods) பற்றியே ஆய்வாளர்கள் கூடிய அக்கறை செலுத்துவதைக் காணலாம். முறையியல் பிரச்சினைகள் குறித்தும் ஆய்வாளர்கள் ஓரளவு கவனம் செலுத்துவதுண்டு. ஆனால் அறிவாராய்ச்சியில், உள்ளதன் இயல் என்ற இரண்டு விடயங்களையும் மெய்யியலாளர்களுக்கு உரியனவெனக் கருதி அக்கறை கொள்ளாதிருக்கிறார்கள். மெய்யியல் சிந்தனையில் விருப்பம் உடைய ஒரு சில ஆய்வாளர்கள் மட்டும் இவ்விருவிடயங்களில் அக்கறை கொண்டுள்ளனர். ஆனால் இங்கே நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது யாதெனில், ஆய்வாளர்கள் முறைகள் தவிர்ந்த ஏனைய மூன்றையும் பற்றிய உணர்வு கொண்டவர்களாக இருக்காவிடினும், அறிவு உற்பத்தியின் முன்நிபந்தனையாக, அடிப்படைத் தேவையாக முறையியல், அறிவாராய்ச்சியியல், உள்ளதன் இயல் என்னும் மூன்றையும் சார்ந்த விடயங்கள் அமைந்துள்ளன. இவற்றைக் கவனிக்கத் தவறும் ஆராய்ச்சியாளரின் ஆய்வும் ஆய்வின் பயனான அறிவு உற்பத்தியும் குறைபாடுடையனவாய் ஆகிவிடுகின்றன. இது பற்றி மேலும் விளக்கிக் கூற வேண்டியுள்ளது.

## உள்ளதன் இயல்:

நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று உள்ளதன் இயல் வினாக்கள் அறிவுக்கும் உலகின் இயல்புக்கும் இடையிலான தொடர்பு பற்றியனவாகும். பருப்பொருள் உலகம் (Material World), பருப்பொருள் சாராத உலகம் (Non - Material World) என்ற இரு உலகங்களினதும் உள்ளதன் இயல் வினாக்கள், பண்டைக் காலம் முதல் மெய்யியல், சமயம் என்ற இரண்டினதும் அக்கறைக்குரிய விடயங்களாக இருந்து வந்தன. மெய்யியலின் ஒரு பிரிவான அபௌதிகம் (Meta – physics) உள்ளதன் இயல் பிரச்சினைகள் பற்றிய ஆய்வுத் துறையாக இருந்து வருகிறது. ஐரோப்பாவில் 16-ம் – 17-ம் நூற்றாண்டுகளில் அபௌதீகத்திற்கும் விஞ்ஞானங்களுக்கும் இடையே பிளவு ஏற்பட்டது. அப்போது தோன்றிய நவீன விஞ்ஞானம் இயற்கை உலகைப் பற்றிய நம்பகமான புரிதலுக்கும் விளக்கத்திற்கும் உரிய துறையாக தன்னைத் தாபித்துக் கொண்டது. தனது மேலாண்மையைப் பிரகடனம் செய்தது. இதனால் மெய்யியலாளர்களிடையே பெரும் விவாதங்களும் சர்ச்சைகளும் எழுந்தன. இவை பற்றி நாம் இங்கு விரிவாக ஆராய்வதற்கு இடமில்லை.

ஆய்வாளர்கள் ஆய்வைத் தொடங்கும் போது சில அனுமானங்களை வெளிப்படையாகக் கூறுவதுண்டு. அவர்கள் கூறும் அனுமானங்கள் அவர்களை அறியாமலே உள்ளதன் இயல் சார்ந்த கூற்றுக்களாக அமைந்து விடுகின்றன. உதாரணமாக ஓர் ஆய்வாளர் பின்வருமாறு கூறுகிறார் என வைத்துக்கொள்வோம். 'எனக்குப் புறத்தே சுதந்திரமான இருப்புடைய புறஉலகை நான் புரிந்து கொள்ள முயற்சிக்கிறேன். புறநிலையான உலகம் மனித உலகத்திற்கும், மனிதர்களுக்கும் முன்பே தோன்றியது. அது மனிதரில் இருந்து சுதந்திரமான இருப்பை உடையது. அவ்வுலகு மானிடர்களாகிய எமக்கு புறநிலை மெய்மையாகும் (Objective Reality)'. இன்னொரு ஆய்வாளர் இவரில் இருந்து வேறுபட்ட ஒரு கூற்றைக் கூறுகிறார். 'மனிதர்களால் கட்டமைக்கப்பட்ட (Constructed) ஓர் உலகத்தை நான் புரிந்து கொள்ள முயற்சிக்கிறேன். அவர்கள் இவ்வுலகை தமது பண்பாட்டின் அடிப்படையில் தமது சொந்த உணர்வு நிலையில் கட்டமைத்துக் கொள்கிறார்கள். நான் புரிந்து கொள்ள முயற்சிக்கும் மெய்மை (Reality) சமூக உலகத்திற்கு முன்பே இருந்து வந்த ஒன்றல்ல. உலகம் என்ற மெய்மை அவர்களின் வாழ்தலின் ஊடாகக் கட்டமைக்கப்படுவது'. இவை இரண்டும் உள்ளதன் இயல் கூற்றுக்களாகும். இவ்விருகூற்றுகளும் இருவேறு மெய்யியல் மரபு சார்ந்த கூற்றுகளாகும். முதலாவது கூற்று அனுபவவாத உள்ளதன் இயல் சார்ந்த கூற்று. இதனை புறநிலை உள்ளதன் இயல் என்றும் கூறுவர். இரண்டாவது அகநிலை உள்ளதன் இயல் கூற்றாகும். இதனை மனிதாய உள்ளதன் இயல் என்றும் கூறுவர். ஆங்கில, தமிழ்ச் சொற்கள் வருமாறு.

- Empiricist or Objectivist Ontology - அனுபவவாத அல்லது புறநிலை உள்ளதன் இயல்.
- Subjectivist or Humanistic Ontology - அகநிலை அல்லது மனிதாய உள்ளதன் இயல்.

முதலாவதான அனுபவாத / புறநிலை மரபினர் நேர்க்காட்சி வாதம் (Positivism) என்னும் மெய்யியல் நோக்கு முறையை ஏற்றுக்கொண்டவர்களாவர். இரண்டாவதான அகநிலை / மனிதாய மரபினர் பின்னை நேர்க்காட்சிவாதம் (Post Positivism)




என்னும் நோக்குமுறையைக் கொள்கையாகக் கொண்டவர்களாவர்.

## அறிவாராய்ச்சியியல்:

நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி அறிவாராய்ச்சியல் என்பது அறிவு பற்றிய விஞ்ஞானமாகும். இது மெய்யியலின் ஒரு பிரிவாகும். இம்மெய்யியல் பிரிவு அறிவின் இயல்புகள் பற்றியும் உலகு பற்றிய மனித அறிவைச் சாத்தியமாக்கும் நிபந்தனைகள் பற்றியும் விளக்கிக்கூறுவது. ஆராய்ச்சியாளர்கள் தமது அறிவாராய்ச்சியியல் நிலைப்பாடுகளைப் பலவிதமாக எடுத்துக் கூறுவதுண்டு. மூன்று உதாரணங்கள் வருமாறு:

- 'நான் ஆய்வு செய்யும் விடயம் பற்றிய புறநிலையான சித்திரம் (Objective Picture) ஒன்றை உங்களுக்கு நான் தருகின்றேன்'
- 'எனது வாதங்கள் நியமங்கள் சாராதவை. அவை மதிப்பீட்டு தீர்ப்புகளைக் (Value Judgements) கூறுவன அல்ல'.
- 'இச்சமுதாயத்தின் உறுப்பினர்களான மக்கள், தமது பண்பாடு என்ற கண்கள் மூலமாகவும், கருத்து வகைமைகள் ஊடாகவும் உலகை எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதை எனது ஆய்வின் மூலம் புரிந்து கொள்ள முயன்றுள்ளேன்'.

முதலிருகூற்றுக்களும் ஆய்வாளர்கள் கொண்டுள்ள அறிவாராய்ச்சியியல் அனுமானம் ஒன்றைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அவர்கள் 'Facts' எனப்படும் 'நேர்வுகளை' நியமங்கள் (Norms), மதிப்பீடுகள் (Values) என்பனவற்றில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கிறார்கள். முன்னரே வகுத்துக் கொண்ட முற்சாய்வுகளின்படி 'நேர்வுகளைப்' (Facts) பரிசீலித்தல் ஆகாது என்ற கொள்கை உடையவர்கள் என்பது தெளிவாகிறது. மூன்றாவது கூற்று பின்னை நேர்க்காட்சிவாத (Post – Positivist), அகநிலைப்பட்ட (Subjectivist) அறிவாராய்ச்சியியல் நிலைப்பாட்டை எடுத்துக்காட்டுவது, இம்மூன்றாவது கூற்றில் மதிப்பீடுகள், 'நியமங்கள்' சாராத 'புறநிலை அறிவைப்' பெறுதல் ஆய்வாளரின் நோக்கமாக அமையவில்லை என்பதைக் காணலாம். அவர்தாம் ஆய்வு செய்யும் சமுதாயத்தின் 'பண்பாடு என்ற கண்கள் ஊடாகவும் கருத்து வகைமைகள் ஊடாகவும்' (Through their own Cultural Eyes and Conceptual Categories) அவர்களின் வாழ்வியலைப் புரிந்து கொள்ள முயற்சிப்பதாகக் கூறுவதைக் காணலாம். நேர்க்காட்சிவாதம், பின்னை நேர்க்காட்சிவாதம் என்னும் இவ்விரு அறிவாராய்ச்சியல் நோக்கு முறைகள் விரிவாக ஆராயப்பட வேண்டியன.

## முறையியல்:

முறையியல் (Methodology), முறை (Method) என்பன ஒரே விடயத்தையே குறிப்பன என்று நாம் சில சந்தர்ப்பங்களில் தவறாகப் புரிந்து கொள்கிறோம். முறையியலையும், முறையையும் வேறுபடுத்தி நோக்குதல் வேண்டும். அவற்றை ஒன்றோடு ஒன்று சேர்த்துக் குழப்புதல் தவறான முடிவுகளுக்கு எம்மை இட்டுச் செல்லும். ஆய்வாளர்களில் பலர் தமது ஆய்வேடுகளில் தமது முறையியல் யாது என்பதைத் தெளிவாக விளக்குவதில்லை. உதாரணமாக: பொருளியல், புவியியல், உளவியல் போன்ற துறைகளின் ஆராய்ச்சியாளர்கள் நேர்க்காட்சிவாத முறையியலையே (Positivist Methodology) தமது ஆய்வுகளில் கையாள்வதுண்டு. இதற்கு மாறாக பண்பாட்டு மானிடவியல், சமூக மானிடவியல் ஆகிய துறைகளின் ஆராய்ச்சியாளர்கள் இனவரைவியல் முறையை (Ethnographic Method) கையாள்வதுண்டு. இனவரைவியல் முறை பின்னை நேர்க்காட்சிவாத முறையியல் ஆகும். நேர்க்காட்சிவாத முறையியலா அல்லது பின்னை நேர்க்காட்சிவாத முறையியலா சிறந்தது, ஏற்புடையது என்பது பற்றி வாதங்களும் எதிர்வாதங்களும் உள்ளன. இவற்றின் குறைகளும் நிறைகளும் பற்றிய விவாதங்கள் கோட்பாட்டு நிலையில் (Theoretical Level) நிகழ்த்தப்படுபவை. முறையியல், அறிவாராய்ச்சியியல், உள்ளதன் இயல் ஆகிய மூன்று விடயங்கள் சார்ந்த கோட்பாடுகள் இவ்விவாதங்களோடு தொடர்புடையன. நேர்க்காட்சிவாத முறையியல் உலகின் இயல்பையும், உலகு பற்றிய அறிவைப் பெறும் வழிகளையும் அனுபவவாத அனுமானங்களின் (Empiricist Assumptions) அடிப்ப

டையில் வகுத்துரைப்பது. நேர்க்காட்சிவாதப் பொருளியலாளர்களும், அரசியல் விஞ்ஞானிகளும் புறநிலையான (Objective) மதிப்பீடுகள் சாராத (Value-Free) அறிவை உற்பத்தி செய்யும் நோக்கத்தை உடையவர்கள். மானிடவியலாளர்கள் இவர்களுக்கு மாறான நோக்கத்துடன் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். அவர்கள் அகநிலைப்பட்ட (Subjectivist) அறிவை பெறுவதை நோக்கமாகக் கொண்டவர்கள். அவர்களது அறிவு செயலி மைய (Actor - Centric) நோக்குடையது. அவ்வித நோக்கில் மதிப்பீட்டுக் கூற்றுக்கள் (Value Statements) தவிர்க்க முடியாதவை.

மேலே கூறியவற்றில் இருந்து ஆய்வாளர்கள் எந்த முறையியலைத் தெரிவு செய்கிறார் தமது தெரிவை எவ்விதம் நியாயப்படுத்துகிறார் என்பன கோட்பாட்டு நிலையில் நின்று செய்யப்பட வேண்டியன என்பது தெளிவாகின்றது.

## முறை (Method):

ஆராய்ச்சியாளர்கள் ஆய்வின் போது கையாளும் முறைகளிற்கும் கோட்பாடுகளிற்கும் தொடர்பு கிடையாது, முறைகளிற்கும் மெய்யியலிற்கும் தொடர்பும் கிடையாது என்ற அபிப்பிராயம் பல ஆய்வாளர்களிடம் இருந்து வருகிறது. இது தவறான கருத்தாகும். ஆராய்ச்சி முறைகள் முறையியல், அறிவாராய்ச்சியியல், உள்ளதன் இயல் அனுமானங்களோடு தொடர்புடையவை, அத்தகைய தொடர்பற்ற ஆராய்ச்சி முறைகள் என்று எவையும் இல்லை. உதாரணத்திற்கு ஆய்வாளர் ஒருவர் மக்களது வருமான நிலையை கண்டறிவதற்காக மதிப்பீடு ஒன்றைச் செய்கிறார் எனக்கொள்வோம். குடும்பங்களின் வருமான நிலையை அறிவதற்கான புள்ளி விபரங்களை அவர் திரட்டுகிறார். அவரின் இந்த அணுகுமுறை சமூக உலகம் (Social World) பற்றிய அறிவைப் பெறுதல் தொடர்பாக அவர் கொண்டுள்ள முறையியல் அணுகுமுறையோடு தொடர்புடையது. புள்ளி விபரங்களின் மூலம் சமூக உலகம் பற்றிய அறிவைப் பெறலாம் என்பது நேர்க்காட்சிவாத அனுமானமாகும். நேர்க்காட்சிவாதம் அனுபவாத / புறநிலைசார்ந்த / ஆராய்ச்சி முறையியலையும் உள்ளதன் இயலையும் ஆதாரமாகக் கொண்டுள்ளது. புள்ளிவிபர மதிப்பீடு மூலம் அளவிடக்கூடிய (Quantifiable) தரவுகள் கிடைக்கின்றன. அத்தரவுகள், புறநிலைப்பட்ட சமூக உலகம் பற்றிய உண்மைகளைத் தெரிவிக்கின்றன என்பது நேர்க்காட்சிவாத முறையியலின் அனுமானமாகும். சமூக உலகம் ஆய்வாளருக்குப் புறத்தே இருப்புக் கொண்டுள்ளது, சமூக உலகத்திற்கும் ஆய்வாளருக்கும் இடையே தெளிவான இடைவெளி உள்ளது. ஆய்வாளர், ஆய்வு செய்யும் பொருளில் இருந்து சார்பற்ற நிலையில் உள்ளார். அறியப்படும் சமூக உலகம் (The Knowable Social World) அறிவோரில் (The Knower) வேறானது என்பது நேர்க்காட்சிவாத முறையியலின் அனுமானமாகும். ஆய்வுத்திட்டம் குறித்தவொரு சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிக்கு ஒப்பானது. ஆய்வாளரும், தகவலாளரும் தமது அகநிலை சார்ந்த அபிப்பிராயங்களை இக் கண்ணாடியூடாகப் பிரதிபலிப்பதற்கு இயலாது. புறத்தே உள்ளவை தாம் கண்ணாடியில் பிரதிபலிக்கப்பட வேண்டியன. மானிடவியலாளரின் பங்கேற்பு அவதானம் (Participant Observation) என்னும் ஆய்வு முறை மேற்குறித்த 'கண்ணாடியில் பிரதிபலித்தல்' (Mirroring) உதாரணத்திற்கு மாறானது. பங்கேற்பு அவதானம், ஆய்வாளரதும், பங்கேற்பாளரதும் அகநிலை சார்ந்த கருத்துக்களை (Subjective Views) அறிந்து கொள்வதை நோக்காகக் கொண்ட ஆய்வு முறையாகும். இம்முறையியல் பண்புத் தரவுகள் (Qualitative Data) மூலம் சமூக உலகை அறிய முற்படுகிறது. பண்புத் தரவுகள் சமூகச் செயலிகள் (Social Actors) வழங்கும் அகநிலை சார் கருத்துக்களை உள்ளடக்கியவை. ஆங்கிலத்தில் 'Subject' என்ற சொல் ஆய்வுக்குரிய பொருள் / விடயம் என்பதைக் குறிப்பது. இங்கே 'மக்கள்' 'பங்கேற்பாளர்கள்', 'சமுதாயம்' என்பன ஆய்வுக்குரிய 'Subject' ஆக இருப்பதையும், 'Subjective' என்ற அடைமொழிச் சொல் ஆய்வுக்குரிய விடயப் பொருளாக அமையும் மனிதர்களின் 'அகநிலை சார்ந்த' கருத்துக்களைச் சுட்டுவதையும் காண்கிறோம். ஆகையால் ஆராய்ச்சி மனிதர்களின் 'அகநிலை' சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கமுடையதாக அமைகிறது. பின்னை நேர்க்காட்சிவாத முறைகள் (Post – Positivist Methods) சமூக உலகம் குறித்த அகநிலை சார்ந்த கருத்துக்களை வெளிக்கொணர்வதை நோக்காகக் கொண்டுள்ளன. அனுபவவாத / நேர்க்காட்சிவாத முறைகள் சமூக உலகம் பற்றிய புறநிலையான சித்திரத்தைத் தரும் நோக்கத்தைக் கொண்டுள்ளன. இரண்டு முறையியல்களும் எதிர் - எதிரான அணுகுமுறைகளாகும்.

மெய்யியல் வினாக்களும் எண்ணக் கருக்களும் மேலே எடுத்துக் கூறப்பட்டன. இவற்றை இப்போது தொகுத்துக் கொள்வோம். எமக்கு மூன்று முக்கியமான வினாக்கள் கிடைக்கின்றன. மனிதர்களாகிய எமக்குப் புறத்தே, புறநிலையில் உலகம் இருப்புக் கொண்டுள்ளதா? (Does the world exist independently of us, Human Beings?) இம் முதலாவது வினா உள்ளதன் இயல் வினாவாகும். இதனை விட அறிவாராய்ச்சியியல் வினாக்கள் (Epistemological Questions) இரண்டு உள்ளன.

- மனிதர்களாகிய எம்மால் புற உலகை அறியமுடியுமா? வேறு விதமாகக் கூறினால் புற உலகு அறியப்படக்கூடியதா? (Is the world knowable)
- புற உலகு அறியப்படக்கூடியதாயின், அதனை அறிவதற்கான வழிகள் எவை?

இவ்வினாக்களுக்கு எளிதாக விடை கூறிவிட முடியாது. இவற்றுக்குப் பலர் பலவிதமாக விடை கூறியுள்ளனர் ஆயினும், மெய்யியலாளரிடையே ஒருமித்த முடிவுகள் இல்லை. முரண்பாடுடைய வேறுபட்ட விளக்கங்களை இரண்டு பெரும் வகைமைகளுக்குள் அடக்கலாம். ஒன்று, புறநிலை சார்ந்தது (Objectivist). மற்றது, அகநிலை சார்ந்தது (Subjectivist). புறநிலை சார்ந்தது, அகநிலை சார்ந்தது என்னும் இரட்டைத்துவம் (Objectivist and Subjectivist Dualism) விஞ்ஞான மெய்யியலில் சர்ச்சைக்குரிய ஒன்றாக இருந்து வந்துள்ளது. சிலர் இவ்வாறு பிரிவுபடுத்திப் பார்ப்பதே தவறு என்றும் கூறுவர். ஆயினும் புறநிலை, அகநிலை என்ற இரட்டைத்துவம், உலகைப் புரிந்து கொள்வதற்கான எண்ணக் கருக்களையும், வகைமைகளையும் வகுத்துக் கொள்வதற்கு உதவுவதைக் காணமுடியும்.

(தொடரும்...)



shanmugalingam@thaiveedu.com

# ஒரு நூலின் உருவாக்கம்: ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல் 4

- என். செல்வராஜா

ஒரு நூலில் இடம்பெறும் நூலியல் தரவுகளில் 'நூலின் தலைப்பு' பற்றிய புரிதலை கடந்த இதழில் ஆராய்ந்திருந் தோம். இந்த இதழிலும் மேலும் சில சம்பவங்களை விரிவாக நோக்கி அதற்கான மாற்றீடுகள் பற்றிய கருத்துக்களைப் பதி வுசெய்ய முனைகின்றேன்.

சிறிய பதிப்பகங்கள் தமது அச்சாக்கற் பணிகளை மேற் கொள்ளும்போது, பொருளாதார வசதிக்காக, வண்ணப் பதிப் புக்குள்ளாகும் மேலட்டையை முன்கூட்டியே அச்சகத்துக்கு அனுப்பிவிடுவதுண்டு. வெவ்வேறு இடங்களில் அச்சிடப்பட்டு ஓரிடத்தில் ஒன்றுசேரும் கூட்டுப் பதிப்புலகம் இன்றைய கால கட்டத்தில் சாதாரணமானது. இதுவும் இத்தகைய தவறுகள் நேர்வதற்குக் காரணமாகி விடுவதுமுண்டு. மேலட்டையிலும், தலைப்புப் பக்கத்திலும், 'வேர்சோ' பக்கத்திலும் ஒரே நூற்பெ யர் இடம்பெறுவதை நூலாசிரியரும், பதிப்பகமும் இணைந்து கண்காணிக்க வேண்டும். பெரும்பாலான இத்தகைய தவறு கள் ஆசிரியர் அறியாமலே நடந்துவிடுவதுமுண்டு.

'வாழ்க்கையின் சுவடுகள்' என்ற தலைப்பில் நயீமா சித்தீக் சிறுகதை நூலொன்று 1987-ல் வெளிவந்திருந்தது. பத்திரிகை களிலும் சஞ்சிகைகளிலும் வெளியான பதினொரு சிறுகதைக ளின் தொகுப்பு இது. நூலின் அட்டையில் வாழ்க்கைச்சுவடு கள் என்று தவறுதலாகத் தலைப்பிடப்பட்டிருந்தது. அந்நாட் களில் ஒரு அச்சகம் வண்ணப் பதிப்பினை தாமே மேற்கொள் ளும் வசதியைக் கொண்டிராது போயிருக்கலாம். சில சந்தர்ப் பங்களில் மேலட்டை வடிவமைப்பை மற்றொரு அச்சகத்திடம் வழங்கி அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளும் நிலைமையும் இலங் கையின் பதிப்புச் சூழலில் ஒரு காலகட்டத்தில் காணப்பட்டி ருந்தமையை நாம் அறிவோம். இவ்வேளைகளில் இத்தகைய தவறுகள் நேர்வதுண்டு. நூலட்டை முன்னதாக அச்சிடக் கொடுக்கப்படும் தருணங்களில் இந்தத் தலைப்பு வேறுபாடு கள் அறியாமல் நிகழ்ந்துவிடுவதுமுண்டு. சில சந்தர்ப்பங்க ளில் நூலாசிரியரே கவர்ச்சிக்காக மேலட்டையில் நூலின் பெயரைக் குறுக்கியோ நீட்டியோ அச்சிடப் பணிப்பதுமுண்டு.

பின்னாளில் 'வாழ்க்கையின் சுவடுகள்' என்ற அதே தலைப் பில் மல்லாவியிலிருந்து வ.அ. தங்கவேலாயுதம் 2005-ல் ஒரு சிறுகதைத் தொகுதியை வெளியிட்டிருந்தார். 'வாழ்க்கைச் சுவடுகள்' என்ற தலைப்புடனும்; மட்டக்களப்பிலிருந்து எஸ். பிரான்சிஸ் என்ற மற்றொரு படைப்பாளியால் எழுதப்பட்ட




நூல் 1995-ல் வெளிவந்திருந்தது.

ஒரே தலைப்பில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் நூல்களை அவ்வப்போது எழுதிவந்திருக்கிறார்கள். இதுவொன்றும்

தவிர்க்கப்படவேண்டிய குற்றமல்ல. உதாரணமாக 'உறவுகள்' என்ற ஒரே தலைப்பில் கா. சுஜந்தன் (2001), எஸ். பொன்னுத் துரை (2004), இரா. கிருஷ்ணபிள்ளை (2008), செ.து. தெட்ச ணாமூர்த்தி (2010), சியாமளா யோகேஸ்வரன் (2022) ஆகி யோர் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு நூல்களை எழு தியுள்ளனர். இனியும் பலரின் 'உறவுகள்' நூல்வடிவில் வெளி




வரலாம்.

இத்தகைய நிலைமையைத் தவிர்ப்பது எவ்வாறு, தனித்துவ மான புதிய தலைப்புகளை தேர்வுசெய்வது எப்படி? என்பது பற்றிக் கடந்த காலங்களில் புகலிடப் படைப்பாளிகள் சிலர் என்னுடன் உரையாடியிருந்தனர். தாயகத்தில் வெளிவந்த நூல்கள் பற்றிய போதிய தகவல்கள் எழுத்தாளர்களிடம் இல் லாததால், இத்தகைய ஒரே தலைப்புகள் பல எழுத்தாளர்க ளால் எடுத்தாளப்பட வாய்ப்புகள் நிறையவே உண்டு. இருப் பினும் தமது நூலுக்குப் புதியதொரு தலைப்பினைத் தேடும் ஒரு படைப்பாளி, இன்றளவில் வெளிவந்துள்ள 'நூல்தேட்டம்' தொகுதிகளில் உள்ள தலைப்பு வழிகாட்டிப் பிரிவில் அகரவ ரிசைப்படுத்தித் தரப்பட்டுள்ள 17000 தலைப்புகளில் பார்வை யிட்டுத் தமது நூல் தலைப்புகளைத் தேர்வு செய்யலாம். நூல் தேட்டம் தொகுதிகள் Noolaham.Org என்ற இணைய நூலகத் தில் அல்லது Noolthettam.com என்ற எனது இணையத்தளத் தில் பார்வையிட முடியும். ஒரே தலைப்பில் இரண்டுக்கு மேலான நூல்கள் வெவ்வேறு ஆசிரியர்களின் வாயிலாக வெளிவருவது நூலின் நீண்டகால இருப்பை எவ்வகையிலும் பாதிக்காது. ஆனால் ஒரே நூல் பல தலைப்புகளில் பதிவுக் குள்ளாவது சிக்கலையே ஏற்படுத்தும்.

1998-ல் வெளிவந்த பிரபல்யமான நூலான 'மருத மடுமாதா காவிய மல்லிகை' இலங்கையில் மருதமடுத்திருப்பதியில் வீற்றிருக்கும் மடுமாதா பேரில் பாடப்பெற்றதும், மரபுக்கவி தைகளில் எழுதப்பெற்றதுமான காவிய நூலாகும். இந்நூலின் முன் அட்டையில் 'மடுமாதா காவியம்' என்பதாகத் தலைப்பு அச்சிடப்பட்டிருந்தது.

'ஒளியின் மழலைகள்' என்ற கவிதை நூல் 2006-ல் வெளிவந் தது. இந்நூலின் மேலட்டையின் முன்-பின் என்று இருபுறமும் வெவ்வேறு படங்களுடன் கவித்தொகை ஒன்று, கவித் தொகை இரண்டு என்று இருவேறு உபதலைப்புகளுடன் இரண்டு தனி நூல்களாகக் கருதும் வகையில் தனித்தனியா கப் பக்க எண்ணிட்டு முன்பின்னாக அச்சிடப்பட்டிருந்தது. முன்னட்டையைப் பார்க்கும்வேளை ஒரு நூலாகவும், பின்னட் டையைத் திருப்பித் தலைகீழாகப் பார்க்கும் வேளையில் முற் றிலும் வேறுபட்ட மற்றொரு நூலாகவும் வடிவமைக்கப்பட்டி ருந்தது.

ஒரு நூலுக்கு இருவேறு பதிவுகளைக் கொடுக்கமுடியாது என் பது அடிப்படை விதியாகும். இத்தகைய புதுமைகளை வலிந்து புகுத்துவது பதிப்புலகச் சிக்கல்களுக்கு வழிகோலு வது மாத்திரமல்லாது, விற்பனையிலும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் வாய்ப்புள்ளது. ஒரே நூலின் இரு பிரதிக ளைத் தவறுதலாக இருவேறு நூல்கள் என்ற தவறான எண் ணத்தில் ஒரு அப்பாவி வாசகன் வாங்கிச்செல்லும் நிலையும் ஏற்படலாம். அதனால் இத்தகைய நிலைமையினைத் தவிர்க் கும் வகையில் இருவேறு நூல்களாக அவற்றை வெளியிட்டி ருக்கலாம். ஒரே நூலில் இரு பகுதிகளாகக்கூட அவற்றை அச்சிட்டிருக்கலாமோ என்றும் எண்ணத்தூண்டுகின்றது.

பத்திரிகையில் தொடர்கதையாக வெளிவந்த தொடர்நாவல் நூலுருவில் வெளிவரும்போது தலைப்பு மாற்றங்கள் தவிர்க் கமுடியாமல் ஏற்படுவதுண்டு. 'மண்ணின் தாகம்' என்ற நாவல் 1983-ல் எழுதப்பட்டு யாழ்ப்பாணம் (டேவிட் லிகோரியின்) மீரா வெளியீட்டகத்தினால் 1989-ல் வெளியிடப்பட்டது. இந்நா வல் 'தீராச் சுமைகள்' என்ற பெயரில் வீரகேசரி வாரமலரில் முன்னதாக வெளிவந்திருந்தது. அதே 1989-ம் ஆண்டு 'இந்த நாடு உருப்படாது' என்ற பெயரில் கமலம் பதிப்பக வெளியீ டாகவும் யாழ்ப்பாணத்திலிருந்தே வெளியிடப்பட்டது. இரு பதிப்புகளும் முதலாவது பதிப்பென்றே குறிப்பிடப்பட்டுள் ளன. எதிர்காலத்தில் இலக்கிய வரலாற்றாய்வாளர்கள் இந் நாவலை மண்ணின் தாகம், தீராச் சுமைகள், இந்த நாடு உருப்படாது என மூன்று வெவ்வேறு நாவல்களாக இனங்கா ணாதிருக்க வேண்டுமென்பது எனது பிரார்த்தனையாகும்.

‘நஞ்சுண்டகாடு’ என்ற நாவல், குணா கவியழகனால் எழுதப்பட்டு சென்னையில் 2014-ல் நூலுருவாகியிருந்தது. ‘ஏணைப் பிறை’ என்ற தலைப்புடன் இந்நாவல் 2004-ல் எழுதப்பட்டு 2006-களில் வன்னியில் வெளியிடப்பட்டிருந்தது. ஈரோஸ் அமைப்பின் முக்கியஸ்தராகவிருந்த க.வே. பாலகுமாரனின் விரிவான முன்னுரையுடன் அன்று வெளிவந்திருந்தது. விரிவான வாசகர் பார்வைக்காக மீண்டும் இந்நாவல் முதற் பதிப்பாக, ‘நஞ்சுண்டகாடு’ என்ற தலைப்பில் தமிழகத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

க.வே. பாலகுமாரனின் முன்னுரையில் மற்றுமொரு குறிப்பும் காணப்பட்டது. சுபாஷ் என்ற பெயரில் விடுதலைப் போராட்ட அமைப்பின் போராளியாக வாழ்ந்த காலத்தில், தா. பாலகணேசன் எழுதியதும், 92 பக்கங்களில் விடுதலைப் புலிகள் வெளியீடாக வெளியிடப்பட்டதுமான ‘விடிவுக்கு முந்திய மரணங்கள்’ என்ற நாவல் பற்றி அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். 1986-ல் இந்நாவல் விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப் பிரிவினரால் வெளிவந்தது. 13.2.1985-ல் நிகழ்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலை விளக்கும் போராட்ட வரலாற்று நூல் இதுவாகும். இந்நூலின் பிரதி பற்றிய தேடலில் ஈடுபட்டிருந்த ஈழத்துத் தமிழ் ஆய்வாளரும் எழுத்தாளருமான சு. குணேஸ்வரன் என்னுடன் தொடர்புகொண்டு ‘விடிவுக்கு முந்திய மரணங்கள்’ பற்றிய தகவல்களைக் கோரியிருந்தார். அவரது தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் அந்நூல் பற்றிய தேடல் குறிப்புகளைப் பார்வையிட்ட வேளையில் இந்நாவல் ‘விடியலுக்கு முந்திய மரணங்கள்’ என்ற தலைப்பில், நூல்தேட்டத்தில் முதலாவது தொகுதியில் பதிவுக்குள்ளாகியிருந்ததைக் கண்டறியமுடிந்தது. அப்பதிவு 1988-ல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் 112 பக்கங்களில் தமிழகத்தில் வெளியிடப்பட்டிருந்ததை அறியமுடிந்தது. (நெய்வேலி 12: ஈகம் பதிப்பகம், சரோசினி நாயுடு சாலை. அச்சகம்- குறிஞ்சிபதி: அழகிரி அச்சகம்). பின்னாளில் எழுத்தாளர் குணேஸ்வரன் இலங்கைப் பதிப்பைக் கண்டறிந்து எனக்கு பிரதியை மின்னஞ்சல் வழியாக அனுப்பியிருந்தார். அதில் நூலின் தலைப்பாக ‘விடிவுக்கு முந்திய மரணங்கள்’ என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. நூலில் எவ்விடத்திலும் அச்சக முகவரியோ விரிவான நூலியல் தகவல்களோ தரப்படவில்லை. அதனால் இந்நூல் வன்னிப்பிரதேசத்திலும் சமகாலத்தில் வெளிவந்திருப்பதை அனுமானிக்க முடிகின்றது. இலங்கையிலும் தமிழகத்திலும் வெளியிடப்பட்டிருந்த அந்த நூலின் இரண்டு பதிப்புகளும் முதற்பதிப்பாகவே குறிப்பிடப்பட்டிருந்தன. போரிலக்கிய நூல்களுள் முன்னோடியாகக் கருதப்படக்கூடிய ஆரம்பகாலத்து நூலே தலைப்புச் சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளமை, வருத்தத்துக்குரியது. ஈழத்து நூல்களின் நூலியல் பதிவுகள் பற்றிய தீவிரமான அவதானிப்பினை எதிர்காலத்தில் ஈழத்து எழுத்தாளர்கள் கொண்டிருக்கவேண்டும் என்ற பாடத்தினை எமக்கு இந் நிகழ்வு ஊட்டுவதாயுள்ளது.

நூலின் தலைப்பில் தெரிந்தோ தெரியாமலோ ஏற்படும் குழப்பங்கள் ஏராளம் இருந்தபோதிலும் சில உதாரணங்களையே இங்கு விரிவஞ்சிக் குறிப்பிட்டுள்ளேன். நூலாசிரியர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் எண்ணத்தில் இவை இங்கே குறிப்பிடப்படவில்லை. நடந்து முடிந்ததை மாற்றியமைக்க முடியாது. ஆனாலும் இத்தகைய சூழல்களின் பாதிப்பினைப் புரியவைத்து, எதிர்காலத்தில் இத்தகைய தலைப்புப் பிரச்சினைகளை ஏற்படுத்தாது தவிர்க்கும் நோக்கமே சில நூல்களை உதாரணங்களாகக் குறிப்பிடவேண்டிய தேவையை எனக்கு ஏற்படுத்தியுள்ளது.

போர்க்காலச் சூழலில் பொருளாதாரச் சுமை மிகுந்த காலகட்டத்தில் வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் வெளியிடப்பெற்ற வன்னிப் பதிப்புகளை எதிர்காலத்தில் மீள்பதிப்பாக தமிழகத்தில் வெளியிடும் எவரும், முதற்பதிப்பு வன்னியில் வெளிவந்ததென்ற உண்மையை தமிழகப் பதிப்புகளில் குறிப்பிடுவதை தார்மீகக் கடமையாகக் கருதவேண்டும். இல்லாது போனால், எமது ஈழத்தவரின் நூல்களை தமிழகம்தான் வெளியிட்டதான புதிய வரலாறொன்று உருவாக்கப்பட்டுவிடும். புத்திசாலித்தனமாக ‘தமிழக முதற்பதிப்பு’ என்று குறிப்பிடும் தமிழகத்தின் வெளியீட்டாளர்கள், வன்னியின் மூலப்பதிப்பைப் பற்றிய விபரங்களை பதிவுசெய்யாமல் விடுவதையும் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

இனி அடுத்ததாக, நூலியல் தரவுகளில் முக்கிய அம்சங்களிலொன்றான நூலாசிரியர் பற்றிய பதிவுகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை அடுத்த இயலில் ஆராய்வோம்.

(இன்னும் வரும்)



selvarajah.n@thaiveedu.com






# 1753-இல் வெளியான 'சத்தியத்தின் செயம்' மீள்பதிப்பு

- ந. குகபரன்

பிலீப்பு தெ மெல்லோ (Philippus De Melho) ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் புரட்டஸ்தாந்து சமயம் சார்ந்து செயற்பட்டவர்களில் முக்கியமானவர். ஈழத்தமிழரான இவர் 1723-ல் கொழும்பில் பிறந்தார். கொழும்பிலிருந்த இறையியற் கழகத்தில் எபிரேய, கிரேக்க, லத்தீன், ஒல்லாந்த, போர்த்துக்கேய மொழிகளையும் கிறிஸ்தவ வேதாகம நூல்களையும் கற்றுத் தேர்ந்தார்.[1] தனது புலமைத்திறனால் ஒல்லாந்த ஆட்சியாளரிடத்தில் மதிப்புப் பெற்றிருந்த மெல்லோப் பாதிரியார்; நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார்.

'ஒல்லாந்த சபை தனது தேசத்துக்குப் புறம்பானவர்கள் ஒருவரையும் குருத்துவ நிலைக்கு உயர்த்தவில்லை. எனினும் 1750-ல் டி மெல்லோ அப்படி உயர்த்தப்பட்டார். ஒல்லாந்தரினால் முதன்முதல் இப்பதவிக்கு உயர்த்தப்பட்ட சுதேசி இவரே என்பது குறிப்பிடத்தக்கதாகும்'[2] என மெல்லோ பாதிரியார் தொடர்பாக வண. ச. குலேந்திரன் குறிப்பிட்டுள்ளார். மெல்லோப் பாதிரியார் 1753-ல் யாழ்ப்பாணத்துக்குக் கட்டளைபண்ணப்பட்ட குருவாக நியமிக்கப்பட்டார்.

அக்காலத்தில், ஈழத்தில் இருந்த முதன்மைத் தமிழ்ப் புலவர்களில் ஒருவரான கூழங்கைத்தம்பிரானோடு மெல்லோப் பாதிரியார் நெருங்கிய நட்புறவைக் கொண்டிருந்தார். இதன் பின்னணியிலேயே யோசெப்புப் புராணத்தைக் கூழங்கைத் தம்பிரான் ஆக்கினார் என்பர். 'திருவுலாங்கலைப் பிலிப்புமேலோன் குருச்சிந்தை மருவுஞான நல்லொளியென...'[3] எனும் யோசெப்புப் புராணச் செய்யுளில் மெல்லோப் பாதிரியாரின் சிறப்பினைக் கூழங்கைத்தம்பிரான் பதிவு செய்துள்ளார்.

1755-ல், 'இராச தீர்க்கதரிசியாகிய தவீதினுடைய சில சங்கீதங்களும் புகட்சிப் பாட்டுக்களுக்கும்' எனும் நூல் ஒல்லாந்த மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மெல்லோ பாதிரியாரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேலைத்தேய பண்கட்டுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட இப்பாடல்கள் எளிமையானதாகவும் பேச்சு வழக்கு மொழி கலந்ததாகவும் அமைந்துள்ளன. தவீதினுடைய சங்கீதங்கள், சிமேயோனுடைய புகட்சிப்பாட்டு, சகாரியாவுடைய புகட்சிப் பாட்டு, மரியாளுடைய புகட்சிப்பாட்டு, கர்த்தருடைய பத்துக் கற்பனைகள், கிறிஸ்தவர்களின் விசுவாசத்தின் பிரிவுகள் உள்ளிட்ட பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.[4]

கொழும்பில் இராசவாசல் முதலியாராய் விளங்கிய மருதப்ப பிள்ளை அவர்கள்மேல் மருதப்பக் குறவஞ்சி என்னும் நூலினையும் மெல்லோ இயற்றியுள்ளார் என்று அறியக்கிடக்கின்றது. இவர் சூடாமணி நிகண்டின் இரண்டாம் பகுதிக்கு 20 பாடல்களையும் பன்னிரண்டாம் தொகுதிக்கு 100 பாடல்களையும் புதிதாய் சேர்த்துள்ளார் என்றும், அவரது பாடல்கள் 1856-ம் ஆண்டில் மானிப்பாய் அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்ட பத்துப் பகுதிகளடங்கிய சூடாமணி நிகண்டிற் காணப்படுகின்றன என்றும் மீதி யாழ்ப்பாணத்தில் வழங்கும் கையெழுத்துப் படிகளில் உள்ளன என்றும் சைமன் காசிச் செட்டி கூறுவர்.[5]

பிலீப்பு டி மெல்லோவைப் பற்றிக் குறிப்பிடும் சைமன் காசிச் செட்டி, 1750-ல் புதிய ஏற்பாடு மொழிபெயர்ப்பு முழுவதையும் டீ மெல்லோ முடித்துவிட்டாரென்றும், இது குறித்து அதிக விவாதம் ஏற்பட்டபடியால் மகா தேசாதிபதியின் தலைநகரத்துக்கு (பத்தேவியா/ ஜாக்காட்டா) மொழிபெயர்ப்புப் பிரதி அனுப்பப்பட்டு அங்கே அது அங்கீகரிக்கப்பட்டதென்றும் அதனாலேயே புதிய ஏற்பாடு வெளிவரக் கால தாமதமாயிற்று என்றும் கூறியுள்ளார்.[6] மெல்லோப் பாதிரியாரின் புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு 1759-ல் கொழும்பில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு விரிவான முகவுரையினை மெல்லோ எழுதியுள்ளார்.

இங்கு குறிப்பிட்டவை தவிர, திருச்சபை வழிபாடு என்ற நூலை மெல்லோ மொழிபெயர்த்துள்ளார் என்பதையும் அக்கியான நிற்கிறகத்தை உள்ளடக்கிய புத்தகமொன்றை எழுதத் திட்டமிட்டிருந்தார் என்பதையும் சத்தியத்தின் செயம் நூலின் முகவுரை மூலம் அறியமுடிகிறது. சத்தியத்தின் செயமானது அக்காலத்தில் புரட்டஸ்தாந்து சமயம் தொடர்பான தெளிவை மக்களுக்கு வழங்கும் பொருட்டு மெல்லோவால் எழுதப்பட்ட உரைநடை நூலாகும்.

மெல்லோப் பாதிரியாரிடம் பதிப்பிக்கப்படாமல் பெருமளவான கையெழுத்துப் பிரதிகளும் இருந்துள்ளன. 1790-ல் அவரது மறைவிற்குப் பின்னர் இவையனைத்தும் கிடைக்காது போய்விட்டன.[7]

## சத்தியத்தின் செயம்:

1753-ல் வெளியான சத்தியத்தின் செயம் கைக்கெட்டாத நூல்களில் ஒன்றாக இருந்துள்ளது. இந்த நூலின் முகப்புத் தோற்றத்தைத் தமிழ் எண்ம நூலகத்தில் (Tamil Digital Library) காணமுடிந்தது. ஆனால் நூல் பதிவேற்றப்பட்டிருக்கவில்லை; நூல் பற்றிய தரவுகளையும் பெறமுடியவில்லை. ஆனாலும், நூலைக் கண்டடைய முடியும் என்ற நம்பிக்கையை இந்தப் பதிவு ஏற்படுத்தியது. சத்தியத்தின் செயம் நூலின் மூலநூற் பிரதி நெதர்லாந்து நாட்டு தேசிய நூலகத்தில் இருக்கின்றது என்ற தரவினை இணையத் தேடலில் அறியமுடிந்தது. 2016-




இல் இந்நூல் எண்ம வடிவமாக்கப்பட்டு கூகுளில் மின்நூலாக இணைக்கப்பட்டுள்ளது. சத்தியத்தின் செயம் தொடர்பான விபரங்களை ஆய்வாளர் சிலர் ஏலவே குறிப்பிட்டுள்ளனர். ஆயினும் அறிந்தவரை இது மீள் பதிப்பாக வெளிவரவில்லை.

ஈழத்துத் தமிழ் உரைநடை வரலாற்றில் ஒல்லாந்தர் காலம் பெற்றுள்ள முக்கியத்துவத்தைத் துலக்குவதற்கு சத்தியத்தின் செயம் நூல் முக்கியமானதொன்றெனலாம். 1753-ல் கொழும்பில் இருந்த கொம்பஞ்ஞியவின் நியமமான அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்ட இந்நூலானது இருபத்தெட்டுப் பிரிவுகளையும் தீர்மானம் என்ற பகுதியையும் உள்ளடக்கியுள்ளது. முற்பகுதியில் நூல் குறித்த உரைகள், காணிக்கைப் பத்திரம், முகவுரை என்பன இடம்பெற்றுள்ளன. நூலின் இறுதியில் நூலினது பிரிவுகள் குறித்த அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது.

மெல்லோப் பாதிரியாருக்கு ஒல்லாந்தர் வழங்கிய அங்கீகாரமானது அவர் சுதேச மக்கள் மத்தியில் செயற்படவேண்டிய தேவையையும் அதனை மேற்கொள்வதற்கு அவருக்கிருந்த தகைமையையும் உணர்த்துகிறது. 'பிலீப்பு டி மெல்லோ என்கிற யாழ்ப்பாணத்துக்குக் கட்டளை பண்ணப்பட்ட குருவானவராலே கிறிஸ்தவமான தமிழ்த் திருச்சபையின் பணிவிடைக்குத் தமிழ்ப்பாஷையில் வரையப்பட்டது' என்று சத்தியத்தின் செயம் நூலின் முகப்பில் இடம்பெற்றுள்ள குறிப்பு, நூலின் நோக்கத்தினை வெளிப்படுத்துகிறது.

ஒல்லாந்தரது ஆட்சியின் ஆரம்ப காலப்பகுதியில் கத்தோலிக்க சமயத்தவர் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டனர். துயரப்பட்ட மக்களுக்கு ஆற்றுப்படுத்தலை வழங்கும் வகையில் கத்தோலிக்க சமய குருவானவர்கள் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டனர். அவற்றில் இலக்கிய ரீதியான முயற்சிகள் முக்கியமானவை. சுதேசிய மொழியில் வினா-விடை, கதைகூறல், சம்பவ விபரிப்பு, தர்க்கம், உரையாடல் எனப் பொதுமக்களது புரிதலுக்கு ஏற்ற இலக்கிய வடிவங்களைக் கையாண்டு பேச்சு வழக்கு கலந்த உரைநடையில் இலக்கியங்களை எழுதினர்.

'...பெரியதுஞ் சிறியதுமான பொத்தகங்களையெழுதியூரில் விடுகிறார்கள். அவர்கள் சுற்றித்திரிந்து...' எனத்தொடரும் சத்தியத்தின் செயம் நூலில் இடம்பெற்றுள்ள பகுதி கத்தோலிக்க சமய குருமார்கள் மக்கள் மத்தியில் சமயத்தை நிலைப்படுத்துவதற்கு முனைப்புடன் பணியாற்றினர் என்பதைக் குறிப்புணர்த்துகிறது. இதனால் புரட்டஸ்தாந்து சமயக் கருத்துக்களை வெளிப்படுத்தவும் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்துள்ள மக்களைத் தமது பக்கம் திருப்பும் நோக்கோடும் மறுவாதங்களையும் தெளிவுபடுத்தலையும் முன்வைப்பதற்கான தேவை ஒல்லாந்தருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் பின்னணியிலேயே யாழ்ப்பாணத்து குருவானவராக நியமிக்கப்பட்ட மெல்லோப் பாதிரியார் சத்தியத்தின் செயம் நூலினை எழுத முனைந்துள்ளார் எனலாம். நூலின் நோக்கத்தினை மெல்லோப் பாதிரியார் தனது முகவுரையில் இவ்வாறு கூறுகிறார்.

'இதிலெநாமென்னபிரகாரமாக நடப்பித்தொமென்றால், சறு-வேஸ்பரன்/ யொவான் பெறொர் தெ அல்மெதா வென்கிற குருவானவரைப் பாப்பு மதத்தின் அந்தகாரத்தை விட்டுத் தமதாச்சரியமான வெழிச்சத்துக்கழைக்கிறதற்கு/ பாவித்த வியற்றினமுமடைமானமுமா யிருந்த பொத்தகமாகிய/ அந்தக் குருவானவராலே இஸ்பானிய பாஷையிலிருந்து பொறுத்துக் கேசுப் பாஷையில் திருப்பப்பட்ட/ கிறிஸ்த்தமாற்கத்தின் வித்தியாசமெனறநாமத்தை யுடைத்தான பொத்தகத்திலனெகமெடுத்து/ ஒவ்வொரு விசுவாசத்தின் பிரிவின் பெரில்/ முன்னம் றொமைச்சபையின் படிப்பினையையும்/ பின்னை யதற்கு மாறாக ஸ்தாபிக்கப்பட்ட சாதாருண சத்திய சபையின் விசுவாசத்தையும்/ சுவாபமாகத் ஸ்தாபித்து/ பிற்பாடு சாதாருண விசுவாசத்தின் சத்தியத்தைச் சறுவேஸ்ப்பரனுடைய சுத்த

மான திருவசனத்தின் பற்பலவிடங்களினாலெ/ யதுகளின் பெரிற்செர்க்கப்பட்ட/ பிரயோசனமும் தெவையுமான விபரங்க ளோடும்/ மறுஞாயங்களொடும்/ கெட்டியாக ஒப்பனை பண்ணி/ கடைசியிலெ றொமைமதத்தாருடைய பிரதானமான வெதிர் மொழிகளை அடக்கமாக வழித்தோம்'.

நூலில் வழங்கப்பட்டுள்ள தலைப்புகள் சுருக்கமாகவும் விட யம் பற்றிய தெளிவை வழங்கும் வகையிலும் அமைந்துள் ளன. எடுத்துக்காட்டாக 'சுத்தமான ஆகமத்தின் பரிபூரணத் தின் பேரிலே' என்பது நூலின் முதலாவது தலைப்பாக உள் ளது. இவற்றின் உள்ளடக்கம் அக்கால சமய, சமூக, பண்பாட் டுச் சூழலைப் புரிந்து கொள்வதற்கும் இலக்கிய வடிவம் சார்ந்ததும் மொழி சார்ந்ததுமான செல்நெறியை ஆராய்வதற் கும் துணையாக உள்ளது.

## உரைநடைப் பண்புகள்:

ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் தமிழ் உரைநடையில் உரையாசிரியர்களின் நடை, மணிப்பிரவாளநடை, கல்வெட் டுக்களில் இடம்பெற்றிருந்த பேச்சுவழக்குக் கலந்த நடை எனக் குறித்த சில உரைநடை வகைகள் வழக்கில் இருந்த மையை ஆய்வாளர் சுட்டிக்காட்டுவர். ஈழத்தில் ஒல்லாந்தரது ஆட்சிக் காலத்தில் தமிழில் உரைநடை இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. கூழங்கைத்தம்பிரான் நன்னூலுக்கு உரை எழுதியுள்ளார். கூழங்கைத்தம்பிரானின் மாணவரான மாதகல் மயில்வாகனப்புலவர் யாழ்ப்பாண வைபவ மாலையை உரை நடையில் எழுதினார். கத்தோலிக்க குருவானவர்களும் உரை நடையில் பல்வேறு இலக்கியங்களை எழுதினர். மெல்லோப் பாதிரியாரின் சத்தியத்தின் செயம் நூலும் அக்காலத்திலே வெளிவந்துள்ளது.

கருத்துக்களைத் தெளிவுற முன்வைப்பதற்கேற்ற எழுத்து வடிவங்களில் உரையாடல் ஒன்றாகும். சத்தியத்தின் செயம் உரையாடல் வடிவத்தில் எழுதப்பட்டுள்ளது. எடுத்துக் கொண்ட விடயம் தொடர்பாகக் கத்தோலிக்கத் திருச்சபை யின் கருத்து என்ன என்ற வினாவும் அதற்கு மறுமொழியும் அவ்விடயம் தொடர்பாகச் சாதாரண சத்திய சபையின் விளக் கம் என்ன என்ற வினாவும் அதற்கான மறுமொழியும் இதனை எப்படி ஒப்பனை பண்ணுகிறாய் என்ற கேள்வியும் அதற்கான ஞாயங்களும் மறுமொழியும் விபரித்துச் சொல்லப்பட்டுள் ளன. கேள்விகள் சுருக்கமாகவும் அவற்றுக்கான பதில்கள் விரிவாகவும் அமைந்துள்ளன. எதிர்மொழியும் அதற்கான மறு மொழியும் தர்க்க ரீதியான எடுத்துக்காட்டுக்களோடு முன் வைக்கப்பட்டுள்ளன.

முன்னிலையில் உள்ளவரை விளித்து உரையாடுவது போன்று கருத்துக்களை முன்வைத்தல், வினாக்களை எழுப்பு தல், உணர்வுபூர்வமாக விபரித்தல், வர்ணனைகள், கண்டனங் கள், ஒப்பிட்டுக்காட்டுதல், வேறுபடுத்திக் கூறுதல், அணிக ளைக் கையாளுதல் முதலானவை பொருத்தமான வகையில் எடுத்தாளப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் விரிவாக நோக் குதற்குரியவையாகும். 'எங்கள் நீதிகளெல்லாம் அழுக்குப்பட் டவையைப் போலேயிருக்குது', 'புளித்தமாவாகிய படிப்பினை கள்' முதலான அணிகள் சார்ந்த விபரிப்புகள் இங்கு குறிப்பி டத்தக்கன.

தமிழ் உரைநடை ஐரோப்பியரது வருகைக்குப் பின்னர் புது மாற்றம் பெற்றது எனக் கூறுவர். சத்தியத்தின் செயத்தில் கிறிஸ்தவக் கலைச் சொற்கள் நிறைந்ததான நடையினைக் காணமுடிகிறது. பூசாத்துவம், சாங்கோபாங்கம், உறுதிபூசு தல் முதலான சொற்கள் கிறிஸ்தவ சமயப் பொருள் தரும் வகையில் கையாளப்பட்டுள்ளன.

மெல்லோப் பாதிரியார் சந்திவிகாரங்களைக் கொண்ட நீண்ட வாக்கியங்களைக் கையாண்டுள்ளார். இவை இயல்பான வாசிப்பிற்குச் சவாலானவை.

உதாரணமாக 'இதுகிறீஸ்தவர்களந்தநாளையிலேயிந்தப்ப டிப்பி னையையங்கிகரிக்கவில்லையென்கிறதற்கத்தாட்சியா யிருக்குது' என்பதைக் குறிப்பிடலாம். சொற்புணர்ச்சியிலும் தனித்துவமான அம்சங்கள் பலவற்றைக் காணமுடிகிறது.

மெல்லோப் பாதிரியார் பேச்சு வழக்குச் சொற்களைப் பெரும ளவில் கையாண்டுள்ளார். போச்சுது, காண்பிக்குது, குடி யுங்கோ, விட்டுப் போட்டு, எப்படிக்கொத்த, முதலான சொற் கள் எடுத்துக்காட்டுக்கள். இவற்றிற் பல ஈழத்துத் தமிழ் வழக் கிற்கேயுரியனவாக உள்ளமையும் கவனிக்கத்தக்கது. ஒலிப்பு மாற்றத்தோடு வழங்கும் சொற்களும் நூலில் இடம்பெற்றுள் ளன. பெலப்பிக்க, உபமை, தெண்டிப்பு, முந்தினவர், துறவு கோல் முதலானவை இவ்வகையைச் சார்ந்தன.

பழந்தமிழ்வழக்கு, வடசொற்கள் என்பனவற்றின் பயன்பாட் டையும் காணமுடிகிறது. இக்கால உரைநடை இலக்கியங்க ளில் வடசொற்களைக் கையாளல் பெருவழக்காக இருந்துள் ளது. மெல்லோப் பாதிரியாரும் இவ்வழக்கையே பின்பற்றி யுள்ளார். ஆனால் பாதிரியார் தான் கையாண்டுள்ள வடசொற் கள் பலவற்றை பேச்சு வழக்கிற்கு இயைந்ததாகத் தற்பவ வடிவமாக்கியுள்ளார்.

சொற்கள் அக்கால கல்வெட்டு-சுவடி எழுத்து முறைக்கு ஏற்ப எகர ஏகார ஒகர ஓகார வேறுபாடு இன்றியும், மெய்யெழுத்துக் கள் புள்ளியின்றியும் இடம்பெற்றுள்ளன. ஆட்பெயர்களைக் குறிப்பிடுதல் (உ-ம்: பீத்தர்வந்தன் வெல்தே), கருத்துமயக் கத்தினைத் தவிர்த்தல் (உ-ம்: தொனறைகைையெர்பபொ மென்று நினைககவேண்டா) முதலான குறித்த சில சந்தர்ப் பங்களில் மட்டும் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடப்பட் டுள்ளன. இகர வடிவத்துக்குச் சுழி இட்டு ஈகாரமாக்கும் முறையையும் காணமுடிகிறது. சொற்கள் சிலவற்றில் ழகரம் வரவேண்டிய இடத்தில் ளகரமும் ளகரம் வரவேண்டிய இடத் தில் ழகரமும் வந்துள்ளன. விழங்கப்போறதெப்படி, தமிள், கேழ்வி என்பன சில எடுத்துக்காட்டுக்கள்.

## நிறுத்தக்குறிகள்:

தென்னாசிய எழுத்துமுறையில் நிறுத்தக்குறிகள் பிராமிக் கல்வெட்டுக்களின் காலத்தில் இருந்து வழங்கிவந்துள்ளன. ஏட்டுச் சுவடிகளிலும் இவை காணப்படுகின்றன. ஒன்று, இரண்டு, மூன்று நேர்கோடுகள், வட்டம், கிடைக்கோடு, கொழுக்கியுடன் கூடிய கிடைக்கோடு போன்றவை அரை அல் லது முழு நிறுத்தக்குறிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.[8]

மெல்லோப் பாதிரியார் பழைய வழக்குகளில் இருந்த ஒற்றை நெடுங்கோட்டை கால் நிறுத்தக் குறியாக எடுத்துக்கொண்டுள்ளார். அத்துடன் மேலைத்தேயத் தரிப்புக் குறிகளையும் சேர்த்துக் கொண்டுள்ளார். இத்தகைய தரிப்புக் குறியீடுகளை அனைவரும் அறியச் செய்யும் வகையில் சத்தியத்தின் செயம் நூலின் முகவுரையில் விரிவாக விளக்கியுள்ளார்.

ரேகை அல்லது கால்நிறுத்தம் /, புள்ளிரேகை அல்லது அரை நிறுத்தம் ;, இருபுள்ளி அல்லது முக்கால் நிறுத்தம் :, கேள்வி அடையாளம் ?, அதிசெயவடையாளம் அல்லது மெய்ப்பாட்டுக்குறி !, புள்ளி அல்லது முழுநிறுத்தம் (.), இருபிறை அடையாளம் ( ), இரு கொடுக்கு அடையாளம் [ ], எடுத்துக்காட்டு குறி ” என்பன குறித்த விளங்கங்கள் முகவுரையில் இடம்பெற்றுள்ளன.

‘இந்தப் புத்தகத்தை அடைவாகவும் விளக்கமாகவும் வாசிக்கவும் அதற்கு கருத்தை நன்றாயறியவும்படிக்கு வாசிக்கும்போது தரிக்க வேண்டியது எங்கேயென்று அறிந்து மட்டுக்கட்டிகொள்ளவும் ஐரோப்பாப் பாஷைகளின் வியப்பானமெறையின்படிக்கு அதுகளினிடையாழங்களையிந்தப் பொத்தகத்திலிவ்விதமாகப் போட்டோம்.’ என்று குறிப்பிட்டுள்ளார் மெல்லோப் பாதிரியார். எடுத்துக்காட்டியுள்ள குறியீடுகள் தொடர்பான விளக்கங்கள் பின்வருமாறு:

## ரேகை அல்லது கால்நிறுத்தம் (/)

‘ஒரு விதமான விஷயத்தைக் கொண்டுபேசி / ஆகிலுங் காரியத்துக்குப் பிறம்பாய்ப் போகாமல் / அந்தக் கருத்திலே தானே சற்று விசாலமாக நடந்து / அந்தவிடத்திற்கொஞ்சந்தரித்து / சற்றே மூச்சிழுக்கவேண்டிய தாயிருக்கிற / வசனங்களையும் / வாக்கியங்களையும் / பூரணமல்லாத வாசகங்களையும் / ரேகை என்கின்ற இந்த (/) அடையாளத்தினால் வித்தியாசம் பண்ணினோம்.’ என ரேகை என்ற (/) இந்தக் குறியீடு தொடர்பாக மெல்லோ குறிப்பிட்டுள்ளார். இச்சாய்கோடானது தற்காலத்தில் அல்லது என்பதைக் குறிக்கப் பெரிதும் பயன்படுகிறது.

## புள்ளிரேகை அல்லது அரைநிறுத்தம் (;)

‘பின்னே தொடருகின்ற வாசகங்கள் / கருத்து மாறுகிறதாகத் தோற்றி / ஆகிலும் முன்னேசொல்லப்பட்டதை விபரிக்கவும் பெலப்பிக்கவும் ஏதுவானதாய் / ஒரு பூரணமான கருத்தின் மூன்றாம் நான்காம் பங்காயிருந்து அவ்விடத்தில் ரேகையினிடத்திற் பார்க்க இன்னம் அரைவாசிநேரம் மூச்சிழுத்துத் தரிக்கவேண்டிய / வாசகத்தில் வேற்றுமை பண்ணுகிறதற்கு / புள்ளிரேகையென்ற இந்த (;) அடையாளத்தைப் போட்டோம்.’ என்றுள்ளார்.

## இருபுள்ளி அல்லது முக்கால் நிறுத்தம் (:)

‘அரைக்கருத்தை விழைக்கிற திட்டமான வாசகமாய் / அல்லது / பூரணமான கருத்தை முடிக்கிறதற்கு / இன்னமியாதொன்று கூட்டவேண்டிய யாதொரு வாசகத்தின் பிரிவாயிருந்து / அவ்விடத்தில் / ரேகையினிடத்திற் பார்க்க / இன்னமவ்வளவு நேரமும் / புள்ளி ரேகையினிடத்திற் பார்க்க சற்றதிகநேரமும் / தரிக்கவேண்டியதற்குப் பிறகே இருபுள்ளியை (:) போட்டோம்.’ என்று முக்கால் விளக்கக் குறியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

## கேள்வி அடையாளம் (?)

‘இருபுள்ளியினிடத்தைப் போலே / அவ்வளவு நேரந்தரிக்க வேண்டிய கேள்வி வாசகத்துக்குப் பிறகே கேள்வி அடையாளம் ( ?) போடப்பட்டுது.’ என வினாக்குறிபற்றி எடுத்துக்காட்டியுள்ளார்.

## அதிசயவடையாளம் அல்லது மெய்ப்பாட்டுக்குறி (!)

‘அதிசயம் / திகைப்பு / திடுக்காட்டம் / முறைப்பாடு உடைத்தான வாசகத்துக்குப் பிறகே அதிசெயவடையாளம் (!) போடப்பட்டுது.’ என மெய்ப்பாட்டுக்குறி பற்றி விளக்கப்பட்டுள்ளது.

## புள்ளி அல்லது முழுநிறுத்தம் (.)

முற்றுத்தரிப்புத் தொடர்பாகக் குறிப்பிட்டுள்ள ஆசிரியர், ‘வாசகமாகிலும் கருத்தாகிலும் பூரணமாகவும் முற்றாகவும் முடிந்த தின் பிறகு புள்ளி (.) போட்டோம்.’ என வரையறுத்துள்ளார்.

## இருபிறை அடையாளம் ( )

‘காரியத்தை அதிக தெளிவாய் விளங்கப்பண்ணுகிறதற்கு யாதொன்றை வாசகத்திற்கிடையிலே சேர்த்து அதை கருத்து மயங்காமல் அவ்விடத்தால் விட்டுவிடவுங்கூடுமானவிடத்தில் இரு பிறையாகிய அடையாளம் ( ) முதற்பிறை சேர்க்கப்பட்டதன் முகனையிலும் மற்றப்பிறை சேர்க்கப்பட்டதன் கடைசியிலும் போடப்பட்டது’. எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொடுக்கு அடையாளம் [ ]

‘எடுத்துக்காட்டப்பட்டவாகம வாக்கியங்களிலே ஆதிப் பாஷை சுலோகங்களில்லாமல் விரித்துரையாகக் கூட்டினதை இந்த [ ] இரு கொடுக்குக்குள்ளடக்கினோம்’ என்றுள்ளார்.

## எடுத்துக்காட்டுக்குறி (”)

‘ஒப்பனைக் கெடுத்துக்காட்ட / ஒவ்வொரு ஆகமவாக்கியத்தின் பேரிலெழுதப்பட்ட விபரங்கள் / இப்படிப்பட்ட (”) அடையாளத்தினால் குறிக்கப்பட்டுள்ளது’ என்றுள்ளார். இந்தக் குறியீடானது எடுத்துக்காட்டுகளை முன்வைக்கும் வகையில் கையாளப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டப்படும் பகுதியின் தொடக்க வரி ஒவ்வொன்றிலும் இக்குறியீட்டினை ஆசிரியர் கையாண்டுள்ளார். இக் குறியீட்டின் பிரயோகத்தை விளங்கிக் கொள்வதற்கு நூலில் இருந்தான சான்று:

"அரூபிகளை நம்ப முன்னம் அதுகள் சறுவேஸ்பரனாலே யுண்டாயிருக்குதோவென்று அதுகளைச் சோதித்துப் பார்க்க"

'இதோ வாசிக்கிற நேசமானவர்களே இந்தப் பொத்தகத்தின் பேரிலும் அதின் பாவனையின் பேரிலும் நாமுங்களுக்கறி விக்க வேணு மென்றிருந்ததிதுதான்' என குறியீடுகள் பற்றிய விளக்கத்தின் இறுதியில் மெல்லோப் பாதிரியார் குறிப்பிட் டுள்ளார்.

அக்காலத்தில் தரிப்புக் குறியீடுகள் பல தமிழ் வழக்கில் புதி தாக அறிமுகமாகியுள்ளதென்பதை இவ்விபரிப்பு தெளிவுப டுத்துகிறது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறியீடுகள் பல தற் காலத்தில் தொடர்கின்றன, சில வேறுபடுகின்றன. ஆறுமுகநா வலர் முதலானோர் பிற்காலத்தில் தரிப்புக் குறியீடுகளைச் செம்மையான வகையில் கையாண்டுள்ளனர் என்பதையும் இணைத்து நோக்கலாம்.

## அச்சாக்க நுட்பங்கள்:

ஈழத்துத் தமிழ் அச்சு மரபுக்கு நீண்ட வரலாறு உண்டு. ஐரோப்பியர் அச்சுப்பொறியை அறிமுகப்படுத்தியதன் பின்பு உள்நாட்டவரும் இதைப் பயன்படுத்த ஆர்வங்கொண்டனர். ஒல்லாந்தர் கொழும்பில் இருந்த தமது அச்சகத்தில் நூல்க ளைப் பதிப்பித்தனர். வாசிப்பவரைக் கவரத்தக்க உத்திகள் பலவற்றைக் கொண்டனவாக நூல்கள் வெளியாகியுள்ளன. 1753-ல் அச்சிடப்பட்ட சத்தியத்தின் செயம் நூலில் அக்கா லத்து அச்சாக்க நுட்பங்கள் பலவற்றை இனங்காண முடிகி றது.

நூலின் தொடக்கப் பகுதியில் நூலின் தலைப்பு, அதனை உருவாக்கத் துணைநின்றோர், எழுதியவர், அச்சாக்கம் நிகழ்ந்த இடம், காலம் தொடர்பான விடயங்கள், முகவுரை, நூலின் வருகைபற்றிய உரைகள், காணிக்கைப்பத்திரம் என் பன இடம்பெற்றுள்ளன.

நூலின் முதலாவது பகுதியின் தொடக்க எழுத்தானது அள வில் பெரியதாக தனித்த கவனிப்பைப் பெறும்வகையில் வடி வமைக்கப்பட்டுள்ளது. எழுத்து அளவுகளில் வேறுபாடுக ளைப் பின்பற்றுதல், மேற்கோள் பகுதிகள், முக்கியமான விட யங்களை உட்பந்தியாக்குவதன் மூலம் அவற்றில் கவனக்கு விப்பை ஏற்படுத்துதல், எழுத்துக்களில் தடித்த எழுத்துக்க ளைக் (Bold) கையாண்டு சொற்களுக்கான பொருள் முக்கி யத்துவத்தை வழங்குதல், பக்க வடிவமைப்பில் வேறுபாடுக ளைப் பின்பற்றுதல், தலைப்புகள், உபதலைப்புக்கள், என்ப வற்றைப் பொருத்தமாகக் கையாளுதல், பந்திகளுக்கு இடை யிலும் உட்பந்திகளுக்கு இடையிலும் இடைவெளிகளைப் பேணுதல், வசனங்களின் தொடக்கத்தில் அடையாளக் குறியீ டுகளைக் கையாண்டு அவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்துதல், வேறுபட்ட எழுத்துருக்களைக் கையாளுதல், நேரெழுத்துக்களையும் சாய்வெழுத்துக்களையும் பயன்படுத் துதல் முதலானவை குறிப்பிடத்தக்கனவாகும்.

சுருக்க எழுத்துக்களைக் கையாளுதல் (உ-ம்: கே- கேள்வி, மறு- மறுமொழி) மேலதிக விளக்கங்கள், தொடர்புறு விடயங் கள் முதலானவற்றைக் கருத்தின் போக்கிற்கு இடையூறின்றி அடைப்புக் குறிக்குள் எழுதுதல், முக்கியமான பிரிவுகளை அடுத்து உபபிரிவுகளை தொடர்ந்து விபரித்தல், உப பகுதிக ளுக்கான இலக்கங்களைக் குறிப்பிடுதல், பிரதான பிரிவு, உபபிரிவு, பக்க இலக்கம் என்பனவற்றைத் தமிழ் இலக்க முறையைக் கைக்கொண்டு அடையாளப்படுத்துதல், பிரதான பகுதிகள் வலப்பக்கத்தில் ஆரம்பித்தல் என்பனவும் பின்பற் றப்பட்டுள்ளன. அடுத்த பக்கத்தில் தொடங்கும் சொல்லின் முதல் இரு எழுத்துக்களை அதன் முதற் பக்கத்தில் தனியே கீழே குறிப்பிட்டு அடுத்த பக்கத்தில் அவ்விரு எழுத்துகளோ டிணைந்த சொல்லோடு பந்தியைத் தொடங்கும் முறையும் இந் நூலில் இடம்பெறுகிறது. வாசிப்பவர் தடுமாற்றமின்றி தொடர்ச்சியை விளங்கிக்கொள்வதற்கான உத்தியாகக் கருதி இதனைப் பின்பற்றியிருக்கக்கூடும்.

நூலின் பிரதான பிரிவுகளும் அவை இடம்பெறும் பக்க இலக் கங்களும் உள்ளடங்கிய அட்டவணையானது நூலின் இறுதி யில் இடம்பெற்றுள்ளது. நூலில் பகுதிகளின் நிறைவிலும் நூலின் நிறைவிலும் சிறிய அலங்கார குறியீடுகள் ஈர்ப்பைத் தரும் வகையில் அமைந்துள்ளன. நூலின் நிறைவில் 'முடிந் தது முற்றும்' என்று நூலை நிறைவு செய்துள்ளார்.

சத்தியத்தின் செயம் நூலை வாசித்துப் புரிந்துகொள்வதற் குத் துணையாகப் பொருள் விளக்கம் தேவையென உணரப் பட்ட சொற்களைத் தொகுத்து அவற்றை அகரவரிசைப்ப டுத்தி, அவற்றுக்கான விளக்கங்களைப் பக்க இலக்கங்க ளோடு நூலின் நிறைவுப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ளமை முக்கியமாகும். மூலநூலில் முகவுரை உள்ளிட்ட பகுதிகள் பக்க இலக்கங்கள் இன்றியும் ஏனையவை தமிழ் இலக்கங்க ளாலும் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. இப்பதிப்பில் ஆரம்பத்திலிருந்து நிறைவுவரை இந்தோ அராபிய இலக்க முறைமையைப் பின்பற்றப்பட்டுள்ளமையும் முக்கியமாகும்.

**அடிக்குறிப்புக்கள்:**


- 1. Simon Casie Chitty, 1946. The Tamil Plutarch, General Publishers Ltd, p.82
- 2. சபாபதி குலேந்திரன், 1966, கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு, பக். 78.
- 3. Simon Casie Chitty. Ibid. p.56
- 4. பிலீப்பு தெ மெல்லோ, 1755, 'இராச தீர்க்க தரிசியாகிய தவீதி னுடைய சில சங்கீதங்களும் புகட்சிப் பாட்டுக்களும், திருச்சபையின் நியமமான கட்டளைப்படி கொழும்பில் அச்சடிக்கப்பட்டது. பக். முகப்பு
- 5. கணபதிப்பிள்ளை. மு, 1967, ஈழநாட்டின் தமிழ்ச்சுடர்மணிகள், பாரி நிலையம் சென்னை, பக். 173.
- 6. சபாபதி குலேந்திரன், மேற்கூறியது, பக். 78
- 7. Simon Casie Chitty. Ibid. p.86
- 8. Buhler. Indian Paleogrphy, 1896, English trancilation, p.109, 'Interpunctuation'.




kugaparan.n@thaiveedu.com



# திருக்குறளில் வலியுறுத்தப்படும் சமணர் வாழ்வியல்

– பால. சிவகடாட்சம்

ஒருவரது பிறப்பை அல்லது அவர் செய்யும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் மதம் எதுவானாலும் அது வள்ளுவருக்கு உரியதல்ல. ‘பிறப்பு ஒக்கும் எல்லாஉயிர்க்கும், செய்யும் தொழில் வேறாக இருக்கலாம்’ என்று அடித்துக்கூறியவர் வள்ளுவர்.

***பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா***
***செய்தொழில் வேற்றுமை யான்***

பண்டைய இந்தியாவில் சாதி ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள் என்ற முறையில் பௌத்தருடன் கூடவே சமணரும் வள்ளுவரைத் தமக்கு ஒத்த கொள்கையுடையவர் என்று கூறிக்கொள்ளமுடியும்.

அறம் என்பதை தமது மதத்தின் அடிப்படையாகக் கொண்டவர்கள் சமணர்கள். சமணரின் முதல்வனாகிய அருகனுக்கு அறவோன் என்பதும் ஒரு பெயர். சமணரை அறவோர் என்று குறிப்பிடுவது மரபு. இவ்விடத்தில் அறம் என்பது யாது என்னும் கேள்வி எழுகின்றது. ‘எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமல் அவை அனைத்துக்கும் உதவுவதே அறம்’ என்று சுருக்கமாகக் கூறிவிடலாம். இந்த அறம் செய்வதற்கு தடையாக இருப்பது எது என்பதை வள்ளுவர் விளக்குகின்றார். அறத்தின் வழி நிற்பவனின் மனது சுத்தமாக இருக்கவேண்டும்.

***அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்***
***இழுக்கா இயன்றது அறம்***

பொறாமை பேராசை கோபம் வசைச்சொல் இவை நான்கும் அறத்துக்கு எதிரான குணங்கள் என்கிறார் வள்ளுவர். அறச்செயல்கள் இவைதான் என்று பட்டியல் இடுகின்றார் சமணரான இளங்கோ அடிகள்.

***ஊன் ஊண் துறமின்; உயிர்க்கொலைநீங்குமின்;***
***தானம் செய்ம்மின்; தவம் பல தாங்குமின்;***
***செய்ந்நன்றி கொல்லன்மின்; தீ நட்பு இகழ்மின்;***
***பொய்க் கரி போகல்மின்; பொருள்-மொழி நீங்கன்மின்;***
***பிறர் மனை அஞ்சுமின்; பிழைஉயிர் ஓம்புமின்;***
***அற மனை காமின்; அல்லவை கடிமின்;***
***கள்ளுங், களவும், காமமும், பொய்யும்,***
***வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்***

இளங்கோ அடிகள் பட்டியல் இட்டுள்ள அறச்செயல் ஒவ்வொன்றுக்கும் வள்ளுவர் தனித்தனி அதிகாரமே ஒதுக்கியிருப்பதைக்காணலாம். புலான் மறுத்தல், கொல்லாமை, ஈகை, தவம், செய்நன்றி அறிதல், தீநட்பு, புறங்கூறாமை, இனியவைகூறல், பிறனில்விழையாமை, மருந்து, இல்வாழ்க்கை, கள்ளுண்ணாமை, கள்ளாமை, வாய்மை, பயனில சொல்லாமை (வெள்ளைக் கோட்டி) என்னும் தலைப்புக்களில் அதிகாரங்களை அமைத்தது மட்டுமன்றி இவற்றுட் சில விடயங்கள் குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட அதிகாரங்களை எழுதியுள்ளார் வள்ளுவர்.

வள்ளுவராலும் இளங்கோ அடிகளாலும் எடுத்துரைக்கப்பட்ட அறநெறிகள் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றும் சமணகாவியமுமான வளையாபதியிலும் வலியுறுத்தப்படுவதை நோக்கலாம்.

***பொய்யன்மின் புறம்கூறன்மின் யாரையும்***
***வையன்மின் வடிவல்லன சொல்லி நீர்***
***உய்யன்மின் உயிர்கொன்று உண்டு வாழுநாள்***
***செய்யன்மின் சிறியாதொடு தீயன்மின்***
***வித்தின்றேல் விளைவுண்டா?***

கொன்றுதின்னாமை என்பது சமண மதத்தவரால் மிகவும் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வந்த ஒரு விரதம், ஓர் அறம். ஓர் உயிரைக்கொன்று தின்னும் எவரும் ஒரு சமணராக இருக்கமுடியாது.

கடவுளின் பெயரால் ஆடு, மாடு, கோழி என்பவற்றைக் கொன்று பலி கொடுப்பது, படையல் வைப்பது, பகிர்ந்துண்பது போன்ற வழக்கங்கள் பண்டுதொட்டுப் பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களாலும் பின்பற்றப்பட்டு வந்துள்ளன என்பதை மறுக்கமுடியாது. சங்ககாலத் தமிழர் வாழ்விலும்கூட வேலன் என்னும் தெய்வத்துக்கு ஆடு வெட்டிப் பலி கொடுக்கும் வழக்கம் இருந்தது. கிராமப்புறங்களில் சிறுதெய்வ வழிபாட்டு நிகழ்வுகளில் கடாவெட்டிப் படையலிடும் வழக்கம் இன்றும் தொடர்கிறது. யூதமதம், கிறீத்தவம், இஸ்லாம் ஆகிய மதங்கள் உயிர்ப்பலி கொடுப்பதைத் தடைசெய்ததில்லை. இன்றும் விலங்குகளைக் கொன்று உண்பதைத் தடைசெய்வதில்லை. சமணமும் பௌத்தமும் கொல்லாமையைப் பெரிதும் வற்புறுத்தி நிற்பவை.யாகம் அல்லது வேள்வி

செய்வது வைதீக சமயத்தவரின் மிகமுக்கியமான சடங்காகக் கருதப்படுவது. ஆயிரம் வேள்விகளைச் செய்துமுடிக்கும் அரசன் ஒருவன் இந்திரனுக்கு ஒப்பான பதவியை அடைகின் றான் என்பது இந்துக்களின் நம்பிக்கை. ஆயிரம் வேள்விகள் செய்வதிலும் ஓர் உயிரைக் கொன்று உண்ணாமல் இருத்தல் மேலானது என்கிறார் வள்ளுவர்.

***அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்***
***உயிர்செகுத் துண்ணாமை நன்று***

தன்னுடைய சதையை வளர்ப்பதற்காகப் பிற உயிர்களின் சதையை உண்பவனிடம் கருணையை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? என்று மாமிசம் உண்பவர்களைக் கடுமையாகச் சாடுகின்றார் வள்ளுவர்'.

***தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்***
***எங்ஙனம் ஆளும் அருள்***

தொடர்ந்து, புலால் என்பது பிறிதொரு உயிரின் புண் என்னும் உணர்வு வரப்பெற்றவர்கள் புலால் உண்ணமாட்டார்கள் என் கிறார் வள்ளுவர்.

***உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்***
***புண்ணது உணர்வார்ப் பெறின்***

வள்ளுவரின் இக்கருத்தை மேலும் விரிவுபடுத்தி விளக்குகின் றார் அறநெறிச்சாரம் என்னும் நூலினை இயற்றிய முனைப்பா டியார் என்னும் சமணப்புலவர். தமக்குப் புண்வந்தால் அதற்கு மருந்துபோட்டு ஆற்றுவார்கள். ஆனால் வேறொன் றின் புண்ணை வறுத்தெடுத்துத் தாம் உண்பார். என்னே இவ் வுலகமாந்தெரின் இயல்பு என்று புலம்புகின்றார் இச்சமணர்.

***தன்புண் கழுவி மருந்திடுவர், தாம்பிறிதின்***
***செம்புண் வறுத்த வறை தின்பர் - அந்தோ!***
***நடுநின்று உலக நயன் னிஇலா மாந்தர்***
***வடு அன்றோ செய்யும் வழக்கு.***

கொலைசெய்தவன் மட்டுமன்றி, அக்கொலைக்கு உடன்பட்ட வன், கொல்லப்பட்டதை விலைக்கு வாங்கியவன், கொல்லப் பட்ட மிருகத்தின் இறைச்சியைச் சமைத்தவன், சமைத்த தனை உண்டவன் என்று இதில் பங்குபற்றிய ஐவருக்குமே கொலையில் சமபங்கு உண்டு என்கின்றது பதினெண்கீழ்க்க ணக்கு நூல்களுள் ஒன்றான சிறுபஞ்சமூலம். இந்நூலின் ஆசி ரியரான காரியாசான் ஒரு சமணர் என்பது மனங்கொளத்தக் கது.

***கொன்றான் கொலையை உடன்பட்டான் கோடாது***
***கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங்கால்***
***-கொன்றதனை***
***அட்டான் இடவுண்டான் ஐவரினும் ஆகுமெனக்***
***கட்டெறிந்த பாவங் கருது***

கொல்லாமையை வலியுறுத்திய அளவுக்குப் பௌத்தம் புலால் மறுப்பை வலியுறுத்தியதாகத் தெரியவில்லை. சமண ரின் இல்லற வாழ்க்கைமுறை பற்றிக்கூறுவது ஸ்ரீ சமந்தபத் ராச்சாரியாரின் ரத்னகரண்ட ஸ்ராவகாச்சார என்னும் நூலா கும். இந்நூல் பொது ஆண்டு இரண்டாம் நூற்றாண்டில் ஆக் கம் பெற்றிருத்தல் கூடும் என்று நம்பப்படுகின்றது. சமய திவாகர வாமன முனிவர் (15-ம் நூற்றாண்டு) எழுதிய இந்நூ லுக்கான உரையில் இல்லறத்துக்குரிய கற்புநெறி காத்துப்



புகழ்பெற்ற நீலகேசி என்னும் சமணப்பெண்ணின் கதை கூறப்படுகின்றது.

சமணனாக நடித்த பௌத்தன் ஒருவனாலும் அவனது பெற் றோராலும் ஏமாற்றப்பட்டுத் திருமணம் செய்துகொண்ட நீல-கேசி பின்னர் உண்மையை அறிந்து வருந்துகின்றாள். கணவ னும் அவனது பெற்றோரும் அவளைப் புத்தநெறிக்கு மாறும் படி தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளனர்.

நீலகேசியின் இல்லத்துக்கு வருகை தந்த பௌத்தபிக்கு ஒரு வருக்கு அவருக்கு விருப்பமான மாமிச உணவைச் சமைத் துத் தானம் வழங்குமாறு நீலகேசியை அவளது கணவனும், அவனது பெற்றோரும் வற்புறுத்துகின்றனர். வீட்டுவாசலின் வெளிப்புறத்தே வைத்துவிட்டு வந்த பிக்குவின் இரண்டு செருப்புகளில் ஒன்றை எடுத்து அதன் தோலினைப் பயன்ப டுத்தி தன் திறமையினால் சுவைமிகுந்த கறியொன்றைச் சமைத்து விருந்து படைக்கின்றாள் நீலகேசி. விருந்தை மகிழ் வுடன் உண்டு சுவைத்தபின்னர் வெளியே வந்த பிக்கு தனது

காற்செருப்பில் ஒன்றைக் காணாது குழம்புகின்றார். நீலகேசியின் புகுந்த வீட்டார் நடந்ததை அறிந்து அவள் மேல் கடுங் கோபம் கொண்டு அவளை நடத்தை கெட்டவளென அவதூறு பரப்புகின்றனர். தனக்குத் தண்டனை கிடைக்கும் என்று அறிந்தும் தான் சார்ந்து நிற்கும் சமணமதக் கொள்கையான கொல்லாமையைக் கடைப்பிடித்த நீலகேசியுடன் பிள்ளைக்



கறி உண்ண விரும்பிய சிவனடியார் ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்றத் தன் பிள்ளையைக் கொன்று கறி சமைத்து விருந்து வழங்கிய சிறுத்தொண்டரின் செயலை ஒப்பு நோக்கலாம். பக்தியின்பேரில் மனிதக்குழந்தையையே கொலை செய்யத் தயங்காத சிவனடியார் சிறுத்தொண்டரும் எந்தத் துன்பம் நேரிட்டாலும் கொன்று தின்னாமை என்னும் கொள்கையைப் பற்றிநின்ற சமணப் பெண் நீலகேசியும் தத்தமது சமயக்கொள்கைகளைப் பிரதிபலிக்கும் மாந்தராகவே சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

***கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி***
***எல்லா உயிரும் தொழும்***

என்று கூறும் வள்ளுவர் இவர்களுள் எவர்பக்கம் நிற்பவர் என்பதை ஊகித்துக்கொள்வது கடினம் அன்று.புலால் உண்பது குறித்து புத்தரின் நேர்மாணவரான மொக்கலன் என்பவனுக்கும் சமணப்பெண்ணான நீலகேசிக்கும் இடையிலான நீண்டதொரு விவாதம் சிறுபஞ்ச காவியங்களுள் ஒன்றான நீலகேசியில் இடம்பெறுகின்றது.

'கொல்லுதல் பாவச்செயல் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், மாமிசம் உண்பதைப் பாவம் என்று சமணர் எப்படிக்கூறமுடியும்? தான் கொல்லாத ஒன்றைத் தின்பவனுக்குப் பாவம் ஏது'? என்று மொக்கலன் கேட்கின்றான். 'புலால் உண்பது குற்றம் என்று அதைக் கைவிட்டால் எவரும் கொலை செய்யமாட்டார்கள்' என்கிறாள் நீலகேசி.

***அறஞ்சொல்லக் கொள்ளு மறமென் றறிந்தாங்***
***கறஞ் சொல்லினார்க்கற மாமென் றறியாய்***
***புறஞ்சொல்லி தன்று புலால் குற்றம் என்று***
***துறந் தொழிந் தாற் கொலை துன்னினர் யாரோ***

இவளது வாதம் வள்ளுவரின் மற்றுமொரு குறளை நினைவூட்டுகின்றது. உண்பதற்காக உலகிலே எவரும் மாமிசம் வாங்காவிடின் அதனை விற்றுப் பணம் சம்பாதிக்கும் நோக்கில் கொலைத்தொழில் செய்வோரும் இருக்கமாட்டார்கள் என்கிறார் வள்ளுவர்.

***தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்***
***விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்***

இல்லறவாழ்க்கைக்குப் பெருமதிப்புக் கொடுத்தவர்கள் சமணர்கள். அறத்தின் பாற்பட்டது இல்வாழ்க்கை. அதுவும் பிறரது பழிப்புக்கு இடம்கொடுக்காத ஒன்றாயின் அது இன்னமும் மேலானது என்கிறார் வள்ளுவர்.

***அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்***
***பிறன்பழிப்பது இல்லாயின் நன்று***

துறந்தோரையும் மெலிந்தோரையும் ஆதரிக்கும் இல்லறவாழ்க்கையின் இன்றியமையாத கடமை விருந்தோம்புதல் என்று வலியுறுத்தும் வள்ளுவர் விருந்தோம்புவதே ஒரு வேள்விதான் என்கிறார்.

***இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி***
***வேளாண்மை செய்தற்பொருட்டு***

நம்பிக்கையில்லாதோர் பேணும் துறவு வாழ்க்கையிலும் நேர்வழியில் நடக்கும் இல்லறத்தோரின் மகிமை பெரியது என்கிறது இல்லறவாழ்வு பற்றிக் கூறும் சமண நூலான ரத்னகரண்ட ஸ்ராவகாச்சாரம். இதற்கும் ஒருபடிமேல் சென்று பிறருக்கு நல்வழிகாட்டித் தானும் நல்வழிநிற்கும் ஒருவனின் இல்வாழ்க்கை துறவு பூண்டோரின் நோன்பிலும் மேன்மை பெற்றது என்கிறார் வள்ளுவர்.

***ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை***
***நோற்பாரின் நோன்மை உடைத்து***

வாழ்க்கைத்துணை நலம் பற்றிக்கூறும்போது ஒரு குடும்பப் பெண்ணிடம் இருக்கவேண்டிய கற்பொழுக்கம் பற்றிப் பேசுகிறார் வள்ளுவர். 'கற்பு' என்பதற்குக் 'கல்வி' அல்லது 'மகளிர் நிறை' என்று பொருள் கொள்ளமுடியும். சங்க இலக்கியத்தில் வேதநூல்களை 'எழுதாக் கற்பு' என்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். இதன் அடிப்படையில்

***பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்***
***திண்மை உண்டாகப் பெறின்***

என்னும் குறளுக்கு 'கல்வி என்னும் வலிமை சேர்ந்தால் பெண்ணிலும் பெருமை வாய்ந்ததாக வேறெதுவும் இல்லை' என்று பொருள் கொள்ளுவதில் தவறில்லை. எனினும் இன்றைய சூழலை வைத்துக்கொண்டு வள்ளுவர் குறளுக்கு விளக்கம் காணமுற்படுவது தவறு. வள்ளுவர் கற்பு என்னும் சொல்லைக் கல்வி என்னும் பொருளில் பயன்படுத்தியுள்ளாரா என்பதைக் கவனிக்கவேண்டும்.

சங்ககாலத் தமிழன் பெண்கல்விக்குத் தடை விதித்ததில்லை. ஔவை என்னும் பெண்புலவர் மேல் அதியமான் என்னும் சிற்றரசன் வைத்திருந்த அன்பும் பெருமதிப்பும் சங்க இலக்கியங்களிலேயே பேசப்படுகின்றன. தேவாரம் பாடிய திருநாவுக்கரசருக்கு முன்னரேயே சிவபிரான்மேல் பதிகம் பாடிய காரைக் காலம்மையாரும் படித்தவரேயாவர். பெண்களுக்குக் கல்வி அவசியமில்லை என்னும் எண்ணம் தமிழர் அன்னியரால் ஆளப்பட்ட காலப்பகுதியிலேயே தோன்றிற்று. கல்விதான் மனிதரை விலங்குகளிடமிருந்து பிரித்துக் காட்டுவது என்று கூறும் வள்ளுவர் பெண்களுக்குக் கல்வி அவசியம் என்று தனியாகக் கூறவேண்டிய அவசியம் இருக்கவில்லை. கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் கல்லாமையின் கேடு பற்றியும் தனித்தனி அத்தியாயங்களில் வள்ளுவர் கூறிவிட்டார். அவர் பெண்ணின் 'கற்பு' பற்றிப் பேசுவது வாழ்க்கைத்துணைநலம் பற்றிப்பேசும்போதே என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஒருவனது இல்லறவாழ்வுக்குத் துணை நிற்கும் பெண்ணுக்கு இருக்கவேண்டிய குணநலன்களைப் பற்றியே வள்ளுவர் பேசுகின்றார். எனவே கற்பு என்பதை மகளிர் நிறை என்னும் பொருளிலேயே பயன்படுத்தியுள்ளார் என்பதில் ஐயமில்லை.

பெண்கள் கடமை உணர்வோடும் கற்பொழுக்கத்தோடும் வாழவேண்டும் என்பதை எதிர்பார்ப்பது பிற்போக்குவாதம் அல்ல. பெண்கள் கற்போடு இருந்தால் ஆண்களும் அவ்வாறு இருக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்று எம்முன்னோர்கள் நம்பினார்கள். நல்லொழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றுடன் கூடிய நற்பண்பே கற்பு என்று அறியப்பட்டது. அது அறத்தின் பாற்படும்.

இல்வாழ்வில் ஈடுபடும் பெண்களிடம் நல்லொழுக்கத்தைப் பெரிதாக சமணம் எதிர்பார்த்தது. இல்லறத்தில் ஈடுபடும் ஒருவனுக்கு அனைத்து விடயங்களிலும் துணையாக இருக்கப் போகும் பெண் தன் கணவனுக்குக் களங்கம் ஏற்படாமல் நடந்துகொள்ளவேண்டும், எதிர்பார்க்கும் போது தவறாமல் வரும் பருவமழைபோல் கணவன் தேவைகளை அறிந்து நிறைவேற்றவேண்டும் என்றெல்லாம் வள்ளுவர் கூறும்போது அவர் சமணமதத்தவரின் இல்வாழ்க்கை தொடர்பான நம்பிக்கைகளைப் பெரிதும் ஆதரித்து நிற்பதைக் காணலாம்.

தனது நம்பிக்கைக்குரிய சமணசமயத்தை விட்டுவிலகாமல் அதேசமயம் கடமை தவறாத மனைவியாக, கணவன் மனம் கோணாமல் வாழ்க்கை நடத்திவந்த நீலகேசி பௌத்தர்களான கணவனாலும் அவனது பெற்றோராலும் ஒழுக்கம் கெட்டவள் என்று குற்றம் சாட்டப்பட்டுப் பின்னர் தன் கற்பின் வலிமையால் எதிர்ப்புக்களை முறியடித்து உலகம் போற்றும் உத்தமியாகப் போற்றப்பெறுகின்றாள். இதுவே சமணரான சமய திவாகர வாமன முனிவர் கூறும் நீலகேசியின் கதையாகும். நீலகேசியின் கதையும் கண்ணகியின் கதையும்

***பெண்ணின் பெருந்தக்க யாவுள? கற்பென்னும்***
***திண்மையுண் டாகப் பெறின்***

என்னும் திருக்குறளையே நினைவூட்டுகின்றன. சமண காவியமான நீலகேசிக்கு வாமனமுனிவர் எழுதிய உரையில் தொல்காப்பியம், நாலடியார், திருக்குறள் என்னும் மூன்று தமிழ்நூல்கள் மட்டுமே எடுத்தாளப் படுகின்றன. நாலடியார் சமணமுனிவர்கள் ஆக்கிய அறநூல் என்பது அனைவரும் அறிந்ததே. அவ்வாறே தொல்காப்பியமும் திருக்குறளும் சமணரால் இயற்றப்பட்டவை என்று கொள்ள இடமுண்டு என்கிறார் நீலகேசியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட பேராசிரியர் ஆ. சக்கரவர்த்தி அவர்கள். நீலகேசிக்கு உரை எழுதிய வாமனமுனிவர் வள்ளுவரை எம்மவர் (எம் ஒத்து) என்கிறார். வள்ளுவரைச் சமணர்கள் தமக்கு ஒத்த கருத்தை உடையவர் என்று கூறும்போது அதற்கு அவர்கள் முன்வைக்கும் வாதங்கள் மிகப்பலம் வாய்ந்தனவாக உள்ளன என்பதனை அவதானிக்கமுடியும்.

**உசாத்துணை:**


- அறநெறிச்சாரம் முனைப்பாடியார் இயற்றியது, பதிப்பு தி.செல்வகேசவராய முதலியார், மதராஸ் 1912
- சிலப்பதிகாரம் (மூலமும் அரும்பதவுரையும்) அடியார்க்கு நல்லார் உரையுடன், டாக்டர் உ.வே.சா. பதிப்பு, உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 2008
- திருக்குறள் மூலமும் உரையும் பரிசுப்பதிப்பு தெளிவுரை: கீர்த்தி, அருணா பதிப்பகம், சென்னை 2020
- TVA_BOK_0013285_சிறுபஞ்சமூலம்.pdf (tamildigitallibrary.in)
- Neelakesi (The original text and the commentary of Samaya Divakara Vaamana Muni) edited and published by Prof. A. Chakravarti, 1936 page 16-17. (archive.org/details/in.ernet.dli.2015.528854)
- The Ratna Karanda Sravakachara of Sri Samanta Bhadra Acharya, Translated into English by Champat Rai Jain Second edition, The Jaina Parishad Publishing House, Bijnor, U. P. 1931




Sivakadadcham@thaiveedu.com



# ஜாதகக் கதைகள் நாட்டாரியல் கதைகளா?

- ஜிஃப்ரி ஹாசன் -

ஜாதகக் கதைகள் அதன் உள்ளடக்கம் சார்ந்து அறம், ஒழுக்கம், நேர்மையாக இருத்தல் போன்ற பண்புகளைப் பேசுகின்றன. கதை என்றளவில் அதற்கான இலக்கியப் பெறுமானம் மற்றும் அதன் பல்வேறு உள்ளார்ந்த கூறுகள் குறித்தும் இன்றைய நவீன, பின்நவீன சமூக அமைப்பில் நாம் கூர்மையான பார்வைகளையும், உரையாடல்களையும் நிகழ்த்த முடியும். பண்டைய இந்தியக்கதைகளில் பௌத்த ஜாதகக் கதைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. நாட்டுப் புறவியல் (Folklore) தன்மை கொண்டவை. பேராசிரியர் ரைஸ் டேவிட்ஸ் போன்ற சில மேற்கத்தேய ஆய்வாளர்கள் அதனை நாட்டுப்புறக் கதைகளாகவே (Folktales) நோக்கினர். ரைஸ் 'பௌத்த ஜாதகக் கதைகளே உலகிலேயே மிகப் பழைமையான நாட்டார் கதைகள்' என்கிறார். ஆனால் நவீன சிங்கள இலக்கியத்





தின் முன்னோடி எழுத்தாளரும் பண்பாட்டு அறிவுஜீவியுமான மார்ட்டின் விக்கிரமசிங்க ஜாதகக் கதைகள் நாட்டுப்புறக் கதைகள் அல்ல என வாதிடுகிறார். 'ஜாதகக் கதைகளில் நாட்டாரியல் கூறுகள் காணப்படுகிற போதிலும் அவை நாட்டுப்புறவியல் கதைகளல்ல' என உறுதியாக மார்ட்டின் விக்கிரமசிங்க வாதிடுகிறார்.

பொதுவாக ஜாதகக் கதைகளில் இரண்டு வகையான கதை கூறல் மரபு உள்ளதைக் காணலாம். ஒன்று அறிமுகக் கதை கூறல் (Introductory narrative). இதனை 'நிகழ்காலக் கதை' (The present story) எனவும் அழைக்க முடியும். இந்தவகைக் கதைகள் சுருக்கமாகவே கூறப்பட்டிருக்கின்றன. மிக அபூர்வமாகவே விரிவாக சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த அறிமுகக் கதைகள் எனும் பகுதிக்குள் வரும் கதைகளை நாட்டுப்புறக் கதைகள் எனக்கொள்ள முடியாது. காரணம் அவற்றுள் பெரும்பாலான கதைகள் ஆண்கள், பெண்கள், பணியாளர்கள், பிக்குகள், பிராமணர்கள் சிலவேளைகளில் புத்தரினதும் சொந்த வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவங்களைப் பற்றிய கதைகளாக உள்ளன. அவை அதிகமான அழகியல் கூறுகளின்றி எழுதப்பட்ட கதைகளாகும். யதார்த்தச் சித்திரிப்பு, சுருக்கமாக முன்வைத்தல், உணர்ச்சி வெளிப்பாடு, மனிதப் பண்புகளை வெளிப்படுத்தல் போன்றவற்றில் நவீன சிறுகதைப் பண்புகளை அவை ஒத்திருக்கின்றன.

உண்மையான நாட்டுப்புறக் கதைகளிலிருந்தும், மிகவும் வளர்ந்த நவீன சிறுகதை வடிவத்திலிருந்தும் பெரும்பாலான ஜாதகக் கதைகள் வேறுபடுகின்றன என்பதை நாட்டுப்புற நாவல்கள் (folk-novel) எனும் பதத்தின் மூலம் பொருள் கொள்ளப்படும் நாவல்களின் பண்புகளை பரிசீலனை செய்வதன் மூலம் அறிய முடியும். உதாரணமாக, அரேபிய இரவுகள், அதிலுள்ள கதைகளை ஒரு நூலைப்போல ஒரே தொகுப்பாக இணைக்கும் ஓர் உள்ளார்ந்த பிணைப்பு அந்தக் கதைகளுக்குள் உள்ளது. ஜாதகக் கதைகளிலும் புத்தரின் உண்மையான பிறப்புக் கதைகளோடு அறிமுகக் கதைகள் தொடர்புபடுத்தப்படுகின்றன. இந்த உள்ளார்ந்த பிணைப்பே ஜாதகக் கதைகளுக்கு நாட்டுப் புறத் தன்மையை வழங்குகிறது.

புத்தரின் பிறப்புப் பற்றிய ஜாதகக் கதைகள் உண்மையான நாட்டுப்புறக் கதைத் தன்மையும், கட்டுக்கதை விலங்குகளும் மீள மீள கதாபாத்திரங்களாக உருவாக்கப்பட்டு, வாழ்வு பற்றிய புத்தமத நோக்கை வலியுறுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய சில கதைகள் பௌத்த எழுத்தாளர்களால் அங்கதச்சுவை கையாளப்பட்டு எழுதப்பட்டுள்ளன. சில கதைகள், ஆண்களும் பெண்களும் அனுபவிக்கும் நிஜ வாழ்க்கையின் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டவை என்று நான் நம்புகிறேன் என மார்ட்டின் விக்கிரமசிங்க குறிப்பிடுகிறார்.

எனவே, கலை வடிவம் சார்ந்து நவீன கதையிலிருந்து ஜாதகக் கதைகள் வேறுபட்டாலும், அவற்றின் உண்மையான அடிப்படைப் பேசுபொருள் மனித வாழ்வின் சாரம்தான். ஆனால் ஜாதகக் கதைகளின் அடிப்படைப் பேசுபொருளின்

தேர்வும், கையாளும் முறையும் அவற்றைக் கையாண்ட எழுத்தாளர்களின் நேர்மையையும் வாழ்க்கை அனுபவத்தையும் காட்டுகிறது. பிரபலமான ரொமாண்டிசக் கதைகளை உருவாக்க ஒன்றிணைகின்ற வாழ்வின் அற்ப விசயங்கள், புத்தாக்கங்கள், அவற்றின் உணர்வுபூர்வமான மிகைப்படுத்தல் சித்தரிப்புகள் போன்றனவும் மிக அரிதான வகையில் ஜாதகக் கதைகளில் காணப்படுகின்றன. எனினும் இந்த மிகைப்படுத்தல்கள் பாலுணர்ச்சி சார்ந்தது அல்ல. இந்த மிகையான சித்தரிப்புகள் சில நேரங்களில் மனித உணர்வுகளின் பேரழிவு அம்சத்தையும் எப்போதாவது ஆழ் மனதின் செயல்பாட்டையும் வெளிப்படுத்துவதாகவே இருக்கின்றன.

ஜாதகக் கதைகள் அனைத்தும் வெறும் நாட்டுப்புறக் கதைகள் அல்ல என்பதை மார்ட்டின் விக்கிரமசிங்க பல்வேறு வழிகளில் மேலும் நிறுவ முயன்றார். மூன்று பௌத்த கதைகளை மேலோட்டமாக ஒப்பீட்டு விளக்கமளிப்பதன் மூலமும் அதனைச் சாதிக்க முயன்றார். அவர் ஒப்பீடு செய்வதற்குத் தேர்வு செய்த மூன்று கதைகளில் ஒன்று பட்டாசாராக் கதை (Story of Patachara), மற்றொன்று குண்டலகேசியின் கதை, மூன்றாவது சூலா-செட்டி கதை (Chulla-Setthi). இதில் இரண்டு கதைகள் முறையாக ஜாதகக் கதைகள் புத்தரால் கூறப்படுவதற்கு முன்னர் அறிமுகக் கதைகளாக அல்லது 'நிகழ்காலக் கதைகளாக' கூறப்பட்டுள்ளன. இம்மூன்று கதைகளும் உருவான சம்பவங்கள் ஒன்றுதான். ஆனால் கதாபாத்திரங்களும் அவற்றினால் குறித்துக்காட்டப்படும் வாழ்க்கைப் பார்வையும், (அவை வெறும் கதைகளாகக் கருதப்பட்டாலும் கூட), ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டவையாகும். மூன்று கதைகளினதும் கதாநாயகிகள் செல்வத்திலும் ஆடம்பரத்திலும் வளர்க்கப்பட்ட பணக்கார வணிகர்களின் மகள்கள்.

முதல் கதையில் வரும் பட்டாசாரா என்ற பெண் அடிமை ஒருவனை காதலித்து அவனுடன் ஓடிப்போகிறாள். இரண்டாவது கதையில் வரும் பெண் தன் பெற்றோரை மீறி, தூக்கிலிடுபவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட ஒரு கொள்ளைக்காரனை காதலிக்கிறாள். மூன்றாவது கதையில் வரும் பெண்ணும் அடிமை ஒருவனை காதலித்து அவனுடன் ஓடிப்போகிறாள். முதலாவது கதையானது, விதியின் செயல்பாட்டின் விளைவுகளால் உருவான சூழ்நிலைகளின் காதல் கதையாகும். மற்ற இரண்டும் மனித குணத்தின் சில அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட கதைகள், பொதுவாக இக்கதைகளின் போக்கு ஒரு நவீன நாவலுக்கான தன்மையோடு இருக்கிறது. இந்த மூன்று கதைகளுக்கு அப்பாலும் இன்னும் சில ஜாதகக் கதைகள் நவீன கதைத் தன்மையை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம்.

இந்த இருமுனை விவாதங்களையும் கடந்து யோசிக்கும் போது, ஜாதகக் கதைகள் அவற்றின் உள்ளடக்கம், வடிவம், கதைகூறல் மரபு சார்ந்து நாட்டுப்புறக்கதைத் தன்மையோடும், நவீன கதைத் தன்மையோடும் தனித்துத்துலங்கும் பண்டைய இந்தியக் கதைகளாக பார்க்க முடியும். எல்லாவற்றுக்குமப்பால் அவை இன்றளவிலும் மனித குலத்தின் செயல்பாடுகளை சமூக அறத்தின் பால், நேர்மையின் பால் வழிப்படுத்துபவையாகவும் இருக்கின்றன. தவிர, எப்பொழுதும் மனித வாழ்வுக்குத் தேவையான நேர்மையை, பண்பியலை மிகச் சுருக்கமாகவும், அடர்த்தியாகவும் பேசுவதனால் என்றென்றைக்குமான முக்கியத்துவத்தினையும் பெற்றுவிடுகிறது.



விவசாயிகள், வர்த்தகர்கள், வேட்டைக்காரர்கள், முனிவர்கள் போன்ற மனிதர்களும், அதேபோன்று மனிதர்களின் மொழியில் பேசிய சிங்கம், மான், நரி, முயல் போன்ற விலங்குகளுமே ஜாதகக்கதைகளின் கதாபாத்திரங்களாக சித்திரிக்கப்பட்டுள்ளனர். இதனால் ஒருவர் ஜாதகக்கதைகளைப் படிக்கும் போது தன்னையே அதில் ஒரு கதாபாத்திரமாக உணர்ந்துகொள்ள முடியும். பொதுவாக இந்தக் கதாபாத்திரங்கள் வாழ்க்கையின் ஏதோ ஒரு நெருக்கடியில் சிக்கி துயருரும் கதாபாத்திரங்களாகவும், புத்தர் எனும் பாத்திரம் அதில் தலையிட்டு அந்த சிக்கல் அனைத்தையும் தீர்த்து அவர்களது வாழ்வை மகிழ்ச்சிப்படுத்துவதாகவும் கதை அமைந்துள்ளது.

ஜாதகக் கதைகள் மனித வாழ்வின் பல்வேறு தருணங்களைப் பற்றி பேசுகின்றன. அது பற்றிய தத்துவங்களை முன்வைக்கின்றன. ஒரு கதையினூடாக வாழ்வின் அர்த்தத்தை தெளிவுபடுத்த முனைகின்றன. இறப்பு, வறுமை, துறவு, உபதேசம், நன்றியறிதல், பிக்குகளின் வாழ்க்கை முறை, சீடர்களின் தன்மை என ஜாதகக்கதைகள் பல்வேறு விசயங்கள் மீது கவனம் செலுத்துகின்றன. ஜாதகக் கதைகளின் களஞ்சியமாக கிராம விகாரைகளே விளங்கின. அப்போது விகாரைகளுக்கும் கிராமத்துக்குமிடையில் மிக நெருக்கமான உறவு நிலவியது.

ஜாதகக் கதைகளின் இந்தத் தன்மை அதன் நாட்டாரியல் கதைத் தன்மையையே மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது.



jiffry.hassan@thaiveedu.com




# மு. தமிழ்ச்செல்வனின் 'நஞ்சாகும் நிலம்' சூழலியல் பத்திகளின் தொகுப்பு

- வை. ஜெயமுருகன்

என்நிலை பார்வையில், தமிழ்ச்செல்வனின் 'நஞ்சாகும் நிலம்' பேசும் பொருள் ஒரு புதிய விடயம் அல்ல; பலர் அறிந்த விடயம். நாம் நாளாந்தம் பார்க்கும் அவலம். ஆனால், சொல்லும் கருப் பொருள் தொடர்பாக பலர் கரிசனைகொண்டாலும் தொடரும் அவலநிலைகளின் தாக்கம் பற்றிய பரஸ்பர உணர்திறன் (reciprocal sensitivity) கொள்வது மிகக்குறைவு. இயல்பான மன நிலை: பிரச்சினை உண்மைதான். தீர்வும் தெரிந்த, அறிந்த விடயம் தான். ஆனால், ஒன்றும் செய்யமுடியாத ஓர் இக்கட்டான நிலை - 'தோப்பில் தனிமரமாக' நிலைகொள்ளும் மன நிலை. போருக்குப் பிந்தைய ஒரு போக்கு, எம்மில் பலருக்கு.

இந்நூல், பதின்முன்று பத்திகளின் அருமைமையான தொகுப்பு, தொகுப்பின் கருப்பொருள் யாதெனில்: எமக்கு தெரிந்த, எம் கண்முன் நாளாந்தம் கடக்கும் அவலங்களை; அவைதரும் தாக்கங்களை எமக்கு தருவதாய் அமைகிறது. குறிப்பாக நிலத்துக்கு எதிரான தொடரும் 'வன்முறைகள்'. அதன் மீதான அக்கறையின்மை - உணர்வின்மை. தொடரும் அவலங்களின் எமது பங்களிப்பு - 'நலன்சார்' (the vested Interest ) போக்கு என்பன. தமிழ்ச்செல்வனின் முக்கிய 'சொல்பொருள்' என்பது ஒட்டுமொத்தமாக, பொறுப்புடன் பொது தளத்துக்கு வெளிக் கொணர்வதே எனக் கருதுகிறேன். இந்நிலை சார்ந்து நோக்கில், இந்நூல் ஒரு வரப்பிரசாதம். ஏனெனில், ஒரு பத்தி எழுத்தாளனின் நோக்கம் ஒரு அதிர்வை தருவது; மக்கள் பால் ஒரு கரிசனையை தெளிப்பது. இதற்கு மேலாக, சிறு வெளிச்சம் தரும் மின்மினி பூச்சிகளைப்போல, பெரிய விடயங்களை பார்ப்பதற்கு ஒளியிடுவது. இந்நூலை தந்த தமிழ்ச்செல்வனுக்கு பாராட்டுகள்.

நூல் தரும் தலைப்புக்களில் உள்ளடக்கங்கள் மிக முக்கியமானவை, எமது எதிர்கால பேண்தகு அபிவிருத்திக்கு அத்திவாரக்கற்கள். விரிவாக பார்க்கையில், வனக்காப்பு பற்றிய சமூக அக்கறை, நீர் வளம், கடல் சார் பாதுகாப்பு- கண்டல் தாவரங்களின் முக்கியத்துவம், மண்வள முகாமைத்துவம் மற்றும் திண்மக்கழிவு மேலாண்மை, இரசாயன பசளைகளின் அதீத பாவனையும் அதன் விளைவுகளும் பசும் தீவணங்களின் அவசியம் என்பனவும் சிந்தனைக்குரியவை. மிக முக்கியமாக, காணாமல் போன நன்னீர் தீவுகள், குளங்கள், பசும் காடுகள் பற்றிய ஏக்கம் மற்றும் மறையப்போகும் பல இயற்கை வளங்கள் பற்றிய கரிசனைககளைக் குறிப்பாக சொல்லலாம். புவி மைய கேந்திர முனையாகிய கௌதாரிமுனையின் இன்றைய கைவிடப்பட்ட நிலையின் எதிரொலிப்பு கவனத்துக்குரியது மட்டும் அல்ல, அதன் எதிர்கால பாதிப்புகள் பற்றிய சிந்தனை ஓர் ஆழமானது. ஒரு நீண்ட பட்டியல் தரும் தமிழ்ச்செல்வனின் களமும் அது தரும் கருத்துகளும் அபிவிருத்தி பற்றிய எமது பார்வையை மேலும் ஆதாரமுள்ளவையாக்கின்றன. திரள் பத்தி எழுத்துக்களின் மகத்துவம் இதுதான் - கருத்தையும் கவனத்தையும் கவனமாக இணைப்பது. இந்த இணைப்பின் சேர்மானம் தான் நுண்ணரசியல். நுண்ணரசியலின் ஊடகம் பத்தி எழுத்துக்கள். தமிழ்ச்செல்வன் இதை அழகாக வடித்துள்ளார்.

சூழலியல் அழிவு அல்லது 'நஞ்சாகும்' நிலை ஓர் 'இரட்டை நிலை'. சூழலியல் அழிவுகளுக்கு ஆதாரமாக இருப்பதும் நாமே; தொடரும் அவலநிலை கண்டு துடிப்பதும் நாமே. இந்த 'இரட்டை நிலை'தான் பிரச்சினையின் மையம். அடித்தள மட்டம் முதல் கொள்கை வகுப்பாளர்கள் வரை நீடித்த மௌனம் தொடர்கிறது எங்கும்.

மாவட்ட அபிவிருத்தி சபையின் பிரதான கடமை நீடிக்கும் அழிவுகளுக்கு தகுந்த தீர்வுகளை நாடி முனைப்புடன் பிரச்சினைகளுக்கு மாற்று ஒழுங்குகளை நெறிப்படுத்துவதே. ஆனால், பெரும்பாலும் வெறும் சடங்குகளை நடத்தும் நிகழ்வுகளாக மாறிவிட்டன. காரணம் அரசியல் அல்ல, பிரதானமாக அதிகார கட்டமைப்புகளுக்கு சமூக உணர்நிலை இன்றி போதல். குறிப்பாகக் கூறினால் மாகாண, மாவட்ட நிர்வாகமும் அரசியல் தலைமை வழங்கும் குழாமும் தவறுகின்ற ஒரு களம் தமிழ்ச்செல்வன் உரையாடும் களம், நுண் அரசியல் செல்நெறிக்களம். பொறுப்புள்ள நிர்வாகம் பொறுப்பேற்கின்ற நிலை தவறிப்போவதன் விளைவு. இழந்த குளங்களுக்கு யார் பொறுப்பு? உப்பூறும் வயல் நிலங்களுக்கு யார் பொறுப்பு சொல்வர்? இவை எல்லாம் தமிழ்ச்செல்வனின் கேள்விகள். பதில் கிடைக்காது. ஏன்? எம்மிடம் வலுவான, வளமுள்ள சமூக அமைப்புகள் இல்லை.

வலுவான சமூக நிறுவனங்கள் இன்மை ஒரு பெரிய இடைவெளி. அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) சமூக நிறுவனங்களில் அடக்கலாம். ஆனால், அவை அடக்கி வாசிக்கும் நிலை பெரும்பாலும் உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்களுக்குரிய நிதி பெரும் அளவு அரச நிர்வாகங்களின் அனுசரணை நிலையில் தங்கியுள்ளது. சுருக்கமாக, மிக தெரிவு செய்து, இடம் பார்த்து, சகுனம் அறிந்து மற்றும் ஆள் பார்த்து கதைக்கும் திறன் அரச சார்பற்ற (NGOs) நிறுவனங்களுக்குரியது. நிதி வளம் ஓடும் திசை அறிந்து நாடிபிடிப்பார்கள். தமிழ்ச்செல்வன் தரும் களம் அவர்களுக்கும் உரியது. சில NGO

அமைப்புக்களை தவிர பெரும்பாலும் மௌனமாக இருப்பது எல்லாத்துக்கும் நல்லது என இருப்பார்கள். இதுவும் எமது சமூக நிறுவனங்களின் பிரச்சினைக்குரிய பக்கங்கள் தான்.

ஒரு சமூகமோ அல்லது ஒரு நாடோ சீரழிவதற்கு நான்கு காரணங்கள் ஆய்வு ரீதியாக கண்டறியப்பட்டுள்ளன. அசெமோக்லு மற்றும் ராபின்சன் (Why Nations Fail?) ஆகியோரின் முக்கிய வாதம் என்பது பொருளாதார செழுமைக்கு உள்ளடக்கிய (Inclusive) பொருளாதார மற்றும் அரசியல் நிறுவனங்கள் முக்கியமானது என்பதாகும். உள்ளடக்கிய பொருளாதாரக் கொள்கைகள் என்பது விளிம்புநிலை சமூகங்கள் எதிர்கொள்ளும் பொருளாதார உள்ளடக்கத்திற்கான தடை




களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டவை. உள்ளடக்கிய பொருளாதாரம் என்பது வயது, பாலினம், இனம், கல்வி அடைதல், தனிப்பட்ட பின்னணி, இயலாமை திறன் நிலை அல்லது பிற குணநலன்கள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பொருளாதார அமைப்பாகும். மேலும் தொழிலாளர்கள், நிலமற்ற பிரிவினர், தினசரி உழைப்புக்குரியோர் மற்றும் குரலற்ற, கண்ணுக்கு தெரியாத மக்கள் தாங்கள் கவனிக்கப்படுகிறோம் என்ற நிலையை தரும் பொருளாதார நிலை. உள்ளடக்கிய நிறுவனங்கள் முடிவெடுப்பதில் பரந்த பங்கேற்பை அனுமதிக்கின்றன. திறமை மற்றும் படைப்பாற்றலுக்கான ஊக்கத்தை வழங்குகின்றன. மிகமிக முக்கியமான விடயம் யாதெனில், பொறுப்புகூறும் தன்மை. பொருளாதார தோல்வி என்பது பொறுப்புகூறல் முறைமை இல்லாமற்போவது தான். தோல்வியின் உள்ளகம் என்பது உள்ளடக்கம் இன்றி போதல். உதாரணத்துக்கு நாம் எங்கும் போக வேண்டாம். இலங்கை நல்ல உதாரணம். வட கிழக்கு மாகாண நிர்வாகம் உட்பட.

Acemoglu மற்றும் Robinson, அவர்களின் ‘நாடுகள் ஏன் தோல்வியடைகின்றன: அதிகாரம், செழிப்பு மற்றும் வறுமையின் தோற்றம்’ என்ற நூலின் முக்கியமான சாராம்சம் என்பது, ‘உள்ளடக்கிய நிறுவனங்களைக் கொண்ட நாடுகள் (the countries embrace the inclusive institutions) செழித்து வளர்கின்றன’ என்பதேயாகும். ‘உள்ளடக்கிய நிறுவனங்களைக் கொண்ட நாடுகள் செழித்து வளர்கின்றன, அதே நேரத்தில் பிரித்தெடுக்கும் நிறுவனங்களைக் கொண்ட நாடுகள் வளர்ச்சியடையவில்லை’ என்று வாதிடுகின்றனர், சுருக்கமாக. பிரித்தெடுக்கும் நிறுவனங்கள் என்பது பொருளாதார மற்றும் அரசியல் சக்திகளின் நீண்ட கண்ணுக்கு தெரியாத கரங்கள். அவை அதிகாரத்தையும் வளங்களையும் ஒரு சிறிய உயரடுக்கு அல்லது ஆளும் வர்க்கத்தின் கைகளில் குவிக்கின்றன; பரந்த மக்களின் இழப்பில்.

நாடுகளுக்கு சொல்லப்பட்டாலும் மாகாண, மாவட்ட, பிரதேச மட்டங்களுக்கும் இது மிக பொருந்தும்.

‘நஞ்சாகும் நிலைக்கு’ அடிப்படை இதுதான். பரந்த நோக்கில் பலரின் நன்மை கருதி முனையும் நிறுவனங்கள் எம்மிடம் இல்லை எனக்கூறலாம். சிலரின் நலனுக்கு, இலாபத்துக்கு துணைபோகும் அதிகார நிறுவனங்கள்தான் அல்லது துணை போகும் நிறுவனங்கள் தான் குளங்களும் ஆறுகளும் நிரப்பப்பட்டு குடியிருப்பு நிலங்களாக விலை போகின்றன. கிராம மட்ட அபிவிருத்தி சங்கங்கள் முதல் பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட நிர்வாக ஒன்றிணைவு இன்றி ஒருபோதும் குளங்களும் ஆறுகளும் மறைந்து போகாது. குளங்களின் ஆறுகளின் மறைவின் முடிவில் நிலம் முடக்கும் அக்கறை உள்ளவர்களுக்கு இது நன்கு விளங்கும். நிலங்களை வாங்கியவர்களுக்கும் இது புரியும். மழைக்கால வெள்ளத்தில் அல்லல்படுபவர்களும் புரியும். ஆனால், வெள்ளம் வீடு நிறைய புகும் போது தான் புரியும், ‘சுற்றுச்சூழல் இனப்படுகொலை’ தரும் பாதிப்புகள் எப்படியிருக்குமென.

தமிழ்ச்செல்வன் பத்திகளை எழுதுவதற்கு முதன்மைக் காரணம் தன் கண்முன் காணும் தொடரும் அழிவுகளை அல்லது அழிவுக்கு வழிசமைக்கும் செல்நெறிகளை பொறுப்புடன் வெளிக்கொணர்வதும் அது பற்றிய ஆக்கபூர்வமான விவாதத்தைத் தூண்ட விளைவதுதான் என கருதமுடியும். ஒரு சிறிய சிந்தனை நம் அனைவரையும் இன்னும் கொஞ்சம் சிந்தனைக்கு வழிவகுக்கும் என்று நம்புகிறேன். சிந்தனை மக்களை அணிதிரட்டும்; திரண்ட மக்கள் ஒரு பயன்னுள்ள விளைவை நோக்கி நடை போடுவர். ஆனால், சூழலியல் பிரச்சினைகளுக்கு இப்போக்கு நடைபெறப்போவதில்லை. மிக முக்கியமான காரணிகளில் மிக முதன்மையானது எமது System - அமைப்புசார் பிரச்சினை, பத்திகள் பிரச்சினைகளை முன்வைக்கின்றன. ஆனால், பிரச்சினைகள் பல சிக்கலானவை; பல மூல வேர்களில் ஒன்றை ஒன்று சுற்றியிருக்கின்றன. ஒரு கூட்டு அணுகுமுறை (System thinking ) பிரச்சினைகளை நன்கு ஆராய தேவைப்படுகிறது, தீர்வுகளை பற்றிய நுண்மையான பார்வைக்கு. இது தொடர்பான ஒரு ஆய்வு முறைமை தற்போது வளர்ந்து வருகின்றது. அது போரின் பின்னாலான ‘இடைநிலைச் சமூகங்களுக்கான மேம்பாட்டு அணுகுமுறை’ (Development Approach for Transitional So-

cieties). இத்துறை சார் கவனமும் எம்மில் குறைவாக இருப்ப துதான் சோகம்.

யுத்தம் பல விளைவுகளை விதைத்துள்ளது - பாதிக்கப்பட்ட மனிதர்கள் பாதுகாப்பான இடம் தேடி நகர்ந்தார்கள் அல்லது நகர்த்தப்பட்டார்கள். உள்ளக நகர்வு மையங்கள் காலப் போக்கில் நிரந்தர வசிப்பிடங்களாக மாறின. யாழ். குடாவின் சப்த தீவுகள் மனிதர்களை வீசி தள்ளியது கொடூரமாக. யுத்த முனைப்புக்கள் கரையோர மக்களை தான் முதலில் காவு கொண்டது. அவர்களின் வாழ்வாதாரங்களை அழித்து கைவி டப்பட்ட மனிதர்களாக மாற்றியது. மிகவும் பாதிக்கப்பட்டவர்க ளுள் மீன்பிடி மக்கள் தான் முதலில் வாழ்வாதாரத்துரிய வாழ் நிலங்களை இழந்தவர்கள்; கைவிடப்பட்டவர்கள்; இன்றும் கூட கரையோர மக்களின் வாழ்வு மீதான அக்கறை என்பது மிகவும் அரிது.

அரச நிர்வாகம் யுத்த நிலைக்கு முன் காலம், 1970-க்கு முன், பல காரணங்கள் இந்தக் கரையோர கிராமங்களின் அபிவி ருத்தியை ஒரு புறக்கணிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட நிலைக்கு நன்கு பேணியது. கல்வி, நிலவுரிமைகள், தொழில்சார் அபிவி ருத்தி, மற்றும் மனித வள மேம்பாடு என்பது, குறிப்பாக சிறுதீ வுகள் மக்களுக்கும் வட மாகாண கரையோர வாழ் நிலங்க ளுக்கும் (கௌதாரிமுனை) ஒரு எட்டாக்கனி. மேலும் குறிப் பாக சொல்வதானால், யாழ் நகரின் மிகவும் அதி அடர்த்தி யான பகுதி குருநகர். யாழ் மாவட்டத்தில் 23% மக்கள் காணி இல்லாதோர் (UDA 2024). அதில், குருநகர் மக்களின் பங்கு 60%. உண்மையில் குடாநாட்டின் மிக அழகான பகுதிகள் வனப்புக்குரிய நிலங்கள் கரையோர பகுதிகள். வனப்பும் வள மும் கொண்ட எமது பொருளாதார மையங்கள். ஆனால், இப் பகுதிகளை பற்றிய கரிசனை என்பது மிகமிகக் குறைவு. வாக் குகளை அள்ளி வழங்கும் மக்களின் இன்றைய நிலை யாது? நல்லூர் போன்ற பகுதிகளுக்கு வழங்கும் அக்கறையும் கவ னமும் பொம்மைவெளி மக்களுக்கு கிடைப்பதில்லை; கார ணம் - ஒரு குறிச்சி மனப்பாங்கு தான் - தன் பகுதி சார் அக் கறை. முக்கிய பங்கு வகிப்பது பதவிநிலை அரச அதிகாரம் தான். ஒதுக்கும் வளங்கள் மேலும் மேலும் வளர்ந்த பகுதிக ளுக்காய் சேரும் போது, பொம்மைவெளிகள், காக்கைவெளி எப்போதும் எம்கண்ணில்பட வாய்ப்பில்லை. அப்பகுதியை கடக்கும் போது மூக்கை பொத்தி, வாய்பொத்தி மௌனமாக இருப்பை தவிர.

இந்நிலைக்கு மிக முக்கிய கருத்துநிலை யாது? ஒரு குறுகிய இடம் சார் கரிசனை இருப்பதை நன்கு அறியலாம். இது, சாதி சார் பார்வைக்கு அப்பாலானது. ஒருவகை அதிகாரப் போக்கு; இந்து கலாசார மையவாதத்தின் மையத்தை விட் டுப் பார்க்காத மனநிலை. தீவுகளிருந்து இடம் பெயர்ந்தவர் கள் தீவின் வாழ்நிலை பற்றிய கரிசனைக்கு பதில், யாழ் நிலை மைதானத்தில் கரைந்து விட்ட நிலை.

போரின் பின்னாலான புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி மூல தன ஒதுக்கீட்டிலும் கச்சிதமாக பல புறக்கணிப்புகள் உண்டு. சிறப்பாக பின்பற்றப்படுகிறது. பல 'கௌதாரிமுனைகள்' தொடர்ந்தும் கைவிடப்படுவதுக்கு மூல காரணம் எம்மில் பிடித்திருக்கும் இந்த 'அதிகாரமையவாதம் தான். இது ஒரு தொடரும் நோய். கொரோனவை விட ஆபத்தானது.

தமிழருக்கான தாயகம் போலியானதா? இல்லை. அது உண் மையானது - உளச்சார்புள்ள கனவு. நனவாகும் என்ற நம் பிக்கை. தாமரை எந்நிலையிலும் தன் பூக்களை தர மறப்ப தில்லை. தாமரையின் பலம் நீர் அல்ல அதன் வேர்கள்; வலு வான, திரண்ட தாமரை வேர்கள். யாராலும் அசைக்க முடி யாது; குளம் காய்ந்தது போனாலும். நனவுக்கும் கனவுக்கும் கடக்கவுள்ள இடைவெளி அதிகமாக தென்படலாம் ஆனால், அது நிசம், தாமரை தரும் நம்பிக்கை போல. நிலம் மீதான அடையாளம் அரசியலை கடந்த நிலை. தமிழ் தேசத்தின் அடையாளம் மொழியை விட அதன் 'வலி'தான் கூர்மையான அழிக்கமுடியாத அடையாளம். மூன்று சந்ததிகளின் தியாகம், அர்ப்பணிப்பு - வலி சுமந்த ஒரு உணர்வு - தியான நிலை.

'மணல் ஆறு'கள் சுற்றிவளைத்து ஆக்கிரமிக்கும் போது மண் சுமந்த மேனியராய் போராடிய ஒரு சந்ததி எம்மை கடந்து போனது. அது புலிகள் மட்டும் அல்ல; பலரின் தியாகம்.

வளமான வரலாற்று நிலங்கள் பெயரிட்டு பறிக்கப்படும் போது எதிர்கொண்ட ஒரு மக்கள் கூட்டம். குறிப்பாக வன்னி மக்கள். பலரை விலை கொடுத்த தேசம். பல நவகண்டங் களை நிலத்துக்காக அரங்கேற்றினர்; பலர். வன திணைக்கள காடுகள் தோறும் இடும் சிமெந்து எல்லை கல் நடவுகள் அல்ல. வனங்களை பாதுகார்த்தவர்களின் 'சவான்' நிலைகள்.

ஆனால், பாதுகாத்த வனங்களை விலை கொடுக்கும் இன் றைய நிலையைத்தான் தமிழ்ச்செல்வன் தன் எழுத்தில் சுட் டும் பொருள். இது வெறும் ஒரு நூல் அல்ல; ஒரு வளமான தேசம் பற்றிய கனவின் எதிரொலி. கனவுகளை கரைந்து போக இடம் கொடுக்காத ஒரு போராளியின் நிலை. மண் ணின் மீதான காதல், பரிவு, ஈர்ப்பு - தமிழ் தேசியத்தின் அடி நாதம். நிலம் மீதான வசப்பு எமது மொழி மீதான மோகத்தை விட அதிகம். காரணம் நிலமும் கடலும்தான் எமது வாழ்வுக் கான ஆதாரங்கள். எல்லாம் அப்புறம் தான். இதை வெளிச் சம் போட்டுக் காட்டும் நிலை தான் தமிழ்ச்செல்வனின் அரசி யல் - நுண்ணரசியல். தேசம் என்பது நிலம் மட்டும்மல்ல; எமது கடல்கள், தீவுக் கூட்டங்கள், குளங்கள் மற்றும் சமுத்தி ரம். குறிப்பாக இந்து சமுத்திரம். மகாவலி ஆறு எமது முதுசம்.

நிலத்துக்கும் கடலுக்கும் ஓர் ஆழமான உறவு உண்டு. எப்போதும் பிரிக்கமுடியாது. இந்த உறவுநிலை தான் எமது போராட்டத்தின் ஆதார நிலை. பலர் இதை சரிவரப் புரிtதில்லை; புரிந்தாலும் ஆழமாக தோண்டுவதில்லை. தமிழ்ச்செல்வன் சரியாக புரிந்தவராகவும் அதன் காரணமாக ஆழமாக தோண் டும் வல்லமை மிக்க தனிமனிதராகவும் எம்முன் வருகிறார்.

இந்நூல் எழுப்பும் அல்லது எம்மிடம் தொடுக்க முனையும் மிக முக்கியமான கேள்வி யாது? தாயக உணர்வு தான். இது வெறும் அரசியல் நிலைப்பட்ட விடையத்தைவிட பரந்தது; விரிந்தது. ஒரு தேசம் தழுவிய ஒரு சமூக அக்கறையுடன் கூடிய ஒரு பரந்துபட்ட - சமூக, பொருளாதார, வள முகா மைத்துவ மற்றும் கலாசாரங்களை, அடையாளங்களை கட் டிக்காக்கும் ஒரு பொது நிலை. ஒரு கூட்டு தூண் மற்றும் கூட்டு பொறுப்பு. தாயக உணர்வு இருப்பின் 'நஞ்சாகும் நிலம்' தொடர அனுமதிக்க முடியாது. இந்நூலின் சாரம் இது தான், காட்டில் கண்ட முதிர்ந்த, முத்திய தேன் போல, வண்டுக்கு.



jeyamurugan@thaiveedu.com


Scarborough (CANADA)
08
June 2024
3.30 PM - 7.30 PM
Saturday
art of socio publication
சமூகம் இயல் பதிப்பகம்
கனடாவில்
"சமூகம் இயல்"
பதிப்பக நூல்களின்
அறிமுகமும் வெளியீடும்...
ஈழ, புகலிட
எழுத்தாளர்கள்,
கட்டுரையாளர்கள்,
ஆய்வாளர்களின்
முக்கியமான
பதினேழு நூல்களின்
அரங்கு!
ஏற்பாடு
தேடகம்
நிகழிடம்
Scarborough Village
Recreation Centre
3600 Kingston Road
Scarborough | ON MIM 1RS
தொடர்புகளுக்கு
கோணேஸ் 4376609694
அஸ்மின் 4379917975
செல்வம் 4167311752
பௌசர் 0044 7817262980
உங்களை அன்புடன் அழைக்கிறோம்!



# மகாவம்சம் 6-வது தொகுதி பயங்கரவாதப் பிரிவினைவாதம்

## - தமிழில்: என். சரவணன்

மகாவம்சத்தின் 6 வது தொகுதியானது, 1978 - 2010 வரையான காலத்தைப் பற்றி பேசும் தொகுதி. இரண்டு பாகங்களும் சேர்த்து மொத்தம் ஆயிரத்துநூறு பக்கங்களுக்கு மேல் கொண்டிருந்தாலும் அதில் பாளி மொழிபெயர்ப்பும் அடங்கி இருக்கிறது. எனவே சிங்களத்தில் உள்ள சுமார் 600 பக்கங்களே தமிழுக்கு நேரடியாக வெளிக்கொணர வேண்டி இருக்கிறது.

அரசியல், பயங்கரவாதம், சமூக நலன், கலாசாரம், சமயம், கல்வி, மருத்துவம், வெளியுறவுத்துறை போன்ற தலைப்புகளின் கீழ் ஆட்சியாளர்களின் காலப்பகுதிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் தமிழ் மக்களுக்கு மிகவும் அவசியப்படும் பகுதி ‘பயங்கரவாதம்’ என்கிற தலைப்பில் எழுதப்பட்டுள்ள பகுதிகளாகும். 60-க்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட மகாவம்சக் குழுவில் ‘பயங்கரவாதம்’ என்கிற தலைப்பை எழுதும் பொறுப்பு யுத்தத்தை நடத்திய இராணுவத் தலைவர்கள் அடங்கிய சிங்களப் புலமையாளர்களின் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அவர்கள்:
· பேராசிரியர் காமினி சமரநாயக்க
· பேராசிரியர் மாலனி எந்தகம
· திரு. லக்ஷ்மன் ஹுலுகல்ல
· திரு. ஷமிந்திர பேர்டினன்ட்
· மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா
· சிரேஷ்ட விரிவுரையாளர் டபிள்யூ. எம். அமரதாச
· திருமதி எஸ்.டி.பி. கவிமல் சூரியாராச்சி
ஆகியோர்.

முதலாவது தொகுதியைத் தவிர எந்த தொகுதியும் தமிழில் இதுவரை வெளிக்கொணரப்பட்டதில்லை. முதலாவது தொகுதியை மாத்திரம் ஐந்து பேர் கொண்டு வந்துள்ளனர். ஆனால் அவையும் கூட உள்ளதை உள்ளபடி மொழிபெயர்க்கப்பட்ட பிரதிகள் அல்ல. சுருக்கியோ அல்லது சொந்த விளக்கவுரையாகவே அமைந்துள்ளவை.

இதில் உள்ள தகவல் பிழைகள் கூட அதில் உள்ளபடியே விடுகிறோம். இம் மகாவம்சம் கூறும் அரசியல் வியாக்கியானங்களைப் பற்றியும் முடிவெடுப்பதை வாசகர்களிடம் விடுகிறோம். நம் கடமை அதில் உள்ளதை உள்ளபடி வெளியிடுவதே. முதற்தடவை ‘மகாவம்சம்’ உள்ளதை உள்ளபடி அப்படியே மொழிபெயர்க்கப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

‘மகாவம்சம்’ தொடர்ச்சியாக 2500 வருட காலமாக எழுதப்பட்டு வருகிறது. 1956-லிருந்து மகாவம்சத்தை சிங்கள பௌத்தக் குழுவொன்றைக் கொண்டு இலங்கை அரசே எழுதி வருகிறது.

இறுதியாக வெளிவந்த 6-வது தொகுதி ‘மகாவம்சம்’; 1978 – 2010 காலத்தைப் பற்றியது. ஜே.ஆர். காலம் தொடக்கம் மகிந்த ராஜபக்ச காலம் வரையானது அது. அதாவது ஈழப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்து முள்ளிவாய்க்கால் முடிவு வரையிலானது.

எனவே இந்த காலப்பகுதியில் ஆட்சி செய்த ஜே.ஆர்., பிரேமதாச, டி.பி. விஜேதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ச ஆகியோர் காலத்து ‘பாதுகாப்பு’ அத்தியாயங்கள் மட்டும் இங்கே தொடராக வெளிவருகின்றன.

தமிழர்களின் அரசியல் அபிலாசை, அதற்கான போராட்டம், பற்றிய அரசின் கொள்கை என்ன? வியாக்கியானம் என்ன? இதற்கு அரசு வினையாற்றிய விதம் என்பவற்றை அறிவதற்கு இந்த தொகுதியில் பயங்கரவாதம் என்கிற பகுதி தமிழில் வெளிவருவது முக்கியம்.

இந்த இதழில் ஜே.ஆர். ஜெயவர்த்தன காலத்து ‘பயங்கரவாதம் - பிரிவினைவாதம்’ நிலைமைகள் பற்றிய பகுதி மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

233 ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன அதிகாரத்துக்கு வந்த 1977-ம் ஆண்டுக்கு முன்னர் இருந்தே இலங்கைத் தமிழ் இனத்தவர்களால் முன்வைக்கப்பட்டு வந்த, தாம் எதிர்கொள்ள நேர்ந்த சிக்கல்கள், மனக்குறைகள் படிப்படியாக தேசியப் பிரச்சினையாக உருவெடுத்து வந்தது. ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இலங்கை இருந்த காலக்கட்டத்தில் எழுந்ததுடன் தமிழர்களின் மனக்குறைகள் தோன்றிய அதேவேளை 20-ம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தில் இருந்து நாட்டிலுள்ள அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கண்டடைய நியமிக்கப்பட்ட டொனமோர் ஆணைக்குழு, சோல்பரி ஆணைக்குழு போன்றவற்றிடமும் தமிழ்த் தலைவர்களால் தமது மனக்குறைகள் முன்வைக்கப்பட்டன. ஆணையாளர்கள் முன்வைத்த தீர்வுகளில் தமிழ்த் தலைவர்கள் திருப்தியடைய

வில்லை. எனவே, 1949-ல், சுதந்திரத்திற்குப் பிந்தைய அரசியல் நடைமுறைகளுக்குள் தீர்வுகளை எட்டும் நோக்கத்துடன், எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தலைமையில் 'தமிழரசுக் கட்சி' எனப்படுகிற 'தமிழ் அரசுக் கட்சி' என்கிற அரசியல் கட்சி உருவாக்கப்பட்டது. இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் தாயகம் என்கிற கருத்தாக்கத்தை தமிழரசுக் கட்சி கொண்டிருந்ததுடன், அக்கொள்கையை அரசியல் யாப்புக்கு ஊடாக நடைமுறைப்படுத்தி தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க விரும்பியது.

245 ஆரம்ப காலங்களில் தமிழ் மக்களைக் கையாண்ட தலைவர்களான ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், எம். திருச்செல்வம் போன்றோர் எதிர்ப்புக் கூட்டங்கள், சத்தியாகிரகங்கள், உண்ணாவிரதங்கள், சிவில் சட்டங்களை மீறுதல் போன்ற பாரம்பரிய அரசியல் தந்திரோபாயங்களின் மூலம் தங்கள் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான இயக்கத்தை படிப்படியாக முன்னெடுத்துச்சென்றனர்.

248 பிரித்தானிய ஆட்சியின்போது பெருந்தோட்டத்துறையில் வேலை செய்வதற்காக அழைத்து வரப்பட்ட இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களும் 1931-ம் ஆண்டில் டொனமூர் அரசியலமைப்பின் கீழ் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட காலத்திலிருந்து குடியுரிமைகளை அனுபவித்து வந்தனர். இருப்பினும், 1948-ல் சுதந்திரத்தின் பின்னர், அதிகாரத்தில் இருந்த அரசாங்கம் அந்த உரிமைகளை சட்டரீதியாகவும் முறையாகவும் செயற்படுத்த வேண்டிய தன் அவசியத்தை கருத்தில் கொண்டு 1948 மற்றும் 1949-ம் ஆண்டுகளில் இரண்டு குடியுரிமைச் சட்டங்களை இயற்றியது. அதன் பிரகாரம் அனைத்து இந்தியத் தொழிலாளர்களும் 1931 முதல் அதுவரை அனுபவித்து வந்த உரிமைகள் தற்காலிகமாக பறிக்கப்பட்டன. இந்த சட்டங்களுக்கு எதிராக தமிழ் தலைவர்கள் எழுந்தனர். குடியுரிமையை மீட்டெடுப்பதும் தமிழரசுக் கட்சியின் குறிக்கோளாக ஆனது.

260 1950-களின் நடுப்பகுதி வரை, தமிழரசுக் கட்சி களத்துக்கு வரும் வரை, நாட்டின் அரசியல் நீரோட்டத்தில் முன்னணியில் இருந்த தமிழ் காங்கிரஸ் தலைவர்கள், சிங்களத் தலைவர்களுடன் அரசாங்கத்தில் சேர்ந்து, அமைச்சர் பதவிகளையும் வகித்தனர்.

262 பண்டைய மன்னராட்சிக் காலத்தில் செழித்தோங்கி இருந்த கல்லோயா பள்ளத்தாக்கு, புனானை, கந்தளாய், கவுடுல்ல, மொரவெவ, ஹுறுலுவெவ, பதவியா, இரணைமடு, யோதவெவ போன்ற பிரதேசங்களில் புதிய விவசாய குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு அப்பகுதிகளில் நிலமற்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் போன்ற இனங்களைச் சேர்ந்த விவசாயக் குடும்பங்களை குடியேற்ற அரசாங்க சபை காலப்பகுதியில் அன்றைய விவசாய அமைச்சராக இருந்த டீ.எஸ். சேனநாயக்க முன்னோடியாக இருந்தார். இந்த குடியேற்றங்கள் ஒவ்வொன்றும் மக்கள் நல்லிணக்கத்துடன் வாழக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. இந்தத் திட்டம் சில தமிழ்த் தலைவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

269 1956-ல், எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பிரதமர் பண்டாரநாயக்கவின் தலைமையில் ஆட்சிக்கு வந்த மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம், சிங்களத்தை மட்டுமே அரச கரும மொழியாக ஆக்கியதும், தமிழ் மொழியைப் பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட, அணுகப்பட்ட நடவடிக்கைகள் தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு வழிவகுத்தது. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக தமிழரசுக் கட்சி சத்தியாகிரகம், உண்ணாவிரதம், சிவில் உரிமை மீறல்கள் மூலம் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியது. 1957-ம் ஆண்டு முன்மொழியப்பட்ட பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தத்தின் மூலம் இந்த சிக்கலை தீர்க்க முயற்சித்த போதும் அது தோல்வியடைந்த நிலையில், 1958-ம் ஆண்டு, தமிழ் மொழி சிறப்பு ஏற்பாடுகள் சட்டம் தமிழ் மொழியின் பயன்பாட்டிற்கு அவசியப்பட்ட அடித்தளத்தை உருவாக்கிக் கொடுத்தது. எனினும் தமிழ்த் தலைவர்கள் இது தொடர்பில் திருப்தியடையவில்லை. சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்தைப் பெறுவதே அவர்களுக்கு அவசியப்பட்டது. தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் முதற்தடவையாக சிங்களத் தலைவர்களுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்க 1965-ம் ஆண்டு பிரதமர் டட்லி சேனநாயக்கா ஆட்சி அமைக்க ஆதரவளித்ததுடன் அவ்வரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பரிகாரமாக மாவட்ட சபைகளை அமைக்க அரசாங்கம் முயற்சித்த போதிலும் அதுவும் தோல்வியடைந்தது.

286 1972-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய குடியரசு அரசியலமைப்பின் மூலம் தமிழ்த் தலைவர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக தமிழ் மொழியையும் ஆட்சி மொழியாக அரசியலமைப்புக்குள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அதுவும் சாத்தியப்படவில்லை. எனவே, தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையை விட்டு வெளியேறியதுடன், இறுதியில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தமிழ் மக்களின் மகிழ்ச்சிக்கு வழிவகுக்கவில்லை.

290 குடியரசு அரசியலமைப்புக்கு எதிரான மக்களின் எதிர்ப்பை அடையாளப்படுத்தும் வகையில் 1977 மே 22-ஆம் திகதி முருகண்டி ஊடாகச் சென்ற உயர் மின் கோபுரம் ஒன்று தகர்க்கப்பட்டதுடன் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஹர்த்தால் ஒன்று நடத்தப்பட்டதுடன் அரச நிறுவனங்களும் கடைகளும் மூடப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை குழப்பப்பட்டு அரசாங்கத்துக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக பழைய தலைவர்கள் கடைப்பிடித்த பாரம்பரிய தந்திரோபாயங்களுக்குப் பதிலாக ஆயுதங்களுடன் புதிய பயங்கரவாத தந்திரோபாயங்களைக் கடைப்பிடிக்கத் தயாராகிக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தில் பல தமிழ் இளைஞர்களால் 1972-ல் 'புதிய தமிழ்ப் புலிகள்' (TNT) என்கிற இயக்கம் உருவாக்கப்பட்டது. சிங்கள தேசத்தின் சின்னமான சிங்கத்திற்கு சவால் விடுவதற்காக அந்த அமைப்பின் சின்னமாக புலி பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு டீ.என்.டீ இயக்கத்தின் உருவாக்கம் தமிழ் பயங்கரவாதத்தின் ஆரம்பமாகக் கருதலாம். இதே வேளை தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத்

தொழிலாளர் காங்கிரஸ், போன்ற பாரம்பரிய தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து 1972-ம் ஆண்டு புதிய குடியரசு அரசியலமைப்பு நிறைவேற்றப் பட்ட மே 22-க்கு இரண்டு நாட்களின் பின்னர் 'தமிழர் ஐக்கிய முன்னணி' என்ற அமைப்பை உருவாக்கின.

1973-ம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் பல்கலைக்கழகத்திற்கு சேர்வதற்கு தகுதியானவர்களை தெரிவு செய்வதில் குறைந்தபட்ச கல்வி வசதிகளைக் கொண்ட பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் மதிப்பெண்களை தரப்படுத்தும் புதிய கொள்கை அறிமுகபடுத்தப்பட்டபோது இக்கொள்கையும் தமிழ் மக்களுக்கு இழைக்கும் அநீதியாகக் கருதிய தமிழ்த் தலைவர்கள், தமது அரச விரோத மனக்குறைகளில் இதனையும் ஒரு பிரதான குறையாகச் இணைத்துக் கொண்டார்கள்.

295 தமிழ் அரசியல் கட்சிகளின் இணைந்து 1972-ல் உருவாக்கிய தமிழர் ஐக்கிய முன்னணி 1976 மே 14 அன்று வட்டுக்கோட்டையில் மீண்டும் கூடியபோது, தமிழ் மக்களுக்கான தனி அரசை நிறுவும் யோசனை முன்வைக்கப் பட்டது. அதனை ஏற்றுக்கொள்ளாத சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதிலிருந்து விலகியது. ஏனைய கட்சிகள் இணைந்து 'தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி' என அவ்வமைப்பின் பெயரை மாற்றிக் கொண்ட அவ் அமைப்பு, 'வட்டுக்கோட்டைப் பிரகடனம்' என்கிற பிரகடனத்தை வெளியிட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமிழ் மக்களின் தாயகமாக அங்கீகரிக்கும் கொள்கையை அடைவதற்காக அந்த மாகாணங்களை உள்ளடக்கி ஈழம் என்ற இறைமையுள்ள தேசிய அரசை உருவாக்குவதை உள்ளடக்கியதாக பிரதான விடயங்களில் குறிப்பிடப்பட்டிருந்தன. தமிழர் விடுதலைக் கூட்டணியால் உருவாக்கப்படவிருக்கிற ஈழ தேசத்தில் நாட்டின் நிலப்பரப்பில் 28.77% வீதத்தையும் நாட்டைச் சுற்றிய கரையோரப் பகுதிகளில் 60% ஐயும் உள்ளடக்கியது.

301 1975-ம் ஆண்டு, யாழ்ப்பாண மேயர் துரையப்பா படுகொலை செய்யப்பட்டதன் மூலம் பயங்கரவாத ஆயுத நடவடிக்கைகளைத் தொடங்கிய பயங்கரவாத தமிழ் இளைஞர்களில் முன்னணியில் இருந்த வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் புதிய தமிழ் புலிகளின் உறுப்பினர்கள் உட்பட பிற பயங்கரவாத குழுக்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களும் இணைந்து கொண்டனர்.

303 அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் 1977 பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தலைமை தாங்கினார். தனது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர் கூறிய முக்கிய விடயங்களில் ஒன்று; தமது கட்சி தமிழீழம் அமைப்பதற்கான மக்கள் ஆணையை எதிர் பார்க்கின்றது என்பதாகும்.

இதற்கிடையில், அப்போது வளர்ச்சியடைந்து வந்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் கோரிக்கைகளுக்கு அமைய, ஐக்கிய தேசியக் கட்சியால் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கும் செயல் திட்டம் 1977 தேர்தலுக்காக வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. சிங்கள மொழியைப் பயன்படுத்தாதவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டு சர்வ கட்சி மாநாடு கூட்டப்படும் என்றும், கல்வி, குடியேற்றத்திட்டம், தமிழ் மொழிப் பயன்பாடு போன்ற விடயங்களில் காணப்படுகிற சிக்கல்களைத் தீர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டது.

307 ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைத்தது, ஈழத்தை உருவாக்கும் கொள்கையின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி; வடக்கு மாகாணத்தின் அனைத்து இடங்களையும் கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையையும் உள்ளடக்கி 18 இடங்களை வென்று எதிர்க்கட்சித் தலைமையாக ஆனது. 1977 ஆகஸ்ட் 4 அன்று தனது முதல் தேசிய அரசுப் பேரவையின் உரையில், பிரதமர் ஜே.-ஆர். ஜெயவர்தன தமிழ் மொழி பிரச்சினை மற்றும் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான தரப்படுத்தல் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும் என்று அறிவித்தார்.

1978-ம் ஆண்டில், ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதிகளின் தரப்படுத்தலை இரத்துச் செய்ததுடன் அதே ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் 19-வது சரத்தின் மூலம் தமிழைத் தேசிய மொழியாக்கியது.

312 இதற்கிடையில், 1976 வட்டுக்கோட்டை மாநாட்டிற்குப் பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் பிரிவினைவாத அமைப்புகளும் மிக நெருக்கமாக பணியாற்றிக் கொண்டிருந்தன. ஈழக் கருத்தாக்கத்துக்கு ஆதரவாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈழ அரசை நிறுவ பாராளுமன்றத்திற்குள் இருந்து செயற்பட்ட அதே வேளை, ஏனைய இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தின் ஊடாக ஈழ அரசை நிறுவும் நோக்கத்துடன் இயங்கி வந்ததை காண முடிந்தது.

1960-களில் இருந்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல பயங்கரவாத அமைப்புகள் இருந்தமை பதிவானது. அவ் அமைப்புகளுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இவ் அமைப்புகளில் பல அழிக்கப்பட்டதுடன் 1970-களின் இறுதியில் ஐந்து முக்கிய அமைப்புகள் மட்டுமே எஞ்சியிருந்தன. வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், கே.எஸ். பத்மநாபா தலைமையில் 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' அல்லது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.; உமா மகேஸ்வரன் தலைமையிலான 'மக்கள் விடுதலை ஈழப் புலிகள்' எனப்படுகிற புளொட் இயக்கம், வேலுப்பிள்ளை பாலகுமார் தலைமையிலான ஈழ புரட்சிகர மாணவர் அமைப்பு எனப்படுகிற ஈரோஸ் மற்றும் ஸ்ரீ சபரத்தினத்தால் இயக்கப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கம் எனப்படுகிற 'டெலோ' ஆகியவையே அவ் அமைப்பாகும்.

315 இத்தகைய சூழலில் இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ளவிருக்கும் சவால்களை இனங்கண்ட இராணுவத் தள

பதி பிரிகேடியர் ஜே.ஈ. டென்னிஸ் பெரேரா 1978-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையில் இதனைத் தெளிவுபடுத்தியதோடு, இராணுவத்தை பொருத்தமான முறையில் மறுசீரமைக்கும் செயற்பாட்டைத் தொடங்கினார். நாட்டில் அவசரகால போர் நிலைமையை சமாளிக்க தேவையான பயிற்சியும் பயனுள்ள புலனாய்வு சேவையும் சரியான நிர்வாக கட்டமைப்பும் இராணுவத்திடம் இல்லை என்பதை தளபதி தெளிவுபடுத்தினார்.

317 அதன்படி, 1978-ம் ஆண்டில், ஒருதன்னார்வ இராணுவ தலைமையகம் நிறுவப்பட்டு இராணுவத்தின் இரண்டாவது தளபதியை அத்தன்னார்வ இராணுவ தலைமையகத்தின் தளபதியாக நியமிக்கப்பட்டதுடன், அதே ஆண்டில் இலங்கையில் பெண்கள் இராணுவப் பிரிவும் உருவாக்கப்பட்டது. போர் நடவடிக்கைகளில் இராணுவத்துக்கு தொடர்ச்சியாக உதவக்கூடிய வகையில் நிர்வாக மற்றும் சேவை இயக்குனர் சபையை நிறுவும் பணிகளும் ஆரம்பமானது. மேலும் அப்போது இருந்த ஒரு நிரந்தர படையணி என்கிற வகையில் இருந்த மூன்று காலாட் படைப்பிரிவுகளுக்கு மேலதிகமாக, ரஜரட்ட ரைபிள் படைப்பிரிவு, விஜயபா படைப்பிரிவு ஆகிய பெயர்களில் புதிய இரண்டு காலாட்படை படைப்பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டன. இரண்டு படைப்பிரிவுகளுக்கும் தலா ஒரு நிரந்தர பட்டாலியன் இருந்ததுடன், ரஜரட்ட ரைபிள் படைப்பிரிவின் 1-வது படையணி அனுராதபுரத்திலும் விஜயபா படைப்பிரிவுடின் 1-வது படையணி வவுனியாவிலும் நிறுவப்பட்டன. இதற்கு உறுதுணையாக, புதிய கவச, பீரங்கி, பொறியியல் மற்றும் சமிக்ஞை பிரிவுகள் வளர்த்தெடுக்கப்பட ஆரம்பிக்கப்பட்டதுடன், முதல் முறையாக, இலங்கை பீரங்கிப் படையணிக்கு மன்னார் இராணுவ துப்பாக்கி சுடும் தளத்தில் நேரடி பயிற்சியும் வழங்கப்பட்டது. கனேமுல்லையில் ஒரு கொமாண்டோ பிரிவும் நிறுவப்பட்டது.

321 1981-ம் ஆண்டு, இராணுவ வீரர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களின் சிறந்த சேவையையும் துணிச்சலை அங்கீகரிக்கும் வகையிலும் அதிகாரிகளுக்கும் பிற பதவிகளை வகித்தவர்களுக்கும் பதக்கங்களை வழங்குவதை மீண்டும் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பரம வீர விபூஷண, வீராதார விபூஷண, வீர விக்ரம விபூஷண, ரணவிக்ரம பதக்கம், ரணசூர பதக்கம், என்பவை வீரச் செயல்களுக்காகவும்; விஷிஷ்ட் சேவா பதக்கம், உத்தம சேவா பதக்கம் வெளிநாட்டு சேவை பதக்கம் போன்ற பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த முத்திரைகளைக் கொண்ட விருதுகள் முதன்முதலில் 1986-ம் ஆண்டு வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டு, யுத்தக் களத்தில் துணிச்சலாக செயற்பட்ட ஆயுதப்படைகளின் அதிகாரிகள் மற்றும் பிற அணிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

324 அதற்கேற்ப இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப்படையை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வாறு, இரு படைகளுக்கும் பரந்த அளவில் அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்து பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டன. இதற்கிடையில், செப்டம்பர் 07, 1978-ல், எல்.ரி.ரி.ஈ. அமைப்பினால் இரத்மலானையில்




இலங்கை விமானப்படைக்கு சொந்தமான 'அவ்ரோ' விமானம் குண்டு வைத்து தகர்ப்பட்டது. எல்.ரி.ரி.ஈ. அமைப்பு இதற்கு பொறுப்பேற்றதுடன், இது 1978-ம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நடவடிக்கை இது என்று தெரிவித்தது. அந்த ஆண்டு ஜூன் 12 அன்று, வளர்ந்து வரும் பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்ள அரசாங்கம் அவசரகால நிலைமையை அமுல்படுத்தியதோடு ஜூலை மாதம் 48-ம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தையும் நிறைவேற்றியது. இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் வளர்ச்சியுற்றிருந்த போராட்டத் தமிழ் இளைஞர் குழுக்கள் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக ஆகின. யாழ்ப்பாண மாவட்டத்தில் பயங்கரவாதிகளை ஒழிப்பதற்காக ஜனாதிபதியால் பிராந்திய இராணுவத் தளபதி பிரிகேடியர் ரி.ஐ. வீரதுங்க யாழ்ப்பாண பாதுகாப்புப் படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டதோடு தேவையான பணியாளர்களையும் துருப்புக்களையும் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டது.

333 இராணுவத்தின் அதிகாரிகளையும் தேவையான சேவைகளையும் இனங்கண்டு யாழ்ப்பாணம் குருநகரில் தனது தலைமையகத்தை நிறுவினார். இவ்வாறு இருந்தபோதி

லும், யாழ்ப்பாணக் குடாநாட்டின் சூழலைப் பற்றியும் பிரிவினைவாத தமிழ் பயங்கரவாதம் பற்றிய ஒரு போதுமான புரிதல், போதுமான துருப்புக்களும் உபகரணங்களும் எதுவும் இன்றி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் எல்.டீ.டீ.ஈ, புளொட், டெலோ மற்றும் ஈரோஸ் போன்ற முன்னணி பிரிவினைவாத அமைப்புகளின் தலைவர்கள் பாக்கு நீரிணை வழியாக இந்தியாவுக்கு தப்பி ஓடினர்.இந்த காலப்பகுதியில் இந்தியாவுக்கு தப்பியோடிய பிரபாகரன், உமா மகேஸ்வரன், ஸ்ரீ சபரத்தினம், பாலகுமார், கே.எஸ். பத்மநாபா போன்ற பயங்கரவாதிகளுக்கு தமிழகத்தில் பல்வேறு தரப்பினரின் ஆதரவுடன் சுதந்திரமாக சுற்றிதிரிந்துகொண்டும் வசதிகளை அனுபவித்துக்கொண்டும் தமது இயக்க உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கவும் இயன்றது. இதற்கிடையில், கே.பி. பத்மநாதன் என்பவர் சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்தபோது பம்பாய்க்கும் சிங்கப்பூருக்கும் இடையில் போதைவஸ்து (ஹெராயின்) கடத்தும் அமைப்பின் சக்திவாய்ந்த உறுப்பினராக இருந்தார். அதுவரை, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருந்த கலவரங்களின் காரணமாக, ஏராளமான தமிழ் இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக சிங்கப்பூர் சென்றிருந்த இளைஞர்களின் ஆதரவுடன் போதைப்பொருள் கடத்தும் செயற்திறன் மிக்க வலையமைப்பை உருவாக்க கே.பி.யால் முடிந்தது. பிற்காலத்தில் உலகின் முன்னணி போதைப்பொருள் மற்றும் ஆயுத கடத்தல் வலையமைப்பாக மாறிய இந்த அமைப்பு தமிழ் பிரிவினைவாதத்துடன் இணைந்து இலங்கை அரசுக்கு எதிராக இயங்கியது.

341 மேலும் உள்நாட்டில் பிரிவினைவாத இயக்கத்தை வலுப்படுத்தும் வகையில், சட்டவிரோதமாக அரச நிலங்களை கையகப்படுத்தும் இயக்கமும் செயற்பட்டது. குடியுரிமை இல்லாத சிறிமா சாஸ்திரி உடன்படிக்கையின்படி இந்தியாவுக்கு அனுப்பப்படவிருந்த தமிழர்களை, பிரிவினைவாதிகள் தமது கற்பனை ஈழ தேசத்தின் எல்லைகளாகக் கருதிய மன்னார், வவுனியா மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில், 'கெயார்', 'ரெட்பானா' போன்ற அரச சார்பற்ற சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் குடியேற்றினர்.

343 1979 ஆண்டளவில், பிரிவினைவாத குழுக்கள் சர்வதேச அளவில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன், லண்டனை மையமாகக் கொண்டு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவை உருவாக்கிக் கொண்டனர். இந்த அமைப்பு இந்தியாவின் இந்திரா காந்தியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததுடன் 1980-ல் அவர் மீண்டும் பிரதமர் பதவிக்கு தெரிவானார். இந்தச் சூழ்நிலையில் யாழ்ப்பாணத் தமிழ் பயங்கரவாத இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி பாதுகாப்பையும் வழங்கி, பயிற்சி முகாம்களை நடத்தவும் சென்னை மாநில அரசு வழிவகைகளை செய்தது.

346 பயங்கரவாத நடவடிக்கைகளின் மூலம் ஈழத்தை நிறுதற்கான இயக்கத்துக்கு நிதி திரட்டுவதற்காக வெளிநாட்டு தமிழீழ அனுதாபிகளிடம் இருந்து உதவிகள் கிடைத்தன. மேலும், இலங்கையில் அரச வங்கிகளைக் கொள்ளையடிப்பது, சர்வதேச அளவில் போதைப் பொருட்களை சட்டவிரோதமாக கடத்துவது, விற்பனை செய்வது, சட்டவிரோதமான நாடு நாடாக ஆட்களைக் கடத்துவது போன்றவற்றின் மூலமும் அவர்கள் பணம் சம்பாதித்தனர்.

347 1978-ம் ஆண்டு பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட செனவிரத்ன 1982 வரை அப்பதவியை வகித்ததுடன், எதிர்கால அச்சுறுத்தல்களை சமாளிப்பதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குவதற்காக 1978-ல் இலங்கை பொலிஸ் துறையில் உயர் பயிற்சி நிறுவனத்தை நிறுவினார். அத்துடன் சமூகத் தேவையாக கருதப்பட்ட சிறுவர் மற்றும் மகளிர் பணியகமும் பொலிஸ் திணைக்களத்தின் அனுசரணையின் கீழ் தாபிக்கப்பட்டது.அந்த காலப்பகுதியில் வளர்ந்து வந்த பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து பொலிஸ்துறை எச்சரிக்கை கொண்டதுடன் அது தொடர்பான விசாரணையில் ஈடுபட்ட புலனாய்வாளர் பஸ்தியான்பிள்ளையும் இரண்டு அதிகாரிகளும் 1978-ம் ஆண்டு பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர். 1982-ம் ஆண்டு பொலிஸ் மா அதிபராக பதவியேற்ற ருத்ர ராஜசிங்கம் அவர்களின் பதவிக் காலத்தில், வடக்கில் பொலிஸ் அதிகாரிகளுக்கும் பொலிஸ் நிலையங்களுக்கும் கடுமையான பயங்கரவாத அச்சுறுத்தல்கள் இருந்தன. இதனால் பொலிஸ் நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக பொலிஸ் அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்க இராணுவம் முன்வந்தது. 1982-ம் ஆண்டு, பொலிஸ் அதிகாரிகளை காலாற்படைப் பிரிவுகளாக ஒழுங்கமைப்பட்டதனைத் தொடர்ந்து சிறு ஆயுதப் பயிற்சி மற்றும் போர் தந்திரோபாய பயிற்சியை வழங்குவதற்காக ஆனையிறவு முகாமில் ஒரு பயிற்சி பாடநெறி நடத்தப்பட்டதுடன், பல்லேகல முகாமில் பொலிஸ் சார்ஜன்ட் குழுவொன்றுக்கு வழிகாட்டும் முறைகள் பற்றிய பாடநெறியும் நடத்தப்பட்டது. இந்தப் பின்னணியில்தான் ஆயுதம் தரித்த தமிழ் பயங்கரவாதிகள் மனிதப் படுகொலைகளையும், வங்கிக் கொள்ளைகளையும் நடத்தினர். 1979 ஜூலை மாதம் வரை, கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 14 ஆக இருந்தது. 1980 செப்ரெம்பரில் கிளிநொச்சியில் ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) அமைப்பாளர் ஆர். பாலசுப்பிரமணியம் கொலை, அதே ஆண்டு மார்ச் மாதம் நிலாவெளி வங்கி கொள்ளையடிக்கப்பட்டு சுமார் 80 லட்சம் ரூபாய் கடத்தப்பட்டதுடன் யாழ்ப்பாணத்துக்கு சென்றுகொண்டிருந்த மக்கள் வங்கிக்கு சொந்தமான ஒரு வண்டியின் மீது பருத்தித்துறையின் அருகில் தாக்குதல் நடத்தி அதில் இருந்த இரண்டு போலீசாரைக் கொன்று அதிலிருந்த பணம் கொள்ளையடித்துச் செல்லப்பட்டதும் இதில் உள்ளடங்கும். மேலும் 1982-ம் ஆண்டு ஜூன் மாதம் 08-ம் திகதி யாழ்ப்பாணத்தில் இரவு நேரப் புகையிரதம் ஒன்றில் குண்டு வெடித்ததில் இருவர் கொல்லப்பட்டதுடன் அவ்வருடம் ஒக்டோபர் 27-ம் திகதி எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் பிரபல செயற்பாட்டாளரான சீலன் என்கிற சார்ல்ஸ், லூகாஸ், அன்டனி உட்பட ஏழு பேர் கொண்ட பயங்கரவாத குழு சாவச்சேரி பொலிஸ் நிலையத்தைத் தாக்கி பல போலீசாரைக் கொன்றதுடன் பல ஆயுதங்களையும் கொள்ளையடித்தது. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் பல பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டன.1982 இறுதியில், பயங்கர

வாத அமைப்புகளின் அதிகாரம் வளர்ச்சியடைந்திருந்து கொண்டிருந்த நிலையில், யாழ் குடாநாட்டில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பலவீனமடைந்திருந்தது. இதேவேளை, அக்கட்சியின் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் நியாயமாக அதிகாரத்தைப் பகிர்ந்தளிக் கக்கூடிய தேசிய அரசாங்கம் அமைவதற்கான தனது விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார். தனிநாட்டை அடைவதை ஒரே இலக்காகக் கொண்ட வடக்கின் பயங் கரவாத குழுவால் அமிர்தலிங்கம் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

349 இதற்கிடையில், வளர்ச்சியடைந்து வரும் பிரிவினைவாத பிரச்சினைக்கு ஒரு தீர்வாக, தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்டிருந்ததன்படி, அதிகாரத்தைப் பரவ லாக்கி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழர்கள் உட்பட நாட்டின் பொது மக்களையும் அதிகாரத்தில் ஈடுபடுத்துவதற்கான வழிமுறையாக மாவட்ட அபிவிருத்தி சபைகளை நிறுவுவதற்கு ஜே.ஆர். ஜயவர்த்தன அரசாங்கம் ஒழுங்குங்களை மேற்கொண் டது. ஆனால் தனி ஈழ அரசை இலக்காகக் கொண்ட பிரி வினைவாதிகள் அபிவிருத்தி சபைகள் அமைப்பதை எதிர்த்தனர்.

351 1981-ம் ஆண்டு நடைபெற்ற அபிவிருத்திச் சபைகளுக் கான தேர்தலுக்கு தயாராவதற்கான பிரச்சார நடவடிக் கைகளின் போது யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதிகள் அவற்றுக்கு எதிராக கலகங்கள் செய்ததால் இப்பகுதி மிகவும் ஆபத்தானதாக ஆக்கியது. யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான வேட்பாளர் டி. தி-யா கராஜாவால் அப்பகுதியை பாதுகாக்க அழைக்கப்பட்டி ருந்த பொலிஸ் அதிகாரிகளும் பயங்கரவாத குழுக்க ளால் கொல்லப்பட்டனர். இந்த நிலைமைகளின் காரண மாக இராணுவமும் பாதுகாப்புக்காக வரவழைக்கப்பட் டது. மேலும் 1981 மே 31-ம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் பேரணியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இரண்டு போலீசார் கொல்லப்பட்டனர். அன்றிரவு தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகம் முற்றிலுமாக அழிக்கப்பட்டதோடு பெறுமதியான சுமார் 97,000 புத்த கங்களை கொண்டிருந்த வரலாற்று முக்கியத்துவமிக்க யாழ்ப்பாண நூலகம் அன்றிரவு தீக்கிரையாக்கப்பட் டது.இதற்கிடையில், 1981 ஒக்ரோபரில், பிரிகேடியர் டி.ஐ. வீரதுங்க இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். அந்த நேரத்தில், பயங்கரவாத நடவடிக்கைகள் தீவிரம டைந்திருந்த நிலையில், 1982-ல் நடைபெற்ற ஜனாதிப தித் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜே.ஆர். ஜெயவர்த்தன பிரசார நடவடிக்கை களுக்காக யாழ்ப்பாணம் சென்றார். அவரது பாதுகாப் புக்கு சென்ற கடற்படை வாகன தொடரணியைத் தகர்க்க எல்.ரி.ரி.ஈ. அமைப்பு முயற்சித்த போதும் அது வெற்றியளிக்கவில்லை. 1983 யாழ்ப்பாண உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களின் போது, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி உட்பட அனைத்துக் கட்சி களும் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று உத்த ரவிட்ட பயங்கரவாதிகள், ஏப்பிரல் 29 அன்று பருத்தித் துறை, சாவகச்சேரி மற்றும் வல்வெட்டித்துறை உள்ளூ ராட்சி சபைகளுக்காகப் போட்டியிட்ட மூன்று வேட்பாளர் களை சுட்டுக் கொன்றனர். இதன் விளைவாக, யாழ்ப் பாண மாநகர சபை மற்றும் பருத்தித்துறை நகர சபைக் கான வேட்பாளர்கள் பலர் இராஜினாமா செய்தனர்.

353 இதற்கிடையில், இந்தியாவில் சில காலம் தலைம றை வாக இருந்த பிரபாகரன், 1983-ன் முதல் பாதியில் யாழ்ப்பாணம் திரும்பினார். ஒரு காலத்தில் புளொட் அமைப்பின் பலமான உறுப்பினராக இருந்த சீலன் என் கிற சார்லஸ் அன்ரனி 1983 ஆளவில் எல்.டீ.டீ.ஈ அமைப் பின் இரண்டாவது தலைவராக செயற்பட்டு வந்தார். 1981-ம் ஆண்டு, கிளிநொச்சி மக்கள் வங்கியைக் கொள் ளையடித்த சீலனைப் பற்றி இராணுவம் தொடர்ந்தும் கண்காணித்து தேடிகொண்டிருந்தது. இந்த நிலையில் 1982-ம் ஆண்டு ஜூலை 15 அன்று, இராணுவம் அவ ரைத் தேடிச் சென்றிருந்த போது இராணுவத்தின் பிடி யில் சிக்க சொற்ப நேரத்துக்கு முன்னர் தன் சக தோழ னைக் கொண்டு சுட்டுக் கொன்று இறந்து போனார்.இதே வேளை அரசாங்கம் மாவட்ட அபிவிருத்தி சபைகளை அமைத்திருந்தது. ஆனால் அவை சரியாக செயற்பட வில்லை. எனவே, 1983 ஜூலையில், சர்வகட்சி மாநாட் டைக் கூட்டி, தீவிரமடைந்து வரும் குழப்பகர நிலையை தணிப்பதற்காக அனைத்து தரப்பு மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வழியைக் கண்டறிய விரிவான கலந்து ரையாடல்களின் பின்னர் ஒரு முடிவை எட்டுவதற்கு ஜனாதிபதி தயாராக இருந்தார். இந்த மாநாட்டில் கலந் துகொள்வதற்கு முன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த கட்சி தனது வருடாந்த கட்சி மாநாட்டை நடத் திக்கொண்டிருந்த போது பிரபாகரனின் திட்டத்தின்படி இந்த நாட்டின் வரலாற்றின் ‘கறுப்பு ஜூலை’ என்று அழைக்கப்படும் கொடூரமான சம்பவத்திற்கு வழிவகுத்த பயங்கரவாதத் தாக்குதல் எல்.டீ.டீ.ஈ அமைப்பால் மேற் கொள்ளப்பட்டது.

ஜூலை 23 இரவு, மாதகல் இராணுவத் தளத்தில் இருந்து 2-ம் லெப்டினன்ட் வாஸ் குணவர்தன தலைமை யிலான தேடுதல் நடவடிக்கையின் போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அருகே திருநெல்வேலியில் நடத் தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் ஒரு இராணுவ அதிகாரி உட்பட 13 படையினர் கொல்லப்பட்டனர். சர்வ தேச ஊடகவியலாளர்களுடனான செய்தியாளர் சந்திப் பின் போது சீலனின் மரணத்துக்கு பழிவாங்குவதற்கா கவே இந்த அழிவை மேற்கொண்டதாக பிரபாகரன் கூறி னார்.

இந்தக் கொடூர தாக்குதலில், எல்.ரி.ரி.ஈ. அமைப்பு கண் ணிவெடிகளை வெடிக்கச் செய்வதையே பிரதானமாக தாக்குதல் வழிமுறையாகக் கையாண்டது. இராணுவம் இதற்கு முன்னர் இதுபோன்ற கெரில்லா போர்த் தாக்கு தலை எதிர்கொண்டதில்லை. மேலும் இராணுவத்திடம் தனிநபர்களை ஏற்றிச் செல்லும் கவச வாகனங்கள் போன்ற நவீன உபகரணங்கள் இல்லாததால் இத்த கைய எதிர்பாராத அழிவுக்கு இலக்கானது.

தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் கொழும் புக்குக் கொண்டு செல்லப்பட்டு உறவினர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டு கொழும்பு பொது மயானத்தில் புதைக்கப் பட்ட போது, தமிழ் மக்களுக்கு சொந்தமான வீடுகள்,

கடைகள், தொழிற்சாலைகள், சொத்துக்கள் மாத்திர மல்ல, தமிழ் மக்களின் உயிர்களையும் அழித்து கலவ ரக்காரர்களால் ஆரம்பிக்கப்பட்ட அழிவு பெரும் நாசத்தை உண்டுபண்ணின. ஐந்து நாட்கள் நீடித்த இந்த நடவடிக்கையின் விளைவாக வடக்கைச் சேர்ந்த தமிழர்கள் சிலர் தஞ்சம் தேடி படகுகளின் மூலம் தமிழ கத்திற்கு சென்றடைந்தனர். இந்தத் தாக்குதல்களில் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்த குட்டிமணி உட் பட 58 பயங்கரவாத சந்தேக நபர்களும் கொல்லப்பட்ட னர்.

1983 'கறுப்பு ஜூலை' சம்பவத்திற்கு முன்னரே, இலங் கையில் இன ஒடுக்குமுறை இருப்பதாகவும், அதிலி ருந்து தப்பிப்பதாகக் கூறிக்கொண்டு சட்டபூர்வமாகவும் சட்டவிரோதமாகவும் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தி ருந்த தமிழ் மக்களால் ஈழப் போராட்ட இயக்கம் சர்வதே சமயப்படுத்தப்பட பின்புலமாக அமைந்ததுடன், கறுப்பு ஜூலை சம்பவத்துக்குப் பிறகு இந்த நிலைமை தீவிரம டைந்தது.

356 தமிழர்கள் அரசியல் அகதிகளாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக பல்வேறு நாடுகளில் விசா நிபந்தனைக ளைத் தளர்த்துவதற்காக சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தலையிட்டதால் பெரும் எண்ணிக்கையா னோர் சட்டபூர்வமாக வெளிநாடுகளில் குடியேறினர். வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் இந்தியா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் குடியே றினர்.

357 1983 சம்பவத்திற்குப் பிறகு, பிரிவினைவாத குழுக்கள் நாட்டில் பலமடைந்ததுடன் அவற்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் பல்வேறு நாடுகளில் போர் பயிற்சியா ளர்களால் பயிற்சி பெற்ற ஆயுதம் தாங்கிய உறுப்பினர் களின் எண்ணிக்கை விரிவடைந்தது. அதேபோன்று தமி ழீழ விடுதலைப் புலிகள் எனப்படுகிற எல்.ரி.ரி.ஈ. அமைப்பு பயங்கரவாத ஆயுதப் போராட்டத்தில் முதன்மை இடத் துக்கு வந்தது.

1983 யூலை சம்பவத்தின் பின்னர், ஈழவாதத்தின் பிர தான நோக்கமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களை உள்ளடக்கிய ஒரு தனி 'அரசை' உருவாக்குவதற் கான உத்திகள் மிகவும் பரவலாக செயற்படுத்தப்பட்ட தைக் காண முடிந்தது. தமிழ் பயங்கரவாதிகள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக கடைப்பி டித்த தந்திரோபாயங்களில் ஒன்று, தாம் தமது தாயகம் எனக் கருதிய பிரதேசங்களில் சிங்கள மக்கள் வாழ்ந்த கிராமங்களுக்குள் இரகசியமாக நுழைந்து மனித உயிர் களை மாத்திரமல்ல, ஆண்கள், பெண்கள், இளைஞர் கள், குழந்தைகள், பச்சிளம் குழந்தைகள் போன்ற அனைத்து மட்ட மனித உயிர்களை மாத்திரமல்ல, அவர் களின் வீடுகள், சொத்துக்கள் போன்றவற்றையும் அழித்து கொடூரமான தாக்குதல்களை நடத்துவதாகும்.

1984 நவம்பர் 03-ம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பிரதேசத்தில் அமைந்துள்ள கெட்பார்ம் மற் றும் டொலர்பார்ம் ஆகிய பண்ணைகளைத் தாக்கி அனைத்து வயதினரையும் சேர்ந்த 62 பேர் கொடூரமாகக் கொல்லப்பட்டதும் சிங்கள மக்களுக்கு எதிரான இந்தத் தாக்குதல்களில் ஒன்றாகும். அடுத்த நாள், கொக்கி- ளாய் மற்றும் நாயாறு ஆகிய மீன்பிடி கிராமங்களையும் தாக்கிய எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகள் அங்கு வாழ்ந்த சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 80 பேரை மிலேச்சத்தனமாக வெட்டிக் கொன்றனர். இந்த மனிதப் படுகொலை எந்தளவு மனிதாபிமானமற்றது என்றால் பயங்கரவாதிகள் அனைத்து வயதினரையும் கொன்றது மட்டுமல்லாமல், அவர்கள் வளர்த்த விலங்குகளையும் கொன்றதுடன் வீடுகளையும் சொத்துக்களையும் எரித்து அழித்தனர். இதன் மூலம் வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களில் சுமார் 15,000 சிங்கள மக்கள் இடம்பெயர்ந்த னர். 1981 குடித்தொகைக் கணக்கெடுப்பின்படி, 19,334 சிங்களவர்களைக் கொண்டிருந்த வட மாகாணத்தில் ஒரு சிங்களவரைக் கூட விட்டுவைக்காமல் கொல்லப்பட் டனர் அல்லது வெளியேற்றப்பட்டனர். இதற்கூடாக அம் மாகாணத்தில் சிங்களவர்கள் துடைத்தெறியப்பட்டதை காண முடிந்தது.

பயங்கரவாதிகளின் மற்றுமொரு உத்தியாக இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் நிர் வாக நடவடிக்கைகளையும் சீர்குலைத்து, வடக்கு மற் றும் கிழக்கு மாகாணங்களை ஒரு பாழடைந்த மற்றும் பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்கி அரசாங் கத்தை குழப்பகரமான நிலைக்கு தள்ளுவதாகும். மேலும் கெரில்லா மற்றும் பயங்கரவாத தாக்குதல்களின் மூலம் பொருளாதார மையங்களையும் பொது வசதிக ளையும் அழித்து நாட்டின் பொருளாதாரத்தை வீழ்த்து வது பயங்கரவாதிகள் பயன்படுத்திய மற்றொரு உத்தி யாகும்.

359 தமிழ் பத்திரிகையான 'தினகரனின்' ஊடகவியலாளரும், பின்னர் கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானி கராலயத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றியவ ருமான அன்ரன் பாலசிங்கம் எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் கோட்பாட்டாளராக நியமிக்கப்பட்டார். அவர் அவ்வ மைப்பின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுக்கும் மனிதக் கொலைகளுக்கும் உதவியதுடன் சர்வதேச அளவில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ஊடக அறிக்கைகளை பரப்புவதில் முன்னிலைப் பங்கை வகித் தார். அவர் இங்கிலாந்து குடியுரிமை பெற்று, அடேல் என்கிற ஒஸ்திரேலிய தேசத்து தாதியை மணந்து அவ ரையும் அழைத்துக் கொண்டு இலங்கைக்கு வந்த பின் னர் எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கு பெண் வீரர்களை சேர்த்துக் கொண்டதுடன், தற்கொலை 'சயனைட்' பயன்பாடு எல்.- ரி-.ரி.ஈ. இயக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அவர்க ளால் எல்.ரி.ரி.ஈ. பெண் போராளிகளுக்கு பயிற்சி அளிக் கப்பட்டு சர்வதேச அளவில் இலங்கைக்கு எதிராக பொய் பிரச்சாரங்களை முன்னெடுத்து எல்.ரி.ரி.ஈ. மேற் கொண்ட பாரிய அளவிலான அட்டூழியங்களை மூடி மறைக்கும் வேலைகளில் ஈடுபட்டனர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் எல்.ரி.ரி.ஈ. இயக்கத் தில் இணைவதை விரும்பவில்லை என்பதுடன் இளை ஞர்கள் ஏனைய பிரிவினைவாத அமைப்புக்களுக்குள்

பிரிந்து சென்றதாலும் ஆரம்பத்தில் இருந்தே இந்த தந்திரோபாயங்களை அமுல்படுத்துவதற்கு தேவையான ஆட்பலத்தை பெறுவதில் எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கு கடினமாக இருந்தது.

இதற்குத் தீர்வுகட்டுமுகமாக ஏனைய பிரிவினைவாத அமைப்புகளை அழித்தல், பலவந்தமாக இளைஞர்களைக் கடத்துதல், இளம் சிறுவர்களையும் வயதான பெண்கள், ஆண்கள் ஆகிய இரு பாலாரினரையும் பல்வேறு சேவைகளில் பயன்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் மூலமும், தந்திரோபாயமாக தங்கள் அமைப்பின் மனித வளங்களை எல்.ரீ.ரீ.ஈ வலுப்படுத்திக்கொண்டது. உளவு பார்ப்பதற்கும் தகவல்களைச் சேகரிப்பதற்கும், தெரிவு செய்யப்பட்ட தமது அனுதாபிகளுக்கு சிங்கள மொழியை பயிற்றுவிப்பதையும் மேற்கொண்ட எல்.-ரி.ரி.ஈ. இயக்கம் தமது கொள்கைகளால் மயங்கிய நபர்களை தற்கொலை மனித வெடிகுண்டுகளாக ஆக்கிக் கொண்டனர்.

362 இந்த சூழ்நிலையில், 1983-க்குப் பிறகு, இராணுவத்தின் அனைத்து பிரிவுகளிலும் அதிக வளர்ச்சி தேவை என்பது உணரப்பட்டது. 1979-ல் ஆரம்பிக்கப்பட்டிருந்த பெண்கள் படையணிக்கு 1983-ம் ஆண்டு ஆறு அதிகாரிகளைக் கொண்ட இரண்டாவது தொகுதி சேர்க்கப்பட்டது, இவ்வாறு இராணுவ மகளிர் படையணியில் சேர்ந்த அனைவரும் தாதியர், எழுதுவினைஞர் சேவை, சமிக்ஞை (செய்தி பரிமாற்றம்) போன்ற தொழில்முறை துறைகளுக்கு நியமிக்கப்பட்டனர். இராணுவ ஓட்டுநர் பயிலகம் ஜனவரி 1983-ல் திறக்கப்பட்டதுடன் அதே ஆண்டு பெப்ரவரியில் இராணுவ உடற்பயிற்சிப் பயிலகமும் திறக்கப்பட்டது.

1983 கறுப்பு ஜூலை சம்பவத்தின் பின்னர், யாழ் குடாநாட்டில் இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் பலபடுத்தபட்டதுடன் ரோந்து, சுற்று சேவைகளும் விரிவுபடுத்தப்பட்டன. புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அணிகளுக்கு தேவையான ஆயுதங்களை இராணுவம் தொடர்ந்து வழங்கிய போதிலும், தேவையான தரங்களில் விமானங்கள், சமிக்ஞை உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவது கடினமாக இருந்தது. அதன்படி, இராணுவத்தின் பொறியியல் பிரிவின் முயற்சிகளின் விளைவாக, சில கவச வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள், கண்ணிவெடி காலணிகள் (mine shoes) இராணுவத்திற்காக வடிவமைக்கப்பட்டு தயாரிப்புகள் தொடங்கப்பட்டன. இந்த வெற்றியின் அடிப்படையில், சிரமமான பருவகாலங்களில் தரைத் தடைகளை எதிர்கொள்ளக் கூடிய யுனிகோர்ன் வாகனங்களையும் இராணுவத்தால் உருவாக்க முடிந்தது.

1983 மே மாதம், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் ரஜரட்ட ரைபல் நிரந்தர படையணியைச் சேர்ந்த ஒரு வீரர் எல்.-ரி.ரி.ஈ.யால் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதன் மூலம் ஒழுக்கமற்ற முறையில் ஈடுபட்ட கிளர்ச்சிகர குற்றவாளிகளைத் தண்டித்து ரஜரட்ட ரைபிள் படையணி கலைக்கப்பட்டது. அங்கே குற்றம் புரியாதவர்களையும் இன்னும் பலரையும் சேர்த்துக்கொண்டு 1984-ம் ஆண்டு கஜபா படைப்பிரிவு உருவாக்கப்பட்டு அதன் முதல் நிலையான படையணி அனுராதபுரத்திலும் இரண்டாவது தொண்டர் படையணி திருகோணமலையிலும் நிலைநிறுத்தப்பட்டது.

1984-ம் ஆண்டு கவசப்படை வாகனங்களை ஓட்டுவதற்கான விசேட பயிற்சி பெற்ற சாரதிகள் தேவைப்பட்டதால் அனுராதபுரத்தில் சாரதி பயிற்சி மையமும் மின்னேரியவில் கவசப்படை, காலாட்படை இராணுவ பயிற்சி நிலையமும் திறக்கப்பட்டது.

1983-ம் ஆண்டு, ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன-வின் மகனான ரவி ஜயவர்தனவின் தலைமையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உருவாக்கப்பட்டதன் மூலம் கிழக்கு பிராந்தியத்தில் பொலிஸ் படையை வினைத்திறனான முறையில் ஒழுங்கமைக்க உதவியது. விசேட அதிரடிப்படைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு அடிப்படை ஆயுதப் பயிற்சியும் இராணுவ ஆலோசகர்களால் வழங்கப்பட்டதன் பின்னர் விசேட நிபுணத்துவத்துக்காக பிரித்தானியாவின் எஸ்.ஏ.எஸ். (SAS) மற்றும் இஸ்ரேலைச் சேர்ந்த ஷின் பெத் (Shin Beth) பயிற்றுவிப்பாளர்களின் அனுசரணையுடன் கடினமான பயிற்சியில் ஈடுபட வாய்ப்பு கிடைத்தது.

இராணுவத்தின் சிறிய ஆயுதங்கள் மற்றும் 80 மிமீ மோர்டார்களுடன் ஆயுதம் தரித்த பொலிஸ் அதிரடிப்படையானது, எங்கும் வீரர்களை கொண்டு செல்லக்கூடிய தாக்குதல் வாகனமான பஃபேல் (Buffel) தாக்குதல் வாகனங்களுடன் கூடிய வேகமாக இயங்கக் கூடிய திறமைமிக்க படையாக உருமாறி மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியையும் அம்பாறை மாவட்டத்தையும் அதிகாரத்தையும் பொறுப்பெடுத்ததனால் வடக்கில் இராணுவ பலத்தை வலுப்படுத்துவதற்காக கிழக்குப் பகுதிகளில் இருந்த இராணுவத்தை விட்டுக்கொடுக்க முடிந்தது.

1985 அளவில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாக்க ஊர்காவற்படையினரை நியமித்து அவர்கள் பொலிஸ் நிலையங்களின் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்டனர். இவ்வாறு பொலிஸ் திணைக்களத்தின் கீழ் மேலதிக படையணியாக ஊர்காவற்படை உருவாக்கப்பட்டதன் காரணமாக 1983-ல் 14,500- ஆக இருந்த எண்ணிக்கை 1988-இல் 28,000- ஆக ஆனதுடன் மேலதிக படையுடன் சேர்த்து 50,000-ஐக் கொண்ட படையாக ஆனது.

1983-ம் ஆண்டில், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான ஆயுதப் படைகளின் நடவடிக்கைகளை மிகவும் முறையாக ஒருங்கிணைப்பதற்காக, சிவில் பொலிசாரின் பங்களிப்புடன் 'கூட்டு சேவைகள் விசேட நடவடிக்கை சபை (JOSSOP) என்ற அமைப்பு நிறுவப்பட்டது. ருத்ரராஜசிங்கத்துக்குப் பின்னர் 1987 டிசம்பர் மாதம் ஹெர்பர்ட் வீரசிங்க பொலிஸ் மா அதிபராக பதவியேற்றார்.

இந்த ஆட்சியின் ஆரம்பத்தில் இலங்கை கடற்படை எண்ணிக்கையில் சிறியதாக இருந்ததுடன் இராணுவ

ரீதியாக முழுமையடைந்திருக்கவில்லை என்றபோதும் அர்ப்பணிபுள்ள மூத்த அதிகாரிகளையும் மாலுமிகளையும் கொண்டவர்கள் சேவையில் இருந்தார்கள். இந்த அதிகாரிகள் இங்கும் வெளிநாடுகளிலும் பயிற்சி பெற்று கடற்படை விவகாரங்களில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள். 1970-களின் இறுதியில், கடற்படையானது கொழும்பு, திருகோணமலை மற்றும் காரைநகரில் மட்டுமே பிரதான கடற்படைத் தளங்களை இயக்கி வந்தது. அவசர நிலைமைகளின் போது நாட்டின் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டது. அட்மிரல் பசில் குணசேகர இக்காலப்பகுதியில் கடற்படைத் தளபதியாக கடமையாற்றியதுடன் 1979-லிருந்து 1983 ஜூன் 01-ஆம் திகதி வரை அட்மிரல் ஏ.டட-பிள்யூ.எச். பெரேரா கடற்படைத் தளபதியாக பணியாற்றினார். 1980-களின் முற்பகுதியில், திருகோணமலையில் நிலைகொண்டிருந்த பொலிஸ் மற்றும் இராணுவத்தின் மீது பயங்கரவாதத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்ட போது, இராணுவப் பிரிவுகளாக பயிற்சி பெற்றிருந்த கடற்படை அதிகாரிகளும், வீரர்களும் திருகோணமலையில் தரையிலும் கரையோரப் பிரதேசங்களிலும் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிக்க உதவினர்.

எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகள் யாழ்ப்பாணத்திற்கும் தென்னிந்தியாவிற்கும் இடையில் கடத்தல் மற்றும் ஆயுத பரிவர்த்தனைகளை மிக வேகமாக மேற்கொண்டு வந்தனர். இதற்கு பதிலடியாக கடற்படை முதன் முதலாக வெளிப்புறமாக மோட்டார் படகு என்ஜின்கள் (OBM) பொருத்தப்பட்ட படகுகளை பயன்படுத்தியது. 1984-ம் ஆண்டு இஸ்ரேல் உருவாக்கிய டோரா - தரத்தை சேர்ந்த அதிவேக தாக்குதல் படகுகள் பயன்படுத்தப்பட்டது. பாக்கு நீரிணை பகுதிக்கு ரோந்து சென்ற கடற்படையினர், பயங்கரவாத நடமாட்டங்களை தடுத்து நிறுத்தி, பல முக்கிய பயங்கரவாத தலைவர்களை கைது செய்ய முடிந்தது. ஆரம்பத்தில் சிறிய ஆயுதங்கள் மற்றும் இலகுரக இயந்திர துப்பாக்கிகளைப் பயன்படுத்திய கடற்படைப் படகுகள், பின்னர் வேகமாக வளர்ந்து வந்த பயங்கரவாதிகளின் கடற்பயணத்தையும் தற்கொலைத் தாக்குதல்களையும் எதிர்கொள்ள 20 மிமீ ஓர்லிகன் (oerlikon) ரக பீரங்கிகளையும், 30 மிமீ தானியங்கி பீரங்கி ஆயுதங்களையும் பொருத்திக் கொண்டது. 1980-களின் நடுப்பகுதியிலும் 1980-களின் பிற்பகுதியிலும், ஒரு சிறப்பு படகுப் படையணி உருவாக்கப்பட்டு கடற்புலி பயங்கரவாதிகளுக்கு எதிராக வெற்றிகரமான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. 1983-லிருந்து 1986 வரை, வைஸ் அட்மிரல் அசோக டி சில்வாவும் 1986 இலிருந்து 1991 வரை, அட்மிரல் எச்.ஏ. சில்வாவும் கடற்படைத் தளபதியாக பணியாற்றினார்.

1977 அளவில், விமானப்படை சுமார் 2,000 துருப்புக்களைக் கொண்டிருந்தது. கடற்படையைப் போன்று விமானப்படையும் 1980-களின் முற்பகுதியில் பயங்கரவாத எதிர்ப்பு கடமைகளில் ஈடுபடத் தொடங்கின. விமானப்படை அதற்கு முன்பே, தேவைப்படும்போது இராணுவ நடவடிக்கைகளில் இராணுவத்திற்கு உதவக் கூடியதாக இருந்தது. ஆரம்ப காலகட்டத்தில், விமானப்படை ஹெலி- காப்டர்கள் போர்க்களத்தில் இருந்து காயமடைந்தவர்களை அப்புறப்படுத்துவதில் மிகச் சிறந்த பணியை மேற்கொண்டிருந்தது.

1980-களில் படிப்படியாக அதிகரித்த பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்கொள்கையில் இராணுவத்துக்கு உதவுவதற்கென 1983-ம் ஆண்டு, விமானப்படை நான்கு பெல் 412 ரக விமானங்களை கொள்வனவு செய்தது. இதைவிட, சியாமார்ஷெட்டி (Siaimarchetti) ரக மூன்று விமானங்களும் தேடுதல், புகைப்படங்கள் எடுப்பது என்பவற்றுக்காக இரண்டு செஸ்னா (Cessna 331) விமானங்களும் வாங்கப்பட்டு விமானப்படை பயங்கரவாத எதிர்ப்பில் பங்கேற்கத் தொடங்கியது.

1976-லிருந்து 1981 வரை, ஏர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக்கவும் பின்னர் ஏர் வைஸ் மார்ஷல் டி.சி. பெரேரா-வும் ஏப்ரல் 1985 வரை விமானப்படையின் தளபதியாக பணியாற்றியதுடன் அதே ஆண்டு ஏர் வைஸ் மார்ஷல் ஏ.டபிள்யூ. பெர்னாண்டோ அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

1985-ம் ஆண்டளவில் இராணுவம் ‘ஏ9’ ஊடாக யாழ்ப்பாணம் செல்வது மிகவும் கடினமாக இருந்ததால், இராணுவத்தினரை கடமைகளுக்காகவும் விடுமுறைப் பயணங்களுக்காகவும் வான்வழி மூலம் கொண்டு செல்லும் பொறுப்பை விமானப்படை பொறுப்பேற்றது. இரத்மலானை மற்றும் அனுராதபுரத்தில் இருந்து பலாலிக்கு தினமும் நூற்றுக்கணக்கான துருப்புக்கள் அவ்ரோ விமானங்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டத்துடன் வடக்கில் நிலைகொண்டிருந்த இராணுவத்துக்கும் கடற்படை துருப்புகளுக்கும் தினசரி சுமார் 50 தொன் உணவும் விமானப்படையினரால் கொண்டு செல்லப்பட்டன.

**364** 1983-84 காலப்பகுதியில் இருந்து, அந்த ஆட்சிக் காலம் முடிவு வரை இலங்கைப் பாதுகாப்பு கடமையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வாறு அதிகரித்திருந்தது என்பதை பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகிறது.

| | 1983/1984 | | 1987/1988 | |
|---|---|---|---|---|
| | நிரந்தப் படை | மேலதிக/ தொண்டர் படை | நிரந்தப் படை | மேலதிக/ தொண்டர் படை |
| பொலிஸ்/ ஊர்காவற் படை | 14500 | 5000 | 21000 | 28000 |
| இராணுவம் | 11000 | 14000 | 40000 | 20000 |
| கடற்படை | 2960 | 582 | 4000 | 1000 |
| வான்படை | 2600 | 1000 | 3700 | |
| விசேட அதிரடிப் படை | | | 1500 | |
| முழுவதும் | 31060 | 20582 | 70200 | 49000 |

**367** 1984-ம் ஆண்டு, தேசிய பாதுகாப்பு அமைச்சு நிறுவப்பட்

டதுடன் அதுவரை அவ்வமைச்சை அதற்கு முன்னர் பிரதமராலும் பின்னர் நிறைவேற்று ஜனாதிபதியாலும் வகிக்கப்பட்ட அரச பாதுகாப்பு கடமைகள் அதன் பின்னர் புதிய அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டன. புதிய அமைச்சராக லலித் அத்துலத்முதலி நியமிக்கப்பட்டார். மேலும் ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்புப் படைகளின் பிரதானிகளை உள்ளடக்கிய பாதுகாப்பு சபையொன்றும் உருவாக்கப்பட்டது. அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் கையாளும் பொறுப்பு அப்பாதுகாப்புச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி அப்பாதுகாப்பு சபையுடன் கலந்தாலோசித்த பின்னர் முப்படைகளின் கட்டளை அதிகாரியாக செயற்பட்டார்.

இராணுவத்தை மிகவும் வினைத்திறனாக பயன்படுத்தி வடக்கின் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுத்து சிங்க ரெஜிமென்ட்டின் முதலாவது படையணி முழுமையாக யாழ்ப்பாணத்தில் நிலைநிறுத்தப்பட்டு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டது. இதேவேளை சிங்க ரெஜிமென்ட்டும், கெமுனு படையணியும் களமிறக்கப்பட்டு வடக்கின் முக்கிய இடங்களில் நிரந்தரப் பிரிவுகள் நிறுவப்பட்டு பாதுகாப்பு அமைப்புகள் பலப்படுத்தப்பட்டன. இதற்கமைய மாங்குளம், கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு ஆகிய இடங்களில் தனிப் பிரிவுகளை அமைத்து ‘ஏ 9’ வீதியைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பூநகரி, யாழ்ப்பாணக் கோட்டை, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த இராணுவப் பிரிவுகள் மேம்படுத்தப்பட்டன. யுத்த தளபாடங்களையும் உலர் உணவுப் பொருட்களை கொண்டு செல்வதற்கும் ‘ஏ9’ பாதை பயன்படுத்தப்பட்டது.

1984-ம் ஆண்டின் முதல் சில மாதங்களில், இராணுவம் மிகவும் கவனமாக பயணங்களில் ஈடுபட்டுக்கொண்டு ரோந்து நடவடிக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும், இராணுவத்தின் நடவடிக்கைகளை நெடுஞ்சாலைகளுக்கு அருகிலுள்ள பகுதிகளுக்கு மட்டுப்படுத்துவதன் மூலமும் இராணுவம் எதிர்கொள்ளும் அபாயங்களை குறைத்துக்கொண்டது.

1984 ஓகஸ்ட் 11, அன்று, பீரங்கிப் பிரிவுகளுக்கு சம்பளம் ஏற்றிச் சென்ற வாகனம் கண்ணிவெடியால் தகர்க்கப்பட்டதில் அதில் பயணித்த ஆறு வீரர்கள் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாண இராணுவத் தளபதி பிரிகேடியர் ஏ. ஆரியப்பெரும 1984 நவம்பர் 09-ம் திகதி தேடுதல் கடமையில் ஈடுபட்டிருந்த போது பயங்கரவாதிகளால் புதைக்கப்பட்டிருந்த கிளேமோர் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

பிரிவினைவாத பயங்கரவாதிகளால் தங்களுக்கு கிடைத்த பெரும் வெற்றியாக கொண்டாடப்பட்ட இந்த சம்பவத்தின் பின்னர், இராணுவ வீரர்கள் இராணுவ உடமைகளையும், உயிர் இழப்புகளையும் குறைப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கையாக இராணுவ தளபாடங்களையும், இராணுவ வீரர்களையும் மற்றும் உணவுகளையும் கொண்டு செல்வதை விமானம் மூலம் மேற்கொண்டனர். ஆனால் இதன் மூலம் இராணுவத்தின் கட்டுபாட்டில் இருந்த நிலப்பிரதேசத்தின் பலம் குன்றியது. யாழ்ப்பாணக் கோட்டையில் நிலைகொண்டிருந்த இராணுவக் குழுக்கள் பயங்கரவாதிகளால் பாதிக்கப்படுவதற்கு சமமான நிலை உருவாகியதுடன் இராணுவம் யாழ்ப்பாணக் கோட்டையுடன் ஆகாயவழி மூலம் மட்டுமே தொடர்புகளைப் பேணியது. இந்த சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவந்த இராணுவத்தை சேர்ந்த தமிழ் அதிகாரிகளும் படையினரும் இராணுவத்தையோ அல்லது யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. அங்கிருந்த பொதுமக்கள், குறிப்பாக மத்தியதர வர்க்கத்தினர் யாழ்ப்பாணத்தையோ விட்டு வெளியேறி கொழும்பு அல்லது வெளிநாடுகளில் குடியேறினார்கள். 1983 கலவரத்தின் காரணமாக யாழ்ப்பாணம் சென்றிருந்த அகதிகளும் இயன்றவரை விரைவாக மீண்டும் கொழும்பில் குடியேறினர். இதன் காரணமாகவே 1985-ம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தின் சனத்தொகை துரிதமாக வீழ்ச்சியடைந்தது.

முக்கிய பொருளாதார மையங்கள் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கிய பயங்கரவாதிகள் 1983 ஜூன் 01-ம் திகதி யாழ்ப்பாணம் கோண்டாவிலில் யாழ்தேவி பயணிகள் ரயிலுக்கு தீ வைத்து சேதப்படுத்தியதுடன் 1984 ஜனவரி 21-ம் திகதி கொழும்பு ‘ஓபராய்’ ஹோட்டலில் வெடிகுண்டொன்றை வெடிக்கச் செய்து சேதத்தை உண்டு பண்ணினர். 1985 ஜனவரி 19 அன்று, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பை நோக்கிச் சென்ற ஒரு இரவு அஞ்சல் புகையிரதம் முருகண்டியில் வெடிக்க வைத்ததில் விடுமுறையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டருந்த 27 பாதுகாப்புப் படையினரும் 11 தமிழ் பொதுமக்களும் கொல்லப்பட்டனர். 13 பெட்டிகளைக் கொண்ட ரயிலின் மூன்று பெட்டிகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டதுடன், ஒன்பது பெட்டிகளும் சேதப்படுத்தப்பட்ட இந்தப் பயங்கரவாதத் தாக்குதலினால் சுமார் 40 மில்லியன் ரூபா நட்டமேற்பட்டது என மதிப்பிடப்பட்டது. இந்த நாசத்தை டெலோ இயக்கம் மேற்கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், எல்.ரி.ரி.ஈ. தலைவருக்கு மிக நெருக்கமானவரான பி. பத்மநாபன் சிங்கப்பூரை தளமாகக் கொண்ட கடற்படை வலையமைப்பைப் பயன்படுத்தி ஹெராயின் போதைப்பொருள் கடத்தலின் மூலம் வருமானமீட்டி அந்தப் பணத்திலிருந்து ஆயுதங்களையும், இலகுரக மோட்டார்கள் மற்றும் வெடிமருந்துகளையும் வாங்கி எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கு விநியோகித்தார். காலப்போக்கில், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சோவியத் யூனியன் மற்றும் குர்திஷ் நாடுகளில் இருந்து கனரக ஆயுதங்களையும் ஏவுகணைகளையும் பி. பத்மநாபனால் வாங்க முடிந்தது. அவ்வாறு பெற்றுக்கொண்ட வெடிமருந்துகளையும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அலுமினியத்தையும் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் மோட்டார் குண்டுகளைத் தயாரிக்கத் தொடங்கிய எல்.ரி.ரி.ஈ. அமைப்பு, பின்னர் தயாரிப்பு

களை மிகவும் உயர் நிலைக்கு மேம்படுத்தியதைக் காண முடிந்தது.

1985 மார்ச்சில், முல்லைத்தீவு பகுதியை இலக்குவைத்த எல்.ரி.ரி.ஈ. அமைப்பால் முல்லைத்தீவு, கொக்கிளாய், மன்னார், பேசாலை பகுதியைச் சேர்ந்த 12 இராணுவத் தினரையும் ஏப்பிரல் 26 அன்று மூதூர் முகாமைச் சேர்ந்த



ஆறு இராணுவத்தினரையும் ஒரே நேரத்தில் கொன்றது. இவ்வாறு ஒவ்வொரு முறையும் இராணுவம் தாக்கப்பட டும்போது, எல்.ரி.ரி.ஈ. அமைப்பினரையும் காயமுறச் செய்ய முடிந்ததுடன் சில சமயங்களில் பலரைக் கொல் லவும் படையினரால் முடிந்தது.

ஆரம்பத்தில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வாழ்ந்த சிங்கள மக்கள் மீது நிகழ்த்தப்பட்டு வந்த பயங்கரவா தத் தாக்குதல்கள் அதன் பின்னர் அதற்கும் அப்பால் உள்ள பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் மீதும் முன் னெடுக்கப்பட்டன. அவ்வாறான முதலாவது தாக்குதல் 1985 மே 14 அன்று அனுராதபுரத்தில் நடந்தது. அங்கு எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகள் இராணுவத்தினரைப் போல வேடமணிந்து கடத்தப்பட்ட ஒரு பஸ்ஸின் மூலம் அநுரா தபுரம் நகருக்குள் புகுந்து பஸ் நிலையத்தில் இருந்த பயணிகள் மீது தானியங்கி ஆயுதங்களால் இடைவிடா மல் துப்பாக்கிச் சூடு நடத்தி ஸ்ரீ மகா போதிக்குச் சென்று அங்கிருந்த சுமார் 150 பௌத்த பிக்குகளையும் யாத்ரீகர்களையும் சுட்டுக் கொன்றனர். ஸ்ரீ மகா போதி ஆலயமும் பயங்கரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டில் சேதப்படுத்தப்பட்டது. பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்ற பயங்கரவாதிகள் நொச்சியாகம பொலிஸ் நிலை யத்துக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் வில் பத்து பூங்காவுக்குள் நுழைந்து 18 ஊழியர்களை சுட்டுக் கொன்றனர்.

371 1983 ஜூலை கலவரங்களின் விளைவாக தமிழ் மக்கள் இந்தியாவிடம் தஞ்சம் கோரி தமிழ்நாட்டுக்கு ஓடியதால் அங்கு உருவான ‘அகதிகள் பிரச்சினை’ இலங்கையின் பிரிவினைவாதப் போராட்டத்தில் இந்தியா நேரடியாக தலையிடுவதற்கு வலுவான காரணியாக ஆனது. இந்த காலகட்டத்தில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடை யிலான இராஜதந்திர உறவுகளிலும் கருத்து வேறுபாடு கள் எழுந்ததுடன் இலங்கையின் நிலைமை இந்தியா வின் பல்வேறு துறைகளில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும், பிரிவினைவாதப் பிரச்சினை இலங் கைக்கு மட்டுமன்றி பிராந்தியத்தின் பிரச்சினையாக கருத வேண்டும் என்றும் சுட்டிக்காட்டிய பிரதமர் இந்- திரா காந்தி, தமிழ் மக்களை பாதிக்கும் பிரச்சினை களை ஆராயக் கூடிய அனுபவம் வாய்ந்த இராஜதந்திரி யும், நிர்வாக அதிகாரியுமான பார்த்தசாரதி அவரது பிர திநிதியாக இலங்கைக்கு அனுப்பப்பட்டார்.

கறுப்பு ஜூலைக்குப் பின்னர், ஜனாதிபதி ஜே.ஆர். ஜெய வர்த்தன 1984-ல், ஒரு சர்வகட்சி மாநாட்டை தொடங்கி னார். இதில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பங்கேற்க வில்லை. ஆனால் என ஏனைய 16 அரசியல் கட்சிகள், மத நிறுவனங்கள், பாரம்பரிய இன அரசியல் அமைப்பு கள் பங்கேற்றன. 1983-ம் ஆண்டின் பிற்பகுதியில், ஜனா திபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இந்தியப் பிரதமர் இந்- திரா காந்தியை மற்றும் அவரது விசேட தூதுவர் பீ.- பார்த்தசாரதி ஆகியோருடனான உடன்பாட்டுடன் தயா ரிக்கப்பட்ட ‘இணைப்பு சி’ என்று அழைக்கப்பட்ட பரிந்து ரைகள் இந்த உரையாடல்களுக்கு அடிப்படையாகக் பயன்படுத்தப்பட்டது. சாதாரண மாவட்ட சபைகளுக்குப் பதிலாக மக்களின் அங்கீகாரம் கிடைக்கும் சந்தர்ப்பத் தில் இரண்டு அல்லது மூன்று மாவட்ட சபைகளை ஒன்றி ணைக்கும் உரிமையை வழங்குவதற்கு ஜனாதிபதி முத லில் இந்த சர்வகட்சி மாநாட்டில் தான் இணங்கினார். இக்கலந்துரையாடலில் காணிப் பிரச்சினைக்கு தீர்வாக இன விகிதாசார அடிப்படையில் காணிகளை பிரித்துக் கொடுப்பதெனவும் மேற்சபையொன்றை அமைக்கவும் உடன்பாடு எட்டப்பட்டது. அதற்கமைய டிசம்பர் மாதம் 26-ம் திகதி இடம்பெறப்போகும் அமைச்சரவைக் கூட் டத்தில் இரண்டு சட்டமூலங்களை சமர்ப்பித்து அனுமதி யைப் பெற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதி திட்டமிட்டிருந்

தார். ஆனால் இறுதித் தருணத்தில் தமிழ் இளைஞர் பயங்கரவாத குழுக்களின் நிர்ப்பந்தங்களின் காரணமாக மரபான தமிழ் தலைவர்கள் அம்மசோதாக்களை நிராக ரித்ததால் ஜனாதிபதியின் முயற்சிகள் தோல்வியடைந் தன.

இதற்கிடையில் பிரதமர் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 1984 ஒக்ரோபர் 31 அன்று ராஜீவ் காந்தி பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட் டார். புதுடில்லியில் இலங்கை ஜனாதிபதிக்கும் இந்தி யப் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பின் விளைவாக இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ் பிரிவினைவாதிக ளுக்கும் இடையிலான உரையாடலுக்கு வழிவகுத்தது. அதன்படி, 1985 ஜூலை 13-லிருந்து ஓகஸ்ட் 12 வரை பூடானின் திம்பு நகரத்தில் இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்திய வெளி யுறவு செயலாளர் ரமேஷ் பண்டாரி பேச்சுவார்த்தை களை ஒருங்கிணைத்தார். இலங்கை அரசின் பிரதிநிதிக ளைக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, எல்.ரி.ரி.ஈ, புளாட், ஈரோஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகிய பிரி வினைவாத குழுக்களின் பிரதிநிதிகளும் பேச்சுவார்த் தையில் பங்கேற்றனர். ஆயுதம் தாங்கிய தமிழ் பயங்கர வாத குழுக்களுடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத்திய முதல் மாநாடு இதுவாகும். இலங்கை அரசாங் கத்தின் தூதுக்குழுவில் எச்.டபிள்யூ. ஜெயவர்தனா, எச்.- எல். த சில்வா, எஸ்.எல். குணசேகர ஆகிய சட்டத்தரணி கள் இருந்தனர். திம்பு பேச்சுவார்த்தைகளுக்கான முன் நிபந்தனையாக, இரு சாராரும் சகல விதமான ஆயுதத் தாக்குதல்களையும் கைவிடுவதற்கு உடன்பட்டதோடு மூன்று மாத யுத்த நிறுத்தத்துக்கு இணங்கினர். இந்த சந் திப்பின் போது இலங்கை அரசு நான்கு நிபந்தனை களை முன்வைத்தது.

- இலங்கை போராளி குழுக்களுக்கு உதவுவதை இந்- தியா தவிர்க்க வேண்டும்.
- இலங்கையில் தனி அரசை உருவாக்குவதற்கான முன்மொழிவுகள் மீள்பரிசீலிக்கப்பட வேண்டும்.
- இலங்கை அரசியலமைப்புக்கு எதிராக செயற்பட இடமளிக்கக் கூடாது.
- தமிழகத்தில் இருந்து தமிழ் போராளிக் குழுக்கள் இலங்கைக்கு வருவதை தடுக்க பாக்கு நீரிணை பகுதி யில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அர்த்தமுள்ள தீர்வின் அடிப்படையில் அமைய வேண்டிய நான்கு அம்சங்க ளையும் தமிழ் பிரதிநிதிகள் அறிவித்தனர்.

- இலங்கைத் தமிழர்கள் ஒரு தனியான இனம் என் பதை அங்கீகரித்தல்.
- 'தமிழர் தாயகம்' என்ற தனிப் பிரதேசம் இருப்பதை அங்கீகரித்தலும் அதன் பிராந்திய தொடர்ச்சியை அங்கீ கரித்தலும்.
- அதன் அடிப்படையில் தமிழ்த் தேசிய இனத்தின் மறுக்க முடியாத சுயநிர்ணய உரிமையை அங்கீகரித் தல்.
- இத்தீவைத் தமது நாடாகக் கருதும் சகல தமிழர்க ளுக்கும் பூரணப் பிரஜாவுரிமையையும் அடிப்படை உரி மைகளையும் அங்கீகரித்தல்.

எழுந்திருந்த பிரிவினைவாத பிரச்சினைக்குத் தீர்வாக சர்வகட்சி மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட அதிகாரப் பரவலாக்கலுக்கான முன்மொழிவுகளை இலங்கை அர சாங்கம் திம்பு பேச்சுவார்த்தையின் போது முன்வைத் தது. எனினும் அவை தமிழ் பிரிவினைவாத குழுக்களால் நிராகரிக்கப்பட்டதுடன், இந்த குழுக்கள் முன்வைத்த மேற்கண்ட விடயங்களும் இலங்கை அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டன. இதனால் பேச்சுவார்த்தை முறிந் தது.

திம்பு பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததன் பின்னர் இந்நெருக்கடியைத் தீர்க்க 'டெல்லி சமரசம்' என்ற பரிந் துரைகளை பிரதமர் ராஜீவ் காந்தி தயாரித்தார். மாவட் டத்திற்கு பதிலாக மாகாணத்தை இலங்கையின் அதிகா ரப் பரவலாக்கத்துக்கான அலகாகப் பயன்படுத்தவும், மிகவும் பரவலாக அதிகாரத்தை பகிரவும் திட்டமிடப் பட்ட அந்தத் திட்டத்தைப் பற்றி 1985 ஜனவரி மாதம் டெல்லி நகரத்தில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா- வும், பிரதமர் ராஜீவ் காந்தியும் பேச்சுவார்த்தை நடத்தி னர்.

இதனையடுத்து ரொமேஷ் பண்டாரி இலங்கைக்கு வந்து பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண புதிய திட்டமொன்றுக் கான இணக்கத்தில் ஜனாதிபதியை இணங்க வைத்தார். இந்தத் தீர்வை ஆரம்பத்தில் தமிழர் விடுதலைக் கூட் டணி ஏற்றுக்கொண்டிருந்த போதும் பயங்கரவாதிகளின் நிர்ப்பந்தத்தின் காரணமாக 1985 டிசம்பரில் அவ்வுடன் பாட்டிலிருந்து விலகியது. இந்தியாவுக்கும் இலங்கைக் கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் சுமூகமாக இருப்பதாகத் தோன்றினாலும் தமிழ் பிரிவினைவாதிக ளுக்கு நிதி சேகரிப்பதற்கும், பயிற்சி அளிப்பதற்கும் ஒரு மையமாக தமிழ்நாடு தொடர்ந்து வருவதை அம் மா நில அரசு இடமளித்து வந்ததுடன் எம்.ஜீ. ராமச்சந்திரன் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி உதவி செய்து வந் தார்.

பயங்கரவாதிகளுக்கும், அரசுக்கும் இடையே சமாதா னத்தை ஏற்படுத்த இந்திய அரசின் தலையீட்டுடன் பேச் சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால் எல்.ரி.ரி.ஈ. இயக் கம் தொடர்ந்தும் சிங்களக் கிராமங்களுக்குள் புகுந்து அங்குள்ள மக்களைக் கொன்று குவிப்பதை தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. எல்.ரி.ரி.ஈ. இயக்கம் 1985 யூலை 04-ம் திகதி திருகோணமலையில் தெஹிவத்த என்கிற சிங்கள கிராமத்துக்குள் நுழைந்து அங்கு வாழ்ந்து வந்த 15 பேரை கொடூரமாகக் கொன்றது. அதே வருடம் ஓகஸ்ட் மாதம் 14-ம் திகதி அரந்தலாவையிலும் அதே மாதம் 18-ம் திகதியும், நவம்பர் மாதம் 11-ம் திகதியும் திருகோணமலையிலுள்ள நாமல்வத்த கிராமத்திலும்,

1986-ம் ஆண்டு பெப்ரவரி 19-ம் திகதி கந்தளாய் கிராமத்திலும் 44 சிங்களவர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

இதேவேளை 1986 மே மாதத்தில் மட்டும் தமிழ்ப் பயங்கரவாதிகள் பாரிய குண்டுவெடிப்புகளையும் தாக்குதல்களையும் நடத்தினர். மே மாதம் மூன்றாம் திகதி, எயார்-லங்கா விமான சேவைக்கு சொந்தமான ட்ரைஸ்டார் விமானம் கட்டுநாயக்கவில் வெடிக்க வைத்ததில் அதிலிருந்த 21 பயணிகள் கொல்லப்பட்டதோடு பெருந்தொகையானவர்கள் படுகாயமடைந்தனர். அதே நாளில் திருகோணமலை ஆனந்தகுளம் கிராமம் ஒன்றில் புகுந்து 17 சாதாரண பொதுமக்களைக் கொன்றனர். அடுத்த நாள் அவர்கள் திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் நான்கு கிராமவாசிகளையும் கொன்றனர். மே 07 அன்று, கொழும்பில் உள்ள மத்திய தந்தி அலுவலகத்தின் மீது பயங்கரவாதிகள் ஒரு குண்டை வெடிக்கச் செய்ததில் அங்கு பணிபுரிந்த ஊழியர்களும் தமது கருமங்களை ஆற்ற வந்த சாதாரண பொதுமக்கள் உட்பட 14 பேர் கொல்லப்பட்டனர். இத் தாக்குதலில் 100-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். மே 25 அன்று, மகா திவுல்-வெவ பிரதேசத்தில் 20 கிராமத்தவர்கள் கொல்லப்பட்டதோடு அதே தினம் கந்தளாய் நகரில் ஒரு குண்டை வெடிக்கச் செய்து 16 பேரைக் கொன்றனர். மே 30 அன்று, கொழும்பில் யானைமார்க் மென்பானக் கம்பனிக்கு அருகில் குண்டு வெடித்ததில் 11 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறு அவர்கள் இடைவிடாது தொடர்ச்சியாக திருகோணமலை, பொலன்னறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, அனுராதபுரம் போன்ற பிரதேசங்களில் உள்ள சிங்கள கிராமங்களுக்குள் புகுந்து வாள், கத்தி, கோடரி போன்ற ஆயுதங்களால் கிராம மக்களை வெட்டிக் கொத்தி கொன்றனர்.

376 1986-ம் ஆண்டளவில் எல்.ரி.ரி.ஈ. அமைப்பு கடற்புலிகள் பிரிவை நிறுவியதுடன் அவர்கள் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஆயுதங்களைக் கொண்டு செல்ல அதிவேக படகுகளைப் பயன்படுத்தினர். 1986-ம் ஆண்டளவில் கடற்புலிகள் பிரிவை இந்த ஆயுதங்களை கொண்டு செல்ல மட்டுமன்றி இலங்கை அரசாங்கத்தின் கடற்படையைத் தாக்கவும் பயன்படுத்திய அவர்கள், உலகின் பல நாடுகளிலிருந்தும் எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கு ஆயுதங்களைக் கொண்டு வரக்கூடிய ஒரு கடற்படையை உருவாக்கிக் கொண்டிருந்தனர். தரையில் அரசாங்கத்தின் காலாட்படையுடன் மோதுவதைப் போலவே, கடலில் கடற்படையை எதிர்த்துப் போராட போதுமான பலம் கொண்ட ஒரு கடற்படையை எல்.ரி.ரி.ஈ. இயக்கம் கட்டியெழுப்பி இருந்தமை அரசுக்கு பெரும் சவாலாக அமைந்தது. வடக்கில் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்த நிலையில், யாழ்ப்பாணத்தில் அரசாங்கம் தனது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக முழு இராணுவப் பலத்தையும் பிரயோகித்து பலாலியில் இருந்து யாழ்ப்பாண நகரம் வரை கைப்பற்றுவதற்கான நடவடிக்கையை ஒழுங்கு செய்தது.

1986 நடுப்பகுதியில், யாழ்ப்பாணக் கோட்டையில் நிலைகொண்டிருந்த இராணுவக் குழுவின் மீது அடிக்கடி மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டதில் இராணுவத்தினர் பலரை பயங்கரவாதிகளால் காயப்படுத்த முடிந்தது. அந்த ஆண்டு இறுதியாகும் போது, வடக்கு, கிழக்கில் ஒரே மாதத்தில் 25 முதல் 30 படையினர் குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்கானார்கள். தடைகள் எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்த நாளாந்தம் காலையில் ரோந்து சேவை மேற்கொள்ளப்பட்டன. இதை அறிந்த பயங்கரவாதிகள் ரோந்துப் படையினரைத் தாக்கத் தொடங்கினர். ரோந்துப் படையினர் பயங்கரவாதிகளால் இலக்குவைக்கப்படுகையில் இராணுவ அதிகாரிகள் அந்த பயங்கரவாத தாக்குதல்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான ஒரு நடவடிக்கையாக ‘வி’ வடிவம் எனப்படும் யுத்த தந்திரோபாயத்தின் மூலம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலடி கொடுத்தனர். இவ்வாறான பரிசோதனைகளையும், அனுபவங்களையும் வளர்த்துக்கொண்டு, பயங்கரவாதிகளுக்கு எதிர்த் தாக்குதல்களை நடத்தத் தொடங்கிய ராணுவம், ரோந்து செல்லும் பகுதிகளில் தமது பலத்தையும் நிலைநாட்டியதோடு, எதிரிகளின் காப்பரண்களைச் சுற்றிவளைக்கவும் முடிந்தது.

ஜே.ஆர்.-க்கும் ராஜீவ் காந்திக்கும் இடையில் தொடர்ச்சியாக கடிதங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்ட பின்னர், இலங்கையில் அதிகாரப் பகிர்வு குறித்து இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடந்தன. 1986 ஓகஸ்ட் முதல் ஒக்ரோபர் வரை நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டிலும் அவர்களது முன்மொழிவுகளும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. மாநாட்டில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளை உள்ளடக்கிய 50 பக்க ஆவணத்தில், அரசியலமைப்பு திருத்தத்துக்கு ஊடாக அப்போது தீவிரமடைந்திருந்த இலங்கையின் பிரிவினைவாத பிரச்சினையை தீர்ப்பதற்கு பொருத்தமானதாகக் கருதப்பட்ட யோசனைகள் முன்வைக்கப்படிருந்தன. 1986 நவம்பர் 17 அன்று, இந்தியாவின் பெங்களூரில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் (தெற்காசிய ஒத்துழைப்பு மாநாடு) கலந்துகொண்ட ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் இலங்கையில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் மேலதிக கலந்துரையாடல்கள் நடந்தன. வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பது, அந்த மாகாணங்களைத் தமிழர் தாயகமாக அங்கீகரித்தல் போன்ற விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன. 1986-ம் ஆண்டின் இறுதியில், வீ. சிதம்பரம், கத்வார் சிங் ஆகிய இரு இந்தியப் பிரதிநிதிகள் இரு நாடுகளின் தலைவர்களிடையே உடன்பாட்டை எட்டுவதற்காக மூன்று முறை இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

இந்திய வெளியுறவு அமைச்சர் நத்வார்சிங் எல்.ரி.ரி.ஈ. அமைப்புடன் தனியாக கருத்துகளை பரிமாறிக்கொண்டிருந்த வேளை தமிழக முதல்வர் எம்.ஜீ. இராமச்சந்திரனும் பிரதமர் ராஜீவ் காந்தியின் அறிவுறுத்தலின் பேரில் தனியாக பேச்சுவார்த்தை நடத்தினார். இரு நாடுகளின் தலைவர்களுக்கிடையேயான பேச்சுவார்த்தையின் விளைவாக, 1986 டிசம்பர் 19 அன்று மற்றொரு திட்டமொன்று வெளியிடப்பட்டது. அதன்படி துணை ஜனாதிபதி பதவியொன்றை உருவாக்கி, தமிழ் தலைவர் ஒருவ

ருக்கு வழங்குவது உட்பட ஆறு முன்மொழிவுகள் முன் வைக்கப்பட்டன. இந்திய அழுத்தங்களுக்கு மத்தியில் பயங்கரவாத பிரிவினைவாதிகளுக்கு சாதகமாகும் வகையில் தயாரிக்கப்பட்ட இந்த முன்மொழிவுகளை பிர தமர் ரணசிங்க பிரேமதாசா உள்ளிட்ட ஜே.ஆர். ஜெய வர்த்தன அரசாங்கத்தில் இருந்த அமைச்சர்கள் சிலரும் நிராகரித்ததுடன், பிரபாகரன் உள்ளிட்ட பயங்கரவாதிக ளின் சம்மதத்தை பெறுவதற்கும் இந்திய அரசாங்கத் தால் இயலாமல் போனது.

சமாதானத்தை கட்டியெழுப்புவதற்காக நடத்தப்பட்ட எந் தவொரு பேச்சுவார்த்தையையும் செவிமடுக்காத பயங் கரவாத குழுக்கள் தொடர்ந்தும் நாசகரத் தாக்குதல் களை நடத்தி வந்ததுடன், இலங்கை அரச படைகளும் அவற்றைத் தடுக்க பல படை நடவடிக்கைகளை முன் னெடுத்தன. இக்காலகட்டத்தில் இலங்கை அரசுப் படை கள் பயங்கரவாதத்துக்கு எதிராக நடத்திய சமர்கள் 'முதலாம் ஈழப் போர்' என்று அழைக்கப்பட்டது. 1986-ம் ஆண்டு நவம்பர் 14-ம் திகதி மட்டக்களப்பில் ஒரேசன் கிரீன் பெரட், இராணுவ நடவடிக்கையும் அதே மாதம் 23-ம் திகதி யாழ்ப்பாணத்தில் பெண்டம் ஸ்ரோப் இரா ணுவ நடவடிக்கையும், 1987 பெப்ரவரி 06-ம் திகதி யாழ்ப்பாணத்தில் 'ஜயன்ட் ஸ்டெப்' இராணுவ நடவடிக் கையும், 1987 பெப்ரவரி 07-ம் திகதி மன்னாரில் 'ரம்போ' இராணுவ நடவடிக்கையும் அரச படைகளால் முன்னெ டுக்கப்பட்டன. அன்றைய தினமே கிளிநொச்சியில் 'பெந் தர்' இராணுவ நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டது.

1983-ம் ஆண்டிருந்து இந்தியாவின் பாதுகாப்பின் கீழ் இருந்தபடி பயங்கரவாத நடவடிக்கைகளை வழிநடத்தி வந்த பிரபாகரன் 1987 ஜனவரி 06-ம் திகதி யாழ்ப்பாணத் திற்கு வந்தார். 1987 ஜனவரி 1-இலிருந்து எல்.ரி.ரி.ஈ அமைப்பு யாழ்ப்பாணத்தின் சிவில் அதிகாரத்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருப்பதாக அறிவித்தது. இதற்கமைய அவர்கள் தமது முதலாவது பொலிஸ் நிலையத்தை யாழ்ப்பாண மாவட்டம் ஆனைக்கோட்டை யிலும் இரண்டாவது பொலிஸ் நிலையத்தை மானிப்பாயி லும் நிறுவினர். இந்த பொலிஸ் நிலையங்களின் மூலம் யாழ்ப்பாண நகரில் வாகனப் போக்குவரத்தை கையாள் வதையும் அபராதங்கள் வசூலிப்பதையும் தொடங்கி யது. அவர்களின் நீதிமன்றங்கள் ஏலவே இயங்கிக் கொண்டிருந்ததுடன், போக்குவரத்து, உணவு விநியோ கம் மற்றும் ஊடகங்கள் போன்றவற்றை கையகப்படுத்தி யிருந்த எல்.ரி.ரி.ஈ அமைப்பு இலங்கை அரசின் இறை யாண்மைக்கு எதிராக செயற்பட்டுக்கொண்டிருந்தமை தெளிவாகியது. இந்நிலைமையை கட்டுப்படுத்துவதற் காக அரசாங்கம் முதலில் யாழ்ப்பாணத்திற்கு எரிபொ ருள் அனுப்புவதை மட்டுப்படுத்தி மின்சாரத்தை துண் டிக்கப்போவதாகவும் எச்சரித்தது. இதைனையடுத்து யாழ்ப்பாணத்தை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்பதற் காக அரசுப் படைகள் இராணுவ நடவடிக்கையை முன் னெடுத்தன. 17 இராணுவத் தளங்களைச் சேர்ந்த படை வீரர்கள் இந்த நடவடிக்கையில் பங்கேற்றதுடன் விமா னப்படையின் விசேட பங்களிப்பும் பெறப்பட்டது.

அரசாங்கப் படைகள் முன்னேறுவதைத் தடுப்பதற்காக பெப்ரவரி 04 அன்று நாவற்குழி இராணுவ முகாமைத் தாக்கத் திட்டமிட்டிருந்த எல்.ரி.ரி.ஈ. அமைப்பு, அதற் காக பயன்படுத்திய தண்ணீர் பவுசரில் இணைக்கப்பட்டி ருந்த குண்டு திட்டமிட்ட நேரத்துக்கு முன்னரே வெடித் துச் சிதறியதில் எல்.ரி.ரி.ஈ. தலைவர்கள் மூவர் உட்பட அருகில் இருந்த வீடுகளில் வசித்த சுமார் 40 பொதுமக் களும் கொல்லப்பட்டனர்.

எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கு எதிராக தொடர் படை நடவடிக் கைகளை முன்னெடுத்து வந்த அரசு 1987 பெப்ரவரி 15-ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் 'ஜயன்ட் ஸ்டெப் II', 1987 பெப்ரவரி 21-ம் திகதி அதே பிரதேசத்தில் 'ஜயன்ட் ஸ்டெப் III', 1987 மார்ச் 18-ம் திகதியும் 1987 ஏப்ரல் 22-ம் திகதியும் திருகோணமலையில் 'ஜயன்ட் ஹன்ட்', 'டே பிரேக், மே 06 'ரெட் மூன்' போன்ற இராணுவ நடவடிக் கைகளை மேற்கொண்டது.

இந்த வேளை, இந்திய அரசாங்கம் வெளிப்படையா கவே எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கு ஆதரவளித்ததுடன் வடக் கில் விதிக்கப்பட்டிருந்த எரிபொருள் கட்டுப்பாட்டை நீக் குமாறு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தியது. இதற் குப் பதிலளிக்குமுகமாக பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி எரிபொருள் வரம்பை தற்காலிகமாக இடைநிறுத்தி, 1987 ஏப்ரலில் சிங்கள தமிழ் புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு, அரசாங்கம் அந்த மாதம் 11-ம் தேதி முதல் 19-ம் தேதி வரை ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை அறிவித்தது. அந்த நேரத்தில், ஏப் ரல் 17 அன்று, திருகோணமலை ஹபரணை வீதியில் கித் துல் உத்துவே என்கிற இடத்தில் பயணிகள் பேருந்தின் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 127 பேர் கொடூரமாக கொல்லப்பட்டதுடன் ஏராளமானோர் காயம டைந்தனர். அந்த சூடு தணிவதற்குள் 20-ம் தேதி, ஜெயந்திபுரவில் உள்ள கிராமத்துக்குப் புகுந்து, 15 பொதுமக்களை வெட்டியும், சுட்டும் கொன்றனர். ஏப்ரல் 21 அன்று மாலை 5.00 மணியளவில், கொழும்பில் உள்ள புறக்கோட்டையில் அதிசக்தி வாய்ந்த வெடி குண்டை வெடிக்க வைத்ததில் 113 பொதுமக்கள் கொல் லப்பட்டதுடன் மறுநாள் காங்கேசன்துறை இராணுவ முகாமில் 13 வீரர்களைக் கொன்றனர்.

அதுவரை பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப் பாணத்தை விட்டு பயங்கரவாதிகளை வெளியேற்றுவதற் காக தேசிய பாதுகாப்புச் சபையின் திட்டமிடலினால் 1987 மே-யிலிருந்து ஜூன் வரை பாதுகாப்புப் படைகள் முறையாக திட்டமிட்ட 'ராட்சத நடவடிக்கை' எனப்படுகிற 'விடுதலை படை நடவடிக்கை' முன்னெடுக்கப்பட்டது. சுதந்திரத்தின் பின்னர் முதற்தடவையாக நாட்டில் இரா ணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட இந்த காலப்பகு தியில் ஜெனரல் சிறில் ரணதுங்க இராணுவத் தளபதியா கப் பதவியை வகித்தார். 'வடமராட்சி நடவடிக்கை' என்று அழைக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையின் போது வடக்கின் சிரேஷ்ட இராணுவ அதிகாரியான பிரி கேடியர் ஜெரி சில்வா முழு நடவடிக்கையையும் மேற் பார்வை செய்ததோடு, பிரதான நடவடிக்கைக்கு பிரிகே டியர் டென்சில் கொப்பேகடுவ மற்றும் கேர்ணல் விஜய விமலரத்ன ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் இரண்டு

பிரிகேடியர் படையணிகள் அனுப்பப்பட்டன. தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் மேற் பார்வையின் கீழ் 1987 மே 26 அன்று தொடங்கிய இந்த நடவடிக்கையில் நான்கு படையணிகளைச் சேர்ந்த சுமார் 8,000 படையினர் பங்கேற்றனர். அதன்படி, லெப்டி னன்ட் கேர்ணல் விபுல் போதேஜுவின் மற்றும் லெப்டி னன்ட் கேர்ணல் வசந்த பெரேரா ஆகியோரின் கட்டளை யின் கீழ் முதலாவது மற்றும் 5-வது கெமுனு ஹேவா படையணிகளும், லெப்டினன்ட் கேர்ணல் சதீஸ் ஜயசுந்-தர மற்றும் மேஜர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் கட்டளையின் கீழ் முதலாவது, மூன்றாவது கஜபா படை யணிகளும், லெப்டினன்ட் கேர்ணல் சரத் பொன்சேகா-வின் கீழ் முதலாவது சிங்க படையணியும், லெப்டினன்ட் கேர்ணல் நாரதா விக்ரமரத்ன தலைமையிலான இலங்கை காலாட் படையணியின் 3-வது படைப்பிரிவும் யுத்தக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தது. லெப்டி னன்ட் கேர்ணல் நீல் டயஸ் தலைமையிலான 4-வது பீரங்கிப் படையணியும், லெப்டினன் கேணல் சிறி பீரிஸ் தலைமையிலான 6-வது பீரங்கி படையணியும் இந்த சம ரில் பங்களித்தன. யாழ்ப்பாண பாதுகாப்பு தலைமைய கத்தின் தலைமை பதவி நிலை அதிகாரியாக இருந்த லெப். கேணல் லொஹான் குணவர்தன நடவடிக்கை வட மராட்சியை திட்டமிட்டு ஒருங்கிணைத்தார்.

1987 மே 26 அன்று, வடமராட்சி படை நடவடிக்கையை ஆரம்பித்து, குறிக்கப்பட்ட நிலையங்களில் தஞ்சமடை யுமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுகின்ற துண்டுப் பிரசுரங்கள் யாழ்ப்பாணம் முழுவதும் வான் வழி மூலம் வீசப்பட்டன. இந்த நடவடிக்கையின் ஆரம்பத்தில், யாழ்ப்பாணத்தின் சக்திவாய்ந்த பயங்கரவாத மைய மான வல்வெட்டித்துறை வீழ்ந்தது. அதே நேரத்தில், இந் தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இந்த நடவடிக்கைக்கான தனது எதிர்ப்பை விளக்கி ஒரு அறிக்கையை வெளியிட் டார்.

381 வடமராச்சி இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட முழுக் காலப்பகுதியிலும் விமானப்படை; காலாட்ப டைக்கு அனைத்து ஆதரவையும் வழங்கியதுடன் வான் தாக்குதலுக்கான இடங்களைக் காட்டும் 'பந்து வரைப டம்' என்று அழைக்கப்படும் வரைபடமொன்றை இரு படைகளும் இணைந்து முன்கூட்டியே தயாரித்து வைத் திருந்தனர். முக்கிய இடங்களில் வட்டக் குறிகளையும் எண்களையும் கொண்ட வரைபடத்தின்படி படை நடவ டிக்கை மேற்கொள்கிறபோது வான்படை தாக்குதல் நடத்த வேண்டிய வட்டத்தின் எண்ணை மட்டும் குறிப்பி டுவதற்கூடாக அவசியப்பட்ட இடத்திற்கு வான்வழித் தாக்குதலை நடத்த விமானப்படை திட்டமிட்டிருந்தது. இதன் மூலம் வான்வழித் தாக்குதல்களை பயங்கரவாதி கள் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு இருந்த வாய்ப்பு களையும் பொதுமக்களின் உயிரிழப்புகளைத் தடுக்க வும் இயன்றது.

இந்த பந்து வரைபடம், வடமராட்சி நடவடிக்கைக்குப் பின்னர் சுமார் 25 ஆண்டுகள் பயங்கரவாத எதிர்ப்புத் தாக்குதல்களில் விமானப்படைக்கும் காலாட்படைக்கும் இடையே வினைத்திறனான உறவினைப் பேணுவதற்கு பாதுகாப்புப் படைகளால் தொடர்ச்சியாக கையாண்ட ஒரு வெற்றிகரமான யுக்தியாகவும் அமைந்திருந்தது.

வடமராட்சி நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் எதிர் கொண்ட பாரிய சவால்களில் ஒன்று வேலுப்பிள்ளை பிர பாகரனின் பிறப்பிடமான வல்வெட்டித்துறை பிரதேசத் திற்கு அப்பால் அமைந்திருந்த தொண்டமானாறு பாலம், எல்.ரி.ரி.ஈ. அமைப்பினரால் வெடிக்கவைக்கப்பட்டதுடன் சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான கண்ணிவெடிகளை புதைத்து வைத்ததுமாகும். மேஜர் லக்கி ராஜசிங்கவின் தலைமையில் இலங்கை பொறியியல் படையணியின் படையினர் அப்பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றி அந்நிலத்தை பாதுகாப்பான நிலைக்கு மாற்றினர். அக்க டமையின் போது 42 வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தடைகளைப் போல எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களால் பதுங்கு குழிகளில் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதல் களையும் எதிர்கொண்டு முன்னேறியதில் மே 29-ம் திக தியாகும் போதும் பயங்கரவாதிகளை தோற்கடித்து வல் வெட்டித்துறை, உடுப்பிட்டி, பருத்தித்துறை போன்ற பகு திகளின் அதிகாரத்தை கைப்பற்ற அரச படைகளால் முடிந்தது. வடமராட்சிப் பிரதேசத்தில் பிரபாகரனையும் அவரது சகாக்களையும் சுற்றிவளைப்பதற்கு பெருந் தொகையான துருப்புக்கள் தேவைப்பட்ட போதிலும், இராணுவத்திடம் அத்தகைய படை இருக்கவில்லை. யாழ் தீபகற்பம் முழுவதும் எல்.ரி.ரி.ஈ. பிடியிலிருந்து மீட் கும் நோக்கில் வடமராட்சி நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் 1987-ம் ஆண்டு ஜுன் மாதம் 03-ம் திகதி ஆரம் பிக்கப்பட்டது. வடமராட்சி நடவடிக்கை வெற்றிகரமாக முன்னேறிச் சென்றுகொண்டிருந்த நிலையில், யாழ்ப்பா ணம் இலங்கை அரச படைகளின் கைகளுக்கு செல் வதை அனுமதிக்க இந்தியா தயாராக இல்லை என்ற, பிரதமர் ராஜீவ் காந்தியின் செய்தி, இலங்கைக்கான இந் திய உயர்ஸ்தானிகர் ஜெ.என். டீக்சித்துக்கு ஊடாக ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு அறிவிக்கப்பட் டது.

385 இறையாண்மை கொண்ட நாடான இலங்கையில் நேர டி யாக இராணுவ ரீதியாக தலையிடுவது நியாயமானது என்பதைக் காட்டும் வகையில், ஏற்கனவே இந்தியாவில் ஏராளமான இலங்கை அகதிகள் இருப்பதாலும், அத்த கைய நடவடிக்கையால் அனாதரவாகும் ஏராளமான மக் கள் இந்தியாவில் அகதிகளாக மாற வாய்ப்புள்ளதாலும் இது இந்தியா எதிர்கொள்ள வேண்டிய கடினமான சூழ் நிலை என்று இந்தியா கூறியது. வடமராட்சி இராணுவ நடவடிக்கை தொடங்குவதற்கு முன்பு, 140,000 இலங்கை அகதிகள் இந்தியாவில் இருப்பதாக நத்வர்-சிங் மக்களவையில் அறிவித்திருந்தார். வடமராச்சி இரா ணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பா ணத்தில் பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்துள் ளதாகவும், இலங்கை அரசாங்கம் வடக்கிற்கு போதிய ளவு உணவைக் கொண்டு செல்வதில்லை என்றும் இந் திய அரசாங்கம் தெரிவித்தத்துடன் பசியால் வாடும் வடக்கு மக்களுக்கு உணவை வழங்க அனுமதிக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை வைத்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் அவ்வாறான ஒரு பிரச்சினை இல்லை என்று இலங்கை வெளியுறவு அமைச்சர் பதில

ளித்தார். எனினும், இந்திய அரசாங்கம் கடல் வழியாக உணவுத் தொகுதியை அனுப்பப் போவதாக இலங்கை ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் விதமாக இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் படகுகள் கண்டுபிடிக்கப்பட்டால், அவற்றின் மீது சர்வதேச சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இலங்கை அதிகாரிகளின் மேற்பார்வையல்லாமல் எந்தவொரு பொருட்களும் தரையிறக்க அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் இலங்கை அமைச்சரவை mnus அறிக்கையின் மூலம் தெரிவித்தது.

1987-ம் ஆண்டு ஜூன் மாதம் 03-ம் திகதி இலங்கையை நோக்கி வந்துகொண்டிருந்த பெருமளவு படகுகள் கச்சத்தீவின் அருகே இரு நாடுகளின் கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது. அப்போதைய வடக்கு கடற்படைத் தளபதியாக இருந்த கொமடோர் (கடற்படை களத் தளபதி) மொஹான் சமரசேகர 'எடிதர' என்ற கடற்படைக் கப்பலைப் பயன்படுத்தி இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு இந்தியா அனுப்பிய உணவு உதவிகள் கடலிலேயே நிறுத்தபட்ட நிலையில் மறுநாள் விமானம் மூலம் அவை அனுப்பப்படும் என்று இந்தியப் பிரதமர் அறிவித்தார். இந்த நடவடிக்கை இலங்கையின் இறையாண்மையை மீறும் செயல் என்று ஜனாதிபதி ஜெயவர்தன தெரிவித்த போதிலும், அதே நாள் மாலை ஐந்து மணியளவில் சர்வதேச சட்டத்தை மீறி இலங்கை வான்பரப்பில் ஐந்து போக்குவரத்து விமானங்களும் நான்கு மிராஜ் 2000 ரக போர் விமானங்களும் இலங்கையின் வான்பரப்புக்குள் நுழைந்தன. வடமராட்சி, உரும்பிராய் மற்றும் காங்கேசன்துறை பகுதிகளில் ஒரு தொகுதி உணவும், ஏராளமான மருந்துகளும் விமானம் மூலம் வீசப்பட்டதாக பிரச்சாரம் செய்யப்பட்டது. இவ்வாறு வீசப்பட்ட பொருட்களின் அளவு எவ்வளவு என்பது பற்றி குறிப்பான விபரங்கள் இல்லை. வடமராட்சி நடவடிக்கை நிறுத்தப்பட்டதன் பின்னர், இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து, இடம்பெயர்ந்த மக்களுக்கு சில உணவுப் பொருட்களை முறைப்படி அனுப்ப இந்தியா நடவடிக்கை எடுத்தது.

386 ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சி என்று அழைக்கப்பட்ட அரசியல் வன்முறைச் செயல்களில், கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர் தயா பத்திரன 1986 டிசம்பர் 15 அன்று கொல்லப்பட்டார். இதே காலப்பகுதியில், கண்டி பல்லேகல இராணுவ முகாமுக்குள் திடீரென நுழைந்த ஜே.வி.பி கும்பலொன்று ரி-56 ரக துப்பாக்கிகள் உட்பட பல ஆயுதங்களை கைப்பற்றியிருந்தது. வடமராட்சி நடவடிக்கையின் போது இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்த நிலையில், ஜே.வி.பி.யினரால் 1987-ம் ஆண்டு ஜூன் மாதம் 07-ம் திகதி கட்டுநாயக்க விமானப்படைத்தளம் மற்றும் கொத்தலாவலை பாதுகாப்பு அறிவியல் பீடத்தின் மீதும் திடீர்த் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்த அனைவரையும் தேச விரோதிகளாக அறிவித்த ஜே.வி.பி.யினர் அவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை விதிப்பதாக அறிவித்தது. நிராயுதபாணிகள் ஒவ்வொரு நாளும் சுடப்பட்டோ, வெட்டப்பட்டோ அல்லது உயிருடன் எரிக்கப்பட்டு கொல்லப்பட்டதால் நாடு முழுவதும் பயங்கர நிலை பரவியது. இந்தக் காலகட்டத்தில், நூற்றுக்கணக்கான முக்கிய அறிஞர்கள், புத்திஜீவிகள், பௌத்த துறவிகள், பத்திரிகையாளர்கள், அரசியல் தலைவர்கள் உட்பட நாட்டின் பிற முக்கிய நபர்கள் நூற்றுக்கணக்கானோரைக் கொன்ற ஜே.வி.பி.யினர் கண்ணிவெடிகளையும் பயன்படுத்தினர். 1987 காலப்பகுதியில் ஜே.வி.பி.-யால் ஒரு துண்டுக் கடிதத்தின் மூலம் கடைகள், மருந்துவமனைகள், அலுவலகங்கள், வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றை மூட முடிந்ததுடன் போக்குவரத்து நடவடிக்கைகளை கிட்டத்தட்ட முழுமையாக சீர்குலைத்து, அதன் மூலம் முழு நாட்டினதும் சிவில் நிர்வாகத்தை முடக்கவும் முடிந்தது.

வடமரச்சி படை நடவடிக்கை இடைநிறுத்தப்பட்ட பின்னர், இலங்கை அரசாங்கத்தின் மீதான இந்திய அழுத்தம் தீவிரமடைந்ததுடன், புலிப் பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் மிகவும் மனிதாபிமானமற்றதாக மாறியது. 1987ம் ஆண்டு ஜூன் மாதம் 02 ம் திகதி ஹேகொட இந்திரசார தேரரின் தலைமையிலான நாற்பத்தைந்து மாணவ பிக்குகளும் பக்தர்களும் அடங்கிய குழுவொன்று பஸ்ஸில் தமது புனிதப் யாத்திரையை மேற்கொண்டிருந்த போது அரந்தலாவ நுவரத்தென்ன பிரதேசத்தை அண்மித்துக் கொண்டிருந்த போது எல்.ரி.ரி.ஈ அமைப்பினரால் மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டு இந்திரசார தேரரும், பக்தர்களும் பிக்குகளுமாக முப்பத்து நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகள் இன்னும் வலுவாக இருக்கும் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து படை நடவடிக்கைகளை விஸ்தரித்து வந்தார்கள். 1987-ம் ஆண்டு ஜூன் 18 அன்று, பாதுகாப்புப் படையினரால் திருகோணமலையில் 'கத் பஸ்டர்' படை நடவடிக்கையும், ஜூலை 06 அன்று முல்லைத்தீவில் 'வேல்ஷான்' படை நடவடிக்கையையும், ஜூலை 19 அன்று திருகோணமலையில் 'டைகர் சேர்ச்' நடவடிக்கையையும் தொடங்கினர்.

வடமராச்சி படை நடவடிக்கையின் போது பிரபாகரனின் சொந்த ஊரான வல்வெட்டித்துறை எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் பிடியில் இருந்து போனதை பொறுக்க முடியாத பயங்கரவாதிகள் சிங்களப் பகுதிகளையும், சிங்கள மக்களையும் அழிக்கும் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

வடமராட்சிப் போரில் அரசுப் படைகளின் வசம் வீழ்ந்த பகுதிகளை மீட்க மிகக் கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டது. ஜூன் 12 அன்று, யாழ்ப்பாணத்தில் உள்ள வயாவிளான், குரும்பசிட்டி மற்றும் கட்டுவன் ஆகிய இராணுவத் தளங்களின் மீது மோட்டார் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. நெல்லியடி முகாமில் எல்.ரி.ரி.ஈ.-யினர் முதன் முதலில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டனர். வடமராச்சி படை நடவடிக்கை நடந்து கொண்டிருந்த வேளை, நெல்லியடி மத்திய கல்லூரியின் கட்டட வளாகத்தில் படை முகாமை அமைத்துக் கொண்ட இராணுவத்தினர் 5-வது கெமுனு படையணி

யின் தலைமையகத்தை அங்கே நிலைகொள்ளச் செய்ததுடன், சுமார் 100 மேலதிக படையினரை அங்கு சேவையில் ஈடுபடுத்தினர். 1987-ம் ஆண்டு ஜுலை மாதம் 05-ம் திகதி இரவு, எல்.ரி.ரி.ஈ.-யினர் தாக்குதல் நடத்தினர். 'கப்டன் மில்லர்' என்று அழைக்கப்படும் முதலாவது தற்கொலை குண்டுதாரி, வெடிமருந்துகள் அடங்கிய டோசருடன் முகாமுக்குள் நுழைந்து, மூன்று மாடி கட்டடத்தை முற்றிலுமாக தரைமட்டமாக்கியதுடன் அந்த இடிபாடுகளுக்குள் சிக்கி 18 படையினர் கொல்லப்பட்டனர். வெற்றிகரமாக அத் தாக்குதலை எதிர்கொண்ட 5-வது கெமுனு படையணியின் மீதான பயங்கரவாத தாக்குதலில் 60 பேர் கொல்லப்பட்டனர். வடமராட்சியில் இருந்து தப்பியோடிய பயங்கரவாதிகள் ஏனைய பிரதேசங்களில் வன்முறைகளைத் தொடங்கியதை அடுத்து முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 24 மணி நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஓர் உடன்பாட்டை எட்டுவதற்காக இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில், பிரபாகரனையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்துவதற்காகவும், குடும்பத்தினரை இந்தியாவுக்கு அழைத்து வரவும் நடவடிக்கை எடுத்த பிரதமர் ராஜீவ் காந்தி, 1987-ம் ஆண்டு ஜுலை 24-ம் திகதியன்று இந்திய ஹெலிகாப்டரில் அவர்களை புதுடில்லிக்கு அழைத்து சென்று அங்குள்ள ஒரு முன்னணி ஹோட்டலில் தங்க வைத்து கலந்துரையாடினார்.

இலங்கை அரசும், இந்திய அரசும் இணைந்து தயாரித்திருந்த ஒப்பந்தத்திற்கு பிரபாகரனின் சம்மதத்தை பிரதமர் ராஜீவ் காந்தியால் பெற்றுக் கொள்ள முடிந்தது. எவ்வாறாயினும், முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்தை மேலும் ஆராய்ந்ததன் பின்னர், பிரபாகரன் இந்த ஒப்பந்தத்திற்கு உடன்பட முடியாது என்று அறிவித்தார். இது ராஜீவ் காந்தியை ஓர் இக்கட்டான நிலைக்கு தள்ளியது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைப்பதும், அந்தப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசாங்க இராணுவ தளங்களை மூடுவதும் பிரபாகரனுக்கு அவசியமாக இருந்தது. இந்த ஒப்பந்தத்திற்கு பிரபாகரனின் ஒப்புதலைப் பெறும் பொறுப்பை ஏற்றிருந்த இந்தியப் பிரதமர், அந்தப் பணியை நிறைவேற்ற இயலாமல் போனாலும், அமைச்சரவையின் ஒப்புதலுடன் எல்.-ரி.ரி.ஈ. அமைப்பின் எதிர்ப்புக்கு மத்தியில் அவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட முடிவு செய்தார்.

உத்தேச ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக 1987 ஜுலை 29 அன்று பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்பு வந்தார். அப்போது, பிரிவினைவாத விவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டுக்கு எதிராகவும், உத்தேச ஒப்பந்தத்திற்கு எதிராகவும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிக்குகள் தலைமையில் பொதுமக்கள் நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொண்டிருந்தனர். பிரதமர் ராஜீவ் காந்தியின் வரவேற்பு நிகழ்ச்சியில் இலங்கை அமைச்சரவையின் பாதி பேர் கூட கலந்து கொள்ளவில்லை. மேலும் பிரதமர் ரணசிங்க பிரேமதாச மற்றும் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகியோர் கடுமையாக எதிர்த்ததை அவதானிக்க முடிந்தது. கண்டி, அனுராதபுரம் மற்றும் காலி போன்ற நகரங்களில் ஒப்பந்த எதிர்ப்பு கலவரங்கள் கடுமையாக நடந்தன. ஜுலை 29, 1987 அன்று, பிற்பகல் 3:30 மணியளவில், ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, பிரதமர் ராஜீவ் காந்தி ஆகிய இருவரும் உத்தேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் பின்வரும் சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன:

- (அ) இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாரம்பரிய நட்புறவை வளர்த்தல், மேம்படுத்தல், பலப்படுத்துதல்.
- (ஆ) இலங்கையின் இனப்பிரச்சினைக்கும் அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் வன்முறைகளுக்கும் தீர்வு காணவேண்டிய அவசரத் தேவை.
- (இ) இலங்கையில் வாழும் அனைத்து இனக் குழுமங்களினதும் பாதுகாப்பு, செழிப்பு மற்றும் செழுமையை அடைதல்.

போன்றவை ஒப்பந்தத்தின் நோக்கங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நோக்கங்களை அடைவதற்காக, பின்வரும் அம்சங்கள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டன.

- 1.1 இலங்கையின் ஐக்கியம், இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றைப் பேணுதல்
- 1.2 இலங்கை சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகியோரைக் கொண்ட பல்லின, பன்மொழி சமூகங்கள் வாழும் நாடு என்பதை ஏற்றுக்கொள்தல்
- 1.3 ஒவ்வொரு இனக்குழுவும் தனக்கே உரித்தான கலாசார மற்றும் மொழியியல் அடையாளத்தைக் கொண்டுள்ளதெனவும் அவைகள் கவனமாகப் பேணப்படும் என்பதையும் அங்கீகரிக்கின்றது.
- 1.4 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களானவை இலங்கை தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடங்களாக எல்லாக் காலங்களிலும் அவர்களின் பிராந்தியத்தில் ஏனைய இனக்குழுக்களுடனும் அவர்கள் ஒன்றாக வாழ்ந்து வந்தார்கள் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றது.
- 1.5. இலங்கையின் ஐக்கியம், இறைமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பலப்படுத்துவதுடன், பல்லின, பல்மொழி, பல்மத, பன்மைச் சமூகத்தின் குணாம்சங்களைப் பேணுவதுடன், எல்லாப் பிரஜைகளும் சமத்துவமாகவும் பாதுகாப்பாகவும் ஒருமைப்பாட்டுடனும் வாழ்வதையும், தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதன் அவசியத்தை உணர்ந்துகொள்தல்.

2. இவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன.

- 2.1 ஒரே நிர்வாக அலகாக உருவாக்கக்கூடிய வகையில் அருகருகேயுள்ள மாகாணங்கள் ஒன்றிணைவதற்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு பொதுவாக்கெடுப்பு

மூலம் அவற்றைப் பிரிப்பதற்கும் இடமளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் முன்மொழிவதன் மூலம்,

- 2.2 கீழே உள்ள 2.8 பிரிவில் கூறப்பட்டுள்ளதன்படி மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் திகதியில் இருந்து 2.3-இல் தெரிவிக்கப்பட்டவாறு சர்வஜன வாக்குரிமை நடத்தப்படும் திகதி வரையான காலப்பகுதிக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படும் ஒரே மாகாண சபையைக் கொண்ட ஒரே நிர்வாக அலகாக இருக்கும். அத்தகைய அலகுக்கான ஓர் ஆளுநரும், ஒரு முதலமைச்சரும், ஓர் அமைச்சரவையும் நியமிக்கப்படும்.

- 2.3 (அ) மேலே 2.2-ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கிழக்கு மாகாணம் வடமாகாணத்துடன் கூட்டாக தொடர்ந்து ஆட்சி செய்யப்பட வேண்டுமா அல்லது கிழக்கு மாகாணம் ஓர் ஆளுநர், ஒரு முதலமைச்சர் மற்றும் ஓர் அமைச்சரவையைக் கொண்ட, தனியான மாகாண சபையைக் கொண்ட மற்றொரு நிர்வாக அலகாக இருக்க வேண்டுமா என்பதை கிழக்கு மாகாண மக்களால் தீர்மானிக்கப்படக் கூடியவகையில் 1988 டிசம்பர் 31 அல்லது அதற்கு முன்னர் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும். அவ்வாறான ஒரு மக்கள் கணிப்பொன்று அத்தகைய வாக்கெடுப்பு ஜனாதிபதியால் தனது தற்றுணிவின் படி ஒத்திவைக்கப்படலாம்.

- 2.4 இனக்கலவரம் அல்லது வேறு காரணங்களால் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் அத்தகைய சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களிக்கும் உரிமையைப் பெறுவர். அவர்கள் தங்கள் முந்தைய பகுதிகளுக்குத் திரும்புவதற்குத் தேவையான சூழல் உருவாக்கப்படும்.

- 2.5 சர்வஜன வாக்கெடுப்பானது பிரதம நீதியரசர் தலைமையிலான குழுவாலும் இலங்கை அரசாங்கத்தினால் தெரிவுசெய்யப்பட்டு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினராலும்; கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளால் தெரிவுசெய்யப்பட்டு, ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர் ஒருவரையும் கொண்ட ஒரு குழுவின் மேற்பார்வையின் கீழ் நடத்தப்படும்.

- 2.6 சர்வஜன வாக்கெடுப்பின் முடிவுகளைத் தீர்மானிப்பதற்கு சாதாரண பெரும்பான்மை போதுமானதாக இருக்கும்.

- 2.7 நாட்டின் தற்போதுள்ள சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படக்கூடிய கூட்டங்களும் பிற வகையான விளம்பரங்களும் சர்வஜன வாக்கெடுப்புக்கு முன்னர் அனுமதிக்கப்படும்.

- 2.8: அடுத்த மூன்று மாதங்களுக்குள் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் 1987 டிசம்பர் 31-ம் திகதிக்கு முன்னர் நடத்தப்படும். வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு இந்திய பார்வையாளர்கள் அழைக்கப்படுவார்கள்.

- 2.9: 1987 ஓகஸ்ட் 15-ம் திகதிக்குள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவசரகாலச் சட்டங்கள் நீக்கப்படும். இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 48 மணித்தியாலங்களுக்குள், நாடு பூராகவும் மோதல்கள் நிறுத்தப்படும். போராளிக் குழுக்களின் வசம் தற்போதுள்ள ஆயுதங்கள் அனைத்தும் ஒப்புக் கொள்ளப்பட்ட நடைமுறைக்கு அமைவாக இலங்கை அரசால் நியமிக்கப்படும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும். போர் நிறுத்தம் மற்றும் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர் 1987-ம் ஆண்டு மே 25 அன்று இராணுவம் மற்றும் அனைத்து பாதுகாப்புப் படையினரும் முகாம்களுக்குள் மட்டுப்படுத்தப்படுவர். ஆயுதங்களை ஒப்படைப்பதும் இராணுவ அதிகாரிகள் முகாம்களுக்குள் திரும்புகிற நடவடிக்கைகளும் போர் நிறுத்தப்பட்ட 72 மணி நேரத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

- 2.10: வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சட்ட அமுலாக்குவதற்கும், பாதுகாப்பைப் பேணுவதற்கும் நாட்டின் பிற பகுதிகளில் பயன்படுத்தப்படும் அரச நிறுவனங்களையும் நடைமுறைகளையும் இலங்கை அரசாங்கம் கவனித்துக் கொள்ளும்.

- 2.11: பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் ஏனைய அவசரகாலச் சட்டங்களின் கீழ் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கும் போராளிகளுக்கும் அச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட, வழக்குத் தொடரப்பட்ட அல்லது தண்டிக்கப்பட்டவர்களுக்கும் இலங்கை ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவார். போராளி இளைஞர்களை நாட்டின் பொது வாழ்வின் பிரதான நீரோட்டத்திற்கு மீண்டும் கொண்டு வருவதற்காக அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் விசேட முயற்சிகளை மேற்கொள்ளும். இந்த செயல்முறைக்கு இந்தியா ஆதரவளிக்கும்.

- 2.12 மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகள் இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏனையோரும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

- 2.13 இம்முடிவுகளுக்கான அடிப்படைக் கட்டமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டால், இலங்கை அரசாங்கத்தால் குறித்த முன்மொழிவுகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும்.

- 2.14 இந்த பரிந்துரைகள் இந்திய அரசால் அங்கீகரிக்கப்படுவதுடன் அவை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு உறுதுணையளிக்கும்.

- 2.15 04.05.1986 முதல் 19.12.1986 வரை விவாதிக்கப்பட்ட முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டது இத்தீர்மானம். இறுதி முடிவை எட்டாத மீதமுள்ள பிரச்சினைகளுக்கு இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட ஆறு வாரங்களுக்குள் இந்தியாவும் இலங்கையும் தீர்க்க வேண்டும். இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு நேரடியாக உதவும் என்ற

நிபந்தனைக்கு அவை உட்பட்டவை.

- 2.16: இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இந்த அடிப்படை கட்டமைப்பை இலங்கையில் உள்ள எந்த வொரு போராளிக் குழுவும் ஏற்றுக்கொள்ளாவிட்டால், இந்திய அரசு பின்வரும் முறையில் செயல்படும் என்ற நிபந்தனையும் தீர்மானத்தில் சேர்க்கப்பட்டது.

- (அ) இலங்கையின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப் புக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கங்களுக்காக இந் திய நிலப்பகுதி பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக் கைகளையும் இந்திய அரசு மேற்கொள்ளும்.

- (ஆ) தமிழ் போராட்ட நடவடிக்கைகளால் இலங்கைக்கு ஏற்படும் தாக்கத்தைத் தடுப்பதற்கு இந்திய கடற்படை யின் கடலோர காவல் படை இலங்கை கடற்படைக்கு ஒத்துழைக்கும்.

- (இ) இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற் காக இந்திய அரசிடமிருந்து இலங்கை அரசு இராணுவ உதவியைக் கோரும் பட்சத்தில், இந்திய அரசு இலங்கை அரசுக்கு அத்தகைய இராணுவ உதவிகளை வழங்குவதன் மூலம் இலங்கை அரசுக்கு உதவும்.

- (ஈ) தமிழ்நாட்டிலிருக்கும் இலங்கை அகதிகளை இலங் கைக்கு திருப்பி அனுப்புவதுடன், இந்நாட்டில் வசிக்கும் இந்திய குடிமக்களை இலங்கையிலிருந்து இந்தியா விற்கு திருப்பி எடுப்பது, இந்திய அரசால் துரிதப்படுத் தப்படும்.

- (உ) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் அனைத்து இனக் குழுக்களையும் சேர்ந்தவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இலங்கை அரசாங்க மும் இந்திய அரசாங்கமும் ஒத்துழைப்புடன் இயங்கும்.

- 2.17 இந்த உடன்படிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட வாக் களிப்பு செயன்முறைக்கு சுதந்திரமாகவும், பூரணமாக வும், நியாயமாகவும் பங்கேற்பதை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அனைத்து வாக்கா ளர்களுக்கும் இலங்கை அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கிறது. இந்த விடயத்தில் இலங்கை அரசுக்கு இந் திய அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

- 2.18 சிங்களம் இலங்கையின் அரசகரும மொழியாக இருத்தல் வேண்டும். தமிழும், ஆங்கிலமும் அரசகரும மொழிகளாக இருக்கும்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தான உடனேயே, எல்.ரி.ரி.ஈ. பல கோரிக்கைகளை முன்வைத்ததுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து அனைத்து வகையான இலங்கை துருப்புக்களையும் அகற்றுவது, அப்பிரதேசத் தில் சட்டம் ஒழுங்கை பேணுவதற்கான பாத்திரத்தை தம்வசம் ஒப்படைப்பதும் அதில் உள்ளடங்கும்.

இதனை விட வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப் பது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்புக்கு உடன்ப டாத பிரபாகரனுக்கு, தமிழர் தாயகமாக அவர்கள் கருதி வந்த சில பகுதிகளில் 1950-களின் முன்னரும், 1950-களின் பின்னர் மகாவலி திட்டத்தின் கீழ் குடியேற்றப் பட்ட சிங்களவர்களை வெளியேற்றி அவற்றில் தமிழர்க ளைக் குடியமர்த்த விரும்பினார்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இலங்கையை விட்டு வெளியேறுவ தற்கு முன், இலங்கை கடற்படையின் மரியாதை அணிவ குப்பின் போது, இந்த விவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டை பொறுத்துக்கொள்ளாத ஒரு கடற்படை வீர ரால் இந்தியப் பிரதமர் துப்பாக்கியால் தாக்கப்பட்டார். எனினும் அத்தாக்குதல் தவறியதால் எந்த சேதமும் ஏதும் ஏற்படவில்லை. எந்த வகையிலும் ஈழம் பற்றிய எண்ணக்கருவை கைவிடமாட்டோம் என்று 1987-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 04-ம் திகதி சுதுமலை ஆலய வளாகத்தில் பிரபாகரனால் அறிவிக்கப்பட்டது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட மறு நாள் அதிகாலையில், ஒப்பந்தப்படி இந்திய விமானப்ப டையின் பிரிவு ஒன்று யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் தரையிறங்கியது. இந்திய காலாட்படை யின் 54, 36-வது படையணிகளின் தலைமையிலான இரண்டு படைப்பிரிவுகளின் ஆயுதப் படைகளும் 340-வது சுதந்திர காலாட்படையையும் ஈடுபடுத்துவதோ இந் தியாவின் திட்டமாக இருந்தது. இந்திய கடற்படையின் பதினைந்து கப்பல்களும், 125 ரோந்து படகுகளும், விமானப்படையின் ஒன்பது விமானங்களும், 29 ஹெலி காப்டர்களும் அமைதி காக்கும் படையில் ஈடுபடுத்தப் பட இருந்தபோதும் காலாட்படை வீரர்களை ஏற்றிச் செல்வதைத் தவிர, இந்திய கடற்படை மற்றும் விமானப் படை ஆகியன அமைதி காக்கும் படையின் நடவடிக் கைகளில் பங்கேற்கவில்லை. ஒரு விரிவான திட்டம் இல் லாமல் அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் அவசர மாக தொடங்கப்பட்ட இந்திய அமைதி காக்கும் படை, ஆரம்பத்தில் இரண்டு காலாட்படை பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 50,000 காலாட்படையினரைக் கொண்டி ருந்தது.

இந்த ஒப்பந்தத்தின்படி, தமிழ் பயங்கரவாதிகளின் வன் முறையை நிறுத்துவதும், அப்பயங்கரவாத குழுக்களிடம் இருந்து ஆயுதங்களை இலங்கை அரசிடம் ஒப்படைப்ப தும் இந்தியாவின் முக்கிய பொறுப்பாக இருந்தது. வடம ராட்சி நடவடிக்கையின் போது மீட்கப்பட்ட பகுதிகளில் இருந்து இலங்கை இராணுவத்தை விலக்கி, வடக்கு - கிழக்கு மாகாணங்களை தற்காலிகமாக ஒன்றிணைத்து மாகாண சபைகளை உருவாக்குவதும் தமிழை உத்தி யோகபூர்வ மொழியாக்குவதும் இலங்கை அரசாங்கத் தின் முக்கிய பொறுப்பாகும்.

வடமராட்சி நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன் னர், இலங்கை இராணுவம் வடக்கு கரையோரமான தொண்டமானாறு, வல்வெட்டிதுறை மற்றும் பருத்தித் துறை ஆகிய பகுதிகளில் முக்கிய இடங்களில் படைப்பி ரிவுகளை இயக்கி வந்த போதும் ஒப்பந்தத்தின்படி, உடுப்பிடி, புலோலி போன்ற இரண்டு நகர்ப்புற படைப்பி ரிவுகளை மட்டுமே இலங்கை இராணுவம் விலக்கிக்

கொள்ள வேண்டியிருந்தது. இவ்விரு இடங்களிலும் 500-இற்கும் மேற்பட்ட படையினர் நிறுத்தப்பட்டிருந்ததோடு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 72 மணித்தியாலங்களுக்குள் பலாலி விமான நிலையத்திற்கு சென்று இந்திய இராணுவ விமானம் கொண்டு வந்திருந்த அந்நாட்டு விமானத்தின் மூலம் இரத்மலானை மற்றும் கட்டுநாயக்க விமான நிலையங்களுக்கு வந்தடைந்தனர். 13-வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளை நிறுவுவது, தமிழை உத்தியோகபூர்வ மொழியாக்குவது ஆகிய நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்தது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும், இந்திய அமைதி காக்கும் படையின் வருகையையும் எதிர்த்து மீண்டும் வன்முறையை கட்டவிழ்த்து விட்டிருந்த ஜே.வி.பி., இக்காலப்பகுதியில் தென்னிலங்கையில் ஒரு பயங்கரமான நிலைமையை உருவாக்கியிருந்தது. அரசால் ஜே.வி.பி.யினருக்கு பொது மன்னிப்பு வழங்க முயற்சிக்கப்பட்ட போதும் அதனை நிராகரித்த ஜே.வி.பி. 1978 ஒகஸ்ட் 18, அன்று, ஜனாதிபதியை படுகொலை செய்வதற்காக நாடாளுமன்றத்தில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கைக்குண்டு எறியப்பட்டது. இதன்போது மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் கீர்த்தி அபேவிக்ரம கொல்லப்பட்டதுடன், அமைச்சர் லலித் அத்துலத்முதலி படுகாயமடைந்தார். இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதனைத் தொடர்ந்து ஜே.வி.பி.யினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த வன்முறை நடவடிக்கைகளால் தென் பகுதி பொது வாழ்க்கை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது.

393 இந்திய அமைதிகாக்கும் படையின் வருகையைத் தொடர்ந்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருந்த பாதுகாப்புப் படையினர், அந்தப் பிரதேசங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு நாட்டின் பிற பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். ஜே.வி.பி.யால் மேற்கொள்ளப்பட்டிருந்த வன்முறைகளை நசுக்குவதற்காக அந்த இராணுவம் ஈடுபடுத்தப்பட்டதுடன் அந்த இராணுவத்துக்கும் ஜே.வி.பி-யினருக்கும் கடும் மோதல்கள் உருவானது.

1987-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 26-ம் திகதி பலாலி விமான நிலையத்தில் பயங்கரவாதிகள் ஆயுதங்களை பகிரங்கமாக ஒப்படைப்பதை அடையாளப்படுத்தும் வகையில் ஒரு நிகழ்வு நடைபெற்ற போதும் பயங்கரவாதிகளின் ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கான முறையான வேலைத்திட்டமோ ஒழுங்கோ அமைதி காக்கும் படையிடம் இருக்கவில்லை.

இந்திய 54-வது காலாட்படையின் 91-வது காலாட்படையணி விமானம் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்ததுடன், 76-வது காலாட்படை கடல் வழியாக முதலில் திருகோணமலைக்கும் வந்தடைந்ததுடன், 47-வது காலாட்படை வவுனியாவில் நிலைகொண்டது.

இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த காங்கேசன்துறை, பலாலியைச் சூழ்ந்த பகுதிகளில் இந்திய துருப்புக்கள் வான்வழியாக வந்து இலங்கை இராணுவத் தலைவர்களுடன் நல்ல ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியிருந்தபோதும், கடல் வழியாக திருகோணமலைக்கு வந்த இந்தியப் படைகள் உடனடியாக இலங்கை இராணுவத்துடன் நல்லுறவை ஏற்படுத்தவில்லை. இந்திய அமைதி காக்கும் படையின் கட்டளைத் தளபதிகள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரதியைத் தவிர வேறு தெளிவான உத்தரவுகளையோ அறிவுறுத்தல்களையோ பெறாததும், யாழ்ப்பாணத்தைத் தவிர இந்தியப் படைகள் திருகோணமலைக்கு வரும் என்று இலங்கை பாதுகாப்புப் படைகளுக்கு அறிவித்திராததாலும் திருகோணமலைக்கு வந்த இந்தியப் படைகள் அங்கு வாழ்ந்த சிங்கள மக்களின் எதிர்ப்புக்கு ஆளாகின. இத்தகைய குழப்பகரமான நிலையில் தொடங்கிய மோதல்களின் ஆரம்ப நாட்களில், சீன துறைமுக வளாகத்தில் அமைந்திருந்த விகாரையின் விகாராதிபதி உட்பட பல சிங்கள மக்கள் இந்திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். சில நாட்களிலேயே இலங்கை - இந்திய இராணுவ அதிகாரிகளுக்கிடையிலான சுமூகமான நட்புறவு ஏற்படுத்தப்பட்ட பின்னர் திருகோணமலையில் மக்கள் வாழ்க்கை வழமைக்கு திரும்பியது. இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் இந்திய இராணுவம் களமிறக்கப்பட்டனர். முன்கூட்டியே திட்டமிடப்பட்ட துருப்புக்களின் எண்ணிக்கை போதுமானதாக இராததால், அவ்வப்போது ஏற்பட்ட தேவையின் அடிப்படையில் அதிக காலாட்படை பிரிவுகளையும் படைகளையும் ஈடுபடுத்தும் நிலை இந்திய அமைதி காக்கும் படைக்கு ஏற்பட்டது. அத்துடன் இந்திய அமைதி காக்கும் படைகளின் எண்ணிக்கை 100,000-ஐக் கிட்டியது.

399 கிழக்கில் நிலைமை மேம்பட்டாலும், ஒப்பந்தத்தின்படி, எல்.ரி.ரி.ஈ. அமைப்பு ஆயுதங்களை முழுமையாக ஒப்படைக்காதது பற்றி இந்திய ராணுவத்துக்கும், எல்.ரி.ரி.ஈ.க்கும் இடையில் கருத்து மோதல்கள் எழுந்தன. இதே வேளை, இலங்கை இராணுவத்தினரால் கைதுக்குள்ளான எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகள் சிலர் சயனைட் உட்கொண்டு சாவடைந்ததை எதிர்த்து, எல்.ரி.ரி.ஈ.-யினரால் சிங்கள மக்களுக்கு எதிராக நடத்திய படுகொலைகளால் இந்திய இராணுவம் மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது. எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தால் கிராமங்கள் மீதும், ரயில்கள், பஸ்கள் மீதும் தாக்குதல் நடத்தியதில் 1987 ஒக்ரோபரில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 128 சிங்கள மற்றும் தமிழர்களும், திருகோணமலை மாவட்டத்தில் 79 சிங்களவர்களும், மூன்று பொலிஸ் அதிகாரிகளும் கொல்லப்பட்டதுடன், எல்.ரி.ரி.ஈ.-யினரால் சிறைபிடிக்கப்பட்ட 8 ராணுவ வீரர்களும் கொல்லப்பட்டு அவ்வுடல்கள் யாழ்ப்பாணக் கோட்டையின் அருகே காட்சிக்கு வைக்கப்பட்டன. மேலும், எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினரால் ஏனைய தமிழ் பயங்கரவாத குழுக்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இந்த மோதல்களில் 6 இந்திய வீரர்களும் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களால் கொல்லப்பட்டனர். இவ்வாறு இந்திய வீரர்கள் உயிரிழந்ததன் காரணமாக, எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினருக்கும் இந்திய அமைதிப்படைக்கும் இடையே

மோதல்கள் தொடங்கியது.

இலங்கை அரசுக்கும் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்துக்குமிடையிலான உள் மோதலில் தலையிட்டு அமைதியை நிலைநாட்ட இராஜதந்திர தலையீடுகள் மூலம் வந்த மூன்றாம் தரப்பான அமைதி காக்கும் படையினர், அதன் பின்னர் இப்போராட்டத்தில் நேரடியாக பங்கேற்று எல்.ரி.ரி.ஈ. அமைப்புடன் சண்டையிடத் தயாரானது. ஆனால், இந்த நிலைமையை இந்தியாவின் 'மக்களவையில்' உள்ள எதிர்க்கட்சிகளும், தமிழக மாநில அரசின் அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்த்தன. அமைதிப்படை எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கு எதிராக சண்டையிடுவதை நிறுத்த வேண்டும் என்று மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடிக்கடி கருத்து வெளியிட்டனர்.

எல்.ரி.ரி.ஈ படுகொலை அலை பெரும் விளம்பரத்தை ஏற்படுத்திய நிலையில் ஒப்பந்தத்தின்படி இந்தியா தனது பொறுப்பைக் கைவிட்டுவிட்டதாக இலங்கை அரசு குற்றம் சாட்டியது. இந்த மோசமான சூழலுக்கு மத்தியில், போர் நடவடிக்கைகளுக்கு போதுமான எண்ணிக்கையிலான துருப்புகள் அதுவரை இலங்கைக்கு வரவில்லை. இந்த நிலையில் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தை நிராயுதபாணிகளாக்கி அவர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும், யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றுவதற்கும் 1987 ஒக்டோபர் 11 ஆம் திகதி 'பவன' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன், நடந்த சுற்றிவளைப்பு சோதனையில் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து எல்.ரி.ரி.ஈ உள்ளிட்ட ஏனைய தமிழ் பயங்கரவாத குழுக்களைச் சேர்ந்த 131 உறுப்பினர்களையும், 27 தானியங்கி ஆயுதங்கள், கண்ணிவெடிகள், வெடிமருந்துகள் மற்றும் சமிக்ஞை உபகரணங்களையும் இந்திய இராணுவம் கைப்பற்றியது. இந்த நடவடிக்கையில், எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் தலைமையகம் என அழைக்கப்படும் கொக்குவிலில் கட்டிடத் தொகுதி மீது ஹெலிகொப்டர்கள் நடத்திய விரைவான தாக்குதலில் ஆரம்பத்தில் அமைதி காக்கும் படையினருக்கு பெரும் சேதம் ஏற்பட்டது. 13 வது சீக்கிய படையணியைச் சேர்ந்த 30 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் ஒருவர் எல்.ரி.ரி.ஈ.யால் கைது செய்யப்பட்டார். மூன்று காலாட் பட்டாலியன்களை உள்ளடக்கிய இந்த நடவடிக்கை' 12 நாட்கள் கடுமையான மோதல்களின் பின்னர் ஒக்டோபர் 21 அன்று யாழ்ப்பாணத்தை பயங்கரவாதிகளிடமிருந்து விடுவிக்க முடிந்தபோதும் இந்திய இராணுவத்தால் பயங்கரவாதிகள் எவரையும் பிடிக்க முடியவில்லை. இந்த நடவடிக்கையில் இந்திய ராணுவத்தைச் சேர்ந்த 17 அதிகாரிகள், 26 இளநிலை அதிகாரிகள் மற்றும் 270 வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்திய விவரங்களின்படி, இந்த நடவடிக்கையில் 1100 எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதுடன் 70 மோட்டார் ஆயுதங்களும், 23 இயந்திர துப்பாக்கிகள், 08 ராக்கெட் லாஞ்சர்கள் உட்பட 167 துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்திய கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவையும் இந்த நடவடிக்கையில் முக்கிய பங்கு வகித்தன. இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து, சுமார் 200,000 இந்திய அமைதி காக்கும் படையினர் தென்னிந்திய துறைமுகங்களிலிருந்து திருகோணமலை துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்ததுடன் பெருமளவிலான போர் உபகரணங்களையும் பல்வேறு வகையான வாகனங்களையும் கொண்டு வந்து சேர்க்கும் பணி இந்திய கடற்படையால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அமைதி காக்கும் படையினர் யாழ்ப்பாணக் குடாநாட்டை கைப்பற்றியதோடு யாழ்ப்பாணக் குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமை மேம்பட்டதால், யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வெளியேறியிருந்த சுமார் 2500 அகதிகளை தமிழ்நாட்டிலிருந்து இலங்கையின் வடக்கு துறைமுகங்களுக்கு கொண்டு வந்து சேர்க்கும் பணியும் இந்திய கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டது. இந்திய விமானப்படை துருப்புக்களும் வடக்கு கிழக்கு பகுதிகளில் அமைதி காக்கும் படையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது தென்னிந்தியாவில் உள்ள விமானத் தளங்கள் மற்றும் பலாலி விமானப்படைத் தளத்துடன் தொடர்புகளைப் பேணுவதன் மூலம் படையினருக்கு தேவையான உணவுப் பொருட்களை கொண்டு செல்வதற்கும் துருப்புக்களைக் கொண்டு செல்வதற்கும் தாக்குதல் ஹெலிகொப்டர்கள் மூலம் தரைவழி நடவடிக்கைகளில் ஈட்டுபட்டிருந்த வீரர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில் வந்த இந்திய அமைதி காக்கும் படையின் 54-வது மற்றும் 36-வது காலாட்படை பிரிவுகள், நிலையான போர் முறைகளில் பயிற்சி பெற்று அப்பயிற்சியின் மூலம் போர் தந்திரோபாயங்களைப் பின்பற்றிய படைப் பிரிவாகும். ஆனால் அவை நகர்ப்புறத்திலும் காடுகளிலும் பயங்கரவாத சண்டை நுட்பங்களில் தேர்ச்சி பெற்றிராததால் அவை யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப நடவடிக்கைகளில் சாதகமான விளைவுகளை பெறத் தவறின. முக்கியமாக போர் முனைகளில் வழக்கமான போர் முறைகளின்படி பிரதானமாக போரிடுவதற்காக பழக்கப்பட்டிருந்த இந்தியப் படைகள், சாமானியர்களுடன் கலக்கும் போது சாதாரண மக்களை ஒரு பாதுகாப்பு கேடயமாகப் பயன்படுத்திவந்த பயங்கரவாதிகளை எதிர்த்துப் போராடுவது கடினமாக இருந்தது. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் தேர்ச்சி பெற்றிருந்த 57-வது மலைப் படையணியையும் 4-வது காலாட்படையணியையும் அமைதிப் படையில் இந்திய இராணுவம் சேர்க்க வேண்டியிருந்தது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இந்திய இராணுவம் பொறுப்பெடுத்துக் கொண்டதையடுத்து, அந்தப் பகுதிகளில் சேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட இலங்கை இராணுவ படைப்பிரிவுகள் தெற்கில் ஜே.வி.பி. பயங்கரவாதத்தை ஒடுக்க பயன்படுத்தப்பட்டது. மேலும் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த தொண்டர் படையினருக்கு மேலதிகமாக, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் சிங்கள மற்றும் முஸ்லிம் கிராமங்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக நிரந்

தர இராணுவத்தின் பல படையணிகள் ஈடுபடுத்தப்பட்டன.

இலங்கை காலாட்படை, கடற்படை மற்றும் பொலிஸ் அதிரடிப்படை என்பவை கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்கிய அதேவேளை, மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கும் பிரதான பாதைகளிலும் இந்திய இராணுவம் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதற்காக இந்தியத் துருப்புகள் புறநகர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் முகாமிட்டிருந்ததோடு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய ஒரு நடமாடும் பயணக் கட்டமைப்பொன்றை செயற்படுத்த வேண்டி ஏற்பட்டது.

இந்திய அமைதி காக்கும் படை 1988-ம் ஆண்டு முழுவதும் இலங்கை இராணுவத்துடன் ஒத்துழைத்ததுடன், திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் ஒரே முகாம் வளாகத்தில் இரு இராணுவங்களும் நிறுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இக்காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எல்.ரி.ரி.ஈ.-யினரின் அதிகாரத்தை அடக்கி அங்கு சிவில் நிர்வாகத்தை நிறுவுவதற்கு அமைதி காக்கும் படையால் இயன்றது. இதன் காரணமாக, எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகள் மக்கள் வசிக்கும் பகுதிகளில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு முல்லைத்தீவு, சோமாவதி, தொப்பிகல காடுகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டனர். ஆனால் பயங்கரவாதிகள் அக்காடுகளை அண்மித்த மட்டக்களப்பு வாழைச்சேனை, திருகோணமலை, லாகுகல, கந்தளாய், புல்மூட்டை, அனுராதபுரம், கல்குடா போன்ற சிங்கள மற்றும் முஸ்லிம் கிராமங்களுக்குள் நுழைந்து குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட கிராமவாசிகளை வெட்டியும், கொத்தியும், சுட்டும் கொன்றனர். 1988-ம் ஆண்டு மார்ச் மாதம் 04-ம் திகதி மொரவெவ பிரதேசத்தில் 15 பேரும், 19-ம் திகதியன்று தீகவாபி பிரதேசத்தில் 19 பேரும், 22-ம் திகதியன்று திருகோணமலை மஹிந்தபுர பிரதேசத்தில் 2 பேரும், வவுனியா ஓசந்தபிட்டிய பகுதியில் 15 பேருமாக 51 பேர் ஒரே மாதத்தில் வெட்டிக் கொத்திக் கொல்லப்பட்டதுடன் 1988 ஒக்ரோபர் 6-க்கும் 19-ம் திகதிக்கும் இடையிலான இரண்டு வாரங்களில் 211 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இவை சில சம்பவங்கள் மட்டுமே.

403 இந்தச் சூழலின் மத்தியில் 1988 நவம்பர் 19-ல் வடகிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது. எல்.-ரி.ரி.ஈ இயக்கம் அதை கடுமையாக எதிர்த்த போதும் இந்திய அரசும் அமைதி காக்கும் படையின் உதவியுடனும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் தலைவர் வரதராஜ பெருமாள் போட்டியிட முன்வந்தார். பிராந்திய பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துறைமுகத்தில் மற்றைய சக்திகளின் செல்வாக்கை தடுக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்த இந்திய அரசாங்கத்தின் தேவைக்கேற்ப அமைதிகாக்கும் படையினரால் வரதராஜப்பெருமாளுக்கு ஆயுதப்படையை உருவாக்குவதற்கு அனுசரணை வழங்கப்பட்டது. தமிழ் இளைஞர்களை திரட்டிக் கொண்டு இந்திய அரசால் ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட அந்த இராணுவம் ஆரம்பத்தில் மக்கள் தொண்டர் படையாக நிறுவப்பட்ட போதும் பின்னர் அது தமிழ் தேசிய இராணுவம் என அழைக்கப்பட்டது. இந்திய அரசின் ஆதரவுடன் போட்டியிட்ட வரதராஜப் பெருமாள் தேர்தலில் வெற்றி பெற்று வடகிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக டிசம்பர் 04-ம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். கிழக்கு மாகாணத்தில் உள்ள 36 ஆசனங்களில் 19 ஆசனங்களை ஈ.பி.ஆர்.எல்.எஃப். கட்சியும், 17 ஆசனங்களை முஸ்லிம் காங்கிரசும் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தையும் வென்றன.

இதற்கிடையில், எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கும் முதலமைச்சர் வரதராஜ பெருமாளின் டி.என்.டி ராணுவத்தினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த காலகட்டத்தில், இந்திய இராணுவத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குறிப்பிடத்தக்க அமைதியை கட்டியெழுப்பவும், பேணவும் இயன்றது என்றபோதும், எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளை முழுமையாக தோற்கடிக்கவோ அல்லது பயங்கரவாதத் தலைவர்களை பிடிக்கவோ தவறியது. குறுகிய காலத்திற்குள், இந்திய இராணுவத்தின் தலைமை பலமுறை மாற்றப்பட்டதுடன், லெப்டினன்ட் ஜெனரல் திபேந்திர சிங், மேஜர் ஜெனரல் ஹரிக்ரான் சிங், லெப்டினன்ட் ஜெனரல் ஷெர்பாண்டே மற்றும் லெப்டினன்ட் ஜெனரல் கல்கட் ஆகியோர் அந்த காலகட்டத்தில் அமைதி காக்கும் படையை வழிநடத்தினர். யாழ்ப்பாணத்தைக் கையகப்படுத்துவதற்கான ‘பவன’ படைநடவடிக்கையைத் தொடர்ந்து, ‘வ’, ‘விராட்’, ‘திரிசூல்’ மற்றும் ‘செக் மேட்’ போன்ற பல படை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளை முல்லைத்தீவு வனப்பகுதியில் முடக்கவும் இந்தியப் படையினரால் இயன்றது.

தென்னிந்தியாவில் தயாரிக்கப்படும் வெடிமருந்துகளும் ஆயுதங்களும் தமிழக அரசால் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்துக்கு ரகசியமாக தொடர்ச்சியாக விநியோகிக்கப்பட்டு வந்தது. மேலும் காயமடைந்தவர்கள் தென்னிந்தியாவில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றதுடன் இந்திய ஊடகங்களும் அமைதி காக்கும் படைக்கு எதிராக கருத்துக்களை வலுவாக பேணி வந்தன.

இந்நிலையில், 1988 டிசம்பரில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் பதவிக்காலம் முடிவடையும் போது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தாலோ அல்லது இந்திய அமைதி காக்கும் படையாலோ வடக்கில் தமிழீழ போராட்டத்தை முழுமையாக நசுக்க முடியவில்லை. அத்துடன் ஜே.வி.பி-யால் நாட்டின் ஏனைய பகுதிகளில் ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருந்தது.

(இத்துடன் ஜே.ஆர். ஆட்சிகால பாதுகாப்பு நிலை பற்றிய அத்தியாயம் நிறைவுற்றது.)



sarawanan.n@thaiveedu.com



# ஈழத்துத் தமிழ்க் கவிதைப் புலத்தில் பெண்நிலைவாதம்

சி. ரமேஷ்

1989-ல் ஆரம்பிக்கப்பட்ட பூரணி பெண்கள் நிலையம் வதிவிடம் அற்றவருக்கு வதிவிடம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக பாலியல் வன்முறைக்குட்பட்டு வாழ்வு சிதைக்கப்பட்ட பெண்களுக்கு வதிவிடம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு நிறுவப்பட்டது. மனித உரிமை, பெண்ணுரிமை முதலானவற்றைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டும் இயங்கிய இவ்வமைப்பில் ராஜினி திரணகம, சிவரமணி முதலான பலரும் அங்கம் வகித்தனர். இக்காலப்பகுதியில் இந்திய இராணுவத்தினரால் பாலியல் வன்கொடுமைக்குட்பட்ட பெண்கள் சமூகத்தினராலும் குடும்பத்தினரால் நிராகரிக்கப்பட்டவராக இருந்தனர். பொதுவாக இவர்களுக்கு ஆதரவு வழங்கவேண்டிய தேவையும் கடப்பாடும் சமூகத்துக்கு இருந்தது. ஆனால் சமூகம் இவர்களைக் கண்டுகொள்ளாத நிலையில் பூரணி பெண்கள் நிலையம் தன் பணியைச் செவ்வனே செய்தது. தெற்கில் இருந்து வடக்கு வந்த பெண்கள் பூரணி பெண்கள் நிலையத்துக்கு விஜயம் செய்து சிறைமுகாங்களில் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளாவதை எடுத்துரைத்ததைத் தொடர்ந்து இவ்விடயத்தை அரசாங்கத்தோடு கடுமையாக விவாதித்தோடு நின்றுவிடாது இதனை மனிதவுரிமைகள் மற்றும் ஐக்கியநாடுகள் சபையிலும் பூரணி பெண்கள் நிலையம் பிரஸ்தாபித்தது. 21.09.1989-இல் ராஜினி திரணகமா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்வமைப்பு 1991-ல் முடிவுக்கு வந்தது.

1990-களில் யாழ் பல்கலைக்கழகத்தில் பெண்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து இயங்கின. 'யாழ் பல்கலைக்கழக மகளிர் முன்னணி' என்ற அமைப்பு 'பெண்கள் அபிவிருத்திக்கான மாற்றொழுங்குகள்' என்ற தலைப்பின் கீழ் கருத்தரங்கொன்றை 1990 மார்ச் 8-ம் திகதி முன்னின்று நடத்தியது. இக்கருத்தரங்கு பெண்களுக்கான விளிப்புணர்வைத் தூண்டியதுடன் அதனை ஈழத்தில் தொடர்ந்தும் முன்னெடுக்கவும் உதவியது.

1990-களில் தோற்றம் பெற்ற பிறிதொரு அமைப்பான 'யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சங்கம்', பெண்கள் சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இயங்கியது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உதவிய இவ்வமைப்பு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட





பெண்களின் கல்வி வளர்ச்சியிலும் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டது.

யுத்தம் தமிழர்களை மாத்திரமல்ல தென்னிலங்கையில் உள்ள சிங்களவர்களையும் பெரிதும் பாதித்தது. போரின்போது, இரா ணுவத்தில் சேவையாற்றிக் கொண்டிருக்கும்போது காணா மல் போன பிள்ளைகளின் பெற்றோர் ஒன்றிணைந்து 1998-ல் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கம் என்ற அமைப்பை கண்டியில் உருவாக்கினர். மோதல் நிகழ்ந்து கொண்டிருந்த காலப்பகுதியில் இச்சங்கம் போரின் சர்வதேச தரம் குறித்த வகுப்புகளைப் படைச் சிப்பாய்களுக்கும் இளை ஞர்களுக்கும் எடுத்தது. மோதல் நிகழ்ந்து கொண்டிருக்கும் பகுதிக்கு அண்மையில் சென்று பொருளாதார சமூக அபிவி ருத்தி திட்டங்களையும் முன்னெடுத்துச் சென்றது.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல் லும் வகையிலும் ஆண் மேலாதிக்க ஒடுக்குமுறையையும் அதை நியாயப்படுத்தும் கலாசார அடக்குமுறைகளையும் இல்லாது ஒழிக்கும் வகையிலும் விடுதலைப்புலிகள் அமைப் புக்கு பெண்கள் 1983 முதல் உள்வாங்கப்பட்டனர். 1985 பெண்களுக்கெனத் தனிப்படைப்பிரிவொன்று உருவாக்கப் பட்டது. 1986 முதல் இம்மகளிர் அணிப் படைப்பிரிவு களப் போராட்டங்களில் பங்கெடுத்தது. 1985 - 1987 காலகட்டத்தில் இயங்கிய மகளிர் அணி 'சுதந்திரப் பறவைகள்' என அழைக் கப்பட்டன. இவ்வணி தன் கொள்கைகளையும் நிலைப்பாட் டையும் தெளிவுபடுத்தும் முகமாக 1984 மார்கழி முதல் 'சுதந் திரப் பறவைகள்' என்ற சஞ்சிகையை வெளியிட்டது. மரபுவ ழிக் கற்பிதங்களை உடைத்து பெண்விடுதலை குறித்துப் பேசிய இப்பத்திரிகை பின்னர் பெண்களால் எழுதப்படும் ஆக்கங்களையும் தாங்கி வந்தது.

பிற்போக்கான மரபுவழிக் கலாசாரங்கள் அழித்தொழிக்கப் பட்டு பெண் சுயமாக வாழவேண்டும் என்ற நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டதே மகளிர் கலாசாரப் பிரிவு ஆகும். இதன் நிமித்தம் விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலி களிலும் தேசிய தொலைகாட்சியிலும் பெண்கள் இணைத் துக் கொள்ளப்பட்டனர். விடுதலைப்புலிகளின் நீதி நிர்வாகத் திலும், காவல் துறையிலும் ஐம்பது விழுக்காடு பெண்களே பணியாற்றியதாக அறியப்படுகிறது. பெண் விடுதலைப் புலி களுடன் அமைப்புச் சாராத பொதுப் பெண்களும், பல்வேறு தொழில்களைச் செய்யும் பெண்களும் இணைந்து செயலாற் றினர். இதனால் உடனடியாக உதவி தேவைப்படும் பெண் களை அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. கைவிடப் பட்ட பெண்கள் என எவருமில்லாத சமூகமாக உருவாக்க இதுவே பிற்புலமாக அமைந்தது.

1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் 8-ம் திகதிகளில் விடுதலை புலிகளின் மகளிர் முன்னணியினர் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழீழப் பெண்களின் தேசிய மாநாட்டை கனிஷ்டாக் கல்லூரியில் நடத்தினர். அனைவரும் அணிதி ரண்டு போராடுவதன் ஊடாக விடிவு நிட்சயம் கிடைக்கும் என் னும் கோரிக்கையை முன்வைத்து தொடங்கப்பட்ட இம்மா நாடு தேசத்தின் விடுதலை, சமூக விடுதலை குறித்தும் விரி வாக விவாதித்தது. இம்மாநாட்டில் பெண்களின் சுதந்திரம், தனித்துவம், சுயாதீனமான பொருளாதார வாழ்வு ஆகியவற் றைப் பேணி வளர்ப்பது, அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவது, பெண் ஆய்வு நிறுவனம் ஒன்றை அமைப் பது, ஆணாதிக்க வன்முறை, பாலியல் வன்முறை, அநீதிகள், கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவியளிக் கும் வகையில் மகளிர் நலன்புரி மன்றங்களை அமைத்தல், சமுதாயத்தில் நிலவும் சுகாதார சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் கிராம மட்டத்தில் தொண்டர்களை உருவாக்கல், பெண்கள் கல்வி வளர்ச்சியை அடிப்படையா கக் கொண்டு வளர்ந்தோர் கல்வித் திட்டமொன்றை உருவாக் கல், சீதனக் கொடுமையை ஒழிக்க சட்ட நடவடிக்கை எடுத் தல், பெண்களை இழிவுபடுத்தும் பழைமைவாதச் சிந்தனைக ளுக்கு எதிராகத் தீவிர பிரச்சாரத்தை மேற்கொள்ளல், இனமு றையாலும் யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட பெண்கள், விதவை கள், ஆதரவற்றோரின் வாழ்க்கைநிலையை மேம்படுத்தல் முதலான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் நடவடிக் கைகள் குறித்தும் இம்மாநாட்டில் ஆராயப்பட்டது. இம்மா நாட்டில் இடம்பெற்ற பெண்கள் மேம்பாடு பற்றிய பரப்புரை யும், வரதட்சணை ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வுப் பரப்புரை யும் பெண்கள் மத்தியில் பெருங் கவனத்தை ஏற்படுத்தியது. விடுதலைப்புலிகள் 'சீதனத் தடைச் சட்டம்' கொண்டு வருவ தற்கு இதுவே காரணமாகவும் அமைந்தது.

பெண் போராளிகளுக்கு எதிரான வன்முறை தொடர்பாக வெளிப்படையாகச் செய்யப்பட்ட செயல்வாதமாக திருகோ ணமலை மாவட்டத்தில் 2004-ம் ஆண்டு நடத்தப்பட்ட கறுப் புப்பட்டி போராட்டத்தைக் குறிப்பிடலாம். இது இராணுவத்தி னர் பெண் போராளிகளின் இடுப்புப் பட்டியை பிடித்து இழுத்து அவமானப்படுத்தியதற்காக நிகழ்த்தப்பட்டதாகும். அதுமட்டுமன்றி இது தொடர்பான மனு ஒன்றும் அன்றைய நாள் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

பெண்கள் சந்திக்கும் குடும்ப வன்முறைகளை புள்ளி விவரங் களுடன் தொகுத்து, உரிய நடவடிக்கை எடுத்து புனர்வாழ்வ ளிக்க என 'பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு மையம்' உருவாக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலை வர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பணிப்புரைக்க மைய வன்னியில் போர் அனர்த்தங்களினால் நேரடியாக மன நிலை பாதிக்கப்பட்ட பெண்களை மேம்படுத்தும் நோக்கில் 'வெற்றி மனை உளவளத்துணை நிலையம்' நிறுவப்பட்டது. வன்னியில் இயங்கிய இவ்வமைப்பானது பாதிக்கப்பட்ட பெண்களின் பொருட்டு 'பெண்கள் தொழிற் பயிற்சி நிலை யம்', தாய், சேய் பராமரிப்பிற்காக 'மலர்ச்சோலை மையம்', 'செங்கல், இனிப்பு, அப்பளம், சனல் போன்ற பொருள் உற் பத்தி நிலையங்கள்', உடல் அவையங்களை இழந்த பெண்க ளுக்கான 'நிறைமதி இல்லம்', கைம்பெண்களுக்காக 'உதய தாரகை தையல் மையம்' என்பனவற்றையும் முல்லைத்தீவில் 93 சிறுவர்களைக் கொண்டு 'செந்தளிர் சிறுவர் இல்லமும்' அமைக்கப்பட்டன. பெண் குழந்தைகளுக்கான காப்பகம் செஞ்சோலை எனவும் ஆண் குழந்தைகளுக்கான காப்பகம் அறிவுச்சோலை என்றும் பெயர் பெற்றிருந்தன. இரண்டு சோலைகளையும் சேர்ந்த பிள்ளைகள் படிப்பதற்காக 2007-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கல்விக்கூடம் 'தமிழ்ச் சோலை' என்ற பெயரைத் தாங்கியிருந்தது. களத்தில் விழுப் புண்பட்டு வாழ நேர்ந்த பெண்களுக்காகத் தொழிற்கூடத்து டன் இணைந்த காப்பகம் ஒன்றைக் கிளிநொச்சியின் புறந கர்ப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தலைவர் தொடங்கி வைத்தார். அந்தக் காப்பகம் 'லெப். கேணல் நவம் அறிவுக்கூ டம்' என்ற பெயருடன் திகழ்ந்தது.

இலங்கையில் போர்ச் சூழ்நிலையால் பெற்றோரை, பாதுகாவலரை இழந்த பெண் பிள்ளைகளின் பராமரிப்புக்காக உருவாக்கப்பட்ட அமைப்பே 'செஞ்சோலை' ஆகும். 1991-ம் ஆண்டு யூலை மாதம் 10-ம் திகதி 15 மாணவிகளுடன் தொடங்கப்பட்ட இச்சிறுவர் இல்லத்தில் 2005-ம் ஆண்டு 242 பெண் பிள்ளைகள் பராமரிக்கப்பட்டனர். தாய், தந்தையரை இழந்து வாழும் குழந்தைகளுக்காக ஓர் இல்லத்தை அமைக்கும்படி மேஜர் காந்தரூபன் கூறியதற்கமைய வே. பிரபாகரன் அவர்களால் யாழ்ப்பாணத்தில் சிறிய இடத்தில் உருவாக்கப்பட்ட இச்சிறுவர் இல்லம் பின்னர் சண்டிலிப்பாயில் ஐப்பசி 22-ம் நாள் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டு 23 பிள்ளைகளுடன் இயங்கத் தொடங்கியது.




தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு இளம் பரம்பரை தோற்றங்கொள்ள வேண்டும். அவர்கள் ஆற்றல் மிகுந்தவர்களாகவும் அறிவு ஜீவிகளாகவும் தேசப்பற்றாளர்களாகவும் போர்க்கலையில் வல்லுநர்களாகவும் நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாகரவும் ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரையை தோற்றுவிக்கவேண்டும் என்ற சிந்தைக்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில் செஞ்சோலை இயங்கியது. வே. பிரபாகரன் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், பாதுகாப்பில் இச்சிறுவர்கள் வளர்க்கப்பட்டனர். கைக்குழந்தைகள் முதல் 18 வயது வரையான பெண் பிள்ளைகள் வரை வாழ்ந்த இச்சிறுவர் இல்லத்தில் முன்பள்ளி, ஆரம்பப்பள்ளி, உயர் பாடசாலை போன்ற கல்வி முறைக்கேற்ப கல்வியறிவூட்டப்பட்டது. நல்லொழுக்கம், நல்மனப்பாங்கு, நற்பண்புகள், ஆளுமைத்திறனை வளர்க்கும் வகையில் சிறப்பான பாடத்திட்டங்களும் வகுப்புக்கேற்ற வகையில் உள்வாங்கப்பட்டன. கலைகள், விளையாட்டுகள், கைவினைத்திறன்கள் முதலானவையும் மாணவர் விருப்பத்திற்கும் திறமைக்கும் ஏற்ப கற்பிக்கப்பட்டன. ஈழப்போர் தீவிரமடைந்த நிலையில் சண்டிலிப்பாயிலிருந்து நகர்ந்து மானிப்பாய், கோப்பாய் போன்ற இடங்களில் தற்காலிகமாக சிறிது காலம் இயங்கிய இச்சிறுவர் இல்லம் 1993-1995-ம் ஆண்டுக் காலப்பகுதியில் அரியாலையிலும் பின் மட்டுவில்லிலும் தன் செயற்பாடுகளை நிரந்தரமாக்கிக் கொண்டது. 1995-ம் ஆண்டு பிற்பகுதியில் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட சூரியக்கதிர் நடவடிக்கையை அடுத்து கிளிநொச்சியிலுள்ள திருவையாறுக்கு இடம் பெயர்ந்த செஞ்சோலை தொடர்ந்து மல்லாவியில் வடகாடு, முல்லைத்தீவு வள்ளிபுனம், இரணைப்பாலை என தீவிர போர் நடவடிக்கைக்கமைய தொடர்ச்சியான இடம் பெயர்வைச் சந்தித்தது. செஞ்சோலைச் சிறார்களால் 'மாமி' என்று அன்பு ததும்ப உரிமையோடு அழைக்கப்பட்ட திருமதி மதிவதனி பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலுக்கமைய இவ்விடம்பெயர்வுகளிலும் மாணவிகள் தம் கற்றல் நடவடிக்கைகளைத் தொடர்ந்த வண்ணம் இருந்தனர். வள்ளிபுனம் செஞ்சோலை வளாகம் 2006-ம் ஆண்டு ஆகஸ்ட் 14 அன்று விமானத்தாக்குதலுக்குள்ளாகியது. இதில் 61 மாணவிகள் கொல்லப்பட்டனர்.

'வெற்றிமனை' என்பது போரின் வன்முறையாலும் அதன் அழுத்தங்களாலும், தங்கள் கண் முன்னாலேயே உறவுகளைப் பறிகொடுத்த அதிர்ச்சியினாலும் மனநிலை பாதிக்கப்பட்ட பெண்களைப் பாதுகாத்து உரிய சிகிச்சை வழங்கிப் பராமரித்து மறுவாழ்வு அளிப்பதற்காக வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் 1991-ல் யாழ்ப்பாணத்தில் உள்ள உடுவில் பகுதியில் உருவாக்கப்பட்ட உளவள நிலையமாகும். ஆரம்பத்தில், பூரணி இல்லம் என்ற பெயரில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான அமைப்பாக இயங்கிய இவ்வில்லம், கால மாற்றத்துக்கமைய தேவைகள் பெருக, தனித்தனி அமைப்புக்களாக உருப்பெற்று மனநோயாளர்களுக்கு வெற்றி மனையாகவும் கைவிடப்பட்ட ஏமாற்றப்பட்ட பெண்களுக்கு மலர்ச்சோலையாகவும் அநாதரவான சிறுவர்களுக்கு செற்தளிர் இல்லமாகவும் தனது வேலையை விஸ்தரித்தது. இதன் பின்னர் இவ்வமைப்பு வேலுப்பிள்ளை பிரபாகரனின் நெறிப்படுத்தலின் கீழ் 1998-ம் ஆண்டு முதல் 'வெற்றிமனை' என்ற பெயரில் அக்கராயன் பகுதியில் இயங்கத் தொடங்கியது. அதேசமயம் இக்காலப்பகுதியில் ஆண்களுக்கான உளவள நிலையமாக 'சந்தோசம் இல்லம்' செயற்படத் தொடங்கியது. 2002-ம் ஆண்டு காலப்பகுதியின் பின்னர் வெற்றிமனையானது, கனகபுரம் பகுதியில் இயங்கத் தொடங்கியது. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமதான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற காலப்பகுதியில் நோர்வே தூதுவர் விதார் கெல்கிசனால் அடிக்கல் நாட்டப்பட்டு நோர்வே அரசின் நிதியுதவியுடன் 2005 காலப்பகுதியில் இதன் புதிய கட்டடம் கனகபுரத்தில் திறந்து வைக்கப்பட்டது. பொதுநலவிரும்பிகளின் அனுசரணையுடன் 11 பேர் கொண்ட நிர்வாகக் குழுவின் வழிநடத்தலில் இயங்கிய இந்த இல்லத்தில் பெண்கள் புனர்வாழ்வு அமைப்பின் சிறப்பான வழி நடத்தலின் கீழ் புத்தி சுவாதீனமுற்ற 176 பெண்கள் வைத்துப் பராமரிக்கப்பட்டனர். இதன் இணைப்பாளராக கமலாம்பாள் இயங்கினார். இப்புனர்வாழ்வு இல்லத்துக்கு வருமானத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் பப்படத் தொழிற்சாலை, தும்புத் தொழிற்சாலை பண்ணை போன்றனவும் ஆரம்பிக்கப்பட்டன. பயனாளிகளின் போசாக்கு நிலையை மேம்படுத்தும் நோக்குடன் சர்வதேச கெயார் நிறுவன உதவியுடன் பாற்பண்ணைத்திட்டமும் செயற்படுத்தப்பட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முடிவுற்று கிளிநொச்சி பிரதேசத்தில் ஏற்பட்ட உக்கிரமான மோதல்கள், எறிகணை வீச்சுக்களை அடுத்து நூற்றைம்பத்துநான்கு பெண்களை உள்ளடக்கிய 'வெற்றிமனை நிலையம்' கிளிநொச்சியில் இருந்து தர்மபுரத்திற்கு இடம் பெயர்ந்திருந்தது. எனினும் அந்தப் பகுதியில் உரிய அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினால், அங்கிருந்து இம்மனை வள்ளிபுனத்தில் இயங்கத் தொடங்கியது. அங்கு மலர்ச்சோலையில் தங்கவைக்கப்பட்டனர். பின்னர் இம்மனையில் இருந்த சித்த சுவாதீனமுற்ற அனைத்துப் பெண்களும் செந்தளிர் இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்து இரணைப்பாலைப் பகுதிக்கு இடமாற்றப்பட்ட இப்பெண்கள் அதன் பின்னர் ஆனந்தபுரப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதன் பின்னர் மாத்தளன் வெட்டைப்பகுதியில் தங்கவைக்கப்பட்டனர். மாத்தளன் பகுதியில் சில நாட்கள் தங்கியிருந்த போது அங்கு இடம் பெற்ற எறிகணை வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் வலைஞர்மடப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட இப்பெண்கள், இறுதியில் முள்ளிவாய்க்கால் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவ்விடம்பெயர்வின் போது இம்மனையில் இருந்த உளநலம் குறைந்த பெண்கள் பலர் கொல்லப்பட்டுவிட்டனர். எஞ்சியவர்களில் சிலரை அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அழைத்துச் சென்றனர். இறுதியாக 76 பெண்கள் வவுனியா முகாமை வந்தடைந்தார்கள்.

## கிழக்கு மாகாணத்தில் பெண்நிலைவாதம்:

இன, மத, சமூக, கலாசார, அரசியல் செயல்முறைகளாலும் ஈழத்தில் வேரோடியிருக்கும் ஆணாதிக்கத்தின் தீவிர செயற்பாட்டு முயற்சிகளாலும் பெண்கள் தொடர்ந்தும் பாரபட்சப்படுத்தபட்டு நேரடியாக வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அரச மற்றும் ஆயுத பலத்துடன் வடக்கு, கிழக்குப் பகுதியில் நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் பெண்களையும் நேரடியாகப் பாதிக்கத் தொடங்கியது. கடந்த காலத்தில் நாட்டில் தொடர்ச்சியாக விளைந்த போரினால் ஏற்படுத்தப்பட்ட உயிர் இழப்புகள், இடம்பெயர்வுகள், கைதுகள், கொலைகள், ஆட்கடத்தல், காணாமல் போதல், பாலியற்சார் துன்புறுத்தல்கள், போன்ற விடயங்கள் பெண்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் ஏற்கனவே இருந்த பெண்களது இரண்டாம்பட்ச நிலைமையை மேலும் மோசமாக்கின.

2000-ம் ஆண்டு காலப்பகுதியில் குறிப்பாகச் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் மட்டும் 14 வன்முறைச் சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை 'பெண்ணுரிமைகள் கண்ணோட்டம் மடல்' ஒன்றின் ஊடாக அறிய முடிகிறது. 2005-ம் ஆண்டில் 3 பாலியல் வல்லுறவுகள், 17 சிறுவர் துஷ்பிரயோகங்கள், 4 கொலைகள், 147 வீட்டு வன்முறைச் சம்பவங்கள் உட்பட 188 வன்முறைகள் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் மட்டும் முறையிடப்பட்டுள்ளன. 2010-ம் ஆண்டு முதல் 6 மாதங்களுள் மட்டும் 16 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்களாக 109 சம்பவங்கள் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பெண்களுக்கெதிரான உரிமை மீறல்களுக்கும் பாரபட்சங்களுக்கும் எதிராக பெண்நிலைவாதச் செயற்பாட்டாளர்களே தொடர்ந்தும் குரல்கொடுத்து வருகின்றனர்.

ஆயுதப் போராட்டம், இனரீதியான உரிமைகள் பற்றிய விவாதங்கள் மற்றும் பெண்களது உரிமைகள், பெண் விடுதலை பற்றிய சிந்தனைக்கு வழி வகுத்ததோடு நில்லாது பெண்கள் புதிய துறைகளிலும் கால்பதிக்கவும் வழிவகுத்தது. போர்ச்சூழலில் கணவனை இழந்த பெண்கள் குடும்பத் தலைவர்களாக மாறிய சூழ்நிலையில் தம் உரிமையை நிலைப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். நெருக்கீடுகளும் பாதிப்புக்களும் தொடர்ந்த நிலையில் இப்பெண்கள் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுப்போராகவும் சமூக நீதிக்காகப் போராடுபவராகவும் தம்மை தகவமைத்துக் கொண்டனர்.

கிழக்கில் பெண்நிலைவாதக் குழுக்களும் அதன் செயல்வாதங்களும் 90-களிலிருந்தே தோற்றம் பெற்றன. கிழக்கு மாகாணம் 1990-ஆம் ஆண்டில் போர் காரணமாக பாரிய உயிர், உடைமை அழிவுகளைச் சந்தித்தது. சத்துருக்கொண்டான், கொக்கட்டிச்சோலை படுகொலைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான வன்முறைகள் ஆயுத பின்னணியிலும் இடம்பெற்றன. ஏராளமான பெண்கள் இக்கட்டான சூழ்நிலையில் இடம்பெயர்வு மற்றும் பொருள், தொழில், இழப்புக்களுடன் உறவுகளையும் இழந்தனர். நூற்றுக்கணக்கான பெண்கள் தமது இல்லத்தலைவர்களை இழந்து நிர்க்கதிக்குள்ளாகினர். ஏற்கனவே வாழ்ந்த சமூக ஒருங்கிணைவு குலைந்து போக பெண்கள் பலவிதமான பாதிப்புக்களுக்குள்ளாகினர். தம் கணவர்களை இழந்த பெண்களே தம் குடும்பங்களை நிர்வகிக்கவேண்டியவராகினர். கணவன், பிள்ளைகள், சகோதரர்கள் காணாமல் போன சந்தர்ப்பங்களில் அவர்களைத் தேடும் பொறுப்பும் பெண்களிடமே சேர்ந்தது. இத்தகைய சூழலில் நாட்டின் பின்தங்கிய மற்றும் போரின் நேரடிப் பாதிப்புக்களுக்குட்பட்ட கிழக்குப் பிரதேசங்களின் கிராமங்களில் வாழும் பெண்கள் தமது உரிமைக்கான நிலை சார்ந்த செயற்பாடுகளில் தம்மை இணைத்துக் கொண்டு ஆணாதிக்க கருத்தியல் மற்றும் கட்டமைப்புகளில் மாற்றங்களைக் கொண்டுவரும் செயல்வாதங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர். யுத்தத்தால் பாதிப்புற்ற பெண்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்த நிலையில் 1990-களில் கிழக்கில் நிறுவனங்களும் பெண் குழுக்களும் அமைப்புக்களும் பெண்களுக்கான பலவிதமான செயற்பாடுகளை முன்னெடுத்தன.

இந்தக்காலப்பகுதியில் யுத்தத்தால் பாதிப்புற்ற பெண்களுக்கான பல்வேறுவிதமான செயற்பாடுகளை சமூக-சமய ரீதியான அமைப்புக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்னெடுத்தன. பாதிக்கப்பட்ட பெண்கள் உதவியளிக்கப்பட வேண்டியவர்கள் என்னும் வகையில் அவர்கள் உப வருமானத்தை ஈட்டுவதற்குரிய தொழில்களான கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, உணவுப் பொருட்கள் தயாரிப்பு, தையல் முதலானவற்றை இந்நிறுவனங்கள் பரிந்துரை செய்து அவற்றுக்கான அனுசரணை வழங்கி உதவித் தொகைகளையும் அளித்தன. இவை ஆணாதிக்க நிலையில் பெண்களின் பால்நிலை அதிகாரத்தை மாற்றாத செயற்பாடுகளாகவே அமைந்திருந்தன. அதேசமயம் பெண்கள் தம் உளநிலைப் பாதிப்பில் இருந்து விடுபட்டு தம் சவால்களை வெற்றிகொண்டு தலைமை தாங்கி, தமக்கான அடுத்தகட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையிலான செயல்திட்டங்கள் சிலவற்றை குழுக்களும் நிறுவனங்களும் பெண் அமைப்புக்களும் நடைமுறைப்படுத்தின.

போரால் நேரடியாகப் பாதிப்புக்குள்ளான பெண்கள், தம் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் தமக்குள் இணைந்து சில அமைப்புக்களை உருவாக்கினர். அவ்வகையில் 1990-ம் ஆண்டில் போரில் தம் துணைவர்களை இழந்த பெண்களால் 1991-ம் ஆண்டில் பாண்டிருப்பு கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'கணவனை இழந்தோர் கூட்டுறவுச் சங்கம்' முதன்மையான அமைப்பாகும். இதுபோல அக்கரைப்பற்று மகாசக்தி (1992), அக்கரைப்பற்று பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் (1994) போன்றவையும் போரால் பாதிப்புற்ற பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட அமைப்புகளாகும். பெண்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு பனை அபிவிருத்தி சபையினால் 1989-ல் ஆரம்பிக்கப்பட்டு 1990-ல் பதிவு செய்யப்பட்ட உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனமும் இவ்வகையில் குறிப்பிட்ட பங்களிப்பை வழங்கியது எனலாம். அமைதியற்ற போர் சூழலினாலும் இடம்பெயர்வு, முகாம் வாழ்க்கையாலும் பாதிக்கப்பட்ட மற்றும் குடும்பங்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு, கலாசார கட்டமைப்புகளால் சீர்குலைக்கப்பட்டு ஆதாரவற்று அவல வாழ்வு வாழும் பெண்களுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்ட இவ்வமைப்புக்கள் பிள்ளைகளின் கல்வி, போசாக்கு, சுகாதாரப் பழக்கவழக்கங்களிலும் கவனஞ் செலுத்தின. சூழ்நிலைகளின் தாக்கத்தால் குடும்பங்களுக்குள் அமைதி குலைந்து பிரச்சினைகள் உருவாகி குடும்பப் பிரிவுகள், விவாகரத்து சம்பவங்கள் அதிகரித்துச் செல்லும் சமயங்களில் அதற்கு எதிராகவும் இவ்வமைப்புகள் செயற்பட்டன. ஒரு சமூகத்தின் அபிவிருத்திக்கான அளவுகோல் மனிதநேயம் என்பதை வலியுறுத்தும் இவ்வமைப்புகள் பெண்கள் சுதந்திரம், கௌரவம், சமத்துவம் மதிக்கப்பட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி நிற்கின்றன. பெண்களின் உரிமைகளும் அந்தஸ்தும் பேணப்படும் பொழுதுதான் அந்த சமூகம் முன்னேற்றம் அடைந்து முழுமைபெறும் என்பதைக் கருத்தில் கொண்டு இயங்கும் இப்பொது அமைப்புக்கள் வன்முறைகளற்ற சமூகமாக மாறுவதற்கு ஆண், பெண் அனைவரும் சமத்துவமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி நிற்கின்றது.

1991-ல் இலங்கையில் நடைபெற்ற போரால் வடக்கு, கிழக்குப் பகுதியில் இருந்த சனத்தொகையில் 1.2 இலட்சத்துக்கு அதிகமான மக்கள் கொழும்பை அண்டிய பகுதிக்கு இடம் பெயர்ந்தனர். இந்நிலையில் இடம்பெயர்ந்தவர்களைக் கருத்திற் கொண்டு யாழ்ப்பாணத்தின் அன்னையர் முன்னணியினதும் பெண்கள் ஆய்வு வட்டத்தினதும் செயற்பாட்டாளராக இருந்து இடம் பெயர்ந்த பெண்கள் சிலரும், முஸ்லிம் பெண்கள் ஆய்வு மற்றும் கொழும்பு பெண்கள் அக்ஷன் ஃபோறம் ஆகியவற்றோடு இணைந்து சந்திப்பொன்றை மேற்கொண்டனர். இச்சந்திப்பின் பயனாக இடம்பெயர்ந்தவர்களின் மத்தியில் வேலை செய்வதற்காகச் 'சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்' உருவானது. குறிப்பாக மட்டக்களப்பில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து கொழும்பில் அகதி முகாம்களில் தங்கியிருந்த மக்களில் பெண்கள், சிறுவர்களின் பிரத்தியேகப் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதனைச் சீர்செய்யும் முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. இடம்பெயர்ந்த மக்களில் சிலர் மீண்டும் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டத்தைத் தொடர்ந்து 1994-ல் இவ்வமைப்பு மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டது. 1994-லிருந்து மாவட்டத்தில் நிலவும் ஆணாதிக்க பால்நிலைப்பாகுபாடுகளை அடையாளம் கண்டு அவற்றுக்கு பெண்நிலைவாத கருத்தியலின் அடிப்படையில் பதிலிறுக்கும் அமைப்பாக இயங்கி வருகின்றது. இவ்வமைப்பினரால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முதன்முதலாக 1995-ம் ஆண்டு சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2005-ம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பெண்களின் மீள்எழுச்சியைக் கொண்டாடும் விதமாக கிழக்கு மற்றும் தென்னிலங்கைப் பெண்களுடன் இணைந்து சூரியா அமைப்பு சர்வதேச பெண்கள் தினத்தைக் கொண்டாடியது. 1999-ம் ஆண்டில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினராலும் அவர்கள் சேவையாற்றிய பிரதேசங்களைச் சேர்ந்த கிராமியப் பெண் குழுக்களாலும் முன்னெடுக்கப்பட்ட 'யுகங்களின் மௌனத்தை இன்று நாம் கலைக்கின்றோம்' என்ற ஊர்திகளுடனான ஊர்வலம் ஈழத்தமிழர்கள் மத்தியில் முக்கிய கவனத்தை பெற்ற ஊர்வலமாகும். பாதுகாப்புத் தடைகளையும் மீறி வெவ்வேறு கிராமங்களிலிருந்து வந்த பல்வேறு பெண் குழுக்களும் இவ்வூர்வலத்தில் கலந்து சிறப்பித்தன.

இதனை அடுத்து 2001-ம் ஆண்டு மன்னாரில் பொலிஸ் பாதுகாப்பில் இருந்த இரு பெண்கள் மீது நிகழ்த்தப்பட்ட பாலியல் வல்லுறவைக் கண்டித்து இதற்கு நீதியை வழங்கும்படி ஜனாதிபதியிடம் கோரும் வண்ணம் '10,000 தபாலட்டைகள் பிரச்சாரம்' கிழக்குப் பிராந்தியப் பெண்கள் கூட்டமைப்பினரால் முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பில் வீட்டு வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் பலாத்காரங்கள் போன்ற பலவகையான வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சட்ட உரிமைகளினூடாகத் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் முன்னின்று உழைத்தது. இராணுவத்தினர், பொலிஸ் மற்றும் ஆயுதக் குழுவினராலும் இழைக்கப்பட்ட வன்முறைக்கும் எதிரான நடவடிக்கைகளிலும் பெண்களும் பெண்கள் அமைப்புகளும் ஈடுபட்டன.

இந்தக் காலப்பகுதியிலேயே கிழக்கில் மட்டுமல்லாது முழு இலங்கையிலும் பெண்நிலைவாத அமைப்பாக அங்கீகாரம் பெற்று இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் சமூகத்தால் பாதிக்கப்பட்ட, கைவிடப்பட்ட, நிராதரவாக்கப்பட்ட பெண்களுக்காகத் தொடர்ந்தும் தன் பணியை ஆற்றிவருகிறது. கல்வி அறிவுக்கூடாகப் பெண்விழிப்புணர்வைத் தூண்டும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் பெண் கீழ்நிலைப்படுத்தப்படுவதைக் கண்டிப்பதுடன் பாலியல் சுரண்டல்களுக்கு எதிராகவும் போராடி வருகிறது. இவ்வாறு நிறுவனங்களாகப் பதிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் தவிர சில பெண்கள் குழுக்களும் அமைப்பற்ற முறைகளில் நீதிக்கான தமது போராட்டங்களை கிழக்கில் முன்னெடுத்துள்ளன. இவற்றுள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவை காணாமல் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகளாகும்.

1996-ம் ஆண்டு புரட்டாதி மாதம் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் செயற்பட்டு வரும் பெண்கள் நிறுவனங்களை ஒன்றிணைத்துக் கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியது. இதில் யுத்தத்தால் பாதிக்கப்

பட்ட பெண்கள், தமது வாழ்வாதாரங்களை இழந்த பெண்கள், கிராம மட்டத்தில் இருந்த பெண்கள், தத்தமது தேவைகளுக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடும் பெண்கள் என பலரும் அமைப்பு ரீதியாக ஒன்றிணைந்தமை பாரியதொரு மாற்றமாகும். கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பில் 'திருகோணமலை இந்து மகளிர் மன்றம்', 'அக்கரைப்பற்று பாதிப்புற்ற பெண்கள் அரங்கம்', 'மட்டக்களப்பு உழைக்கும் மகளிர் அபிவிருத்தி மன்றம்', 'அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு', 'மட்டக்களப்பு நட்புறவாளர் ஒன்றியம்', 'பாண்டிருப்பு கணவனை இழந்தோர் சங்கம்', 'மட்டக்களப்பு பெண்கள் அபிவிருத்தி அரங்கு', 'அக்கரைப்பற்று மகா சக்தி நிறுவனம்', 'நாவற்குடா உழைக்கும் மாதர் சங்கம்', 'மட்டக்களப்பு கனடிய உலக பல்கலைக்கழக சேவைகள்', 'காரைதீவு அம்பிகா மாதர் சங்கம்', 'மட்டக்களப்பு இளம் கிறிஸ்தவ மகளிர் அமைப்பு' போன்ற 12 அமைப்புக்கள் இணைந்துகொண்டன.

பெண்கள் பற்றிய அறிவை ஊட்டுவதற்கும் அவர்களைப் பாதுகாப்பதற்கும், ஒவ்வொரு கிராமங்களிலும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளனைத்தையும் கண்டறிந்து சகலரும் அதற்கான தீர்வுகளையும் காணுவதற்கும் கிராமங்களிலுள்ள தேவைகளை இனங்கண்டு வளங்களை விரிவுபடுத்திகொள்வதற்கும் அதேசமயம் வளங்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கும் குடும்பங்களிலும், அதற்கு வெளியிலும் பெண்களுக்கு ஏற்படக்கூடிய வன்முறைகளுக்கெதிராக எல்லோரும் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதற்கும் தீர்வு காணமுடியாத சில பிரச்சினைகளுக்கு உயர்மட்டரீதியில் சென்று தீர்வு காண்பதற்கும் பலமற்ற பெண்கள் அமைப்புகளை முன்னேற்றுவதற்கும் கிழக்குப் பிரதேசப் பெண்களின் விசேட பிரச்சினைகளை தேசிய / சர்வதேச ரீதியில் வெளிக்கொணர்வதற்கும் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கும் உருவாக்கப்பட்ட அமைப்பே கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பாகும். நாட்டின் யுத்த சூழலில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் பாலியல் வன்முறைகளுக்கெதிராக தேசிய மட்டத்தில் குரல் கொடுத்த இவ்வமைப்பு தெற்கில் இயங்கிவரும் பெண்கள் அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மூலம் பெண்களின் சுயமுன்னேற்றம் அபிவிருத்தி தொடர்பான பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றிய விபரங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வதும், அவை தொடர்பான நடவடிக்கைகள், ஆலோசனைகள் பற்றிக் கலந்துரையாடுவதும், அதன்மூலம் ஒரு பொதுக்குரலை வெளிப்படுத்துவதும், பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்குப் பதிலிறுப்புக்களைச் செய்வதும் இந்தக் கூட்டமைப்பின் முக்கிய நோக்கங்களாக இருந்தன. வடக்கு கிழக்குப் பகுதிகளில் 'கிழக்கு பிராந்திய நிறுவனங்களின் கூட்டமைப்பினர்' 1996 தொடக்கம் 2002 வரையான காலப்பகுதிகளில் இடம்பெற்ற பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் பலவற்றுக்காக நீதி கேட்டுப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். யுத்த சூழ்நிலையின் அழுத்தங்களுக்கிடையில் கிழக்கு பிராந்தியத்தில் மட்டக்களப்பு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட பாலியல் பலாத்காரம் மற்றும் கொலைச் சம்பவங்களுக்காகவும் நீதி கேட்டு நீதிமன்றங்களில் இராணுவத்தினருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்த இவ்வமைப்பினர், இவர்களுக்கு எதிராக அறிக்கைகள் பலவற்றையும் வெளியிடப்பட்டனர். கிருஷாந்தி குமாரசாமி (1996- செப்ரெம்பர் 7-ம் திகதி சுண்டுக்குளி - யாழ்ப்பாணம்), முருகேசுப் பிள்ளை கோணேஸ்வரி (1997 – மே 19 மத்தியமுகாம்-அம்பாறை), சாரதாம்பாள் (1999 டிசம்பர் 28-ம் திகதி புங்குடுதீவு -யாழ்ப்பாணம்) ஆகியோர் மீது நடத்தப்பட்ட பாலியல் பாலத்காரம் மற்றும் படுகொலைகளைக் கண்டித்து நடவடிக்கை எடுக்கக் கோரி ஜனாதிபதிக்கு கடிதம் மற்றும் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதுடன் இவ்வமைப்பினரால் துண்டுப்பிரசுரமும் வெளியிடப்பட்டன. இவற்றுள் சிலவற்றுக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து பதிலிறுப்புகளும் கிடைக்கப்பெற்றமையானது பெண்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து செயற்பட்டமைக்கான வலுவைக் காட்டுவதாக அமைகிறது.

30.11.2000, 19.12.2004 காலப்பகுதியில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்துடன் இணைந்து கிழக்குப் பிராந்திய பெண்கள் கூட்டமைப்பினர் 'வன்முறையின் சாட்சியாய் ஆடைகள்' (clothline campaign) எனும் கருப்பொருள் கொண்ட பிரசாரம் ஒன்றினை மேற்கொண்டனர். பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது சமூகத்தை அழிக்கவல்லது என்பதை மக்களுக்கு உரைக்க வல்லதாய் இது அமைந்திருந்தது. இவ்வமைப்பினர் பெண்கள் அணித்திருக்கின்ற ஆடைகளிலேயே அவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறையை எழுதி அந்த ஆடைககளை மக்கள் பார்க்கும் வண்ணம் பொது இடங்களில் சலவைக் கொடிகளில் தொங்கவிடப்பட்டு காட்சிக்கு வைத்தனர். ஒவ்வொரு இல்லங்களிலும் அழுக்கு உடைகளைத் துவைத்து வீட்டின் பின்புறம் கொடி கட்டி உலரப் போடுதல் வழமையாகும். அதுபோல சமூகத்தின் அழுக்காக உள்ள பெண்களுக்கெதிரான வன்முறைகளைப் பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே இந்தப் பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. இச்செயல்வாதம் மட்டக்களப்பின் பொது இடங்களான காந்தி சதுக்கத்திலும், அரசடிப் பகுதியிலும் இடம்பெற்றன.

இலங்கையின் யுத்தம் முடிவடைந்து சமாதான சூழல் மற்றும் சிவில் நிர்வாகம் காணப்பட்ட வேளையில் 2011-ம் ஆண்டு 6-ஆம் மாதத் தொடக்கத்திலிருந்து வடக்கு, வடமேற்கு மற்றும் சில மலையகப் பகுதிகள் மற்றும் கிழக்குப் பகுதிகளில் கிறிஸ்மனிதன் பற்றிய பிரச்சினை உலாவத் தொடங்கிய சூழலில் சம்பவங்கள் நிகழ்ந்ததாகக் கூறப்பட்ட இடங்களுக்குச் சென்று தாக்குதலுக்குள்ளான பெண்களது நிலையைக் கண்டறிந்து அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் வகையில் பெண்கள் அனர்த்த முகாமைத்துவக் கூட்டமைப்பு 'அச்சத்தைத் தவிர்ப்போம்!', 'பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம்!' எனும் தலைப்பு இடப்பட்ட துண்டுபிரசுரங்களை வெளியிட்டது.

குறிப்பிட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவும் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து விடுபடுவதற்காகவும் தமது வலுவை மீள நிலைப்படுத்திக் கொள்வதற்காகவும் சமூக, பொருளாதார தளங்களை மேம்படுத்துவதற்காகவும் பெண்கள் சிறுசிறு குழுக்களாக இயங்கினர். கிழக்கில் தோன்றிய பெண்நிலைவாத நோக்குடனான வலையமைப்புக்களில் குறிப்பிடத்தக்கவை கிழக்குப்பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பு (1996-2003), மற்றும் சுனாமிக்குப் பின்னரான அனர்த்த முகாமைத்துவக் கூட்டமைப்பு (2005 - இன்று வரை), பொகுஸ் வுமென் பெண்களின் மாற்றத்திற்கான செயற்பாட்டு வலையமைப்பு, மற்றும் அம்பாறை மாவட்ட

பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இக்குழுக்கள் சமூகத்தில் வேரோடிப் போயிருந்த ஆணாதிக்கத்தைக் கேள்வி கேட்கவும் பெண்கள் தமக்கிழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக நீதி தேடும் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் வழிவகுத்தன. இவ்வலையமைப்புகள் பெண்களது பொதுவான பிரச்சினைகளோடு மட்டும் நின்றுவிடாது இடம்பெயர்ந்தோர், விளிம்புநிலையில் வாழ்வோர் என பல்திரள்பட்ட மக்களது உரிமைக்காகவும் முன்னின்று உழைத்தது. சுனாமியால் பாதிக்கப்பட்டு மக்கள் இடம்பெயர்ந்து அல்லலுற்ற வேளையில் பெண்களின் நலன் மற்றும் அவர் தம் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட அமைப்பாகவே அனர்த்த முகாமைத்துவ கூட்டமைப்பு செயற்பட்டு வந்துள்ளது. இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான வைத்தியசாலைகளில் இயங்கும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைக் கையாளும் பிரிவுகள் மற்றும் மாவட்ட செயலகங்களில் மையப்படுத்தப்பட்டுள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான செயலணிகள் போன்றவற்றின் உருவாக்கமும் இவ்வகையில் முக்கியமானது. அத்துடன் இவ்வமைப்புகள் பெண்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து செயற்படுபவர்களுடன் இணைந்து இன்று வரை தொடர்ச்சியான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

இது தவிர தனிநபர் செயல்வாதத்தின் இன்னொரு பிரதான விடயமாக பெண்கள் தமது உணர்வுகள் உரிமைகள் குறித்த கருத்துகள், செயல்வாதங்களை பல்வேறு ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தத் தொடங்கினர். பெண்களின் சிந்தனைகளை விருத்தி செய்யும் நோக்கிலும் அவர்கள் தம் தூர நோக்கை அடைந்துகொள்ளும் வகையிலும் அவர்களைச் சிறுகதை, கவிதை, நாடகம், ஓவியம் போன்ற கலை இலக்கிய விடயங்களில் ஈடுபடுத்தும் முகமாகவும் அவர்களுக்கான பயிற்சிப்பட்டறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு இவ்வமைப்புகளால் முன்னின்று நடத்தப்படுகின்றன. சூரியாவால் உருவாக்கப்பட்ட 'பாதிப்புற்ற பெண்கள் அரங்கம்' இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். 1996-97-ம் ஆண்டு காலப்பகுதிகளில் வெளிவந்த பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தினரது 'விடியல்' சஞ்சிகையும் இதே காலப்பகுதியில் பெண்களது எழுத்துக்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகையில் வெளிவந்த சூரியாவின் 'பெண்' சஞ்சிகையும் குறிப்பிட்டுக் கூறத்தக்க முயற்சிகளாகும். இவை பெண்களது உணர்வுகள், உரிமைகளை வெளிப்படுத்தும் வகையில் வெளிவந்த சஞ்சிகைகளாகும். விஜயலட்சுமி சேகர், கி. கலைமகள், வாசுகி குணரெத்தினம், மருதூர் அனார், ம. நதீரா, ஜெ. பாலறஞ்சனி, வு. உருத்திரா, கே. சுதாகினி, க. கமலினி, தில்லை, செய்யது அகமட் ஸர்மிளா, லோகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி, மலரா, தமிழ்நதி என இலக்கிய ஆளுமைகள் பலர் உருவாக இச்சஞ்சிகைகள் வழிசமைத்தது எனலாம்.

கடந்த சில தசாப்தங்களாக பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான தினமான நவம்பர் 25 தொடக்கம் மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10 வரையான காலப்பகுதியில் 'பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் செயல்வாதத்துக்கான 16 நாட்கள், உலகெங்கும் பலவித அமைப்புகளாலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. 1981-ல் கொலம்பியாவில் நடத்தப்பட்ட இலத்தீன் அமெரிக்கப் பெண்நிலைவாதிகளின் மாநாட்டில் நவம்பர் 25-ஆனது பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு எதிரான தினமாகத் தீர்மானிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1999-இல் ஐநா சபை (பொதுச்சபை தீர்மானம் 54/134 இன்படி) நவம்பர் 25-ஐ பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான தினமாக அறிவித்தது. இதனை அடுத்து 1991-ல் பெண்களின் பூகோளத் தலைமைத்துவத்துக்கான மையமும், பெண்கள் - வன்முறை மற்றும் மனித உரிமைகளுக்கான பெண்களின் பூகோள நிறுவனமும் இணைந்து 16 நாள் செயல்வாதத்தை அறிவித்தன. அவ்வகையில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை களையும் நோக்கில் 2000-ம் ஆண்டு முதல் மட்டக்களப்பில் 16 நாள் செயல்வாதமும் பெண்கள் அமைப்புக்களால் ஆரம்பிக்கப்பட்டு இற்றை வரை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பெண்களது உரிமைகள் சார்ந்த விடயங்களை வெளிக்கொண்டு வரும் வகையிலும் யுத்த அநீதிகளுக்கெதிரான செய்திகளை வெளிப்படுத்தும் நோக்கிலும் கிழக்குப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் இவ்வாறான பிரச்சார செயல்வாதங்கள் திட்டமிட்ட கருப்பொருளில் சமூகத்துக்குத் தேவையான வலுவான செய்தியைக் கூறிச் செல்கின்றன.

சுனாமிக்குப் பின்னரான காலப்பகுதிகளிலும் மீளமைப்பு வேலைத்திட்டங்களிலும் பெண்களின் விடயங்களைக் கருத்தில் எடுப்பதற்காக அமைக்கப்பட்ட வலையமைப்பான அனர்த்த முகாமைத்துவப் பெண்கள் கூட்டமைப்பு, பெண்கள் நிறுவனங்கள், கிராமிய பெண்குழுக்களின் அங்கத்தவர்கள், சுனாமியால் இடம்பெயர்ந்தோர், முகாம்களில் உள்ள பெண் குழுக்களைச் சேர்ந்தவர்கள் இதில் முழுமையாக தம்மை இணைத்துச் செயற்பட்டனர். பெண்கள் உரிமைகளை அறிவுறுத்தும், பால்நிலை சமத்துவத்தை நோக்கிய கருத்தியல் மனப்பாங்கு மாற்றத்துக்கான இணைந்த செயற்பாடுகளாகக் குறிப்பிடக்கூடிய இன்னொரு விடயம் கலைச் செயற்பாடுகளாகும். கிழக்கின் பெண்கள் அமைப்புக்களும், பெண்நிலைவாதிகளும் காலத்துக்கு காலம் தமது குரல்களை வெளிப்படுத்தக்கூடிய கூட்டான கலை வெளிப்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

பெண்நிலைவாத நோக்குடனான வெளிப்பாடுகளை ஆற்றுகைகளுக்கூடாக தொடர்ச்சியாக வெளிப்படுத்துபவர்களாகச் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரின் கலாசாரக் குழுவைக் கூறலாம். இந்தக் குழுவானது தாம் வேலை செய்த கிராமங்களிலிருந்து இணைந்து கொண்ட இளம் பெண்கள், ஆண்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. 1998-99-ம் ஆண்டிலிருந்து குழுவாகச் செயலாற்றத் தொடங்கிய இவர்கள் பாடினிகள் என்ற பெயருடன் 2003-2004 காலப்பகுதியில் செயற்படத் தொடங்கினர். இக்குழுவினர் நாடக ஆற்றுகையுடன் நின்றுவிடாது பாடல்களுக்கூடாகவும், கவிதா நிகழ்வுகளுக்கூடாகவும், கண்காட்சிகளுக்கூடாகவும் தம் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். 1999 ஓகஸ்ட் மாதம் சூரியா பெண்கள் அபிவிருத்தி பயிற்சி பட்டறையின் போது உருவாக்கப்பட்ட 'மட்டுநகர் கண்ணகைகள்' மட்டக்களப்பின் பாரம்பரியக் கலை வடிவமான கண்ணகை குளிர்த்தியினை அடிப்படையாகக் கொண்டு கைதுகள், தாக்குதலால் கணவனை இழந்த பெண்களின் அவலங்களைச் சித்திரிக்கிறது. இந்நாடகத்தில் இடம்பெறும் பாடல்கள் கண்ணகி குளித்தி மெட்டில் அமைந்திருந்தது என்பதுவும் இங்கு நோக்கத்தக்கது. பாலியல் பலாத்காரங்களுக்கு எதிராக செய்யப்பட்ட ஆவண வடிவிலான அளிக்கையான 'நிசப்த இரைச்சல்' மற்றும் கலாசார குழு உறுப்பினர்களாலேயே தமது அனுபவங்களைக்

கொண்டு தொகுக்கப்பட்ட வீதி நாடகமான 'இது எமது படைப்பு' முதலான நிகழ்வுகளும் யுத்தப்பாதிப்புகளையும் இயற்கை மற்றும் பெண்கள் சார் விடயங்களையும் இணைத்து அளிக்கை செய்யப்பட்ட 'காவலம்மா' நாடகமும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. யுத்தமும் அதனூடாக வெளிப்படும் அரசியலும் பெண்நிலைவாதச் செயற்பாடுகளுக்குப் பிரதான சவால்களாக அமைந்த நிலையில் இந்நாடகங்கள் பெண்கள் உரிமைகள் மதிக்கப்பட்டு அவர்களும் ஆண்களுக்கு நிகராக சமூகத்தில் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்பதையும் உணர்த்தி நின்றன.

2002 பெப்ரவரி நோர்வே நாட்டின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் செய்து கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து விடுதலைப்புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நடமாடத் தொடங்கிய பின் பெண்கள் அமைப்புகளை தங்களுடன் இணைந்து செயற்படும்படி வலியுறுத்தினர். சவால் மிக்க பாரிய பிரச்சார நிகழ்வுகளை ஒருங்கிணைத்த கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பிற்கும் அதனை இணைப்பாக்கம் செய்த பெண்கள் நிறுவனத்துக்கும் இத்தகைய கோரிக்கைகள் நேரடியாக முன்வைக்கப்பட்டன.

1987-ல் முதன் முதல் களத்தில் கொல்லப்பட்ட பெண் போராளி இரண்டாம் லெப். மாலதியை நினைவு கூரும் வகையில் ஒக்ரோபர் 10-ம் நாளினை தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாக விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்தனர். இதனை அடுத்து தமிழ் சமூகத்தில் மரபுத் தளைக்குள் சிக்குண்டு பெண்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தமையால் அத்தடைகளைத் தகர்த்து பெண்களையும் தேசிய போராட்டத்தில் ஒன்றிணைத்து செயற்படுமுகமாக தமிழீழம் எங்கும் ஆண்டுதோறும் இந்நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வீரத்திலும், தியாகத்திலும், விடுதலை உணர்விலும் ஆண்களுக்கு எவ்வகையிலும் பெண்கள் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளினை நினைவு கூரும் வகையிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமியப் பெண்களின் வாழ்க்கையை மீட்டெடுக்கும் வகையிலும் 2002-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 28,29,30-ம் திகதிகளில் தமிழர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் தேசிய மகளிர் நாள் கிளிநொச்சி கனிஷ்டாவில் கொண்டாடப்பட்டது. அனைத்து மாவட்டங்களில் இருந்தும் 3,000 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். தேசிய மகளிர் நாள் கூட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெண் அமைப்புகளும் பங்குபற்றின. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்துப் பெண் பிரதிநிதிகளாலும் அம்பாறை, மட்டக்களப்பு பிரதிநிதிகளாலும் அவ்வவ் மாவட்டப் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தான அறிக்கைகள் வாசிக்கப்பட்டன. இராணுவ ஆக்கிரமிப்புக்குள் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், உழைப்புக்கேற்ற ஊதியமின்மை, பெண் பிள்ளைகள் சிங்கள ஊர்களில் வேலைகளுக்குச் செல்வதால் எதிர்நோக்கும் இடர்பாடுகள், பெண்கள் பாடசாலை செல்லாமை குறித்து விளையும் பிரச்சினைகள் குறித்து பல்வேறு விடயங்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டன. பாதிப்புற்ற பெண்களை இனங்கண்டு புதிய கருத்தூட்டல்களையும் வாய்ப்புக்களையும் வழங்கி அவர்களை மேம்பாடடையச் செய்வதற்கான வழிகளும் கலந்தாலோசிக்கப்பட்டன.

2003-ம் ஆண்டு சர்வதேச பெண்கள் தினத்தை தமது கொடியின் கீழ் நடத்த வேண்டும் என்ற நிபந்தனை நேரடியாக விடுக்கப்பட்டது. இதனை அடுத்து 2003-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மட்டக்களப்பு கல்லடி இசை நடனக் கல்லூரி மண்டபத்தில் 27, 28, 29-ம் திகதிகளில் தேசிய பெண்கள் மாநாடு ஒன்று இடம்பெற்றது. இதனை மட்டு - அம்பாறை மாவட்ட சமூக மேம்பாட்டு அமைப்பினர் ஒழுங்கு செய்திருந்தனர். இம் மாநாட்டுக்கு திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பெண்கள் வந்திருந்தனர். முதல் நாள் நிகழ்வு கல்லடிப் பாலம் வரை பெண்கள் விளிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பெண் சாதனையாளர்களின் வர்ணப்படங்கள் தாங்கிய ஊர்திகள் சகிதம் பெரும் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. அம்பாறை மாவட்ட மகளிர் அணித் தலைவி பாணுகா தலைமையில் நடைபெற்ற அம்மாநாட்டில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பிற்போக்கான குறுகிய சிந்தனைக்குள் பெண்கள் கட்டுண்டு கிடக்காமல் பெண்கள் முன்னேற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு நடத்தப்பட்ட இம்மாநாட்டில் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. அவ்வகையில் காலாதிகாலமாக சமூகப் பிற்போக்குத்தனங்களில் கட்டுண்ட நிலையிலுள்ள பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பெண்களின் தனித்துவமான ஆற்றல்களை இனங்கண்டு வழிப்படுத்துதல், தாயகத்தின் ஒவ்வொரு கிராமத்தையும் எழுச்சி பெறச் செய்தல், சமூக மேம்பாட்டுக்காக போராட்டத்தில் பெண்கள் பங்கெடுத்தல், பெண்களின் உள, உடல் ஆற்றல்களை வளப்படுத்தல் என தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பெண்களது பலவகையான பிரச்சினைகளைப் பலதரப்பினருடன் தொடர்பு கொண்டு கையாள வேண்டியிருந்த பெண்கள் அமைப்புகளுக்கு ஓர் அரசியல் தரப்புடன் மட்டும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதில் சிக்கலிருந்தது. முக்கியமாக பெண்நிலைவாத அரசியலுடன் பொருந்தாத வன்முறை அரசியலுடன் அடையாளப்படுத்திக்கொள்ளும் குழுவுடன் இணைந்து செயற்படுவதில் பிரச்சினை இருந்தது. அதிகாரமுள்ளவர்களுடன் எழுந்த இத்தகைய முரண்பாடுகள் கிழக்கில் வலுப்பெற்றதைத் தொடர்ந்து மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பெண்நிலைவாதிகள் தமது செயல்வாதங்களைக் குறைத்துக் கொண்டனர். தன்னார்வத்துடன் பெண்நிலைவாத செயற்பாட்டாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட செயல்வாதங்கள் இக்காலப்பகுதியில் உத்வேகமற்று இயல்பிழந்து போயின. அத்துடன் நிதி வழங்கும் நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்களின் தலையீடும் இச்செயல்வாதங்களை தொடர்ந்தும் உரிய முறையில் முன்னெடுப்பதற்குத் தடைகளாக அமைந்தன. இந்த நிலையில் பெண்நிலைவாதிகளாகத் தம்மைக் கருதும் பெண்களும் ஆண்களும் இயலுமான வரை தமது நிகழ்ச்சித்திட்டக் கடமைப்பரப்புக்குள் நின்று மட்டுமே பெண்களது உரிமைகளுக்கான வேலைகளைச் செய்ய முனைந்தனர்.



ramesh.s@thaiveedu.com

# ஐந்நூற்றுவர்

- த. ஜீவராஜ்



20

ஆளப்பிறந்தாளுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை அறிந்து கொள்வதில் ஆதினி ஆர்வமாக இருந்தாள். ஆனால் மாதவரும், அறிவாட்டியும் தொடர்ந்து பழைய கதைகளைப் பேசிக்கொண்டு வந்ததால் அவளால் அது தொடர்பில் கேட்டறிய முடியாது இருந்தது. கோதையும், கோதையின் தாயும் அதே ஏக்கத்தோடு இருப்பதை அவர்களது முகபாவனை ஆதினிக்குப் புரிய வைத்தது. இருள் தொடங்கும் நேரத்தில் அவர்கள் கப்பல்துறைக்கு வந்து சேர்ந்தார்கள். மாதவர் முகத்தில் திருப்தி நிலவியது. அவர் அறிவாட்டியுடன் உரையாடியதில் இருந்து இரவு நேரங்களில் சிறுத்தை, கரடிகளின் தாக்குதல் தம்பலகாமத்திற்கும், கப்பல்துறைக்கும் இடையிலான பாதையில் அதிகம் என்பதை ஆதினி புரிந்து கொண்டாள்.

அறிவாட்டி குழுவினரை பாதுகாப்பாக கப்பல்துறைக்கு கொண்டு வந்து சேர்த்தத் திருப்தியோடு மாதவர் தனது மாட்டு வண்டிலை ஒரு குடிசையின் முன்னால் நிறுத்தினார். அது ஒரு சிறிய மண் குடிசை. உள்ளும், புறமும் சுத்தம் செய்யப்பட்டிருந்தது. குடிசையின் ஓர் ஓரத்தில் வாழையிலையில் உணவும், மண் பானையில் தண்ணீரும் இருப்பதாக அங்கிருந்த பெரியவர் மாதவரிடம் கூறினார். நுளம்புகளை விரட்ட பயன்படுத்தப்படும் கழுத்தில் துளையிடப்பட்ட மட்பாண்டம் ஒன்று தேவையான மூலிகைச் செடிகளோடு குடிசையின் மூலையில் வைக்கப்பட்டிருந்தது. நங்கைசானி அம்மையாரின் கட்டளைக்கமைய வேளைக்காரப் படைப்பிரிவின் உத்தரவின்படி யாத்திரிகர்கள் தங்கிச் செல்லும் அந்த இடம் தயார் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அந்த பெரியவர் சென்ற பின்னால் மாதவர் அறிவாட்டியிடம் கூறினார்.

அனைவரும் குளித்து உணவருந்துவதற்காக உட்கார்ந்த போது நன்றாக இருட்டி விட்டிருந்தது. மாதவர் குடிசைக்கு வெளியிலும், மற்றைய நால்வரும் குடிசைக்குள்ளும் உணவருந்திக் கொண்டிருந்தனர். அப்போது திருகோணமலை நோக்கிய நெடுஞ்சாலையில் குதிரைகளின் குளம்பொலி கேட்கத் தொடங்கியது. உணவருந்துவதை நிறுத்திவிட்டு நால்வரும் குடிசைக்குள் இருந்தபடி வெளியில் பார்த்தார்கள். குதிரை வீரர்கள், மாட்டு வண்டில்கள், பல்லக்கு என்று ஒரு தொடரணியாக பலர் செல்வதைக் குடிசைக்கு முன்னால் ஏற்றப்பட்டிருந்த தீப்பந்த வெளிச்சத்தின் உதவியோடு அவர்களால் காணக்கூடியதாக இருந்தது. அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த இரண்டு குதிரை வீரர்கள் மாதவருடன் கதைத்துக் கொண்டிருந்தார்கள். யார் பாட்டி இவங்க? ஆதினி ஆர்வத்தோடு கேட்டாள்.

ஐந்நூற்றுவர், வீரர்கள் ஏந்தி இருக்கிற கொடியில காளை மாட்டுச் சின்னத்தைப் பார்க்கலையா என்றாள் அறிவாட்டி.

இதுவும் ஒரு படைப்பிரிவா என்று கோதையின் தாய் கேட்டாள்.

இல்லை. வணிகக் குழு. ஊர் ஊரா வியாபாரம் செய்கிறவர்கள். அவங்க தங்கட பாதுகாப்புக்காக படை வீரர்களையும் வச்சிருக்காங்க என்றாள் அறிவாட்டி.

எங்க இருந்து வராங்க? திருக்கோணேச்சரத்துக்கா போறாங்க? என்று கேட்டாள் ஆதினி.

பொலனறுவை தெரியுமா என்று கேட்டாள் அறிவாட்டி.

ஆமா சோழர்களுடைய தலைநகர் ஜனநாத மங்கலம் என்றாள் கோதை.

இப்ப விஜயராஜபுரம் என்றாள் சிரித்தபடி ஆதினி.

அங்கே இருக்கிற புகழ் பெற்ற வானவன் மாதேவி ஈச்சர திருவிழாவில வியாபாரம் செய்துவிட்டு இவங்க வராங்க என்று நினைக்கிறேன் என்றாள் அறிவாட்டி.

உயர் வகை யானைகள், குதிரைகள், முத்துக்கள், பொன், மாணிக்கங்கள், வைரங்கள், ஏலம், கராம்பு, சந்தனம், கற்பூரம், குங்குமம், மருந்துகள், வாசனைப் பொருட்கள், எண்ணை, ஆடை, அணி, உணவு என்று அவர்கள் விற்காத பொருளும் இல்லை. தரை வழியாகவும், கடல் வழியாகவும் அவர்கள் போகாத இடமும் இல்லை என்றாள் அறிவாட்டி.

ஆச்சரியத்தோடு நால்வரும் அந்த வணிகக் குழுவினரின் பயணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவங்க பொலனறுவையில கட்டின கோவிலுக்கு ஐந்நூற்றுவ ஈச்சரம் என்று பெயர். சோழர் காலத்தில் அதிக செல்வாக்கோட இருந்தவங்க. இப்பயும் ஒன்றும் குறையவில்லை என்று நினைக்கிறேன் என்றாள் அறிவாட்டி.

வேற கோயில் திருவிழாவுக்கு போறாங்களோ என்றாள் கோதை.

பதி(பதவியா) நகர்ல இருக்கிற இரவிகுல மாணிக்க ஈச்சரத்திலதான் இனித் திருவிழா நடக்கும். ஒரு வேளை திருக்கோணேச்சரம் போய்விட்டு இரவிகுலமாணிக்க ஈச்சரம் போக



இருக்கிறார்களோ தெரியவில்லை என்று அறிவாட்டி சொல்லிக் கொண்டிருக்கும்போதே... ஆதினி இடைமறித்தாள்.

இப்ப திருக்கோணேச்சரத்தில திருவிழா இல்லையா பாட்டி என்றாள் ஆதினி.

திருக்கோணேச்சரத்தில எப்பயும் திருவிழா மாதிரித்தான் கூட்டம் இருக்கும். உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டிலிருந்தும் நிறைய பேர் வருவாங்க. வியாபாரிகளுக்கு கொண்டாட்டம் தான் என்றாள் சிரித்தபடி அறிவாட்டி. ஏன் இவ்வளவு நேரம் என் தம்பியோட கதைக்கிறாங்க. ஒருவேளை ஓலை ஏதும் கொண்டு வந்திருப்பாங்களோ? என்று சந்தேகத்துடன் ஆதினியை பார்த்து கேட்டாள் அறிவாட்டி.

முல்லையழகிப் பாட்டியிடம் இருந்தா? ஆதினி திருப்பிக் கேட்டாள்.

ஆம் என்பது போல் தலை அசைத்தாள் அறிவாட்டி.

பொன், பொருள் விற்கும் வணிகர்கள் செய்தி காவி உழைப்பார்களா பாட்டி என்றாள் ஆதினி.

ஞாயம்தான் நீ கேட்பது. முல்லையழகி ஓலை அனுப்ப கொடுத்திருக்கக் கூடிய காசு அவர்களைப் பொறுத்தவரையில் தூசுக்குச் சமன். ஆனா அவங்க வணிகரா இருந்தாலும் நாட்டு நிலவரத்தையும், ராஜ்ய நிலவரத்தையும் உன்னிப்பா அவதானித்துக் கொண்டே இருப்பாங்க. அதுக்காகத்தான் இப்படியான வேலைகளைச் செய்கிறாங்க என்று விளங்கப்படுத்தினாள் அறிவாட்டி பாட்டி.

ஆக சதுர்வேதி மங்கலத்தில எங்களுக்கு என்ன நடந்தது. இந்த ஓலையில என்ன இருக்குது என்று எல்லா விபரமும் அவங்களுக்கு தெரியுமா பாட்டி? அன்று வினாவினாள் ஆதினி. கோதையும், தாயும் அந்த உரையாடலை ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

பெரிய பெரிய போரே இவங்க கொடுத்த உளவு தகவலால தான் நடந்தது என்று சொல்லுவாங்க. உண்மை பொய் தெரியாது என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

ஐந்நூற்றுவர் வணிக குழு தொடர்பில் குடிசைக்குள் இத்தனை உரையாடல்கள் நடந்து கொண்டிருந்த அதேவேளை வெளியில் நின்றிருந்த மாதவரிடம் உள்ளே இருப்பவர்கள் தொடர்பிலான முழு விபரங்களையும் வணிகக் குழுவின் படை வீரர்கள் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தின் பின்னர் அறிவாட்டி அழைக்கப்பட்டார். அறிவாட்டிப் பாட்டியிடம் குதிரை வீரன் ஒருவன் ஏதோ ஒரு பொருளை கொடுத்து விட்டு சென்றான். ஆதினிக்கு ஆர்வத்தை அடக்க முடியாமல் இருந்தது. குடிசைக்குள் அறிவாட்டிப் பாட்டி வந்ததும்... என்ன பாட்டி ஓலைச்சுவடியா அது? என்று கேட்டுக் கொண்டு அவள் அருகில் ஓடினாள். அறிவாட்டி நீட்டிய ஓலைச்சுவடியில் கீழ் வருமாறு எழுதியிருந்தது.

*கனவுபலிததுதனிமரமெனறுஉலுபபிபபாரததாரகளபுயலாயஅடிததுமஒருஇலைகூடஉதிராமலஇருககிறதுமரம*

ஆதினியிடம் இருந்த ஓலைச்சுவடியைப் பறித்துப் படித்த கோதை குழப்பமாக அறிவாட்டியைப் பார்த்தாள். ஓலைச்சுவடியை திரும்பி வாங்கி கொண்ட ஆதினி உரத்த குரலில்

சொற்களைப் பிரித்து, தேவையான இடத்தில் குற்று வைத்து வாசித்துக் காட்டினாள்.

கனவு பலித்தது. தனிமரமென்று உலுப்பிப் பார்த்தார்கள். புயலாய் அடித்தும் ஒரு இலைகூட உதிராமல் இருக்கிறது மரம். வீரசோழன் ஆதுலர் சாலையில் ஆதினி கண்ட கனவைச் சொல்கிறாவா முல்லையழகி. அப்ப ஆளப்பிறந்தாள் தற்கொலை செய்து கொண்டாளா? என்று அதிர்ச்சியோடு கேட்டாள் கோதையின் தாய்.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com



## ஈழமும் சோழமும் 11

# சோழரை இலங்கையில் எதிர்த்த அயோத்தி அரசனும் பாண்டியரும்

வி. துலாஞ்சனன்

இராசேந்திர சோழனின் மைந்தனான இராசாதிராச சோழன் (1044 - 1052) தந்தைக்கு எவ்விதத்திலும் குறையாத பெருவீரன். அவன் காலத்தில் இராசாதிராசனின் தம்பியான வீரராசேந்திரனே சங்கவர்மன் உடையார் என்ற பெயரில் சோழ இலங்கேசுவரனாக இலங்கையை முற்றதிகாரத்துடன் ஆண்டு வந்தானென்று போன அத்தியாயத்தில் பார்த்தோம்.

இராசாதிராசனின் கல்வெட்டுகள் இலங்கையில் கிடைக்க வில்லையே தவிர, அவன் காலத்தில் இலங்கையின் அரசிய லும் கொந்தளிப்பான நிலையிலே இருந்தது என்பதும், அதில் இராசாதிராசனின் தலையீடும் இருந்தது என்பதும், அவ்வரசனால் 1044-ம் ஆண்டு பொறிக்கப்பட்ட மெய்க்கீர்த்தி களின் மூலம் தெரியவருகின்றது. இம் மெய்க்கீர்த்திகள் மணி மங்கலம், திருவொற்றியூர், திருவையாறு முதலிய கோவில்க ளில் கிடைத்துள்ளன. அம்மெய்க்கீர்த்தி அவன் காலத்தில் விக்கிரமபாகு, விக்கிரமபாண்டியன், வீரசலாமேகன், சீவல்ல-வன் மதனராசன் ஆகிய நான்கு இலங்கை அரசரைக் வென்ற தாகப் பதிவுசெய்கின்றது.

- பொருகடல் இலங்கையர் கோமான் விக்கிரமபாகு மகுட மும் உன்றனக்கு உடைத்து..,
- தென்றமிழ் மண்டலம் முழுவதும் இழந்து, ஏழ்கடல் ஈழம் புக்க இலங்கேசுரனாகிய விக்கிரம பாண்டியன் பருமணி மகுடமும்..,
- காண் தகு தன்னதாகிய கன்னகுச்சியினும் ஆர்கலி ஈழம் சீர் இது என்றெண்ணி உளம் கொள் தன் நாடு தன் உற வோடும் புகுந்து விளங்கு முடி கவித்த வீரசலாமேகன் பொருகளத்து அஞ்சி தன் கார்க்களிறு இழந்து கவ்வை யுற்று தன் அடிக் காதலியொடு தன் தவ்வையைப் பிடித்து தாயை மூக்கரிய ஆங்கு அவமானம் நீங்குவதற்காக மீண் டும் வந்து வாள் தொழில் உழந்து வெங்களத்து உலர்ந்த அச்சிங்களத்து அரைசன் பொன்னணி முடியும்...
- கன்னரன் வழி வந்து உரை கொள் ஈழத்தரைசன் ஆகிய சீர் வல்லவன் மதனராசன் மெல்லொளித் தடமணிமுடியும் கொண்டு...

என்றவாறு, இந்த மெய்க்கீர்த்தி விக்கிரமபாண்டியன் தென் தமிழ் நாட்டை ஆண்டவன் என்றும், வீரசலாமேகன் கன்னியா குப்யத்திலிருந்து இலங்கை வந்தவன் என்றும், சீவல்லவன் கன்னட தேசத்து அரசனின் துணையைப் பெற்றவன் என்றும் அது மேலும் கூறுகின்றது. இலங்கை வரலாற்று ஆவணங் களை ஆராயும் போது இக்கூற்றுகளில் ஓரளவு உண்மை உள்ளதை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது.

இந்த நால்வரில் இராசாதிராசன் வென்ற முதல் அரசனாகச் சொல்லப்படுபவன் விக்கிரமபாகு. ஐந்தாம் காசியப்பனின் மகனான விக்கிரமபாகு மறைந்ததுடன், நெடுங்காலம் இலங்கை முடியைச் சூடி அனுராதபுரச் சிங்காசனத்திலி ருந்து ஆண்ட சிங்கள அரசவம்சம் மறைந்தது. இந்த அரச வம்சம் ஏழாம் நூற்றாண்டில் ஆண்ட மானவர்மன் காலத்திலி ருந்து இடையறாது முந்நூறு ஆண்டுகள் அனுரை அரசை ஆண்ட பாரம்பரியம் கொண்ட இலம்பகண்ண வம்ச அரசா கும்.

மகாவம்சத்தின் படி, விக்கிரமபாகுவுக்குப் பின்னர் அவனுக்கு உதவி புரிந்த கீர்த்தி என்பவன் உரோகணத்தில் முடிசூடி னான். ஆனால் எட்டு நாட்களே ஆட்சிபுரிந்த அவனை, மகா லான கீர்த்தி என்பவன் கொன்று முடியைப் பறித்துக்கொண் டான். உரோகணத்தை ஆண்ட இந்த மன்னர்கள் எந்தளவு சுதந்திரம் பெற்றிருந்தார்கள் என்பதை உறுதிகூறமுடிய வில்லை. ஏனெனில் மகாலான கீர்த்தி தன் மூன்றாம் ஆட்சி யாண்டில் சோழரை எதிர்த்துப் போரிட்டதாகவும் அப்போரில் தோற்றதால் அவமானமடைந்து தன் கழுத்தைத் தானே அறுத்து வீரச்சாவடைந்ததாகவும் மகாவம்சம் கூறும். எனவே உரோகணம் அப்போது சோழரின் கட்டுப்பாட்டிலே இருந்தது என்றும் சிங்கள அரசு பெயருக்கு ஒரு அரசாக நீடித்து வந் தது என்றுமே கொள்ளமுடிகின்றது.

கீர்த்தி பற்றியோ மகாலான கீர்த்தி பற்றியோ இராசாதிராச





னின் மெய்க்கீர்த்தி மௌனம் சாதிக்கின்றன. ஒருவேளை மகாலான கீர்த்தி சோழப் பேரரசின் படையோடு மோதித் தோற்காமல், இலங்கையை ஆண்டு வந்த சோழ இலங்கேசு-வரனின் சிறுபடையோடு மோதித் தோற்றிருக்கக்கூடும். ‘மகாலான கீர்த்தி இறந்ததும் அவனிடமிருந்து கைப்பற்றிய பெருமளவு செல்வத்தை சோழப்படைகள் சோழச் சக்கரவர்த்திக்கு அனுப்பிவைத்தன’ என்ற மகாவம்சக் குறிப்பின் மூலம் இதை உறுதிசெய்துகொள்ள முடிகின்றது.

மகாலான கீர்த்தியின் மைந்தனான விக்கிரமபாண்டியன் என்பவன் சோழருக்கு அஞ்சி ‘டுளு’ நாட்டில் கொஞ்சநாள் மறைந்திருந்ததாகவும் பின்னர் மீளவும் இலங்கை வந்து காலதீர்த்தத்தில் தங்கி அரசு புரிந்ததாகவும் மகாவம்சம் சொல்கின்றது.

இலங்கையை ஆண்ட அரசர்களில் மகாவம்சத்தால் எவ்வித காழ்ப்புமின்றி குறிப்பிடப்பட்டுள்ள முதல் ‘பாண்டிய’ மன்னன் விக்கிரமபாண்டியன். அவன் காலத்தில் பாண்டியர்கள் இலங்கைச் சிங்கள அரசரோடு நெருக்கமான மண உறவைப் பேணினார்கள் என்பதை உறுதிப்படுத்த அவன் பெயர் உதவுகின்றது. இவன் ஆண்ட காலதீர்த்தம் என்பது இன்றைய கல்லுத்துறை. உரோகணம் அப்போது அவன் கையில் இருக்கவில்லை என்பதையே அவன் உரோகணத்தின் மேற்கே கல்லுத்துறையில் ஆண்டான் என்ற குறிப்பின் மூலம் ஊகிக்க முடிகின்றது.

ஆனால் விக்கிரமபாண்டியன் தென்றமிழ் மண்டலம் இழந்து ஈழம் புகுந்தவன் என்று இராசாதிராசன் மெய்க்கீர்த்தி கூற, அவன் ‘டுலு’ அல்லது ‘டொலுவ’ நாட்டில் வசித்திருந்ததாக இலங்கை நூல்கள் தெரிவிக்கின்றன. எனவே இது மேற்குக் கரையிலுள்ள துளு நாடு அல்ல. அது தென் தமிழகத்தில் முன்பு பாண்டிய ஆதிக்கத்தின் கீழ் இருந்த ஏதோவொரு பாண்டி நாட்டுப் பகுதி ஆகலாம். விக்கிரமபாண்டியன், மகாலான கீர்த்தியை மணந்த ஒரு பாண்டிய இளவரசிக்குப் பிறந்ததால் ‘பாண்டியன்’ என அழைக்கப்பட்டிருக்கலாம் என ஊகிப்பார் சதாசிவ பண்டாரத்தார். இவ்வாறு அவன் பாண்டியக் கொடிவழியில் பிறந்தவன் என்பது உறுதியாகின்றது.

விக்கிரமபாகு, விக்கிரமபாண்டியன் தவிர, இராசாதிராசன் கல்வெட்டில் வரும் வீரசலாமேகன், சீவல்லவன் மதனராசன் ஆகிய ஏனைய இருவர் பற்றி இலங்கை ஆவணங்களில் நேரடியான குறிப்பெதையும் காணமுடியவில்லை. அவர்களுக்குப் பதிலாக சகதிபாலன், பராக்கிரமபாண்டியன் ஆகிய இரு உரோகண மன்னர்கள் பற்றியே இலங்கை நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அயோத்தியிலிருந்து வந்த சகதிபாலன் என்ற அரசன் விக்கி-ரமபாண்டியனைக் கொன்று உரோகணத்தை ஆண்டான் என்றும் பின் அவனை சோழர்கள் வீழ்த்தினார்கள் என்றும் மகாவம்சம் கூறும். இராசாதிராசனின் கல்வெட்டில் சகதிபாலன்

பெயரில்லை. எனினும் கன்னியாகுப்யத்திலிருந்து வந்த வீரசலாமேகன் எனும் வேறொரு அரசன் பெயர் காணப்படுகின்றது. விக்கிரமபாண்டியனை சகதிபாலன் கொன்றதாக இலங்கைக் குறிப்புகள் சொல்ல, சோழர் கொன்றதாகச் சொல்கின்றன தமிழகக் குறிப்புகள்.

இன்று கன்னோசி என்று அழைக்கப்படும் கன்னியாகுப்யமும் அயோத்தியும் அருகருகே இருந்த நாடுகள். கன்னியாகுப்சத்தை இராசாதிராசன் வென்றதாக அதே மணிமங்கலக் கல்வெட்டு சொல்வது உண்மை என்றால், அந்த இரு அரசவம்சத்திலும் வந்த சகதிபாலன் சோழருக்கும் சிங்கள அரசருக்கும் எதிராக வீரசலாமேகன் என்ற பெயரில் இலங்கை வந்து அரசொன்றைத் தாபித்திருக்கலாம். உரோகணத்தில் முடிசூடி தனியரசை அமைக்க முயன்ற அவனை சோழர் வென்று வீழ்த்தியிருக்கலாம் என்று கொள்ளமுடிகின்றது.

இராசாதிராசன் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு அரசரில் மிக மோசமாக வீழ்த்தப்பட்டவன் வீரசலாமேகன். சோழன் அவனது தமக்கையையும் பெண்டிரையும் சிறைப்பிடித்ததாகவும், அவனது தாயின் மூக்கை அரிந்ததாகவும் சொல்கின்றது. அந்த அவமானம் பொறுக்கமுடியாமல் போர்க்களத்தில் பின்வாங்கிய வீரசலாமேகன் வாட்போர் புரிந்து உயிர்நீத்ததாகவும் அது சொல்லும். சகதிபாலனை சோழர் அழித்தபோது அவன் மனைவி மக்கள் செல்வங்களை சோழப் படைகள் சோழச் சக்கரவர்த்தியிடம் கையளித்தனர் என்று மகாவம்சமும் கூறுகின்றது. சிங்கள நாட்டு அல்லது பாண்டிய நாட்டு எதிரிகளை விட, வடநாட்டிலிருந்து அவர்களது ஆதிக்கப்பரப்பில் வந்த எதிரியை இராசாதிராச சோழன் மிக மூர்க்கமாகத் தாக்கி அவமானப்படுத்தி அழித்திருக்கிறான் என்பது, அவன் அப்போது முகம் கொடுத்துக்கொண்டிருந்த சோழ நாட்டு எல்லையின் பல்வேறு களமுனைகளில் இருந்த எதிரிகளுக்கான ஒரு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இதன் பின்னர் (விக்கிரம) பாண்டிய மன்னனின் மகனான பராக்கிரம பாண்டியன் உரோகணத்தில் ஆட்சிக்கு வந்ததாகவும் அவனையும் சோழர் வென்றதாகவும் மகாவம்சம் சொல்லும். இவன் பெயரும் இராசாதிராசன் கல்வெட்டில் இல்லை. எனினும் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள சீர்வல்லவன் மதனராசன் என்ற அரசனின் பெயரில் காணப்படும் பாண்டிய வம்சப் பெயரான சீவல்லவன் என்பதைக் கொண்டு அவனும் பராக்கிரமபாண்டியனும் ஒருவரே எனலாம். அவன் ஒரு கன்னரன் அல்லது கன்னடன் பேச்சைக்கேட்டு நடந்ததாக சோழக் கல்வெட்டுகள் சொல்கின்றன. அப்போதைய சோழரின் முதன்மை எதிரியான மேலைச்சாளுக்கியர் பாண்டிய எதிரிகளோடு கூட்டுச்சேர்ந்து சோழரை வீழ்த்த சதி செய்தார்கள் என்று இதைப் புரிந்துகொள்ள முடியும். சரி, இப்படி இராசாதிராசன் ஆட்சிக் காலத்தில் எல்லோரும் இலங்கையில் கூட்டுச்சேர்ந்து சோழரை வெல்லக் கங்கணம் கட்டித் திரியவேண்டியதன் அவசியம் என்ன?

இந்தக் காலகட்டத்தில் (பொ.ஆ.பி. 1040 - 1050) தமிழரசுகளாக விளங்கிய பாண்டியம், சேரம் என்பன சோழரது முழுமுற்றான ஆட்சியின் கீழ் அடங்கியிருந்தன. இலங்கையின் வடபகுதி சோழராட்சியின் கீழ் இருந்தாலும் தென்பகுதி மீது அவர்கள் அத்தனை அக்கறை செலுத்தாததாலேயே அங்கு சிங்கள கிளர்ச்சியாளர்கள் அடிக்கடி புரட்சி செய்துகொண்டிருந்தார்கள். இக்காலத்தில் தமிழகத்திலும் வடக்கெல்லையில், கீழைச்சாளுக்கியரின் வேங்கி (கிழக்கு ஆந்திரம்), மேலைச்சாளுக்கியரின் மண்ணைக்கடக்கம் (வடக்கு மற்றும் மேற்கு கன்னடம்), மேலைக்கங்கரின் கங்கபாடி (தென்கிழக்குக் கன்னடம்), நுளம்பபாடி (நடுக்கன்னடம்), ஆகிய நாடுகள் சோழருக்கு எதிரான பெருஞ்சக்திகளாகக் காணப்பட்டன.

இவற்றில் மேலைச்சாளுக்கியம் தவிர ஏனைய அனைத்து நாடுகளையும் இராசாதிராசனின் தந்தையான இராசராசசோழன் வென்று திறை கொண்டிருந்தான். வேங்கி நாட்டுடன் திருமணம் உட்பட்ட இராசதந்திர உறவுகளையும் வைத்துக்கொண்டிருந்தான். கீழைச்சாளுக்கியருடன் சோழர் கொண்ட அளவுகடந்த மண நெருக்கமே பின்னாளில் சாளுக்கிய - சோழர் கலப்பில் உருவான பிற்காலச் சோழர்கள் சோழ நாட்டை ஆள வழிவகுத்தது.

இந்த எல்லா நாடுகளுக்கும், கூடவே இராசாதிராசனால் வெல்லப்பட்ட கன்னக்குச்சி (கன்னியாகுப்யம்) முதலிய நாடுகளுக்கும் வளர்ந்து வரும் சோழ ஏகாதிபத்தியத்தை எவ்வாறேனும் அடக்கியாகவேண்டும் என்ற தேவைப்பாடு இருந்தது. வலுவான கடற்படையும் தரைப்படையும் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் முதலான வணிகர்கள் அடங்கிய சிறப்பான உளவுப்படையையும் கொண்டிருந்த சோழரை தங்கள் தாயகத்திலேயே வெல்வதும் கடினமாக இருந்தது.

இலங்கையின் உரோகணப் பகுதி சோழர் அத்தனை அக்கறை காட்டாத பகுதியாக இருந்தது என்பதால், அவர்களது பரமவைரிகளான பாண்டியரும், புதிய எதிரிகளான சிங்களர், கன்னியாகுப்யர், சாளுக்கியர், தங்கள் சதிவேலைக்கான களமாக சோழக் கண்காணிப்புக்கு அப்பால் இருந்த உரோகணத்தைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பதை இராசாதிராச சோழன் காலத்து அரசியல் நிலவரம் தெரிவிக்கின்றது. இலங்கையில் ஒரு சிங்கள அரசனும் இரு பாண்டிய அரசரும் ஒரு கன்னியாகுப்ய அரசனும் வீழ்த்தப்பட்ட செய்தி இராசாதிராசனின் 1044-ம் ஆண்டுக் கல்வெட்டில் இருப்பதால், அவ்வாண்டுக்கு முன்பேயே இந்த நால்வரும் வீழ்த்தப்பட்டு விட்டனர் என்பதை ஊகிக்கலாம்.

(தொடரும்...)



thulanchanan.v@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***




சுந்தர ராமசாமி, நாவல் இலக்கியக் கொள்கை என்று தனியாக எதுவும் பேசாவிட்டாலும் சில நாவல்களைத் திறனாய்விற்கு எடுத்துக்கொண்டு அவை பற்றி விரிவாகவோ சுருக்கமாகவோ பேசியுள்ளார். இதன் மூலமாக, நாவல் இலக்கியம் பற்றிய அவருடைய கருத்துகளையும் கொள்கைகளையும் அறிந்துகொள்ள முடியும்.

சு.ரா., காசியப்பனின் ‘அசடு’, ஷண்முகசுந்தரத்தின் ‘நாகம்மாள்’, ‘சட்டி சுட்டது’, அகிலனின் ‘சித்திரப் பாவை’ முதலிய நாவல்களையும் ரஷ்ய நாவலாசிரியராகிய தாஸ்தா யேவ்ஸ்கியின் ‘கரம்சேவ் சகோதரர்கள்’ பற்றியும் சற்று விரிவாக ஆராய்ந்துள்ளார்.

மேலும், அவர், தன்னுடைய நாவலான ‘ஒரு புளியமரத்தின் கதை’ நகுலனின் ‘நிழல்கள்’, நாஞ்சில் நாடனின் ‘தலைகீழ் விகிதங்கள்’ முதலிய நாவல்களுக்கு முன்னுரை என்ற அளவில் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

தி. ஜானகிராமனின் ‘மோகமுள்’, ‘க.நா.சு.வின் ‘பொய்த்தேவு’, நாஞ்சில் நாடனின் ‘மிதவை’, மு. தளையசிங்கத்தின் ‘கலைஞனின் தாகம்’ போன்ற நாவல்கள் பற்றியும் சிறு குறிப்புகள் தந்துள்ளார். இந்த நாவல்கள் யதார்த்த தளத்தைப் பிரதிபலித்துள்ள விதத்தின் அடிப்படையில் அவற்றின் தரங்களை நிர்ணயம் செய்கிறார் எனலாம்.

### யதார்த்தத்தின் தளங்கள்:

வாழ்வின் நிகழ்வுகளை நாவல்கள் பிரதிபலித்துள்ள அடிப்படையில் யதார்த்த தளப்பார்வையை வகுத்துக் கொண்டிருக்கிறார். வாழ்வின் பிறழ்வுகளையும் மீறல்களையும் கண்ணாடியாக மட்டும் பதிவு செய்துள்ளவர்களின் நாவல்களை ‘யதார்த்தப் படைப்புகள்’ என்றும், இந்த பிறழ்வுகளையும் மீறல்களையும் பதிவு செய்து கொண்டே நிகழ்கால வாழ்வின் மேன்மைக்குப் பயணத்தை உட்கொண்டிருக்கும் படைப்புகளை ‘பரிபூரண யதார்த்தப் படைப்புகள்’ என்றும் சு.ரா. காண்கிறார்.

கண்ணாடிபோல் அனுபவங்களைப் பதிவு செய்திருக்கும் படைப்புகள் பரிபூரண யதார்த்தம் கொள்ளாததற்கு அவை மனிதரைப் பாதிப்புக்குள்ளாக்கும் கலை சக்தியைப் பெறாமல் வெறுமனே அனுபவப் பதிவுகளாகப் பிறந்திருப்பதைக் காரணமாகக் காட்டுகிறார்.

### நாவலும் யதார்த்தமும்:

சு.ரா., ‘வாழ்வின் அடித்தளத்தில் யதார்த்த உலகைத் தன் சக்திக்கேற்ப கிரகித்து, அந்த அறிவைக் கணந்தோறும் சார்ந்து பிழைக்கும் ஒரு ஜீவனை’ யதார்த்த நாவல் என்கிறார்.

ஒளிவு மறைவுகளைத் தாண்டி அனுபவங்களின் பாதிப்புகளை மட்டுமே பதிவு செய்து கொண்ட யதார்த்தப் படைப்புகள் படைப்புத் தொழிலின் நேர்மையை வெளிப்படுத்துவன.

இதோடு நின்று விடுவது யதார்த்தப் படைப்புத்தான். ஆனால், அது படைப்பின் முழுமையல்ல என்று சு.ரா. கருதுகிறார். புற உலகிற்கு நிகராகப் படைப்பும் ஒரு உலக இயக்கமாகப் படைத்து, அதிலிருந்து புற உலகிற்கு ‘அர்த்தத்தைப் பாய்ச்சிக்’ கொண்டிருக்கும் வேலையை உள்ளீடாக ஏற்றுக் கொண்ட படைப்பையே முழுமையான படைப்பு என்கிறார். அதாவது யதார்த்த தளத்தைப் படைப்பில் விரித்துக் கொண்டே ஊடுசரடாக வாழ்விற்கான தெளிவைக் காட்டும் வேலையை ஏற்றிருப்பதாகும்.

### படைப்பு யதார்த்தம் கொள்ளும் முறை:

சு.ரா., கலைஞருக்கு ஏற்பட்ட அனுபவ பாதிப்புகளைக் கலையாகப் பதிவு செய்வதினால் படைப்பு, யதார்த்தப் படைப்பாக மாறுகின்ற தன்மையைத் திறனாய்ந்து வெளிப்படுத்துவதைக் காணலாம்.

அவர், தன்னுடைய நாவலான ‘ஒரு புளியமரத்தின் கதை’ யதார்த்தப் படைப்பாக உருமாறுவதற்கு ‘செல்லத்தாய்’ என்ற பாத்திரம் தொழிற்பட்டிருப்பதாகக் காட்டுகிறார்.

இதுபற்றி ‘1956, 57 ஆண்டுகளில் சாயங்கால வேலைகளில் பள்ளி மணி அடித்து சில நிமிஷங்களுக்கெல்லாம் பஜாரில் தெற்கேயிருந்து ஒரு வாத்திச்சி தோன்றி வடக்கே போவதை

எண்ணற்ற நாட்கள் பாத்திருக்கிறேன்... ... .... மனதில் பதிந்து விட்ட அவளுடைய உருவமே இந்நாவலில் செல்லத்தாயாக உருவாக அந்தர் முகமாய் நின்று தொழிற்பட்டிருக்கிறது என்ற உண்மை சமீபத்தில் ஒரு நாள் ஏதோ ஒரு நிமிஷத்தில் என் மனசில் பளிச்சிட்டது... ...' என்கிறார்.

ஆக, கலையை யதார்த்த தளம் கொண்டதாக ஆக்குவதற்குப், படைப்பாளி, தனது புறஉலகம் அனுபவங்களிலிருந்தே தொழிற்படுவது என்பதாகும் இது. அப்போதுதான் படைப்பு நம்பகத்தன்மை கொண்டதாக நிற்கும் என்று சு.ரா. கருதுவதாகக் குறிப்பிடலாம்.

ஆர். ஷண்முகசுந்தரம், தனது 'நாகம்மாள்' என்ற நாவலை கிராமியப் பின்னணியில் வைத்து யதார்த்தப் படைப்பாக உருவாக்கி இருப்பதாக சு.ரா. கருதுகிறார். அவர் தமது படைப்பில் 'கிராமிய அனுபவங்களைப் பட்டண வாசியின் பார்வையில் பார்த்துத் தாமே புல்லரித்துக் கொள்ளும் அசட்டுத்தனத்தை' ஏற்றுக் கொள்ளாமல் யதார்த்த உலகின் பாதிப்புகளைப் பூச்சுகளற்ற தன்மையில் பதிவு செய்துள்ளதாக திறனாய்கிறார்.

இவரின் படைப்பு யதார்த்தம் கொண்ட படைப்பாக மிளிர்வதின் காரணத்தை 'அனுபவங்களைக் கெளரவப் பிரச்சினைகளுக்கு ஆளாக்காமல், அதாவது கூறும் விஷயங்கள், தான் சார்ந்து நிற்கும் மக்களுக்குத் தேடித் தருவது கௌரவமா அவமானமா என்பன போன்ற உணர்வுகள் எவற்றுக்கும் ஆளாகாமல் இயங்குகிறார். நிஜங்களின் விளைவுகளை அல்ல, நிஜங்களையே இவர் முதன்மைப்படுத்துகிறார். இவரிடத்தில் மிகையில்லை. பிரச்சார நோக்கமில்லை. அனுபவங்கள் அத்தர் பூசப்பட்டோ குஞ்சலம் கட்டப்பட்டோ உருவாக்கப்படாமல் பதிவுகளின் நிஜமானதும் எளிமையானதுமான கோலங்களில் வெளியிடப்படுகின்றன. விரும்பியதைப் பார்த்தாலும் விரும்பாததை நிகழாதது என பாவனை செய்யும் தந்திரமும் அவரிடத்தில் இல்லை. வாழ்வின் முழுமையைக் காணவே இவருடைய ஆயத்தம்' என்று திறனாய்கிறார்.

கணவனின் சொத்திற்கு ஆசைப்பட்டுப் பங்குபோட முனையும் விதவை நாகம்மாள், செட்டியப்பனோடு வாழ முற்படுகிறார். செட்டியப்பனோடு நெருங்கிப் போகும் நிலையைக் கண்டு அவர் கணவனின் தம்பி மானம் பறிபோய்விடும் என்ற அலறுதல், 'உண்மையில் மானம் பறி போய்விடும் என்று பயப்படுகிறார்களா? அல்லது சொத்து குறைந்துவிடும் என்று கவலைப்படுகிறார்களா? சொத்து குறைவதைத் தடுக்கத்தான் மானப் பிரச்சினையை ஒரு கருவியாகப் பயன்படுத்து கிறார்களா?...' என்று நாகம்மாள், அவள் கணவனின் தம்பி, செட்டியப்பன் ஆகியோர் தம்முடைய மனநிலைகளில் எந்தப் பொய்யிலும் சரிந்துவிடாமல் உருவாகியிருக்கும் விதமாக ஆசிரியர் கதாபாத்திரங்களை நடத்திக்கொண்டு போவதில் யதார்த்தத்தின் நுட்பங்கள் உருவேறி விடுவதாக திறனாய்ந்துள்ளார்.

இதேபோல் ஷண்முகசுந்தரத்தின் 'சட்டி சுட்டதில்' வரும் பண்ணாடியின் செயற்பாடுகள் படைப்பின் யதார்த்தத் தளத்திற்கு அடிப்படையாக இருப்பதாக சு.ரா. திறனாய்ந்து வெளிக்காட்டுகிறார்.

இது பற்றி '... பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு கனத்துக் கொண்டிருக்கிறது பண்ணாடிக்கு. ஆனால் அவரோ தன் பெயரிலுள்ள சொத்துக்கள் முழுவதையுமே தனக்கென எதுவுமே வைத்துக்கொள்ளாமல் பிள்ளைகளுக்கே கொடுத்துவிடுகிறார். மிச்சம், மனைவி விட்டுச் சென்றுள்ள நகைகள், மனைவி பெயரிலுள்ள சொத்து, இவற்றின் பலத்தால் பெண்ணைக் கரையேற்றி விட்டுவிடலாம் என்பது பண்ணாடியின் நினைப்பு. ஆனால் அந்தச் சொத்தையும் அபகரிக்க முனைகிறார்கள். அவருடைய பிள்ளைகள்...' என்று பண்ணாடியின் செயல்பாடுகள் நம்பகத்தன்மையோடு இருப்பதால் படைப்பிலும் யதார்த்தம் தன்னாலே உருவேறி விடுவதாக விமர்சிக்கிறார்.

படைப்பின் யதார்த்தப் போக்கிற்கு ஷண்முகசுந்தரம் அனுபவங்களைப் பிரதிபலிக்கும் 'கண்ணாடி'யாகச் செயற் பட்டுள்ளதாக கருதுகிறார்.

காசியப்பனின் 'அசடு' நாவல் யதார்த்தத் தளத்தில் பிறந்திருப்பதாகக் கணக்கிடுகிறார். கணேசனையும் அவனைச் சுற்றி நிற்பவர்களையும் பற்றி ஆசிரியர் பதிவு செய்ததில் அவர்களின் குணங்கள் நம்பகத்தன்மையோடு பிறந்திருப்பதாக சு.ரா. மதிப்பிடுகிறார். இந்த யதார்த்தத் தளத்தில் கதை நிகழ்வதை அவர் சாரதாவின் படைப்பைச் சான்றாகக் காட்டிக் குறிப்பிடுகிறார். 'சாரதா, குறைவான இடங்களில் முகம் காட்டி, குறைவாகப் பேசி, பின்னகர்ந்து மறைந்துவிடும் பாத்திரம். ஆனால் இவருடைய முகத்தையும் அகத்தையும் பளிச்சென்று நம்மால் உணரமுடிகிறது. ஆசிரியரின் பதிவுகள், கணேசன் என்னும் தனி மனிதனிலிருந்து நகர்ந்து அவனுடைய குண பேதத்தைத் தாண்டி, வாழ்க்கைச் சோகத்தின் பெருமூச்சை ஏற்படுத்துகின்றன. காசியப்பனின் எழுத்தில் அவநம்பிக்கையின் உறுத்தல்களுக்கு நாம் ஆளாவது இல்லை' என்று ஒரு படைப்பு யதார்த்தப் படைப்பாக நிற்பதன் தன்மையினைக் குறிப்பிடுகிறார்.

நாஞ்சில்நாடன் 'தலைகீழ் விகிதங்கள்' யதார்த்தப் படைப்பாக நிற்பதற்குச் சுய அனுபவத்தின் மெய்த்தன்மையைக் காரணமாகக் காட்டுகிறார் சு.ரா. 'சுய அனுபவத்தை அவ்வனுபவங்களை அவருக்கு அளித்த மண்ணையும் மனிதர்களையும் ஒன்று சேர்த்து தத்ரூபமாக உருவாக்கியுள்ளார் ஆசிரியர். தனது அனுபவ எல்லைகளுக்கு அப்பால் தாண்டிச் சென்ற காரணத்தால் வாசகனிடத்தில் சந்தேகத்தைத் தோற்றுவிக்கும் இடமே இந் நாவலில் இல்லை என்று சொல்லலாம்... ... தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுதல் என்பது ஆசிரியருக்குச் சிறிதும் ஆயாசமற்ற காரியம் என்ற எண்ணம் ஏற்படுவது, வெளியீட்டில் அடைந்துள்ள வெற்றிக்கு அறிகுறி' என்று படைப்பின் யதார்த்தப் போக்கை அவர் அடையாளங் காட்டுகிறார். இதே போல் நகுலனின் நாவல், யதார்த்தம் பெற்றுள்ள தன்மையையும் சுட்டியுள்ளார்.

## யதார்த்த தளத்தில் பார்வைச் சிக்கல்:

படைப்பாளி, தன் அனுபவப் பாதிப்புக்களை முன்னிட்டுப் படைப்பை யதார்த்தம் கொண்ட படைப்பாக்கிவிடுகிறான். ஆனால் அனுபவப் பாதிப்புக்களைப் பதிவு செய்து படைப்பை நம்பகத்தன்மை பெறச் செய்தாலும், அதற்கும் அப்பால் மேற்கொள்ளும் பார்வை முக்கியமானது என்று சு.ரா. கருதுகிறார்.



இப்படி யதார்த்தத்தை மட்டும் பெற்று உள் உலகங்கள் நோக்கிப் பார்வையை மேற்கொள்ள முடியாத படைப்புக்க ளின் தன்மைகளை வேறுபடுத்திக் காட்டுகிறார்.

ஷண்முகசுந்தரம் தன் நாவல்களில் பதிவு செய்துள்ள சுய அனுபவ பாதிப்புகளைப் பற்றிச் சொல்ல வந்த சு.ரா. 'அனு பவ உண்மைகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடிபோல் அவர் பங்காற்றியுள்ளார் என்றும், ஆனால் ஆசிரியரின் அனுபவங் கள் அவருக்கே உரித்தான வாழ்க்கைக் கண்ணோட்டத்திற்கு ஆளானது மூலம் வீச்சும் விரிவும் பெற்றுச் செழுமையடைந்த தாகச் சொல்ல இயலாது' என்றும் கூறுகிறார்.

தொடர்ந்து அவர் சொல்வார். 'ஆசிரியரின் எழுத்து மூலம் நாம் பெறும் அனுபவத்தை ஆசிரியர் கிராமங்களில் வாழ்வது மூலம் நேரடியாகப் பெற்றுவிடலாம் என்று தோன்றுகிறது அல் லவா ? கலைஞனின் பார்வைக்கு அனுபவங்கள் இலக்காகும் போது தனி உலகம் ஒன்று எழுகிறது. இந்த உலகத்தை அவன் படைப்பு மூலமின்றி வேறு எவ்விதத்திலும் நாம் சந் திப்பது சாத்தியமற்றதாகிவிடுகிறது. கலைஞன் இவ்வாறு தன்னைத் தவிர்க்க இயலாதபடி ஸ்தாபித்துக் கொள்கிறான். இந்த ஸ்திதியை ஆசிரியர் பெறவில்லை என்பது அவருடைய வரையறையை நமக்கு உணர்த்தும் காரியத்தைச் செய்கிறது. இங்குகூட ஆசிரியர் தனக்கே உரித்தான உலகம் ஒன்றைப் படைத்துள்ளதான மயக்கம் ஏற்படலாம். இம் மயக்கம் அவர் காட்டும் வித்தியாசமான பின்னணியைச் சார்ந்த எழுவது. பின்னனி வேறு; பார்வை வேறு; பின்னணி வெறும் புற நிலை இயக்கம்; பார்வை ஒரு அக ஒளி.'

ஆக, யதார்த்த நிலைகளைக் காட்சிப்படுத்தல் மட்டும் படைப்பிற்கு உன்னதத்தைக் காட்டிவிடாது. நாவல் பின்ன ணியை வாசகன் நேரடியாகச் சந்திக்கின்றபோது படைப்பாளி ஏற்படுத்தித் தந்திருக்கும் காட்சி வடிவம் அவனுக்குக் கிடைத்து விடுகிறது. ஆனால் படைப்பின் மேன்மை என்பது காட்சிப்படுத்தியலிருந்து ஊடுருவிப் புற உலகிற்கு நிகராகக் கலை உலகை நிறுவிப் புற உலகிற்குத் தேவையான தெளி வுகளை அளிக்கும் கலைச் சக்தி என்ற பார்வை மரபைப்

பெற்றிருக்க வேண்டும். இந்தப் பார்வையைப் படைப்பாளியின் படைப்பில் மட்டும் விளங்கிக் கொள்ள முடியும்; புற உலகில் தெரிந்துகொள்ள முடியாது என்கிறார் சு.ரா.

## பரிபூரண யதார்த்தப் பார்வை:

யதார்த்தப் படைப்பின் வளர்ச்சி நிலையில் பிறப்பதுதான் பரிபூரண யதார்த்தப் படைப்பு; வெறுமனே அனுபவங்களைக் கண்ணாடிபோல் பிரதிபலிப்பதோடு நின்றுவிடாமல் 'நமது பார்வையைப் பாதித்து அதன் மூலம் புறவாழ்வுக்கும் நமக்கும் உள்ள உறவு நிலையைச் செழுமைப்படுத்துபவைதான் கலைப்படைப்புகள்' என்கிறார் சு.ரா.

இந்தக் கலைப் படைப்புகளைப் பற்றிக் கலைஞன் கொண்டுள்ள கொள்கையை விளங்கிக் கொள்ளவேண்டும். கலைஞன் ஒரு பாத்திரத்தின் உன்னத குணங்களைத் தொகுத்துப் பூரண மனிதனாக உருவாக்கும் முயற்சியில் இறங்கும் போதே அப்பாத்திரத்திற்குள் மறைந்து கிடக்கும் மன வக்கிரங்களையும் பிளந்துகாட்டி விடுகிறான். இதற்குக் காரணம் நிஜ உலகில் பரிபூரணமற்ற தன்மையால் அவன் உருவாக்கிய பாத்திரத்திலும் பரிபூரணம் கூடாமல் போய்விடுகின்றது. அப்பாத்திரத்தின் உண்மையான குணங்களைத் தைரியமாகப் பதிவு செய்யும் போது பாத்திரம் பரிபூரண யதார்த்தம் கொள்கிறது. இந்த நிலையையே கலை முழுதும் விரித்துக் கொள்ளலாம். இதனால் வாசகன் வாழ்வின் பொய்மைகளை அறிந்து கொள்வதால் அவனுக்கு வாழ்க்கை மீது தெளிவு கிடைத்துவிடுகிறது. இந்தத் தெளிவுகளைக் கொடுக்கும் வேலையைத்தான் பரிபூரண யதார்த்தப் படைப்புகள் ஏற்றுக் கொள்கின்றன.

மனிதனின் பிறழ்வுகளையும், மீறல்களையும் நம்பகத் தன்மையோடு பதிவு செய்து மனித உறவுகளில் தெளிவுகளை ஏற்படுத்துவதே கலையின் பூரணத்துவம் என்று கருதுகிறார். இதைத்தான் சு.ரா., புற உலகிற்கு நிகரான படைப்புலகம் எழுந்து நின்று, புற உலகிற்கே அது அர்த்தத்தைப் பாய்ச்சும் என்கிறார்.

இவ்வகையில், தாஸ்தாவேஸ்கியின், 'கரம்சோவ் சகோதரர்கள், பரிபூரண யதார்த்தப் பார்வை கொண்டிருப்பதாக சு.ரா. மதிப்பிடுகிறார். இதற்குரிய காரணங்களையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புற உலகின் காட்சிப் படலத்தை விரித்துக் கொள்கிறான் தாஸ்தாவேவ்ஸ்கி. அதாவது சமூக நிகழ்வுகளை ரஷ்ய பின்னணியோடு பதிவு செய்து கொண்டு மனித மனங்களின் ஆழங்களையும் பதிவு செய்யும் பார்வையை 'கரமசோவ் சகோதரர்கள்' நாவலில் கையாண்டிருப்பதாக சு.ரா. தொட்டுக் காட்டுகிறார்.

'இன்றைய இந்தியா மேற்கத்திய கலாசாரத்தை போலி செய்வது போல் அன்றைய ரஷ்யா ஐரோப்பிய கலாசாரத்தைப் போலிசெய்து கொண்டிருந்தது. இந்த ரஷ்ய மக்கள் ரஷ்ய மொழியைத் தாழ்ந்த மொழியாகவும், கலாசாரத்தை தாழ்ந்ததாகவும் தாழ்வு மனப்பான்மை கொண்டு ஐரோப்பிய நடை உடை பாவனைகளை மேற்கொண்டிருந்தனர்.'

இந்தத் தாழ்வு மனப்பான்மை கலாசாரத்தையே தாஸ்தாயேவ்ஸ்கி, தனது படைப்பின் பின்னணியாக ஏற்றுக்கொண்டு மனிதனின் ஆழங்களையும், பிறழ்வுகளையும் யதார்த்தமாக்கியிருப்பதாக சு.ரா. கருதுகிறார்.

## படைப்பின் பூரணத்துவம்:

யதார்த்தப் படைப்பிற்கு நிகழ்கால வாழ்க்கைச் சிக்கல் மிக முக்கிய கூறு. வாழ்க்கையின் தெளிவற்ற குழப்பநிலையில் தெளிவிற்காக சிக்கித் தவிக்கும் பாத்திரமாக ஜவானைத் தாஸ்தாயோவ்ஸ்கி படைத்திருப்பதாகக் கருதுகிறார்.

'மாறிவரும் வாழ்க்கை உருவாக்கும் புதிய மதிப்பீடுகளின் காலத்தின் தொடர்ச்சியாக நிற்கும் மனிதனுக்கு எண்ணற்ற சாவல்களை விடுகின்றன. இந்தச் சாவல்களின் மனித உருவாக நிற்கிறான் ஜவான்... ... ... புற உலகில் இவன் நிஜ சொரூபமாகவே நின்று' காட்சியளிப்பதாக சு.ரா. திறனாய்கிறார்.

கடவுள் உண்டா? இல்லையா? என்று இன்றளவும் உள்ள குழப்ப நிலையைத் தேடிக் கொண்டிருக்கும் அறிவின் பாத்திரமாக ஜவான் படைக்கப்பட்டிருப்பதாக சு.ரா. கருதுகிறார். அதாவது மாறி வரும் வாழ்க்கை மதிப்பீட்டின் தன்மையை உணர்த்தும் பாத்திரமாக ஜவானைப் படைத்து அந்தப் பாத்திரத்தை யதார்த்தத்தின் பூரணமான பார்வையை நோக்கி நகர்த்தியுள்ளதாகக் கூறுகிறார்.

படைப்பின் பூரணத்துவம் எந்த வகையில் உருவேறுகிறது என்பதனை அடியொற்றி டிமிட்ரி, ஃபயோதர், ஸ்மர்டிக்கோ, க்ருஷங்கா என்கிற வேசி, லிசவேதா போன்ற ஒவ்வொரு பாத்திரத்தின் குணங்களின் ஆழங்களையும் கவனித்துக் கூறுவதிலிருந்து, சு.ரா.வின் திறனாய்வு அணுகுமுறையை நாம் புரிந்துகொள்ள முடியும்.

சான்றாக, அலெக்சி, 'ஞானி' சோஸிமா, ஆகிய இருவரின் பாத்திரப் படைப்பை இந்தக் கோணத்தில் வெளிப்படுத்துவதை இங்கே மேற்கோள் காட்டலாம்.

'... ... கரமசோவ் சகோதரர்களில் அலெக்சியையோ அல்லது 'மூடன்' என்ற நாவலில் இளவரசன் மிஸ்கின் என்ற கதாபாத்திரத்தையோ பரிபூரணத்தின் ஜீவ இயக்கமாக உருவாக்குவதில் அவன் வெற்றி பெறவில்லை. இந்தத் தோல்வி யதார்த்தத்தைப் பற்றிய அறிவின் வெற்றியாகும். யதார்த்தத்தில் பரிபூரணம் என்பது இல்லாத வரையிலும் படைப்பிலும் பரிபூரணம் என்பது சாத்தியமல்ல...' என்கிறார் அவர்.

ஆக, உண்மை ஒன்றையே குறிக்கோளாகக் கொள்வதனால் அலெக்சியை பூரண மனிதனாகக் காட்ட முடிகிறது. அதாவது நல்லதும் கெட்டதுமான குணங்கள் கொண்ட இயல்பான பாத்திரமாக அலெக்சியைத் தாஸ்தாயேவ்ஸ்கி வார்த்திருப்பதாக சு.ரா. கருதுகிறார். இதுதான் முழுப்படைப்பின் பரிபூரண யதார்த்தத்தின் வெற்றி என்கிறார்.

அறிவின் ஆற்றலும் மரபின் எதிர்ப்பும் பிடித்து ஆட்டும் பாத்திரமாக ஜவானை உருவாக்கியுள்ளபோதே, பிளவுபட்டுக் காட்சியளிக்கும் யதார்த்த உலகைக் கடந்து பிளவுபடாத சக்தி ஒன்று (கடவுள்) இருப்பதாக நம்பிக்கை கொள்ளும் அலெக்சியின் பாத்திரத்தைப் படைக்கிறார் தாஸ்தாயேவ்ஸ்கி. அதே சமயம், ஞான வடிவானவனாக அவனைக் காட்ட முயற்சிக்கும் போதே புற உலகின் 'நிஜத்தன்மை' காரணமாக, முழுமையாக ஞானத்தைப் பற்றித் தெளிவுபடுத்த

முடியாமல் போகிற ஒரு பாத்திரமாகவும் தாஸ்தாயேவ்ஸ்கி படைத்திருப்பதாக கருதுகிறார். அலெக்சியின் இந்த சரிவு தான் யதார்த்தத்தின் ஜீவிதத்திலிருந்து பெற்றுக்கொண்டு படைப்பைப் பூரண யதார்த்தப் படைப்பாக்கியுள்ளதாக சு.ரா. வெளிப்படுத்துகிறார்.

இவ்வாறு முழுமையாக வெளிப்படும் அலெக்சியை ஓர் உன்னதப் பாத்திரமாகக் கருதுகிற சு.ரா., 'உன்னதப் பாத்திரமான அலெக்சியிடம் 'கரமசோவ்' குடும்பத்தினருக்கே உரிய தீய குணங்கள் அவ்வப்போது வெளிப்படுவதையும் நாம் பார்க்கிறோம். நாவலின் ஒரு இடத்தில் ரெத்தீன் என்ற கதாபாத்திரம் அலெக்சியைப் பார்த்துக் கூறுகிறான். 'நீயும் ஒரு கரமசோவ்-தான். உன் தகப்பன் வழியில் நீ ஒரு சிற்றின்பப் பிரியன். உன் தாயின் வழியில் நீ ஒரு அசட்டுக் குழந்தை' என்கிறான்' இதை எடுத்துக் காட்டுகிறார்.

ஆக, யதார்த்தத்தின் உண்மை என்பது சமூகப் பதிவுகள் மட்டுமல்ல என்பது விளங்குகிறது. ஒரு உன்னதப் பாத்திரத்தின் உன்னதக் குணங்களை மட்டுமல்லாமல் உள் மனதில் இருக்கும் வக்கிரங்களையும் பிளந்து காட்டும் போதுதான் முழுமை கொண்டு விடுகிறது என்று கருதலாம்.

இங்குப் படைப்பின் பூரணத்துவம் என்பது பாத்திரத்தை ஒழுக்கமானவனாகக் காட்டுவதல்ல; மாறாக, சமூக - மனித உறவு நிலைகளில் உள்ள பிறழ்வுகளையும் புற உலகிற்குத் தெளிவுற எடுத்துக்காட்டுவதும் ஆகும்.

'கரமசோவ் சகோதரர்கள்' நாவலில் இடம்பெறும் 'ஞானி சோஸிமா' எனும் பாத்திரம் பற்றி சு.ரா., ஏசு முதுமையடைந்து கண்முன் தோன்றும் தோற்றம் போல் உருவாகி இருப்பதாகக் கருதுகிறார்.

ஞானியைப் பற்றி 'பக்தர்களின் மனங்களில் அவர் அவதார புருஷனாக இருக்கிறார். இவரை ஒத்த அவதார புருஷர்கள் இயற்கை எய்தினால் அவர்கள் உடலிலிருந்து நறுமணம் கமழும் என்பது ஒரு நம்பிக்கை. ஆனால் ஞானி சோஸிமா இறந்தபின் இவரது உடல் அழுகத் தொடங்குகிறது. துர்நாற்றம் வீசுகிறது. பக்தர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைகிறார்கள். தன் நாவலில் முழுப்பிரக்ஞையுடன் மட்டுமே ஒரு கலைஞன் இப்பகுதிகளை உருவாக்கி இருக்க முடியும். லோகாயத உலகம் சார்ந்த உண்மைகள் தன் நம்பிக்கைகளின் கண்களை கட்ட தாஸ்தாயேவ்ஸ்கி மறுப்பதை இப்பக்கங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன' என்று திறனாய்கிறார்.

இவ்விடத்தில் சு.ரா. யதார்த்தம் பற்றிக் கொண்டுள்ள கொள்கையை வரையறை செய்து கொள்ள முடியும்.

அவர் படைப்பு பற்றிக் கூறிவந்த யதார்த்தம் என்பது கலைஞனிடம் வெளிப்படும் படிப்பறிவு அனுபவங்களோ, தத்துவங்கள் சார்ந்த வெளிப்பாடுகளோ அல்ல. வெறுமனே புற உலக நிகழ்வுகளை அப்படியே காட்சிப்படுத்தல் என்பதும் அல்ல. நிகழ்கால நடப்புகளை உள்வாங்கிக் கொண்ட கலைஞன், தன் சுய அனுபவப் பாதிப்புகள் சார்ந்து மானிடப் பிறழ்வுகளையும், தத்தளிப்புகளையும் பதிவு செய்தலாகும். ஆக, சு.ரா, கூறவரும் யதார்த்தம் என்பது கலைஞனின் சுய அனுபவங்களின் வெளிப்பாடே.

இதனை இன்னும் தெளிவாக்க, சி. மணியின் கவிதைகளைப் பற்றி அவர் அணுகியுள்ள முறையை எடுத்துக்காட்டலாம்.

சி. மணியின் கவிதைகளில் சு.ரா. குறையாகக் காணுவது அனுபவம் பற்றிய மதிப்பீடாகும். இவரின் பெரும்பாலான கவிதைகள் சுயதரிசனம் அற்றவை. இந்த சுயதரிசனம் என்பது படைப்பாளிக்கு மட்டுமே நேரடியாக நிகழ்ந்த அனுபவப் பாதிப்பாகும். அது மனதை அரிக்கத் தொடங்கப் படைப்பெழுச்சியின் விளைவால் கலைஞன் உந்தப் பெற்று கவிதை படைத்தலாகும்.

இவரின் கவிதைகளைச் சுய சார்பற்ற கவிதைகள் என்று குறிப்பிடுவதற்குக் காரணம் உண்டு. டி.எஸ். எலியட்டின் 'பாழ் நிலம்' படித்ததின் விளைவாக இங்கும் அதற்கு ஒப்பாக தமிழ்ச் சூழலோடு பொருந்திப் போகும் 'நகரம்', 'பச்சையம்', 'வரும் போகும்' போன்ற கவிதைகளை சி. மணி படைத்திருக்கிறார் என்று சு.ரா. கருதுகிறார்.

டி.எஸ். எலியட்டின் தாக்கத்தினால், மெரினா கடற்கரையில் காணும் ஆபாசங்களை அப்பட்டமாக கவிதை வரிகளில் பதிவு செய்வதென்பது கருத்துலகம் சார்ந்த நாணயத் தன்மை. கவித்துவம் அதில் அடைபடாது. இதனை சுய சார்பற்ற புற உலக அனுபவம் என்று கொள்ளலாம். அதாவது சுய அனுபவம் என்ற 'உள் ஒளியால்' எழுதப்படவில்லை, என்று கருதுகிறார்.

சி. மணியை ஒரு 'கருத்துலகக் கவிஞர்' என்றே சு.ரா. குறிப்பிடுகின்றார். அவரின் கவிதைகள் முன் முடிவுகளாலும் சார்பு நிலைகளாலும் திரிபுபடாமல் வெளிவந்திருக்கின்றன. 'படைப்பு மெய்யான அனுபவத்தின் ஜீவனைச் சார்ந்து நிற்கிறது என்பதனால் மட்டும் தீர்மானிக்கப்பட்டுவிடுவதில்லை. கவிதையின் நாணயத் தன்மைக்குத்தான் இது அடிப்படை. நாணயத்தன்மை கொண்டிருப்பவை சிறப்பான கவித்துவம் கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை' என்று சி. மணியின் கவிதைகள் பற்றி குறிப்பிடுகிறார்.

ஆக, சு.ரா. கூறுவதிலிருந்து சி. மணியின் கவிதைகள் சுய அனுபவத்தின் உந்துதலால் விளைந்த படைப்பெழுச்சி அல்ல. மாறாக இயந்திர கதியில் செய்த படைப்பாக்கம்; போலச் செய்தல் என்பதாகும். இதனை ஒட்டிய கருத்தினை வேறோர் இடத்தில் 'மேற்கத்திய கவிதை முயற்சிகளைப் படிப்புமூலம் அறிந்து கொண்ட கவிஞர்கள், இங்கு சுய அனுபவங்களைப் பின்தள்ளி, நவீன மோஸ்தர்களின் பிரமைகளுக்கு ஆட்பட்டு, தம் கவிதைகளையும் சிக்கல் ஆக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்தச் சிக்கலை நம் வாழ்க்கை அனுபவங்கள் நியாயப்படுத்துவதாகத் தெரியவில்லை' என்கிறார் சு.ரா.

ஆக, படைப்பின் யதார்த்தம் என்று சு.ரா. கருதுவது காலம் கலைஞனுக்கு கொடுத்த சுய அனுபவங்களை அவன் படைப்பில் பதிவு பெற்றிருக்கும் விதத்தைப் பற்றி பேசுவதாகும்.



venugopal@thaiveedu.com



# திருக்குறளும் ஆசீவகமும்

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**சென்ற இதழில்...**

- திருக்குறள் எழுந்த காலப் பின்னணி
- தமிழ் நாட்டில் அரச விரிவாக்கமும் போரும் போரின் விளைவும்
- திருக்குறட் கோட்பாடுகள் கீழே தரப்பட்ட தலைப்புக்களில் ஆராயப்பட்டன.
  - மெய்யறிவுச் சார்புடைமை
  - பொதுமை நோக்கு
  - அறிவியல் அணுகுமுறை
  - மனித முயற்சி
  - இலக்கியல் இணைந்த இயல்பியல் காணல் (A possible ideal world)
- திருக்குறளின் மதம் பற்றிய கருத்து முதலியவை ஆராயப் பட்டன.

இந்த இதழில் ஆசீவகம் பற்றி ஆராயப்படுகிறது.

## ஆசீவகம்:

உலக வரலாற்றில், பொ.ஆ.மு. 6-ம் நூற்றாண்டு தத்துவ எழுச்சிக் காலமாக அறியப்படுகிறது. அக்காலத்திலே இந்திய சிந்தனை வளம் பெற்ற அறிஞர் குழுக்கள் பல தோன்றின.

‘மனிதன் படும் அல்லலும், மனிதர்களிடையே காணப்படும் ஏற்றத் தாழ்வுகளுமே இந்திய ஞானிகளைத் தத்துவ ஞானத் தேடலில் ஈடுபடச் செய்தன’ என்கிறார் இந்தியத் தத்துவஞானி கி. லஷ்மணன். (இந்திய தத்துவ ஞானம், சில சிறப்பியல்புகள், பக்.2).

இந்தியாவில், வைதீக மதங்களை எதிர்த்து சில கொள்கையாளர் எழுச்சி பெற்றனர். கடவுளைளோ அல்லது வேதங்கள் கூறும் சமயச் சடங்குகளோ மக்களை உய்விக்க முடியாது என நம்பிய இவர்கள் அவைதீகர் என அழைக்கப்பட்டனர். கௌதம புத்தர் வழிவந்த பௌத்தம், மகாவீரர் உருவாக்கிய சைனம் ஆகிய பிரிவுகளுடன் சமகாலத்தில் தோன்றிய இன்னுமொரு பிரிவு மக்கலி கோசலர் தலைமையிலான ஆசீவகம். மக்கலி கோசலருக்கு முன்னமே ஆசீவகம் தோன்றிவிட்டது என்றும் இவர் 24-வது ஆசீவகத் தீர்த்தங்கரர் என்றும் கூறுவர். ஆனால், தமிழ் இலக்கியங்கள் மற்கலி கோசாலரே ஆசீவக மதத் தலைவர் என்று குறிக்கின்றன.

ஆசீவகர்களால் எழுதப்பட்ட முழுமையான நூல் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், ஆசீவகக் கோட்பாடுகள் அடங்கிய நூல்கள் மக்களிடையே வழங்கிவந்தமை ஏனைய சமய நூல்களிலிருந்து அறியக்கிடக்கிறது. ஆசீவகம் தமிழ் நாட்டிற்கு எப்போது வந்தது என்று கூறும் அளவுக்கு ஆசீவகம் பற்றிய செய்திகள் தமிழ் இலக்கியங்களில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. நீலகேசி மூலம் ‘மற்கலி தானே இறையினி ஒன்பது வாங்கதிர் நூல் யாமுடையன’ என்பது அறியக் கிடக்கிறது. சமயச் சார்புடைய நூல்களான மணிமே-கலை, நீலகேசி, சிவஞான சித்தியார் ஆகிய நூல்களில் ஆசீவக மதம் பற்றிக் கூறும் விளக்கங்கள் மூலம் இவர்களைப் பற்றி அறியலாம். மணிமேகலை, சமயக்கணக்கர் தந்திறங் கேட்ட காதையில், பூதவாதம், வைசேடிகம், சாங்கியம், பிரமவாதம், சைவம், வைணவம், ஆசீவகம், சைனம் முதலிய மதக் கொள்கைகள் பற்றிக் கூறப்படுகின்றன. மணிமேகலையிற் காணப்படும் ஆசீவகக் கருத்துக்கள் நீலகேசியில் வளர்ச்சி பெற்றுள்ளன. சில விளக்கம் பெற்றுள்ளன.

ஆசீவகம் என்பது ஒரு இந்திய மெய்யியல் கொள்கையும் துறவு வாழ்க்கையும் ஆகும். ஆசீவகம் என்பதன் பொருள் - ஆசு + ஈவு + அகம். ஆசு என்றால் குற்றம், மாசு, ஐயம், ஈவு என்றால் தீர்வு, அகம் என்றால் இடம். அதாவது ஆசீவகம் என்றால் மக்களுக்கான மாசு, குற்றம், ஐயம் முதலியவற்றைத் தீர்க்கும் இடம். ஆசீவகம் என்ற பெயர் அத் துறவிகளின் வாழிடங்களைக் குறிக்கும் பெயர்.

வேத மெய்யியலுக்கும், சடங்குகளுக்கும் எதிர்ப்பான கொள்கையாகத் தோன்றிய ஆசீவகம், உலகை நோக்கி பொருள் முதல்வாத அனுபவவாத அணுகுமுறையை முன்னிறுத்துகிறது. கடவுள், மாயை, பிறவிச்சுழற்சி, ஆன்மா போன்ற சமய நம்பிக்கைகளையும் மீவியற்கை விளக்கங்களையும் இது மறுக்கிறது.

தமிழ்நாடு, தொல்காப்பியர் காலத்திற்கு (பொ.ஆ.மு. 711) முன்பே அறிவியலில் மேம்பட்டு இருந்திருக்கிறது. தொல்காப்பியர் ‘ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர்’ என்று தொல்காப்பியப் பாயிரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறார். தொல்காப்பியத்

தில் அறிவியல் கூறுகள் பரந்து பேசப்படுகின்றன. வேதங்கள் இந்தியாவில் தோற்றுவிக்கப்படு முன்பே துறவிகள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது ஆய்வாளர் கருத்து. இவர்கள் உயிருக்கும் உலகுக்குமான தொடர்பு, உயிர்களின் துன்பம், அவற்றை நீக்கும் வழி முதலியவை பற்றி ஆழ்ந்து சிந்தித்திருக்கின்றனர். இவர்கள் சிரமணர்கள் (Sramana) எனப்பட்டனர். இவர்கள் தமிழில் சமணர் எனப்பட்டனர். காலப்போக்கில் சமணர் என்பது ஜைனரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

ஆசீவக, சமண, பௌத்தக் கொள்கைகள் மக்களிடையே பெரும் ஆதரவைப் பெற்றன. தொடக்க காலத்தில் கொள்கைகளாகத் தொடங்கிய சமணம், பௌத்தம், ஆசீவகம் முதலியவை காலப்போக்கில் மதங்களாக மாறின. தத்தம் மதங்களே தலையாய மதங்கள் என நிலைநாட்ட நடந்த போர் காரணமாக ஒரு பிரிவினரை இன்னொரு பிரிவினர் அழிக்கத் தலைப்பட்டனர்.



வடநாட்டில், அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் (பொ.ஆ.மு. 270) பௌத்தம் தழைத்தோங்கியது. உலகின் பல பாகங்களுக்கும் பௌத்த பிக்குகளும் பிக்குனிகளும் மதம் பரப்புவதற்காக அனுப்பப்பட்டார்கள். பௌத்தத்திற்கு எதிரான மதங்களை அழிக்கும் முயற்சியில் ஆசீவகம் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஒரு தலைக்கு இத்தனை பொன் என்று கூறி ஆசிவகர்கள் தலை விலை பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது. பிற மத அழிப்புப் போரில் அசோகச் சக்கரவர்த்தியால் 18,000 ஆசீவகர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வடக்கே பஞ்சம், படையெடுப்பு முதலிய துன்பங்கள் நேர்ந்த போதெல்லாம் வடக்கேயிருந்து மக்கள் பெரும் திரளாகத் தெற்கு நோக்கி வருவது வரலாற்றில் அறியப்படுகிறது. இதே நிலையில் ஆசீவகம் தெற்கு நோக்கிப் புலம் பெயர்ந்ததாகக் கொள்ளலாம். ஆசீவகம் தழைத்த இடம் தமிழ் நாடு என்று அறியப்படுகிறது. ஆசீவகர்கள் தமிழ் நாட்டிற்கு எப்போது வந்தனர் என்று அறிய முடியவில்லை. இலங்கையில் அசோகன் காலத்தில் (பொ.ஆ.மு. 270) ஆசீவகம் இருந்ததற்கான சான்றுகள் உள.

ஆசீவகர்கள் எப்போது தமிழ் நாட்டில் புகுந்தார்கள் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாவிட்டாலும் இவர்கள், சமணர்களான களப்பிரர் காலத்தில் தமிழ் நாட்டில் வேரூன்றிவிட்டார்கள்.

## ஆசீவகக் கோட்பாடுகள்:

**விதிக் கொள்கை:**
ஆசீவகர்கள் கூறும் விதிக்கொள்கை, சமணம், பௌத்தம், இந்து மதம் கூறும் கர்மாக் கொள்கையை ஒத்ததல்ல. எதிராக அது முற்றிலும் மாறுபட்டது. ஒருவருக்கு நடக்கும் நன்மை தீமை அனைத்தும் முன்னமே நிர்ணயிக்கப்பட்டது. ஒருவரால் விதியை மாற்ற முடியாது. ஆசீவகர்கள் ‘அக்கிரியாவாதிகள்’ எனப்பட்டனர். இவர்களைக் ‘காரணம் வேண்டாக் கடவுட் குழாம்’ என்றும் அழைத்தனர். ஆசீவகர்கள் கொள்கைப்படி செயலுக்கும் உயிர்கள் இவ்வுலகில் அனுபவிப்பவைக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. அதாவது ஒரு செயலைச் செய்தால் அதன் விளைவு பின்னர் ஏற்படும் என்ற எண்ணத்தை இவர்கள் நம்பவில்லை.

**அணுக் கொள்கை:**
ஆசீவகர்கள் கொள்கைப்படி, எல்லாப் பொருள்களும் ஐந்து வகை அணுக்களாலானவை. நிலம், நீர், தீ, காற்று, உயிர் என்ற ஐந்து அணுக்களும் ஒவ்வொரு பொருளின் உருவாக்கத்திலும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டில் ஒன்று சேர்ந்து, வேண்டிய போது பிரிந்து விடும். எல்லாப் பொருட்களிலும் உயிர் அணு தவிர்ந்த ஏனைய அணுக்கள் எல்லாம் இடம் பெற்றிருக்க வேண்டும். இந்த அணுக்கள் ஒன்று சேர்ந்து ஒரு பொருளை உருவாக்கும்போது உருவாகும் பொருளின் தன்மைக்கு ஏற்ப நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று (4:3:2:1) என்ற விழுக்காட்டில் இடம்பெறும். இந்த அணுக்களை ஒன்று சேர்ப்பதில் உயிர் அணு இன்றியமையாத பங்கினை வகிக்கின்றது. இந்த அணுக்களுக்குக் குறிப்பிட்ட சிறப்புத்தன்மை, செயற்பாடு, என்ற இரண்டும் உள்ளன. அவற்றையே சீர், பால் எனப் பிற்கால இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

**கருமபலன் கொள்கை:**
ஒரவர் தான் ஏற்கனவே செய்த கருமத்தின் பலனை அனுபவித்தேயாக வேண்டும். அதை மாற்ற முடியாது. ஆனால், துறவறத்தின் மூலம் புதிய கருமபலன் உருவாகுவதை மட்டுமே தடுக்க முடியும். அதுவும் விதிப்படிதான்.

**வீடுபேறடைதல் கொள்கை:**
உயிர்கள் வீடுபேறடைதல் முன்னமே நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. உயிர்கள் என்ன முயன்றாலும் வீடுபேற்றை முன்னதாகவோ பின்னதாகவோ அடைய முடியாது.

**துறவறக் கொள்கை:**
துறவறம் முறையானதாகக் (Professional) கருதப்பட்டது. இல்லறத்திலும் வீடுபேறுண்டு.

**மறுபிறவிக் கொள்கை:**
தமிழில் ஊழ்வினைக் கோட்பாடு என்பர். நன்மை, தீமை ஆகிய நமது செயல்களின் அடிப்படையில் பாவ, புண்ணியங்கள் ஏற்பட்டு அதன் பலனை அனுபவிப்பதற்காக ஆன்மாவுக்கு மறுபிறவி ஏற்படுவதாக் கூறுவது கர்மவினைக் கோட்பாடு. வீடுபேறு அடையும் வரை உயிர்கள் பிறப்பெடுக்கும். வீடுபேறடைந்த உயிர்கள், மறுபடியும் பிறப்பெடுக்கும். நமது கர்மவினைகளுக்கு நாமே காரணம் என்பதால் புதிய நல்வினைகள் மூலம் அதனை மாற்றிக் கொள்ளலாம் என்பதை நியதிவாதம் ஏற்காது.

**ஊழின் பொருள் மற்றும் வகை:**
ஊழ் என்பதற்கு ஆசீவகம் கூறும் பொருள் இயற்கை நிகழ்வு என்பதே. அணுக்களின் புணர்வினாலும், பிரிவினாலும் (காலம், கருவி போன்றவற்றின் துணையினால்) ஏற்படும் இயற்கை மாற்றத்தையே இந்த ஊழ் எனும் சொல் குறிக்கும். நல் ஊழ் மற்றும் தீ ஊழ் என்ற பாகுபாடு இல்லை.

**அபிசாதிக் கொள்கை (Abhijati):**
ஆசீவகர்கள் மனிதரை அவர்கள் பக்குவ நிலைப்படி ஆறு பிரிவுகளாகப் பகுப்பர். இப் பகுப்பை அபிசாதி என்றனர். ஆசீவகத்தின் படி நிலைகள் 18, அதில் 6 வண்ணம், ஒவ்வொரு வண்ணத்திற்கும் மூன்று உட்பிரிவுகள் இந்த, 18 படி நிலைக்களுக்கான படிப்புகளை கடந்தவர்கள் ஐய நிலையை அடைவதாக கூறுகிறது ஆசீவகம். வீடு பேற்றை நோக்கிய மனிதனின் பயணத்தில் ஆகக் கூடிய உயர்நிலையில் இருப்போரை வெண்ணிறமாகவும் அதைத் தொடர்ந்து பொன்னிறம், செந்நிறம், பச்சைநிறம், கருநீலநிறம், கருநிறம் என வகைப்படுத்துவர். மணிமேகலையிலும் சிவஞான சித்தியாரிலும் இந்நிலைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

இதில் ஐய நிலை என்ற சொல்லுக்கு நிகரான சொல்தான் புத்த நிலை, தீர்த்தங்கரர், முக்தி நிலை என்றெல்லாம் பிற சமயங்களில் சொல்லப்படுகிறது.

அப்படி ஐய நிலையை அடைந்தவர்களை தான் ஐயனார் என்கிறோம். இதன் காரணமாக தான் நாம் மூத்தவர்களை, மெத்த படித்த பெரியவர்களை பொதுவாக ஐயா, ஐயன் என விளிக்கிறோம். திருவள்ளுவரும், ‘என் ஐ முன் நில்லன்மின் தெவ்விர் பலர் என் ஐ முன் நின்று கல் நின்றனர்’ - 771. இங்கு ‘ஐ’ என்னும் பதம் ‘தலைவன்’ என்னும் பொருளில் திருவள்ளுவரால் ஆளப்பட்டுள்ளது.

ஆசீவகத் துறவிகள் வழிவழியாக மக்களுக்கு நன்னெறிகள் போதித்து அவர்களை வழிப்படுத்தியதாக அறியப்படுகிறது.

ஆசீவகத்தின் முதல் படி நிலை கருமை வண்ணம் இது அறியாமை மற்றும் பண்படுத்தப்படாத மிருக குணம் போன்றவற்றை குறிக்கும், இந்த நிலையில் இருந்து ஒரு மாணவனை வெண்மை நிறத்திற்கு இட்டு செல்வது தான் ஆசீவக பள்ளிகள்.

இதை 18 படி ஐயப்பன் கோயிலுக்கு செல்பவர்கள் இன்றளவும் கடைப்பிடிக்கிறார்கள், அது ஆசீவகம் என்று தெரியாமலே. கன்னிச்சாமி கறுப்பு நிறத்தில் ஆடை உடுத்தியிருப்பார் அது வெளிர் கருப்பு, சாம்பல், அடர் நீலம், வெளிர் நீலம், அடர் பச்சை, வெளிர் பச்சை, மேலும் வெளிர் பச்சை, சிவப்பு, வெளிர் சிவப்பு, ஆரஞ்ச், மஞ்சள், வெண்மஞ்சள், பொன்நிறம், வெள்ளை, வெள்ளை, வெள்ளை என 18 ஆண்டுகள் 18 நிறங்களில் ஆடை உடுத்தி செல்வார்கள், 18-ஆம் ஆண்டை கடந்தவர் குரு சாமி என்று அழைக்கப்படுகிறார். அதாவது ஆசீவக மரபுப்படி இவர் ஐய நிலைக்கு முன் படி நிலையில் இருப்பவர் அதாவது ஜைனத்தின் கூற்று படி சொல்வதானால் சுவேதம்பரர்.

18-ம் நிலையையும் கடந்த நிலை தான் நீர்வண்ண நிலை, இதையே நிர்வாணம் என்கிறார்கள் பௌத்ததிலும் ஜைனத்திலும். அதாவது நீர் வண்ணத்தையே ஆடையாக உடுத்தியவர்கள் என்று பொருள். இதை இப்படியும் சொல்லலாம் திக்கையே ஆடையாக உடுத்தியவர் இவர்களே திகம்பரர்கள்! இந்த நிலையை அடைந்தவர்களை ஆசீவகம் ஐய நிலை என்கிறது.

ஆசீவகம் நீர்வண்ணர், அதாவது நீர்தங்கரர் என்பதே ஜைனத்தில் மருவி தீர்த்தங்கரர் ஆகிறது.

அபிசாதிகள் பற்றிய கோட்பாடுகள் தமிழ் நூல்களிலோ வடமொழி நூல்களிலோ விரிவாக இல்லை.

## வீடுபேறு:
உயிர்கள், ஒரு தனி அணுவை அறிந்து கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவை. இவற்றையே தெய்வக் கண்ணுடைய உயிர்களெனவும் கூறுவர். இத்தகைய நல்லுயிர்கள் தம் தகுதிக்கேற்ப இருவகை வீடுபேற்றை எய்துவதாக ஆசீவகர்கள் கூறுவர்.

## சதுவா நியதங்கள்:
உயிர்களும், அணுக்களும் நிலைபேறானவை எனக் கூறுவது போலவே உயிர்களுக்கு ஏற்படும் மாற்றங்களும் அவை தோன்றும் போதே நியமிக்கப்பட்டுவிட்டன எனும் நம்பிக்கையுடையவர்கள் ஆசீவகர்கள். இந்த மாற்றங்கள் நான்கு வகைப்பட்டவை எனக்கொண்டு அவற்றைச் சதுவா நியதங்கள் என்பர்.

இந்த நான்கு கோட்பாடுகளும் ஒரு பெண்ணின் வளர்ச்சி வாயிலாக நீலகேசியில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. ஒரு பெண்ணை அரிவைப் பருவத்தையுடைய பெண் ஆவது ஆம் என்கிற நியதியாகும். அதாவது குழந்தை அரிவையாகும் தன்மை நியதிப்படி முன்னரே நிலை நிறுத்தப்பட்டுவிட்டது. அது குழந்தையாக இருந்து அதை வளர்க்கப்படுமாறு வளர்த்தால் அது தவறாது அரிவையாகவே வளரும். இதுவே ஆமாங்கு ஆம் என்பதாகும். அரிவையாக ஆகும்போது குறிப்பிட்டளவு உருவ அளவை அடைவது ஆந்துணையாம் என்பதாகும். ஒருவருக்கு ஏற்படும் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட அளவுக்குதான் உண்டாகும். அதற்கு மேலாகவோ, குறைவாகவோ உண்டாகாது என்பதையே இது குறிக்கின்றது.

## ஆறு தவிர்க்க முடியாதவை:

ஆசீவகர்கள் கூறும் ‘ஆறு தவிர்க்க முடியாதவை’ என்ற கொள்கை முதன்மையானது. அவையாவன, பேறு, இழப்பு, இடையூறு, உறுமிடத்து எய்துதல், துக்கமுறுதல். சுகமுறுதல் அவற்றினுடைய நீக்கம், பிறத்தல், சாதல் ஆகியவை என்று கூறப்படுகின்றன. விதியினால் முன்னரே நியமிக்கப்பட்ட இவற்றை மனிதன் தன் ஆற்றலால் மட்டும் மாற்றிவிட முடி

யாது என்ற எண்ணத்தையே இங்கு ஆசீவகர்கள் வற்புறுத்து கின்றனர்.

ஊழ் என்ற சொல் ஆசீவகர்களது நியதிக் கோட்பாட்டை விளக்குமிடங்களிற் தமிழ் நூலாசிரியர்களால் கையாளப்பட்டாலும், இக் கோட்பாடு தமிழ் நாட்டில் நுழையு முன்பே இச் சொல் பல்வேறு பொருளில் தமிழிலக்கியத்தில் எடுத்தாளப் பட்டிருக்கிறது. ஊழ் என்ற சொல்லும் வினையென்ற சொல்லும் இன்றைய வழக்கில் ஒரு பொருளை உடையனவாக வழங்கப்படினும், தொடக்க நிலையில் தெளிவான இருவேறு கோட்பாடுகளைக் குறிப்பதாக அமைந்திருந்தன.

ஊழ் என்ற கொள்கை ஆசீவகர்களாலேயே முதன்முதலிற் தெளிவாகக் கோட்பாட்டுருவில் வெளிப்படுத்தப்பட்டாலும், இக்கருத்து இந்திய நாட்டிற் பண்டைக் காலந்தொட்டு மக்களிடையே அவர்கள் எண்ணத்திற் கலந்திருந்தது.

மனித வலுவினும் மேம்பட்ட ஒரு ஆற்றல் உண்டெனக் கொண்டு அதற்கு நியதி எனவும், ஊழ் எனவும் தெய்வமென வும் பெயரிட்டு வழங்கினர். அதாவது செயல்கள் நிகழுமுன் னரே அவை அவ்விதம் நிகழ்வதனை வரையறுக்கும் ஆற்றல் ஒன்றுண்டு. அவ்வாற்றலே நியதி என்று எண்ணினர். இந்த ஆற்றலை யாரும் கட்டுப்படுத்த முடியாது. அதன் போக்கை யாராலும் மாற்ற முடியாது. இந்த எண்ணமே ஆசீவகர்களாற் பின்னர் கோட்பாட்டுருக் கொடுக்கப்பட்டு மக்களிடையே பரப் பப்பட்டது. இதற்கு மாறாக பௌத்தர்கள் சைனர்கள் கொண்ட வினைக் கொள்கைப்படி மனிதச் செயல்களே, அவனது அநுபவங்களுக்குக் காரணம். அதாவது ஒருவன் ஓரிடத்து ஒருகாற் செய்த செயலின் விளைவு பின்னர் அதன் தன்மைக்கேற்ப அவனது இன்ப துன்பங்களைக் கட்டுப்படுத்தும், அதையே ‘முற்பகல் செய்யின் பிற்பகல் விளையு’ மென்ற கூற்றும் விளக்கும். நற்செயல் நல்வினையையும் தீச்செயல் தீவினையையும் விளைவிக்கும். இந்த வினைகள், அவற்றின், தாக்கம் முதலியன அவை நிகழ்ந்த காலத்தில் மட்டுமன்றிக் காலாதி காலமாகத் தொடர்ந்து மனிதனின் வெவ்வேறு பிறப்பு களிலும் சென்றடைகின்றன. இக்கருத்தைச் சைனர்கள், பௌத்தர்கள் மட்டுமின்றி இந்துக்களும் ஏற்பர்.

வினையீட்டம், அதனின்றும் உயிர் விடுபட்டு நன்னிலையடைதல் ஆகியவை பற்றிய விளக்கத்திற்றான் இம் மூன்று சமயங்களும் வேறுபடுகின்றன. வினையீட்டம், வினையினின்றும் உயிர் விடுபடுதல் போன்ற கருத்துக்களை இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மனிதச் செயல்களின் விளைவுகளுக்கோ, மனிதனுக்கோ இவர்கள் இன்றியமையாத்தன்மை அளிக்க வில்லை. உலகத்தின் நிகழ்வுகள் எல்லாவற்றிற்கும் காரணம் ஊழ் என நம்பினர். இதுவே வடநூல்களில் நியதி எனக் குறிப் பிடப்படுகின்றது. நியதி என்ற சொல், ஒர் நிலைபேறுள்ள ஒழுங்குமுறை விதி, தேவை, தெய்வம் முதலியவற்றைக் குறிப்பதாய் வடநூல்களிற் கையாயப்பட்டுள்ளது. மாறிமாறி வரும் பருவகாலங்களும் அவற்றின் விளைவுகளும் பண்டைய மனிதனை வியக்க வைத்திருக்க வேண்டும். பருவங்களின் மாற்றம், இயற்கை உற்பாதங்கள் எழில் பொருந்திய காட்சிகள் எல்லாம் நியதி என்ற ஒழுங்குமுறைப்பட்டதென நம்பினர். வடநூல்கள், முறையாக வரும் ஒழுங்கினை நியதி என அழைப்பதைத் தமிழ்நூல்கள் ஊழ் எனக் குறிப்பிடுகின்றன.

**ஆசீவகத்தின் ஏழு முனி:**

அசீவகத்தின் ஒவ்வொரு 6 படி நிலையிலும் இக் கன்னிமார் தெய்வங்களும் முனிகளும் வருவார்கள், முனீஸ்வரன், ஐயனார் உள்ளிட்ட ஏழு பெண் தெய்வங்கள் தான் பெரும்பான்மையான தமிழ் சமூகத்தின் குல தெய்வங்களாக இன்றளவும் இருக்கிறார்கள்.

● இந்த ஆசீவகம் சொன்ன தெய்வங்களான ஆதி நாதர், திருமால், இலக்குமி, தவ்வை போன்ற தெய்வங்களை குறிப்பிடுகிறார் திருவள்ளுவர்.

● வேறு எந்த சமயமும் ஏற்காத தற்செயல் கோட்பாடு, அணுக் கோட்பாடு, ஊழ் கோட்பாட்டை சொல்லும் ஒரே சமயமும் ஆசீவகம் தான், திருக்குறளில் ஊழ் என்ற ஒரு அதிகாரமும் இருக்கிறது.

**ஆசீவத்தின் குறியீடு :**

யானை, வெள்ளை யானை என்பது ஆசீவகத்தின் மிக உயரிய குறியீடு. அந்த யானை தான் முருகனின், ஐயப்பனின், இந்திரனின் வாகனமாக காட்டியிருப்பார்கள். இவர்கள் அனைவரும் ஆசீவக சித்தர்கள். இந்த இந்திரன் ஆரியர்கள் சொல்லும் இந்திரனல்ல,

இவர் இலகிம சித்தி உள்ளிட்ட ஐந்திர சித்தியில் வல்லவர், அதனால் தான் அவரது பெயர் ஐந்திரசித்தன் - இந்திரசித்தன். இவர் இராவணனின் மகன் ஆவார்.

● இவர் சக்கரத்தின் துணைக்கொண்டு கருவிகள் பல படைத்ததால் அது எண் திறம் என்று அழைக்கப்பட்டு இயந்திரமாகியது.

இந்த ஐய நிலை, ஐயன் போன்ற சொல் மூலத்திலிருந்து தான் ஐயர் ஐயங்கார் போன்ற சொற்கள் எல்லாம் பிற்காலத்தில் தோன்றின.

ஆசீவகம் போற்றும் முதல் இரண்டு ஐயனார்களான ஆதிநாதர் சிவனும், பார்சுவ நாதரான திருமாலும் தான் இவ்விரு சைவ வைணவ சமயங்களின் கடவுளர்.

பார்சுவ நாதரின் கோட்பாடு விண்ணியல் கோட்பாடு அவர் தான் முதன் முதலில் கோள்களின் நகர்தலை துல்லியமாக கணித்தார் அவர் வரைந்த கோள்களின் நகர்தல் பற்றிய வரைபடம் தான் சக்கரமாக காட்சிப்படுத்தியிருக்கிறார்கள், நிலாக்கல்லில் படுத்து விடிய விடிய விண் ஆய்வை மேற்கொள்வார் காலையில் அயர்ந்து உறங்கிப்போவார் அவரது சிஸ்ய பிள்ளைகள் பாடி எழுப்புவார்கள் அதுவே இன்று சுப்ர பாதமானது, பனியால் ஏற்பட்ட கபம் தீர தைலக்காப்பு செய்வார்கள், துளசி நீர் தருவார்கள் இவையெல்லாம் இன்றளவும் பெருமாள் கோயில்களில் நடக்கிறது. இந்த சித்தர் தான் கோள்களின் தூரத்தை அளவீடுகளை கணக்கிட்டு சொன்னார்.

இதனால் தான் வைணவ கோயில்களை விண்ணகரம் என்கிறோம், திருமாலின் வாகனமாக கழுகை (கருடன்) காட்டுகிறோம், அண்டத்தின் இந்த கணக்கீடுகளை தந்ததால் தான்

அவர் உலகளந்த பெருமாள் ஆனார். அதனால் தான் அவர், திருவரங்கத்தில் விண்ணாய்வு செய்யும் நிலையில் காணப்ப டுகிறார்.

இந்த 108 என்ற எண்ணின் சிறப்பும் இதுவே. இந்த அண்டத் தின் கணக்கீடுகள் 108-லேயே அடக்கம் என்பதால் தான் அவ ருக்கு 108 திவ்ய தேசங்கள்!

சைவமோ வைணவமோ கருவறையின் முகப்பில் கஜலட்சுமி படம் இருக்கும் இது ஆசீவத்தின் குறியீடு தான். எந்த கோயில்களில் எல்லாம் யானையை வேறு மிருகம் கொல்வது போல காட்டுவார்களோ அந்த கோயில்கள் எல்லாம் முற்க லத்தில் ஆசீவக கோயில்கள் என்கிறார் ஐயா நெடுஞ்செழி-யன். எந்தெந்த சமணர் பாழிகளுக்கு அருகில் ஐயனார் கோயில் இருக்கிறதோ அதுவெல்லாம் ஆசீவக சமணர்கள் வசித்த பாழிகள், தமிழகத்தில் 80% பாழிகளுக்கு அருகில் ஐயனார் கோயில்களே காணப்படுகின்றன.

கஜேந்திர மோட்சம் என்ற கதை சொல்லும் செய்தி, ஆசீவ கத்தை அதிகம் தன்வயப்படுத்தி இன்று காத்து வருவது வைணவம் தான், சைவம் ஆசீவகத்தை அழிக்க பெருமளவு துணை நின்றது சிவபெருமானே யானையின் தோலை கிழித்து போர்த்திக்கொண்டார் என்ற ஒரு கதை சொல்வர் அது ஆசீவகத்தை சிவ சமயம் அழித்தது என்பதை சுட்டும் செய்தி தான், 8000 சமணர்களை கழுவேற்றி கொல்ல செய்த தும் சைவம் தான்.

இன்னும் இதன் பின்னால் பல விளக்கங்கள் ஆதாரங்கள் ஆய்வுகள் இருக்கின்றன, முனைவர் நெடுஞ்செழியன் அவர் கள் தமிழர்களின் பெரும்பான்மையான இலக்கியங்களை எழு தியது ஆசீவகர்களே என்கிறார். ஔவையாரும் அணுக்கோட் பாட்டை ‘அணுவைத் துளைத்து ஏழ் கடலைப்புகுத்தி குறுகத் தரித்த குறள்’ என்று திருக்குறளை அணுக்கோட்பாட்டை வலி யுறுத்துகிறார். சங்கப்பாடல்களில் நல்வெள்ளையார் போன்ற வர்கள் ஆசீவக மரபை சேர்ந்தவர் என்கிறார்.

ஆசீவகத்தின் அணுக்கோட்பாடு, தற்செயல் கோட்பாடு, விண்ணியல் கோட்பாடு எல்லாம் சங்க இலக்கியங்களில் விரவி கிடக்கிறது என்றும் கூறுகிறார்.

இன்று, ஐயனார் வழிபாடு ஏதோ நாட்டார் வழிபாடு என்ற நிலையில் சிறுதெய்வங்களாகப் பார்க்கப்படுகிறார்கள், உல கில் ஆசீவகத்தின் கூறுகள் இல்லாத சமயங்களே இல்லை எனலாம். ஆசீவகம் என்பது பழங்காலத்தில் இருந்த வாழ்வி யல் முறை அதை கொண்டு தான் சைவமும் வைணவமும் சம யங்களாக தோற்றுவிக்கப்படுகின்றன.

ஆசீவகர்கள், மலைக்குகைகளில் பாழிகளில் தான் தங்கியி ருந்தனர். ஒவ்வொரு சதுர்த்தி/சதுர்த்தசி நாளில் மலையில் இருந்து கீழே இறங்கி வந்து அரச/ஆல மரத்தடியில் அமர்ந்து மக்கள் குறைகளுக்கு தீர்வு செல்வார்கள் இவர்க ளின் குறியீடான யானை தான் அரசமரத்தடி பிள்ளையார் ஆனார், சதுர்த்தி நாள் சங்கட அரசதுர்த்தி வழிபாடு நாள் ஆனது.

இவர்கள் நடத்திய பள்ளிகள்/பாழிகள் (படுக்கைகள்) தான் இன்றளவும் கல்விச்சாலைகளை நாம் பள்ளிகள் என அழைக்கக் காரணம்.

திரு அரங்கம் என்றால் தீவு என்று பொருள் திரு சிராப் பள்ளி என்பது சமணர் பள்ளி நடந்த இடம். இன்றளவும் மலைக் கோட்டை அடிவாரத்தில் பல்லவர் குகை என்ற ஒன்று இருக்கி றது அதுவும் சமணர் பள்ளி நடந்த இடம் தான்.

ஆசீவகம் பற்றி தெரிந்துக்கொண்டால் இன்று நிலவும் சமயங் களின் மூலம் எது என்றும் தெரிந்துக்கொள்ள முடியும். ஆசீவ கம் எதையெல்லாம் தனது தெய்வங்கள் என சொன்னதோ அதுவெல்லாம் சைவத்திலும் வைணவத்திலும் இருக்கும் தெய்வங்கள். ஆசீவகம் பற்றிய மூல நூல் எதுவும் நமக்கு கிடைக்கவில்லை, நமக்கு கிடைத்ததெல்லாம் பிற சமயங்க ளில் விமர்சிக்கப்பட்டதைக் கொண்டு பலர் எழுதிய ஆய்வு கட்டுரைகளை அடிப்படையாக கொண்டு முனைவர் நெடுஞ் செழியன் அவர்கள் தமிழகத்திலும் தமிழ் இலக்கியங்களிலும் நீண்ட காலம் ஆய்வை மேற்கொண்டு ஆசீவகமும் ஐயனார் வரலாறும் என்ற நூலை எழுதியிருக்கிறார்!

தமிழர் மெய்யியல் ஆசீவகத்தில் இருந்து தான் தொடங்குகி றது. அது வட நாட்டு சமயமல்ல தமிழர் சமயம் என ஆதாரங் களுடன் நிறுவுகிறார், இன்றளவும் ஐயனாரை குலதெய்வமாக கொண்டவர்கள் தமிழர்களே.

வினைக் கொள்கையையும், ஊழ்க் கொள்கையையும் ஒப்பி டும் போது, ஊழ்க் கொள்கை வினைக் கொள்கைக்கு ஓரளவு முற்பட்டு இந்திய மக்கள் எண்ணத்தில் வேரூன்றியிருந்தது என்றே கூறலாம். மனிதன் தன்னாற்றலுக்கு அப்பாற்பட்ட செயல்களாற் பாதிக்கப்படும்போது, அந்நிகழ்ச்சிகளுக்கு விளக்கமளித்து அமைதி காண முயல்கின்றான்.

இவ்விதமாக அமைதி காணும் முயற்சியில் சைனர்களும் பௌத்தர்களும் வினைக் கொள்கையை உருவாக்கினார்கள். உயிர்களின் செயல்களே அவற்றின் அனுபவங்களுக்குக் காரணம். இந்த அனுபவங்களை அகற்றவேண்டுமானால் உயிர்களே முயற்சி செய்ய வேண்டும். வினைகள் தம்மை அணுகாதவாறு உயிர்கள் காத்து, வினையற்ற நிலையில் வீடுபேற்றை அடையவேண்டுமென்பது இவர்களுடைய எண்ணம்.

இவர்களிலும் சிறிது வேறுபட்ட நிலையில் இந்து சமயத்தவர் உயிர்களின் வினைகள் இறையருளால் வேரறுக்கப்படவல் லவை என்பர்.

ஆனால் இவ்விருசாரார் எண்ணத்தைவிட முற்றிலும் வேறுபட் டது நியதி எனும் ஊழ்க்கோட்பாடு. இந்த எண்ணம் இயற்கை யுடன் நெருங்கிய தொடர்புடையது. இயற்கையின் நியதியாம் நெறியைத் தம் ஊழ்க் கொள்கையில் உள்ளடக்கியுள்ளனர் ஆசீவகர்கள். தமிழ் நாட்டு ஆசீவகர்களின் எண்ணத்தில், நிய தம் என்ற கோட்பாடு நான்கு வகைப்பட்டது. இதைச் சதுவாநி யதம் என ஆசீவகர்கள் அழைப்பர். அதாவது ஒரு நிகழ்ச்சி நடக்கவேண்டும் என்ற நியதி இருக்குமானால் அது நடந்தே தீரும். அது நிகழும் போது எப்படி நிகழ வேண்டுமென்று விதிக்கப்பட்டதோ அப்படியே தான் நிகழும். ஒரு குறிப்பிட்ட வரையறைக்குட் தான் அதுவும் நிகழும் அதேபோல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்றான் அது நிகழும், இவ்வெண்ணங் களை ஆசீவகர்கள் ‘ஆவது ஆம்’, ‘ஆமாங்கு ஆம்’, ‘ஆந்து ணைஆம்’, ‘ஆங்காலத்து ஆம்’ என்று குறிப்பிடுவர். இந்

நான்கு எண்ணங்களும் பழந்தமிழ்ப் பாடல்களில் ஆங்காங்கு பயின்று வருவதை நாம் காணலாம். எடுகோளாக ஔவையா ரின் மூதுரைப் பாடலில் ‘ஆங்காலத்து ஆம்’ என்ற எண்ணம் வெளிப்படுவதைக் குறிப்பிடலாம், என்கிறார் டாக்டர் ர. விஜய லட்சுமி.

## திருக்குறளுக்கும் ஆசீவகத்திற்குமுள்ள கோட்பாட்டு ஒப்பாய்வு:

**ஒற்றுமை:**
வேத மெய்யியல் எதிர்ப்பு, கொல்லாமை, புலால் உண் ணாமை ஆகியவற்றில் ஒற்றுமை.

**வேற்றுமை:**
ஊழ்: ஆசீவகம், ஊழ் என்பது இயற்கை நிகழ்வு, தனிமனி தனின் முயற்சி, செய்கைகளை அடியாகக் கொண்டதல்ல, உயிர் கருவிற்பட்டபோதே நியமிக்கப்பட்டுவிடும்.

திருக்குறள் - மனிதவாழ்வின் மேம்பாட்டிற்கு காரணமான பொருளை ஈட்டலும், அதனைத் துய்ப்பதும், ஊழ்வினையின் அடிப்படையிலேயே வாய்க்குமென்னும் கருத்தினைத் திருக் குறள் உறுதிபட உரைத்துள்ளது. ஆனால், முயற்சியால் வலிய ஊழையும் வெல்லலாம் என்பதைக் கூறுவதன் மூலம் ஊழிற்கு எதிரான மனித முயற்சியின் ஆற்றலை ‘வள்ளுவம்’ வலியுறுத்துகிறது.

**அணுக் கொள்கை:**
ஆசீவகம் - நிலம் , நீர் , தீ , காற்று , உயிர் என அணுக்கள் ஐந்து.

திருக்குறள் - பிரபஞ்சம் பற்றிய கருத்து திருக்குறளில் பரக் கக் காணலாம். நிலம், நீர், காற்று, மூவுலகு, சூரியன் முதலிய வற்றைப் பற்றிய ஞானம். உலகம் என்பது உயிர், சடப்பொ ருள், இடம், காலம், அசைவுச் சாதனம், அசைவு இன்மைச் சா தனம் என்னும் 6 பொருட்களின் உறைவிடம் என்று இவ்வாறு பல.

**வர்ணக் கோட்பாடு:**
ஆசீவகம் - அபிசாதி - ஆசீவகர்கள் மனிதர்களின் பக்குவநி லைப்படி 6 பிரிவாகப் பிரிப்பர். இவ் வகைப்பாட்டை நோக் கின் ஆசீவகர்கள் மக்களை அவர்கள் நிலை, தொழில், அடிப்படையில் பிரித்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

திருக்குறள் - பிறப்பால் எல்லோரும் சமம் என்னும் கோட்பாட் டினர்.

> ***‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா***
> ***செய்தொழில் வேற்றுமை யான்’***
>
> – குறள் :972

அனைத்து உயிர்களும் பிறப்பினால் சமமானவர்களே. அவர வர் செய்யும் தொழில்களால் பெருமை, சிறுமை என்னும் சிறப் பியல்புகள் தான் ஒத்திருப்பதில்லை, என்கிறார்.

## முடிவுரை:

தனிமனிதனை முன்னிறுத்தி, அவன், அவன் வாழும் சமூகம், சமூகங்களின் கூட்டான உலகம் என்று உலகு தழுவிய நிலை யில், உலக அமைதி, சமாதானம், இன்பம் ஆகியவற்றிற்கு உறுதுணையான அற நெறிகளை எடுத்துக் கூறும் திருக்கு றள் ‘உலகப் பொதுமறையாகும்.’

2000 ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த வாழ்வியல் நூலான திருக்குறள், தன் காலத்திற்கு மட்டுமல்லாமல், 21-ம் நூற் றாண்டுச் சமூகத்திற்கும், எதிர்காலச் சமூகத்தினருக்கும் வழி காட்டும் புரட்சி இலக்கியமாகும். மாறிக் கொண்டே இருக்கும் உலகியலில், காலத்திற்கு ஏற்றவாறு புதுப் புதுக் கருத்துக்க ளைத் தந்து, இனம், மொழி, மதம், நாடு என்னும் எல்லைக ளைக் கடந்து மனித சமூகத்தின் வழிகாட்டியாக விளங்குகி றது. பாரதியாரும் இது காரணமாகவே, ‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’ என்று பாடிவைத்தார்.

திருக்குறள் போன்ற ஒரு நீதி நூலை இன்னொன்றுடன ஒப்பிட் டுப் பார்ப்பது அந்நூல் எவ்வகையில் திருக்குறளிலிருந்து பொதுமையில் வேறுபடுகிறது என்பதை அறிவதற்காகவே.

- உலகளாவிய நிலையில் இன்று எமக்குப் பல நீதிநூல்கள் கிடைத்திருக்கின்றன. இவற்றோடு திருக்குறளை ஒப்பிட் டுப் பார்க்க வசதிகளும் உண்டு.
- பெரும்பாலான நீதி நூல்கள் சமூகம் சார்ந்தவையாக, அச் சமூகத்தின் நன்மைக்காகவே, அச் சமூகத்தைக் கட்டுக் கோப்பாக வைத்திருப்பதற்காக எழுதப்பட்டவையே. ஆனால், திருக்குறள் ஒரு சமூகம் சாராது உலகனைத்துக்கும் ஏற்பு டையதாக அமைக்கப்பட்டுள்ளது.
- திருக்குறளின் ஆக்கத்தில், திருவள்ளுவர் காலப் பின்ன ணியில் தமிழ் நாட்டில் வழக்கிலிருந்த அரிய அறக்கருத் துக்களின் தாக்கங்களுக்கு திருவள்ளுவர் ஆளாகியிருக்கி றார் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஒரு நூலாசிரியன், தன் காலத்தின் கண்ணாடி.
- தொல்காப்பியர், ஐந்திரம் நிறைந்தவராகக் கூறப்படுகி றார். தொல்காப்பியத்தில் அறிவியல் கூறுகள் பரக்கக் காணப்படுகின்றன.
- குறளை முழுக்க முழுக்க தமிழ்ப் பண்பாட்டின் உருவாக்க மாகவே காட்டவேண்டும் என்ற நோக்கு, திருக்குறளின் ஆய்வுகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது.
- திருவள்ளுவருக்கு, அவர் காலத்தில் வழக்கிலிருந்த பிற சமயங்களில் ‘சாந்தமான பார்வை’ நிச்சயமாகப் பாதிப்பை ஏற்படுத்திய காரணத்தாலேயே அவர், திருக்குறளைப் பொது நோக்கில் எழுதக்கூடியதாக இருந்தது என்னும் நோக்கிலும் பார்க்கலாமே.
- இன்று, திருக்குறளை முன்னிலைப்படுத்தி, திருக்குறளுக் கான பன்முக ஆய்வு தொடர்பாகத் தமிழ்நாடு எடுத்திருக் கும் முயற்சி வரவேற்கத்தக்கது.

நிச்சயமாக, திருக்குறள் ‘பொதுமறை’ என்னும் முடிவை இந்த ஆய்வு முன்வைக்கிறது.



selvanayaki.s@thaiveedu.com




புதுவை மாநகரம் தர்மத்தில் சிறந்த ஒரு புண்ணிய பூமி. அக்காலத்தில் பக்கத்துக் கிராமங்களிலிருந்து அநேக அந்த ணர் குடும்பங்கள் பிழைப்பு நாடியும், குழந்தைகளின் கல் வியை முன்னிட்டும் புதுவையில் குடியேறியிருந்தனர். பல தர் மப்பிரபுக்கள், அந்தக் காலத்தில், அநேக சத்திரங்களையும் வீடுகளையும் அந்தணர்களுக்கு வாடகையின்றிக் குடியி ருக்க விட்டிருந்தார்கள். 1903-ம் ஆண்டு, புதுவைக்கு எட்டுக் கல் தொலைவிலிருக்கும் ஒழிந்தியாம்பட்டு என்னும் கிராமத் திலிருந்து எங்கள் குடும்பம் புதுவை வந்து சேர்ந்தது. காலம் சென்ற என் தமையனாரும் நானுமே என் பெற்றோர்க்குக் குழந்தைகள். நாங்கள் இருவரும் 'கல்வே காலேஜ்' என்ற ழைக்கப்பட்ட பள்ளியில் சேர்க்கப்பட்டோம். எங்கள் பள்ளிக் குப் பக்கத்தில், ஈசுவரன் தர்மராஜா கோவில் தெருவில், முத லில் தெற்குப் பார்த்த வீட்டில் பாரதியார் வசித்து வந்தார். பிறகு நேரே எதிரே இருந்த வடக்குப் பார்த்த பெரிய வீட்டுக் குக் குடி போனார்'. என்று தன்னையும், புதுவையில் பாரதி யார் வந்து குடியிருந்த வீட்டையும் அறிமுகப்படுத்துகிற டி. விஜயராகவன் (டி. விஜயராகவாச்சாரியார்), இளம்பருவத்தி லேயே பாரதியாரின் அன்புக்குப் பாத்திரமானவர். பாரதியின் குடும்பத்தாருடன் பழகும் பேறு பெற்றவர்.

அவர் கண்ட பாரதியார் வழக்கமாக நாம் அறிந்த பாரதியார் மட்டுமல்லர். அதற்கும் பாரதியாரின் அக-புற அழகுகளை அறிந்துகொண்ட விஜயராகவன், மகாகவி பாரதியாரின் ஆற் றலையும், எளிமைத் தன்மையையும் இளவயதிலேயே நன்கு ணர்ந்தவர்.

'தேசப்பற்றும், இளைய பாரதத்தினர் மீது பாரதியார் கொண்டி ருந்த நம்பிக்கையும் அளவிடற்கரியன. தான் பெற்ற திறம்அ னைத்தும் தம் சந்ததியர் பெற வேண்டும் என்கிற ஆர்வமும் அதனைத் தாமும் முன்னின்று செய்ய வேண்டும் என்கிற முனைப்பும் கொண்டவர்' என்கிற பாரதியப் பாங்கினை நுட்ப மாகத் தன் அனுபவக் குறிப்பில் விஜயராகவன் எடுத்துரைக் கிறார்.

பாரதி குறித்த பழகுதமிழ்ச் சித்திரமாக விரியும் அவர்தம் விவ ரிப்பில், மகாகவி பாரதியார் சொற்பொழிவாளராக, நட்பார் வம் மிக்கவராக, நாட்டுப் பற்றாளராக, சமஸ்கிருத வல்லுந ராக, ஏன் சமஸ்கிருத ஆசிரியராகவும் திகழ்ந்த தன்மையை இயல்புற விளங்கிக் கொள்ள முடிகிறது.

நாட்டு விடுதலையையே தமது நோக்கமாகக் கொண்ட பாரதி யார், அதற்காகப் பாட்டுகள் கட்டவும், சொற்பொழிவுகள் நிகழ்த்தவும், இதழ்களில் எழுதவும் செய்த பாரதியார், சமஸ் கிருத டியூஷன் எடுக்கிற மாஸ்டராகவும் விளங்கினார் என்பது இவர்தரும் புதிய தகவல். அதுமட்டுமல்ல, அக்காலத்தில், தீவிரவாதியாகப் பலருக்கும் தெரிந்த பாரதிக்குள் தெய்வக் குழந்தையின் தரிசனம் கண்டவர் விஜயராகவன், அதனைத் தெளிவாகவே தன் சொற்களுக்குள் பின்வருமாறு தீட்டியும் காட்டுகிறார்.

'சில ஞாயிற்றுக்கிழமைகளில் பாரதியார், நம் நாட்டின் பழங் காலப் பெருமைகளையும், அன்னியஆட்சியினால், நாடு அடைந்திருந்த சிறுமை நிலையையும் எடுத்துக்காட்டி ஆவே சத்துடன் சொற்பொழிவாற்றுவார்'. அம்மாதிரி அவர் நிகழ்த் தும் சொற்பொழிவுகளுக்கு என் நண்பர்களும் நானும் போவோம். அப்போதெல்லாம், பாரதியார் 'இளைஞர்கள் தாம் தாமாகவே முன்வந்து பாடுபட்டு இந்தியாவுக்கு விடு தலை பெற்றுத் தர வேண்டு' மென்று வற்புறுத்திச் சொல்வார். அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டுக் கேட்டு எங்க ளுக்கு அவரிடம் ஒருவித பக்தியும், அவருடன் பழக வேண்டு மென்ற அவாவும் உண்டாயின. அவரது ஒளிமிகுந்த கண்க ளும், ஆவேசமான உணர்ச்சி பொங்கும் வார்த்தைகளும், தலைநிமிர்ந்த தோளுயர்ந்த சரீரமும் பார்த்தோருக்கு ஒரு வித அச்சத்தை யூட்டும். ஆனால், நெருங்கிப் பழகிய பின் தான் அவருடைய அச்சம் தரும் தோற்றத்தினுள் பச்சிளங்கு ழந்தையினும் மென்மையான குழந்தையுள்ளத்தின் பண்பு புலப்படும். முதல் பயம் நீங்கி, நாங்கள் அவருடைய இல்லத் திற்கு அடிக்கடி போய்வர ஆரம்பித்தோம். 'என் அதிர்ஷ்டத் தின் பயனாக, அவருக்கு என்னிடம் பரிவு ஏற்பட்டது. அவர் எனக்கு ஸமஸ்கிருதம் போதிக்க ஆரம்பித்தார். தினமும் காலை பதினோரு மணிக்குப் பள்ளிக்கூடம் விட்டதும் நேரே அவர் இல்லத்திற்குச் சென்று ஒரு மணி நேரம் ஸமஸ்கிருதம் படித்து, வீட்டிற்குப் போவேன்' என்று குறிப்பிடுகிறார்.

எடுத்துப் படிப்பவர்களுக்கு இந்தக் காட்சி மனத்துள் புலப்ப டும். ஆனால், அவர் நேருறக் கண்ட பாரதியின் தோற்றம் எப் படி இருந்திருக்கும். பரிவு மிக்க கணவனாய், பாசம் மிகுந்த தந்தையாய், இணக்கமிகுந்த நண்பராய் அவர் இருந்த திறத்தை எப்படி எல்லாருக்கும் காட்ட முடியும்?

சொற்சித்திரம் தீட்டிக் காட்டுவதைவிடவும், ஓவியத்தில் எழுதி உணர்த்திவிடலாம்தான். அந்தக் கலையில் வல்லுநரான நாமக்கல் கவிஞரே, அதைச் செய்ய முடியாத சோகத்தைத் தனது வாழ்க்கை வரலாறான என் கதையில் எடுத்துரைத்தி ருக்கிறார்.

கானாடுகாத்தானில் மகாகவியின் கவித்துவ தரிசனத்தை நேருறக் கண்டவர் நாமக்கல் கவிஞர். ஆனால், அவரைக் கண்டுணர்ந்த தருணங்கள், அந்தி மயங்கி இருள் கவியும் மாலை. இளங்கதிரோன் உதயமாகுமுன் புலரும் விடிகாலை. ஓவியமும் நிழற்படமும் ஒளியும் இருளும் ஒன்றிக் கலந்த வண்ண விளையாட்டுத்தானே. தாளிலோ திரையிலோ தூரிகை கொண்டு வரைய முற்படுவதற்கு முன், கண் கண்ட சித்திரம் மனச்சித்திரமாக வேண்டும் அல்லவா? அப்படி ஒரு சூழல் அமையாத் தன்மையைத் தன் சொற்சித்திரத்தில் காட்டுகிறார் நாமக்கல் கவிஞர்.

இப்படியாக நான் பாரதியாரைப் பார்த்தும் பார்க்காதவனாகவே இருக்கிறேன். அவரைச் சந்தித்த நேரம் இருட்டின பிறகு, விடியும் முன்னர்ப் பிரிந்துவிட நேர்ந்தது. அவருடைய திருவுருவத்தின் அங்க மச்ச அடையாளங்களை என்னுடைய சித்திரக்கண்ணோடு பார்க்க நேரம் சரியில்லை. நினைப்பும் வரவில்லை. அவரைப் பார்த்த நிமிஷத்திலேயே அவரைப் பற்றியே எண்ணம் ஓடவில்லை. அவருடைய பேச்சுக்களின் ஜீவசக்தியும், பாடின பாட்டுகளின் பாவமும் என்னுடைய காதில் இன்னும் இருக்கின்றன. ஆனால், அவருடைய உருவத்தைப்பற்றி என் கண்ணில் இருப்பனவெல்லாம் முறுக்கி விட்ட மீசையும் ஞானக்கனல் வீசும் கண்களுந்தாம். அவருடைய வடிவத்தை சாயத்தில் வரையவேண்டும் என்று எனக்கு நெடுநாளாக ஆசை. அவரை நான் பார்த்த சம்பவத்தை மனத்தில் அடிக்கடி உருவகப்படுத்தியுங்கூட அவருடைய உள்ளந்தான் எனக்கு முன்னால் வருகிறதேயல்லாமல் உருவம் வருவதில்லை. இப்போது நமக்குக் கிடைக்கும் படங்களில் அவருடைய உருவம் ஒருவாறு தெரிந்தாலும் அவருடைய உள்ளத்தையும் காட்டக்கூடிய படம் இல்லை. அப்படி ஓர் உருவத்தை விரைவில் அமைப்போம்.'

தோற்றத்தை, நிழற்படமாக எடுத்துக்கொண்ட பெருமையைத் தமதாக்கிக் கொண்டது காரைக்குடி ஹிந்துமதபிமான சங்கம். தனியொருவராகக் கைத்தடியைச் செங்கோல்போல் ஏந்தியவாறு தனித்தவிசில், கவிராஜசிங்கமென வீற்றிருக்கும் படம் ஒன்று. காரைக்குடி ஹிந்து மதபிமான சங்கத்தாருடன் இணைந்து நடுநாயகமாக வீற்றிருக்கும் படம் இரண்டு.

இவற்றுக்கும் முன்னதாக, புதுவையில் எடுக்கப்பட்ட படங்கள் இரண்டு. அதற்கும் முன்னதாக எடுக்கப்பட்ட படம் ஒன்று உண்டு என்கிறார் ரா.அ. பத்மநாபன். அது இளவயதில், பாரதி சுப்பையாவாக இருந்த தருணத்தில் எடுக்கப்பட்டது. இந்தப் படம் இப்போது நமக்குக் கிடைக்கவில்லை என்கிற ரா.அ. பத்மநாபன் போல் தேடினால் கிடைக்கவும் செய்யலாம்.

'இந்த முதல் படத்துக்குப் பிறகு, பாரதி எடுத்துக் கொண்ட படம், பாரதி - செல்லம்மா படம்தானென்று தோன்றுகிறது. அதே தினம் மனைவி மக்கள், இரு நண்பர்களுடன் இன்னொரு படமும் எடுத்துக்கொண்டார்'என்று குறிப்பிடும் பத்மநாபன் இந்தப் படங்கள் எடுக்கக் காரணரானவரையும் தனது நேர்காணலில் பதிவிட்டிருக்கிறார். அவர்தான் இந்த விஜயராகவன்.

தம்பதி சமேதராக, செல்லம்மாவின் தோள் தொட்டுத் தழுவிய பாரதியின் படம் ஒன்று. மற்றொன்று, செல்லம்மாவுக்குச் சிறப்பிடம் தந்து அமர்வித்து, அவர் தோள் தொட்டு, பாரதி தன் குடும்பத்தாருடன் இப்படம் எடுக்கக் காரணரான விஜயராகவனுடன் அவர் நண்பர் ராமுவும் உடன் இருக்கிற படம்.



'இந்தப் படத்திலும் அக்காலத்திற்கு மாறாகச் சில விஷயங்கள் இருக்கின்றன. கணவன், மனைவி படமெடுத்துக் கொள்வதென்றால், கணவன் அமர்ந்துகொண்டும், மனைவி நின்றுகொண்டும் படமெடுத்துக் கொள்வதே வழக்கம். ஆனால், இந்தக் குடும்பப் படத்திலோ, பாரதி நிற்கிறார். செல்லம்மா உட்கார்ந்திருக்கிறார். இது மேனாட்டு ஆசாரத்தைப் பின்பற்றிய தெனலாம். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை ஒழிக்க வந்த பாரதி, தம் மனைவியை அமரச் செய்து, தாம் நின்றவண்ணம் படமெடுத்துக் கொண்டதில் வியப்பில்லை' என்கிறார் பத்மநாபன்.

அன்னைக்குப் பக்கத்தில் பாப்பா என்று பாரதி கொண்டாடிய சகுந்தலாவுக்கும் தனித் தவிசு. ஆனால், பெரியவரான தங்கம்மா நிற்கிறார். அவரை அடுத்து, ராமுவும், விஜயராகவனும். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம் என்பதை, இந்த நிழற்படத்தின்மூலம் உணர்த்திக் காட்டிய பாரதி, ஆண்களைக் காட்டிலும், பெண் உயர்ந்தவள் என்பதையும் மனைவி மகத்தானவள் என்பதையும் படமாக்கித் தந்து பாடம் புகட்டுகிறார் பாரதியார்.

பாரதியின் புரட்சிகரப் போக்கினால், ஈர்க்கப்பட்ட விஜயராகவன் அவரைப் போலவே, தலைப்பாகை அணிந்து நாமமும் இட்டுக் கொண்டிருக்கிறார். அவரைப் பின்பற்றுகிற ஆர்வம், பாரதியின் பின்புறத்தில் அவரை முன்னிறுத்தியிருக்கிறது.

அதெல்லாம் சரி, இந்தப் படங்கள் எடுக்கப்பட்டதன் பின்புலம் யாது? அதை, விஜயராகவனிடம் விசாரணை செய்து, பத்மநாபன் பதிவிடுகிறார்.

விஜயராகவன் விவரிக்கிறார். 'என் நண்பர் கணபதி அய்யர் என்பவரின் உறவினரான ராமு என்பவர்திருச்சியில் ஒரு கல்லூரியில் படித்துவந்தார். ஒருமுறை புதுவை வந்திருந்தபொழுது பாரதியாருடன் ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்ள ஆசைப்பட்டார். கணபதி அய்யர் இதை என்னிடம் தெரிவித்து, பாரதியாரின் சம்மதத்தைப் பெறும்படி கேட்டுக்கொண்டார். நானும் பாரதியாரிடம் கேட்டேன். பாரதியார் உடனே ஒப்புக் கொண்டார்'. இது செய்தி. இனிமேல் இவர் சொல்லப்போவதுதான் இந்த நிழற்படத்தின் பின்புலம் விரிக்கும் சித்திரம்.

'திருநீற்றை நெற்றி முழுவதும் பரவலாகத் தரித்துக் கொண்டு, நடுவில் குங்குமத்தை உயர வாக்கில் இட்டுக் கொண்டார். தலைப்பாகை, கறுப்புக் கோட்டு இவைகளை அணிந்தார். என்னையும் போட்டோவில் நிற்கும்படி வற்புறுத்தினார். அதே போல், நாங்களும் புகைப்படம் எடுத்துக் கொண்டோம். பாரதியார், மனைவி செல்லம்மாள், மூத்த பெண் தங்கம்மாள், இளைய பெண் சகுந்தலா, நண்பர் ராமு, நான் ஆகிய ஆறு பேரும் இப்படத்தில் இருக்கிறோம். இதே தினம், பாரதியாரும் செல்லம்மாவும் தனியே நிற்க வேறு ஒரு படமும் எடுத்துக் கொண்டனர்'.

இந்த இருபடங்களும் விழுப்புரம் சி. கிருஷ்ணராஜு என்பவரால், அவரது புதுவை ஸ்டுடியோவில் 1917-ம் ஆண்டு எடுக்கப்பட்டவை.

விஜயராகவன் பிற்காலத்தில் போஸ்ட் மாஸ்டர் வேலை பார்த்து, பின் சென்னை குரோம்பேட்டை ராதா நகரில் வாழ்ந்து காலமானார். ராமு சேலத்தில் வழக்கறிஞராகப் பணி புரிந்திருக்கிறார்.

இப்போது இவர்கள் இல்லை. ஆனால், விஜயராகவனின் விவரிப்பில், பாரதியின் புதுவை வரலாற்றில் முக்கியப் பாத்திரம் வகித்த குள்ளச்சாமி இருக்கிறார். அவரையும் பாரதியுடன் இணைத்துக் கண்டிருக்கிறார். குள்ளச்சாமியின் குணச்சித்திரத்தையும், பாரதியார் அவரிடம் காட்டிய பக்தி உணர்வையும் நுண்ணியதாய் விவரிக்கிறார். இதில் குள்ளச்சாமி 'அது'வாக, பாரதியார், 'அவர்' ஆகிறார். 'அது' தெய்வீகமாக ஒளிர்கிறது.

'புதுவையில் அக்காலத்தில் குள்ளச்சாமி என்ற நாலரையடி உயரமுள்ள ஒரு ஜீவன் உண்டு. அதற்கு வீடு, உறவினர் உண்டா என்பதை யாருமறியார். அதற்குப் பேச்சு வராது. எதைக் கேட்டாலும், கீ, கீ, தா, தா என்று ஒலி பரப்பும். யாராவது அதற்கு மொட்டையடித்துவிடுவர். வெறும் கோவணதாரியாகத்தான் குளிர், மழை, வெயில் எக்காலத்திலும் காட்சியளிக்கும். கழுத்தில் ஒரே ஓர் உருத்திராக்ஷக் கொட்டை அணிந்திருக்கும். பாரதியாருக்கு அந்தக் குள்ளச்சாமியிடம் மிகுந்த பிரேமை உண்டு. அந்தக் குள்ளச்சாமியைக் கூப்பிட்டு உபசரிப்பார். அந்தத் திருநீற்றை அதற்குப் பூசுவார். குள்ளச்சாமியார் கீ, கீ, தா, தா என்று கத்திச் சிரித்துக் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டே ஓடிவிடும். உடனே, பாரதியார், 'டேய், என்ன பேசனாண்டா. என்ன தத்துவம் சொல்றாண்டா' என்பார். எங்களுக்கு ஒன்றும் புரியாமல் நிற்போம். பாரதியார் அந்தக் குள்ளச்சாமியிடம் தெய்வீக சக்தி இருக்கிறது. அவர் ஒரு மஹான் என்றும் கூறுவார். 'உலகத்தார் எல்லோருக்கும் பித்துப் பிடித்த ஜடம் என்று தோன்றிய உயிரிடம் கடவுள் உறைகிறான். அது ஞானத்தின் நிறைவு' என்று போற்றியவர் பாரதியார். என்பது விஜயராகவனின் பதிவு.

வாய்ப்புக் கிட்டியிருந்தால், அன்றைக்கு அந்தக் கணத்தில் குள்ளச்சாமி - பாரதியார் சந்திப்பு நிகழ்ந்திருந்தால், அவரையும் இணைத்துப் படம் எடுத்துக் கொள்ள, பாரதியார் விரும்



**அமர்ந்திருப்பவர்கள்:** சகுந்தலா பாரதி, செல்லம்மா பாரதி,
**பின்னிற்போர்:** தங்கம்மா பாரதி, ராமு,
டி. விஜயராகவனுடன் பாரதியார்.

பியிருப்பார். அது சாத்தியமாகவும் ஆகியிருக்கும். ஆனால்... வரலாற்றில் 'ஆனாலு'க்கு இடம் ஏது? என்றாலும்...

தான் தன் நண்பருடன் பாரதியாரை, அவரது குடும்பத்துடன் படம் எடுத்துக் கொண்ட விஜயராகவன், குள்ளச்சாமியையும் இணைத்து, பாரதியாருடன் படம் எடுத்துக் கொள்ளாத குறையை, இந்தச் சொற்சித்திரம் தீட்டிக்காட்டியதன்வாயிலாக, நிவர்த்தி செய்திருக்கிறார் என்றே சொல்லத் தோன்றுகி றது.



sethupathi@thaiveedu.com




# கம்பனின் கருவூலம் திறந்து...

**- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா**

சென்ற இரண்டு இதழ்களில் கம்பராமாயணம், அயோத்தியா காண்டத்தின் நான்காவது படலமாகிய நகர் நீங்கு படலத்தில் நிகழ்ந்தனவற்றைக் கம்பரின் கவிநயத்தின் சிறப்போடு சுவைத்தோம். இவ்விதழில் இராமன் காட்டுக்குச் செல்வதைத் தொடர்ந்து நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைக் கொண்ட தைலமாட்டுப் படலத்தில் கம்பனின் கவி நயத்தைக் காண்போம். அயோத்தியை விட்டு வெளியே சென்றிருந்த பரதனும் சத்துருக்கனும் வருமளவும் உயிர் துறந்த தயரதனது உடல் கெடாமல் இருக்கும் வகையில் தைலத்தில் மூழ்குவித்து வைத்திருந்ததைக் கூறும் படலம் என்பது இதன் பொருள். இலம்பாட்டுப் படலமென்று சில பிரதிகளில் பெயர் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. தயரதன் இவ்வுலகை நீத்து இறந்து பட்டதைக் குறிப்பதாக அது பொருள்படுகிறது.

நகரத்து மாந்தர் பலரும் தொடர்ந்துவரச் சுமந்திரன் தேரைச் செலுத்த, இராமன், இலக்குமணன் சீதை ஆகிய மூவரும் இரண்டு யோசனை தூரம் செல்கிறார்கள். அப்பொழுது கதிரவன் மறைந்து இருள் சூழத் தொடங்கியதால் ஒரு சோலையில் தங்குகிறார்கள். கதிரவன் மறைந்து இருள் தோன்றுதலை வருணிக்கும் கம்பரின் கற்பனை வளம் மிகுந்த செய்யுள்களில் ஒன்று.

***பகுத்தவான் மதிகொடு பதுமத் தண்ணலே***
***வகுத்த வாள்நுதலியர் வதன ராசிபோ***
***உகுத்தகண் ணீரினில் ஒளியும் நீங்கின***
***முகிழ்த்தழ கிழந்தன முளரியீட்டமே***

- கம்ப அயோத்தி. 541

பாதியாகப் பகுக்கப்பட்ட வானத்து மதியைக் கொண்டு தாமரை மலரில் வீற்றிருப்பவனாகிய பிரமன் தானே படைத்த ஒளிபொருந்திய நெற்றியையுடைய அந்நகரத்து மகளிரின் முகங்களின் தொகுதியைப் போன்ற தாமரை மலர்களின் கூட்டம், அவை சிந்திய கள்ளாகிய நீரோடு நிறம்மாறி ஒளியிழந்தனவாக முகம் குவிந்து அழகும் கெட்டு நின்றன என்கிறார்.

கதிரவன் மறையத் தாமரை மலர்கள் குவிதல் இயல்பாக நடைபெறுவது. அவற்றிலிருந்து கள்ளாகிய நீர் சிந்த நிறங்கெட்டு அழகிழந்த தாமரை மலர்க் கூட்டத்துக்கு, இராமன் காடு செல்லும் துயரம் தாங்காது கண்களில் நின்றும் நீர் பெருக மலர்ச்சியின்றி நிறங்கெட்டு அழகிழந்து கிடக்கும் அயோத்தி நகரத்து மகளிரின் முகங்களுக்கு உவமை கூறியுள்ளார் கம்பர். 'உகுத்த கண்ணீரில் ஒளியும் நீங்கின' என்னும் சொற்றொடர் மகளிர் சிந்திய கண்ணீரினால் அவர்கள் முகம் ஒளியிழந்தன என்றும், தாமரை மலர்கள் சிந்திய கள் நீரினால் அவை ஒளியிழந்தன என்றும் சிலேடை அணிநயம் பொருந்த அவர் இச்செய்யுளை அமைத்துள்ளார். பாதியாகப் பகுக்கப்பட்ட வானத்து மதியைக் கொண்டு தாமரை மலரில் வீற்றிருப்பவனாகிய பிரமன் தானே படைத்த ஒளிபொருந்திய நெற்றியையுடையன அந்நகரத்து மகளிரின் முகங்கள் என உயர்வு நவிற்சி அணியில் வருணித்து இரண்டு அணிநயங்கள் பொருந்த இச்செய்யுளை அமைத்துள்ளதையும் காண்கிறோம்.

இராமனின் தேரைத் தொடர்ந்து வந்த அயோத்தி மக்களும் இந்த இரவு நேரத்தில் இராமன் தங்கியுள்ள சோலையைச் சுற்றியுள்ள இடங்களிற் தங்கி நள்ளிரவானதால் அயர்ந்து தூங்குகின்றார்கள். யாவரும் உறங்குகையில் இராமன் சுமந்திரனை அழைத்து, 'தன்னுடன் தொடர்ந்து வருகின்ற அயோத்தி நகரத்து மக்களைத் திருப்பி அனுப்புவது எளிதானதன்று. நீ தேரினை அயோத்திக்குத் திருப்பி ஓட்டிச் செல். அப்படிச் சென்றால் அவர்கள் தேர் சென்ற தடத்தை நோக்கி, நான் அயோத்திக்குத் திரும்பி விட்டேன் என்று நினைத்து அவர்களும் அயோத்திக்குத் திரும்பி விடுவார்கள். இந்த உதவியை நீ செய்ய வேண்டும். என்று வேண்டுகின்றான். இராமனை விட்டுப் பிரிந்து செல்ல வருந்திய சுமந்திரனைப் பலவாறு தேற்றித் தனது வேண்டுகளுக்கு அவனை இசையச் செய்கிறான். சுமந்திரன் அவர்களிடம் விடைபெற்று நகரத்தை நோக்கிச் செல்கிறான். இராமன், சீதை, இலக்குமணன் மூவரும் கதிரவன் உதயமாவதற்கு முன்னரே அவ்விடத்தைக் கடந்து இரண்டு யோசனை தூரம் சென்றுவிடுகின்றனர்.

***தையல்தன் கற்பும்தன் தகவும் தம்பியும்***
***மையறு கருணையும் உணர்வும் வாய்மையும்***
***செய்யதன் வில்லுமே சேமமாகக் கொண்டு***
***ஐயனும் போயினான் அல்லின் நாப்பணே.***

- கம்ப. அயோத்தி. 585

சீதையின் கற்பும், தனது மேன்மைக் குணமும், தம்பியும், குற்றமற்ற அருட்குணமும், நல்லறிவும் வாய்மையும், செம்மைத் தன்மையுடைய வில்லும் என்னும் இவையெல்லாம் தனக்குப் பாதுகாவலாக அமையப் பெற அந்த நள்ளிரவில் இராமன்



செல்லலாயினான் என்பது பொருள். தம்பி, வில் ஆகிய உருவப் பொருள்களோடு கற்பு, மேன்மைக்குணம் போன்ற உருவமற்ற பொருள்களையும் சேர்த்து அவை இராமனுக்குப் பாதுகாப்பாக அமைந்தன எனக் கூறுவது நயம் மிக்கது. சிலப்பதிகாரத்தில் மதுரை நோக்கிக் கண்ணகி சென்றபோது அவளுக்குப் 'பேணிய கற்பும் பெருந்துணையாக' இருந்தது என்கிறார். இளங்கேவடிகள். கம்பரோ அதற்கும் மேலாகச் சென்று சீதையின் கற்பு இராமனுக்குத் துணையாயிற்று என்கிறார். வெண்ணிலவு வெண்பஞ்சைப் பரப்பியதுபோல ஒளிவீசவும் அக்காட்டிடையே அவர்கள் நடந்து செல்கிறார்கள்.

***சிறுவிலை மருங்குல் கொங்கை ஏந்திய செல்வ மென்னும்***
***நெறியிருங் கூந்தல் நங்கை சீறடி நீர்க்கொப் பூழின்***
***நறியன தொடர்ந்து சென்று நடந்தனள் நவையின் நீங்கும்***
***உறுவலி அன்பின் ஊங்கொன்று உண்டென நுவல்வ துண்டோ***

- கம்ப. அயோத்தி. 590

மிகவும் இளைத்த இடையிலே பருத்த தனங்களை ஏந்திய செல்வ மகளென்று சொல்லப்படுகின்ற நெருங்கிய கூந்தலையுடைய சீதையின் சிறிய பாதங்கள் நீரில் தோன்றும் குமிழியைவிட மென்மையானவை. ஆனாலும் அப்பாதங்களால் அவள் இராமனைத் தொடர்ந்து நடந்து செல்கின்றாள் என்றால் குற்றத்தின் நின்றும் நீங்கிய அன்பை விட வலிமையானது எனச் சொல்வதற்கு உலகத்தில் ஏதாவது இருக்கிறதா? இல்லை என்பதாம்.

காற்றுச் சிறிதுபட்டாலும் உடையும் தன்மையுள்ளது நீர்க்குமிழி. அதைவிட மென்மையானவை அவளது பாதங்கள் எனச்சொல்லும் கம்பனின் கற்பனை நயம் தருகிறது. அவள் தன் மென்மையான பாதங்களை கற்கள் நிறைந்த பாதையில் ஊன்றவைத்துத் தன் கணவனின் பின்னே நடந்து செல்கின்றாளே. அந்த வலிமையை அவளுக்குத் தந்தது அவள் அவன்மீது கொண்ட அன்பல்லவா என்று அன்பின் வலிமையை மிக நுட்பமாக எடுத்துக்கூறுகின்றார் கம்பர்.

வெறும் தேரோடு மீண்டு வந்த சுமந்திரன் வசிட்ட முனிவனை அழைத்துக்கொண்டு தயரதனிருந்த மாளிகைக்கு செல்கிறான். இரதம் வந்தது என்று கேள்வியுற்ற மன்னனும் இராமன் திரும்பி வந்துவிட்டான் என்று மயக்கம் தீர்ந்து கண்விழித்து, 'இராமன் வந்தானா? என்று கேட்கிறான். அதற்குப் பதிலேதும் சொல்லாமல் அவர்கள் அமைதிகாக்க, அவர்களது குறிப்பால் இராமன் வரவில்லை என்பதை உணர்கிறான்.

***நயகன் பின்னும் தன்தேர்ப் பாகனை நோக்கி நம்பி***
***சேயனோ அணிய னோவென் றுரைத்தலும் அனையான் செய்ய***
***வேயுயர் கானிற்தானும் தம்பியும் மிதிலைப் பொன்னும்***
***போயினன் என்றான் என்ற போழ்தத்தே ஆவி போனான்.***

- கம்ப. அயோத்தி. 597

தயரதன் மீண்டும் தன் தேர்ப்பாகனாகிய சுமந்திரனை நோக்கி, 'இராமன் தூரத்திலுள்ளானா அல்லது அண்மையிலுள்ளானா? என வினவவும், ஓங்கி வளரப்பெற்ற மூங்கில்கள் நிறைந்த காட்டிற்கு தன் தம்பியுடனும், திருமகள் போன்ற மிதிலை மகளாகிய சீதையுடனும் போயினான்' எனச் சுமந்திரன் கூறிய அக்கணத்திலேயே தயரதன் உயிர் நீங்கப்பெற்றான். 'நம்பி சேயனோ அணியனோ' எனத் தயரதன் கேட்பது,

இராமன் வெகுதூரம் செல்லாது அண்மையில் இருப்பானா யின் ஒருவேளை திரும்பவும் வரக்கூடும் என்னும் தந்தையின் அவாவை வெளிப்படுத்துவதாகக் கம்பர் பாடியிருப்பது நயம் மிக்கது.

மன்னன் உயிர் துறந்த செய்தி கேட்டுக் கோசலை, சுமித் திரை உள்ளிட்ட அவன் தேவியர் புலம்பிச் சோர்கிறார்கள். வசிட்டன் மிகுந்த வருத்தத்துடன் அமைச்சர்களுடன் ஆலோ சித்துத் தயரதனின் மைந்தர்கள் எவரும் இங்கு இல்லாததால் பரதனை அழைத்து வருவதற்கு ஆளனுப்புகிறார்.

*செய்யக் கடவ செயற்குரிய சிறுவ ரீண்டை யாரல்லர்*
*எய்தக் கடவ பொருளெய்தா திகவாதென்ன வியல்பென்ன*
*மையற் கொடியாள் மகனீண்டு வந்தான் முடித்து மற்றென்னத்*
*தையற் கடலிற் கிடந்தானைத் தயிலக் கடலிற் தலையுய்த்தார்.*

- கம்ப. அயோத்தி. 613

செய்வதற்குரிய கடமைகளை செய்யத்தக்கவரான தயரதனின் பிள்ளைகள் இங்கே இல்லை. வரவேண்டியவை வராது போகாது. இப்போது செய்ய வேண்டிய இயல்பான செயல் யாது என அமைச்சர்கள் ஆலோசிக்க, மனமயக்கத்தைக் கொண்ட கொடியவளான கைகேயியின் மைந்தன் பரதன் இங்கே வந்து சேர்வானாயின் மன்னனது இறுதிச் சடங்கு களை முடிப்போம் என நிச்சயித்து மகளிரின் கடல் போன்ற கூட்டத்தில் கிடந்தவனாகிய தயரதனைத் தைலக் கடலில் கொண்டு வைத்தனர் என்பது செய்யுளின் பொருள்.

மைந்தர்கள் நால்வர் இருந்தும் மன்னனின் ஈமச்சடங்குக ளைச் செய்வதற்கு எவரும் இல்லாத வேளையில் அவன் இறந்தான். பரதன் சத்துருக்கன் இருவரும் வரும்வரை தயரத னது உடலைப் பாதுகாப்பதற்காக அதனைத் தயிலக் கடாரத் திலிட்டு வைக்கின்றார்கள். தயரதன் எண்ணற்ற மகளிரைத் துணையாகக் கொண்டு இன்பம் துய்த்தவன் என்பதைச் சொல்வதாகத் ‘தையற்கடலிற் கிடந்தானைத் தயிலக் கடலிற் தலைவைத்தார்’ என்னும் அழகான சொற்றொடரால் கம்பர் பாடியிருப்பது சிறந்த கவிநயமாகும். மையற் கொடியாள்! எனக் கைகேயியைக் குறித்து அவள் மீதுள்ள வெறுப்பை கம் பர் இங்கேயும் காட்டியுள்ளது நயம் மிக்கது. இதற்கிடையே இராமனுடன் சென்ற நகரத்தவர் இரவு விடிந்ததும் விழித்தெ முந்து இராமனைக் காணாது வருந்துகிறார்கள்.

*எட்டுத் திசையும் ஓடுவான் எழுவார் விழுவார் இடர்கடலுள்*
*விட்டுத் தீர்ந்தான் நமையென்பார் வெய்யன் ஐயன் வினையென்பார்*
*ஒட்டிப் படர்ந்த தண்டகமிவ் வுலகத் துளதன் றோவுணர்வைச்*
*சூட்டிச் சேரா தாற்றுதுமோ தொடர்ந்துந் தேரின் சுவடென்பார்.*

- கம்ப. அயோத்தி. 618

எட்டுத் திக்கிலும் இராமனைத் தேடி ஓடிப்போகுமாறு எழுந்தி ருப்பார். துயரமிகுதியால் கால்கள் நடக்கமுடியாமல் விழுந்தி டுவார். ‘நம்மைத் துயரக் கடலினுள் அழுங்க விட்டுச் சென்று விட்டானே என்பார். இராமன் நமக்குக் கொடிய செயலைச் செய்து விட்டானே என்பார். அவன் சென்ற அடர்ந்து பரந்த தண்டக வனம் இந்த உலகத்தில் தானே இருக்கிறது’ நம்மு டைய அறிவைக் கொண்டு ஆராய்ந்து அறிந்து அவனிருக் கும் இடம் அறிந்திடாமல் ஆறியிருக்கமாட்டோம். அந்தக் காட்டை நோக்கிச் சென்றிருக்க வேண்டிய தேரின் சுவடைத் தொடர்ந்து செல்வோம், எனப் புறப்படுகிறார்கள். இராம னைப் பிரிந்த அயோத்தி நகரத்து மாந்தர் பலவகைச் செயல் கள் நிகழ்த்தியதாகக் கூறியது வினை முதல் விளக்கவணி என்னும் அணிநயம் கொண்டதாகும். துயரத்தின் மிகுதியால் தாங்கள் அன்பு காட்டிய தலைவனையே ‘ஐயன் வினை வெய் யன்’ தமக்குக் கொடிய செயலைச் செய்துவிட்டானே என்று பழி தூற்றுவதாகக் கூறி, இவ்வாறான வேளைகளில் மிகுந்த அன்புள்ளவர்களிடம் ஏற்படக்கூடிய இயல்பான மனவுணர்ச்சி யைக் கம்பர் எடுத்துக்காட்டியுள்ளார். அவர்கள் தேரின் சுவடு திரும்பி அயோத்தி நோக்கிச் செல்வதைக் கண்டு மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அயோத்தியை வந்தடைகிறார்கள்.

*புக்கார் அரசன் பொன்னுலகம் போனான் என்னும் பொருள் கேட்டார்*
*உக்கார் நெஞ்சம் உயிருகுத்தார் உற்ற தெம்மால் உரைப்பரிதால்*
*தக்கான் போனான் வனமென்னும் தகையும் உணர்ந்தார் மிகையாவி*
*அக்கா லத்தே அகலுமோ அவதி என்றொன் றுளதானால்.*

- கம்ப. அயோத்தி. 622

மீண்டும் அயோத்தியைச் சென்றடைந்தவர்கள் மன்னன் தயர தன் விண்ணுலகம் சென்றடைந்தான் என்னும் செய்தியை அறிகிறார்கள். அதற்குக் காரணமாகப் பெருந்தகையாகிய இராமன் காட்டிற்குச் சென்றான் என்னும் செய்தியையும் அறி கிறார்கள். இராமன் கான் புக்கதையும் தயரதன் வான் புக்க தையும் அறிந்து பெருந்துயரடைகின்றார்கள். துயரத்தால் உயிர் நீங்கியவர்கள் போல மூர்ச்சையுற்று விழுந்தார்கள். அவர்கள் பட்ட துயரத்தை எம்மால் எடுத்துச் சொல்வது முடி யாத செயலாகும். உயிர் செல்ல வேண்டிய காலம் இன்னது என்று ஒவ்வொருவருக்கும் கால எல்லை விதியினால் வகுக் கப்பட்டிருத்தலால் அவர்களும் உயிர் நீக்க முடியுமோ? முடி யாதென்பதாம். இல்லையென்றால் அவர்களும் உயிர் நீப் பார்கள் என்பது கம்பரின் மறைமுகக் கருத்தாகும்.

இவ்வாறு, பல உணர்ச்சி பொங்கும் செய்யுள்களோடு சொல் நயம், பொருள்நயம், அணிநயம் கூட்டிக் கம்பர் வடித்துள்ள தைலமாட்டுப் படலம் முற்றுப் பெறுகிறது. தொடர்ந்து வரும் கங்கைப் படலத்தில் மீண்டும் உங்களோடு இணைகிறேன்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com   Fax: 1-416-849-0594   Tel: 1-416-857-6406***

கனடா, தொல்காப்பிய மன்றமும்
தமிழ்நாடு, இலக்குவனார் இலக்கிய மன்றமும்
இணைந்து நடத்தும்

# முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு

திருவள்ளுவர் ஆண்டு 2055, புரட்டாசித் திங்கள் 04, 05, 06 ஆம் நாள்களில்
(2024-09-20, 2024-09-21, 2024-09-22)
கனடா




**குறிக்கோள் : தொல்காப்பியத்தில் உயர் ஆய்வுகள் மேற்கொள்ளுவதற்கான களமாக இம்மாநாடு அமையவேண்டும்.**

இணையத்தளம் : www.tolkappiyam.ca
தொடர்புகளுக்கு : 647-881-3613 / 416-939-9171 / 647-850-0152



# இனப்படுகொலையின் அரசியல் - 3
# இனப்படுகொலைச் சித்தாந்தத்தில் தேசியம்

- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

## அறிமுகக் குறிப்புகள்

இனப்படுகொலையின் உருவாக்கத்திலும் செயலாற்றுகையிலும் தேசியவாதத்தின் பங்கு என்ன என்ற வினா மிகவும் முக்கியமானது. கடந்த மூன்று நூற்றாண்டு கால அரசியல் அரங்கில் செல்வாக்குள்ள ஒரு கருத்தாக்கமாக வளர்ச்சியடைந்துள்ள 'தேசியம்' என்ற எண்ணக்கரு மக்களை ஒன்றிணைக்கவும் பிளவுபடுத்தவும் எனப் பன்முகப்பட்டதாக இயங்கி வந்துள்ளது. இனப்படுகொலைகளின் வரலாற்றில் முதன்மையான இடம் தேசியம் என்ற எண்ணக்கருவுக்குண்டு.

இனப்படுகொலையும் தேசியவாதமும் பொதுவான சொற்பிறப்பியல் வேர்களைப் பகிர்ந்து கொள்கின்றன: இனப்படுகொலையானது பண்டைய கிரேக்க மரபுகளிலிருந்து பெறப்பட்டது, பின்னர் அது லத்தீன் மரபணுக்களுக்கு இட்டுச் சென்றது. ஜெனோஸ் என்பது கிரேக்க மொழியில் இனம் எனப் பொருள்படும். பின்னொட்டான சைட் என்பது சீடோ (கொல்) என்ற லத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டது. தேசியவாதம் என்பது லத்தீன் வினைச்சொல்லான நாஸ்கோர், நாசி என்பதிலிருந்து வந்தது, பின்னர் இது நேஷனிஸ் என்ற சாராம்சமான தேசத்திற்கு இட்டுச் செல்கிறது.

இனப்படுகொலையினதும் தேசியவாதத்தினதும் கலவையானது மனித வரலாற்றின் இருண்ட சகாப்தத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. இரண்டும் பெரும்பாலும் நவீனத்துவம் மற்றும் விரைவாக நவீனமயமாக்கும் சமூகங்களுடன் தொடர்புடையவை. மேலும், இரண்டும் பொதுவான வம்சாவளியுடனும் ஒற்றை 'விரிவாக்கப்பட்ட குடும்பத்தில்' உறுப்பினர்களை விவரிக்கும் சொற்களுடனும் தொடர்புடையன. இனம், 'இனங்கள்' மற்றும் இனக்குழு ஆகியன ஒற்றைத் தன்மையைக் கோருகின்றன.

ஒரு மேலாதிக்க தேசத்தை மற்ற அனைத்தையும் விட உயர்ந்ததாக உயர்த்துவதை தேசியவாதம் வலியுத்துவதால் தமது இனத்தை ஒருங்கிணைப்பதற்கும் ஏனைய இனங்களை ஓரங்கட்டுதல் முதல் இனப்படுகொலை வரை மேற்கொள்வதற்கும் இயலுமாகிறது. இதனால் தேசியவாதத்திற்கும் இனப்படுகொலைக்கும் இடையிலான உறவு எவ்வளவு தீவிரமானது என்ற வினாவை எழுப்ப வேண்டியுள்ளது. தேசியவாதம் என்பது 'ஆட்சியாளர்களும் ஆளப்படுவோரும் அதே இன (அதாவது தேசிய) குழுவைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்' என்ற கோட்பாட்டை முன்னிறுத்துகிறது. இது ஆளப்படும் பெரும்பான்மை இனக்குழுவினர் ஏனைய இனக்குழுக்களை பகையுணர்வுடன் பார்க்கவும், ஆட்சியாளர்கள் ஏனையோரை வெளிநபர்களாகப் பார்க்க வலியுறுத்தவும் கோருகிறது. இது ஆட்சியாளர்கள் பெரும்பான்மையின் ஆசீர்வாதத்துடன் இனச் சுத்திகரிப்பு, கட்டாயப்படுத்தல், வெகுஜன நாடு கடத்தல் மற்றும் இனப்படுகொலைக்கான செய்முறைகளுக்கு வழிகோலுகிறது.

தேசியவாதம் 'தேசமும் அரசியல் அதிகாரமும் ஒத்துப்போக வேண்டும்' என்று கூறுகிறது. ஒற்றுமை அல்லது இன அரசியல் தூய்மைக்கான இந்த ஏக்கம், முழு மக்களையும் ஒரே மாதிரியாக மாற்றுவதன் மூலம் இனத் தனித்துவத்தை அழிக்கும் பெரும்பாலான தேசியவாத முயற்சிகளின் வரலாற்று அடையாளமாகும். தேசியவாதம் பொதுவாக ஒருங்கிணைப்பு வாதத்துடன் இருந்தது, இது கலாசார சிறுபான்மையினரை உள்வாங்க அல்லது அகற்றுவதற்கான முயற்சியை உள்ளடக்கியது. ஒருங்கிணைக்கும் நவீன அரசின் சகிப்புத்தன்மையற்ற இயல்பு, அதன் அதிகாரங்களை மகிழ்ச்சியற்ற சிறுபான்மையினருக்கு எதிராக மாற்றுவதற்கான முன்நிபந்தனைகளை உருவாக்கியுள்ளது. தேசியவாத அணிதிரட்டல்கள் அரச இராணுவவாதத்துடன் தூண்டப்பட்டவை அல்லது அதனுடன் இணைந்திருந்தமையால் எளிதாக்கப்பட்டுள்ளன. எனவே இனத்துவ அரசியலானது, 'ஒழுக்கம் மற்றும் தண்டனை' கட்டமைப்பிற்குள் மீண்டும் உருவாக்கப்பட்டது. தேசியவாதம் சக்தியுடன் வெளிப்படத் தொடங்கிய 18-ம் நூற்றாண்டில் ஏராளமான இனப்படுகொலைகள் தேசியவாதத்தின் பெயரால் நடந்தன.

## நாமும் மற்றவர்களும் என்ற கதையாடல்:

உலக வரலாறு என்பது தேசத்தின் வரலாறாகவும், நவீன உலகில் தேசியவாதமாகவும் இருந்தது என்பதில் எந்தச் சர்ச்சையும் இல்லை. தேசம் என்பது மிகப்பெரிய, மேலோட்டமான நிகழ்வாக இருந்தபோதிலும், அது நமது சொற்களஞ்சியத்திலோ அல்லது ஒரு பொருளாகவோ எப்போதும் இருந்ததில்லை என்பது ஆர்வத்திற்குரிய விடயம். வரலாற்றாசிரியர்

எரிக் ஹோப்ஸ்பாம், ராயல் ஸ்பானிஷ் அகாடமியின் அகராதியின் பல்வேறு பதிப்புகளை ஆராய்ந்தார், நவீன முறையில் தேசியம், தேசம் போன்ற கலைச்சொற்கள் 1884-ம் ஆண்டு பதிப்பிற்கு முன் சேர்க்கப்படவில்லை. இடைக்கால ஐரோப்பாவின் பல்கலைக்கழகங்களில், கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மாணவர்கள் படிக்க வந்தபோது, அவர்கள் ஒருவருக்கொருவர் வேறுபடுத்துவதற்கு 'நேசியன்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினர். லத்தீன் மொழியில், இது 'ஒரே பகுதியிலிருந்து வரும் மக்கள் குழு' என்று பொருள்படும். நகரவாசிகள் அல்லது உள்ளூர் மாணவர்களிடமிருந்து வேறு இடத்தைச் சேர்ந்த மாணவர்கள் பூர்வீகவாசிகளிடமிருந்து 'வேறுபட்டவர்கள்' என்று அடையாளம் காணப்பட்டனர். 1884-ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒரு பிரதேசம், ஒரு நாடு அல்லது ராஜ்ஜியத்தின் மொத்த குடிமக்களைக் குறிக்கும் சொல் 'நேசியன்'. இது ஒரு வெளிநாட்டவர் அல்லது அந்நியரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு, தேசியவாதம் ஒரு கதையாடலாக அதன் பயணத்தை இடைக்கால ஐரோப்பாவின் பல்கலைக்கழக வளாகங்களில் இருந்து தொடங்கியது. உண்



மையில், தேசியவாதத்தின் கதையாடல் இந்த கற்றல் இடங்களிலிருந்து தோன்றியது என்பது முரண்பாடாக இல்லை. பல்கலைக்கழகங்களைத் தவிர வேறு எந்த இடத்திலும் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் உயர்கல்வி பெற விரும்பும் மாணவர்கள் ஒரே இடத்தில் கூடும் பாக்கியம் வழங்கப்படவில்லை.

வெவ்வேறு கலாசாரங்கள், இனங்கள், மொழிகள் மற்றும் புவியியல் சார்ந்த மக்கள் ஒரே இடத்தில் சந்தித்து, ஒன்றாக வாழ்ந்து, ஒன்றாகப் படித்தார்கள். பல பண்பாடுகள் ஒரே இடத்தில் சந்தித்து, ஒன்றோடொன்று இணைந்தபோது, அது கருத்துக்கள், கலாசாரங்கள் மற்றும் கதையாடல்களில் ஒரு குறிப்பிட்ட தொகுப்பை உருவாக்கும். நவீன உலகில் மிகவும் சக்திவாய்ந்த கதையாடலாக தேசியவாதமும் இந்த இடைமுகத்தில் இருந்து வெளிப்பட்டது என்பது சுவாரஸ்யமானது. வேறுவிதமாகக் கூறினால், 'தேசம்' என்பது வேறுபாட்டிற்கான பின்னொட்டுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டது. இது ஒரு வித்தியாசமான மக்களைக் குறிக்கிறது. குழுக்கள் தங்கள் சொந்த குணாதிசயங்களைக் குறிப்பதன் மூலம் தங்களைத் தாங்களே வரையறுக்க முனைகின்றன, மாறாக 'அந்நியர்களுடன்' ஒப்பிடுவதன் மூலம் அவர்களை வெளிநாட்டினர் என்று அழைக்கும் ஒரு முறை உருவானது. உதாரணமாக அன்னிய மக்களால் எழுப்பப்பட்ட ஒரு பெரிய அணை மற்றும் கோட்டைக்கு பின்னால் உள்ள அவர்களின் எல்லைக்குள் அன்னிய மொழியில் பேசுவோர் வெல்ஷ் என்று அழைக்கப்பட்டனர். இதேபோல், அரேபிய வணிகர்களால் இந்தியர்கள் இந்துக்கள் என்று அழைக்கப்பட்டனர், சிந்து நதியின் பள்ளத்தாக்கில் வசிப்பவர்களை அரேபியர்கள் இந்து என்று உச்சரித்தனர். இவ்வாறுதான் உலகின் பெரும்பாலான அடையாளங்கள் தோற்றம் பெற்றன. மற்றவர்கள் அவர்களுக்குப் பயன்படுத்திய முறையீட்டின் மூலம் மக்கள் அடையாளம் காணப்பட்டனர். இது ஒரு உள்ளார்ந்த வேறுபாடு மற்றும் பாகுபாடு ஆகியவற்றைக் கொண்டிருந்தது. இந்த உரையாடலில், ஒரு உள்ளார்ந்த பிரச்சினையும் உள்ளது. இந்தக் கதையாடலின் ஆரம்பத்திலேயே, நாம் ஒரு 'மற்ற' ஒன்றைக் கண்டுபிடித்துள்ளோம். இந்த மற்றொன்று 'உண்மையானது', அதாவது அது 'மற்றவை' என்று அடையாளப்படுத்திய குழு பூர்வீக மற்றது மற்றும் வெளிப்படையாக கலாசார ரீதியாக வேறுபட்டது. ஆனால் இந்தக் கதையாடலில் 'மற்றவர்' என்பதை வேறுபடுத்துவதற்கு வெளிப்படையான 'சுய' அடையாளப்படுத்தல் எதுவும் இல்லை. வேறுவிதமாகக் கூறினால், மற்றொன்று 'நேசியன்' என்ற வார்த்தையால் அடையாளம் காணப்பட்டாலும், சுயத்திற்கு வலுவான சொல் எதுவும் இல்லை. எனவே 'தேசியம்' என்ற சொல் இரண்டையும் வரையறுத்தது.

சுய அடையாளம் தன்னை மற்றவர்களில் இருந்த வேறுபடுத்தியது. எனவே, அது பல்வேறு சுயநலங்களைக் கொண்ட 'மற்றவர்கள்' நிறைந்த உலகமாக இருந்தது. இந்த முன்னோக்கு ஒரு கதையாடலாக வளர, அதற்கு 'மற்றவர்' போன்ற வலிமையான 'சுய' அடையாளம் தேவைப்பட்டது. அப்போதிருந்து உறுதிப்பாடுடைய ஆக்கிரமிப்புத் தன்மையை ஆதரிக்கின்றவை ஆதாரமாக நின்று நிலைக்கக்கூடிய ஒரு வலுவான சுயத்தை உருவாக்குவதற்கான தேடல் தொடங்கியது. அத்தகைய தேவையை பூர்த்தி செய்ய உருவாக்கப்பட்டதே தேசியவாத உரையாடல். அத்தகைய சுயம் கட்டமைக்கப்பட்டு, காலப்போக்கில் ஒருங்கிணைக்கப்பட்டு, பின்னர் அரசியல் வெளிப்பாட்டைக் கொடுத்த கதையே தேசியவாத உரையாடல். தற்போதைய கதையாடல்களில், தேசங்கள் அனைத்தும் 'நம்மை' பற்றி மற்றவைகளுக்கு எதிராக உள்ளன. அங்கு 'நாம்' என்பது வரையறுக்கப்படாதது, மற்றொன்று தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த 'நாங்கள்' ஒரே மாதிரியான கலாசார பண்புகளையும் சில சமயங்களில் ஒரே பிரதேசத்தையும் பகிர்ந்து கொள்ளும் ஒரே மாதிரியான மக்கள் குழுவாகும். இத்தகைய ஒருமைப்பாடு சில சமயங்களில் கொடுக்கப்பட்டது, சில சமயங்களில் ஒப்பிடமுடியாத பன்முகத்தன்மையின் மத்தியில் கண்டுபிடிக்கப்பட்டது, எடுத்துக்காட்டாக, யூதர்களைப் போலவே, மற்றும் நேர்மாறாகவும். கிடைக்கக்கூடிய அனைத்து கருத்தாக்கங்களும் ஒரு தேசம் அல்லது தேசியத்தை உருவாக்குவதற்கான கலாசார பொதுமைகளைப் பற்றி பேசுகின்றன. ஆனால் பொதுவான தன்மைகளுக்கான இத்தகைய தேடல் பெரும்பாலும் தனித்தன்மை குறித்த அதீத அக்கறைக்கு வழிவகுக்கிறது. இது கலாசார பரிமாற்றங்களை தடுப்பதுடன் குறித்த குழுவிற்கு வெளியே உள்ள ஒவ்வொரு குழுவையும் மற்றொன்றாக பார்க்கிறது.

உண்மையில், ஒரு தேசத்தை 'மற்றவை' என்ற முடிவில்லாத செயல்முறையாக வரையறுக்கலாம். 'வேறுபாடு' அத்தகைய கதையாடலின் மையத்தில் இருந்தது. காலப்போக்கில், ஆரம்பத்தில் மாணவர்களின் உயரடுக்கு குழுவினரிடம் இருந்த கருத்து படிப்படியாக விரிவடைந்து பதினாறாம் நூற்றாண்டில்

மக்களைச் சென்றடைந்தது. அப்போதிருந்து, தேசம் என்ற சொல் தோற்றம் கொண்ட சமூகம் என்பதை விட அதிகமான பொருள் கொண்டது, அது கருத்து மற்றும் நோக்கத்தின் சமூ கத்தைக் குறிக்கிறது. ஆனால் அது பல்கலைக்கழகத்தில் மட்டுமே வரையறுக்கப்பட்ட ஒரு கட்டுப்பாடான கருத்தாக இருந்தது. இப்படி ஒரு குறிப்பைக் கொண்ட 'தேசம்' என்ற சொல் ஐரோப்பாவின் பல பகுதிகளுக்கும் பொதுவானது. அது விரைவில் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி சிவில் சமூகத்திற்கும் பரவியது.

ஐரோப்பா கடல் பயணங்களைக் கண்டுபிடித்து கடற்படை சக்தியை வளர்த்துக் கொண்ட காலம் இது. விரைவில், ஐரோப்பிய வணிகர்களும் பயணிகளும் ஐரோப்பாவிலிருந்து வெவ்வேறு திசைகளில் நகர்ந்தனர். இத்தாலியர்கள், போர்த் துகீசியர்கள், ஸ்பானிஷ், டச்சுக்காரர்கள் மற்றும் கடைசியாக பிரிட்டிஷ் வணிக நடுத்தர வர்க்கத்தினர் நிறுவனங்களை உருவாக்கினர் அல்லது தனித்தனியாக பரவினர், கடலைப் பயன்படுத்தி உலகின் பிற பகுதிகளை அடைந்தனர், அங்கு



அவர்கள் கருப்பு, பழுப்பு மற்றும் மஞ்சள் இனங்களின் வெவ் வேறு மக்களைக் கண்டனர். பதினைந்தாம் நூற்றாண்டிலி ருந்தே ஐரோப்பிய நாடுகள் உலகை ஆராயத் தொடங்கிவிட் டன. மறுமலர்ச்சியானது பழைய நூல்களை வாசகர்களுக்குக் கிடைக்கச் செய்தது, இது ஐரோப்பியர்கள் தங்கள் கண் டத்தை விட்டு வெளியேறத் தூண்டியது. அத்தகைய நூல்க ளில் ஒன்று தொலமியின் 'புவியியல்'. இந்த நூல்கள் ஒருபுறம் புவியியல் மற்றும் பயண வழிகளைப் பற்றிய அறிவை வழங் கினாலும் அதேநேரம் ஐரோப்பியர் அல்லாத உலகில் பதுக் கிவைக்கப்பட்டுள்ள செல்வம் பற்றிய தகவல்களையும் வழங் கின. இத்தகைய நூல்கள் மற்றும் அறிவுசார் ஆர்வத்தின் சூழ லால் ஈர்க்கப்பட்டு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் சம கால முன்னேற்றத்தின் ஆதரவுடன், ஐரோப்பிய ஆய்வாளர் கள், சிலுவைப் போர், பயணிகள், யாத்திரிகர்கள் மற்றும் பிர சங்கிகள் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்கா ஆகிய கண்டங்களுக்குச் சென்றனர். ஆனால் அவர்கள் தனிப்பட்ட, ஒழுங்கமைக்கப்படாத பயணிகளாக இருந்தனர், சில சமயங் களில் அவர்களின் அரசுகளால் நிதியுதவி அளிக்கப்பட்டது. முதன்மை நோக்கம் தங்கம், அதைத் தொடர்ந்து அடிமை வர்த்தகம் இறுதியாக வாசனைத்திரவிய வர்த்தகம், என்ற வரி சையிலிலேயே முக்கியத்துவம் இருந்தது. பொன் அடிப்படை யில் பாரிய வெகுமதிகளை வழங்கத் தொடங்கியவுடன், பய ணங்கள் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட, முறையான மற்றும் திட்டமிடப்பட்ட பயன்பாட்டை உள்ளடக்கியது. அரசு மற்றும் தேவாலயத்தின் நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்ற அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தடையாக இருந்தன. இவற்றின் இந்த ஆய்வுகள் வர்த்தகத்தின் வழிகளைத் திறந்தன, செல்வத்தை உருவாக்கும் புதிய முறைகள் மற்றும் வணிகர்கள் மற்றும் வணிகர்களை புதிய கலாசாரங்களுக்கு வெளிப்படுத்தின.

ஐரோப்பாவில், தேச உருவாக்கம் என்பது அங்கே வளர்ந்து வரும் பொருளாதாரம், வெளிநாட்டில் உள்ள அதிகாரம் ஆகி யவற்றின் வெளிப்பாடு ஆகும், அங்கு அது அதன் காலனித் துவ உடைமைகளின் அளவு வடிவத்தில் வெளிப்பட்டது. புதிய உலகில் ஐரோப்பியர்களால் காலனித்துவ பேரரசுக ளின் ஆய்வு மற்றும் நிறுவுதல் வெற்றிடத்தில் நிகழவில்லை. அந்த நிலங்களில் பூர்வீகமாக இருந்த மக்கள் வசித்து வந்த னர். இந்த மக்கள் தோற்றத்திலும் கலாசாரத்திலும் ஐரோப்பி யர்களிடமிருந்து வேறுபட்டவர்கள். ஐரோப்பியர்களுக்கு இது ஒரு 'கண்டுபிடிப்பு'. ஆர்வமுள்ள ஐரோப்பியர்கள் தங்க ளுக்கு எதுவும் தெரியாத பழங்குடிகள், சமூகங்கள் மற்றும் நாகரிகங்களை சந்தித்தனர். ஐரோப்பாவின் கூட்டுக்கு அப் பால் இத்தகைய பலதரப்பட்ட மக்கள் இருப்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. புதிய புவியியல் அணுகல் அவர் களை புதிய மானுடவியல் அறிவை வெளிப்படுத்தியது. ஆனால் கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே இருந்த முந்தைய சந்திப் புகளைப் போலல்லாமல், இம்முறை 'வேறு' இருந்தது. புதிதா கக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த 'கலாசாரங்களுக்கு' அவர்கள் மீண்டும் 'நேசியன்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினர். வட அமெரிக்காவில் அதன் ஆங்கிலேய காலனித்துவவாதிக ளால் 'தேசங்கள்' என்று பேசப்பட்டது. பூர்வகுடி மக்களுக்கு இதுபோன்ற ஒரு சந்திப்பின் பேரழிவான விளைவுகளை ஏற்ப டுத்தியது. அவர்கள் 'மற்றவர்கள்' எனக் கருதப்பட்டதால்தான் பூர்வீகக் குடிகள் இரக்கமற்ற முறையில் அழிக்கப்பட்டது சாத்தியமானது. அவர்கள் சுரண்டப்பட்டனர், இனப்படு கொலை செய்யப்பட்டனர், திரிபுமாற்றம் செய்யப்பட்ட நோய் கள் மற்றும் தொற்று நோய்களால் கொல்லப்பட்டனர், குடி யேற்றப்பட்டனர், அடிமைப்படுத்தப்பட்டனர், விற்கப்பட்டனர், ஐரோப்பியர்களால் மீள்குடியேற்றப்பட்ட அவர்களது சொந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். ஐரோப்பாவின் மக் களுக்கும் மற்ற கண்டங்களின் மக்களுக்கும் இடையிலான வேறுபாடு காரணமாக இது சாத்தியமானது. ஸ்பானியர்க ளால் புதிதாகக் கைப்பற்றப்பட்ட காலனிகளில் நடந்த அட்டு ழியங்கள் குறித்த விமர்சனத்தை பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களின் ஒரு சிறிய அறிவோர் குழாம் தொடங்கி யது. ஸ்பானிய சட்ட வல்லுநர்கள் பூர்வீக அமெரிக்கர்களின் சட்ட நிலை குறித்த அறிவுசார் விவாதத்தைத் தொடங்கினர். அமெரிக்க பூர்வ குடிகளைக் கையாள்வதில் மத சகிப்புத் தன்மை பற்றிய கருத்துக்களும் கைதுசெய்யப்பட்ட ஐரோப்பி யரல்லாத மக்களின் உரிமைகள் பற்றிய கேள்விகள் எழுப்பப் பட்டன. இதனால் இந்த அட்டூழியங்களை நியாயப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது, இது அவர்களை 'காட்டுமி ராண்டிகள்', புறமத மனிதர்கள் என்று வர்ணிப்பதன் மூலம் செய்யப்பட்டது. எனவே அவர்கள் மனிதாபிமான சிகிச்சைக்கு தகுதியற்றவர்கள். எனவே, ஐரோப்பாவில் உள்ள 'அந்நியர்' முதலில் 'நாசியன்' என்று விவரிக்கப்பட்ட 'மற்றவர்'; ஆனால் அதே 'மற்றவர்' ஐரோப்பியர் அல்லாத பிறப்பிடம் பெற்ற

போது, இந்த 'நாடுகள்' காட்டுமிராண்டித்தனத்தையும் நாகரி கமின்மையையும் காரணம் காட்டி வேறுபடுத்தப்பட்டன. இதன்மூலம் அவர்களின் இனப்படுகொலை மற்றும் வளக் கொள்ளையடிப்புகள் சட்டப்பூர்வமாக்கப்பட்டன. இது ஐரோப் பிய பொருளாதாரங்களை இரண்டு நூற்றாண்டுகளுக்குள் தொழிற்துறை பொருளாதாரங்களாக மாற்றும் அளவிற்கு வளப்படுத்தியது. ஒரு 'உன்னத காட்டுமிராண்டி' என்ற அர்த் தமற்ற கருத்தின் நிலைக்கு அவர்களை உயர்த்துவது மட் டுமே கருத்தில் கொள்ளப்பட்டது.

ஆனால் பின்னர் காலனிகள் மீண்டும் தாக்கின. காலனித்து வப்படுத்தப்பட்ட அமெரிக்கர்களின் பிற 'தேசங்கள்' பதினெட் டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற் றாண்டின் முற்பகுதியிலும் அமெரிக்கக் கண்டத்தின் கால னித்துவ மக்கள் என உள்வாங்கிக் கொண்டு, ஐரோப்பாவில் தேசியவாத யுகம் தொடங்குவதற்கு முன்பே தேசிய விடு தலை இயக்கங்களை வெற்றிகரமாகத் தொடங்கினர். தெற்கு மற்றும் மத்திய அமெரிக்காவில் உள்ள ஸ்பானிஷ் மொழி பேசும் கிரியோல் சமூகம் ஐரோப்பாவின் பெரும்பகுதிக்கு முன்பே தேசியம் பற்றிய கருத்தை உருவாக்கியது. மேலும் அவர்கள் பூர்வீக, ஒடுக்கப்பட்ட ஸ்பானிஷ் அல்லாத மொழி பேசும் மக்களை கற்பனையான சமூகம் என்ற அடையாளத் தில் இணைத்தனர். கிரியோலியர்களின் தேசத்தின் அடித்த ளத்தைப் பலவீனம் செய்யும் இதனை அவர்கள் ஏன் செய் தார்கள் என்பது ஒரு வினா. கிரியோல்ஸ் நில உரிமையாளர் சமூகம் ஸ்பானிஷ் மொழி பேசாத மக்களுடன் ஒப்பிடும் போது வசதியான வாழ்க்கை இருந்தபோதும் காலனித்துவ நிர்வாகத்தால் ஓரங்கட்டப்பட்டனர். இதை மாற்ற அவர்கள் விரும்பினர். ஸ்பானிஷ் பேசாத மக்கள் ஐரோப்பிய ஏகாதிபத் தியவாதிகளின் ஆயுதங்கள், நோய், கிறிஸ்தவம் மற்றும் அன்னிய கலாசாரம் ஆகியவற்றால் தோற்கடிக்கப்பட்டனர். இதற்கு நேர்மாறாக, கிரியோல்ஸ் பெருநகரங்களைப் போலவே ஆயுதங்கள், நோய் மற்றும் கிறிஸ்தவத்துடன் அதே உற வைக் கொண்டிருந்தனர். வேறு வார்த்தைகளில் கூறுவதா னால், அவர்கள் ஒரே நேரத்தில் ஒரு காலனித்துவ சமூகமாக வும் உயர் வர்க்கமாகவும் இருந்தனர். அவர்களின் தேசியவா தம் இவ்வாறு உடைமை மற்றும் சலுகை இரண்டிலிருந்தும் பிறந்தது, இது பிற்காலங்களில் காலனித்துவ எதிர்ப்பு தேசிய வாதத்திற்குப் பின்னால் தன்னைத் தகவமைத்தது. குடியேற் றக்காரர்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் இடையிலான சந் திப்புகளில், முந்தையவர்கள் பெரும்பாலும் பிந்தையவர் களை வேறு தேசமாக வர்ணிப்பதைக் காணலாம். உண்மை யில், கனடாவில், பூர்வகுடியின மக்கள் வெள்ளை படையெ டுப்பாளர்களால் First Nations என்று அழைக்கப்பட்டனர். 1776-ல் நடந்த புரட்சிப் போருக்குப் பிறகு, வெள்ளை அமெ ரிக்கர்கள் தங்களை ஒரு 'தேசமாக' வேறுபடுத்திக் கொள்ளத் தொடங்கினர், அந்த பூர்வகுடியினரிடமிருந்து மற்றொரு தேசத்தை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது. இங்கும் தேசி யம் என்பது 'மற்றவை' என்பதற்கான வழிமுறையாகத் தொடங்கியது.

வட அமெரிக்காவிலும், வெள்ளை காலனிகள் ஐரிஷ், ஸ்காட்ஸ் மற்றும் வெல்ஷ் ஆகியோர் தங்கள் பூர்வீக இடமான பிரித்தா னியாவில் சாதிக்கத் தவறியதைச் செய்தனர். இது இங்கிலாந் தில் இருந்து பிரிந்து சுதந்திரத்தை அறிவிப்பதாக இருந்தது. இது ஒரு இனிமையான பழிவாங்கல், அங்கு அவர்கள் திமிர் பிடித்த பிரிட்டனில் இருந்து பிரிந்தது மட்டுமல்லாமல், ஒருங் கிணைந்த ஒரு தேசத்தையும் நிறுவினர்.

அமெரிக்க கண்டத்தில் தேசிய இயக்கங்களின் வெற்றி ஐரோப்பாவை முழுமையான அரசுகளுக்கு பதிலாக தேசிய அரசுகளை நிறுவ ஊக்கமளித்தது. பிரெஞ்சுப் புரட்சி மற்றும் நெப்போலியனின் படையெடுப்புகளால் மட்டுமே மேற்கு ஐரோப்பாவில் தேசியவாதத்தின் நிகழ்வு புலப்பட்டது. இது பின்னர் அரசுகளின் எதேச்சதிகார சக்தியை முடிவுக்குக் கொண்டுவந்தது. இருப்பினும், பிரித்தானியா, ஸ்பெயின், நெதர்லாந்து, பெல்ஜியம் மற்றும் ஸ்காண்டிநேவிய நாடுகள் போன்ற நாடுகள் முடியாட்சியை முற்றிலுமாக அகற்ற மறுத் துவிட்டன. இந்த நாடுகள் நவீனத்துவத்திற்கும் ஜனநாயகத் திற்கும் உரிமை கோரினாலும் அரசர்கள், அரசியர், இளவர சர், இளவரசியர், கோமகன்கள், கோமாட்டிகள் போன்றோ ரைத் தம் அடையாளங்களாகவும் பெருமிதங்களாகவும் கரு துகின்றார்கள். தேசியத்திற்கான ஆசை, மக்களின் அரசியல் சுதந்திரம் மற்றும் கலாசார சுயாட்சியின் அவசியத்தையும் எடுத்துக்காட்டுகிறது. ஆனால் காலனித்துவ கையகப்படுத்து தல்கள்தான் தேசிய அரசுகளைப் பற்றி சிந்திக்கத் தேவை யான வளத்தையும் ஊக்கத்தையும் அளித்தன. காலனிகளை கையகப்படுத்துவது அரசின் முயற்சி அல்ல, மாறாக சாகசம், பேராசை மற்றும் காலனித்துவ மனங்களின் தனிநபர், குழு முயற்சியாகும். இது போன்ற முயற்சிகளில் அரசு குறைவான தொடர்புடையது. எனவே, காலனித்துவப் பேரரசு உருவாக் கப்பட்டவுடன், அரசை நம்பாமல் அந்தப் பேரரசை உருவாக் கியவர்கள் அரசின் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள விரும் பினர். ஐரோப்பாவில் தேசிய அரசுகள் உருவாவதற்கு கால னித்துவப் பேரரசுகள் இப்படித்தான் இணைக்கப்பட்டன. அமெரிக்காவில் காலனிகள் பிரிந்ததைத் தொடர்ந்து ஸ்பெயி னின் வீழ்ச்சிக்குப் பிறகு, மிகவும் சக்திவாய்ந்த காலனித்துவ சக்தியான பிரித்தானியா ஐரோப்பாவின் முதன்மையான நாடாக மாறியது.

தேசமானது நவீன அரசியல் அடையாளத்தின் முக்கிய வடிவ மாக உருவெடுத்தது, ஏனெனில் தேசிய சமூகம் முந்தைய அனைத்து அடையாளங்களுடனும் ஒப்பிடும்போது மிகவும் வலிமையான அடையாளமாக காணப்பட்டது. இத்தகைய அடையாளம் முந்தைய அரசியல் கற்பனையில் இல்லை. அத்தகைய அடையாளத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசின் வடிவில் உள்ள நிறுவன அமைப்பு, நவீன காலத் திற்கு முந்தைய காலத்தில் வளர்ச்சியடையவில்லை. இது மற்ற கூட்டு அடையாள வடிவங்களுடன் போட்டியிட்டு, வர்க் கம், பிரதேசத்தின் பகுதி, போன்ற பிற நிறுவனங்களை அடிப ணியச் செய்வதில் வெற்றி பெற்றுள்ளது. காலனித்துவ மற்றும் காலனித்துவத்துக்குப் பிந்தைய உலகில் கொந்தளிப்பான மாற்றங்களுக்கு காரணமான நவீன காலத்தின் மிகவும் சக்தி வாய்ந்த சித்தாந்தமாக இது மாறியுள்ளது. இது பிராந்திய எல்லைகளை மறுவடிவமைத்து உலகம் முழுவதும் வரைப டங்களை மீண்டும் வரைந்துள்ளது. இது வாழ்விடங்களைப் பிரித்தது, ஒன்றுபட்ட சமூகங்கள், பிளவுபட்ட மக்கள் மற்றும் ஒருங்கிணைந்த உறவினர்களைக் கொண்டுள்ளது. இது பழைய பேரரசுகளின் சிதைவுக்கும் புதிய அரசுகளின் தோற் றத்திற்கும் வழிவகுத்ததுடன் மோதல்கந்த் தூண்டி போருக்கு

வழிவகுத்தது. இதுதான் இருபதாம் நூற்றாண்டில் மிகப்பாரிய இரத்தக்களரிக்கு காரணமாக இருந்தது.

### காலனித்துவ தெற்காசியா உள்வாங்கிய தேசியம்:

இந்த அடிப்படையிலேயே காலனித்துவ நாடுகள் தேசியம் என்ற கதையாடலை உள்வாங்கத் தொடங்கின. குறிப்பாக காலனித்துவ தெற்காசியா இதை உள்வாங்கியது. தென்னாசிய அறிவுஜீவிகளின் ஒரு பிரிவினர் இதை விமர்சனம் செய்த போதும், தேசியவாதத்தை தென்னாசியா இலட்சியமாக ஏற்றுக்கொண்டது. ஐரோப்பா இந்தத் தத்தெடுப்பை 'வழித் தோன்றல்' என்று குறிப்பிட்டாலும், இத்தகைய பரவலானது தென்னாசியாவுக்கு மிகவும் அழிவுகரமானதாக இருந்தது. போட்டிகள், மோதல்கள், வகுப்புவாதங்கள், மேலாதிக்கமய மாக்கல் மற்றும் ஓரங்கட்டப்படுதல் ஆகியவை இருந்தன. புதிய அரசியல் கட்டமைப்புகள் பகைமை மற்றும் இரத்தக்களரியை விளைவித்தன, பழிவாங்கும் அரசியலை கட்டவிழ்த்துவிட்டன மற்றும் பெரும்பான்மைவாதம், சிறுபான்மை துன்புறுத்தல் மற்றும் கூட்டு எதேச்சாதிகாரம் ஆகியவற்றை எளிதாக்கியது, இது தெற்காசிய நாடுகளில் தனிநபர்கள் மற்றும் கூட்டங்களை தேசியவாதத்தின் பெயரில் மிருகத்தனமாக்கியது. ஆதிக்கம் செலுத்தும் சமூகத்தின் மேலாதிக்கம், தனித்துவம் மற்றும் முழுமையான அதிகாரத்தை நிலைநாட்ட தனிநபர்கள், குழுக்கள் மற்றும் சமூகங்களின் 'மற்றவை' என்ற முடிவில்லாத செயல்முறையைத் தொடங்கியது.

ஐரோப்பாவில் தேசங்கள் என்ற கருத்து வெளியாட்களை அவர்களின் சமூகத்தில் 'மற்றவர்'களாக மாற்றியமைத்தது, அது விரைவில் மேன்மைக்கான உரிமை கோரலாக வளர்ந்தது. ஐரோப்பா தொழில்மயமாகி, கறுப்பு, பழுப்பு மற்றும் மஞ்சள் இனங்கள் வாழ்ந்த ஐரோப்பியரல்லாத உலகில் பாதியை அடக்கி காலனித்துவப்படுத்தும் அளவுக்கு சக்தி வாய்ந்ததாக மாறியதால், 'ஐரோப்பா' மற்றும் 'தேசம்' என்ற சொற்கள் ஒத்த சொற்களாகப் பயன்படுத்தப்பட்டன. எனவே, இங்கிலாந்து முதல் தொழில்துறை நாடு மட்டுமல்ல, முதல் தேசமாகவும் இருந்தது. பின்னர் உலகின் மற்ற நாடுகளையும் பின்பற்றியது.

ஆனால் காலனிகள் தேசியவாதத்தின் அதே கதையாடலைப் பயன்படுத்தி, காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் கோருவதன் மூலம் தங்கள் சொந்த தேசிய அரசுகளை நிறுவ முயன்றது ஐரோப்பியரை அதிர்ச்சியடையச் செய்தது. ஐரோப்பாவில் தோன்றியவை மற்றும் காலனித்துவ நாடுகளில் தோன்றியவை என இரண்டு வகையான தேசங்கள் உள்ளன என்று கூறி, அவர்கள் உடனடியாக அத்தகைய நாடுகளை 'மற்ற' தேசங்களாக உருவாக்க முயன்றனர். தேசம் பின்னர் வித்தியாசமாகப் பார்க்கப்பட்டது என்பது சுவாரஸ்யமானது, மேலும் ஒன்று மற்றொன்றின் 'வழித்தோன்றலாக' கூட பார்க்கப்பட்டது. ஐரோப்பாவில் 'அசல் தேசங்கள்' இருந்த போது, முன்னாள் காலனிகள் அவற்றின் நகல், அவற்றின் சாயல் மற்றும் அவற்றின் வழித்தோன்றல் ஆகியவற்றைக் கொண்டிருந்தன. இவ்வாறு, ஐரோப்பாவானது, ஐரோப்பா மற்றும் காலனித்துவ உலக நாடுகளுக்கு இடையில் வேறுபடத் தொடங்கியது. அதை மேற்கு மற்றும் கிழக்கு வகைகள் என்று அழைத்தது. இரண்டுமே வெவ்வேறு சமூக-பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளில் இருந்து உருவானவை. மேற்கத்திய தேசியவாதம் என்பது ஐரோப்பிய அறிவொளி, முன்னேற்றம், நவீன ஜனநாயகம் என்ற கருத்தாக்கத்தின் விளைபொருளாகும். இது மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஆங்கிலோ-அமெரிக்க செல்வாக்குடன் காணப்பட்டது. கீழைத்தேய நாடுகளின் தேசியவாதம் தேசிய சுதந்திரத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது. பல பகுதிகளில் அது பின்தங்கிய மற்றும் மாயமான இயல்புகளைக் கொண்டிருந்தது. இது தேசியம் பற்றிய பிரத்யேக, அரை-பழங்குடியினரின் புரிதலை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருந்தது. மேற்கத்தேய தேசியவாதம் ஒடுக்குதலையும் பழிவாங்கலையும் அதனது 'மற்றையது' என்ற அடிப்படையில் இலகுவாகப் பயன்படுத்தியது.

கீழைத்தேய நாடுகளின் தேசியவாதத்தின் புரிதல் அதன் உள்ளார்ந்த நெருக்கடிகளைக் கொண்டிருந்தது. இந்நாடுகளில் விடுதலைக்காகப் போராடுகிற தேசிய இயக்கங்கள் எல்லாமே முற்போக்கான உலக நோக்கை உடையனவாய் இருக்கவில்லை. அவற்றினுள் பலவாறான வர்க்க நிலைப்பாடுகளும் அரசியற் சிந்தனைகளும் இயங்கின. பழைமைவாதம், அடிப்படையான சமூக அமைப்பைப் பேணும் நோக்கு என்பனவற்றையும் பிற தேசிய இனங்களையும் தேசங்களையும் இழிவாகவும் பகைமையுடனும் நோக்குகிற தன்மை பல தேசிய விடுதலை இயக்கங்களினுள் இருந்தன. இந்திய காங்கிரஸ், சீனாவின் கொமின்டாங் ஆகியன இதற்கு நல்ல உதாரணங்கள். காங்கிரஸும் கோமின்டாங்கும் இறுதியில் சுரண்டும் வர்க்கங்களின் அமைப்புக்களாகவே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றின. இலங்கையின் தேசியவாதத்தின் கதையும் இத்தகையதே.

காலனிய தென்னாசியா தேசியம் என்ற காலனியக் கதையாடலை தனதாக்கி சுதந்திரத்தை வெல்ல முயன்றது. தேசியம், தேசிய விடுதலை என்ற இலக்கு எட்டப்பட்ட பிறகு தனது சுரண்டும் வர்க்கத் தன்மையை வெளிப்படுத்தியதே வரலாறு. தென்னாசியாவின் கூட்டுப் படுகொலைகளில் தேசியவாதத்தின் பங்கு பெரிது. இந்திய துணைக்கண்டத்தின் கடந்த ஒரு நூற்றாண்டுகால வரலாறே இதற்கு சாட்சி.

### தொடரும் குறிப்புக்கள்

தேசியவாதம் இனவாதத்தை உள்ளடக்கிக்கொண்டது; இனப்படுகொலைகளை உந்தித் தள்ளுகிற காரணியாக இனவாதமே இருக்கின்றது. இல்லாதுவிடின் நண்பர்களாகவும், திருமண உறவுகளினூடும் ஒன்றாக வாழ்ந்தோர் ஒருவரை ஒருவர் கொலைசெய்வது எவ்வாறு சாத்தியம். ஒரு சமுதாயத்தின் வெவ்வேறு இனங்கள் மத்தியில் மற்ற இனத்தவர்களைப் பற்றிய தவறான எண்ணங்கள் இருப்பது அதிசயம் இல்லை. அவை காலத்துக்குக் காலம் களையெடுக்கப்படாமல் திட்டமிட்டே வளர்க்கப்படும்போதுதான் அந்த உறவுகளை அபாயகரமான முறையில் பாதிக்கின்றன. இவையே இனப்படுகொலைகளாகின்றன. இவை குறித்து அடுத்த கட்டுரையில் பார்க்கலாம்.

தொடரும்...



meenilankco@thaiveedu.com

# 'திருக்குறளின் உருவாக்கத்தில் பண்டைய தமிழ்ச் சிந்தனை மரபுகளின் பங்களிப்பு' – ஒரு நுண்ணாய்வு

– நா. சுப்பிரமணியன்

'தமிழ் மறை' எனவும் 'உலகப் பொதுமறை' எனவும் போற்றப்பட்டுவரும் திருக்குறளின் உருவாக்கத்திலே தமிழரின் பண்டைய பண்பாட்டு மரபுகளின் வகிபாகம் தொடர்பாகச் சிந்திப்பதற்குத் துணைபுரிய வல்ல முக்கிய சான்றுகளை அடையாளங்காட்டும் முயற்சியாக எனது இக்கட்டுரை அமைகிறது. இந்நூலின் உருவாக்கப் பின்புலம் தொடர்பாக அண்மைக்காலம் வரை நிகழ்ந்துள்ள ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க பெருந்தொகையானவை இந்நூலின் உருவாக்கத்தைச் சமய -தத்துவ மரபுகளுடன் தொடர்புறுத்தி நோக்குவதிலேயே கவனம் செலுத்தி வந்துள்ளன. அவ்வகையில் குறிப்பாக, வடஇந்திய நிலப்பரப்பில் உருவானவையும் தமிழ் நிலத்துக்குப் பண்டைக் காலத்திலேயே அறிமுகமாகியிருந்தவையுமான சமணம், பௌத்தம் மற்றும் வேதமரபுசார் சிந்தனைகள் ஆகியவற்றுடன் இந்நூலைத் தொடர்புபடுத்தி விளக்கந்தரும் வகையிலான செயற்பாடுகளே அண்மைக் காலம்வரை முனைப்பாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

இவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டோரில் ஒருசாரார் இந்நூலை மேற்படி சமய-தத்துவ மரபுகளுள் குறித்த ஒன்றைச் சார்ந்த ஆக்கமாகவே அடையாளப்படுத்தவும் முற்பட்டுள்ளனர் என்பது ஆய்வுலகம் நன்கறிந்த செய்தியேயாகும்.1

மேற்சுட்டியவாறாக சமய -தத்துவ மரபுகள் சார்ந்த அம்சங்கள் பல திருக்குறளில் விரவியுள்ளன என்பது வெளிப்படை. (இவை தொடர்பிலான சான்றுகள் பல ஆய்வுலகில் ஏலவே எடுத்துக்காட்டப்பட்டு வந்துள்ளன. எனது ஆய்வுநிலை எழுத்துகளிலும் இவைபற்றி விரிவாகவே எடுத்துரைத்து வந்துள்ளேன்.2 (எனவே அவற்றை இங்கு விவரிக்க முற்படவில்லை..) 'மேற்படி சமய -தத்துவ மரபுகள் சார்ந்த பார்வைகளால் மட்டும் அந்நூலின் உருவாக்கநிலையை உரியவாறு புரிந்துகொள்ளமுடியாது என்பதும், தமிழரின் பண்பாட்டு வரலாற்றின் இயங்கு நிலைகளின் ஊடாக அணுகுவதால் மட்டுமே இந்நூலின் உருவாக்க நிலையை உரியவாறு தெரிந்து தெளிவது சாத்தியம்' என்பதுமே எனது திடமான முடிபாகும். இம்முடிபு சார்ந்து அண்மைக் காலம் வரை நான் முன்வைத்து வந்த கருத்தாக்கங்களின் தொகுநிலை எடுத்துரைப்பாகவே எனது இக்கட்டுரை அமைகிறது.

இவ்வாறமையும் இக்கட்டுரையிலே முதலில் திருக்குறள் எழுந்த காலகட்டம் பற்றியும் அக்காலத் 'தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றின் அறவியற் சிந்தனைகளின் பின்புலம்' பற்றியுமான பொதுநிலைக் குறிப்புகள் முன்வைக்கப்படுகின்றன. இதனையடுத்து மேற்படி பண்பாட்டுச்சூழல்சார் அம்சங்கள் திருக்குறளின் உருவாக்கத்தில் வகித்திருக்கக்கூடிய பங்கு தொடர்பான செய்திகள் கவனத்துக்கு இட்டு வரப்படுகின்றன.

## திருக்குறள் எழுந்த காலகட்டமும் அக்காலத் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றின் அறவியற் சிந்தனைப் பின்புலமும்:

பண்டைய தமிழிலக்கிய-இலக்கணங்கள் மற்றும் தொல்லியற் சான்றுகள் ஆகியன நமக்குத் தரும் தகவல்களின்படி தமிழர் பண்பாடானது ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகள் நீண்ட வரலாறு கொண்டது என்பதறிவோம். இந்த நீண்ட வரலாற்றின் தொடக்க நிலையானது தமிழர் சமூகமானது பல்வேறு இனக்குழுக்களாக வாழ்ந்த கட்டமாகும். இவ்வாறான இனக்குழு நிலை என்ற கட்டத்திலிருந்து குடும்பம், சமூகம், அரசு ஆகிய பெயர்களிலான நிறுவன நிலைசார்களிலான பல படிநிலை வளர்ச்சிகளைத் தமிழர் சமூகம் எய்தி வந்துள்ளது.

இவ்வாறான வரலாற்றின் இயங்குநிலையிலே குறித்த ஒரு முக்கிய கட்டத்தின் இயங்கு நிலைகளையே தமிழின் தொல்லிலக்கியங்கள் எனப்படும் சங்கப்பாடல்களும் தொல்லிலக்கணமான தொல்காப்பியமும் நமக்கு அடையாளங்காட்டி நிற்கின்றன. அவ்வரலாற்றியக்கத்தின் அடுத்த ஒரு கட்டத்தை அடையாளப்படுத்தும் ஆக்கங்களாகவே திருக்குறள் மற்றும் நாலடியார் முதலியவற்றை உள்ளடக்கிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் திகழ்கின்றன என்பதே இலக்கிய வரலாற்றுப் பார்வையூடாக நாம் புரிந்துகொள்ளும் செய்தியாகும். இவ்வாறான வரலாற்று இயங்கு நிலைகளை மேலும் தெளிவுறுத்தும் வகையிலான சில விளக்கங்கள் இங்கு முன்வைக்கப்படவுள்ளன.

தமிழக வரலாற்றிலே புறநானூறு, குறுந்தொகை முதலிய சங்கத் தொகுப்புகளிடம்பெற்ற பாடல்கள் எழுந்த காலப்பகுதியானது ஒரு 'நிலைமாறுகாலம்' எனக் கொள்ளப்படுவதாகும்.

‘புராதன பொதுவுடைமைச் சமுதாயக் கட்டம் முடிவடையும் நிலையில், உடைமைச் சமுதாயம் சார்ந்தவையான குடும்பம் மற்றும் அரசு ஆகிய நிறுவனங்கள் உருப்பெறத் தொடங்கியிருந்த காலகட்டம்’ அது. குறிப்பாக, அரசு என்ற அதிகாரக் கட்டமைப்பு உருவாகி வந்த காலகட்டமாக அது கருதப்படுகிறது.

பல்வேறு இனக்குழுக்களும் குறுநிலத் தலைமைகளும் தத்தம் இருப்பைப் பேணிக்கொள்ளவும் அதிகார எல்லைகளை விரிவுபடுத்திக் கொள்ளவும் ஒன்றுடனொன்று முட்டி மோதிக் கொண்டிருந்த நிலையில் அவற்றின் மத்தியிலிருந்து மூவேந்தர் எனப்படும் சேர, சோழ, பாண்டிய வேந்தர் குலங்கள் மேற்கிளம்பிய ஒரு சமூகச் சித்திரத்தையே புறநானூறு முதலான சங்க இலக்கியங்கள் நமது தரிசனத்துக்கு முன்வைத்துள்ளன.

இவ்வாறு தமிழகத்திலே மேற்கிளம்பிய அரசு என்பது ஒரு நிறுவனமாக நிலைபெற்றுவிட்டதோடு, அதன் அதிகார நடைமுறைகள் வலுவான கோட்பாட்டு மரபுகளாகிவிட்டதான ஒரு வரலாற்றுக் கட்டத்தையே திருக்குறளில் நாம் தரிசிக்கிறோம். அந்நூலின் பொருட்பால் என்ற பகுதிசார்ந்தனவாகிய அரசியல் மற்றும் அங்கவியல் ஆகிய பகுதிகளின் அதிகாரங்கள் நமக்குக் காட்சிப்படுத்திநிற்கும் ’சமூக-பண்பாட்டு’க்காட்சி இதுவே.

இவ்வாறாக திருக்குறள் உருவான வரலாற்றுக் கட்டம் பற்றி நாம் புரிந்துகொள்ளும் நிலையில் அடுத்து நமது கவனத்திற்கொள்ளவேண்டிய விடயம் அந்நூல் எழுந்த காலப்பகுதியில் நிலவியிருக்கக்கூடிய தமிழகச் சூழலின் ‘தமிழ்ப் பண்பாட்டுச் சூழல்’ பற்றியதாகும். அவ்வகையில் இங்கு திருக்குறளுக்கு முற்பட்டவையான சங்கப் பாடல்கள் புலப்படுத்திநிற்கும் பண்பாட்டுநிலைகள் இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படுகின்றன.

‘அனைவரையும் நேசிக்கும் மனிதநேய உணர்வு’, ‘உலகத் தோடொட்ட ஒழுகும் இயல்பு’, ‘பகிர்ந்துண்டு வாழும் பண்பு’, ‘பழிபாவங்களுக்கு அஞ்சும் மனப்பக்குவம்’, பெரியோரையும் கற்றோரையும் மதிக்கும் மாண்பு’ மற்றும் சமூகநல நோக்கிலான செயலூக்கம்’

முதலான பல்வேறு உயர்குணங்களைப் பேசும் பாடல்களைச் சங்க இலக்கியப்பரப்பிலே, அதாவது திருக்குறளுக்கு முற்பட்ட கால இலக்கியச் சூழலிலே தரிசிக்க முடிகின்றது என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய செய்தியாகிறது.

சங்கத் தொகை நூல்களிலொன்றான புறநானூறு தொகுப்பின் குறிப்பிடத்தக்க தொகையிலான பாடல்கள் இத்தகைய பண்பாட்டம்சங்களை உள்ளடக்கங்களாகக் கொண்டவையாகும். அவற்றுட் சில தரும் செய்திகள் வருமாறு:

அத்தொகுப்பின், ‘நின் நயந்துறை நர்க்கும் நீநயந் துறைநர்க்கும்;...’ எனத்தொடங்கும் 163-ம் பாடல், புலவரொருவர் (பெருஞ்சித்திரனார்) தமக்குப் பரிசிலாகக் கிடைத்த செல்வத்தைச் சேமித்து வைக்க முயலாமல், சூழவுள்ளவர்களுக்குப் பகிர்ந்தளிக்க முற்படுவதான மனவிரிவைக் காட்சிப்படுத்துவது. அந்நூலின் ‘உண்டால் அம்ம இவ்வுலகம்...’; எனத்தொடங்கும் 182-ம் பாடலானது ‘தன்னலங்கருதாமல், பிறருக்காக முழு ஊக்கமுடன் செயற்பட்டு நிற்பவர்களான உயர்ந்த பண்பாளர்கள் பற்றிப்பேசுவது.

‘யாண்டு பலவாக நரையிலவாகுதல் யாங்காகியர்...’ எனத் தொடங்கும் 191-ம் பாடல், ‘மன அழுத்தங்களற்ற அமைதியான நல்வாழ்வுக்கான சூழலொன்றைக் காட்சிப்படுத்துவதாகும். அந்நூலில் ‘யாதும் ஊரே யாவருங்கேளிர்...’ எனத் தொடங்கும் 192-ம் பாடலானது பண்டைத் தமிழர் பேணி நின்ற, ‘உலகளாவிய மனிதநேயம்’ மற்றும் ‘இன்ப-துன்ப அநுபவங்களைச் சமனாகநோக்கும் மனப்பக்குவம் முதலான பல பண்பாட்டம்சங்களின் பதிவாக அமைவது.

மேற்படி அறம்சார் சிந்தனையம்சங்கள் மேலே நோக்கியவாறு பாடல்களாக வெளிப்பட்டதோடு மட்டும் அமையாமல், அறநூல்கள் என்ற வகையில் தனியான நூலாக்கங்களாகக் கூட உருவாகியிருக்க வேண்டும். இவ்வாறு ஊகிப்பதற்குப் புறநானூறு நூலின் சில பாடல்களே வலுவான சான்றாதாரங்களாக உள்ளன. அவற்றுள் இரண்டை மட்டும் இங்கு சுட்ட விழைகிறேன். ஒன்று, 34-ம் பாடலின் 1-7 அடிகள் தரும் தகவல். இன்னொன்று, மேலே நோக்கிய ‘யாதும் ஊரே யாவருங் கேளிர்;....’ எனத்தொடங்கும் பாடலின் 8-11 அடிகள் தரும் தகவலாகும்.

புறநானூறு 34-ம் பாடல் தரும் தகவல்:

***‘ஆன்முலை அறுத்த அறனில் லோர்க்கும்***
***மாண் இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்***
***குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்***
***வழுவாய் மருங்கில் கழுவாயும் உள’ என,***
***‘நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்***
***செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்’ என’***
***அறம் பாடிற்றே ...’***

என இந்த ஏழு அடிகள் அமைகின்றன.

இவ்வடிகளில் இறுதியிலமையும் ‘அறம் பாடிற்றே’ என்ற தொடரே இங்கு கவனத்துக்குரியதாகிறது. இங்கே அறம் அக்காலத்தில் நிலவிய அறச்சிந்தனைகளின் தொகுப்பொன்றைச் சுட்டி நிற்பது தெளிவு. (இந்த நூல் திருக்குறளே என்ற கருத்தும் ஆய்வுலகில் நிலவி வருகிறது.)

***‘யாதும் ஊரே பாடலில்,***
***‘...... .... ........ பேர்யாற்று***
***நீர் வழிப் படூஉம் புணை போல, ஆர் உயிர்***
***முறை வழிப்படூஉம் என்பது திறவோர்***
***காட்சியில் தெளிந்தனம் ...’***

என வரும் அடிகள் பண்டைய அறவியல் சார்ந்ததான ஊழ் பற்றிய சிந்தனையை முன்னிறுத்துவது.

‘ஆற்று நீரிலே செல்லும் தெப்பமானது உயிரின் பயணமானது குறித்த ஊழின் வழியிலேயே செல்லும் என்பதை, அறிவோர் கூறிய நூல்கள் மூலம் தெளிந்துகொண்டோம்’

என்பதே மேற்படி அடிகளின் பொருளாகும். 'திறவோர் காட்சி' என்பது அறிவுத்திறன்மிக்க சிந்தனையாளர்களின் அகக்காட்சியில் உருவான நூலாக்கங்களையே சுட்டி நிற்கின்றது என்பதை உய்த்துணரக்கூடிய செய்தியேயாகும்.

இவை தவிர பொதுவகையில் அறத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பாடல்களும் புறநானூற்றில் உள்ளன. இவை போன்ற பல்வேறு அறவியல்சார் வாழ்வியல் சிந்தனைகளும் உணர்வம்சங்களும் புறநானூறு தொகுப்பிலுள்ள பிற பாடல்களில் மட்டுமன்றி ஏனைய தொகை நூல்களிலும் இடம்பெற்றுள்ளன. (அவை விரிவு கருதி இங்கு தவிர்க்கப்படுகின்றன.)

'மேற்குறித்தவாறு சங்ககாலத்தில் நிலவிவந்துள்ள அறவியல் சார் சிந்தனைகள் பலவும் திரண்ட நிலையில் புதியதொரு வளர்ச்சி எய்தியதான ஒரு வராற்றுக்கட்டத்தை திருக்குறள் அடையாளப்படுத்தி நிற்கிறது' என்பதே இங்கு நாம் வரலாற்று நோக்கில் புரிந்துகொள்ளக் கூடிய செய்தியாகிறது.

## 'தமிழரின் பண்டைய சிந்தனைகளின் தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் திருக்குறள் அடையாளப்படுத்தியுள்ள முறைமைகள்':

திருக்குறளானது பண்டைத் தமிழரின் சிந்தனை மரபுகளின் முகிழ்ப்பாக - அதாவது வளர்ச்சியாக -அமைந்தது என்பதை வலியுறுத்தும் வகையிலான இரு விடயங்கள் இங்கு நோக்கப்படவுள்ளன. இவற்றுள் முதலாவது விடயம் அந்நூலின் முப்பகுதிகளில் – அதாவது முப்பால்களில் -ஒன்றாகிய காமத்துப்பால் ஆகும். இது தமிழரின் பண்டைய 'அகத்திணை மரபு' என்ற 'இலக்கியக்கொள்கைசார் ஆக்கமுறைமை'யின் வளர்ச்சியாக அமைந்ததாகும்.

தமிழரின் பண்டைய அகத்திணை மரபு என்ற தொடரானது ஆண் -பெண் இருபாலரின் காதலுறவுசார் உணர்வு நிலைகளின் -குறிப்பாக திருமண வாழ்வின் முன்னரும் திருமணமான பின்னருமான உணர்வெழுச்சிகளின் - இலக்கிய நிலையிலான வெளிப்பாட்டு முறைமகளைச் சுட்டி நிற்பது என்பது தமிழ் உலகம் நன்கறிந்த செய்தியேயாம். இவ்வாறாகச் சங்க கால அகத்திணைப் பாடல்களில் வெளிப்படுத்தப்பட்டு வந்த உணர்வம்சங்களை நாடகப்பாங்காக வரிசைப்படுத்தி அமைக்கப்பட்ட தனிவகையான ஒரு இலக்கியக் கட்டமைப்பாகத் திகழ்வதே திருக்குறளின் காமத்துப்பால் ஆகும். பின்னாளில் கோவை என்ற தலைப்பில் உருவான இலக்கிய வகைக்கு இதுவே முன்னோடி முயற்சியாகும்.

இரண்டாவதாக இங்கே சுட்டப்படுவது 'பண்டைத்தமிழர் வாழ்வில் பேணப்பட்டு நின்ற அறச்சிந்தனைகளின் சீரான ஒரு தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் திருக்குறளில் காணமுடிகின்றது' என்பதாகும். குறிப்பாக பண்டைத் தமிழரிடையில் நிலவியதான 'பகுத்துண்டு வாழ்தல்' என்ற பண்பின் தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் திருக்குறளில் தெளிவாகவே அடையாளங்காண முடிகின்றது. இத்தொடர்பிலான விளக்கம் வருமாறு:

தமிழரின் பண்டைய 'பகுத்துண்டுவாழும் பண்பு' தொடர்பாக வழக்கிலிருந்துவரும் இரு சொற்கள் இங்கு கவனத்துக்குரியன. ஒன்று, 'பாதீடு' இன்னொன்று, 'கொடை' ஆகும். 'பாதீடு' என்பது 'பகுத்து இடுவது'- அதாவது பங்கிட்டளிப்பது எனப் பொருள்தருவதாகும். 'கொடை' என்பது வள்ளல் பண்புடன் வாரி வழங்குதலைச் சுட்டி நிற்பதாகும். இவ்விரு வகைசார் இயங்குநிலைகளும் தமிழிலக்கண மரபிலே புறத்திணை மரபுசார்ந்த துறைகளாக வழக்கிலிருந்து வந்துள்ளன. (பார்க்க: தொல்காப்பியம்- புறத்திணையியல். நூற்பா: 3)

இவ்விரு சொற்கள் சுட்டும் இயங்குநிலைகள் தொடர்பாகச் சமூக வரலாற்று நோக்கிலான விளக்கம் ஒன்றை இங்கே நோக்கலாம்.

'கிடைத்த பொருளைப் பங்கிட்டு துய்த்த குலங்கள் ஆதிநாளைய தமிழகத்தில் வாழ்ந்தன. என்பதை வெட்சித்திணை இலக்கணத்திலிருந்தும் அந்தத் திணைக்குரிய செய்யுட்களிலிருந்தும் உய்த்துணரலாம்... வாளேந்திப் போர் புரிந்தோர், உளவு அறிந்து கூறியோர், பறவைகள் வலம் ஆதலையும் இடம் ஆதலையும் நோக்கி நற்சகுனம் நவின்றோர். ஆகியோருக்குப் பசுக்களைப் பங்கிட்டுக் கொடுப்பதைப் பாதீடு என்றனர். குலவாழ்வில் பங்குபெறும் ஏனையோருக்குத் தருவதைக் கொடை என்றனர்.'

இவ்விளக்கமானது ஆய்வாளர் டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் அவர்களால் திருக்குறள் ஒரு சமுதாயப்பார்வை என்ற ஆய்வுநூலிலே முன்வைக்கப்பட்டதாகும்.

மேற்சுட்டிய பண்டைத் தமிழர்களின் புராதன பொதுமைச் சமூக நிலையிலிருந்து உடைமைச் சமூகமாக மாறிக்கொண்டிருந்த வரலாற்றில் ஒரு கட்டம் பற்றியதாகும். இவ்வாறான வரலாற்றில் இன்னொரு கட்டத்திலே, 'நாடி வந்தோரின் பசிப்பிணியைத் தீரக்கும் பண்பு' உருவாகி வளர்ந்தது. இத்தொடர்பில் முனைப்பாகச் செயற்பட்ட சிறுகுடித் தலைவர்கள் பலரைப் புறநானூறு என்ற சங்கநூல் காட்டுகிறது. சிறுகுடி கிழான் பண்ணன் என்ற தலைவன் 'பசிப்பிணி மருத்தவன்' என்ற சிறப்புப் பெயரால் சுட்டப் பட்டான்.(புறநானூறு:173) பாணர் என்ற இசை மரபினரின் பசியைப் போக்குவதில் ஈடுபாடு கொண்டிருந்தவனான ஈரந்தூர்க்கிழான் தோயன் மாறன் என்பானை அன்றைய புலவருலகம் 'பாண்பசிப் பகைஞன்' (பாணர்களின் பசித்துயரைப் போக்குபவன்) எனப்பாராட்டி மகிழ்ந்தது. (புறநானூறு:180)

இவ்வாறு தமிழகச் சூழலிலே பண்டுதொட்டுப் பேணப்பட்டு வந்ததான பகுத்துண்டு வாழும் பண்பானது சங்ககாலத்தின் பின்னரும் தொடர்ந்தது. அவ்வகையில் அது, இங்கு நாம் நோக்குவதான திருக்குறளுக்கும் ஒரு முக்கிய சிந்தனைப் பின்புலமாகவும் திகழ்ந்துளது. இதனை அந்நூலின் 22,23-ம் அதிகாரங்களான 'ஒப்புரவறிதல்' மற்றும் 'ஈகை' என்பன தெளிவாகவே இனங்காட்டி நிற்கின்றன.

ஒப்புரவு என்பது உலகத்து இயல்பை அறிந்து பிறருக்கு உபகாரியாகத் திகழும் மாண்பைக் குறிப்பதாகும். இம்மாண்புசார் இயங்குநிலையானது இரு பண்புகளைக் கொண்டதாகும். ஒன்று, 'ஒருவர் தமது உழைப்பைச் சூழவுள்ள பலருக்

கும் பயன்படவேண்டியது என உணரும் நிலை' பற்றியதாகும். இன்னொன்று, 'அத்தொடர்பில் அவர் மேற்கொள்ளும் செயற்பாடுகள்' பற்றியதாகும். அதாவது, 'சமூகப்பயன்பாடு கருதி அவர் மேற்கொள்ளும் செயற்பாடுகள் அச்சமூகச் சூழலின் பொதுநடைமுறை நியதிகளுடன் ஒத்தியைவனவாக அமைந்திருத்தல் வேண்டும்' என்பதே இங்கு இரண்டாவதாகச் சுட்டப்படுவதாகும்.

மேற்படி 'ஒத்தியைவு' என்பதற்கு திருக்குறளின் உரையாசிரியர்களிலொருவரான பரிமேலழகர் 'உலக நடையினை அறிந்து செய்தல்' என விளக்கம் தருவர். (அதிகாரத் தொடக்க குறிப்பு) இதுவே திருக்குறளின் 'ஒப்புரவறிதல்' என்ற அதிகாரத்தின் சாராம்சம் இதுவே. இத் தொடர்பிலே மூன்று குறள்கள் இங்கு சுட்டத்தக்க முக்கியத்துவமுடையன.

***'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு'***

- 213

***'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு'***

- 215

***'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்'***

- 216

இவற்றின் பொருள் வெளிப்படை. மேற்படி முதற் குறளிலுள்ள வேளாண்மை என்ற சொல் 'உபகாரம் செய்தல்' என்னும் பொருளையும் தக்கார் என்றசொல் 'உபகாரத்தைப் பெறத் தகுதியானவர்' என்ற பொருளையும் தருவன.

ஈகை என்பது, 'இல்லை என்று இரக்கும் வறியவர்களுக்குத் தன்னிடம் உள்ளவற்றைப் வாரி வழங்குதல்' என்ற பண்பாகும். வறியவர்களல்லாத பிறருக்கு வழங்குபவை சுயநலன் கலந்தவையாகும். எனவே அவை ஈகை ஆகா. இதனை,

***'வறியார்க் கொன் றீவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து'***

- 221

என்ற குறள் உணர்த்தும்.

மேற்படி இரு அதிகாரங்களும் பண்டைத் தமிழரின் பகுத்துண்டு வாழும் பண்புசார்ந்த பாதீடு, கொடை ஆகிய இரு வேறு இயங்குநிலைகள் என்பதே இங்கு நமது புரிதலுக்குரிய செய்தியாகும். இதனை மேலும் தெளிவுறக் கூறுவதானால் பண்டைத் தமிழர் சமூகத்தில் நிலவிய மேற்படி மனிதநேயப் பண்புகள் சமூக வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்பப் புதிய வகைப் பொருட் பரிமாணங்களை எய்தியுள்ள நிலையையே திருக்குறளின் இவ்விரு அதிகாரங்களும் உணர்த்தி நிற்கின்றன எனலாம்.

## நிறைவுரை:

'தமிழரின் பண்பாட்டு வரலாற்றின் இயங்கு நிலைகளின் ஊடாக அணுகுவதால் மட்டுமே திருக்குறளின் உருவாக்க நிலையை உரியவாறு தெரிந்து தெளிவது சாத்தியம்' என்ற நோக்கிலமைந்த இக்கட்டுரையிலே அவ்வணுகுமுறை சார்ந்த முக்கிய செய்திகள் இதுவரை முன்வைக்கப்பட்டன. இந்நோக்கில் எனது இம் முயற்சியானது ஒரு முன்மொழிவாக மட்டுமே அமைகிறது. இங்கு முன்வைக்கப்பட்ட கருத்துகள் ஆய்வுலகினரால் மேலும் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும் என்பதான வேண்டுகோளை முன்வைத்து இவ்வுரையை நிறைவு செய்கிறேன்.



subramanian.n@thaiveedu.com



# தமிழ்வலை - 104

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-104 வினா

### இடமிருந்து வலம்

4 சவுக்கு
5 சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர்
6 மருதம்
8 முத்திரை மோதிரம்
9 ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று
11 ஒரு செய்யுள் இலக்கணப் பதம்
13 யாழ்நூல் ஆசிரியர்
15 மரம்
16 பாக்கு நீரிணைய நீந்திக் கடந்த முன்னவர்
18 தெரு

### மேலிருந்து கீழ்

1 குரக்கன்
2 இந்தியாவில் நச்சுவாயு கசிந்து ஆயிரக்கணக்கானோர் மாண்ட இடம்
3 ஆடை
4 இலங்கையில் பேர்போன வெந்நீர் ஊற்று அமைந்துள்ள இடம்
7 ஒருவகை மகளிர் காலணி
10 அ.ந.-வில் துவங்கும் ஈழ எழுத்தாளர்
11 பாலில் தயாரிக்கும் பானம்
12 ஒரு தமிழக மாத இதழ்
14 சிவன் துணையுடன் பரிசுபெற்ற அந்தணர்
17 அரசமரம்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 103-க்கான விடைகள்



## தமிழ்வலை-103 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

உமா கதிர், ஏஜக்ஸ், கனடா.
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ
மேரி கெலன் தேவதாஸ் நோத்யோர்க்
சுமதி முத்துராஜா யாழ்ப்பாணம்
நவயோகி புஸ்பராஜா பாரிஸ்
சிவருபி சிவகடாட்சம், ரொறன்ரோ.
கிருபா சண். ரொறன்ரோ.
சுதர்சன் ஜெயலட்சுமி, யாழ்ப்பாணம்.

### பரிசுபெறும் போட்டியாளர்

**தேவாம்பிகை அரவிந்தன்,**
**இங்கிலாந்து**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



# மதிப்பு

– உஷாதீபன். எஸ்

எதுக்குக் கிடந்து இப்படித் துடிக்கிறே? என்று கேட்டார் சுகவனம். இப்போதுதான் அறிவிப்பே வந்திருக்கிறது. விழா வைப்பதற்கு இன்னும் தேதி குறிக்க வேண்டும். இன்னும் சில போட்டிகளில் முடிவு அறிவித்தாக வேண்டும். எல்லாப் போட்டிகளுக்கும் முடிவு அறிவித்த பின்பே விழாவைப் பற்றி யோசிப்பார்கள். இப்பத்தானே முடிவே அறிவிச்சிருக்கோம் என்கிற அயர்ச்சி அவர்களுக்கும் நிச்சயம் இருக்கும். விழா என்பது பெரிய எடுப்பு.

இப்போதே பரிசுத் தொகை கைக்கு வந்துவிட்டதுபோல் இவள் ஏன் கிடந்து துடிக்கிறாள்? - மேகலாவைக் கூர்ந்து நோக்கினார் சுகவனம்.

அவளின் உற்சாகம் சிறுபிள்ளைத்தனமாகத் தெரிந்தது இவருக்கு. இந்தப் பத்தாயிரம் ஒரு பெரிய தொகையா? என்று நினைத்தார். ஏதோ ஒரு லட்சம் கிடைத்ததுபோல் சந்தோஷிக்கிறாளே? இதைப் போல் எத்தனை பத்தாயிரங்களுக்குப் புத்தகங்களை வாங்கிக் குவித்திருப்பேன்? அது இவளுக்குத் தெரியுமா?

தெரிஞ்சதுனாலதானே பிரச்னையே? அது மனசுல கிடந்து அழுத்திட்டிருக்கிறதுனாலதானே இந்தப் பேச்சே வருது! இப்படியும் நினைத்துக் கொள்ளத் தலைப்பட்டார். புத்தகமா வாங்கிக் குவிங்க... படிக்கிறீங்களோ? அடுக்கி வச்சு அழகு பார்க்கிறதுக்கா? - மனசுக்குள் கிடந்து புகைந்து கொண்டிருக்கும் ஆறா நெருப்பு! சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல்... திக்கித் திணறி...! எதுடா சமயம் என்று காத்திருந்ததுபோல்... இப்போது, கணக்கில் வரவு வைக்கிறாள்.

இருந்திருந்தும் ஒரு பரிசு கிடைச்சிருக்கு... செக் கைக்குக் கிடைச்சவுடனே நேரா என்கிட்டே கொண்டு வந்து கொடுத்திடணும்... தெரிஞ்சிதா? - புதிய அதிகாரம் இது.

அதென்ன இருந்திருந்தும்? இதற்கு முன்பு வாங்கிய நான்கைந்து பரிசுகளை வரவு வைக்கவில்லையோ? வருஷங்கள் ஆயிற்றே என்று மறந்து விட்டாளோ?

அதெல்லாம் ஆரம்பத்துல, நீங்க இவ்வளவு கணக்கில்லாமப் புத்தகங்கள் வாங்கிக் குவிக்கிறதுக்கு முன்னே வந்தது... அது இந்தக் கணக்கிலே வராது...! - அவள் சொல்லாவிட்டாலும் ஓங்கிக் குரலெடுத்துச் சொல்வது போலவே இருந்தது சுகவனத்திற்கு.

காசோலையை பத்திரமா வச்சிக்காம, தொலைச்சிடுவேன் என்று நினைத்து விட்டாளோ? பொருத்தமில்லாமல் நினைப்பதில் பெண்களுக்கு நிகர் அவர்களேதான். நான் என்ன சின்னப் பையனா காத்துல பறக்க விட்டிட்டு வர்றதுக்கு? என்ன கேட்கிறாள் இவள்?

தங்கள் உத்தரவு... அடியேன் சித்தம்... பொறுமையோடு பதிலை இப்படித்தான் பகர்ந்தேன். அதிலிருந்த கேலியை உணர்ந்தாளோ என்னவோ? - சொன்னபோது திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது.

அது சரி... செக் என் பெயருக்குத்தானே தருவாங்க... அதை உன்கிட்டே கொண்டு வந்து காண்பிக்கத்தானே முடியும்... உன் வங்கிக் கணக்குலயா போட முடியும்? திரும்ப எங்கிட்டேதானே தந்தாகணும்? - என்னதான் சொல்கிறாள் பார்ப்போம் என்றுதான் இதைச் சொன்னார் சுகவனம்.

அது எனக்குத் தெரியாதா? நீங்க என்ன பெயர்ல செக் வாங்கியிருக்கீங்கன்னு பார்க்க வேண்டாமா? அதுக்குத்தான் சொல்றேன்... - முன் யோசனை இல்லாமல் நான் வாங்கி வருவேன் என்று என்னைப் பற்றி அவநம்பிக்கையாகவே நினைப்பதில் அவளுக்குத் தனி முனைப்பு. ஒரு குரூர சந்தோஷம்.

அது கூட எனக்குத் தெரியாதுன்னு நினைச்சிட்டியா? புனை பெயர்லயா வாங்குவேன்? என்னுடைய ஒரிஜினல் நேம்லதான் செக் போடச் சொல்லுவேன். என்கிட்டயே கொடுங்கன்னு வாங்கி 'பே-டு'ங்கிற இடத்துல கே.ஆர். சுகவனம்னு நானே எழுதிக் கொடுத்திடுவேனாக்கும். அதெல்லாம் கவனமாயிருப்பேன்... கவலைப்படாதே...! சில பத்திரிகைகளில்லேர்ந்து பணம் வருதே, வர்ற செக் பூராத்துலயும் என்னோட 'யோகி'ங்கிற புனை பெயரா போட்டிருக்கு? என் சொந்தப் பெயர் தானே போட்டு வருது...பார்க்கிறேல்ல... செக் எழுதக் கையெடுக்கிறவனுக்கே எடுத்த எடுப்புல இந்த சந்தேகம் வந்திருமாக்கும். யோகின்னு எழுதினா சரியா வருமான்னு பாமரன் கூட யோசிப்பான்ல...! பிழை திருத்தி, கன கச்சிதமா எடிட் பண்ணி பிரசுரம் பண்ற பத்திரிகைக்காரங்க... இத யோசிக்க மாட்டாங்களா? அவுங்களுக்கு நாம ஒண்ணும் சொல்லித் தர வேண்டாம். அவுங்க நமக்குச் சொல்லித் தருவாங்களாக்கும்...!

எப்படியும் இன்னும் ரெண்டு மூணு மாசத்துல விழா வச்சிடு



வாங்க... அதுக்குள்ளே மறந்திடாதீங்க... எப்பயாச்சும் ஃபோன்ல கூப்டாங்கன்னா...? அதுக்குத்தான் முன்னமே உஷாராச் சொல்லி வைக்கிறேன்... கே.ஆர். சுகவனம்ங்கிற பெயருக்குச் செக் போடுங்கன்னு கவனமாச் சொல்லிடுங்க... முடிஞ்சா ஸ்பெல்லிங் கூடச் சொல்லிடலாம். நீங்க sugavanam - னு கணக்கு வச்சிருக்கீங்க... அவுங்க sukavanam-னு செக்குல எழுதிடப் போறாங்க... ஏற்காது திரும்பி வந்திடும். போதாக் குறைக்கு பாங்குல ஃபைன் வேறே போட்டாங்கன்னா? நம்ப காரியத்துல நாமதான் கவனமாயிருக்கணும். ஊரானுக்கு என்ன வந்தது? என்ன... நான் சொல்றது புரிஞ்சிதா? - போடு போடென்று போட்டாள் மேகலா.

இப்டியே ஒவ்வொண்ணையும் பரிஞ்சு பரிஞ்சு இவ நினைச்சிட்டிருந்தான்னா... இவளுக்கு B.P ஏறாம என்ன செய்யும்? ஒருவகையில் எனக்கு அவள் மீது பரிதாபமாகவே இருந்தது. இப்படி ஒரு அசட்டு மனுஷனக் கல்யாணம் பண்ணிட்டு நான் படுற பாடு? - ன்னு நினைத்துக் கொண்டிருப்பாளோ? நாம படிக்கிறது, எழுதுறதெல்லாம் ஒரு பொருட்டே இல்ல போல்ருக்கு? அது மேல துளி மரியாதையில்லயே?

யார் சிந்தனையை யார்தான் தடுக்க முடியும்? தனக்குத்தானே உண்டாக்கிக் கொள்வதுதானே மனித மனம். அதை யாரால்தான் தடுக்க முடியும்? மனப் போராட்டம் என்பது அவரவரே ஏற்படுத்திக் கொண்டு அலைபாயும் செயல். தங்களின் ஈகோவைத் தானே பாராட்டிக் கொள்வதும், சீராட்டிக் கொள்வதுமாக.

என் மனது இப்போதே திட்டமிட ஆரம்பித்திருந்தது. அந்த விழாவில் எப்படியும் ஸ்டால்கள் போடுவார்கள். அப்போது அதுநாள்வரை வாங்காத புத்தகங்களையெல்லாம் வாங்கி விட வேண்டும்... வாங்கிவிடலாம்தான். அதை இவளுக்குத் தெரியாமல் வீடு கொண்டுவந்து சேர்ப்பது எப்படி? இப்போதே யோசனை நீண்டது சுகவனத்திற்கு.

வீட்டுக்குத் தெரிந்து வாங்கியதைவிட, தெரியாமல் வாங்கிச் சேர்த்ததுதான் அதிகம். இருங்க... இருங்க... கீழேயே இருங்க... நான் வர்றேன்... என்று, போனில் சொல்லிவிட்டு, இரண்டாம் மாடியிலிருந்து தரை தளத்திற்கு ஓடுவார். அருகிலுள்ள ஒரு புத்தக விற்பனை நிறுவனம் இவருக்கு எக்காலத்திலும் பத்து சதவிகிதக் கழிவில் புத்தகங்களைத் தந்து கொண்டிருந்தது. அதன் மூலமாகத்தான விரும்பும் புத்தகங்களை வாங்கிக் கொண்டிருந்தார். சலுகைகளையும் கொஞ்சம் நீட்டிப் பார்த்தார். பலித்தது.

பக்கத்துலதானங்க இருக்கீங்க... ஒரு ஆள டூ வீலர்ல அனுப்பினீங்கன்னா, கொண்டு வந்து கொடுத்திட்டுப் போறான்... உங்களுக்கும் கூரியர் சார்ஜ் மிச்சம்தானே...? பலித்தது பஞ்சாங்கம்...! ஆன் லைனில் தவறாமல் பணம் அனுப்பி, விடாமல் புத்தகங்கள் வாங்கும் ரெகுலர் கஸ்டமருக்கு இதுகூடச் செய்யவில்லையென்றால் எப்படி? ஓ.கே. சார்... ட்ரை பண்றேன் என்றார்கள். செய்தே விட்டார்கள். எழுபது, எண்பது, நூறு, நூற்றிருபது என்று பைசா மிச்சம்தானே? மனுஷன்... வகையா ஐடியாக் கொடுக்கிறான்யா...?

தரை தளம் போய் பையோடு வாங்கி வரும் புத்தகக் கட்டை முதுகுக்குப் பின்னால் மறைத்து விடுவிடுவென்று நுழைந்து தன் அறைக்குச் சென்றுவிடுவார் சுகவனம். அந்தச் சமயம் பார்த்து மேகலா அடுப்படியில் இருந்தால் (பெரும்பாலும் அங்கேதானே நிற்கிறாள்) பிரச்னையே இல்லை.

யாரு வந்தாங்க...? என்று கேட்டாளானால்... ஒரு நண்பர்... என்று பல சமயங்களில் பொய் சொல்லியிருக்கிறார். இல்லை யெனில் ஏதாச்சும் தபால் வந்திருக்கான்னு பார்க்கப் போனேன் என்பார். புத்தகமா? என்றும் கேட்டு விடுவதுண்டு. சந்தேகம் இல்லாமல் இருக்குமா? புத்தகத்தோடு சேர்த்து என்னை நினைத்துப் பார்ப்பதே அவள் வேலையாயிற்றே? என் பிம்பம் அவளிடம் அப்படித்தான் பதிந்திருந்தது.

அவுங்களா அனுப்புறாங்க... நான் என்ன பண்றது? என்று சற்று குரலை உயர்த்தி விடுவார். விமர்சனம் எழுதச் சொல் றாங்க... மாட்டேன்னு சொல்ல முடியுமா? ஓசில கிடைக்கிற புத்தகத்தை வேணாம்னு சொல்லச் சொல்றியா? காசு போட்டு வாங்கினா நூத்தம்பது, இருநூறு, முன்னூறுன்னு எத் தனைக்குக் கொடுக்கிறது? வாங்கி மாளுமா இல்ல கொடுத் துதான் ஆகுமா? படிச்சிப்புட்டு அதப் பத்தி எழுதுங்கன்னு வற்புறுத்தினா மறுக்க முடிலயே? என் விமர்சனம் அவுங்க ளுக்குப் பிடிச்சிருக்கு... அதனால அவுங்க நாலு பேருக்குச் சொல்றாங்க... அவுங்களும் என் புத்தகத்துக்கும் விமர்சனம் எழுதுங்க சார்னுட்டு வலிய அனுப்புறாங்க... எனக்கு டைம் இல்லீங்க... என்னால அதெல்லாம் முடியாதுன்னு எப்படி முறிச்சு சொல்றது? அது முடியாது. மத்தவங்க மனசு சங்க டப்படுற மாதிரிப் பேச என்னால ஆகாது, என் விமர்சனத் தையே நான் அப்படிக் கறாரா வச்சிக்கிறதில்லையே? சாஃப்ட்டாதானே எழுதுவேன். வாழப் பழத்துல ஊசி இறக்குற மாதிரிக் கூடக் குத்த மாட்டனே? அவனவன் படிக்கிறான். ஒரு ஆர்வத்துல எழுதுறான்... சொந்த முயற்சில புத்தகம் கொண்டு வர்றான். செலவழிச்சு செய்றான். இல்லன்னா எதுவோ ஒரு பதிப்பகம் இலவசமாப் போடுது... நமக்கென்ன வந்தது. நம்பளை மதிச்சுக் கேட்டாங்களா... ரெண்டு வார்த்தை புகழ்ந்து எழுதினமா... அதுல அவுங்களுக்கு ஒரு சந்தோ ஷம், திருப்தி... நமக்கும் ஒரு வரவு... வரவுன்னா பைசா ஒண் ணும் வரப்போறதில்ல... புத்தகம் ஃப்ரீயாக் கிடைக்குதே... அதச் சொல்றேன்... அப்படிச் சேர்த்ததுதாண்டீ என் ரூம்ல இருக்கிற முக்கால் வாசிப் புத்தகம்... காசு போட்டு வாங்கினா உனக்குத் தெரியாம நடந்திடுமா? துணிந்து அடிப்பார் சுகவனம்.

ஒரு துரும்பையாச்சும் இந்த வீட்டுக்குள்ள நீ அறியாமக் கொண்டாந்திட முடியுமா? உன்கிட்டேதானே ராஜ்ஜியமே இருக்கு? நான் சொன்ன நீண்ட யதார்த்த நடைமுறை நியா யங்களில் மயங்கிப்போய் திருப்திப்பட்டு விட்டது அவள் வெள்ளை மனம். உண்மையில் பார்க்கப் போனால் பத்துக்கு மூணு நாலுதான் இலவசமாக வந்தவை. மற்றவையெல்லாம் அடியேன் காசு போட்டு வாங்கியதுதான். எனக்கே பல சமயங் களில் இம்புட்டுக் காசு செலவிக்கிறோமே... இது சரியா...? என்று வதக் வதக்கென்றுதான் இருக்கும். அவளிடம் ஓசி... ஓசி யென்று ஓங்கி ஓங்கிச் சொல்லி நம்ப வைத்து விடுவேன். வாங்கும் வேகத்திற்குப் படிக்கிறேனா என்றால் இல்லை. 'என் னிடம் உள்ள புத்தகங்கள்' என்று பட்டியல் போடவா? படிக்க வல்லவா வேண்டும்? என்னிடம் இருக்கும் புத்தகங்களுக்கு விடிய விடிய... குறைந்தது தினசரி ராத்திரி ரெண்டு மணி வரை படித்தால்தான் கடைசி மூச்சுக்குள் எல்லாவற்றையும் படித்து முடிக்க முடியும். அவ்வளவு சேர்ந்து போய் விட்டது தான். அது சேர்ந்து விட்டது. நான் சோர்ந்து போனேனே? ஆனாலும் புதிய வரவுகளை நிறுத்த முடியவில்லை என்பது தான் பைத்தியம் பிடித்த கதை.

ஓ... இவரா... போனவாரமே போன்ல சொல்லியிருந்தாரு... புக் அனுப்பறேன் சார்... கொஞ்சம் உங்க விமர்சனம் வேணும்னு கேட்டிருந்தாரு... ஓகேன்னேன். அனுப்பிச்சிருக்கார் போல் ருக்கு... மதிச்சுக் கேட்கிறவங்களுக்கு எப்படி மறுக்க முடி யும்? என்று சொல்லிக்கொண்டே காலிங் பெல் சத்தம் கேட்ட வுடனே... நான் போறேன்... நான் போறேன்... நீ உட்கார்ந் திரு...எதுக்குப் பதட்டப்படுறே...என்று அவளை அடக்கிவிட்டு நானாகவே ஓடிப் போய் கையெழுத்திட்டு வாங்கிய கூரியர் தபால்கள்தான் அதிகம். என்னா சார்... புஸ்தகமா வந்திட்டி ருக்கு... லைப்ரரி வச்சிருக்கீங்களா? லெண்டிங் லைப்ரரியா? - என்ன மாதிரிப் புஸ்தகங்கள் சார்...? - கூரியர்காரனும், போஸ்ட்மேனும் தவறாமல் கேட்ட கேள்விகள் இவை. அவர்க ளிலும் நிறையப் படிப்பவர்கள் இருக்கிறார்களே? ஓரிரு முறை கொடுத்து வாங்கியும் இருக்கிறேனே? வரும் பார்சல் ஒழுங்கா டெலிவரி ஆனால் சரி...!

நாலைந்து நூல்களுக்கு விமர்சனம் எழுதத்தான் செய்தேன். இல்லையென்று சொல்லவில்லை. பிறகு ஒரு அலுப்பு வந்து விட்டது. ஓசி வேலைய எவ்வளவு நாள் தீவிரமாப் பார்க்கு றது? இதுதான் எப்பவும் என் பொழப்பா? படிக்கிறதும் எழுத றதும்? இருக்கும் நூல்களை முழுவதுமாக என்று படித்துத் தீர்ப்பது? அதில் இவ்வளவு தீவிரம் இல்லையே?

எதுக்கு இப்படி ஓசிப் புத்தகத்துக்கு அலையுறீங்க? பிரா ணன விடறீங்க? இதென்ன இராமாயணமா, மகாபாரதமா? மாஞ்சு மடிஞ்சு படிக்கிறதுக்கு...? காலத்துக்கும் திரும்பத் திரும்பப் படிக்கவும், புதிசு புதிசாப் புரிஞ்சிக்கவும் உள்ள இதிகாசங்கள் அதுதான். ஒருவாட்டி படிச்சுத் தூக்கி எறியறது தானே மத்ததெல்லாம். படிக்காட்டாலும் என்ன நஷ்டம்? இப்போ நீங்க வாங்கித் தொலைச்சிட்டமேன்னு படிக்கிறீங் களா... இல்ல விதியேன்னு, படிச்சுத் தொலைக்கணுமேன்னு படிக்கிறீங்களா? இதுக்குப் போய் இப்டி உசிரை விடணுமா? நீங்க பண்றது ஒண்ணும் எனக்குப் பிடிக்கலே...!

வாய் விட்டுச் சொல்லிவிட்டாள் ஒரு நாள். அவள் கருத்தில் அவள் என்றும் ஸ்திரம். நான்தான் தடுமாற்றத்தில் உள்ள வன். புலிவாலைப் பிடித்தவன் மாதிரி சுற்றிக் கொண்டிருந் தேன். தொடர்ந்து இருக்கவும் பிடிக்காமல், விட்டு ஓடவும் ஏலாமல்...! ஏண்டா இந்த உலகத்துல புகுந்தோம்?

இந்த புக் வந்திருக்கே... அந்த புக் வந்திருக்கே என்று தக வல்கள் எனக்கு விடாமல் வர இதென்னடா பெரிய வம்பாப் போச்சு...? என்று ஆகிவிட்டது எனக்கு. எது வந்தா எனக் கென்னய்யா? என்கிட்டே எதுக்கு சொல்லித் தொலையு றீங்க? நான் என்ன கேட்டனா? வாய வச்சிக்கிட்டு சும்மா இருக்க மாட்டீங்க போலயே? என்று மனதுக்குள் புகைந்து தள்ளினேன். புதிய புத்தகங்களின் வரவு என்னைத் தொல் லைப்படுத்திக் கொண்டேயிருந்தது. என்னதான் முடிவு?

ஏய்...! கேட்டியா சேதியை... பரிசுத் தொகையை புக்ஃபேர்ல வச்சே தந்துர்றாங்களாம்... அடுத்தவாரம் 5 - ஆம் தேதி மாலை 3-4 ன்னு போட்டிருக்காங்க... வாட்ஸப் அனுப்பியிருக்

காங்க பார்... சொல்லிக் கொண்டே வந்த செய்தியை அவளிடம் காண்பித்தேன்.

நாட்கள் கடந்துவிட்ட நிலையில், ஏன் மாதங்கள் என்றே சொல்லலாம். நான் அதை மறந்தே போன வேளையில்தான் அந்தச் செய்தி வந்திருந்தது. ஆம்மா... அத மறந்தே போனமே...!

அப்டியா... சுருக்க முடிச்சிட்டாங்க போல்ருக்கு... அது அவுங்க இஷ்டம்... நாம ஒண்ணும் சொல்றதுக்கில்லே... என்னிக்காம்...? எனக்கேட்டுக்கொண்டே வந்து என் மொபைலை வாங்கிப் பார்த்தாள் மேகலா.

நல்லதாப் போச்சு... உள்ளூர்லயே காரியம் முடியப் போறது. போய் வாங்கிட்டு வந்திடுங்க... செலவு மிச்சம்..நீயும் வர்றியா? கேட்டேன். ஒரு வார்த்தை என்னைக் கேட்டீங்களா? என்று நாளைக்குக் கேட்டுவிடக் கூடாதே? வேண்டாம்... எனக்குக் கூட்டத்தக் கண்டாலே அலர்ஜி. நா வரலை... இந்தப் பத்தாயிரத்த வாங்குறதுக்குப் படையோட போகணுமா? அடுத்த தெருவுல இருக்கிற உங்க அக்கா, அத்திம்பேர்னு கூப்பிட்டுடாதீங்க... சிரிக்கப் போறாங்க... ப்ராபகேன்டா பண்ணாம நீங்க மட்டும் கமுக்கமாப் போயிட்டுவாங்க போறும்... என்றாள் மேகலா.

அவள் பதிலில் எனக்கு உடன்பாடில்லைதான். பத்தாயிரத்தைக் கவனமாகப் பிடுங்கி கணக்கில் வரவு வைத்துக் கொள்வாளாம். ஆனால் சொல்லும்போது மட்டும் இந்தப் பிசாத்துத் துட்டை வாங்க நான் வேறே வரணுமாக்கும் என்று பிகு பண்ணுவாளாம்? எப்படியிருக்கிறது பாருங்கள்?

என்னைப் பொறுத்தவரை எழுதுவதும், பரிசு பெறுவதும் என்றும் மதிப்புடையதுதான். கதைகளை எழுதி முடித்து, திருத்தி வடிவமைத்து, ஒரு திருப்தி வந்த பிறகு பத்திரிகைக்கு அனுப்பி அது பிரசுரமாகும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதே ஒரு சவால்தான். அது ஏற்கப்பட்டு பிரசுரமாகி விட்டால் அதுவே எனது முதல் வெற்றி. என் எழுத்து ஜெயிக்கிறது...!

அப்படியாகப் பத்துப் பதினைந்து கதைகள் சேர்ந்து அதைப் புத்தகம் போட வேண்டி ஒரு போட்டி அறிவித்த அமைப்பிற்கு அனுப்பி, ஐவர் கொண்ட குழு அதனை மீண்டும் பரிசீலித்து, ஓகே... இதை ஏற்கலாம் என்று பரிந்துரைத்ததும், அது புத்தகமாக வந்ததும் எனது இரண்டாவது வெற்றி. அப்படித்தான் இப்போது பரிசு வாங்கியுள்ள எனது நூல் தேர்வு பெற்றுள்ளது. புத்தகமான அந்த நூல், பரிசுப் போட்டி அறிவித்த வேறொரு நிறுவனத்தின் அல்லது பதிப்பகத்தின் தேர்வுக் குழுவால் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, மறுபடியும் அங்கீகரிக்கப்பட்டு, பரிசுக்குரிய நூலாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுகிறதென்றால் அது எனது மூன்றாவது வெற்றி என்றே நான் கருதுகிறேன். ஒரு சிறந்த புத்தகத்திற்கான தொடர்ந்த அங்கீகாரம் என்றும் சொல்லலாம்தானே? அதன் மூலம் ஒரு எழுத்தாளன் அடையாளப்படுத்தப்படுவது நல்ல விஷயம்தானே?

பத்தாயிரம் என்பது ஒன்றும் குறைவான தொகையல்லவே? ஒரு லட்சத்தை ஒருவருக்கே கொடுப்பதற்குப் பதிலாக, பத்துப் பத்தாகப் பத்துப் பேருக்குப் பிரித்துக் கொடுக்கும்போது பரிசு கிடைத்தது என்று பத்துப் பேர் மகிழ்ச்சியடைந்து ஊக்கம் பெறுகிறார்களே? அவர்கள் இன்னும் நன்றாக எழுத வேண்டும், மேலும் பரிசுகளைப் பெற வேண்டும், நல்ல ஆக்கங்களை எதிர்காலத்தில் கொண்டு வர வேண்டும் என்று ஊக்கம் பெறுவார்களே...? அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அவரை மதிப்புறு நிலையில் நோக்குவார்களே? (மேகலா அப்படியில்லையே என்பது எனக்கு வருத்தம்தான்)

இதையெல்லாம் விலாவாரியாகச் சொல்லப் புகுந்தால் நிச்சயம் மேகலா ஏற்றுக் கொள்ளப் போவதில்லைதான். அவளுக்கு நான் வாங்கிக் குவித்திருக்கும் அறையடங்காத புத்தகங்கள்மேல் அப்படியொரு வெறுப்பு. வீட்டில் குறுக்கும் நெடுக்கும் போகையில் கண்ணில் படும் அவைதான் அவள் மனதை விடாது உறுத்திக் கொண்டேயிருக்கிறது என்பதுதான் சத்தியமான நிஜம்.

வாசிப்பு ரசனை என்பது வேறு. அது எல்லோருக்குமா அமைந்து விடுகிறது. அந்த உலகில் பயணிப்பவர்கள் புதிது புதிதாக அல்லது திரும்பத் திரும்ப வெவ்வேறு நூல்களையும், ஒரே நூலையும்கூட படித்துப் படித்து உள்வாங்கிக் கொண்டு தங்களைப் பதப்படுத்திக் கொண்டேயிருப்பார்கள். அவர்களுக்கான பக்குவம் என்பதே தனி. அந்த உலகமே வேறு. அவர்கள் மிகப் பெரிய விவேகிகள்.

அந்தப் பழக்கம் அவளுக்கு இல்லாதது என்பது ஒன்றும் பெரிய குற்றமில்லைதான் எனினும், சராசரி மக்கள்தான் இந்த உலகில் அதிகம் என்பதும் நாம் அறிந்ததே. வாழ்க்கை அனுபவங்கள் கைகூடி பக்குவப்பட்ட நபர்களாக குடும்பத்தில் ஒரு பாந்தமான அங்கமாக வளைய வருகிறார்களே அதுதான் மிக மிக முக்கியம்.

அந்தவகையில் மேகலாவை ஒன்றும் நான் குறையுள்ளவளாக நோக்கவில்லைதான். ஆனாலும் கொஞ்சத்துக்குக் கொஞ்சமேனும் தன் கணவன் ஒரு படைப்பாளி என்கிற மதிப்பான - என்பது கூட வேண்டாம்... நல்லெண்ணம் இருந்தால் கூடப் போதும்தான். அதுகூட அவளிடம் இல்லையென்பதுதான் என் துரதிருஷ்டம். ஒருவேளை மனதின் அடியாழத்தில் இருக்குமோ என்னவோ?

இந்தா... நீ கேட்ட காசோலை. சரியா இருக்கா பார்த்துக்கோ... விழாவுக்குப் போயிட்டு வந்தாச்சு. செக்கை வாங்கிட்டு வந்தாச்சு... உங்கிட்டக் ஒப்படைச்சாச்சு... முதல்ல பிடி இதை... என்றவாறே நீட்டினேன் அவளிடம்.

ஓ.கே... ரொம்ப சந்தோஷம்... என்று சற்றே செயற்கையாகக் கூறியவாறே அதை பவ்யமாக வாங்கிப் பார்த்தவள் முகம் மலர உடனடியாக ஒன்றைக் கேட்டாள்.

அது சரி... 'பெண்ணியம்'ங்கிற பத்திரிகைல உங்க கதை ஒண்ணு ஆறுதல் பரிசு வாங்கித்தே... அந்தக் கதை வந்திடுச்சா? அதுக்கான சன்மானம் ரெண்டாயிரம் ரூபாய் எப்பக் கிடைக்கும்?

என்னோடு சேர்ந்து நீங்களும் மேகலாவையே கூர்ந்து நோக்குகிறீர்கள் என்பதை என்னால்
உணரமுடிகிறது!.



ushadeepan@thaiveedu.com

# வாழ்வுரிமை!

- மா. சித்திவிநாயகம் -



10

***எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே***

தேவனாகிய பன்றி சிரித்துக் கொண்டே கூறியது. அனைத்து அநீதிகளையும் செய்கிற மானிடப் பிசாசுகள் தம்மை நல்லவரைப் போல் காட்ட எழுதியுள்ள வாசகம் அது. அவர்கள் என்றும் மற்றவர்கள் இன்புற்றிருக்க நினைப்பவர்களல்ல.

ஒருவரையொருவர் ஏமாற்றி, வஞ்சித்து, அழித்துக்கொண்டிருக்கின்ற இந்த மானிட குலம், தம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி, மேம்பாடடையச் செய்யவென கண்டறிந்ததாகச் சொல்கிற அவர்களுடைய விஞ்ஞான அறிவால், ஆற்றலால் இந்த அழகான உலகத்தையே நாசம் செய்து நிற்கின்றார்கள். நவீன வெடிகுண்டுகளையும், அணுகுண்டுகளையும், போர் விமானங்களையுமே விஞ்ஞானிகளிடமிருந்து அரசுகள் கேட்டுப் பெற்று இறுமாந்து கிடக்கின்றன. தம் மக்களின் பஞ்சம், பசி போக்குவதற்கு வழிகாட்ட வேண்டிய விஞ்ஞானம், இன்று ஆளுக்காள் பகை மூட்டி, அழிவை ஏவிடப் பயன்படுத்தப்படும் கருவிகளுக்கான அறிவியல் என வளர்ந்து வருகிறது. இந்த அழிவார்களின் கண்டுபிடிப்புகளால் பெருமளவில் அழிவது நம் விலங்குகளும், பறவைகளும் தான்.

பன்றியான தேவன் பெருமூச்செறிந்தான்.

கரடிப் போக்கு வாய்க்காலுக்கு எதிர்த்திசையில் பெரும் பந்தல் போட்டு மக்கள் அமர்க்களப்பட்டார்கள். வரும் ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினமாம்,

உலகெங்கிலும் உள்ள நாடுகளில் மே மாதம் வருகிற இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை அன்னைகளைக் கொண்டாடும் நாளாக அனுசரிக்கப்படுகிறது. ஆனாலும் பெற்ற அன்னைகளைக் கொண்டு போய் காப்பகங்களில் அடைத்த கிறுக்குகள் தான் இந்த ஒற்றை நாளில் மட்டும் அவர்களுக்குப் பூக்கொடுத்துப் பெருவிழா எடுத்துக் கொண்டாடுவார்கள்.

தாய்மார்களின் நினைவான அந்த நாள், தாய்மார்களுக்கு விடுமுறை நாளல்ல. விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமைகளில் தேடி வைக்கப்பட்ட சூட்சும நாளது.

தொழிலாளர் சுதந்திர தின மாதமெனும் இந்த மே மாதத்தில் அன்னையர் தினம், செவிலியர் தினம், மலையகத் தியாகி சிவனு லட்சுமணன் தினம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழரையும் அழித்த முள்ளிவாய்க்கால் இனவழிப்பும், குமுதினிப் படகுப் படுகொலை நாளும் கூட இருக்கிறது.

பசியாலும், பஞ்சத்தாலும் நலிந்து, இயற்கை விளைவிக்கும் கொடுமைகளால் வஞ்சிக்கப்பட்டு, புதுப் புது நுண் வைரசுகளால் நோய் பரவி அழிக்கப்பட்டு, கூனிக் குறுகி, குற்றுயிராகின்ற மக்களை, நிமிர்ந்திடச் செய்து, நிம்மதியான வாழ்வு பெற்றிட வழி காண வேண்டிய அரசுகள், கட்சிகள், தலைமைகள் இன, மொழி, மதச் சண்டைகளை மக்களுக்கு ஊட்டி அழிக்கிற பெருநாடாக உள்ளது இலங்கை. மனிதரை, முன்னேற்றமடையச் செய்யப் பயன்படவேண்டிய அனைத்து அறிவியலும் அங்கு இனவாதததைத் தூண்டுவதற்கே முடுக்கி விடப்பட்டுள்ளன. இதுமனிதரை பழைய படி மிருக நிலைக்கே கொண்டு போய்ச் சேர்த்து விடும் என்கின்றான் அவர்களின் சந்தர்ப்ப அரசியல்வாதி. அவர்களை விடவும் மிருகங்களாகிய நாம் கீழ்மையாக இருப்பதைப் போல... என்றது மூலையில் நின்ற முதிய எருது.

வரலாறு அறிந்த வயதான எருது அது.

முள்ளிவாய்க்கால் சண்டையினுள்ளும், நிலமுழுது உணவிடப் பாடுபட்ட என்னைப் பாதுகாப்பாக வளர்த்து, உணவிட்ட முற்போக்காளனும் அவரது மகனும் காணாமலாக்கப்பட்டு விட்டார்கள்.

முள்ளிவாய்க்காலின் ஓயாத குண்டு மழையும், அதற்குள் கேட்ட ஐயோ என்கின்ற பேரவலக் குரல்களும் இண்டைக்கும் என் செவியைவிட்டுப் போகேல்ல... அந்த அப்பாவிச் சனம் அந்தரிச்சுப் போய் நின்ற அவல நிலையை நான் என் இரண்டு கண்களாலும் பார்த்தேன். சிதறிப்போன உறவுகளின் எலும்பையும், சதையையும் கூட்டியள்ளி எடுத்துப் புதைக்கவும், எரிக்கவும் கூட ஆட்களில்லாமல் அங்கங்கள் சிதறி நிலமெல்லாம் வழிந்ததை பார்த்தவன்தான் நான் என்றது எருது.

அதன் கண்களில் நீர் வழிந்தது.

அட... இந்த துரோகிகளுக்காய் நீ ஏன் கண்கலங்க வேண்டும். இவங்கள் தானே எங்கள காலமெல்லாம் அடிமைகளாக்கி வைத்திருக்கிறவங்கள். உனக்கு இன்னமும் எஜமானிய விசுவாசம் விட்டுப் போகேல்ல என்றது எருதின் தலையில் குந்தி



யிருந்த சுடலையாகிய காகம்.

வருடாவருடம் கஞ்சி ஊற்றி இவங்கள் கொண்டாடுகிற அந்த முள்ளிவாய்க்காலை நீ கண்டவனோ... எண்டது வியப்பாக அண்மையில் பிறந்திருந்த வள்ளியெனும் ஆட்டுக்குட்டி.

காணாமல்...? அத்தனையும்... அத்தனை கொடூரமும் என் கண்முன்னால தான் நடந்தது... இந்தாபார் இந்தக் கொம்பு உடைந்து ஒரு பக்கம் எரிந்த காயம் இது. இந்தக் காயம் இப்ப எனக்கு ஆறிப்போச்சு. ஆனால் நான் பட்ட அவலம்...

என்னோட சோடியாய் உழுத மாடு என் கண் எதிரிலேயே செல் விழுந்து சிதறிப்போக, அதற்குள் நானும் செத்துப் போனேன் என்று தான் எண்ணினேன். ஆனால் அது என் கொம்போட போய்ச்சு... எருது பெருமூச்சுவிட்டது. எல்லா விலங்கும் அந்த அனுபவமிக்க எருதின் கதை கேட்க அதன டியில் திரண்டன...

இப்பிடித்தான்... இதேமாதிரி நெருக்குவாரம்தான். மண்ணைப் போட்டால், மண் நிலத்தில் விழாது... அந்தளவு சனங்கள், மிருகங்கள், வாகனங்கள் எனப் பெரு நெரிசல்... கண் மண் தெரியாது விழும் குண்டுகளுக்கும், செல்களுக்கும் மத்தியில் எங்கு போய் ஒழிவது? மரங்களுமற்ற பாழ்வெளி... வாகனங்க ளுக்கு கீழ், பதுங்கு குழிகளுக்குள் என்று பதுங்கிப் பதுங்கி அனைவரும் துடித்திறந்த அநியாயத்தை நான் கண்டவன்... 2009-ம் ஆண்டு மேயின் இறுதிக்கட்ட யுத்தக்களத்தில் முள் ளிவாய்க்கால், நந்திக்கடல், வட்டுவாகல் பகுதிகளில் வானைப் பிளக்கின்ற யுத்தச் சத்தங்களுள்ளும், பூமியைப்

போர்த்திய இரத்தச் சேற்றுள்ளும் எங்கே ஓடுவது என்றறியா மல் நான் ஓர் பேய் போல ஓடினேன். நீரைக் குடித்தாவது உயிர் தரிக்கலாம் எனில் இங்கே நீர்கூட இல்லாது அனைவ ரும் பரிதவித்தோம்.

உண்மையில் இன்னமும் எனக்கு அது மறக்க முடியாமல் உள்ளது. நிலத்தில் சிந்திக் கிடந்த கழிவு நீரில் ஒருபுறம் நானும்நாயும் நீரைக் குடித்துக்கொண்டிருக்க... அந்தச் சேற் றுக்குழியுள் கிடந்த நீரை அங்கிருந்த மக்கள் அருந்திய காட்சி, விலங்கும் மனிதரும் ஒன்றென உணர்த்திய தருணம் அது.

கேட்டுக் கொண்டிருந்த காகம் அப்படியொரு அவலம் இந்த மனிதப் பதர்களுக்கு வராதா என்றுதான் நானும் காத்திருக் கின்றேன் என்றது மகிழ்வாக...

எருது காகத்தை முறைத்தது...

உலகின் சோசலிச, முதலாளித்துவ, ஜனநாயக இரசாயனக் குண்டுகள் கூட்டுச் சேர்ந்து ஆதரவற்ற தமிழரை இரையாக்கி எரித்த நிலமது. இப்பெருங் கொடுமையை இந்த உலகம் ஏன் என்றும் கேட்கவில்லை, இற்றைவரை அதனை யாரும் ஏறெ டுத்தும் பார்க்கவில்லை.

குண்டுபட்டு மடிந்தவர் மண்ணில் சிதற, மருத்துவமனைக ளும் குண்டு வீசித் தகர்க்கப்பட்டது. படுகாயமடைந்த தோர்க்கு அங்கே அறுவை சிகிச்சை செய்துகொண்டிருந்த கடைசி மருத்துவரும் கொல்லப்பட்டார். அதன் பின் மருத்துவ மனையும் இல்லை.

'எம்மை விட்டு விட்டுச் செல்லாதீர்கள்... எங்களைக் காப்பாற் றுங்கள்.., இராணுவம் எங்களைக் கொன்றொழித்துவிடும், எங்களுக்கு உயிர் பிச்சை தாருங்கள்' என்று கதறக்கதற... உலகின் மனிதநேயப் பணியாளர்கள், மருத்துவர்கள், உதவி யாளர்கள், செஞ்சிலுவைத் தொண்டர்கள் என... எல்லோரும் விலகி ஓடிய வேளையது. விலங்குகள் நாம் கூட அந்த தரு ணத்தில் உதவ முடிந்தால் கூடயிருந்து உதவியிருப்போம். ஆனால் மனிதநேயமெனப் பேசும் இத்திருடர்கள் ஆட்களை அழிய விட்டுத் தாங்கள் தப்பித்துக்கொண்ட வேளையது.

இந்தக் கொடூர வேளையிலும் நிர்வாணமாக்கி காயப்பட்ட இளம் பெண்ணைப் புணர்ந்த ஓர் காமுகச் சிப்பாயின் பிட்டத் தில் என் ஒற்றைக் கொம்பால் குத்தி வீசி எறிந்துவிட்டுத்தான், நான் வந்தேன். எனக்கு உடம்பில் தென்பிருந்த தருணமது.

எங்கும் மனிதப் பிணங்கள்... உயிர்நீத்து வீழ்ந்துகிடந்த சட லங்களுக்கு மேலே, கால் இடற ஓடினோம். குழந்தைகள், முதியோர், பெண்கள், ஆண்கள், கோழிகள், மாடுகள், நாய் கள் அனைத்தும் பதைபதைத்தோடின. செத்து விழவிழ ஓடும் காட்சிகளும், மரண ஓலங்களும் இன்னமும் எனக்கு மறக்கமுடியாத ரணம். இறந்த தாயின் மார்பில் உயிரில்லை என அறியாமல் பால் உறிஞ்சிய பச்சைக் குழந்தையின் மேலாலும் பாய்ந்து ஓடினோம்...

இறந்த உறவுகளின் உடல்களைக் காலால் நகர்த்திவிட்டு குனியக்கூட இடமற்று ஓடிய கொடூரமது. இறந்தவர்களின் உற வுகளே இறந்தவர்களைத் தள்ளி விட்டு முன்னோக்கி உயிர் பிடித்தோடிய கொடுமை, அறம் பேசும் தமிழின வரலாற்றில் நடக்காத ஒன்று என்றார்கள். ஆனாலும் அன்று நடந்தது!

***சூரியன் எழாத காலையில்***
***மழை நனைத்த மண் உழுது***
***மனிதர்க்காய் தோட்டமிடும்***
***மாண்புள்ள காளைகள் நாம்***
***மாடி வீட்டு மனிதர்கள் தேநீரில் சுகம் காண***
***உடல் நோக உழைக்கிற கடும் உழைப்பாளி***
***புல்லினில் தான் எங்கள் பிழைப்பு***
***ஆனாலும் முணுமுணுப்பேதுமின்றி***
***இந்த மானிடர்க்காய் எம் வாழ்நாள் பூராவும்***
***ஏற்றம் இறைக்கிற எருதுகள் நாம்***
***பேருருவி நனைக்கிற பெருநிலமல்ல வன்னி***
***ஆனாலும் அந்தக் கல்லை, மண்ணை***
***உழுவதெம் கடனென்று***
***காலமெல்லாம் உழுது அந்த***
***மண்ணைப் பொன்னாக்கியவர் நாங்கள்***
***இங்கு தான் அந்த அக்கிரமம் நிகழ்ந்தது***
***சிந்தை பிளற வைத்த அந்நினைவை மறக்க***
***நினைக்கின்றேன் முடியவில்லை.***
***கொடு விஷக் குண்டு, கொட்டிய வானம்***
***விஷம் கலந்த காற்று...***
***தலையொடிந்த நெடும்பனைகள்...***
***குருதிப் பேராறும் ஓயாப் பெருமழுகையுமாய்***
***அம் மண்ணின் அனைத்தும்***
***என் கண்முன்னால் எரித்தழிக்கப்பட்டது.***
***மழை நனைக்க இனி மண்இல்லை***
***வெறும் மயானமே மீந்திருந்தது...***
***நான் உழுது களைத்த தேசம்***
***கருகிப்போனது...***

என்றது எருது! சூழ நின்ற விலங்குகள் விக்கித்து நின்றன.

இத்தனைக்குப் பின்னும்கூட தம்மனம் போன போக்கில், தானே பெரியவன் எனச் சொல்லி இந்த மக்களை ஏமாற்றத் தலைவர்களாக, தன்னின உண்ணிகளாக மாறி நிற்கின்றார் கள் இந்த மனிதர்கள். எமை உறிஞ்சும் இந்த உண்ணிகளிட மிருந்து விடுதலை பெறாமல் எமக்கு வாழ்வில்லை என்றான் பன்றியாகிய தேவன்.

நூற்றாண்டுகால சிங்கள இனவாத அரசியலும், இந்தியாவின் இந்துமா சமுத்திர பிராந்திய அரசியலும், அதன் பொருண்மி யப் போக்கும், முதலாளித்துவ உலக வல்லாதிக்கமும் தமி ழர் நிலத்தை தமிழர்க்கு என்றும் கொடுத்துவிடாது. அதற்குப் போராட்டமே வழியென்று போராடிய தமிழரின் போராட்டமே தோற்றுப் போனபோது... எம்முடைய மனிதர்க்கெதிரான விலங்குப் போராட்டம் வெற்றிபெறுமா? என்றது முள்ளி வாய்க்கால்ப் பெருமழிவைக் கண்டு பயந்து எல்லாவற்றிலும் நம்பிக்கையிழந்திருந்த அந்த முதிய எருது.

விலங்குகள் மௌனித்திருந்தன.

- தொடரும்



sithivinayagam@thaiveedu.com

# பவளவல்லி

## - அ. கந்தசாமி -



'பவளவல்லி பக்கத்து வீட்டை போய் இந்த கிண்ணியிலை நிரப்பி மிளகாய்த்தூள் வேண்டிக்கொண்டு வாடா. வீட்டிலை தூள் இடிக்கிற மனிசி நாளைக்குதான் வரும். நாளைக்கே திருப்பி தந்திருவம் எண்டு சொல்லு.'

ரெண்டு கன்னையளுக்கும் ஒரே ஆளாய் புளியம் கொட்டையளை வீசிப் பாண்டி ஆடிகொண்டிருந்த பவளவல்லி விளையாடியபடியே தாய் கூறியதைக் காதில் வாங்கிக்கொண்டாள்.

தாயார்தான் எப்போதாவது முழுப்பேரையும் சொல்லிக் கூப்பிடுவாள். இதனாலேயே அப்பெயர் இன்றும் வழக்கில் வாழ்கிறது. எல்லா வாய்களுக்கும் பவளம் எண்டு சொல்லியே பழகிப் போச்சு. நல்ல காலம், ஒரு சனமும் 'வல்லி' எண்டு கூப்பிடேல்லை. காலப்போக்கிலை அதுவே மருவி பல்லி அல்லது வில்லியாப் போயிருக்கும்.

பவளம் எழுந்து பாவாடையை உதறி, மேல் சட்டையை இழுத்துவிட்டு குசினியை நோக்கி நகர்ந்தாள்.

இன்னும் அவள் 'குந்தா'ப் பருவம்.

தொட்டாட்டுக் காரியங்களுக்கெல்லாம் தொட்டுக்கொள்ள பவளம் தாயாருக்குப் பக்கத்தில் வேணும். பள்ளிக்கூடம் காலை எட்டுக்குத் துவங்கி, மதியம் ரெண்டோடு முடிஞ்சு போகும். வெள்ளணவா புத்தகப் பையைத் தூக்கினாலும் தடுப்பார் இல்லை.

வீட்டுக்கு ஓடோடி வந்தால் புகை மண்டிய குசினிக்குள் அம்மா வெந்தது பாதி வேகாதது மீதி என அல்லாடிக் கொண்டிருப்பாள்.

'நீ வெளியிலை போய் கொஞ்சம் மூச்சு வாங்கு. மிச்சத்தை நான் சமைக்கிறன்' என்பாள். பவளத்தின் சமையல் ஓரளவு சுவையாகவும் இருக்கும். ஆனால் அவளுக்கு சமையலில் பெரிதாக ஈடுபாடு கிடையாது.

அவள் சிறியவள் ஆனாலும் சற்று விபரமானவள். வழக்கமாக தமிழ்த் தாய்க்குலங்களின் வேலைத்தளமான குசினியை அவள் தனக்கான தளமாகக் கருதவில்லை. தனக்கானதொரு பணி எங்கோ ஒரு இரண்டு இடுக்கில் சிக்கி தன்னைத் தேடும் என நம்புகிறவள் அவள். ஏதோவொன்று எங்கோ தன்னை அழைக்கும் அன்புக்குரல் மௌன ஒலியாக அவள் செவிகளுக்கு அடுத்தவருக்கெட்டா அலைவரிசையில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது என்ற உணர்வு அவளுக்குள் வந்துபோகும்.

வீட்டில் உங்கள் காலை சுற்றிக்கொண்டு முன்னாலும், பின்னாலும் சுற்றித்திரியும் நாயோ, பூனையோ சில சமயங்களில் செவிகளை நிமிர்த்தி எதையோ கேட்டதுபோல் காற்று வெளியில் மோப்பம் பிடிப்பதைப் பார்த்திருக்கிறீகளா ? அவையின் காதுகளில் விழும் ஒலி மனிதருக்குக் கேட்காது.

இதுபோல அவள் உள்ளத்தில் பல நூறு இனம்புரியா உணர்வுகள் குமைந்தபடி இருக்கும். அவற்றைப் பகுத்துப் பார்க்கும் பயிற்சி பவளத்துக்குப் போதாது. பாலுக்கு முலை தடவும் பாலகன் தவிப்பில் அவள்.

எதைச்செய்தாலும் உள் மனசு 'இது உன் வேலையல்ல' என்று கூறுவதை அவள் உணர்கின்றாள். அவளைத் தேடிய பணி பக்கத்து தெருவில் கதவு திறந்து அவள் வருகைக்காய் வழி வழிபார்த்து விழித்திருந்ததை அவள் அப்போது அறியவில்லை.

மனசோடு ஒட்டாத இயந்திரக்கதியால் பவளம் அலைக்கழிக்கப்பட்டாள் என்பதே உண்மை. இந்நிலை தொடர்ந்திருந்தால் மீள முடியா மனச்சிக்கலில் அவள் விழுந்திருப்பாள்.

சோர்ந்து அயர்ந்திருந்த ஒருபொழுதில் காலத்தின் கை எட்டி எழுத்தாணியை எடுத்தது.

மத்தியானச் சாப்பாடு முடிந்ததும் வீட்டின் நேரசூசையில் அம்மாவிற்கு ஒரு குட்டித் தூக்கத்துக்கான நேரம் ஒதுக்கப்படுவது வாலாயம். இடி விழுந்தாலும் உணரா உணவின் கிறக்



கம் தரும் தூக்கம் அது. உறக்க நேரம் அண்ணளவில் ரெண்டு, மூன்று மணத்தியாலங்களுக்கிடையில் மாறுபடும்.

உண்டபின் உலாவர பவளத்திற்கு இது உவப்பான நேரம்.

இதே தெருவில் மேற்காகச் சில குறுக்குத் தெருக்களைத் தாண்டினால் கோபுர வளைவில் குட்டித் தேர்முட்டியோடு பெருமாள் கோவில் தெரியும். கோவிலைச் சுற்றிக் குடிசைக ளின் கணியத்தில் கோயில் குருக்களில் இருந்து பணியாளர்

கள் பலரும் வாழும் ஓடு வேய்ந்த வீடுகள், அடுக்கிய தீப்பெட்டிகளாய் தெரியும்.

அத்ததையதொரு தீப்பெட்டி வீட்டில்தான் அந்தக் கோயில் நாட்டியக்காரியும் இருந்தாள். ஊர் உலகத்தில் வழங்குவதைப் போலச் சொன்னால்த்தானே உங்களுக்குப் பிடிபடும்.

‘சின்னமேளம்’. அவளுக்கும் ஒரு பெயர் இருந்தது ‘அமிர்தா’.

அமிர்தா குடும்பத்திற்கும் பக்கவாத்திய கோஷ்டிக்கும் பல தீப்பெட்டி வீடுகளைக் கோவில் நிர்வாகம் தாராளமா ஒதுக்கி இருந்தது. தங்கத்தால் இழைத்த பற்கள், மார்பு தழைந்த அணிகலன்கள், தொந்தி சரிந்த வயிறு என அச்சுற்று வட்டார நரைத்த தலையர்கள் வருவதும் தங்கிப்போவதும் வாடிக்கை.

இதெல்லாம் அமிர்தாவிற்குக் கொசுக்கடியைப்போல. இதைச் சனங்கள் யாருமே கண்டுகொள்வதில்லை. கண்டவரும் விண்டதில்லை.

அமிர்தாவின் தாயார் படு உசார் பேர்வழி.

பக்கத்திலேயே ஒரு நாட்டு வைத்தியர் குடும்பத்தையும் குடியிருத்தி கோயில் குடிமைகளில் ஒன்றாக்க வைத்தியர் ஊர் முழுக்க பிரபலமானார்.

இப்படிப் பல்வேறு தொடர் நியாய நியதிகளால் அமிர்தாவின் குடியிருப்பில் சனசந்தடி அதிகம். பொழுதுபோகாமல் ஒரு நாள் பவளம் அமிர்தாவின் வாசலில் நின்று எட்டி விடுப்புப் பார்த்தபோது உள்ளே வரச்சொல்லி அழைப்பு வந்தது. பவளம் இப்படியான திடீர் திருப்பங்களுக்குப் பழக்கப்படவள் அல்ல. ஓடிவிடலாம் என்று வீட்டுப்பக்கமாக திரும்பினாள்.

காலம் போட்ட கணிதமோ வேறு.

‘இவவை பெரிய வடிவெண்டு நினைச்சுத்தானே இங்கை வைச்சிருக்கினம். அப்பிடி பெரிசா என்னத்தை வைச்சிருக்கிறா எண்டு பாப்பம்’ என்றதொரு தேவையற்ற நினைப்பு அவள் மனதில் தோன்றியது.

நினைப்புதானே பலரது பிழைப்பிலும் மணல் தூவி விளையாடுகிறது.

‘ஏன் வாசலிலை நிண்டு எட்டிப்பாக்கிறாய்? உள்ள வா’ நாட்டியக்காரியின் குரலாகத்தான் இருக்கவேண்டும்.

‘விடுப்புப் பாக்கிறன்’ எனத் தனக்குள் சொல்லிக் கொண்டாள். உண்மையைச் சொல்லிறது உவப்பானது. மூளைக்கு வேலை தராதது.

பொய் சொல்வதற்குப் பல அகப்பைகள் வேண்டும். சுறண்டி அள்ளுவதற்கு நிறையச் சட்டிகளும் வேண்டும். எப்போதும் எதையும் எடுக்கலாம். எதையும் துளாவலாம். ஒன்று காலை வாரினாலும் இன்னொன்று. அதுக்கு இயல்பாவே கொஞ்ச நரித்தனம் நுனி விரலில் இருக்கவேண்டும்.

இந்த விசயத்தில் பவளமும் ஒரு வித்தைக்காரிதான்.

உள்ளேயிருந்து ஒரு வயதானவர் வாசலால் எட்டிப் பார்த்தார். அவர் முன் தலை நடுமண்டை வரை வழித்து எஞ்சிய மயிர் பின்தலையில் கொண்டையாய் முடிக்கப்பட்டிருந்தது.

‘தங்கச்சி கூப்பிடுது. உள்ளை வா பிள்ளை. மெதுவா, படி தடக்கும் கவனம்’

பவளம் வாசல் கடந்தாள்.

அமிர்தாவின் வயதை ஊகிக்க பவளத்துக்குப் பிராயம் பத்தாது.

அமிர்தா நல்ல சிவப்பாக இருந்தாள். சுண்டினால் பட்ட இடம் கண்டிப்போகும் என்பதுபோல் கடும் சிவப்பு. அதுவே அவளது மூலதனமும் கூட. ரிங்கர் வேலை செய்த கார்கள் வெளியில் பளபளப்பாத்தானே தெரியும்.

பவளத்தை பார்த்ததும் அமிர்தா மலர்ந்து புன்னகைத்தாள். மேல் வாய் நடுப்பல்லு தங்கத்தால் இழைந்து பளபளத்தது.

தரையில் சம்மணம் கொட்டி சுவரோடு சாய்ந்து இருந்த அமிர்தா சற்று நிமிர்ந்து தன் முன்னால் அமரும்படி சைகை செய்தாள்.

‘சொல்லுங்கோ தங்கச்சி... என்ன விசயம்’

பவளத்திற்கு உடனடியாக வார்த்தைகள் வரவில்லை.

வாய்க்குள் குமைந்த சில பொய்களுக்கு வார்த்தைகளால் வசியம் பூசினாள்.

‘எனக்கு டான்ஸ் பழக ஆசை. வீட்டை சொன்னா ஒத்துக் கொள்ளாயினம். அதுக்கு எங்களிட்டை வசதியும் இல்லை’

‘டான்ஸ் பழக ஆசை’ என்பது நீலம் போட்டுத் துவைத்தெடுத்த வெள்ளைப் பொய்.

அமிர்தா தன் புன்னகைளைச் சுருக்காமல் கையில் இருந்த தப்பளாக் கட்டைகளை எடுத்து தா...த...தெய், தக...தக... தெய்... என்று சில தாள சுரங்களை ஒலித்துக் காட்டி, ‘எங்கே இந்த சுரங்களை இக்கட்டைகளில் வாசித்துக்காட்டு’ என்று பவளத்திடம் கொடுத்தாள்.

அமிர்தாவிடம் நாட்டியம் பழக சிலர் வந்து போயிருக்கின்றார்கள். ஆனால் இப்படி யாரும் வந்ததில்லை. இது பழகுவதற்கான முறையும் இதுவல்ல. இவள் பொய்யோடு வந்திருக்கின்றாள், நிலைத்துப் பழகப்போவதில்லை என்றுதான் அமிர்தா நினைத்தாள். அந்த நினைப்பு அவளுடைய நக்கல் தோரணையூடாக வெளிப்பட்டது.

பவளம் கையில் கிடைத்த தப்பளாக் கட்டைகளைப் பார்த்தாள். மனதுக்குள்ளும் உடலிலும் ஏதோவொரு பரவசம். பவ

ளத்துக்கு பல்லாங்குழி ஆடும் கட்டைகள் போல் தெரிந்தது. பவளத்திற்கு சோழி போட்டு விளையாட ஒரு தோழி கிடைத்த புழுகம். அமிர்தா செய்ததை உற்றுக் கவனித்தவள் பவளம். அவ்வாறே கட்டைகளை மாற்றித் தாளமிட்டாள்.
அமிர்தா அசந்துதான் போனாள்.

'உமக்கு அட்சர சுத்தமா தாளம் வருகிதே. முந்தி யாரெட்டை யாவது படிச்சீரா'

'இல்லையே... இந்த மரக்கட்டையளை இண்டைக்குத்தான் பாக்குறன், தொடுறன். இதுகளின்ரை பெயரைக்கூட இது வரை கேள்விப்பட்டதிலை'

அமிர்தா பவளத்தை விந்தையாகப் பார்த்தாள்.

எதிர்ச் சுவரோடு சாய்ந்து வயலின் பிருடைகளை முறுக்கிச் சுருதி சேர்த்துகொண்டிருந்த, முன்வழுக்கை பின்குடுமிப் பெரியவர் உரத்து செருமி இருவரையும் தன்பக்கம் ஈர்த்தார்.

பரவச நிலையில் இரண்டு கரங்களையும் விரித்து உயர்த்திய வாறு இருந்தார் பெரியவர்.

'அம்மா இது பூர்வஜென்ம புண்ணியம் தாயே. இந்தப் பொடிச்சி ஒரு துரும்பையும் இந்தப் பூமியிலை இருந்து எடுக் கேல்லை. பிறக்கேக்கயே கொண்டு வந்திருக்கிறாள். நீ கற்ற கலைகள் உன்னோடை போயிடுமே எண்டு அடிக்கடி புலம்பு றனி எல்லோ. பெருமாளுக்கும் அது கேட்டிட்டுது போல. இவ ளைச் சிக்காராய்ப் பற்றிக்கொள்ளு.

நீ இவளுக்குள்ளை நிண்டு விகாசிக்கப் போறாய். இந்தப் பூமியிலை கிலிசைகெட்ட நடத்தைகளால தடம்பிரண்டு போன உன்ரை வாழ்க்கையை பெறாமகளா இருந்து அழிச்சு எழுதப் போறாள். இவள் பெருமாள் உனக்களிச்ச புதைய லெடி. கோரிக்கை அற்று காலடியிலை கிடக்குது. விட்டு டாதே. கட்டியணைத்துகொள்'.

உரத்த குரலில் யாரோ சொல்லித்தரத் தர, தான்கேட்டு ஒப் பிப்பது போல் சொல்லி முடித்த மனிதர் வியர்த்துக் களைத்து சுவரோடு சாய்ந்தார். அமிர்தா கொடுத்த நீரைப் பருகி சற்றே தெளிந்தார்.

பவளம் கட்டைகளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

பவளம் தேடிய, பளவத்தைத் தேடிய பணி இது தானோ? தாயின் உறக்க நேரம் பெருவாய்ப்பாக அமைய, ஆடல் பயற் சிக்குள் ஆழந்து போனாள் பவளம்.

காலம் கங்கை நீர் போல் குதித்து கும்மாளமிட்டு ஓடிக் கொண்டுதான் இருந்தது. மனிதர்கள் வழக்கம்போல் அவரவர் பாடு.

அமிர்தாவின் உச்சந்தலையில் வெண் கோடுகள் நெளிந்தும், நீண்டும் படர்ந்து பரவிக்கொண்டிருந்தன. பவளமும் 'குந்தி' யிருந்து எழும்பி விட்டாள். ஆடலுக்கு வாளிப்பான பருவமும் உடல்வாகும் அவளுக்குக் கனகச்சிதமாக இருந்தது. அறிவும் மனதும் கூடச் சற்றே பக்குவ நிலையை எட்டியிருந்தது.

பவளத்தின் நடனப் பயிற்சி இடைவெட்டு இன்றி தொடர்ந்தது. ஆடத் தெரிந்தவர்க்கு பாடவும் தெரிய வேண்டும் என்பதால் ஸரிஹமபதநியும் கற்கைநெறியுள் புகுத்தப்பட்டது.

தடையில்லாமல் வாழவிட்டால் தமிழன் ஏன் புலம்பெயரப்போ றான்? வினை வீட்டினுள் விளைந்தது.

'எடியே நான் கேள்விப்படுறதெல்லாம் உண்மையாடீ'

அம்மா, என்ன சொல்ல அடியெடுக்கிறாள் என்பது பவளத் திற்கு தெளிவாகவில்லை.

'நீ என்னம்மா சொல்ல வாறாய்?'

'ஓ... வாயுக்கை விரலை வச்சா சூப்பத் தெரியாத தவ்வல். ஏனடி அந்த நடத்தை கெட்டவளின்ரை வீட்டுக்கெல்லாம் போய் அங்கையே அடுகிடை படுகிடையா கிடக்கிறாய். சனங் கள் பேசுறதை கேட்டா நாக்கை பிடுங்கிக்கொண்டு நாண்டு கொள்ளலாம் போலெயிருக்கு.' இதுக்கு நல்ல சூடு நாக் கிலை இழுத்தாத்தான் அடங்கும்.

நெடும் காலமாய் நெஞ்சுக்குள் குத்தி இருந்த முள்ளைப் பிடுங்கி எடுத்தாள் பவளம்.

பெற்ற தாயிடம் நெத்திக்கு நேராக கேட்கக் கூடதவை என்று பொட்டளம் கட்டி பொதிந்து வைத்துள்ள தொன்மத்திலி ருந்து ஒரு அஸ்திரத்தை எடுத்தாள்.

'அம்மா கனகாலமா கேக்கவேணும் எண்டு இருந்தனான். எங் கடை அப்பா ஏனம்மா உன்னையும் என்னையும் விட்டிட்டுப் போனவர். இந்தச் சனங்கள் என்ரை காதுபடப் பறையிறத நானும் கேட்டுக்கொண்டுதானே திரியிறன். நான் எதை பிடுங் கிக்கொண்டு சாகிறது...'

அம்மாவின் முகம் அமாவாசை நிலாவாயிற்று.

நான் என்ன செய்ய? எல்லாத்தையும் மறந்து விலத்தித்தான் போக விரும்புறன். விடுகிதுகளா என்னை? சொற்களும் கண் களும் தளும்ப நின்றாள் அம்மா.

'பாவம் அம்மா. அவள் கடந்து வந்த நெருஞ்சிப் பற்றைகளில் முந்தானையை இழுத்து நிக்க வைப்பது கொடிய பாவம்' என பவளத்தின் உள்மனம் உறுத்தியது. தான் இதைக் கேட்டிருக் கவேண்டாமோ எனத் தோன்றியது பவளத்துக்கு.

'அம்மா முந்தி நடந்தவை எல்லாம் கிடங்கிலை போட்ட குப்பை கூழங்கள். கிண்டிப் பாக்கப்போனா நாறும். அப்ப டியே விட்டிட்டா அது பசளை. நீ பயப்படாதை உன்னை விட் டிட்டு எங்கேயும் ஓடிபோக மாட்டன்.

எல்லா வீடுகளுக்கும் வாசற்படியள் இருக்கும். பல்லாயிரம்

கால்கள் வந்து போயிருக்கும். நீயும் கவலைப்படாதை. என்னையும் வதைக்காதை. என்ரை போக்கிலை என்னை போக விடு. ஊர்... கண்டறியா ஊர். நாத்தமெடுத்த வாயால கிடைக்கிறதெல்லாத்தையும் சப்பித் துப்பிக்கொண்டிருக்கும். உங்களுக்கு எண்டைக்கும் நான் இருப்பன்'.

அன்று மௌனமான அம்மா... பின்னர் இதைப்பற்றி எதும் பேசியதாக இல்லை. ஊர் வாயின் நாற்றத்தைப் பொருட்படுத்தும் எல்லையை இருவருமே கடந்துவிட்டிருந்தனர்.

ஆடல் கலை பவளத்தைத் தத்தெடுத்துக்கொண்டது. அக்கலைக்குள் தன்னை வளர்த்தாள்.

இப்போதெல்லாம் அமிர்தாவின் நாட்டிய வகுப்புகள் பவளத்தின் நட்டுவாங்கத்தில் தொடர்கின்றன. பவளத்தின் வளர்ச்சி ஊருக்குள் பேசப்பட்டிருக்க வேண்டும். ஆடல் வகுப்புகளுக்கு அதிகளவில் பிள்ளைகள் வரத்தொடங்கினர்.

அமிர்தாவிடத்தே ருசி கண்ட நரைத்தலையர்களின் 'ஆண்' தன வாரிசுகள் சில, பவளத்தின் வாளிப்பில் வாயூறி தெருக்களில் வழிந்தார்கள். ஓரிருவர் அமிர்தாவின் வீட்டின் முன்னால் அடிக்கடி அரட்டையடிக்கத் தலைப்பட்டனர்.

ஒருநாள் வகுப்பு முடிந்து பவளம் வெளியே வந்தாள். அவ்வேளை வீட்டின் முன் கூடியிருந்த மைனர் குஞ்சுகளில் ஒன்று, ஏதோவொன்றைக் கூறிச் சத்திமிட, ஏனைய குஞ்சுகள் கொக்கரித்தன.

அருகே ஓடிக்கொண்டிருந்த ஒரு தெருநாய் பவளத்தின் கண்ணில் பட்டது. பவளம் செருப்பைக் கழற்றி அந்த நாயில் படாதவாறு எறிந்தாள். 'எட சனியனே... இனி இந்தப் பக்கம் வந்தால் செருப்பால அடிச்சுக் கொல்லுவன், வால் இருக்குது எண்டுறத்துக்காக எனக்கு முன்னால ஆட்டாத, அறுத்துப் போடுவன்' என்று காட்டமாய்க் கத்தினாள். அமிர்தாவின் சீரழிவும் தாயின் வாழ்வும் கண் முன்னால் தோன்றி மறைந்தன.

அன்று ஒடுங்கிய மைனர் குஞ்சுகள், பவளம் நடமாடும் தெருக்களைக்கூட மறந்து போனார்கள்.

இச்செய்தி ஊர் முழுக்கப் பரவ, ஊர்ப் பெண்கள் கூடச் சற்றே பவளத்தை மதிக்க ஆரம்பித்தார்கள். ஆடல் வகுப்புகளும் வளர்ந்தன.

ஒருநாள் முன்வழுக்கை பின்குடுமி பெரியவர் பவளத்திடம் ஒரு கருத்தை முன்வைத்தார்.

'பிள்ளை எதைச் செய்தாலும் அதுக்கு ஒரு பெறுமதி இருக்க வேணும். அமிர்தம் சொன்னால் கேக்க மாட்டாள். நீ பிள்ளையளை அதுகளாலை இயண்டதை தரச்சொல்லு. வற்புறுத்த வேண்டாம். ஓசியிலை கிடைச்சா இந்த சனங்கள் தூசாயும் மதியாதுகள். அந்த காசை வச்சு வசதி குறைந்த பிள்ளையளுக்கு உதவியளைச் செய்.'

அவள் எதைச் செய்தாலும் அவரது காதில் ஒரு சொல்லைப் போட்டு, அவர் தலை நிலைக்குத்தாய் தலையை அசைத்த பிறகே அதைச் செய்வாள்.

அவர் கிடையாக அசைந்தாலும் கண்களை மூடிக்கொண்டு ஒத்திசைவதில்லை. அதற்கான விளக்கங்களையும் விபரங்களையும் ஆராய்ந்து விவாதித்து நல்ல முடிவை எட்டும்வரை வாதிடுவாள். இத்தன்மையை இயற்கை அவளுக்குள் இயல்பாகவே வளர்த்தது.

காலம் தன் கடமையைச் செய்துகொண்டிருந்தது. அமிர்தாவின் உடல் தளர்ந்து தள்ளாடும் நிலை. அடுத்தவர்கள் உதவியின்றி நடப்பதற்கும் சிரமப்பட்டாள். பவளம் அவளோடு செலவிடும் நேரத்தை அதிகப்படுத்த வேண்டியிருந்தது.

அவளுடைய படுக்கையில் பாதியை தான் பகிர்ந்தாள். ஒரு நாள் அமிர்தா குலப்பன் காய்ச்சலில் பற்கள் கிடுகிடுத்து உடல் நடுங்கி உதறலெடுத்தபோது அவளை தன்னோடு இறுகப் பற்றி அணைத்தபோது இரு உடல்களையும் ஒருடலாக்கிக் கொண்டாள். பவளத்தின் உடற்சூடு அவளுக்கு இதமாக இருந்தது.

நோயும் நலிவும் அமிர்தாவை வாட்டின. பவளத்தின் பரிவும் பராமரிப்பும் வாழ்நாட்களை நீடித்தாலும் காலன் காத்திருப்பானா? அமிர்தாவின் நாட்கள் எண்ணப்படுவது அந்தக் கிராமத்தாருக்கு, குறிப்பாக அவள் உடலை உண்ணிகளாய் உறுஞ்சி சுவைத்த ஒட்டுண்ணிகள் எல்லாருக்கும் நன்றாகத் தெரியும். ஒரு நாயும் எட்டிப்பார்க்கவில்லை. பவளத்தின் மனத்தில் வன்மம் காட்டுத்தீயாய்ப் பற்றி எரிந்தது.

பவளத்தின் உடற்சூட்டில் உறங்கிய அமிர்தா ஒரு சூரிய விழிப்பில் தான் விழிக்க மறந்தாள்.

இதன் பின்னர் அமிர்தாவின் வீடே பவளத்தின் வாசஸ்தலம் ஆயிற்று. அமிர்தாவின் பெயரில் ஒரு நாட்டிய அரங்கம் ஒன்றை நிர்மாணித்தாள். திறப்புவிழாவை மூன்று நாள் நிகழ்வாகக் கொண்டாடினாள்.

'சின்னமேளம்' என்ற சிறிய பரப்புக்குள் சுருக்கப்பட்டிருந்த பெருங்கலையைப் பொதுவெளிக்கு எடுத்து வந்தோர் வரலாற்றுக்குள் பவளத்துக்கும் ஓரிடம் இருக்கும்.



kandasamy.a@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***

# நகரும் வீடு

– கிறிஸ் லீ

தமிழில் : என்.கே. மகாலிங்கம்

உடன்பிறப்புகள் தங்கள் தாயைத் தேடிச் சென்ற அந்த நாளில் உறைபனி வடக்கே இருந்த சுரங்க நகரத்தை விழுங்கியிருந்தது.

வீடுகள் ஆவிகளைப் போல தோன்றின. அரசாங்கத்தின் முகம் எல்லாவிடமும் இருந்தது. கடற்கரையில் ஒதுங்கிய வண்டியின் பக்கங்களில், அஞ்சல் அலுவலக வாசலின் விட்டத்தில், சிதறிக் கிடந்த சுலோக அட்டைகள் சூழ்ந்துள்ள மலைகளில் அன்பான தலைவன் கிம் யொங்-இல் ஐ புகழ்ந்து எழுதியிருந்தவைகளில் என்று எல்லா இடமும். மூத்த சகோதரன் வொஞ்சியோலின் முதுகில் கட்டியிருந்த தானியச் சாக்கில் அவர்களின் நொண்டி சகோதரி இருந்தாள். அவளின் எடை ஒரு சில புத்தகங்களின் எடைதான் இருக்கும்.

இளைய சகோதரன் சோச்சியோல் முன்னால் ஓடிக் கொண்டிருந்தான். குழந்தையைப் போல அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் முகம் சுளித்தான், வொன்ஜியோல். ஆனால் அவனும் இன்னும் ஒரு குழந்தை தான். அவனுக்கு பதினொரு வயது. இரண்டு வருடமாக வேக வைத்த மரப்பட்டை, பிசைந்த வேர்கள், இடைக்கிடை உண்ணும் வறுத்த எலி இறைச்சி, தடியில் பொரித்த சில்வண்டுகள் போன்றவற்றில் அவனுடைய உடல் வாடி வதங்கிக் கொண்டிருந்தது. கடந்த மாதம் கழுத்தில் எலும்பு மாலைகள் போட்டிருந்த இரண்டு மனிதர்களை, அவர்கள் தங்கள் பெற்றோரை உண்டதற்காக இழுத்துக் கொண்டு போவதையும் அவர்களைத் தூக்கில் இட்டதையும் நகரத்தில் உள்ளவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதனால் அவ்விடத்தால் போகப் பயந்து சதுக்கத்தின் ஊடாக நடக்கத் துவங்கினார்கள். அப்போது ஒரு வியாபாரியும் ஒரு பெண்ணும் பைத்தியத்தின் உச்சத்தில் பேரம் பேசினார்கள். அவர்களையும் கடந்து அவர்கள் சென்றார்கள். வைக்கோல் பாய் ஒன்றில் மேல் உறைந்த மாட்டிறைச்சிப் பக்கவாட்டுத் துண்டொன்றை அவர்கள் கண்டார்களா? அல்லது அது மனித இறைச்சியா? எவருக்கும் அது என்னவென்று தெரியாது. ஆனால் அவர்களுக்குத் தெரிந்தது போல நடித்தார்கள்.

‘அவள் நாங்கள் போகும் வேகத்தைக் குறைக்கிறாள்,’ என்றான் சோச்சியோல், வட்டமடித்து திரும்பி வந்து. ஓர் அறை முழுவதிலும் உள்ள தொலைந்து போன குழந்தைகளின் புலம்பல் போல அவன் குரல் இருந்தது. ‘நாங்கள் சீனாவுக்குப் போவதற்கு முதல் செத்துப் போவோம்,’ என்றான் சோச்சியோல்.

‘வாயை மூடு,’ என்றான், வொன்ஜியோல், தன் சகோதரனின் சப்பாத்து கயிறுகளை வில் வடிவில் கட்டிக் கொண்டே. இளம் குழந்தைகள் மூத்த குழந்தைகளுக்குக் கீழ்ப்படிந்தார்கள். மூத்த குழந்தைகள் தாய்க்கு கீழ்ப்படிந்தார்கள். தாய் தந்தைக்குக் கீழ்ப்படிந்தார். தந்தை அன்பான தலைவனுக்குக் கீழ்ப்பணிந்தார். அன்பான தலைவன் பிறந்தபோது வானம்பாடிப் பறவை ஒன்று சொர்க்கத்திலிருந்து கீழிறங்கி வந்தது என்றும், அன்பான தலைவரின் முன்னிலையில் மரங்கள் பூத்துக் குலுங்கின என்றும், உறைபனி கரைந்தது என்றும் பள்ளிக்கூடப் பாடநூல்களில் எழுதப்பட்டிருக்கின்றன. இராணுவ வீரர்கள் காவல் காக்கும் சமன் மீன்பிடிக்கும் இடத்தையும் நகரத்தின் காய்கறித் தோட்டங்களையும் அவர்கள் பிடிவாதமாகப் புறக்கணித்து வேறு ஒரு பக்கத்தால் சென்றார்கள். அதன் ஊடாக ஊடுருபவர்களை கண்டவுடன் இராணுவத்தினர் சுட்டுத் தள்ளினார்கள். ஏனென்றால் அங்கே எல்லாவற்றிலும் ஓர் ஒழுங்கு முறை இருந்தது. அல்லது அப்படி முன்பு இருந்தது.

அவன் மூத்த அண்ணன் என்ற தன்னம்பிக்கையுடன் தன் உடன்பிறப்புகளை வெறும் கருங்கற்களும் பேய் மரங்களும் உள்ள மலைச் சரிவின் மேலாக அழைத்துச் சென்றான். அத்தனை உறுதி அவனுக்கு இருந்தபடியால் தான் கால்கள் இலேசான எடையால் நடுங்கியபோதும் தன் வேகத்தைக் குறைக்காமல் நடந்தான். சீனாவுக்குப் போகும் ரூமென் ஆறு கடக்க முடியாமல் உறைந்து போயிருக்கும். இருந்தும் அவன் அதைக் கடக்கத் தேவையான தியாகங்களைச் செய்ய ஆயத்தமாக இருந்தான்.

சோச்சியோல் அவன் முன்னால் நடந்தான். அவனுடைய மூக்கு கருவாலிக் கொட்டைகளைத் தேடிக் கொண்டிருந்தது. அவனுடைய சப்பாத்துக்கு அருகில் ஒரு கொட்டை கிடந்தது. அதை வொன்ஜியோல் குனிந்து எடுத்தான். அண்ணன் ஆழமான காட்டுக்குள் போய் கருங்கல் குன்றின் மேல் தன் சகோதரியைத் தூக்கி வைக்கும்வரை காத்திருந்தான். அதை ஒரு பாறையில் வைத்து உடைக்கும்வரை அவளின் மேல் அன்பு காட்டும் ஒருவன் தனக்கும் தருவான் என்ற எதிர்பார்ப்புடன் அவள் அதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் கொட்டையின் தடித்த தோலை நீக்கி மெல்லிய துண்டாக பிரித்து ஒவ்வொன்றாக அவளுக்குக் கொடுத்து தன் வாக்குறுதியை

நிறைவேற்றிக் கொண்டான். கருவாலிக் கொட்டையின் சதை சுருங்கி சாம்பல் நிறத்தில் எலியின் மூளை அளவு சிறிதாக இருந்தது. அதை அவன் துல்லியமாக மூன்றில் ஒரு பகுதியாக உடைத்தான். பெரிய துண்டை குக்வாவின் திறந்திருந்த வாய்க்குள் ஊட்டினான். அவனுடைய கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. கொட்டையில் சதை, புழு இல்லாமல் நன்றாக இருந்தது.

ஒபா -அண்ணே, பறவைகள் எங்கே?' என்றாள் குக்வா, அவளுடைய மூச்சு நோய்வாய்ப்பட்ட சீற்றொலியாக ஒலித்தது.

'பாபோ, முட்டாளே, இப்போ அவை வருவதற்குரிய காலம் அல்ல. இது மிகவும் குளிர் காலம்.' இன்னும் அவள் அவனை நம்பியதை நினைத்து அவன் கோபப்பட்டான்.

பின் அவள் தாகமாக இருப்பாள் என்பதை நினைத்து உறைபனியைக் கையில் எடுத்தான். அதை அவனுடைய உள்ளங்கையிலிருந்து அவள் நக்கினாள்.

'ஒபா, இது குளிருது.' விறைத்து மஞ்சளாகிப் போன நாக்கை வெளியே நீட்டிக் காட்டினாள். அதைப் பரிசோதிப்பதற்காக. 'ஒபா,' என்றாள் திரும்பவும். சற்று புன்னகைத்தாள். அவன் சொல்லும் சொற்கள் அண்ணன் விரும்பும் பாடலில் உள்ள சொற்கள் என்று எண்ணினாள்.

அவளுடைய முகத்தை அவன் தன் கையுறைகளால் துடைத்தான். அவளுடைய கைவிரல் நகங்களின் கீழ் உள்ள உறைபனியை பைன் மர ஊசிகளால் மெதுவாக சுரண்டி எடுத்தான். சீனாவுக்குப் போகும் நீண்ட நடைப்பயணத்தில் அவளைத் தூக்கி செல்வது எத்தனை சாத்தியமற்றது என்பதை அவன் தனக்குத்தானே நினைவூட்டிக் கொண்டான். பின் தன் கண்களை மூடிக் கொண்டு, தன் தாயின் கழுத்துத் துண்டை குக்வாவின் கழுத்தைச் சுற்றி திருகி அவளை மூச்சுத் திணறக் கட்டினான். அவள் பயப்பட்டுச் சாவதிலும் பார்க்க, பட்டினியால் மெதுவாகச் சாவதிலும் பார்க்க, மெதுவாக இப்படிச் செய்வதுதான் சரி என்று நம்பினான். அவள் அசையாமல் இருக்கும்வரை அவளின் கழுத்தைக் இறுக்கினான்.

என் மூத்த மகனே, தயவுசெய்து எனது சுயநலத்தை நீ மன்னித்துக் கொள். இப்போ நீ தான் அவர்களுக்குத் தாயும் தந்தையும், என்று தாய் ஒருமுறை எழுதியிருந்தாள். கொரிய யுத்தத்திற்குப் பின் எதிரி வகுப்பினருக்காக உருவாக்கிய அந்த நகரத்தில் விதவையான அவர்களின் தாய் தன் உடலை விற்று தன்னை அசுத்தப்படுத்தி மூன்று குழந்தைகளுக்கும் உணவளித்து வந்தாள் என்ற வதந்தி அங்கு உலாவியது. அவர்களின் தாயார் ஒரு கிழமைக்கு முன் ஓடிப் போய் விட்டாள் என்பதைக் கேட்டு ஒருவர் கூட ஆச்சரியப்படவில்லை. அரசாங்கம் அந்த நகரத்திற்குக் கொடுத்த உணவுப் பங்கீட்டை முற்றாக நிறுத்திய பின் ஆயிரக் கணக்கானவர்கள் சீனாவுக்கு தப்பி ஓடுவதைப் போல அவளும் அவர்களைப் பின்பற்றித் தப்பி ஓடி விட்டாள். பசி மக்களை மாற்றியது. பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும், முதியவர்களுக்கும் இளையோருக்கும் இடையில் இருந்த பலமான பந்தத்தை அழித்தது. தன் உடலை விற்று அவமானப்பட்ட அவள் ஏற்கெனவே மனம் உடைந்திருந்தாள். ஒருத்தன் மூன்று நாட்கள் பசியுடன் இருந்தால் அவன் எல்லாவற்றையும் கற்பனை செய்வான் என்பது ஒரு பழமொழி. ஆனால் வொன்ஜியோல் தங்கள் தாயைக் கண்டுபிடிப்போம் என்று நம்பினான். ஆகாயத்தையும் உறைபனியையும் நம்பியது போல அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தான் அவர்களைப் பட்டினி போட்டு நாட்டையே இல்லாமல் செய்கிறார்கள் என்று அன்பான தலைவர் சொன்னதை அவர்கள் நம்பினார்கள். தாய் இல்லாமல் இருப்பதைப் பற்றி அவனால் சிந்திக்கவே இயலவில்லை. அவன் தன் தங்கையைக் கூட அதற்காகத் தியாகம் செய்தான்.



கிறிஸ் லீ தென் கொரியாவின் தலைநகரான சோலில் பிறந் தார். கலிஃபோணியா, வோஷிங்டன் ஆகிய இடங்களில் வளர்ந் தார். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் கல்வி கற்றார். இப்பொழுது சோலில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் ஊடகவியலாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும், சிறுகதை, நாவல் ஆசிரியராகவும் உள்ளார். 2006-ல் Best New American Voices-ல் இறுதிப் போட்டியாளராக தெரிவுச் செய்யப்பட்டார். இவர் Shifting House - A Short Story Collection, 2012, How I Became a North Korean - a novel in 2016 ஆகியவற்றின் ஆசிரியர். Centre for First Time Novel, BBC International Story Prize ஆகிய பரிசுகளையும் பெற்றுள்ளார்.

அவன் தூக்கி வைத்திருந்த சாக்கு ஒரு வீட்டின் பாரம் போலத் தோன்றியது. வொன்ஜியோல் தன் திட்டத்தைக் கைவிடவில்லை. அவளின் உடல் உள்ள அந்த சாக்கை, பாறைகள், மலை முகடுகள் ஊடாகத் தூக்கிக் கொண்டு முடிந்தவரை நடந்தான். கைகள் எரிந்தன. வெண்ணிற சூரிய ஒளியில் அவனுடைய கன்னத்து எலும்புகள் இழுபட்ட தோல் ஊடாக ஓரளவு தெரிந்தன. குக்வாவின் கைவிரல்கள் இன்னும் அவன் முதுகைப் பிடித்துக் கொண்டு பேய் போல ஆட்டிக் கொண்டிருந்தன.

'என்ன செய்யலாம்? நான் என்ன பிழை செய்தேன்' என்றான்.

சோச்சியோலின் முகம் காத்திருந்ததால் வெறுமையாகத் தோன்றியது. ஹியோங் - மூத்த அண்ணனுக்கு என்ன செய்வது என்று எப்பொழுதும் தெரியும்.

வொன்ஜியோல் சாக்கை வெறித்துப் பார்த்தான்.

'அவளை புதைக்க முடியாது,' என்று இறுதியில் சொன்னான். 'நிலம் முழுவதும் பாறாங்கற்கள்.'

அவன் சொற்களில் தெரிந்த அவநம்பிக்கை விறைத்த வழுக்கலான சமதரையில் பாய்ந்து சென்று விழுந்தது. சோக்கியோலின் மனம் அதிலிருந்து விலகியிருந்தது. கண்கள் தப்புவதற்காக கட்டுப்பாடற்று திரிந்தன.

அவன் பாடினான். 'இறந்த ஓர் அமெரிக்கனும் இறந்த ஓர் அமெரிக்கனும் இரண்டு இறந்த அமெரிக்கர்களுக்குச் சமன்.' அப்போது தன் கைகளில் உறைபனியை வைத்து தூள் தூளாகக் கசக்கிக் கொண்டிருந்தான், வொன்ஜியோலை திசைதிருப்பும் முயற்சியில்.

நேரமாகிக் கொண்டிருந்தது. வொன்ஜியோல் சாக்கின் வாயைத்



தன் பக்கம் திருப்பினான். அவள் அதற்குள்ளிருந்து வெளியே விழுந்தாள். அவன் தன் கைகளால் குக்வாவின் முகத்தைத் தடவினான். அவளை அவன் என்ன செய்தான் என்பது அவனுக்குப் புரியவில்லை. அவளை ஒரு கணம் மட்டுந்தான் அவனால் பார்க்க முடிந்தது. அவளுடைய கன்னங்கள் வேக வைத்த நத்தைகள் போன்ற நிறத்தில் இருந்தன. அவளுடைய தோள்கள் விறைத்த மரக்கிளைகள் போலிருந்தன.

'என்னால் கணக்குப் போட முடியும்,' என்று பாடினான். 'இறந்த ஓர் அமெரிக்கன்.'

வொன்ஜியோல் தன் சகோதரனின் முகத்தை வலுக்கட்டாயமாக அவள் பக்கம் திருப்பினான். சகோதரியின் நெற்றியில் புண்கள் பொட்டு பொட்டாகத் தெரிந்தன.

'ஆழ்ந்து பார். அவள் போய் விட்டாள்,' என்றான்.

சகோதரன் பார்ப்பதை நிறுத்தினான். அவன் கண்கள் சவப்

பெட்டியின் மூடியைப் போல வெறுமையாகத் தெரிந்தன.

'பத்து தோழர்கள் இந்த ஆண்டு இறந்தார்கள்,' என்றான். மிகக் கடுமையாகச் சிரித்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. 'அவளைப் பற்றி நான் நினைக்காவிட்டால் அவள் இங்கே இல்லை,' என்றான்.

அவர்களுடைய தங்கை அவள். சூரியன் வொன்ஜியோலின் சில்லிட்ட முகத்தைப் பளபளப்பாக்கினான். வேற்றுலகத்தவளாக. தெய்வீகமானவளாக அவள் தோன்றினாள். அவளுக்கு உணவளித்தான். நீராட்டினான். அவளுடைய நகரும் வீடாக அவன் ஆனான். அவன் மனதுள் ஏதோ எழுந்தது. அது கடந்த காலத்தின் நினைவொன்று. மரங்கள், வானம்பாடிகளுடன் கூடிய பெருத்த மழை. பறவைகள் ஆகாயத்தில் பறந்த போது மரங்களும் அவற்றுடன் மேலெழுந்தன. அவன் தங்கையின் கால்கள் வானம்பாடியின் கால்கள் அளவு இருந்தன. வானம்பாடிகள் எங்கும் போகக் கூடியன என்று அவன் தாய் சொல்லியிருந்தாள். ஆனால் அவை திரும்பி வரும். ஏனென்றால் அதுதான் அவர்களுடைய வீடு. வொன்ஜியோல் பயந்து போனான்.

'நான் அவளைக் கொன்று போட்டேன்.' அதை அவன் ஆச்சரித்துடன் சொன்னான், இப்பொழுதுதான் அதை உணர்ந்தது போல.

'நீ எவரையும் கொல்லவில்லை!' சோச்சியோல் தன் காதுகளை பொத்திக் கொண்டு பாடத் துவங்கினான்.

வொன்ஜியோல் சாக்கை அழகாக மடித்து வைக்கத் துவங்கினான். ஆசிரியர்களின் பாராட்டுதல்கள். தாயின் நம்பிக்கை. எதுவுமே இப்போது அவனுக்கு உதவப் போவதில்லை. சோச்சியோல் குளிர்கிறது என்று முறையிட்டான். அவனுடைய நீலமாகிப் போன உதடுகள் மடிபட்டுச் சுருங்கியிருந்தன, முதிய ஹல்மியானி- பல் இல்லாத பாட்டியின் உதடுகள் போல.

அதன் பின் தான் வொன்ஜியோல் இரண்டு கை நிறைய உறைபனியை அள்ளினான். அதை அவனுடைய சகோதரியின் உடலிலும் தன் நினைவுகளின் மேலும் பூசினான். மூதாதையர்களின் கல்லறைகளின் சரிவுகள் போன்ற வடிவத்தை அடைவதுவரை அதை உறைபனியால் உருவாக்கினான். பின்னுக்கு சென்று மேட்டைச் சுற்றி வந்து அதை நன்றாகப் பார்த்தான்.

சிறிது காலம் செல்ல நகரத்தில் உள்ளவர்கள் அனைவரும் எல்லைகளைக் கடந்தவர்களைப் பற்றியும் அதிசயமாக பணத்துடனும் உணவுடனும் திரும்பி வந்தவர்களைப் பற்றியும் அறிந்து கொண்டார்கள். இரும்பு வியாபாரியான லீ ஜேர்மன் தூதரகத்தில் பத்திரமாக இருந்தான். அரிசிகேக் விற்கும் செல்வி ஹான் கள்ளத்தனமாக ஒரு சீன விவசாயியை மணம் முடித்திருந்தாள். அப்போது சீன அரசு வட கொரியர்களின் தலைக்கு விலை பேசிக் கொண்டிருந்தது. திருமதி கூ வை அவளுடைய குழந்தையுடன் சீன பொலிசார் அமெரிக்க தூதரகத்தின் வாயில் கதவுகளின் முன்னால் அடித்துக் கலைத்து விட்டார்கள். வூஜின் என்ற சிறுவனுக்கு வயது எட்டு. அவனை எல்லைக் காவலாளிகள் கொன்று விட்டார்கள். டேஜோனின் மாமா சீனாவிற்கு போகும்போது மொன்சூன் காலத்தில் பெருக்கெடுத்தோடும் ரூமென் ஆற்றில் மூழ்கி இறந்து விட்டார். இளமையும் அழகும் சேர்ந்த சூனா வன்புணர்வு செய்யப்பட்டாள். ஆனால் அதிர்ஷ்டவசமாக உயிருடன் இருக்கிறாள். பதின்மூன்று வயது சோராவை சீன கடத்தல்காரர்கள் பிடித்து விற்று விட்டார்கள். அதாவது, வன்புணர்வு செய்தபின். குறைந்தது உயிருடன் அவள் சீனாவில் இருக்கிறாள் என்று சோங்வூவின் மாமி சொன்னாள். உண்மையில் அவை எல்லாம் உண்மையா என்பது எவருக்கும் தெரியாது. ஒருத்தன் கூட்டாளியா அல்லது தகவல் கொடுப்பவனா, அல்லது நள்ளிரவில் காணாமல் போனவன் வதை முகாமில் சிறைபிடிக்கப்பட்டானா, அல்லது சீனாவுக்குத் தப்பிப் போனானா என்பவற்றைப் பற்றி பலரும் அமைதியாக ஊகித்துக் கொண்டிருந்தார்கள். வதந்திகள் திடமான உண்மையாகும்வரை கவனித்துக் கொண்டும் காத்துக் கொண்டும் இருந்தார்கள்.

சூரியன் மறைந்தபோது மலை உச்சியின் பெரிய வெண்ணிற பகுதிக்குக் குறுக்காக இரண்டு கரும் புள்ளிகள் போய்க் கொண்டிருந்தன. கம்பீரமான கடைசிக் கற்பாறைகளில் பெரும் தலைவர் கிம்இல்-சுங்கினதும் அன்பான தலைவர் கிம் ஜொங்-னதும் அடைமொழிகள் பொறிக்கப்பட்டிருந்தன. சகோதரர்கள் தங்கள் தாய் பயங்கரமான தீர்மானத்தை எடுத்து ஒரு மாதத்தின் முன் போன பாதை தான் அது என்று தெரியாமல் அதே பாதையில் அவர்களும் சென்று கொண்டிருந்தார்கள். பலரும் பசியாலும் நிராசைகளாலும் தங்கள் குடும்பத்தையும் நாட்டையும் விட்டுச் சென்று கொண்டிருந்த அதே பாதையால் தான் இவர்களும் சென்று கொண்டிருந்தார்கள். வொன்ஜியோலின் பின்னால் அவனுடைய தம்பி ஒரு பாறையில் இருந்து மற்றப் பாறையில் கால் வைத்து நடப்பதற்கு சிரமப்பட்டு நடந்து கொண்டிருந்தான். அவனுடைய முதுகைப் பார்த்தபோது அவன் மிகவும் சிறியவனாகவும் நொருங்கிப்போகக் கூடியவனாகவும் இருக்கிறானே என்று வொன்ஜியோல் எண்ணினான். அவனை பார்க்காமல் விட்டால் அவனை இழந்து விடுவேன் என்றும் எண்ணினான்.

'கவனமாக நட,' என்றான் பயத்தினால்.

'ஓம், கியொங்-அண்ணே,' என்றான், தம்பி.

சில மணித்தியாலங்களின் பின் அவர்கள் ஓரிடத்தில் இருந்து இளைப்பாறினார்கள்.

'நான் முற்றும் நனைந்து விட்டேன்,' என்று முறையிட்டான் சோக்கியோல், தன் உடுப்புக்களைக் கழற்ற முயன்று கொண்டே. ஆனால் தன் தம்பி காலுறைகளால் கைகளைச் சுற்றி வைத்திருக்கிறானா என்று வொன்ஜியோல் பார்த்துக் கொண்டான்.

வொன்ஜியோல் கைத்தடிகளைத் தேடிக் கொண்டிருந்தபோதுதான் அது நடந்தது. மரங்கள் ஊடாக அவன் அலைந்து திரிந்தபோது ஒரு வெண்ணிற ஆவியின் உருவம் மெதுவாக தடுமாறிக் கொண்டு அவனை நோக்கி நடந்து வந்தது. இந்நிலவுலகத்திற்கு அப்பாற்பட்ட அச்சுறுத்தும் அதன் குரல் ஒலித்தது. அவனுடைய தொண்டையை மீன் முள்ளு கொழுவிப் பிடித்தது போல அது இருந்தது. அவன் குழறினான். அவன் கைகள் அவனுடைய தலையைச் சுற்றிப் பிடித்திருந்

தன. சோக்கியோல் சிரித்தான். அவனுடைய தலைமுடி, தோள்கள் உறைபனிக் கட்டிகளால் மூடப்பட்டிருந்தன. அது அவனுக்கு ஒரு மாயத்தோற்றத்தைக் கொடுத்தது.

'பாபோ - முட்டாளே,' என்று வொன்ஜியோல் கத்தினான், பயத்தினால் அழுவது போல.

அவளுக்கு வயது நாலுதான். அவள் அவனுடைய சகோதரி. அவளை அவன் நேசித்தான் என்பது அவன் நினைவுக்கு வந்தது. அவன் கைநிறைந்த உறைபனியை அவனுடைய சகோதரனின் தலையில் கொட்டினான். 'நீ அமெரிக்கனின் பாதங்கள் போல நாறுகிறாய்.'

'நான் உன்னை பயமுறுத்தினேன்,' என்றான், சோக்கியோல். அவன் குரல் பதற்றமான பறவைகள் சிறகடித்துப் பறப்பது போல இருந்தது. 'இங்கே எங்களைப் பயமுறுத்துவதற்கு ஒன்றுமில்லை, இல்லையா ?'

அவர்கள் நடந்து கொண்டிருந்தபோது பாறைகள் நன்றாகத் தெரிந்தன. 'அங்கே பார், பன்றிகளை.' என்றான் வொஞ்சி-யோல்.

சாம்பலும் இளஞ்சிவப்பும் கலந்த காதுகள் பின்னால் இருக்க கொழுத்த மூக்கால் நிலத்தைத் தோண்டிக் கொண்டிருந்த ஒரு பன்றியைக் காட்டினான்.

'புள்ளிகள் நிறைந்த அந்தத் திட்டையா காட்டுகிறாய் ?' சோக்கியோல் உறைபனியால் மூடப்பட்ட கற்பாறையைக் காட்டிக் கேட்டான். 'அதைக் கொல்லவா, சாப்பிடவா ?'

அவர்கள் இருவரும் சிரித்தார்கள், நிறுத்த முடியாமல்.

'அது நடக்கும்போது அதன் கொட்டைகளும் ஆடுகின்றன, முலாம்பழம் போல,' என்றான் வொஞ்சியோல்.

அவனுடைய சகோதரன் முலாம்பழம் போன்ற கொட்டைகளை உடைய செருக்குடன் நடக்கும் ஒரு பன்றியை அபிநயத்துக் காட்டினான்.

வொஞ்சியோல் மகிழ்ந்து போய்ச் சிரித்தான். அவன் சிந்தனைகள் தன் சகோதரியைப் பற்றி எண்ணியது. அவன் சிரிப்பதை நிறுத்தினான்.

அவர்கள் மேற்கு நோக்கி தொடர்ந்து நடந்தார்கள். காற்று உறுமியது. பைன் மர ஊசி இலைகள் சிறிய விரல்கள் போலத் தோன்றின. காலடியில் உறைபனி நொருங்கியது, எலும்புத் தூள்களாக. புதினத்தாள்கள் காதுகளுக்குள் மடித்து வைக்கப்பட்டிருந்தும் ஒபா, ஒபா - அண்ணே அண்ணே என்று கிசுகிசுக்கும் ஒலி அவனுக்குக் கேட்டது. நாலா பக்கமும் இருந்து அவள் அழைத்தது போல இருந்தது.

மேலும் பல காட்சிகள் தெரிந்தன.

மிருங்களின் அழுகைச் சத்தங்கள் கேட்டன. அவன் தன் பைக்குள்ளிருந்து ஒரு றபர் பட்டையை எடுத்துச் சுழற்றினான், பிடிப்பதற்குத் தயாராக. ஆனால் அங்கே அணில்கள் இருக்கவில்லை. தன் சகோதரியைத் தவிர வேறெவரும் அங்கே இருக்கவில்லை. அவனைப் பிடிப்பதற்கு எந்தப் போர்வீரனின் நிழல் கூட அங்கே இல்லை. சகோதரியின் வெளிறிய தோல் மட்டும் தான் தெரிந்தது. அவள் ஒரு பாறையிலிருந்து மறு பாறைக்குத் துள்ளிக் குதித்தாள், ஒரு மான் குட்டி போல. புன்னகைத்தாள். அவனைப் பார்த்து, தன் சிறிய விரல்களை காற்றில் அசைத்தாள். கைகளைக் காட்டாமல். அவளுடைய நெற்றி சுரக்காய் போன்றிருந்தது. அவள் முகம் யானைத் தந்த மென்மெருகு போன்றிருந்தது. தன் சுவெற்றரிலிருந்து ஒரு நூலை இழுத்தாள். முழு சுவெற்றுருமே அவிழ்ந்தது. அது அவன் கண்முன்னே நடந்தது. ஆடையில்லாமல் அவளுடைய உடல் வெப்பத்தால் நீலநிறமாக சுடர்விட்டது. அவளுடைய தலை குதியில் படும்வரை தன் முதுகை பின்னால் வளைத்தாள். உடம்பு மிகையாக நடுங்கியது. குக்வா பழிவாங்குவதில் கூட நகைச்சுவை காட்டினாள்.

'யோசியோனில் உள்ள மிகப் புனிதமான மலை,' என்று வொன்ஜியோல் முணுமுணுத்தான். பாக்கு மலை. அங்கே தான் எங்கள் பெரும் தலைவர் கிம்-இல் சுங் பிறந்தார். அங்கே தான் இரண்டாவது சிறந்த கிம்ஜொங்கிலியா இருக்கிறது.'

வகுப்பிலுள்ள மற்ற மாணவர்களை விட அவன்தான் வரலாற்றுத் தகவல்களின் பட்டியல்கள் சொல்லக் கூடியவன். அதைச் சொல்லி அவன் தன் மூச்சை இயல்பாக்கினான்.

ஆனால் அவள் இன்னும் அங்கே நின்றாள்.

'நான் ஒரு யோசியோன் இராணுவ வீரன். நான் யுத்தம் புரியும் ஒரு இயந்திரம்,' என்றான் உரத்து. றபர் பட்டையை கண்ணைக் கூசி குறிபார்த்தான்.

அவனுடைய சகோதரனும் அவன் செய்ததைப் போலவே செய்தான். அவன் தன் கைகளை இயந்திரத் துப்பாக்கியை காட்டுவது போல, இலைகள் இல்லாமல் நிர்வாணமாக நிற்கும் தேவதாரு மரத்தைக் குறிபார்த்தான்.

'எனக்கு மூக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது,' எல்லா அமெரிக்கர்களையும் கொன்று கொண்டிருக்கிறேன் என்றான்.

வொன்ஜியோல் றபர் பட்டையால் குறிபார்த்து சுட்டான். அவள் ஒரு மரத்தின் பின்னால் திடீரென்று ஓடிப்போய் ஒளிந்து கொண்டாள். அவன் பாறைகளின் பின்னால் ஓடி ஒளிந்தான்.

'நீ பயந்து விட்டாயா ?' சோக்கியோல் அவனுக்காக வெட்கப்பட்டான். பாறைகளுக்குப் பின்னால் ஒளிக்க மாட்டேன் என்று காட்டுவதற்காக, அவன் தன் கால்களை அகட்டி வைத்திருந்தான். பின் பாறையில் ஏறி அவள் நின்ற பக்கத்தால் சென்றான்.

'கவனம்!' என்று வொன்ஜியோல் கத்தினான்.

'எதற்குக் கவனம் ? இராணுவ வீரர் எங்களைப் பிடித்தால் எங்களைக் கொன்று போடுவார்கள்.' சோக்கியோல் தன் காலை முன்னால் தூக்கி பிறைவடிவ உதை ஒன்றை விட்டான். 'அவ்

வளவுந்தான்,' என்று அபிநயித்தான்.

'அது குக்வா,' என்றான் வொன்ஜியோல்.

அவனுடைய சகோதரன் விறைத்துப் போய் பின் வாங்கினான். 'இங்கே ஆவிகள் ஒன்றுமில்லை,' என்றான் சத்தமாக.

வொன்ஜியோல் திரும்பவும் சுட்டான். அது அவள் ஊடாக நேரே சென்றது. குக்வாவின் சிரிப்பு குழந்தை ஒன்றின் கள கள சிரிப்பொலி. அது சடுதியாக நின்றது. அவன் கைகளால் தன் முகத்தை மூடினான். ஊதிப் பெருத்திருந்த தானியச் சாக்கைப் பார்த்து.

'நாங்கள் திரும்பிப் போக வேணும்,' என்றான், வொன்ஜி-யோல். 'நாங்கள் அதைச் செய்ய முயன்றது, எங்கள் பைத்தியக்காரத்தனம்,' என்றான்.

'நீ சாவதற்கு விரும்புகிறாயா ?' என்றான் சோக்கியோல். அவனுடைய குரல் புதிதாக கூர்மையாக இருந்தது. அவன் தன் சகோதரனின் நிழலில் போய் நின்றான். 'நான் வாழ விரும்புகிறேன்.'

வொன்ஜியோல் சீனாவை மேற்காகப் பார்த்தான். அங்கே தான் தாய் எங்கேயோ இருக்கிறாள். அவனுக்குப் பல பெரிய விசயங்கள் தெரியாது. அது அவனுக்குப் புரியும். பிளவுண்ட சிகரங்களின் அடிவானத்தைப் பார்த்தான். அவனுக்கு அது தன் வாழ்க்கையைப் போலத் தெரிந்தது. ஒரு காலத்தில் தனித்த முக்கியத்துவம் வாய்ந்த வாழ்க்கை அது. இப்போது அது தன் முக்கியத்துவத்தை இழந்து விட்டது. அவன் தன் கைகளை பின்னால் கட்டி அவை நடுங்குவதை நிறுத்தும் வரை அவற்றைப் பிசைந்தான். 'நாங்கள் போவோம்,' என்றான், தன் சகோதரனின் இழந்து விட்ட நம்பிக்கையை திரும்பப் பெறுவதற்கான உறுதியுடன்.

சோக்கியோல் திரும்பவும் தோன்றினான். அவனுடைய தலையில் முட்செடிகள் இருந்தன. அவன் நிலைதடுமாறிக் கொண்டு நின்றான். குடிபோதையில் நிற்கும் இளம் பயிற்சி இராணுவத்தினனைப் போல.

'ஓம், தோழனே!' என்று சத்தமிட்டான். அவன் குரல் நிம்மதியாக ஊதிப் பெருத்துத் தோன்றியது.

அன்றிரவு இருண்டு கிளர்ச்சியற்று இருந்தது. மலைகள் எல்லையற்ற தளர்வான கற்களின் இடிபாடுகள். நட்சத்திரங்கள் இறந்தவர்களின் கண்கள். இயற்கைக்கு மாறான நிலப்பரப்பில் ஒரு நாள் வொன்ஜியோலின் முழு வாழ்க்கையைப் போல இருந்தது. குக்வா அவனுடைய பெயரை ஓதத் தொடங்கிய போது எதுவுமே அவனுக்கு முக்கியமாகப்படவில்லை.

அவன் தன் காதுகளைப் பொத்திக் கொண்டான். அவன் மனம் வேகம் வேகமாக எண்ணங்களால் எகிறிக் கொண்டிருந்தது.

குக்வாவின் முகம் மெல்லிய மெத்தை போல வீங்கி இருந்தது. சாம்பல் நிறமாக இருந்த அவளின் கால் விரல்கள் மரம் ஒன்றின் வேரை அழுத்திக் கொண்டிருந்தன, கடற்பறவை பாறையில் குந்தி இருப்பது போல.

உறைபனிக்குப் பக்கத்தில் இருந்து கொண்டு, 'நான் நித்திரை கொள்ள வேணும்' என்றான் சொக்கியோவ், குக்வாவிற்கு. அவன் கால்கள் சீனர்களின் உணவுக் குச்சி போல நீட்டிக் கொண்டிருந்தன. 'நித்திரை கொள்வதற்காக நான் எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.'

'நாங்கள் நித்திரை கொண்டால் செத்துப் போவோம்.' வொன்-ஜியோல் தன் இரண்டு உடன்பிறப்புக்களையும் வெறித்துப் பார்த்தான். அவர்கள் அவனுடைய அன்பான சுமைகள்.

'நான் நித்திரை கொள்ள வேணும்.'

'அப்போ சில நிமிசங்கள் நித்திரை கொள். பிறகு போவோம்.'

வொன்ஜியோல் அவர்களைச் சுற்றி வெண்ணிறத்தில் பெட்டி ஒன்றைக் கீறினான். அவர்கள் உறைபனி இல்லாத வரண்டு போய் இருந்த ஓர் இடத்தில் நெருங்கி உட்கார்ந்து கொண்டு சூட்டிற்காக ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டார்கள்.

'நாங்கள் தூரத்தில் இல்லை,' எங்கே இருக்கிறார்கள் என்று தெரியாமலே. அண்ணன் என்ற முறையில் போலியாக அமைதியாகப் பேசினான்.

'பெரிய எலியொன்று எங்களிடம் இருந்தால் நல்லது, அதைத் தீயில் வாட்டித் தின்னலாம்,' என்றான் சோக்கியோவ். வொன்ஜியோலை நம்பிக்கையுடன் பார்த்தான்.

'எனக்கும் தான்.'

வொன்ஜியோல் தன் தலையைச் சாய்த்து உறைபனியை வாய்க்குள் போட்டு நிரப்பினான். அதனால் ஏற்பட்ட நோ அவன் உறங்கிய நாக்கை எழுப்பி துடிக்க வைத்தது.

'குளிர்ந்த சோற்றைப் போல ருசிக்கிறது,' என்றான், சோற்றின் ருசியை அவன் மறந்து போய் விட்டபோதிலும்.

'எங்களிடம் சோளப் பொத்தி ஒன்று இருந்தால்... ஒன்றில்ல, இரண்டு! அதுவும் வாட்டியதாக இருந்தால்.

'நாங்கள் உணவைப் பற்றிக் கதைக்காமல் இருப்போம்.'

அவனுடைய சகோதரன் மூக்கைத் தோண்டினான். ஈரமான அந்தக் கோழையை எறிவதற்கு முன் அதைக் கவனமாகப் பார்த்து விட்டு வாய்க்குள் போட்டான். 'சீனர்கள் குழந்தைகளின் மூளையை உண்மையில் சாப்பிடுவார்களா ?' என்று கேட்டான்.

'அதைச் சாப்பிட வேண்டிய தேவை அவர்களுக்கில்லை. அவர்களின் நிலம் அரிசி விளையும் நிலம். உன்னளவு பாத்திரம் நிறைய அரிசி. அப்படித்தான் ஆட்கள் சொல்லுகிறார்கள்.'

அந்த ஆட்கள் யார் என்று அவனுக்குத் தெரியாது. அதை அவன் தாய் சொல்லியிருக்கிறாள். அந்த வதந்திகளை சந்தையில் தள்ளுமுள்ளுப்படும் சிறுவர்கள் பரப்பினார்கள். அதனால் ஒரு நம்பிக்கை தூண்டப்பட்டது. பின் அது மடிந்தது. கடத்தப்படும் தானியம் வீதிகளில் விற்கப்படுகிறது

என்ற சொல்லால் அது திரும்பவும் தூண்டப்பட்டது.

'அதுவொரு விசேஷமான உணவு. அப்படித்தான் பெரிய சிறு வர்கள் சொன்னார்கள்.'

'ஓம்மா - அம்மா முதல் முறை கொண்டு வந்ததை நீ கண்டி ருக்கிறாய்.'

அம்மா எங்கே?' சோக்கியோல் தன்னையே கட்டிக் கொண் டான்.

'ஒருவருக்கும் தெரியாது.' வொன்ஜியோல் தன் தம்பியின் தோள்களைச் சுற்றிக் கட்டிப் பிடித்து சீனாவின் பக்கம் மேற் கால் பார்த்தான். 'நீ இளைப்பாறு.'

அவர்கள் துயின்றார்கள். துயிலின் வெறுமை மட்டுந்தான் அங்கே அப்போது இருந்தது. அதுவே என்றும் அமைதியா னது. வொஞ்சியோலின் உடல் உறைபனியின் நிலக்காட்சி யாக விரும்பியது போல. காலகதியில் இன்னொரு காலத்திற் காக அது சிதைந்து போவது போல. ஆனால் கூர்மையான அசைவொன்று பற்கள் மேல் கையில் பதிவது போல அந்த அமைதியை குலைத்தது.

சோக்கியோலை ஆழமான உறைபனிக் குவியலுக்குள் தள் ளிவிட்டான். அதன் பின் அவனும் இருளுக்குள் பாய்ந்தான். அவனுடைய சப்பாத்து அவன் மூக்கை உடைத்தது. அவ னுக்குக் கீழே அவனுடைய கைத்தடி கிடந்தது. அவன் தன் கைளை மேலும் கீழும் சுழற்றினான். அது சோளத்தை இடிக் கும் உலக்கை போல மாறியது. அவன் திரும்பத் திரும்ப அடித்தான். அடிப்பதை அவன் நிறுத்தியிருக்கலாம். ஆனால் நிறுத்தவில்லை.

'நானும் பிறப்பிலேயே கொலைகாரன்தான்!' சோக்கியோலின் குரல் தளர்ந்தது. 'நான் யுத்தம் புரியும் இயந்திரம்.'

அதன் பின் தான் வொன்ஜியோல் நிறுத்தி, தன் சகோதரனின் தலையைப் பார்த்தான், உறைபனிக் குவியலுக்கு மேலாக. சோக்கியோலின் மூக்கிலிருந்து சளி நூல் போலத் தொங்கிக் கொண்டிருந்தது. அவன் அழுது கொண்டிருந்தான். அவனு டைய சொந்தச் சகோதரன். அவனுக்குப் பயந்து. அவர்களுக் குக் கீழே அங்கே ஒன்றுமில்லை. மர நிழல்கள் மட்டுந்தான். சந்திரனில் அவனுடைய எச்சில் இருந்தது. ஒரு கூச்சல் வந்த போது அவன் தன் வாய்க்குள் உறைபனியைத் திணித்தான். சோக்கியோல் தன் மேற்கைகளால் அவனைச் சுற்றிப் பிடித் தான். அவன் கைகளிலிருந்து வொன்ஜியோல் தன்னை இழுத் துக் கொண்டான்.

'நாங்கள் அவளைக் கடைசிவரை கண்டுபிடிக்க மாட்டோம். ஓம்மா எங்களை விட்டுப் போய் விட்டாள். எப்படி குக்வாவை நாங்கள் கைவிட்டோமோ அது போல அவளும் எங்களை கைவிட்டு விட்டாள்,' என்றான் வொன்ஜியோல்.

'ஹியோங்- அண்ணே, அப்படிச் சொல்லாதே.'

ஆனால் அது உண்மையென்று வொன்ஜியோலுக்குத் தெரிந் தபடியால் அவன் அழுது கொண்டிருந்தான்.

சோக்கியோல் ஒரு கல்லை உதைத்தான். அதை அவனு டைய சகோதரி தன் பாதத்தால் நிறுத்தும்வரை அது உருண்டு போனது. உறைபனியில் தூள் தூளாகும்வரை. அவள் சிறிய குளிர்ந்து விறைத்த ஆவியாகத் தோன்றினாள். வொன்ஜியோல் விறைத்துப் போய் மூச்சுத் திணறினான்.

'திரும்பவும் குக்வா இங்கே வந்து விட்டாள்,' என்றான்.

'அவள் இறந்தவொரு உடல்,' என்று சோக்கியோல் மனதைத் தேற்றிக் கொண்டான். 'அவள் தூர இடத்திற்குச் சென்று விட் டாள்.'

'இல்லை, அவள் இங்கே இருக்கிறாள்!'

'ஆவிகள் என்ற ஒன்றில்லை,' என்று சொல்லிவிட்டு அவன் சகோதரன் முன்னேறிச் சென்றான். 'அவள் இறந்து போய் விட் டாள். அவள் இறந்து போய் விட்டாள். அவள் இறந்து போய் விட்டாள்.'

'நானும் வருகிறேன் பொறுத்திரு,' என்று வொன்ஜியோல் கத் தினான்.

அடுத்த நாள் காலை ரூமென் நதி வந்தது. அங்கேதான் இறக் கம் இருந்தது. இலைகளின் ஆபத்தான சலசலப்பும். புறக்கா வல் நிலையத்திலுள்ள காவலர்கள் இருப்பார்கள். சோவியத் இயந்திரத் துப்பாக்கியுடனும் கொலைகாரச் சப்பாத்துக்களு டன் காவல் சுற்றில் வருவார்கள். மேலேயுள்ள செங்குத்துச் சரிவிலிருந்து வொன்ஜியோல் கவனித்தான். யான்ஜிக்கு அப் பால் ஒரு நகரம் இருந்தது. அங்கே இருந்த குப்பை முழு கிரா மம் ஒன்றுக்கே தீனி போடப் போதுமானது என்று சொல்லப் பட்டது. அங்கே வீதி விளக்குகள் உண்மையில் வேலை செய் தன. அங்கேதான் குக்வா இருந்தாள், கல்லுப் போல விறைத் துப் போய். அங்கே அவர்களுடைய தந்தையின் பிணம் இருந் தது. நிலக்கரிச் சுரங்கத்தின் கூரை அவர் மேல் சரிந்து விழுந்து பிணமாகிக் கிடக்கிறார். உலகம் அவர்கள் இருவ ருக்கும் என்றென்றும் இருளாகி விட்டது. வொன்ஜியோல் இன் னும் உயிருடன் இருக்கிறான். அவன் தான் மட்டும் உயிருடன் இருப்பதற்கு மற்றவர்களுக்கு இல்லாத தகுதி தனக்கு இருக் கிறதா என்பது அவனுக்குத் தெரியாது.

நண்பகல். சகோதரர்கள் ஆற்றை நோக்கி கீழிறங்கினார்கள். உறைபனி சீராக விழுந்து அவர்கள் சென்ற தடையங்களை அழித்தது. காவலர்களுக்கு வசதியாக புறக்காவல் நிலையங் கள் இருந்தன. அத்துடன் அவர்களுக்கு சோறும் இருந்தது. உணவுண்ணும் நேரத்தில் அவர்களுடைய சீருடை காய்ந்து விடும் என்று வொன்சியோல் எண்ணினான். காவலர்கள் நிலை யத்துக்குள் இருக்கத்தான் விரும்புவார்கள், மழையிலோ பனி யிலோ நனைய விரும்ப மாட்டார்கள் என்றும் நினைத்தான். இருந்தும் அவனுடைய இதயம் வேகமாகத் துடித்தது. அந்தச் சத்தத்தை கைகளால் தடுத்தான். அவர்கள் இருவரும் கண் ணாடி போலத் தெளிந்த ஓர் அருவியைக் கடந்து சென்றார் கள். அவர்களின் விரல் நகங்கள் துண்டு துண்டாகிவிட்டன. கைகள் பாறைகளைப் பிடித்ததால் அவற்றில் இரத்தம் வழிந்

தது. ஊசியிலை மர வேர்களிலிருந்து வெளியேறினார்கள். மெதுவாக. கால்களிலிருந்த விறைப்பு உடல் முழுவதும் பரவியது.

இறுதியில், அவர்களின் முன்னால் சாம்பல் நிற நிலப்பரப்புத் தெரிந்தது. அற்பமான வடிவங்கள் ஆறாகவும் மலையாகவும் சீனாவாகவும் மாறின. தூரத்தில் பாழடைந்த சீமேந்து கட்டடங்கள் உயரமாகத் தெரிந்தன. அவற்றுக்குள் ஒருத்தன் போனால் மறைந்தே போவான். அவனைக் கண்டுபிடிக்கவே முடியாது. சகோதரர்கள் அந்த இடத்தில் நின்றார்கள். அவ்விடத்தில்தான் கடந்த ஐந்து ஆண்டுகளாக பலர் நின்றிருக்கிறார்கள். தப்பியோடி வந்தவர்களின் அதே பயங்களையும் நம்பிக்கைகளையும் அவர்களும் உணர்ந்தார்கள். அவர்களுக்கு முன் விரிந்து கிடக்கும் உலகம் அவர்களைப் பற்றி அறிந்து கொள்ளவோ கவலைப்படவோ போவதில்லை என்ற அதே மங்கலான உணர்வுகளுடன் அவர்கள் அங்கே நின்றார்கள்.

'நீ ஒரு நல்ல கியோங்- அண்ணன்.' சொக்கியோலின் குரல் பாடப்புத்தகங்களைப் போல பாரமாக இருந்தது.

'உன்னை நான் கூம்புக்கிழங்கு கஞ்சியைச் சாப்பிடச் சொல்லி கட்டாயப்படுத்த மாட்டேன்,' என்றான் சோக்கியோல். 'இனிமேல் நாங்கள் வித்தியாசமாக வாழ்வோம்.'

அண்ணன்மேல் அவன் கொண்ட குழம்பிப்போன அன்பையும் அச்சத்தையும் அவனால் தெளிவாகச் சொல்ல முடியாமல் அவனுடைய கையை இறுக்கிப் பிடித்திருந்தான். பின் அதை விட்டான்.

அவர்கள் ஓடிப் போனார்கள். வெட்டவெளியில் இறங்கிச் சென்றார்கள். ஆற்றை நோக்கி விரைந்தார்கள். அவர்களுடைய பாதங்கள் உறைபனியின் கீழுள்ள உறைந்த பனியில் பட்டபோது அவர்கள் சறுக்கி விழுந்தார்கள்.

'நிறுத்து!' என்றொரு குரல் கத்தியது. 'மியோம்-சியோ- நில் அல்லது நான் சுட்டு விடுவேன்!'

சொன்னவனைத் தூரத்திலிருந்து பார்த்தபோது சின்னதாகத் தெரிந்தான். அவனுடைய மண்ணிற சீருடையிலும் நட்சத்திரங்கள் போட்ட தொப்பியிலும் தோளில் பள்ளிப் பிள்ளைகளின் பையைப் போட்டிருந்த துப்பாக்கியிலும் அவன் ஒரு பொம்மை போர்வீரனைப் போலத் தோன்றினான். தன் துப்பாக்கியை மேலே தூக்கிப் பிடித்தான். நில், நில். வொன்ஜியோலின் குரல்வளை மூடி துடித்தது. அவன் சொக்கியோலை குறிபார்த்தான். உறைபனி வழுக்கலின் குறுக்காக கோணல் மாணலாக நடந்து துப்பாக்கியின் விசையை இழுத்தான்.

குண்டொன்றின் கூரிய கிறீச் சத்தம். பின் அமைதி. எவரும் தாக்கப்படவில்லை.

வொன்சியோல் மூச்சுத் திணறினான்.

'ஓடு!' அவன் உறைபனி வழுக்கல் தட்டொன்றில் சறுக்கிய போது அவன் கத்தினான்.

சோக்கியோல் விறைத்துப் போய் அவனைத் திரும்பிப் பார்த்தான்.

'ஹியோங்-அண்ணே,' என்று சொல்லிக் கொண்டு அழத் துவங்கினான்.

'உன்னுடைய ஹியோங் சொல்கிறான் ஓடு!'

சோக்கியோல் ஓடினான். அவனுடைய மெதுவான காலடி வழுக்கலை மென்மையாகத் தொட்டது. ஒவ்வொரு தரமும் அவன் திரும்பிப் பார்த்தபோது வொன்ஜியோல் சத்தம் போட்டான். முன்னால் சறுக்கி சறுக்கி விழுந்து கொண்டே இருந்தான். இறுதியில் அவனுடைய தம்பி தூரத்தே தெரியும்வரை சத்தம் போட்டான்.

வொன்ஜியோல் தொடர்ந்து முன்னால் சறுக்கிக் கொண்டே இருந்தான். சோக்கியோவிலும் பார்க்க கனமாகவும் மெதுவாகவும் சறுக்கினான். அவனுடைய தங்கை அவனுக்கு முன்னால் பாய்ந்து ஓடிக் கொண்டிருந்தாள். அவளுடைய மெழுகுக் கண்கள் ஒளியுடனும் வெண்மையாகவும் நெருப்பின் மையம் போல ஒளிர்ந்து கொண்டிருந்தது. அவளுடைய கன்னங்கள் தீப்பிழம்பு போல எரிந்து கொண்டிருந்தன. உணர்ச்சியற்ற முகத்தில் இருந்த ஒரேயொரு நிறம் அதுவே.

'தயவுசெய்து என்னைப் போக விடுங்கள்,' என்று கெஞ்சினான்.

அவளுடைய சிறிய கால்கள் அவனுக்கும் சீனாவுக்கும் இடையில் நிலைத்து நேராக நின்றன. அவன் இடது பக்கம் நகர்ந்தான். அவளும் அந்தப் பக்கம் நகர்ந்தாள். அவன் வலது பக்கம் சென்றான். அவளும் அவனைப் போலவே வலது பக்கம் சென்றாள். அவன் பின்னால் காலடி வைத்தபோது அவள் ஆசுவாசத்துடன் புன்னகைத்தாள். அவளை விட்டு விட்டு அவள் அவனைப் போக விடவில்லை. அதை அவன் இப்போது அறிந்து கொண்டான். அவன் கை அவளை அடிக்க ஓங்கியது. அவளுடைய முகம் சோகமாக மாறியது. அவனால் அடிக்க முடியவில்லை. அவள் அவனுடைய சகோதரி. அதனால் அவளுடைய கெட்டுப்போன உடலை நோக்கிக் கையை நீட்டினான்.

உறைந்து போன ஆற்றின் குறுக்காக போர் வீரர்கள் அணுகி வரும் காலடிகளின் தட் தட் சத்தம் தேய்ந்து போயின. வொன்ஜியோல் இப்போது எப்பொழுதும் அங்கே இருக்கும் பேய் உலகைக் கண்டான். அவனுடைய பள்ளி ஆசிரியர் காற்றிலிருந்து மரப்பட்டையை இழுத்தெடுத்துத் தருவார். அவனுடைய உயிர் நண்பனான குனிஹியோக் தன் நல்லதிர்ஷ்டத்தால் கிடைத்த அணிலொன்றை வாலில் பிடித்து வாட்டித் தந்தான். சூரியன் அவன் தந்தையின் வானம்பாடிகளால் மறைந்தபோது, அவர்களுடைய குடும்ப வீடு உறைபனி வழுக்கலின் குறுக்கே நகர்ந்து சென்றது. புகைப்போக்கியிலிருந்து வந்த புகையில் தாயின் வினிகர் முட்டைக்கோஸின் மணம் மணத்தது. அவளுடைய களிமண் வாசனைத் திரவியத்தின் மணம் இருந்தது. தந்தை கசப்பான புன்னகையுடன் எண்ணற்ற ஒளியாலான உருவங்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தார். அவர்களுக்குப் பின்னால் இறுதியில் நிழல்கள் வந்தன.



mahalingam.k@thaiveedu.com


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


33 Years Canadian Experience
AUGUSTINE & ASSOCIATES
INCOME TAX
OUR SERVICES
Personal, Business and Corporate Tax Services
GST, HST & QST
Accounting & Bookkeeping
Payroll
T4, T4A, T5, Rental Releve 31 (QC)
Business Registration
E-filing
Ontario, Quebec & Other Provinces
Canada
CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com
Helping you find your dream home, one key at a time.
JW PROPERTY REALTORS
REAL ESTATE
Residential, Commercial, Investment, and New Development Properties.
Jesmine Wimal
647-871-1921
Wimal Augustine
416-617-6735
www.propertyrealtors.ca


HOMELIFE
HIGHER STANDARDS
Buy or Sell
Your Home
call me 24-7
Cell: 416 856 6900
Kathir
Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com


With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
• Family Portraits
• Children Portraits
• Business Portraits
• Passport & Citizenship Photos
• Classic Weddings
• Arangetram
• Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272


- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin Hair Lotion
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது

# BUYERS

If Yathavann Doesn't Negotiate at Least

$10,000 Off The List Price,

He'll Give You $2000 Cash on Closing.

FREE Home Inspection When You Buy With Us.

# Sellers

Your Home SOLD in 60 Days Guaranteed!

OR I'LL SELL IT FOR FREE**

**SOME CONDITIONS MAY APPLY

For More Information On My Exclusive Guaranteed Sales Program

ORDER A FREE REPORT BY VISITING

WWW.HOUZZVALUE.CA

Free Home Evaluation.
No Cost. No Obligations

RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002

YATHAVANN SELVARAJAH
Sales Representative

416-992-4474



# கடன் தொல்லையா?



பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS
REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
TD Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721 | F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.


வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
தரமான வீடு தவறிப்போகாது
பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


முற்றிலும் இலவசமான சேவை!
உங்கள் Gas Furnace இருந்து CO
$2100 Rebate Available Now
call us 416-414-2280
AATEK
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES
We Are Specialists in
customs homes Ductwork System
416.414.2280


Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasinghan
Realtor
416.937.8090


SABONA


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
www.ceycantranship.com
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC.


NO MEDICAL
UP TO $500,000
50 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
Residential | Commercial
BUY ★ SELL ★ LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Ravi Kana


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4. Just remember "266"



NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law




RAMAN HOME COMFORT INC
HEATING
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989




15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544




AEREN Thiyagarajah
Realtor
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
Dir: 416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8




நீங்கள் வீடு வாங்கும்போது
$8475⁰⁰
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chan, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555




ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600




வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
Bus: 416-298-3200
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545




RL RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225




Ahilan
Thanabalasingham
Sales Representative
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002




UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMID GROUP




Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
RE/MAX ACE




Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120




Sri Vallipuranathar
CSC Credit Solution Centre
Tel: 416.439.0224
Cell: 416.450.5011




Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC.




Aazon
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8




Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER




Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com
RE/MAX ACE




BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage* 31 Progress Ave, Suite 210,Toronto ON,M1P 4S6




NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM CHS
President & CEO
iNFORCE LIFe Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST




Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
Cell: 416 505 8532




DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524




RE/MAX
LATHAN VARATHARAJAH
Broker Owner